206

ஸ்ரீகிருஷ்ணாய பரமாத்மனேநம:

ஸ்ரீமத்

# பாகவத தமிழ் வசனம்

## பதினொன்றாவது ஸ்கந்தம்.

இது

இஞ்சிக்கொல்லை.

பண்டிட் - ஆர். சிவராமசாஸ்த்ரி அவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டது

சென்னை

புரோகிரஸிவ் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1912.

# விஷயசூசிகை.

## 11-வது ஸ்கந்தம்.

### அத் —1.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் துஷ்டர்களைக்கொன்று த்வாரகையில் ந்தது ; பூமிக்கு சுமையாகவிருக்கும் யதுகுலத்தை ஸம்ஹரி விரும்பியது ; ஸ்ரீ கிருஷ்ணனுடைய அநுமதியின்மீது மஹர் ர் பிண்டாரகஞ்சென்றது—அவ்விடத்தில் ஸாம்பன் முதலிய னுடைய அபராதத்தால் யதுகுலத்தைச் சபித்தது—அதனைக் ட உக்ரஸேனர் ஸாம்பன் வயற்றிலிருந்த இரும்பு உலக்கை பொடிசெய்து ஸமுத்திரத்தில் போட்டது—அந்தப் பொடி ஸமுத்திரக்கரையில் கோரைகளாக முளைத்தது— 1508-1512

### அத் —2.

நாரதர் வஸுதேவருடைய கிருஹஞ்சென்றது—வஸுதே ஸம்ஸார நிவிருத்திக்கு உபாயத்தைக்கேட்டது—நாரதர் அத பதில் சொல்வதற்காக ரிஷபருடைய புத்திரர்களான ஒன்பது களுக்கும் நிமி சக்கிரவர்த்திக்கும் நேர்ந்த ஸம்வாதத்தை ஹரணமாகச்சொல்ல வாரம்பித்தது—அந்த யோகிகள் நிமியின் சாலைக்குச் சென்றது—நிமி அவர்களை யுபசரித்து மோக்ஷ வதற்கு உபாயத்தைக்கேட்டது—அதற்கு பகவானையுபா மே உபாயமென்று கவி யென்பவர் சொன்னது—பின்பு நிமி தனுடைய லக்ஷணத்தைப்பற்றிக் கேட்டது—அதற்கு ஹரி பவர் பதில் சொன்னது ... 1512-1520

### அத் —3.

நிமி, அந்தரிக்ஷரைக்கேட்டது—அவர் மாயயின் ஸ்வரூபத் பலவகையாக நிரூபித்தது—பின்பு நிமியால் மாயையைத் தா முபாயத்தைப்பற்றிக் கேட்கப்பெற்ற ப்ரபுத்தர் பதில்சொன் —பின்பு ப்ராஹ்ம ஸ்வரூபத்தைப்பற்றிக் கேட்டது—அதற்கு லாயனர் பதில்சொன்னது—பின்பு நிமி கர்மயோகத்தைப்

பற்றிக் கேட்டது—அதற்கு ஆவிர்ஹோத்திரர் கர்மயோகத்தின் ஸ்வரூபத்தை நிரூபித்து தாந்திரிகமான பூஜாவிதியைச் சொன்னது— ... 1520-1530

அத்—4.

நிமி பகவான்செய்த கர்மங்களைப்பற்றி கேட்டது—அதற்கு த்ரமீளர் பகவதம்சமான நாராயண மஹர்ஷியின் மஹிமையையும், அவருடைய தபஸ்ஸிற்கு விக்கினஞ்செய்ய முயன்ற அப்ஸரஸ்ஸுக்கள் அவருடைய மஹிமை, சாந்தி இவைகளை மஹேந்திரனிடம் தெரிவித்ததையும், வர்ணித்தது—பின்னும் ஹம்ஸம் முதலாக கல்கி வரையிலுள்ள அவதார கதைகளைச் சுருக்கமாக நிரூபித்தது ... 1531-1535

அத்—5.

நிமி பகவத்பக்தி யில்லாதவர்களின் கதியைப்பற்றிக் கேட்டது—அதற்கு சமஸர் ப்ரத்யுத்தரஞ்சொன்னது—பின்பு நிமி 'பகவானுடைய நிறம், ஸ்வரூபம் முதலியவைகளைச் சொல்லவேண்டுமென்று கேட்டது—அதற்கு கரபாஜனர் ஒவ்வொரு யுகங்களிலும் பகவானுடைய ஸ்வரூப மிப்படிப்பட்டதென்று வர்ணித்தது--பின்பு அரசன் யோகிகளைப் பூஜித்தது—அரசன் பாகவத தர்மங்களை யநுஷ்டித்து உத்தமகதியை அடைந்தது—நீரும் அம்மாதிரி பாகவத தர்மத்தை அனுஷ்டியும் என்று நாரதர்சொல்லியது .. 1535-1542

அத்—6.

ப்ரஹ்மதேவர் முதலிய தேவர்கள் த்வாரகையில் ஸ்ரீ கிருஷ்ணனிடம்வந்து ஸ்துதித்து வைகுண்டத்திற்கு வரவேண்டுமென்று அழைத்தது—யதுவம்சத்தை அழித்தபின் வருகிறேன் என்று பகவான் சொல்லி அவர்களை அனுப்பியது—த்வாரகையில் நேர்ந்த அபசகுனங்களைக் கண்ணுற்ற யாதவர்கள் ப்ரபாஸஞ்சென்றது—உத்தவர் பகவான் வைகுண்டத்தில் நோக்கமுள்ளவராக விருப்பதைத் தெரிந்துகொண்டு "உம்மைவிட்டுப் பிரியமாட்டேன் என்றது— ... 1543-1548

அத்—7.

ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவரை நோக்கி எல்லாவற்றையும் ஈச்வர ஸ்வரூபமென்று நினைத்து ஸகல ஆசைகளையும் ஒழிக்கவேண்டும் என்று சொன்னது—உத்தவர் எப்படி ஆசைகளைவிட முடியும்

என்று வினவியது—பகவான் யதுவிற்கும் அவதூதருக்கும் (தத்தாத்ரேயர்) ஏற்பட்ட ஸம்வாதத்தை உத்தவருக்குச்சொல்ல வாரம்பித்தது—யது அவதூதரை ஆனந்தமாக ஸஞ்சரிப்பதற்கு என்ன காரணம் என்று வினவியது—பூமி முதலிய இருப்பத்துநான்கு குருக்களிடம் கற்றுக்கொண்டதைச் சொல்லுகிறேனென்று பூமி, வாயு, ஆகாயம், ஜலம், சந்திரன், ஸூர்யன், மாடப்புரா இவைகளிடம் கற்றுக்கொண்டதைச் சொல்லியது ... 1549-1558

அத்—8.

மலைப்பாம்பு, ஸமுத்திரம், விண்பறவை, தேன்பூச்சி யானை, வண்டு, மான், பிங்களா இவர்களிடமிருந்து அப்யஸித்த குணங்கள் ... 1558-1565

அத்—9.

குரரமென்ற பறவை, சிறுவன், சிறுமி, பாணத்தைச்செய்பவன், ஸர்ப்பம், குளவி, சரீரம் இவைகளிடமாக கற்றுக்கொண்ட குணங்கள் ... 1565-1569

அத்—10.

தத்வஜ்ஞானத்திற்கு ஸாதனங்களாயுள்ளவைகளை வர்ணித்தது ... 1570-1575

அத்—11.

பத்தன் முக்தன், ஸாது, பக்தி இவைகளின் லக்ஷணங்கள் ... 1575-1583

அத்—12.

பகவான் உத்தவரை நோக்கி ஸாதுஸங்கத்தின் மஹிமையை வர்ணித்தது—பின்பு உத்தவர் பகவானை நோக்கி முன் அத்தியாயத்தில் கர்மத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்று சொன்னீர். இப்பொழுது எல்லாவற்றையும் விட்டு என்னைச் சரணமடைய வேண்டுமென்று சொல்லுகிறீர் அதன் நிச்சயத்தைச் சொல்லுமென்று கேட்டது—பகவான் ஜீவனுடைய ஸம்ஸாரத்திற்குக் காரணமான ப்ரபஞ்சத்தின் ஸிருஷ்டியை நிரூபித்தது—ஜீவனுக்கும் பரமாத்மாவிற்குமுள்ள பேதத்தை வர்ணித்தது— ... 1583-1587

அத்—13.

ஸாத்விக தேசம் முதலியவைகளை நிரூபித்தது-விஷயங்களால் ஆபத்துண்டாகிறதென்று தெரிந்திருந்தும் ஜனங்கள் அவைகளை

யே விரும்புகிறார்களே அதன் காரணமென்ன? என்று உத்தவர் வினவியது—ரஜோகுணம், தமோகுணம் இவைகளால் மனங்கலங்கி விஷயங்களில் ஆசைப்படுகிறான் என்று பகவான் சொன்னது—ஸனகர் முதலியவர்களுக்குபதேசித்த ப்ரகாரத்தை நிரூபிக்கும்படி உத்தவர் கேட்டது—பகவான் தாம் ஹம்ஸவேடங்கொண்டு ஸனகர் முதலியவர்களுக்குபதேசித்த வண்ணம் ஆத்மதத்வத்தை உத்தவருக்கு உபதேசித்தது— ... 1588-1595

அத்—14.

பக்தியோகம் முதலியவைகளைப்பற்றி உத்தவர் பகவானைக் கேட்டது—வேதம் தம்மிடமிருந்து சிஷ்யபரம்பரையாக லோகத்தில் பரவியதென்றும், அதன் அர்த்தத்தை அவர் அவர்களுடைய புத்திக்குத் தக்கவாறு கிரஹித்துக்கொண்டார்களென்றும், அதனால் க்ஷேமத்திற்குபாயத்தைப் பலவகையாகச் சொல்லுகிறார்கள் ஆனாலும் பக்திக்குச் சமமானது வேறொன்றுமில்லையென்று பகவான் வர்ணித்தது—உத்தவர் த்யானத்தைப்பற்றிக் கேட்டது - ஸகர்ப்ப ப்ராணாயாமத்துடன் த்யானத்தை பகவான் நிரூபித்தது ... 1595-1601

அத்—15.

அணிமா முதலிய ஸித்திகளைப்பற்றி உத்தவர் வினவியது—முக்கியமாக பதினெட்டு ஸித்திகளென்றும் இன்னதாரணையால் இம்மாதிரியான ஸித்தி யேற்படுகிறதென்றும் பகவான் விஸ்தாரமாக வர்ணித்தது— ... 1601-1606

அத்—16.

பகவானுடைய விபூதிகளைச் சொல்லும்படி உத்தவர் ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கேட்டது—ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய விபூதிகளைச் சுருக்கமாக வர்ணித்தது— ... 1606-1610

அத்—17.

பக்திக்கு ஆச்ரம தர்மங்கள் ஸாதனங்களென்று பகவான் சொன்னதைக்கேட்டு உத்தவர் பக்தி ஸாதனமான தர்மத்தைச் சொல்லும்படி கேட்டது—யுகதர்மம், வர்ணதர்மம், ப்ரஹ்மசாரி தர்மம், கிருஹஸ்ததர்மம் ஆகிய இவைகளை பகவான் நிரூபித்தது— .... 1611-1617

அத்—18.

வானப்ரஸ்தன், ஸந்யாஸி இவர்களுடைய தர்மம் 1617-1623

அத்—1.

ஜ்ஞானத்தின் பெருமையை பகவான் சொல்லியது,—பக்தி யோகத்தைச் சொல்லும்படி உத்தவர் பகவானைத் தூண்டியது,—பகவான் 'பக்தியோகத்தை முன்னமேயே சொல்லியிருக்கிறேன். ஆனாலும் அதன் ஸாதனங்களை திரும்பவும் சொல்லுகிறேன்'' என்று அவைகளை நிரூபித்தது—உத்தவர் யமம் முதலியவைகளின் ஸ்வரூபத்தைச் சொல்லும்படி கேட்டது—அவைகளைப்பற்றி பகவான் விஸ்தாரமாகச்சொல்லி இது குணம், இது தோஷம் என்று நினைக்காமலிருப்பதே குணமென்று சொல்லியது ... 1623-1629

அத்—20.

குணம், தோஷம் இவைகள் வேதத்தால் நிரூபிக்கப்பெற்றவை யல்லவா? அவைகளை எப்படி கிரஹிக்காமலிருக்க முடியும்?'' என்று உத்தவர் வினவியது—ஜ்ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம் என்று வெவ்வேறு அதிகாரிகளை யுத்தேசித்து மூன்று யோகங்களை பகவான் நிரூபித்தது— .. 1629-1634

அத்—2'.

முன்காட்டிய மூன்று யோகங்களிலும் எவர்களுக்கு அதிகாரமில்லையோ, அவர்களை யுத்தேசித்து குணதோஷங்கள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன என்று பகவான் குணதோஷங்களை விஸ்தாரமாக நிரூபித்தது ... 1635-1643

அத்—22.

மஹர்ஷிகள் தத்வங்களைப் பலவகையாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனாலும் அவையெல்லாம் உண்மையென்று பகவான் நிரூபித்தது—ப்ரகிருதி, புருஷன் இவர்களுடைய லக்ஷணத்தைச் சொல்லும்படி உத்தவர் பகவானைத் தூண்டியது—பகவான் அதனை வர்ணித்தது—உத்தவர் ஜனன மரணங்களைப்பற்றி கேட்டது—பகவான் அவைகளை நிரூபித்தது— ... 1643-1652

அத்—23.

பகவான் பிக்ஷுகீதையை உத்தவருக்குச்சொல்லி அதன்முகமாக பிறருடைய அவமானத்தை ஸஹித்திருக்கும் உபாயத்தைக் காண்பித்தது— ... 1652-1660

அத்—24.

ஸிருஷ்டி, லயம் இவைகளை விஸ்தாரமாகச்சொல்லி மனத்தின் மோஹத்தை நிவர்த்தித்தது ... 1660-1664

அத்—25.

ஸத்வம் முதலிய விருத்திகளை வர்ணித்தது—மேற்காட்டிய குணங்களை அடைந்தவர்களுக்கும் நேரும் கதியைக் காண்பித்தது—குணஸம்பந்தமற்றவனாக விருக்கவேண்டுமென்பதை நிரூபித்தது ... 1664-1669

அத்—26.

புரூரவஸ் ஊர்வசியினிடத்தில் ஆசைகொண்டு கஷ்டப்பட்டது—அஸத்துக்களுடைய சேர்க்கை யோகத்திற்கு இடையூறாகுமென்று காண்பித்தது—ஸாதுக்களுடைய சேர்க்கையால் பகவானிடத்தில் பக்தியுண்டாகுமென்பது .... 1669-1673

அத்—27.

உத்தவர் பகவானுடைய பூஜையாகிய கிரியாயோகத்தைச் சொல்லும்படி பகவானைக்கேட்டது—ப்ரதிமைகளின் பேதத்தையும், அவைகளுக்குத் தக்கவாறு ஆவாஹனம் முதலியவைகளைச் செய்யும் முறையையும் நிரூபித்தது—மேலும் புஷ்பதோட்டம் போடுபவர்கள், தேவாலயங் கட்டுவிப்பவர்கள், உத்ஸவம் செய்விப்பவர்கள் ஆகிய இவர்களுடைய உத்தம கதியை பகவான் வர்ணித்தது— ... 1673-1679

அத்—28.

பகவான் ஜ்ஞானயோகத்தைச் சுருக்கமாக வர்ணித்தது—உத்தவர் பகவானை நோக்கி, "ஸம்ஸாரமென்பது யாருக்கு" என்று கேட்டது — ஸம்ஸாரமென்பது உண்மையானதல்ல, ஆனாலும் அஹங்காரியான ஜீவனுக்கு ஏற்படுகிறதென்பதை காரணங்களுடன் விஸ்தாரமாக நிரூபித்தது— ... 1679-1688

அத்—29.

உத்தவர் பகவானைநோக்கி "மனத்தை அடக்காதவனால் யோகஞ்செய்வது ஸாத்யமல்லவென்று நினைக்கிறேன். அதனைச் சொல்லுமென்று கேட்டது—பகவான் பாகவத தர்மங்களை நிரூபித்தது—உத்தவர் பகவானைநோக்கி 'உம்மால் உபதேசிக்கப்பெற்றதைக் கேட்டு ஜ்ஞானியானேனென்று சொன்னது—பகவான் பதரி

கா ச்ரமத்திற்குப் போகும்படி உத்தவரை ஆஜ்ஞாபித்தது—உத்தவர் அப்படியே பகவானை ப்ரதக்ஷிணஞ்செய்து பதரிகா ச்ரமஞ் சென்றது. ... 1688-1694

அத்—30.

பரீக்ஷித்து மஹாராஜன் சுகரைநோக்கி உத்தவர் த்வாரகைக்குச் சென்ற பிறகு பகவான் செய்ததைச் சொல்லும்படி கேட்டது சுகர் சொல்ல வாரம்பித்தது—த்வாரகாநகரத்தில் உத்பாதங்கள் உண்டானதைப்பார்த்து கிருஷ்ணன் முதலியவர்கள் ப்ரபாஸஞ்சென்றது—அவ்விடத்தில் மத்தியத்தைப் பானஞ்செய்துப் புத்திமயங்கி யாதவர்கள் ஒருவர்க்கொருவர் அடித்துக்கொண்டு நாசமடைந்தது-பலராமன் தம்முடைய யோகமஹிமையால் மனுஷ்யலோகத்தைவிட்டது—ஸ்ரீ கிருஷ்ணன் அச்வத்த மரத்தடியில் உட்கார்ந்திருந்தது—ஜரனென்ற வேடன் கிருஷ்ணனுடைய பாதத்தை ஒருமானின்வாயென்று நினைத்து பாணத்தாலடித்தது—பின்பு ஸ்ரீகிருஷ்ணனென்று தெரிந்துகொண்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டது—ஸ்ரீ கிருஷ்ணன் அவனையுத்தமலோகத்திற்கு அனுப்பியது—அப்பொழுது தாருகன் பகவானைத் தேடிக்கொண்டு அவ்விடம்வந்தது—பகவானுடையரதமும் குதிரையும், த்வஜமும், ஆயுதங்களும் ஆகாயஞ்சென்றது—அப்பொழுது பகவான் தாருகனைநோக்கி "இதுமுதல் ஏழாவதுநாளில் ஸமுத்திரம் த்வாரகையைக் கவர்ந்துகொள்ளும் நீங்களெல்லோரும் அர்ஜ்ஜுனனால் காப்பாற்றப்பட்டு இந்திரப்ரஸ்தத்திற்குப் போகவேண்டும்" என்று ஆஜ்ஞாபித்தது—தாருகன் கிருஷ்ணனை நமஸ்கரித்து த்வாரகைக்குச் சென்றது .... 1694-1698

அத்—31

பகவான்வைகுண்டம் செல்வதைப்பார்ப்பதற்காக ப்ரஹ்மா முதலியதேவர்கள் அவ்விடம்வந்தது—அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது ஒருவருக்குந்தெரியாமல் கிருஷ்ணன்வைகுண்டஞ்சென்றது—ஸ்தேவர்கள் ஸ்தோத்திரஞ்செய்தது—தாருகன் த்வாரகாநகரஞ்சென்று விருஷ்ணிகளுடைய மரணத்தை வஸுதேவர் முதலியவர் களுக்குத்தெரிவித்தது—அவர்கள் ப்ரபாஸக்ஷேத்திரஞ்சென்று மரணமடைந்த பந்துக்களைப்பார்த்து ப்ரலபித்தது—வஸுதேவர், தேவகி முதலியவர்கள் ப்ராணனைவிட்டது—அர்ஜ்ஜுனன் கிருஷ்ணனால் உபதேசிக்கப்பெற்ற கீதாவாக்கியங்களை

நினைத்து மனதை ஸமாதானப்படுத்தியது—பந்துக்களுக்கு உத்தி ரக்கிரியைசெய்தது—ஸ்திரீகள், பாலர்கள், வயது முதிர்ந்தவர்கள் இவர்களை இந்திரப்ரஸ்தத்திற்கு அழைத்துவந்து வஜ்ஜிரனென்பவனுக்கு அர்ஜ்ஜுனர் ராஜ்ஜியாபிஷேகஞ்செய்தது—பரீக்ஷித்திற்கு ராஜ்ஜியாபிஷேகஞ்செய்து பாண்டவர்கள் மஹாப்ரஸ்தானஞ்சென்றது— 1699—1701.

11-வது ஸ்கந்தத்தின் விஷயஸூசிகா முற்றிற்று.

# ஸ்ரீமத் பாகவதம்.

## ஸ்கந்தம்—11.

### அத்யாயம்—1.

யதுகுலத்தை ப்ராஹ்மணர்கள் சபித்தது.

ஸ்ரீ கிருஷ்ணன் பலராமனுடன் அஸுரர்களைக் கொன்று யாதவர்களுடன் வஸித்து மிக்க சண்டையையுண்டுபண்ணி பூமியின் சுமையை நிவர்த்தித்தார். மேலும் துர்யோதனன் முதலியவர்கள் கபடமாக சொக்கட்டான் விளையாடுவது, பரிஹஸிப்பது த்ரௌபதியின் தலைமயிரைப் பிடித்திழுப்பது முதலிய அனேக கெட்ட கார்யங்களைச் செய்ததால் தர்மபுத்திரர் முதலிய பாண்டு குமாரர்கள் மிக்க கோபங்கொண்டார்கள். அந்தப் பாண்டவர்களை நிமித்தமாக வைத்துக்கொண்டு ஸர்வேச்வரராகிய ஸ்ரீ கிருஷ்ணன் இரண்டுகக்ஷியிலும் சேர்ந்திருந்த அரசர்களைக்கொன்று பூமியின் சுமையை நிவர்த்தித்தார். (பூதனை முதலிய சிலரைத் தாமே கொன்றார். ப்ரலம்பன் முதலிய சிலரை பலராமனைக்கொண்டு கொன்றார். பந்துக்களாகவிருந்த அஸுரர்களை ஒவ்வொரு நிமித்தத்தை யுண்டுபண்ணி யாதவர்களைக் கொண்டு கொன்றார்) பூமிக்குச் சுமையாகவிருக்கும் மற்ற அரசர்களுடையஸைன்யத்தைத் தம்மால் ஸம்ரக்ஷிக்கப்பெற்ற யாதவர்களைக் கொண்டு கொன்றார். பின்னுமளவிடக் கூடாத மஹிமையுள்ள ஸ்ரீ கிருஷ்ணன் "பூமிக்குச் சுமையாக விருந்தவர்களைக் கொன்றும் பூமியின் பாரம் நிவர்த்தி யடையவில்லையென்றே நினைக்கிறேன், யதுகுலம் ஸஹிக்கமுடியாததாக விருக்கிறது. இந்த யாதவர்கள் என்னை ஆச்ரயித்திருப்பதாலும், யானை, குதிரை, ரதம், காலாட்கள் முதலிய ஸைன்யங்கள் அதிகமாக விருப்பதாலும் இதனைக் கொல்வதற்குப் பிறரால் முடியாது (நாம் நேரில் கொல்வதும்சரி

யல்ல) ஆனதால் இவர்களில் ஒருவருக்கொருவர் விரோதத்தை யுண்டுபண்ணுகிறேன், அதனால் அவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு மரணமடைவார்கள்! மூங்கில் ஒன்றோடொன்று உரைந்து அதனாலுண்டான அக்னியால் எரிக்கப்படுவது போல யதுகுலம் நாசமடையும், அதன்பின் நாம் வைகுண்டஞ் செல்வோம்” என்று தமக்குள் யோசித்து ஸத்யஸங்கல்பனாகிய ஈச்வரன் பிராஹ்மண சாபமென்ற நிமித்தத்தால் தன்னுடைய வம்சத்தைக் கொன்றார். பின்னுமந்தப் பகவான் மிக்க அழகு பொருந்திய தமது திவ்ய சரீரத்தால் ஜனங்களுடைய கண்களை திருப்தி செய்தும், தம்முடைய இனிமையான வார்த்தைகளால் வாக்குகளையும், தம்மை ஸ்மரிப்பவர்களுடைய சித்தத்தையும் அபஹரித்தார். அவருடைய காலடியைத்தர்சித்தவர்கள் அதன் அழகைப்பார்த்து அவ்விடத்திலேயே அசையாமல் நிற்கிறார்கள் இம்மாதிரி கிருஷ்ணாவதார காலத்திலிருந்த ஜனங்களை அநுக்ரஹித்தார். பிந்திய ஜனங்களிடத்தில் கருணையால் பகவான் தம்முடைய கீர்த்தியைக்கேட்டு நல்லகதியை அடையட்டுமென்று எண்ணத்துடன் பூமியில் கீர்த்தியை ஸ்தாபித்து தம்முடைய பதத்தை அடைந்தார், என்று சுகர் சொன்னார்.

8—9. அதனைக் கேட்ட அரசன் சுகரை நோக்கி “ஓ ப்ராஹ்மண! யாதவர்கள் ப்ராஹ்மணபக்தியுள்ளவர்களல்லவா? கொடையாளிகள்; எப்பொழுதும் பெரியோர்களுடைய சேர்க்கையுள்ளவர்கள்; கிருஷ்ணனை த்யானித்துக்கொண்டிருப்பவர்கள் அப்படிப்பட்ட யாதவர்களுக்கு ப்ராஹ்மணசாபம் எப்படி நேர்ந்தது? எதற்காக ப்ராஹ்மணர்கள் சபித்தார்கள்? எப்படி சபித்தார்கள்? ஒரே மனமுள்ளவர்களான யாதவர்களுக்கு எப்படி விரோதமுண்டாயிற்று? அதெல்லாவற்றையும் சொல்லும் ” என்று கேட்டார்.

10—14. அதனைக்கேட்ட சுகர் அரசனை நோக்கி “ ஸ்ரீ கிருஷ்ணன்மிக்க அழகு பொருந்திய சரீரமுள்ளவரானாலும் விஷயங்களிலேயே ஆசைகொண்டு காமியாகவிருமல்மங்களமான கர்மங்களைச் செய்துகொண்டு தாம் ஸகலகாமங்களையும் அடை

தவரானதால் கர்மங்களின் பயனை விரும்பாமலும், த்வாரகா நக த்தில் கிருஹஸ்தராகவிருந்து தர்ம கர்மங்களை யநுஷ்டித்துக் காண்பித்துபிறரையும் அநுஷ்டிக்கச்செய்தும் தம்முடைய கீர்த்தியைப் பரவச்செய்துகொண்டும் தம்முடையவம்சத்தை ஸம்ஹரிக்கவேண்டுமென்று நினைத்தார். பூபாரத்தை நிவர்த்திப்பதற்காக அவதரித்தவரானதால் அந்தக் காரியம் பாக்கியாகவிருப்பதால் அப்படி நினைத்தார். இப்படி பகவான் வஸுதேவருடைய கிருஹத்தில் வஸித்து மிக்க புண்ணியத்தைக் கொடுக்கக்கூடியவைகளும், மிக்க ஸுககரங்களும், அவைகளைக் கானஞ்செய்பவர்களுக்குக் கலியின் தோஷத்தை போக்கடிப்பவைகளுமான சரித்தங்களைச்செய்து தமது வம்சத்தை ஸம்ஹரிக்க விரும்பி விச்வாமித்ரர், அஸிதர், கண்வர், துர்வாஸஸ், ப்ருகு, அங்கிரஸ், காச்யபர், வாமதேவர், அத்ரி, வஸிஷ்டர், நாரதர் முதலிய மஹர்ஷிகளை வரவழைத்து (சில கார்யத்திற்காக வரவழைத்து அந்தக் கர்மங்கள் செய்தபின்) த்வாரகைக்கு ஸமீபத்திலிருக்கும் பிண்டாரகமென்ற தீர்த்தத்திற்குப் போகும்படி அவர்களை அனுப்பினார். அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஆஜ்ஞைபின்படி பிண்டாரகமென்ற தீர்த்தஞ்சென்றார்கள். அப்பொழுது அவ்விடத்தில் யதுகுமாரர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அந்தக்குமாரர்கள் ஸாம்பனுக்கு பெண் வேஷம் போட்டு அவனைமுன்னிட்டு மஹர்ஷிகளை நோக்கி "வீணாகாத பார்வையுள்ளவர்களே! இவள் கர்ப்பிணியாக விருக்கிறாள். இவளுக்கு ப்ரஸவகாலம் ஸமீபித்திருக்கிறது, இவள் உங்களைக் கேட்பதற்கு வெட்கப்படுகிறாள். ஆனதால் நாங்கள் கேட்கிறோம். இவள் ஆண்குழந்தையினிடம் பிரியமுள்ளவளாக விருக்கிறாள், இவளிடத்தில் பிறக்கும் குழந்தை ஆண் குழந்தையா? பெண் குழந்தையா சொல்லுங்கள்" என்று மிக்க வணக்கமுள்ளவர்கள் போல் கேட்டார்கள்.

**15—23.** அதனைக்கேட்ட மஹர்ஷிகள் கோபங்கொண்டு "ஓ மூடர்களே! உங்களுடைய குலத்தை கொல்லக்கூடிய உலக்கை பிறக்கும்" என்று சொன்னார்கள். அதனைக்கேட்டு அந்தக் குமாரர்கள் மிகவும் பயந்து ஸாம்பனுடைய வயிற்றைப்பார்க்க அதில் இரும்புமயமான ஒரு உலக்கை யிருந்தது. அதனைக்கண்ட அந்தக் குமாரர்கள் "அதிருஷ்டமில்லாதவர்களான நாம்

என்னகார்யம் செய்தோம்? ஜனங்கள் நம்மை என்ன சொல்வார்கள்? என்று கவலைப்பட்டு அந்த உலக்கையை யெடுத்துக்கொண்டு தங்கள் வீடு சென்றார்கள். மேலுமவர்கள் அந்த உலக்கையை ஸபையில் உக்ரஸேனர் முன்பாகவைத்து நடந்த சமாசாரத்தைத்தெரிவித்தார்கள். அதனைக்கேட்ட த்வாரகாவாஸிகள் "ப்ராஹ்மண சாபம் வீணாகாது, அவர்கள் சொல்லியபடி உலக்கையுமிருக்கிறது, இதென்ன ஆச்சர்யம்" என்று பயந்தார்கள். யாதவர்களுக்கு அரசனாகிய உக்ரஸேனர் அந்த உலக்கையைப் பொடியாக்கி அப்பொடிகளை ஸமுத்திரத்தில் எறியச்செய்து பாக்கியான இரும்பையும் ஸமுத்திரத்தில் போட்டார். அந்த இரும்புத்துண்டை ஒரு மீன் விழுங்கிற்று. இரும்புப்பொடிகள் அலையடித்து ஸமுத்திரக்கரையில் ஒதுங்கி கோரைகளாக முளைத்தன. பின்பு மீன் பிடிப்பவர்கள் ஸமுத்திரத்தில் வலைவீசி மீன் பிடித்தார்கள். அப்பொழுது இரும்புத்துண்டை விழுங்கிய மத்ஸ்யம் மற்ற மத்ஸ்யங்களுடன் வலையில்சிக்கிக்கொண்டது அதைப் பிடித்து அதைப் பிளந்து அதன்வயற்றிலிருந்த இரும்புத் துண்டை ஒரு வேடன் அம்பின் நுனியில் வைத்துக்கொண்டான். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு இந்த விஷயங்கள் யாவும் தெரியும். ஆனாலும் அவர் காலஸ்வரூபியாகவிருந்து யதுவம்சத்தை ஸம்ஹரிக்க விரும்பியவரானதால் இவைகளை வேறாகமாற்ற ஸாமர்த்தியமுள்ளவரானாலும் ப்ராஹ்மண சாபத்தை மாற்ற இஷ்டமில்லாமல் அதனை ஒப்புக்கொண்டிருந்தார்.

## அத்யாயம்—2

வஸுதேவருக்கு நாரதர் பாகவத தர்மத்தை யுபதேசித்தது.

ஓ பரீக்ஷித்து மஹாராஜ! ஸ்ரீ கோவிந்தருடைய கைகளால் காப்பாற்றப்பட்ட த்வாரகா நகரத்தில் நாரதர் ஸ்ரீ கிருஷ்ணனை யுபாஸிக்க விரும்பி எப்பொழுதும் வஸித்துவந்தார். ஓ அரசனே! மனிதன் எங்கும் மிருத்யுபயமுள்ளவனானதால் இந்திரியமுள்ள எவன் தான் சிறந்த தேவர்களாலும் உபாஸிக்கக்கூடிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதாரவிந்தத்தை யுபாஸிக்க மாட்டான்? அவர் ஒருநாள் வஸுதேவருடைய கிருஹத்திற்குச் சென்றார். வஸுதேவர் தேவர்ஷியாகிய நாரதரைப் பூஜித்து ஆஸனத்தில் உட்காரச் செய்து நமஸ்கரித்து "ஓ பகவன்! தாய் தந்தைகளு

டைய வரவு எப்படி குழந்தைகளுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கிறதோ, உத்தமச்லோகராகிய பகவானிடத்தில் பக்தியுள்ள பெரியோர்களுடைய வரவு எப்படி ஸம்ஸாரிகளுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியதோ, அப்படி பகவத்ஸ்வரூபியான உம்முடைய வரவு ஸகல ப்ராணிகளுக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. தேவர்களுடையநடை பிராணிகளுக்கு துக்கத்தையும்(அதிகமழை பெய்வதால்) ஸுகத்தையுங்கொடுக்கிறது. ஸ்ரீமந்நாராயணனை மனத்தில் நினைத்திருப்பவர்களானஉம்மைப்போன்றஸாதுக்களுடையநடை, பிராணிகளுக்குஸுகத்தையே உண்டுபண்ணுகிறது. எந்த மனிதர்கள் கர்மங்களைச்செய்து எப்படிதேவர்களை உபாஸிக்கிறார்களோ, அதற்குத்தக்கபடிதேவர்களும்கர்மதின்படி மனிதர்களுக்குநிழல்போல உபகரிக்கிறார்கள். ஸாதுக்கள் அப்படியல்ல. தீனர்களிடத்தில்மிக்கவாத்ஸல்யமுள்ளவர்கள்(தம்மைஆச்ரயிக்காவிடினும்தீனர்களிடதில்ப்ரீதிசெய்கிறார்களென்றுகருத்து, ஓ ப்ராஹ்மண! உம்முடையவரவாலேயேகிருதார்த்தனாகவிருக்கிறேன். ஆனாலும் நீர் எதனையநுஷ்டித்து ஈச்வரனுடைய அநுக்ரஹத்தை அடைந்தீர்? அந்தப்பாகவத தர்மத்தைச்சொல்லும். அதனை ச்ரத்தையுடன் கேட்டமாத்திரத்தில் பயத்திலிருந்து நிவர்த்தியடைவான். நான் முன்ஜன்மத்தில் அனந்தராகிய பகவானைபுத்திரன்பிறக்க வேண்டிபூஜித்தேன். முக்தியைக்கொடுப்பவரானாலும் அவருடைய மாயையால் மோஹித்துமோக்ஷத்திற்காக பூஜிக்கவில்லை. ஆனதால் பலவகையானவ்யஸனமுள்ளதும், எங்கும் பயமுள்ளதுமான ஸம்ஸாரத்திலிருந்து சீக்கிரத்தில் நிவர்த்தியடையுவேனோஅப்படி எனக்குபதேசிக்கவேண்டும். நீர் நல்ல வ்ரதங்களை அநுஷ்டித்தவர்'' என்று கேட்டுக்கொண்டார்.

10—14. ஓ அரசனே! புத்திசாலியாகிய வஸுதேவருடைய வார்த்தையைக்கேட்டு தேவர்ஷியாகிய நாரதர் ஸ்ரீ நாராயணனுடைய குணங்களை நினைத்து மிக்க ப்ரீதியுடன் ''ஓ ஸாத்வதர்களுக்குச்சிறந்தவரே! நல்லகார்யத்தில்முயற்சித்தீர், ஜகத்தைப்பரிசுத்தப்படுத்தும்பாகவத தர்மங்களைப்பற்றி கேட்டீரல்லவா? இந்தப் பாகவத தர்மத்தைக்கேட்டாலும், படித்தாலும், த்யானஞ்செய்தாலும், அதில்பிரியம்வைத்தாலும், அதனை அநுமோதித்தா

னும் தேவர்களுக்கும் ஜகத்திற்கும் த்ரோஹஞ்செய்பவர்களானு னும் சுத்தர்களாவார்கள். மிக்கக்கல்யாண ஸ்வபாவமுள்ளவரும், தம்முடைய திவ்யநாமங்களை ச்ரவணஞ்செய்பவர்களுக்கும், உச்ச ரிப்பவர்களுக்கும் புண்யத்தைக்கொடுப்பவருமான ஸ்ரீமந்நாராய ணனைஸ்மரிக்கும்படி செய்தீர். இந்த விஷயத்தில் ரிஷபருடைய புத்திரர்களுக்கும்நிமிக்கும்நேர்ந்தஸம்வாதமாகியவெகுநாளைக்கு முன் நடந்தஇதிஹாஸத்தை உதாஹரணமாகச் சொல்லுகிறேன்.

15—31. ஸ்வாயம்புவ மனுவின் புத்திரனாகிய ப்ரிய வ்ரதரு க்கு ஆக்னீத்ரரென்பவர் புத்திரர். அவருடைய புத்திரர் நாபியென் பவர், அவருடைய புத்திரர். ரிஷபரென்பவர். மோக்ஷதர்மத்தை லோகத்திற்குபதேசிப்பதற்காக பகவானுடைய அம்சமே ரிஷப ருக அவதரித்தது என்று சொல்லுகிறார்கள், அவருக்கு நூறு புத்திரர்கள்பிறந்தார்கள். அவர்கள்ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள். அவர்களில் பரதரென்ற மூற்றவர்நாராயணனிடத்தில் மிக்கபக்தி யுள்ளவர்; அவருடைய பெயரால்தான் இந்த வர்ஷம் பாரதவர்ஷ மென்று பெயரடைந்தது, (முன் அஜநாபமென்ற பெயருள்ள வர்ஷம் பாரதமென்ற பெயரடைந்தது) அவர் இந்தப்பூமியை பரி பாலித்து ஸகல போகங்களையும் அநுபவித்து பின்பு காட்டிற்குச் சென்று தபஸ்செய்து ஸ்ரீ ஹரியை மூன்று ஜன்மங்களில் உபாஸி த்து அவருடையபதத்தைஅடைந்தார். பாக்கியான புத்திரர்களில் ஒன்பது குமாரர்கள் ஒன்பது த்வீபங்களுக்கு அதிபதிகளாக விருந்தார்கள். எண்பத்தொன்று குமாரர்கள் கர்மமார்க்கத்தை பூமியில் பரவச் செய்துகொண்டிருந்தார்கள். கவி, ஹரி, அந் ரிக்ஷர், ப்ரபுத்தர், பிப்பலாயனர், ஆவிர்ஹோத்திரர். த்ரமீளர், சம ஸர், கரபாஜனர், என்றஒன்பது குமாரர்கள்ஆத்மதத்வத்தை அப் யஸிப்பதில் ச்ரமப்பட்டவர்களும், தத்வத்தை நிரூபிப்பவர்களும் திகம்பரர்களும், ஆத்மவித்யையில்ஸமர்மத்தர்களுமாகவிருந்தார் கள். அவர்கள் இந்த ஜகத்தை பகவத்ஸ்வரூபமாகவும் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபமாகிய அதனைத் தாமாகவும், பார்த்துக்கொண்டுப் பூமியில் ஸஞ்சரித்தார்கள். அவர்கள்ஒன்றிலும் பற்றுதலில்லாமல் மஹர்ஷிகள், சாரணர்கள், பூதநாதர், வித்யாதரர்கள், ப்ராஹ்மணர் கள், பசு, தேவர்கள், ஸாத்யர்கள், ஸித்தர்கள், கந்தவர்கள், யக்ஷர் கள், கின்னரர்கள், நாகர்கள் ஆகிய இவர்களுடையலோகங்களில்தங் களிஷ்டப்படிஸஞ்சரித்தார்கள். ஒருகால்பாரதவர்ஷத்தில்நி மியர்

கஞ் செய்துகொண்டிருக்க அந்த யாகசாலைக்கு அந்தயோகிகள் வந்தார்கள். ஸூர்யன் போன்ற அந்தப்பாகவதர்களானயோகிக ளைக்கண்டுயஜமானன், ஆஹவனீயம் முதலிய அக்னிகள், ப்ராஹ் மணர்கள் ஆகிய எல்லோரும் எழுந்திருந்தார்கள். நிமி அவர்களை ப்ரஹ்ம வித்துக்களென்று தெரிந்துகொண்டுமிக்கப்ரியத்துடன் ஆஸனங்கொடுத்து விதிப்படிபூஜித்தார். மேலுமவர் ஸனகர் முத லியப்ரஹ்மதேவருடைய புத்திரர்கள்போல ப்ரகாசிக்கும் அந்த யோகிகளை நோக்கிமிகுந்த வணக்கத்துடன் "விஷ்ணுபக்தர்கள் லோகங்களைப் பரிசுத்தப்படுத்துவதற்காக லோகங்களில் ஸஞ்ச ரிப்பார்கள். ஆனதால் உங்களை ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பார்ஷதர் களென்றுநினைக்கிறேன். ஒருக்ஷணத்தில் நாசமடையக்கூடியதா னாலும் மனுஷ்ய ஜன்மம் கிடைப்பது அரிது. (புருஷார்த்தங்களை அடைவதற்கு ஸாதனமாகவிருக்கிறது) அந்தஜன்மத்திலும்விஷ் ணுபக்தர்களாகிய ஸாதுக்களுடையதர்சனங்கிடைப்பது அரிது. ஓபாபமற்றவர்களே! எதனைச்செய்தால்முக்கியமான க்ஷேமத்தை (மோக்ஷத்தை) அடையலாம். அதனைச்சொல்லவேண்டும். இந்த ஸம்ஸாரத்தில் அரைக்ஷணமாகிலும் ஸாதுக்களுடைய சேர்க்கை நேர்ந்தால் அதுமிக்க ஆனந்தத்தைக்கொடுக்ககூடியது. எந்த தர் மங்களை அநுஷ்டித்தால் பகவான் ஸந்தோஷித்து பக்தனுக்கு தம்மையும் கொடுப்பாரோ, அப்படிப்பட்ட பாகவத தர்மங்களை நான் கேட்கக் கூடுமானால் சொல்லுங்கள்" என்று கேட்டார்.

32—43. ஓவஸுதேவ! இப்படிநிமியால்கேட்கப்பட்ட அந்த யோகிகள்அவரைச்லாகித்துஸதஸ்யர்களும்,ரித்விக்குகளும்கேட் டிருக்க பதில்சொன்னார்கள். அவர்களில் கவியென்பவர் அரசனை நோக்கி "தேஹம் முதலியவைகளை ஆத்மாவென்று நினைத்துஎப் பொழுதும் பயத்தை அடைந்திருக்கும் புருஷன் இந்தஜகத்முழு வதும் ஈச்வரஸ்வரூபமென்றுநினைத்தால்பயம்நிவர்த்தியடையும், ஆனதால் ஸ்ரீ பகவானுடைய பாதாரவிந்தத்தை யுபாஸிப்பதே ஸகலபயத்தையும் நிவர்திக்கக்கூடியதென்று நினைக்கிறேன்(பரம க்ஷேமமின்னதென்று காட்டப்பட்டது.) அஜ்ஞானிகள் ஸுக மாகஆத்மதத்வத்தைத் தெரிந்துகொள்வதற்காக பகவான் தாம் எந்தஉபாயங்களைச்சொல்லியிருக்கிராரோ, அவைகள்பாகவததர் மங்கள். (பகவான் மனுமுதலியவர்களைக்கொண்டு வர்ணாச்ரமதர்

மங்களை லோகத்திற்குக்காண்பித்து மிகவும்ரஹஸ்யமான ஆத்ம தத்வத்தைத் தாமே சொன்னாரென்று கருத்து) கண்களை மூடிக்கொண்டும் ஓடிக்கொண்டு அவைகளை அநுஷ்டித்தாலும்தவறுதலை அடைகிறதில்லை. ப்ரத்யவாயத்தை அடைகிறதில்லை. பயனை அடையாமலிருக்கிறதில்லை (ச்ருதி, ஸ்மிருதி ஆகிய இரண்டும் இரண்டு கண்கள், ஒன்றில்லாதவன் காணனெனப்படுகிறான். இரண்டுமில்லாதவன் அந்தனெனப்படுகிறான் யாகம் முதலிய கர்மங்களை அநுஷ்டிப்பவனுக்கு இடையூறு உண்டாகிறதில்லை. ஓடிக்கொண்டென்றால்சீக்கிரமாகஅநுஷ்டிப்பதென்றும்மூடிக்கொண்டென்றால் தெரியாமலென்றும் அர்த்தங்கொள்ளவேண்டும்) சரீரத்தாலும், வாக்கினாலும், மனத்தாலும், இந்திரியங்களாலும், புத்தியாலும்,அஹங்காரத்தாலும்,அநுஸரிக்கப்பெற்று எதனைச் செய்கிறானோ, அதெல்லாவற்றையும்பரமபுருஷனாகிய ஸ்ரீமந்நாராயணனுக்கு என்று ஸமர்பிக்கவேண்டும்.( இதுதான்பாகவததர்மமென்று கருத்து) தேஹத்தில் அபிமானம் வைப்பதால் பயமுண்டாகிறது. ஈச்வரனிடத்தில் பக்தி செய்யாதவனுக்கு பகவானை நினைக்காமலிருப்பதும், தேஹத்தை நானென்று நினைக்கும்விபரீத ஜ்ஞானமுமுண்டாகிறது. அதுவும் பகவானுடைய மாயயாலுண்டாகிறது. ஆனதால் வித்வானாகவிருப்பவன் ஸர்வேசனாகிய அந்தப் பகவானை மிக்கப் பக்தியுடன் உபாஸிக்கவேண்டும். மேலும் குருவையேதேவதையாக நினைக்கவேண்டும். ("என்னுடைய மாயயானது முக்குணஸ்வரூபமானது, தேவஸம்பந்தமுள்ளது, தாண்டமுடியாது. என்னையே எவர்கள் சரணமடைகிறார்களோ அவர்கள்இந்தமாயயைத் தாண்டுகிறார்கள்"—பகவத்கீதா. அஜ்ஞானத்தால் ஏற்பட்ட பயம் ஜ்ஞானத்தால் நிவர்த்தியடையுமேயொழிய பரமேச்வர பஜனத்தால் என்ன ப்ரயோஜனமென்றால் அவனை யுபாஸித்தால்தான் மாயயைத் தாண்டலாமென்று காண்பிக்கப்பட்டது )விஷயங்களில் மனஞ்செல்லுவதால் ஏகாந்தமான பக்தி எப்படி உண்டாகும் என்றால் விஷயமென்பது உண்மையானதல்ல. ஆனதால் மனத்தை அடக்குவதால் அபயமுண்டாகுமென்று இந்த ச்லோகத்தால் காட்டப்படுகிறது—ஸிருஷ்டிக்குமுன் இல்லாமலிருந்த இந்த ப்ரபஞ்சமானது உண்மையில் இல்லாததானாலும்இருப்பதாகத்தோன்றுகிறதல்லவா?மனத்தால்

ஸங்கல்பிக்கும்பொழுது ஸ்வப்னம், மனோரதம் ஆகிய இவைகள் எப்படி யுண்டாகின்றனவோ, அப்படி ப்ரபஞ்சம்தோன்றுகிறது. (புருஷன் மனத்தால் ஒரு மனோரதத்தை நினைத்து அதனையே த்யானஞ்செய்தால் அது உண்மையில் அவனால் அடையப்படா விடினும் எப்படித் தோன்றுகிறதோ, ஸ்வப்னம் எப்படி ஸத்யம் போல தோன்றுகிறதோ, அப்படி ஜகத்தோன்றுகிறதென்று தாத்பர்யம்) ஆனதால் கர்மங்களை ஸங்கல்பிப்பதும் விகல்பிப்பது மான மனத்தை விஷயங்களில் செல்லாமல் அடக்கி பகவானிடத்தில் செலுத்தவேண்டும். அதனால் அபயங்கிடைக்கும்(பயம் நிவர்த்தியாகும்) இப்படிச்செய்வது மிக்கக் கடினமானாலும்அதற்கு ஸுகமான உபாயமொன்றிருக்கிறது. அதென்னவெனில்—சக்கிர பாணியாகிய ஸ்ரீ பகவானுடைய மங்களகரமான அவதாரங்களையும், சரிதங்களையும் அதையே ப்ரயோஜனமாகக்கொண்ட திவ்ய நாமங்களையும் கேட்டுக்கொண்டும், வெட்கமில்லாமல் கானஞ் செய்துகொண்டும் ஆசையை யொழித்து ஸஞ்சரிக்கவேண்டும். (இப்படி பகவானை உபாஸித்தால் ப்ரேமையென்ற பக்தியுண்டாகும்) இப்படி பகவானுடைய திவ்ய நாமங்களை உச்சரித்ததால் அவரிடத்தில் ப்ரேமை விருத்தியாகும். அதனால் ஹ்ருதயம் உருகுகிறது பின்பு பகவான் பக்திக்கு வசப்பட்டவர்என்பதைத் தெரிந்துகொண்டு உரக்க சிரிக்கிறான். இவ்வளவு காலம் என்னை பகவான் உபேக்ஷித்தார் என்று அழுகிறான். மிகுந்த ஆசையால் கதறுகிறான். ஓ ஹரியே! என்னை அநுக்ரஹியும் என்று ஸந்தோஷமாக கானஞ்செய்கிறான். மேலுமவன் ஆகாயம், வாயு, அக்னி, ஜலம், பூமி, ஸூர்யன் முதலியதேஜஸ்ஸுகள், ப்ராணிகள், திக்குகள், விருக்ஷங்கள், மலைகள், நதிகள், ஸமுத்திரங்கள் முதலிய லோகத்திலுள்ள எல்லாவற்றையும் நாராயணனுடைய சரீரமென்று நினைத்து அதனையே கதியென்று நமஸ்கரிக்கவேண்டும். (இம்மாதிரியான கதி ஆரூடர்களான யோகிகளுக்கும் அநேக ஜன்மங்களாலும் கிடைப்பது அரிது. அப்படியிருக்க நாமத்தையுச்சரிப்பதால் ஒருஜன்மத்தில் எப்படி கிடைக்குமென்றால்—அடுத்த ச்லோகத்தில் ஸமாதானஞ் சொல்லப்படுகிறது) ஆஹாரத்தைப் புஜிப்பவனுக்கு ஒவ்வொரு கபளத்திலும்,

ஸுகம், வயர்நிறம்புவது, பசியடங்குவது முதலியவை முறையே ஒரே காலத்திலுண்டாவதுபோல ஸ்ரீஹரியை ஸேவிப்பவனுக்கு பக்தி (ப்ரேமை) பகவானுடைய ஸ்வரூபம் தோன்றுவது, அதனால் ஸுகத்தை அடைந்து மற்ற விஷயங்களில் வைராக்யம் ஆகிய மூன்றும் ஒரேகாலத்தில் உண்டாகின்றன. இப்படி ப்ரேமை முதலிய மூன்றும் உண்டான பின்பும் தொடர்ச்சியாக பகவானை ஸேவித்தால் பக்தி வைராக்யம், பகவானுடைய ஸ்வரூபானுபவம் ஆகிய மூன்றும் ஸ்திரமாகின்றன. அதன்பின்பு பாகவதனாகிய அந்தப்புருஷன் சாந்தியை அடைவான்'' என்று சொன்னார்.

44—55. அதனைக்கேட்ட நிமி "பாகவதன் சாந்தியை அடைவானென்று சொல்லப்பட்டதே பாகவதன் என்றால் அவன் எதனைச்செய்துகொண்டிருப்பான்? அவன் ஸ்வபாவமெப்படியிருக்கும்? எப்படி ஸஞ்சரிப்பான்? எதனைச்சொல்வான்? எந்த அடையாளமுள்ளவனாகவிருப்பான்? அதனைச் சொல்லுங்கள்'' என்று கேட்டார். அதனைக்கேட்ட ஹரியென்பவர் அரசனை நோக்கி "எவன் ஸகலப்ராணிகளிடத்திலும் வஸிக்கும் பகவானுடைய ஒப்புயர்வற்ற ஐச்வர்யத்தை பார்க்கிறானோ, (உயர்வு தாழ்வாகப் பார்க்கவில்லையென்று கருத்து) குறைவற்ற ஐச்வர்யம் முதலியவைகளுள்ள பகவானிடத்தில் ஸகல பிராணிகளையும் எவன்பார்க்கிறானோ, அவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன். அல்லது ஸகல ப்ராணிகளிடத்திலும் தான் ப்ரஹ்மஸ்வரூபியாக விருப்பதாகவும், ப்ரஹ்மஸ்வரூபமான அதிஷ்டானத்தில் ஸகல பிராணிகளிருப்பதாயும் எவன் பார்க்கிறானோ, அவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன். எவன் ஈச்வரனிடத்தில் ப்ரேமையையும் ஈச்வர பக்தர்களிடத்தில் மைத்ரியையும் அஜ்ஞர்களிடத்தில் கிருபையையும், விரோதிப்பவர்களிடத்தில் உபேக்ஷையையும் செய்கிறானோ, அவன் மத்தியமன் (நடுத்தரம்) எவன் தேவதா பிரதிமைகளையே ச்ரத்தையுடன் பூஜிக்கிறானோ, ஈச்வர பக்தர்களைப் பூஜிக்கிறதில்லையோ, மற்றவர்களை கவனிக்கிறதில்லையோ அவன் பாராகிருத பக்தன். (பக்தி இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறது அளவில் உத்தமனாகி விடுவானென்று தாத்பர்யம்) பகவானிடத்தில் மனத்தைச்செலுத்தியவன் இந்திரியங்களால் விஷயங்களை கிரஹிக்கமாட்டான், அப்படி க்ரஹித்தாலும் அதனால் ஸந்

தோஷத்தை அடையான் அவைகளை விரோதிக்கவும்மாட்டான். இந்த ஜகத் விஷ்ணுவின் மாயாமயமென்று நினைத்திருப்பான் அவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன். எவன் பகவானை த்யானித்து சரீரத்தின் ஜனனமரணம், ப்ராணனுடைய தர்மமான பசி, மனத்தின் தர்மமான பயம், புத்தியின் தர்மமான ஆசை, இந்திரியங்களுடைய தர்மமான ச்ரமம் ஆகிய ஸம்ஸார தர்மங்களால் மோஹிக்காமலிருக்கிறானோ, அவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன். எவனிடத்தில் காமம், கர்மம், முந்திய வாஸனைகள் ஆகிய இவைகள் உண்டாகிறதில்லையோ, எவனுடைய மனம் வாஸுதேவரையே ஆச்ரயித்திருக்கிறதோ, அவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன். (எப்படி ஸஞ்சரிப்பானென்பதற்கு பதில் சொல்லப்பட்டது) எவன் 'நான் நல்லகுலத்தில் பிறந்தவன், நான் தபஸ்வி, நான் ப்ராஹ்மணன், நான் ஸன்யாஸி, நான் உயர்ந்தஜாதி, என்று தேஹத்தில் அஹங்காரமற்றிருக்கிறானோ, அவன் நாராயணனுக்கு ப்ரியனாகிறான். எவனுக்குதான் பிறர் என்ற பேதமும் தன்னுடையது பிறருடையதென்று பேதபுத்தியுமில்லையோ, எவன் ஸகலப்ராணிகளிடத்திலும் ஸமபுத்தியுள்ளவனோ, எவன் சாந்தனோ, அவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன், பகவானுடைய பாதாரவிந்தமானது பகவானிடத்தில் மனதைச் செலுத்திய ப்ரஹ்மா முதலியவர்களாலும் தேடப்பட்டிருக்கிறது (அடையப்படவில்லை) அப்படிப்பட்ட பாதாரவிந்தத்தைக் காட்டிலும் ஸாரமானவஸ்து வேறொன்றுமில்லையென்று எவன்பகவானை உபாஸிக்கிறானோ, அவன் மூவ்வுலகத்தின்ராஜ்யங்கிடைப்பதாயினும் அரைநிமிஷங்கூட பகவானுடையபாதாரவிந்தத்தைமறக்கமாட்டான். அவனேவிஷ்ணுபக்தர்களுக்குட் சிறந்தவன். அழகான நடையுள்ளபகவானுடைய பாதங்களிலுள்ள விரல்களுடைய நகமாகிய சந்திரனால் எவனுடைய ஹிருதயத்திலுள்ள ஸகலதாபங்களும் நிவர்த்திக்கபடுகின்றனவோ (எவன்பகவானை இடைவிடாமல் த்யானிக்கிறானோ) அந்தபக்தனுடையஹிருதயத்தில்திரும்பவும்ஸூர்யனுடையதாபமுண்டாகுமா? ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் திவ்ய நாமத்தை அலக்ஷ்யமாக உச்சரித்தாலும் ஸகல பாபங்கள் நிவர்த்தியாகின்றன. அப்படியிருக்க ப்ரேமையாகிய கயிற்றால் ஹிருதயமாகிய தாமரைமலரில் பகவானுடைய பாதத்தைஎவன் கட்டுகிறானோ (த்யானிக்கிறானோ) அவ

னுடைய ஹ்ருதயபத்தைவிட்டுப் பகவான் அப்புறஞ்செல்லுகிற தில்லை (அவ்விடத்திலேயே வஸிக்கிறார்) அவனே பாகவதர்களுக்குட் சிறந்தவனென்று சொல்லப்படுகிறான்.

நோட்டு.

கவியென்ற யோகியானவர் 33-வது ச்லோகத்தால் மிகவும் க்ஷேமமான கார்யம் ஸ்ரீபகவானுடையபாதாரவிந்தத்தைஉபாஸிப்பதுஎன்றார். 34-வது ச்லோகத்தால் பாகவத தர்மம் இன்னதுஎன்கிறதைச்சொன்னார். 36-வது ச்லோகத்தால்'' ஓஅர்ஜுன! எதனைச் செய்கிறாயோ. எதனைபுஜிக்கிறாயோ எதனை ஹோமம் செய்கிறாயோ, எதனைக் கொடுக்கிறாயோ, தபஞ்செய்கிறாயோ அதனைஎனக்கு அர்ப்பணம்செய்'' என்ற கீதையின் அர்த்தம்காண்பிக்கப்பட்டது. ஸகல ப்ராணிகளிடத்திலும்—45, 46, 47-வது ச்லோகங்களால் பாகவதனுடைய தர்மம் சொல்லப்பட்டது.

வீரராகவீயத்தில்—

ப்ரஹ்மத்தை யறிந்தவர்கள்—மூலத்தில் ப்ரஹ்மபாரகமென்றிருப்பதால் சிலர் வேதத்தை யறிந்தவர்களென்றும், சிலர் ப்ரஹ்மத்தையறிந்தவர்களென்றும், சிலர்இரண்டையும் அறிந்தவர்களென்றும்சொல்லுகிறார்கள். த்வீபங்களுக்கு—இளாவர்த்தம், ப்ரஹ்மாவர்த்தம், ஆர்யாவர்த்தம், மலயம், கேது, பத்ரஸேனை, இந்திரஸ்பிருகு, விதர்ப்ப, கீகடஎன்றுஒன்பதுத்வீபங்கள். தருவையே—பகவானுடைய மாயையால் சரீரத்தில் ஆத்மா என்ற புத்தியும் ஜகத்து ப்ரஹ்மஸ்வரூபம் இல்லை என்ற புத்தியும் உண்டாகிறது. ஸ்வப்பனம் — ஸ்வப்பனமானது அனித்தியமானாலும் நித்யம்போல் எப்படித் தோன்றுகிறதோ அதுபோல்தேஹமானது ஆத்மாவாகஇல்லாமலிருந்தாலும் ஆத்மா அஸ்வதந்த்ரனாக இல்லாமலிருந்தாலும், அப்படியிருப்பதாகத் தோன்றுவதால் அதற்குக் காரணமாகியமனத்தை அடக்கவேண்டும்.

---

## அத்யாயம்—3.

### மாயயும் பூஜாவிதியும்.

நிமியென்ற அரசன் அந்த நவயோகிகளை நோக்கி "ஓ பகவான்களே! இந்த ஜகத்தை விஷ்ணுவின் மாயாமயமென்று பார்ப்பவன் பாகவதர்களுக்குட் சிறந்தவன் என்று சொல்லப்பட்டதே மாயாவிகளையும் மோஹிக்கச்செய்வதானவிஷ்ணுவின் மாயயைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஸம்ஸார தாபத்தால் மிகவும்

தாபத்தையடைந்த நாம் அந்தத்தாபத்திற்கு ஔஷதமாகவிருக்கும் விஷ்ணு கதாமிருதமாகிய உங்களுடைய வார்த்தையைக்கேட்டுத் திருப்தியடையவில்லை. ஆனதால் சொல்லவேண்டும் என்று கேட்டார்.

3—20. அதனைக்கேட்டு அந்தரிக்ஷரென்பவர் நிமியைநோக்கி ,,நிற்குணமாகியப்ரஹ்மம் ஸகுணமென்றும், இரண்டாவது உள்ளதென்றும் எதனால் நினைக்கப் படுகிறதோ, ஈச்வரன் இந்த ஜகத்தை எதைக்கொண்டு ஸிருஷ்டித்தாரோ, அது மாயை. (மாயயின்ஸ்வரூபத்தைநேரில் சொல்லமுடியாததினால்ஸிருஷ்டிமுதலிய கார்யத்தின் வழியாகச் சொல்லப்பட்டது.) இந்திரியங்களால் உண்டுபண்ணப்பட்ட ப்ரமஜ்ஞானமே ஜாகரமெனப் படுகிறது. அந்தக்கரணத்தாலுண்டுபண்ணப்பட்டப்ரமமேஸ்வப்பனமெனப் படுகிறது. அந்தஜாகரம், ஸ்வப்பனம் இவைகளுடைய ஸம்ஸ்காரத்துடன்கூடிய உபாதானகாரணமேஸுஷுப்தமெனப்படுகிறது, ஆனதால் இந்த மூன்றும்ஸத்தியமானதல்ல. இந்த மூன்று அவஸ்தைகளிலும் தொடர்ச்சியாக விருந்ததும், இம்மூன்று அவஸ்தைகளை விடவேறானதுமான வஸ்துவே ஸத்தியமானது. (தூங்கிவிழித்தபின் ஸ்வப்னத்தில் கண்டவைகளில்லாததால் ஸ்வப்னம் மித்யை யென்று தெரியவருகிறது. ஜாகரம், ஸுஷுப்தம் இந்த இரண்டு அவஸ்தைகளுக்கு பாதகமில்லாததால் அவைகளை மித்யையென்று எப்படி சொல்லலாம் என்றால் அடுத்தச்லோகத்தால் ஸமாதானஞ் சொல்லப்படுகிறது) தெரிந்துகொள்பவன், தெரிந்துகொள்வது, அரியப்படுவது என்ற பேதமானது எப்படி ஸ்வபனத்தில் ஏற்படுகிறதோ, அப்படி ஜாகரத்திலும் ஸுஷுப்தத்திலும் மேற்காட்டிய மூவ்வகையான பேதம் மாயயாலேற்படுகிறது. உண்மையில் சுத்தமாகிய ஜ்ஞானமொன்றே. வேதத்தால் நிஷேதிக்கப்பட்டிருப்பதாலும், சில ஸமயம் இல்லாமலிருப்பதாலும் ஜாகரம் ஸுஷுப்தம் இவைகள் பொய்யானவை. மரணமடைந்த புத்திரன் முதலிய பந்துக்களை எப்பொழுதும் நினைப்பதால் அவர்களை ஸ்வப்னத்தில் நேரில் பார்க்கிறானல்லவா? அது மனோரதமெனப்படுகிறது. அந்த மனோரதத்திலும் ஸ்வப்னத்திலும் காணப்படுகின்ற தெரிந்துகொள்ளுகிறவன், தெரிந்துகொள்வது, அரியப்படுவது ஆகிய மூன்றும் எப்படி மித்யையோ அப்படி ஜாகரத்திலும் காணப்படும் அவை மித்யையானவை(பொய்)என்று தெரிந்துகொண்டவன்

ஸம்சயமற்றவனாவான். அவை எதனால் பொய்யென்று சொல்லப்படுகிறது என்றால்—உண்மையான ஸ்வரூபத்தை அடையாமலிருப்பதாலும், ஸ்வப்த ஜாகரத்தில்லாம லிருப்பதாலும் அவைஎப்படிமித்யையானவையோ, அப்படிப்போலஜாகரம்ஸ்வப்தம் இவைகளும்மித்யாபூதமானவை, ஸகல பிராணிகளுக்கும் காரணராகவிருக்கும்புராணபுருஷருன் ஜீவனுக்குவிஷய போகத்திற்காகவும் மோக்ஷத்திற்காகவும், இந்த மஹாபூதங்களைக்கொண்டு பலவகையானபிராணிகளை எந்தசக்தியால் ஸிருஷ்டித்தாரோ, அதுவேமாயை. இப்படி பகவான் ஐந்து மஹாபூதங்களைக் கொண்டு ஸிருஷ்டிக்கப்பட்ட பிராணிகளிடத்தில் அந்தர்யாமியாகப்ரவேசித்து மனோரூபியாகவும், இந்திரியங்களின்ஸ்வரூபியாகவும், ஆத்மாவைப் பிரித்துக்கொண்டுவிஷயங்களை அனுபவிக்கச்செய்கிறார் அந்தர்யாமியாகிய பகவானால் ப்ரகாசிக்கும் இந்திரியங்களைக்கொண்டு அந்த ஜீவன் விஷயங்களை அநுபவித்து இந்தசரீரத்தைஆத்மாவென்றுநினைத்து சரீரம்முதலியவைகளில் அபிமானம் வைக்கிறான். மேலுமந்தஜீவன் கர்மவாஸனைகளுடன் கூடிய கர்மங்களை கர்மேந்திரியங்களால் செய்துஅந்தக்கர்மத்தின் பயனாகிய ஸுகதுக்கங்களை அநுபவித்து இந்த ஸம்ஸாரத்தில் சுற்றுகிறான். பலவகையானதுக்கத்தை வஹிப்பவனாகிய புருஷன் இப்படி கர்மகதிக்குத் தக்கபடி ஜனன மரணங்களை ப்ரளயகாலம் வரையில் அநுபவிக்கிறான். மஹாபூதங்களுக்கு நாசகாலம்நேர்ந்தபொழுது ஸ்தூல ஸூக்ஷ்மஸ்வரூபமாகிய காரய ப்ரபஞ்சத்தை ஆதி அந்த மற்றதாகிய காலமானது அவ்யக்தத்தில் சேர்க்கிறது. அதன் பின்பு நூறுவர்ஷகாலம் மழை பெய்யாமலிருக்கும். அந்த காலத்தில் மிக்க உஷ்ணமான வெயிலுள்ள ஸூர்யன் மூவ்வுலகங்களையும் தஹிப்பான். அப்பொழுது ஸங்கர்ஷணருடைய முகத்திலிருந்து அக்னி வாயுவினால் தூண்டப்பட்டு பாதாளம் முதல் உயரக்கிளம்பி நான்குபுறத்திலும் ஜ்வலிக்கும். அதன் பின் ஸம்வர்த்தகமென்ற மேககணங்கள் நூறுவர்ஷகாலம் யானையின் துதிக்கை போன்ற ப்ரமாணமுள்ளதாக மழைபெய்யும். அப்பொழுது விராட்டானது ஜலத்தில் லயத்தை அடையும், விராட் சரீராபிமானியானவைராஜன் அதனைவிட்டுஅவ்யக்தத்தை அடைகிறான். அக்னி, எறிப்பதற்குக் கட்டையில்லாவிடில் அணையவில்லையா? அதன்பின் பூமியின் குணமாகிய கந்தம் ப்ரளயகால வாயு

வினால் அபஹரிக்கப்படும். அந்தப்பூமிஜலத்தில்லயிக்கிறது. அந்த ஜலத்தின் ரஸமும் வாயுவினால் அபஹரிக்கப்பட்டு ஜலம் தேஜஸ்ஸில் லயிக்கிறது. அந்த தேஜஸின் ரூபமானது ப்ரளயகாலத்திய இருளால் அபஹரிக்கப்படும், அப்பொழுது அந்த தேஜஸ் வாயுவில் லயிக்கிறது. வாயுவின்குணமான ஸ்பர்சமானது ஆகாசத்தால் அபரிஹரிக்கப்படும் அந்தவாயு ஆகாசத்தில் லயிக்கிறது. கால ஸ்வரூபியானஈச்வரனால் ஆகாயத்தின்குணமான சப்தம்அபஹரிக்கப்படும், அந்தஆகாயம்தாமஸாஹங்காரத்தில் லயிக்கிறது. இந்திரியங்களும் புத்தியும் ராஜஸாஹங்காரத்தில் லயிக்கிறது. மனதும், வைகாரிக தேவர்களும் ஸாத்விகமான அஹங்காரத்தில் லயிக்கிறார்கள். அஹங்காரம் தன்னுடைய கார்யங்களுடன் மஹத்தத்வதில் லயிக்கிறது. (மஹத்தத்வம் ப்ரகிருதியில் லயிக்கிறது ப்ரகிருதி ப்ரஹ்மத்தினிடம் லயிக்கிறது) ஸிருஷ்டி, பரிபாலனம்,நாசம் ஆகிய இவைகளுக்குக் காரணமாகவிருப்பது பகவானுடைய மாயை. இதுமுக்குணஸ்வரூபமுள்ளது. இன்னும்எதனைக்கேட்க விரும்புகிறீர்" என்றார்.

21—37. அதனைக்கேட்ட நிமி யென்ற அரசன் "மனத்தை ஜயிக்காதவர்களால் தாண்டமுடியாத ஈச்வர ஸம்பந்தமான இந்த மாயையை ஸ்தூலபுத்தியுள்ளவர்கள் எப்படித்தாண்டுவார்கள்? ஓ மஹர்ஷியே! அதனைச் சொல்லும்" என்று கேட்டார், அதனைக்கேட்ட ப்ரபுத்தர் "ஸ்திரீயுடன் சேர்ந்து விஷயஸுகத்தில் ஆசைகொண்டு துக்கம் வராமலிருப்பதற்காகவும், ஸுகத்தை அடைவதற்காவும், ஜனங்கள் கர்மங்களைச் செய்கிறார்கள். ஆனாலும் பயன் அவர்களுடைய இஷ்டப்படி கிடைக்காமல் மாறுகிறது. மேலும் ஜனங்கள் பணத்தை மிகவும் கஷ்டப்பட்டு ஸம்பாதிக்கிறார்கள். அது துக்கத்தைக் கொடுக்கக்கூடியது. அதனை விசேஷ முயற்சிசெய்து ஸம்பாதிப்பதால் என்ன ப்ரயோஜனம்? கிருஹம் குழந்தைகள்,பந்துக்கள், பசுக்கள் ஆகிய இவைகள் அநித்யங்களானதால் இவைகளை ஸம்பாதிப்பதால்தான் என்ன ப்ரயோஜனம்? இதுபோலவே பரலோக ஸுகமும் கர்மத்தாலேற்படுவதானதால் அதுவும் நித்யமானதல்ல. சக்கிரவர்த்திகளுக்கு தமக்கு ஸமமான ஸுகமுள்ளவர்களிடத்தில் விரோதமும், மேற்பட்டவர்களிடத்தில் அஸூ

யையும், தம்முடையஸுகம்கெட்டுப்போய்விடுமோ என்றபயமும் எப்படி உண்டாகிறதோ, அப்படி கர்மபலத்தில் ஆசைப்பட்டவனுக்குபயம் நேருமென்று தெரிந்துகொள்ளவேண்டும். ஆனதால் மேலான க்ஷேமத்தைத் தெரிந்துகொள்ள விரும்பிய புருஷன் வேதத்தை முறைப்படி அத்யயனஞ்செய்தவரும், பரப்ரஹ்மத்தின் ஸாக்ஷாத்காரமுள்ளவரும், சாந்தியுள்ளவருமான ஆசார்யனைச் சரணமடையவேண்டும். மேலும் அந்த ஆசார்யனுக்குக் கபடமில்லாமல் சுச்ரூஷைசெய்து குருவை ஆத்மாவாகவும், தேவதையாகவும் நினைத்து அவரிடமாக பாகவத தர்மங்களை அப்யஸிக்கவேண்டும். அந்தப் பாகவத தர்மத்தால் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாகவும், ஆத்மாவைக் கொடுப்பவருமான பகவான் ஸந்தோஷப்படுவார். மனத்தால் ஒன்றையும் ஆசிக்காமலிருப்பது, ஸாதுக்களிடம் ஸங்கஞ்செய்வது, தாழ்ந்தவர்களிடத்தில் தயை, ஸமானர்களிடத்தில் ஸ்நேஹம், மேற்பட்டவர்களிடத்தில் வணக்கம், மண், ஜலம் முதலியவைகளால் சுத்திசெய்துகொள்வது, வீணவார்த்தை சொல்லாமல் மௌனமாகவிருப்பது, தனக்குரிய தர்மத்தையநுஷ்டிப்பது, பொறுமை, வேதாத்யயனம், ரிஜுபுத்தியாகவிருப்பது, ப்ரஹ்மசர்யம் (ருதுகாலம் தவிர ஸ்த்ரீ ஸங்கமமில்லாதிருப்பது) பிறருக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பது, ஸுகதுக்கங்களை ஸமமாக நினைப்பது, எல்லாவற்றையும் தாமாகவும், ஈச்வரனாகவும் நினைப்பது, ஒண்டியாக ஸஞ்சரிப்பது, வீடு முதலியவைகளில் அபிமானமற்றிருப்பது, ஜனங்களில்லாதவிடத்தில் விழுந்திருக்கும் கந்தை மரப்பட்டை இவைகளை உடுத்திக்கொள்வது, கிடைத்ததில் ஸந்தோஷப்படுவது, பகவானுடைய குணங்களைச் சொல்லும் சாஸ்திரத்தில் ச்ரத்தைவைப்பது, மற்றசாஸ்திரங்களை நிந்திக்காமலிருப்பது, ப்ராணாயாமஞ்செய்து மனத்தைஅடக்குவது, மௌனத்தால்வாக்கைஅடக்குவது, பயனில் ஆசைப்படாததால் கர்மத்தை நிக்ரஹிப்பது, உண்மை பேசுவது. அந்தக்கரணத்தை அடக்குவது, வெளியிலிருக்கும் இந்திரியங்களை அடக்குவது, அத்புத கர்மங்களைச்செய்த ஸ்ரீமந்நாராயணனை ஸ்மரிப்பது, அவருடைய திவ்யநாமங்களை உச்சரிப்பது ஸகல கர்மங்களையும் பகவானைப் பூஜிப்பதற்காகச் செய்கிறோமென்று நினைப்பது ஆகிய இவைகளை குருமுகமாகத்தெரிந்துகொள்ளவேண்டும். மேலும் யாகஞ்செய்வது, தானஞ்செய்வது, தபஸ், நல்ல

ஆசாரம், தனக்குப்ரியமாகியசந்தனம்புஷ்பம்முதலியவை, களத்திரம், புத்திரன், வீடுப்ராணன் ஆகிய, இவைகளைபரமாத்மாவினிடம் ஸமர்ப்பிப்பதையும் குருமுகமாக அப்யஸிக்கவேண்டும். பின்னும் ஸ்ரீ கிருஷ்ணனையே தனக்குநாதரென்றுநினைத்துபக்தர்களிடத்தில் ப்ரீதி செய்வதும், ஸ்தாவர ஜங்கமப் பிராணிகளுக்குச்சுச்ரூஷை செய்வது அதிலும் மனிதர்களுக்குவிசேஷமாக சுச்ரூஷை செய்வது அதிலும்ஸாதுக்களுக்கு மிகவும் சுச்ரூஷைசெய்வது, ஸாதுக்களிடம் சேர்ந்துபரிசுத்தமான பகவானுடையகீர்த்தியைஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வது, ஒருவருக்கொருவர் பகவானுடைய குணங்களில்ரமிப்பது, ஸந்தோஷப்படுவது, ஸுகப்படுவது ஆகிய இவைகளை அப்யஸிக்கவேண்டும். இப்படி மனிதர்கள்பகவானிடத்தில் ப்ரேமைலக்ஷணமான பக்தியை அடைந்து பாபக்கூட்டத்தைநிவர்த்திப்பவரான ஸ்ரீ ஹரியையஸ்மரித்தும், பிறரைஸ்மரிக்கச்செய்துகொண்டும்' மயிர்கூச்சிலே அடைவார்கள். சிலஸமயம் அழுகிறார்கள்' சிலஸமயம் அச்யுதராகியபகவானைத்யானித்து சிறிக்கிறார்கள். சிலவேளை ஸந்தோஷப்படுகிறார்கள். சிலவேளை லோக வ்யவஹாரமற்று நமஸ்கரிப்பார்கள் சிலஸமயம் நர்த்தனஞ்செய்கிறார்கள். கானஞ்செய்கிறார்கள். பகவானுடையலீலையை அநுஸரித்து அபினயஞ்செய்கிறார்கள். இப்படி பரமாத்மாவை அடைந்து ஆனந்தமுள்ளவர்களாகிமௌனமாக விருக்கிறார்கள். இப்படிபாகவததர்மங்களை அப்யஸிக்கவேண்டும். அதனால் பக்தியுண்டாகும் அதனால் நாராயணனையேத்யானஞ்செய்து தாண்டமுடியாதமாயையை சீக்கிரத்தில் தாண்டுகிறான்'' என்றார்.

38—44. அதனைக்கேட்ட அரசன் ''நீங்கள் ப்ரஹ்மத்தை அறிந்தவர்களுக்குட் சிறந்தவர்கள். ஆனதால் நாராயணனென்ற ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லுங்கள் (பகவான், பரமாத்மா, என்ற சப்தங்களால் சொல்லப்படும் ப்ரஹ்மம் ஒன்றுதானா, அல்லது அதில் விசேஷமுண்டா என்று கருத்து) என்று கேட்டார். அதனைக்கேட்ட பிப்பலாயனர் அரசனை நோக்கி '' இந்த ஜகத்தை படைப்பது, காப்பாற்றுவது ஸம்ஹரிப்பது, ஆகிய இவைகளுக்கு எவர் காரணமோ, எவருக்குக் காரணமில்லையோ அவரே பரமாத்மா, அதுவே பரமதத்வம். மேலும் ஸ்வப்னம், ஜாகரம், ஸுஷுப்தி ஆகிய அவஸ்தைகளில் எது தொடர்ந்திருக்

கிறதோ, ஸமாதி முதலியவைகளில் எது தொடர்ந்திருக்கிறதோ அதுவே பரதத்வம். பின்னும் ப்ராணன், இந்திரியங்கள், மனம் ஆகிய இவைகள் எவருடைய அநுக்கிரஹத்தால் தன் கார்யத்தைச் செய்கின்றனவோ, அதுவே பரப்ரஹ்மம் என்று தெரிந்துக் கொள்ளும் (நாராயண முதலிய நாமங்களால் சொல்லப்பட்டாலும் பரதத்வம் ஒன்றுதானென்று தாத்பர்யம்) மனம், வாக்கு, கண், புத்தி, ப்ராணன் மற்ற இந்திரியங்கள், ஆகிய இவைகள் இந்தபரமாத்மதத்வத்தைப்ரகாசிக்கச்செய்கிறதில்லை. அக்னியினிடத்திலிருந்து உண்டான நெருப்புப்பொரிகள் அந்தஅக்னியை தஹிக்குமா? அதனைப் ப்ரகாசிக்கச்செய்யுமா? (மனம்வாக்குமுதலியவைகளுக்கு பரமாத்மதத்வம் சக்தியைக் கொடுப்பதானதால் அவைகளால் ஆத்மதத்வத்தைப்ரகாசிக்கச்செய்யமுடியாதென்று கருத்து) "உபநிஷத்தால் காட்டக்கூடிய அந்தப்புருஷனைகேட்கிறோம்" என்றச்ருதியின்படி சப்தத்திற்கு விஷயமானது ப்ரஹ்ம தத்வம் என்றுதோன்றுகிறது ஆனாலும்வேதமானது. சப்தங்களை நிஷேதித்து ஆத்மவிஷயத்தில் ப்ரமாணமாகிறது நேரில் ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறதில்லை. மற்றவைகளை நிஷேதிப்பதால் ப்ரஹ்மத்தைச் சொன்னதாக ஆகிறது. (இதென்று ப்ரஹ்மத்தை வேதம் குறிப்பிட்டு காட்டாவிடினும் இதல்ல, இதல்ல வென்று நிஷேதித்து எஞ்சியது ப்ரஹ்மம் என்று நிஷேதிப்பதால் ப்ரஹ்மத்தைக் குறிப்பிடுகிறதென்று கருத்து) பரஹ்மம் இல்லாவிடில் வேதத்தில் சொல்லிய நிஷேதம் ஸித்திக்காது (ஒன்றிருந்தால்தான் இது அதல்ல இது அதல்லவென்று சொல்லக்கூடும். ஆனதால் நிஷேதங்கள்எல்லையுள்ளவையென்றுதாத்பர்யம்)ஸ்தூல ஸூக்ஷ்மமாகிய ப்ரபஞ்சம் எல்லாம் ப்ரஹ்மமே. ஏனென்றால் ப்ரஹ்மம் அவைகளுக்குக் காரணமானதால் கார்யம் காரணத்தைக் காட்டிலும் வேரல்லவென்று ச்ருதி சொல்வதால் ப்ரபஞ்சம் ப்ரஹ்மமேயாம். மாயாசக்தியுள்ள அந்தவஸ்து முதலில்ஸத்வம், ரஜஸ், தமஸ், என்ற மூன்று குணங்களுடைய ஸாம்யமாகிய ப்ரதானமாகவும்' பின்புகிரியாசக்தியால் ஸூத்ராத்மாவாகவும் பின்புஜ்ஞானசக்தியால்மஹத்தத்வமாகவும், அதன்பின்புஜீவோபாதியான அஹங்காரமாகவும்இருப்பதாகச்சொல்லுகிறார்கள். ஆனதால் அந்த அந்த அபிமானி தேவர்களாகவும், இந்திரியங்களாகவும், விஷயங்களாகவும், அவைகளை ப்ரகாசிக்கச் செய்வதாகவும்

ப்ரஹ்மமே விளங்குகிறது. மேலும்பரமாத்மா உண்டாகிறதில்லே. மரணமடைகிறதில்லே; பருக்கிறதில்லே (விருத்தி பரிணாமம், முதலிய விகாரங்களில்லையென்று கருத்து) இளைக்கிறதில்லே; பால்யம் யௌவனம் முதலிய அநித்யமான அவஸ்தைகளின் காலத்தைப்பார்ப்பவர்; (மேற்காட்டிய அவஸ்தைகள் அவருக்கில்லையென்று கருத்து) எல்லாவிடங்களிலும், எப்பொழுதும் நாசமற்ற ஜ்ஞானஸ்வரூபமாகவிருப்பவர். (கருமையென்ற ஜ்ஞானமுண்டாயிற்று, மஞ்சள் நிறமென்ற ஜ்ஞானம் நசித்தது என்று தோன்றுகிறதால் ஜ்ஞானத்தை நித்யமென்று சொல்வது பொருந்துமாவென்றால் ஸமாதானஞ்சொல்லப்படுகிறது.) ஜ்ஞானம் நித்யமானதே. இந்திரியங்களால் விகல்பிக்கப்பட்ட கருமை. மஞ்சளென்ற விருத்திகள் நசிக்கின்றனவேயொழிய ஜ்ஞானத்திற்கு ஒருகாலும் நாசமில்லே, ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம் உத்பிஜ்ஜமென்ற நான்குவகையான பிராணிகளிடத்தில் ப்ராணன் ஜீவனை அநுஸரிக்கிறான். இந்திரியங்களும் (ஜாகரத்தில்) அஹங்காரமும் (ஸ்வப்னத்தில்) லயத்தை அடைந்திருக்கும்பொழுது லிங்கசரீரமில்லாததால் (உபாதியில்லாததனால்) ஆத்மா விகாரமற்றவனாக விருக்கிறான். அதனால்தான் ஆத்மாவினுடைய ஜ்ஞாபகம் நமக்கு உண்டாகிறது (ஸுகமாகத் தூங்கினேன் ஒன்றையும்அரியவில்லையென்று தூங்கிவிழித்தவுடன் நினைக்கிறானல்லவா? ஸுஷுப்திகாலத்தில் இந்திரியம் முதலிய எல்லாம்அடங்கியிருந்ததால் ஆத்மாசுத்தனாகவும், விசேஷஜ்ஞானமில்லாமல் ஸுகஸ்வரூபியாகவும், ஸுஷுப்திஸாக்ஷியாகவுமிருப்பதால் தூங்கிவிழித்தவுடன் மேற்காட்டியவண்ணம் நினைக்கிறான், ஆனாலும் அவித்யை அதன் ஸம்ஸ்காரங்கள் ஆகிய இவைகளிருப்பதால் பின்பு விஷயங்களில் ப்ரவிருத்தியுண்டாகிறது.) எப்பொழுது ஸ்ரீமந்நாராயணனுடைய பாதத்தை த்யானித்து (மற்ற ஆசைகளையொழித்து) அதனாலுண்டாகிய பக்தியால் (பக்தியாகியஜலத்தால்) மனத்திலுள்ள அழுக்குகளை அலம்பி சுத்தஞ்செய்துகொள்ளுகிறானோ, அப்பொழுது மிக்க சுத்தமான மனத்தில் ஆத்மதத்வம் ப்ரகாசிக்கும். சுத்தமான கண்களுக்கு ஸூர்யனுடைய ப்ரகாசம் தோன்றுகிறதல்லவா? (ஆத்மவஸ்து ஸித்தவஸ்துவானதால் சித்தம் சுத்தமானவுடன் தோன்றுமென்று கருத்து) என்று சொன்னார்.

45—59. அதனைக்கேட்ட நிமியென்ற அரசன் யோகிகளை நோக்கி "எதனை யநுஷ்டித்தால் புருஷன் இவ்வுலகத்தில்ஸகலகர்மங்களைவிட்டு மேலான ஜ்ஞானத்தை அடைவானே, அந்தக் கர்மயோகத்தைச்சொல்லுங்கள். இந்தக் கேள்வியை முன்னொருகால் இக்ஷ்வாகுவின்முன்பாகப்ரஹ்மபுத்திரர்களான ஸனகர்முதலியவர்களைக்கேட்டேன், அவர்கள் (எல்லாவற்றையும் அறிந்தவர்களானாலும்) பதில் சொல்லவில்லை. அதன் காரணமென்ன? சொல்லவேண்டும்" என்று கேட்டார். அதனைக்கேட்ட ஆவிர்ஹோத்திரர் என்பவர் அரசனைநோக்கி "கர்மம், அகர்மம், விகர்மம்என்றுவேதத்தில்மூன்றுவகைசொல்லப்பட்டிருக்கிறது. அது லௌகிகமல்ல. வேதம் ஈச்வர ஸ்வரூபமானதால் அதன் தாத்பர்யத்தைத் தெரிந்துகொள்வதில்வித்வான்களும் மோஹிக்கிறார்கள் (புருஷனுடையவாக்யத்தில்சொன்னவனுடைய அபிப்பிராயத்தின்படி அர்த்தங்கண்டுபிடிக்கலாம். வேதம்புருஷனால்செய்யப்படாததானதால் முன் பின் சொல்லியிருப்பதை ஆலோசித்து அர்த்தம் கண்டு பிடிக்கவேண்டுமானதால்,அது ச்ரமமான கார்யமென்று தாத்பர்யம். வேதத்தில் எதைச்செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறதோ அது கர்மமெனப்படுகிறது, எதுசெய்யக்கூடாதென்று விலக்கப்பட்டிருக்கிறதோ அது அகர்மம். விஹித கர்மத்தைச் செய்யாமலிருப்பதுவிகர்மம்)இந்த வேதமானதுவிஷயங்களை பரோக்ஷமாகச் சொல்லுகிறது. குழந்தைகளுக்கு தகப்பன்வியாதிநிவர்த்திக்காக மருந்துகொடுக்கவிரும்பிஇதுகற்கண்டு இது தித்திக்கும் என்று சொல்லி மருந்தைக்கொடுக்கவில்லையா? அதுபோல வேதமும் மறைபொருளாகச் சொல்லுகிறது. கர்மங்களை விடுவதற்காகவே கர்மங்களைச் செய்யவேண்டுமென்று விதிக்கிறது. ஆனாலும் முதலிலேயே கர்மத்தை விடக்கூடாது. இந்திரியங்களை ஜயிக்காத அஜ்ஞன் வேதத்தில் சொல்லப்பட்ட கர்மங்களை அநுஷ்டியாமல் விட்டுவிடுவானானால், விஹித கர்மங்களை அநுஷ்டிக்காததனால் அதர்மம் உண்டாகிறது. அதனால் ஜனனமரணமாகிய ஸம்ஸாரத்தை அடைகிறான். ஆனதால் வேதத்தில் சொல்லிய கர்மங்களை அநுஷ்டித்து அதன் பயனில் ஆசைகொள்ளாமல் அதனை பகவானிடத்தில் ஸமர்ப்பிக்க வேண்டும். கர்மத்தில் ச்ரத்தை யுண்டாவதற்காக கர்மத்தால் இந்த பயன் கிடைக்குமென்று சொல்லப் பட்டிருக்கிறது (கர்மத்திற்கு

பயனைச்சொன்னால் அதைச்செய்ய வேண்டுமென்று ச்ரத்தை உண்டாகும் இதற்கு இவ்வளவு பயனிருக்கிறதே, இதற்கும் மேலானபயனைக் கொடுக்கக்கூடியகர்மமிருக்கிறதோஎன்று விசாரிப்பான், விசாரித்தால்,யாகம்முதலியஸகலகர்மங்களுக்கும்ஜ்ஞானமே பயனென்று தெரிந்து கொள்வான். அதன் பின்பு நிஷ்காமமாக கர்மங்களை அநுஷ்டிப்பான். அப்படி அநுஷ்டிப்பதால் ஆத்மஜ்ஞானத்தை அடைவானென்று கருத்து. (இது வரையில் வைதிகமான கர்மயோகம் சொல்லப்பட்டது இனிதாந்திரிகமான கர்மயோகஞ் சொல்லப்படுகிறது) பரமாத்மஸ்வரூபியான ஜீவனுடைய அஹங்காரத்தை நிவர்த்தித்துக்கொள்ள விரும்பியவன் ஆகமசாஸ்திரத்திற்சொல்லியபடி பகவானையுபாஸிக்கவேண்டும். எப்படியென்றால்—ஆசார்யரிடம்அநுக்ரஹம்பெற்று அவரிடம் பூஜாவிதியை தெரிந்துகொண்டு (ராமன், க்ருஷ்ணன் முதலிய) மஹா புருஷனைப் பூஜிக்கவேண்டும். சுத்தனாக அந்தமூர்த்திக்கு எதிரில் உட்கார்ந்து ப்ராணாயாமம் பூதசுத்தி முதலியவைகளால் தேஹத்தை சோதித்து அங்கந்யாஸங்களால் சரீரரக்ஷை செய்து கொண்டு பகவானைப் பூஜிக்கவேண்டும். ப்ரதிமை, ஹ்ருதயம் முதலியவைகளில்கிடைத்த பூஜாத்ரவ்யங்களைக்கொண்டு பூஜிக்க வேண்டும். முதலில் பூமியைசுத்தஞ்செய்து கொள்ளவேண்டும். பின்பு, புஷ்பம் முதலியவைகளை புழு முதலியவைகளில்லாமல் சோதிக்கவேண்டும். பூதசுத்தி முதலியவைகளால் சரீரத்தை சோதிக்கவேண்டும். பகவத் ப்ரதிமைகளை ஜலத்தால் அலம்புவது முதலியவையால்சோதிக்கவேண்டும். ஆஸனத்தை தீர்த்தத்தால் ப்ரோக்ஷிக்கவும், பாத்யம் முதலியவைகளை ஸித்தமாக வைத்து ப்ரதிமையில் ஆவாஹனஞ்செய்து ஹ்ருதயம் முதலிய அங்கந்யாஸஞ் செய்துகொண்டு மூலமந்திரத்தை உச்சரிக்க வேண்டும். ஹ்ருதயம்முதலிய அங்கங்கள், ஸுதர்சனம்முதலிய உபாங்கங்கள் பரிவாரங்கள் இவைகளுடன் பகவானுடையசாந்தமான மூர்த்தியை பாத்யம், அர்க்யம், ஆசமனியம், ஸ்நானம். வஸ்திரம், ஆபரணம், சந்தனம், புஷ்பம், அக்ஷதம், புஷ்பமாலை, தூபம், தீபம், நைவேத்யம் முதலிய உபசாரங்களால் பூஜித்து ஸ்தோத்திரஞ்செய்து நமஸ்கரிக்கவேண்டும். நிர்மால்யத்தைத் தலையில் வைத்துக்கொண்டு ப்ரதிமையானால் ஸம்புடத்திலும், வேரானால் ஹ்ருதயத்திலும் வைத்துக்கொள்ளவும்.

## நோட்டு.

**விராட்கவியத்தில்**—ஜகத்ஸ்வரூபமாக ஆகவேண்டுமென்று விரும்பிய பரமபுருஷன் எதனைக்கொண்டு இந்தஜகத்தைப்படைத்தாரோ, அதுமாயை ஸத்வம்முதலிய குணங்களற்றதும் சரீர ஸம்பந்தமில்லாததும் தானுகப்பிரகாசிப்பதுமான ஸ்வரூபத்தில் சரீர ஸம்பந்தமுள்ளதென்றும் தேஹமே ஆத்மாவென்றப்ப்ரமம்முதலிய விபரீதஜ்ஞானம் எதனுல் உண்டாகிறதோ அது மாயை. **ஜாகரம்**—ஜாகிருதவஸ்தையில் இந்திரியங்கள் தேஹம் முதலிய விஷயங்களில்பிரவேசிப்பதால்தேஹம் முதலியவைகளே ஆத்மாவென்றும் ஸ்திரமென்றும் ப்ரமம் உண்டாகிறது. ஸ்வப்பனத்தில் கண்ட சரீரங்களை ஸ்திரமென்று நினைப்பது அந்தக்கரணத்தாலுண்டான ப்ரமம். ஸுஷுப்தி அவஸ்தையில்இந்திரியங்களும் அந்தக்கரணமுமில்லாதிருப்பதால்இரண்டுஅவஸ்தைகளிலும்ஏற்பட்டவாஸனையாகிறவிதை எஞ்சியிருக்கிறது. இம்மூன்றும்ப்ரகிருதியின்குணம். ஆனதால்இந்தமூன்று அவஸ்தைகளும்எப்பொழுதுஜீவனுக்குஇல்லாமலிருக்குமோஅந்த அவஸ்தையேதுரீயாவஸ்தையெனப்படுகிறது. ஜீவனுடையஸ்வரூபமானது உண்மையில் சுத்தமானது. ராகம், த்வேஷம்முதலியவைகளுடையஸம்பந்தமற்றது, ஜாகரம் முதலிய அவஸ்தைகளற்றது. ஜ்ஞான ஸ்வரூபமானது, அப்படியிருந்தும் ப்ரகிருதி பரிணாமமாகிய சரீரத்தின் ஸம்பந்தத்தால் இந்திரியங்கள், அந்தக்கரணம். வாஸனுபீஜம் இவைகளால்மூன்று அவஸ்தைகளுள்ளதாகத்தோற்றுகிறது. ஸ்வப்பனதிற் காணப்படும் வஸ்துக்கள் அநித்தியங்களாலும் நித்தியம் போலத்தோற்றவில்லையா? இப்படிமூன்று அவஸ்தைகளுள்ளதாகத்தோற்றுவதும் அதற்குக்காரணமாகிய தேஹம்இந்திரியம், இவைகளில் தொடர்ந்திருப்பதுமுதலியவையெல்லாம் ஜ்ஞானஸ்வரூபியாகியப்ராத்யகாத்மாவிடத்தில்புண்யபாபங்களின்பயனேயாம். ஆத்மாவிடத்தில்மாயாகார்யமான மூவ்வகையானது, அனித்யமானதாலும் (முக்திகாலத்தில் இல்லை) அவஸ்தாவிஷேசத்திலில்லாததாலும்இயற்கையல்ல, கர்மத்தின்பயனே. ஸ்வப்னத்திலுண்டானஸுகம்எப்படி கர்மத்தின்பயனே. அனித்யமோ, அப்படி அவஸ்தைகளும் கர்மத்தின் பயனேயாம் என்று தெரிந்து கொண்டவன் அல்பஸுகத்தில் ஆசைப்படாமல் சாந்தியடைவான் **விராட்**—ப்ரஹ்மாண்டம் ஜலத்தில் லயிக்கிறது. அதன் உள்ளிருக்கும் ஜீவவர்க்கமானது ப்ரதானத்தை அடைகிறது. **ஆசார்யனை**— "உடைந்த ஓடத்திலேறிச் சென்ற புருஷன் எப்படி கரைசேரமாட்டானோ, அப்படி ஜ்ஞானமில்லாத புருஷனை யடைந்தவன் மோக்ஷத்தை அடையமாட்டான்."

## அத்யாயம்—4.

### நாராயண மஹர்ஷியின் மஹிமை.

நிமியென்ற அரசன் நவயோகிகளை நோக்கி "ஸ்ரீ ஹரியானவர் தமதிஷ்டப்படி அவதரித்து எந்தெந்த கர்மங்களைச்செய்தார்? எவைகளைச்செய்வார்? அதனைச் சொல்லுங்கள்" என்று கேட்டார். அதனைக்கேட்ட த்ரமீளரென்பவர் அரசனை நோக்கி "அனந்தராகிய பகவானுடைய குணங்கள் அனந்தங்கள். அவைகளெல்லாவற்றையும்சொல்லுகிறதாக நினைப்பவன்மூடன். பூமியிலிருக்கும் தூளிகளைசிலகாலத்தில் பிறித்தெண்ணினாலும்எண்ணலாம். ஸகல சக்திகளுக்கு மிருப்பிடமான பகவானுடைய குணங்களை எண்ணமுடியாது. அப்படிப்பட்ட ஆதிதேவராகிய நாராயணன் தம்மால் ஸிருஷ்டிக்கப்பட்ட மஹாபூதங்களால் ப்ரஹ்மாண்டமாகிய பட்டணத்தை நிர்மித்துஅதில் தம்முடைய அம்சமாக ப்ரவேசித்து புருஷனென்ற பெயரை அடைந்தார். எவருடைய சரீரமானது இந்த மூவ்வுலகங்களுக்கும் ஆதாரமாகவும், ஆதேயமாகவும் இருக்கிறதோ, எவருடைய இந்திரியங்களால்பிராணிகளுடைய இந்திரியங்கள்தங்கள் தங்கள் சக்தியை அடைகின்றனவோ, எவருடையஜ்ஞானம் இயற்கையானதோ, எவருடைய ப்ராணனிடத்திலிருந்து ஸகலபிராணிகளுக்கும் தேஹபலம்,இந்திரியசக்தி, கிரியைமுதலியவை உண்டாகின்றனவோ, ஸத்வம்முதலிய குணங்களால் எவர்இந்த ஜகத்தைப்படைத்து ரக்ஷித்து ஸம்ஹரிக்கிறாரோ, அந்த ஆதிகர்த்தா நாராயணனேயாம். எவருடைய ரஜோகுணத்தால் முதலில் ப்ரஹ்மதேவர் இவ்வுலகத்தைப் படைத்தாரோ. எவருடைய ஸத்வகுணத்தால் விஷ்ணு இந்தஜகத்தை ஸம்ரக்ஷிக்கிறாரோ, அந்த விஷ்ணு யாகங்களுக்கு அதிபதியாகவும் அவைகளின் பயனைக் கொடுப்பவர் ப்ராஹ்மணர்களையும், அவர்களுடைய தர்மத்தையும் காப்பாற்றுபவராகவும் இருக்கிறாரோ எவருடைய தமோகுணத்தால் ருத்ரன் ஜகத்தைஸம்ஹரிக்கிறாரோ இப்படி ப்ரஹ்மா முதலியவர்கள் எவருடைய அநுக்கிரஹத்தால் இவ்வுலகத்தைப் படைப்பது, ரக்ஷிப்பது, ஸம்ஹரிப்பது முதலியவைகளைச் செய்கிறார்களோ, அவரே முதன்மையான புருஷன். தக்ஷருடைய புத்திரியான மூர்த்தியென்பவளிடத்தில் தர்மருக்கு நாராயணன், நரன் என்ற இரண்டு ஸ்வரூபமாக பகவான் அவதரித்தார். அந்த

பகவதம்சத்தை மஹர்ஷிகளெல்லாரும் பூஜிக்கிறார்கள். அந்த நாராயணன் தபஸ்வி, மிக்க சாந்தர்,—அவர் நாரதர் முதலியவர்களுக்கு ஆத்ம ஸ்வரூபத்தை யுபதேசித்தார். தாமும் அநுஷ்டித்தார். அதனைக் கண்ணுற்ற மஹேந்திரன் 'இவர் என்னுடைய ஸ்தானத்தை அடைய விரும்புகிறார்' என்று ஸந்தேஹித்து அப்ஸரஸ்ஸுகளை பதரிகாச்ரமத்திற்கு அநுப்பினார். பின்பு அப்ஸரஸ்ஸுகளின் கூட்டமும், வஸந்தருதுவும், தென்னல்காற்றும் அவருடைய ஆச்ரமஞ்சென்றன. அந்தக் கூட்டமானது நாராயணருடைய மஹிமையை அறியாமல் ஸ்திரீகளுடைய பார்வையாகிய பாணத்தால் மஹர்ஷியை அடித்தது (ஆசைப்படச்செய்தது) அப்பொழுது மஹர்ஷி இந்திரனால் செய்யப்பட்ட அபராதமென்று தெரிந்துகொண்டார். மஹர்ஷிக்கு உண்மை தெரிந்ததென்பதையுணர்ந்து அந்த அப்ஸரஸ்முதலியவர்கள் பயந்து நடுங்கினார்கள். அவர்களை நோக்கி மஹர்ஷியானவர் "ஓ ஸாமர்த்தியமுள்ள மன்மதனே! தென்னல்காற்றே! ஓ தேவஸ்திரீகளே! உங்களுக்கு அதிதிபூஜைசெய்கிறேன்; அதனைப்பெற்றுக்கொள்ளுங்கள் இந்த ஆச்ரமத்தில் வஸித்து இதனை பயனுள்ளதாகச் செய்யுங்கள். பயப்படவேண்டாம்" என்று கர்வமில்லாமல் சொன்னார்.

9—11. ஓ மஹாராஜ! அபயத்தைக்கொடுப்பவரான நாராயண மஹர்ஷி இப்படிசொல்ல அதனைக்கேட்ட தேவர்கள் வெட்கத்தால் தலைவணங்கி "ஓ ப்ரபுவே! நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர்; விகாரமற்றவர்; ஆத்மாராமர்களும், தீரர்களுமான யோகிகளால் நமஸ்கரிக்கபெற்ற பாதாரவிந்தமுள்ளவர்; அப்படிப்பட்ட மஹிமையுள்ள நீர் எங்களைக்கண்டு மனங்கலங்காமலிருப்பது எங்களிடத்தில் தயைசெய்வது முதலியவை ஆச்சர்யமல்ல. மேலும் ஸ்வர்க்கம் முதலிய ஸ்வல்பஸுகத்தை விரும்பாமல் உம்முடைய ஸ்தானத்தை அடைவதற்காக உம்மை ஸேவிப்பவர்களுக்கு தேவர்கள் விக்கினத்தைச்செய்கிறார்கள். (தங்களுடைய லோகத்தையுந்தாண்டி மேலானஸுகத்தை அடைவதற்குமுயற்சிப்பதால் தடைசெய்கிறார்களென்று கருத்து) யாகங்களைச்செய்து தேவர்களுக்குஹவிர்ப்பாகங்கொடுப்பவர்களுக்கு அவர்கள் இடையூறுசெய்கிறதில்லை. நீர் ஸகல தேவர்களுக்கும் அதிபதியானதால் உம்மை ஸேவிக்கும் பக்தர்களைக்காப்பாற்றுகிறீர். ஆனதால் அவர்கள்விக்

ஙங்களுடைய தலையைமிதிக்கிறார்கள். உம்மிடத்தில் பக்திசெய்யாமல் தபஸ்ஸை மாத்திரம் அநுஷ்டிப்பவர்கள் பசி, தாஹம், குளிர், உஷ்ணம், பனி, காற்று, நாக்கின் ருசி, சிச்னத்தின் உபயோகம்முதலியவைகளுள்ள எங்களை அடைந்து விஷயபோகத்தை அநுபவிப்பார்கள். சில தபஸ்விகள் மேற்காட்டிய ஸங்கமுள்ள எங்களை லக்ஷயஞ்செய்யாமல் கோபித்துக்கொள்வார்கள். அதனால் அவர்கள் விஷயபோகங்களையும் இழந்து கஷ்டப்பட்டுச்செய்த தபஸ்ஸையும்இழந்துவிடுவார்கள். அதுநதியைத்தாண்டி மாட்டின் குளப்படிபோன்றஸ்வல்ப இடத்தில் தலையிலிருக்கும்மூட்டையை போடுகிறவன்போலாகிறது. (தபஸ்விகளானாலும் கோபிப்பார்களானல் விஷயபோகங்களையும் இழந்து புண்யத்தையும் இழந்துவிடுகிறார்களென்று கருத்து)'' என்று கருணையுண்டாகும்படி சொன்னார்கள்.

12—16. அதனைக்கேட்ட நாராயண மஹர்ஷி தம்முடைய யோகமஹிமையால் உண்டுபண்ணப்பட்டவர்களும், மிக்க அலங்காரமுள்ளவர்களும், தமக்குச்சுச்ரூஷை செய்பவர்களுமானஸ்திரீகளை தேவர்களுக்கும் தேவஸ்திரீகளுக்கும் காண்பித்தார். (அவர்களுடைய கர்வத்தை அடக்குவதற்காக) அந்த ஸ்திரீகள் லக்ஷ்மீ தேவிபோலிருந்தார்கள்; அவர்களுடைய ரூபம், காம்பீர்யம்இவைகளைப்பார்த்து அந்த தேவஸ்திரீகள் காந்தியற்றவர்களாகி அவர்களுடைய வாஸனையை முகர்ந்து மோஹித்தார்கள். அப்பொழுது நாராயணமஹர்ஷி தேவஸ்திரீகளை நோக்கி "இந்த ஸ்திரீகளுக்குள் யார்உங்களுக்குச் சமமான ரூபமுள்ளவர்களோ, அவளை ஸ்வர்க்கத்துக்கு அழைத்துப்போகலாம். எங்களுக்குச் சமமானவள் ஒருவளுமில்லை யென்று சொல்வீர்களானல் யார் ஸ்வர்க்கத்துக்கு ஆபரணம்போல் அழகாகவிருப்பாளோ, அவளை அழைத்துப்போகலாம்'' என்றார். அதனைக்கேட்ட தேவர்கள் அப்படியே செய்கிறோமென்று சொல்லி அவரை நமஸ்கரித்து அப்ஸரஸ்ஸுக்களுக்குட் சிறந்தவர்களான ஊர்வசியை அழைத்துக்கொண்டு ஸ்வர்க்கலோகஞ்சென்றார்கள். மேலுமவர்கள் ஸுதர்மா யென்ற ஸபையில் மஹேந்திரனை நமஸ்கரித்து ஸகலதேவர்களும் கேட்டுக்கொண்டிருக்க நாராயண மஹர்ஷியின் மஹிமையைத் தெரிவித்தார்கள். அதனைக்கேட்டு தேவேந்திரன் ஆச்சர்யமடைந்து நடுங்கினான்.

17—23. "ஸ்ரீமஹாவிஷ்ணு ஹம்ஸாவதாரஞ்செய்து ஆத்மயோகத்தைச் சொன்னார். மேலும் தத்தாத்ரேயர், ஸனகர் முதலியவர்கள், நம்முடைய பிதாவாகிய ரிஷபர் ஆகிய இவர்களுடைய ஸ்வரூபியாக அவதரித்து ஆத்மயோகத்தைச் சொன்னார். பின்னுமந்த மஹாவிஷ்ணு ஹயக்ரீவாவதாரஞ்செய்து வேதங்களைத் திருப்பிக்கொண்டுவந்தார். (மதுவென்ற அஸுரனால் அபஹரிக்கப்பெற்ற வேதங்களை திருப்பிக்கொண்டு வந்தார்.) மத்ஸ்யமாக அவதரித்து பூமியையும், ஓஷதிகளையும் காப்பாற்றினார். வராஹவதாரஞ்செய்து ஹிரண்யாக்ஷனைக்கொன்று ஜலத்திலிருந்து பூமியைஉயரத்தூக்கினார். தேவர்களும் அஸுரர்களும் அமிருதங்கடையும்பொழுது ஆமையுருவங்கொண்டு (கூர்மாவதாரஞ்செய்து) தம்முதுகில் மந்தரமலையைத்தாங்கினார். பின்னுமந்த மஹாவிஷ்ணு முதலையால் பீடிக்கப்பட்டு உபத்திரவத்தை அடைந்த யானையை ஸம்ரக்ஷித்தார். பின்னுமவர் ஸமுத்திரத்தில் விழுந்து கரையேற முடியாமல் ஸ்தோத்திரஞ்செய்தவர்களான மஹர்ஷிகளைக் காப்பாற்றினார். (கச்யபருக்காகஸமித்துவெட்டிவருவதற்காகவாலகில்யர்கள் சென்று ஸமுத்திரத்தில் விழுந்தார்கள். அதனைக்கண்ணுற்ற மஹேந்திரன்பரிஹாஸஞ்செய்தான். அப்பொழுது பகவான் அவர்களை ரக்ஷித்தார்.) விருத்திராஸுரனைக்கொன்று ப்ரஹ்மஹத்யாதோஷத்தை அடைந்த மஹேந்திரனுடைய பாபத்தை நிவர்த்தித்துஸம்ரக்ஷித்தார் நரஸிம்மமாக அவதரித்து ஹிரண்யகசிபுவைக் கொன்றுஅவனால் சிறைப்படுத்தப்பட்டிருந்த தேவஸ்திரீகளைவிடுவித்துஸாதுக்களுக்கும்அபயத்தைககொடுத்தார். தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் யுத்தம் நேர்ந்தால்அதில்அஸுரர்களைஜயித்து தேவர்களைக் காப்பாற்றுகிறார். ஒவ்வொரு மன்வந்தரங்களிலும் அம்சாவதாரங்களைச்செய்து லோகங்களை ஸம்ரக்ஷிக்கிறார். பின்னுமவர் வாமனராக அவதரித்து பலியினிடத்தில்பூமியையாசித்து அதனை தேவர்களுக்குக்கொடுத்தார். இன்னுமவர் ஹைஹயகுலத்தை எறிப்பதற்கு அக்னியாகப்ருகு வம்சத்தில்பரசுராமனாக அவதாரஞ்செய்து பூமியிலுள்ள துஷ்ட அரசர்களை இருபத்தொரு தடவைக்கொன்றார். இன்னுமவர் ஸ்ரீராமனாகஅவதரித்து ஸமுத்திரத்தில் அணைகட்டி ராவணனைக்கொன்று லோகத்தில் தமது கீர்த்தியை ஸ்தாபித்து ப்ரகாசிக்கிறார். அப்படிப்பட்டபகவான்உத்பத்தியற்றவரானாலும் யதுகுலத்தில் அவதரித்திருக்கிறார். இனி

இவர் புத்தராக அவதரித்து யாகஞ்செய்யத்தகாதவர்களும்,யாகஞ்செய்பவர்களுமான அஸுரர்களை வாதத்தால்மோஹிக்கச்செய்வார். பின்னுமிவர் கல்கியாய் அவதரித்து கலியுகத்தில் சூத்திரர்களான அரசர்களைக் கொல்வார். ஜகத்திற்கும் அதிபதியும், மிக்க கீர்த்தியுள்ளவருமான பகவானுடைய பல அவதாரங்களும் சரித்ரங்களும்இம்மாதிரியானவை, அவைகளைச்சொன்னேன்'' என்றார்.

---

## அத்யாயம்—5

### பகவானிடத்தில் பக்தி செய்யாதவர்களின் கதி.

நிமியென்ற அரசன் நவயோகிகளை நோக்கி ''ஓ ஆத்மாவின் உண்மையை அறிந்தவர்களுக்குட் சிறந்தவர்களே! பகவானுகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவை எவர்கள் பூஜிக்கவில்லையோ, எவர்கள் மனத்தை ஜயிக்காமல் விஷயங்களில் நோக்கமுள்ளவர்களோ, அப்படிப்பட்டபக்தியில்லாதவர்களுக்கு என்னகதிகிடைக்கும்? அதனைச் சொல்லவேண்டும்'' என்று கேட்டார். (பகவானிடத்தில் பக்திசெய்யாதவர்களுக்கு விக்கினமுண்டாகும் என்று முன் அத்யாயத்தில் சொல்லியிருப்பதால்அவர்களுக்கு என்னகதியென்று கேட்கலாயிற்று).

2—17. அதனைக்கேட்ட சமஸரென்பவர் அரசனைநோக்கி புருஷோத்தமருடைய முகம்,கை,துடை,கால்இவைகளிலிருந்து ப்ராஹ்மண, க்ஷத்திரிய, வைச்ய,சூத்திர என்றஜாதிகள்ஆச்ரமங்களுடன் முறையே குணபேதத்தாலுண்டாயின. (ஸத்வகுணத்தால் ப்ராஹ்மணனும்,ஸத்வம் ரஜஸ் இவைகளால் க்ஷத்திரியனும் ரஜஸ்தமஸ்இவைகளால் வைச்யனும்,தமோகுணத்தால் சூத்திரனுமென்றுகருத்து)இவர்களில்எவர்கள்' நாம் பகவானிடத்திலிருந்துஉண்டானேம்என்றுதெரிந்துகொண்டாவதுதெறிந்துகொள்ளாமலாவது ஈச்வரனை யுபாஸியாமலிருக்கிறார்களோ, அவர்கள் தங்களுடைய வர்ணாச்ரமத்தை விட்டுகீழேவிழுகிறார்கள். ஆனால் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கதையைக் கேட்காதவர்களும், பகவானுடைய திவ்யநாமங்களையுச்சரிக்காதவர்களுமான ஸ்திரீகள்சூத்திரர்கள்ஆகியஇவர்களிடத்தில் உம்மைப்போன்றஸாதுக்கள்தயை

செய்யவேண்டும். (அறியாத்தன்மையால் பகவானையுபாஸிக்காமலிருப்பவர்கள் அநுக்ரஹிக்கப்படுவார்களென்றுகருத்து) ப்ராஹ்மணன், க்ஷத்திரியன், வைச்யன் ஆகிய இவர்கள் உபநயனம், அத்யயனம் முதலிய ச்ருதியில் சொல்லிய ஸம்ஸ்காரமுள்ளவர்களானதால் அவர்கள் ஸ்ரீமஹாவிஷ்ணுவின்பாதத்தைஅடைவதற்குரிய உபாயத்தை அனுஷ்டிப்பதற்குஅதிகாரமுள்ளவர்களாக விருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் வேதத்தில் சொல்லிய அர்த்தவாதங்களால் மோஹித்து ஸ்வர்க்கம் முதலிய பயனை அடையவிரும்பி கர்மங்களை அனுஷ்டிக்கிறார்கள். மேலுமவர்கள் தேன்போன்ற வேதவாக்கியத்தில் (அர்த்தவாதம்) ஆசைகொண்டு நாங்கள் இந்த கர்மத்தை யனுஷ்டித்துஸ்வர்க்கஞ்சென்று அப்ஸரஸ்ஸுக்களுடன்ஸுகமாக விளையாடப்போகிறோம்என்றுபிரியமானவார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். பின்னுமவர்கள்கர்மங்களை யனுஷ்டித்தாலும் அவைகள்பந்தகமாகாமலிருக்கும்படி அனுஷ்டிக்கத் தெரியாதவர்கள். தன்னைத்தெரிந்தவர்களாகநினைத்துக்கொண்டவர்களானதால்வணக்கமில்லாதவர்கள். அதனால்அவர்கள்விவேகிகளைக்கேட்டும்தெரிந்துகொள்ளுகிறதில்லை. பின்னுமவர்கள்ஸர்ப்பங்கள்போல் மிக்க கோபமுள்ளவர்கள். ரஜோகுணமுள்ளவர்களானதால் அபிசாரம் முதலிய கோரமான கார்யங்களையே ஸங்கல்பிப் பபவர்கள்; அஹங்காரமுள்ளவர்கள்; பாபிகள்; கீர்த்தியில் நோக்கமுள்ளவர்கள்; ஸ்திரீகளிடத்திலேயே ஆசைகொண்டவர்கள்; ஆனதால் அவர்கள் ஈச்வர பக்தர்களை பரிஹாஸஞ்செய்வார்கள். எவர்கள் ஸ்திரீகளையே உபாஸித்துக்கொண்டும் (பெரியோர்களை உபாஸியாமல்) இருக்கிறார்களோ, எவர்களுடைய வீட்டில் அதிதிபூஜை முதலிய நற்காரியங்கள் நடைபெறாமலிருக்கின்றனவோ, எவர்கள் ஸ்த்ரீகளுடையபு ணர்ச்சியிலேயே நோக்க முள்ளவர்களாக விருக்கிறார்களோ, அவர்கள் இது என்னால் அடையப்பட்டது; இதனை யடையப்போகிறேன்; இது இருக்கிறது; இது கிடைக்கப்போகிறது என்றுசொல்லிக்கொண்டிருப்பார்கள். மேலுமவர்கள் அன்னம் தக்ஷிணை இவைகளை விதிப்படி கொடாமல் யாகம் செய்கிறார்கள். பின்னுமவர்கள் ஹிம்ஸையிலுள்ள தோஷத்தை அறியாமல் ஜீவனத்திற்காக பசுக்களைக்கொல்வார்கள். பின்னுமவர்கள்பணம் முதலிய ஸம்பத்து, அதிபதியாகவிருப்பது, மேலான குலத்தில் பிறந்திருப்பது, வித்

ஸய, கொடுப்பது, அழகு, பலம் யாகம் முதலிய கர்மங்கள், ஆகிய இவைகளால் கர்வமடைந்து விவேகமற்று பகவானையும் அவருடைய பக்தர்களான ஸாதுக்களையும் அவமதிப்பார்கள். மேலுமவர்கள் ஸகலப்பிராணிகளிடத்திலும் ஆத்மாவாகவும், ஈச்வரனாகவும் இருப்பதையும் ஆகாயம் எங்கும் வியாபித்திருந்தாலும் ஒன்றிலும் ஸம்பந்திக்காமலிருப்பதுபோல பகவான் ஒன்றிலும் ஸம்பந்திக்கிறதில்லையென்பதையும், எல்லாராலும் அடையத்தகுந்த புருஷார்த்தமென்று வேதங்களால் நிரூபிக்கப் பட்டவரென்பதையும் அறியாமல் ஸ்திரீகளுடைய ஸம்போகம், மத்தியபானம் முதலியவைகளை வேதங்கள் நிரூபிக்கின்றனவென்று சொல்லுகிறார்கள் (நிவர்த்திமார்க்கத்தைச் சொல்லும் வேதத்தைப் ப்ரவர்த்திமார்க்கத்தைச் சொல்லுகின்றனவென்று சொல்லுகிறார்களென்று கருத்து) ஸ்திரீஸங்கமம், மாம்ஸத்தை புஜிப்பது, மத்தியங்குடிப்பது ஆகிய இவைகள் வேதத்தில் சொல்லிய விஷயங்களானாலும் அந்த வேதவாக்கியங்களுக்குப் பின்வருமாறு அர்த்தங்கொள்ளவேண்டும். எப்படியென்றால் ஸ்திரீஸங்கமம், மாம்ஸபோஜனம், மத்தியபானம் இவைகளைச் செய்யவேண்டுமென்று வேதம் விதிக்கவில்லை. இவைகளைச் செய்ய மனிதன் விரும்புவானானால் ருதுகாலத்தில் ஸ்திரீஸங்கமம் செய்யட்டும், யாகத்தில் மாம்ஸத்தை புஜிக்கட்டும். ஸௌத்திராமணியில் மத்தியபானம் செய்யட்டும், மற்றகாலங்களில் செய்ய வேண்டாம் என்று அவைகளுக்கு வேதத்தில் காலம் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனாலும் அவைகளைச் செய்யாமல் அவைகளிலிருந்து நிவர்த்தியடைவதே மேலானதென்பது அந்த வாக்கியங்களுக்கு முக்கியகருத்து. மேலும் மேற்காட்டிய மூடர்கள் பணத்தை சரீரம் முதலியவைகளுக்காக உபயோகப்படுத்துகிறார்கள். அதனுடைய பயனை யறியாமல் மிக்க வீர்யமுள்ள ஸம்ஸாரத்தை அடைந்து கஷ்டப்படுகிறார்கள். பணத்தால் தர்மத்தையே ஸம்பாதிக்கவேண்டும். அதனால் ஜ்ஞானம், அபரோக்ஷஜ்ஞானம் அதன்பின் மோக்ஷம் இவைகள் உண்டாகின்றன. (பரமாத்மாவையடைவதற்கு ஸாதனமாகிய தர்மத்தை ஸம்பாதிப்பதற்காகவே பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனை அந்தவிஷயத்தில் உபயோகப்படுத்துகிறதில்லை என்று கருத்து) மேலும் ஸௌத்திராமணியில் மத்தியத்தை முகரலாமென்று சொல்லப்பட்டதேயொழிய தனதிஷ்டப்படி, பானஞ்செய்யும்படி அனுமதி

கொடுக்கப்படவில்லை. அதுபோலவே யாகத்தில் தேவதையை யுத்தேசித்துப்பசுவைக்கொல்வதற்கு வேதம்அனுமதித்ததேயொழிய தான் புஜிப்பதற்காக பசுவைக்கொல்லும்படி வேதத்தில் சொல்லப்படவில்லை. அதுபோலவே புத்திரனை யுண்டுபண்ணுவதற்காக ஸ்திரீகளிடத்தில் ஸங்கமம் செய்யலாமென்று சொல்லப்பட்டதே யொழிய தனதிஷ்டப்படி ரதிக்காக ஸ்திரீ ஸங்கமம் விதிக்கப்படவில்லை. மூடர்கள்மேற்சொல்லியதைமிக்க சுத்தமானதர்மமென்று அறியார்கள். எவர்கள்மேற்சொல்லியதர்மத்தை யறியாமல்கர்வங்கொண்டு தங்களைஸாதுக்களென்றுநினைத்துக்கொண்டுபசுக்களைக் கொன்று தங்களுடைய சரீரத்தைப் போஷிக்கிறார்களோ அவர்கள் மரணமடைந்த பிறகு பரலோகத்தில் அந்த பசுக்கள் அவர்களைப்புஜிக்கும். பின்னும் எவர்கள்பிறருடைய சரீரத்திலிருக்கும் தன்னுடைய ஆத்மாவாகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவை த்வேஷிக்கிறார்களோ, புத்திரன் முதலியவர்களிடத்திலும்தங்கள் சரீரத்திலும் அபிமானம்வைக்கிறார்களோ, அவர்கள்நரகத்தை யடைகிறார்கள். எவர்கள் தர்மம், அர்த்தம் காமம் இவைகளையே ப்ரதானமாகக் கொண்டு சரீரம்முதலியவைகளை சாச்வதமென்று நினைத்து தத்வஜ்ஞானத்தை யடையாமல் மூடர்களாகவிருக்கிறார்களோ, அவர்கள் தாமே தன்னுடைய ஆத்மாவைக்கொல்லுகிறார்கள். (மூடர்கள். ஸாதுக்களால் அனுக்கிரஹிக்கப்பட்டு நல்ல கதியை யடைவார்கள். விவேகிகள் தாமாகவே ஸம்ஸாரத்தைத் தாண்டுவார்கள் மிக்க மூடர்களல்லாமலும், விவேகிகளாகவில்லாமலும், மத்திய ஸ்திதியிலிருப்பவர்கள் நரகத்தையடைகிறார்கள்என்று தாத்பர்யம்) எவர்கள் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை யறியாமல் ஆத்மாவை வேறாகச் சொல்லுகிறார்களோ, அவர்கள் ஆத்மகாதிகளெனப்படுகிறார்கள். அவர்கள் விஷயங்களில்நிவிருத்தியை அடையாதவர்கள்; கர்மத்தையே ஜ்ஞானமென்று நினைத்தவர்கள்; அவர்களுடைய மனோரதமானது காலத்தால் கெடுக்கப்படுமாகையால் அவர்கள் துக்கத்தை யடைவார்கள். மேலுமவர்கள் ஸ்ரீ வாஸுதேவனை யுபாஸியாமலிருந்ததால்வீடு, புத்திரன், மித்திரன், பணம் முதலியவைகளைவிட்டு நரகத்தை அடைகிறார்கள்" என்று சொன்னார்.

18—42. அதனைக்கேட்ட நிமி என்ற அரசர் அந்த யோகிகளைப்பார்த்து "அந்த பகவான் எந்தெந்த காலத்தில் எந்தெந்த

வர்ணமுள்ளவர்? எவ்விதஸ்வரூபமுள்ளவர்? மனிதர்கள் எந்தநாமத்தைச்சொல்லி எந்தவிதிப்படி பகவானைப் பூஜிக்கவேண்டும்? அதனைச் சொல்லும்" என்று கேட்டார். அதனைக்கேட்ட கரபாஜனனென்பவர் அரசனைநோக்கி "க்ருதம், த்ரேதா, த்வாபரம், கலி என்ற நான்குயுகங்களிலும் பகவான் பலவகையானநிறம், பெயர், ஸ்வரூபம் இவைகளுள்ளவராக விருப்பதால் அவரை மனிதர்கள் பலமுறையாகப் பூஜிக்கிறார்கள். க்ருதயுகத்தில்பகவான்வெண்மை நிறத்துடனும், நான்குகைகளுடனும், ஜடை, மரப்பட்டை இவைகளைத் தரித்தவராகிமாந்தோல், யஜ்ஞோபவீதம், ஜபமாலை, தண்டம் கமண்டலு இவைகளைத்தரித்து ப்ரஹ்மசாரிவேஷத்துடனிருக்கிறார். அந்தகாலத்திய மனிதர்கள் ஒருவருக்கொருவர்விரோதமற்று சாந்தர்களாகியும், ஸகலப்ராணிகளிடத்திலும்ஸமபுத்தியுள்ளவர்களாகவும் இருந்து சமம், தமம் இவைகளுள்ள த்யானயோகத்தைச்செய்து பகவானை ஆராதித்தார்கள். அப்பொழுது பகவான் தர்மங்களை நிர்வஹிப்பதனால் தர்மனென்றும், யோகங்களுக்கு அதிபதியாகையால் யோகேச்வரனென்றும், வைகுண்டனென்றும், ஹம்ஸனென்றும், ஈச்வரனென்றும், ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களுக்கு புலப்படாததனால் அவ்யக்தனென்றும் பரமாத்மாவென்றும் பலவகையான குணங்களுள்ளவராகவும் திவ்விய நாமங்களுள்ளவராகவும் சொல்லப்படுகிறார். த்ரேதா யுகத்தில் பகவான் சிவந்த நிறமுள்ளவராகவும், நான்கு கைகளுள்ளவராகவும் மூன்று மேகலைகளுள்ளவராகவும், பொன்னிறமான தலைமயிர்களுள்ளவராகவும் வேதஸ்வரூபியும் ஸ்ருக், ஸ்ருவம் இவைகளை அடையாளமாகக்கொண்டிருக்கிறார். அந்த காலத்தில் மனிதர்கள் தர்மத்தில் நோக்கமுள்ளவர்களாகவும், ப்ரஹ்மவித்துக்களாகவு மிருந்தார்கள். அவர்கள் வேதத்திற் சொல்லிய கர்மங்களை அநுஷ்டித்து ஸகல தேவஸ்வரூபியான ஸ்ரீமந் நாராயணனைப் பூஜிக்கிறார்கள். அப்பொழுது பகவான் விஷ்ணு, யஜ்ஞர், ப்ரச்னிகர்ப்பர், ஸர்வதேவர், உருக்கிரமர், விருஷாகபி, ஜபந்தர், உருகாயர் என்று சொல்லப்படுகிறார். த்வாபர யுகத்தில் பகவான் காசாம்பூபோன்ற நிறமுள்ளவராகவும், பீதாம்பரத்தைத்தரித்தவராகவும், சக்கிரம்முதலிய ஆயுதங்களுள்ளவராகவும். ஸ்ரீவத்ஸம்முதலிய அடையாளங்களுள்ளவராகவுமிருக்கிறார். அப்பொழுது மனிதர்கள் பரமாத்மாவையறியவேண்டும்

ன்ற விருப்பமுள்ளவர்களாகி குடை, சாமரம் முதலிய உபசாரங்களுடன் வேதத்திற்சொல்லிய முறைப்படியும் ஆகமமுறைப்படியும் பகவானைப் பூஜிக்கிறார்கள். மேலும் அந்தகாலத்தில் மனிதர்கள் 'வாஸுதேவராகிய பகவானுக்கு நமஸ்காரம். ஸங்கர்ஷணமூர்த்திக்கு நமஸ்காரம். ப்ரத்யும்ன ஸ்வரூபியும், அனிருத்தஸ்வரூபியும் பகவானுமாகிய உம்மை எப்பொழுதும் நமஸ்கரிக்கிறோம். நாராயண மஹர்ஷியாகிய உமக்கு நமஸ்காரம். மஹாபுருஷராகிய உமக்கு நமஸ்காரம். ஜகத்திற்கு அதிபதியும், ஜகத்ஸ்வரூபியும், ஸகலப்ராணிகளுக்கும் ஆத்மாவுமாகிய உமக்கு நமஸ்காரம்" என்று ஸ்தோத்திரஞ்செய்கிறார்கள். கலியுகத்தில் பலவகையான ஆகமவிதிப்படி ஜனங்கள் பகவானைப் பூஜிப்பதைச் சொல்லுகிறேன், கேளும் (கலியில் ஆகமவிதியே முக்கியமென்று கருத்து) கலியுகத்தில் பகவான் இந்திரநீலம்போன்ற நிறமுள்ளவராகவிருக்கிறார். புத்திசாலிகளாகிய ஜனங்கள் சங்கம், சக்கிரம், கௌஸ்துபம், பார்ஷதர்கள் இவர்களுடன் கூடிய ஸ்ரீக்ருஷ்ணமூர்த்தியை பகவானுடைய திவ்யநாமங்களையே பெரும்பாலும் உச்சரித்து பூஜிக்கிறார்கள். மேலுமவர்கள் "ஓ புருஷோத்தம! உம்முடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறேன். அது எப்பொழுதும் த்யானம் பண்ணக்கூடியது; களத்திரம் புத்திரன் முதலியவர்களால் ஏற்படும் அவமானத்தை நிவர்த்திக்கக்கூடியது; இஷ்டத்தைக் கொடுக்கக்கூடியது; கங்கை முதலிய தீர்த்தங்களுக்கு இருப்பிடமானதால் பரிசுத்தியைக் கொடுக்கக்கூடியது; பரமசிவன் ப்ரஹ்மதேவர் இவர்களால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டது, சரணமடையக்கூடியது; அண்டினவர்களுடைய உபத்திரவத்தை நிவர்த்திக்கும் ஸ்வபாவமுள்ளது; ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தைத் தாண்டுவிக்கும் ஓடமாகவிருப்பது; ஓ மஹாபுருஷ! நீர் ஸ்ரீராமனாக அவதரித்துபிதாவினுடையவார்த்தையை பரிபாலிப்பதாகிய தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக விடமுடியாததும், தேவர்களாலும் விரும்பக்கூடியதுமான ராஜ்ஜியத்தில் ஆசையையொழித்து காட்டிற்குச்சென்றீர். அவ்விடத்தில் ஸ்வர்ணமயமான மானைப் பார்த்து அதனிடத்தில் ஸீதை ஆசைப்பட அதனைப்பிடிப்பதற்காக அதன்பின் சென்றீர். அப்படிப்பட்ட உம்முடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கிறேன்" என்று ஸ்தோத்திரஞ்செய்கிறார்கள் இப்படி ஒவ்வொருயுகத்திலும் மனிதர்கள் அந்தந்தயுகத்திற்கு

தக்கபடி ஸகல க்ஷேமங்களுக்கு மதிபதியான பகவானைப் பூஜிக்கிறார்கள். மேலும் கலியுகத்தில் அநேக தோஷங்களிருந்தாலும் அதன் குணத்தை பரீக்ஷபெரியோர்கள் கலியுகமே மேலானதென்று ச்லாகிக்கிறார்கள். ஏனென்றால் கலியுகத்தில் பகவானுடைய திவ்யநாமங்களைச் சொல்வதனாலேயே ஸகல புருஷார்த்தங்களும் கிடைக்கின்றன. ஸம்ஸாரிகளான பிராணிகளுக்குபகவானுடைய திவ்யநாமங்களையுச்சரிப்பதால்ஸம்ஸார துக்கம்நிவர்த்தியாகி. சாந்தியுண்டாகிறது. ஆனதால்இதனைவிட மேலான லாபம் வேறொன்றுமில்லை. கிருதம் முதலியயுகங்களிலுள்ளமனிதர்கள் கலியுகத்தில்தாங்கள் ஜனிக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். (கிருதயுகத்தில் த்யானஞ்செய்தும், த்ரேதாயுகத்தில்யாகங்களைச் செய்தும், த்வாபரயுகத்தில்விதிப்படி பூஜிப்பதாலும்எதனையடைகிறானோ, அந்தபயனை கலியுகத்தில்பகவானுடைய திவ்யநாமங்களை உச்சரிப்பதனாலேயே யடைகிறான்.) கலியுகத்தில் சில இடங்களில் ஜனங்கள் ஸ்ரீமந் நாராயணனிடத்தில் பக்தியுள்ளவர்களாகயிருப்பார்கள். ஓ மஹாராஜ! திராவிட தேசத்தில் ஜனங்கள்பெரும்பாலும் விஷ்ணுபக்தர்களாகவிருப்பார்கள். அந்ததேசத்தில் தாம்ரபர்ணி. கிருதமாலா' பயஸ்வினீ, மிக்கபுண்ணிய நதியான காவேரி, மஹா நதியாகியப்ரதீசி ஆகிய இந்தநதிகள் ஓடுகின்றனவோ, அவைகளின்தீர்த்தத்தைஎவர்கள் பானஞ்செய்கிறார்களோ அந்தமனிதர்கள் சுத்தசித்தர்களாகி பெரும்பாலும் பகவானிடத்தில் பக்தியுள்ளவர்களாக விருப்பார்கள். எவன் எல்லா ஜகத்தும் ஸ்ரீ மந்நாராயணஸ்வரூபமென்று நினைத்துமூன்று கரணங்களாலும் பகவானைச் சரணமடைகிறானோ, அவன் தேவர்கள், ரிஷிகள், பூதங்கள், பித்ருக்கள், மற்ற பந்துகள் ஆகிய இவர்களுக்கு வேலைக்காரனாகவாவது, கடனுள்ளவனாகவாவது ஆகமாட்டான். பரமாத்மாவாகிய பகவான், எவன் தேஹம் முதலியவைகளில் அபிமானத்தையொழித்து தம்முடைய பாதத்தைச் சரணமடைகிறானோ அவனுடைய ஹிருதயத்தில்தாமிருந்து அவனுக்குதவறுதலால் நேரும்பாபங்களையும் நிவர்த்திக்கிறார் என்று சொன்னார்.

43—50. அதனைக்கேட்டநிமிஎன்றஅரசன்உபாத்தியாயரை முன்னிட்டு அந்தயோகிகளைப்பூஜித்தார். பின்பு ஸகலஜனங்களும் பார்த்துக்கொண்டிருக்க அந்த யோகிகள்கண்ணுக்குப்புலப்படா

மல் மறைந்தார்கள். அரசன் பாகவததர்மங்களை அனுஷ்டித்து உத்தமகதியையடைந்தார். ஆனதால் வஸுதேவரே! நீரும் விஷயங்களில் ஆசையையொழித்து மிக்க ச்ரத்தையுடன் பாகவததர்மங்களை அநுஷ்டித்து உத்தமகதியையடைவீர். உங்களிருவர்களுக்கும் மஹாவிஷ்ணு புத்திரனாக அவதரித்திருப்பதால் உங்களுடைய கீர்த்தி லோகத்தில் பரவியது. மேலும் நீங்கள் ஸ்ரீ க்ருஷ்ணனைப் புத்திரனென்று நினைத்து மிக்க ஸ்நேஹத்துடன் பார்ப்பது, ஆலிங்கனம் செய்துகொள்வது, பேசுவது, படுப்பது, உட்காருவது, சேர்ந்து போஜனம்செய்வது ஆகிய இவைகளை அனுஷ்டித்ததால் உங்களுடைய ஆத்மா சுத்தமாயிற்று. சிசுபாலன், பௌண்ட்ரன், ஸால்வன் முதலியவர்கள் சயனம் ஆஸனம், நடை, பார்ப்பது முதலியவைகளில் ஸ்ரீ க்ருஷ்ணனை விரோத புத்தியால் த்யானித்தும் அவருடைய ஸாரூப்யத்தை அடைந்தார்கள். அவரிடத்தில் ஸ்நேஹமுள்ளவர்களுக்கு உத்தமகதி கிடைப்பதில் என்ன ஸந்தேஹம், ஸ்ரீ க்ருஷ்ணன் ஸகலப்பிராணிகளுக்கும் ஆத்மாவாகவும் அதிபதியாகவுமிருக்கிறார். அவர் மாயையால் மனிதவேடம் பூண்டு தம்முடைய மஹிமையை மறைத்துக் கொண்டிருக்கிறார், அப்படிப்பட்ட பரமபுருஷனை புத்திரனென்று நினைக்கவேண்டாம். மேலும் ஸ்ரீ க்ருஷ்ணன் பூமிக்குச் சுமையாகவிருக்கும் துஷ்டர்களான அரசர்களைக் கொன்று ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்காக பூமியில் அவதரித்திருக்கிறார். பின்னும் அவருடைய கீர்த்தியானது ஸகல ஜனங்களுக்கும் மோக்ஷத்தைக் கொடுப்பதற்காக பரவியிருக்கிறது" என்று நாரதர் சொன்னார்.

51—52. அதனைக்கேட்டு மிக்கபாக்கியமுள்ள வஸுதேவரும் தேவகியும் மிகவும் ஆச்சர்யத்தை அடைந்து மோஹத்தை விட்டு ஜ்ஞானத்தையடைந்தார்கள். இந்தப் புண்ணியமான இதிஹாஸத்தை எவன் ச்ரத்தையுடன் மனத்தில் தரிக்கிறானோ, அவன் இந்த ஜன்மத்திலேயே மோஹத்தைவிட்டு ப்ரஹ்மஸ்வரூபத்தை அடைவான்.

# அத்யாயம்—6

## தேவர்கள் கிருஷ்ணனை வைகுண்டத்திற்கு அழைத்தது.

பின்பு ப்ரஹ்மதேவர், ஸனகர்முதலியவர்கள், ப்ரஜாபதிகள், ஸகலப்ரஜைகளுக்கும் அதிபதியான பரமசிவன், அவருடைய கணங்கள், இந்திரன். மருத்துகள், ஆதித்தியர்கள், வஸுக்கள், அச்வினிதேவர்கள், ரிபுக்கள், அங்கிரஸ்ஸுக்கள் ருத்திரர்கள், விச்வேதேவர்கள், ஸாத்தியர்கள், கந்தவர்கள், அப்ஸரஸுகள், நாகர்கள், ஸித்தர்கள், சாரணர்கள், குஹ்யகர்கள், ரிஷிகள், பித்ருக்கள், வித்யாதரர்கள், கின்னரர்கள் ஆகியஎல்லோரும் கிருஷ்ணனைத்தர்சிக்கவேண்டுமென்ற விருப்பத்துடன் த்வாரகாநகரஞ் சென்றார்கள். மேற்காட்டிய தேவர்கள் அடிக்கடி ஸ்ரீ மந்நாராயணனைத்தர்சித்தவர்களானாலும் பகவான்கிருஷ்ணனாக அவதரித்து ஜனங்களுக்கு ஸந்தோஷத்தைக்கொடுத்துஸகல ஜனங்களுடைய பாபத்தை நிவர்த்திக்கும் தம்முடையகீர்த்தியைப்பரவச்செய்து கொண்டிருப்பதால் அந்த ஸ்வரூபத்தைத் தர்சிக்கவிரும்பி ஸகல ஸம்பத்துக்களால்நிறைந்தத்வாரகா நகரம்வந்து ஸ்ரீகிருஷ்ணனுடையஸ்வரூபம்மிகவும்அத்புதமானதால் அதனைப்பார்த்தும் தேவர்களுக்குபோதுமென்றதிருப்தியுண்டாகவில்லை.மேலுமிந்த தேவர்கள் தேவலோகத்திலுண்டான புஷ்பமாலைகளால் பகவானைப்பூஜித்து (கிருஷ்ணனுடையசரிரம்மறையும்படிபுஷ்பங்களைச் சாத்தி)விசித்திரமானபதங்கள். அர்த்தங்கள் இவைகளுள்ளச்லோகங்களைச் சொல்லிஜகநீசனுகியகிருஷ்ணனைபின்வருமாறுஸ்தோத்திரஞ்செய்தார்கள்.

7—19. "ஓ நாத! கர்மமாகிற பாசத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக ஜனங்கள் உம்மிடத்திலே மனத்தைச் செலுத்தி உம்முடைய பாதாரவிந்தத்தை ஹிருதயத்தில் த்யானிக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதத்தை புத்தி இந்திரியம், ப்ராணன், மனஸ்,வாக்கு இவைகளுடன்நாங்கள் நமஸ்கரிக்கிறோம் (கைகள், கால்கள், முழங்கால், மார்பு, தலை, கண்கள், மனஸ், வாக்கு, இவைகளால் நமஸ்கரிப்பதே அஷ்டாங்க நமஸ்காரம் என்று சொல்லப்படுகிறது. யோகிகள், பகவானை ஹிருதயத்தில் மாத்திரம் பார்க்கிறார்கள். நாங்கள் நேரில்பார்க்கிறோம். அதனால்

எங்களுடைய பாக்யம் அதிகமென்று கருத்து.) ஒன்றாலும் ஜயிக்கப்படாதவரே! நீர் ஆவரணமற்ற ஆத்மலோகத்தில் ரமித்துக்கொண்டிருப்பவர். ஆசை முதலியவைகள் உமக்கில்லை, நீர் மாயையின் குணங்களுக்கு அதிபதியாகவிருப்பவர்; ஆனதால் முக்குண ஸ்வரூபமான மாயயைக்கொண்டு இந்த ப்ரபஞ்சத்தைத் தம்மிடத்தில் ஸ்ருஷ்டித்து ஸம்ரக்ஷித்து, ஸம்ஹரிக்கிறீர். அப்படிப்பட்டப்ரபஞ்சம் மனத்தாலும் நினைக்கமுடியாததாகவிருக்கிறது. நீர் மாயைக்கு அதிபதியானதால் உமக்குக் கர்மபந்தமில்லை. (நீர் கர்மங்களைச் செய்துகொண்டிருந்தாலும் ஆத்மாராமராகையால் முமுக்ஷுக்கள் உம்மை த்யானிக்கிறார்கள் என்று கருத்து) எல்லாராலும் ஸ்துதிக்கக்கூடியவரே! உம்முடையசரிதங்களை ச்ரத்தையுடன்கேட்பதாலும், உம்முடையமூர்த்தியைத்யானிப்பதாலும், ஜனங்கள் த்தர்களாவதுபோல உபாஸனை, சாஸ்திரம், அத்தியயனம், தானம், தபஸ், யாகம் முதலியவைகளைச்செய்வதால் அப்படி சுத்தர்களாக ஆகிறதில்லை (எல்லோரையும் பரிசுத்தப்படுத்துவதற்காகவே கர்மங்களைச்செய்து கீர்த்தியை லோகத்தில் பரவச்செய்கிறீர். என்று கருத்து.) ஓ பகவன்! உம்முடைய பாதத்தை மஹர்ஷிகள் மோக்ஷத்தை அடையவிரும்பி மிக்கப்ரேமையுடன் ஹிருதயத்தில் த்யானிக்கிறார்கள். பக்தர்கள் உமக்குச்சமமான ஐச்வர்யத்தை அடையவிரும்பி வாஸுதேவர் முதலிய வ்யூஹோபாஸனையில் பூஜிக்கிறார்கள். அவர்களிலும் ஆத்மாவின் உண்மையை அறிந்த சிலர் ஸ்வர்க்கத்தைத்தாண்டி வைகுண்டத்தை அடைவதற்காக மூன்று காலங்களில் பூஜிக்கிறார்கள். அப்படிப்பட்ட உம்முடைய பாதமானது எங்களுடைய விஷய வாஸனைகளை நாசஞ்செய்யட்டும். ஓ ஈச! ப்ராஹ்மணர்கள், ஆஹவனீயம் முதலிய யாகாக்னியில் ஹோமஞ்செய்வதற்காக ஹவிஸ்ஸை இருகைகளால் எடுத்துக்கொண்டு வேதத்தில் சொல்லியபடி இந்திரன் முதலிய ஸ்வரூபமாக எதனை த்யானிக்கிறார்களோ, (எந்த தேவதையை யுத்தேசித்து ஹவிஸ்ஸை எடுத்துக்கொள்ளுகிறார்களோ, அந்த தேவதையைத் தியானஞ்செய்து பின்பு வஷட் என்று சொல்ல வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது) யோகிகள் உம்முடைய மாயயை(அணிமா முதலியவை) அறியவிரும்பி ஆத்மயோகத்தில் எதனை த்யானிக்கிறார்களோ, பாகவதர்கள் (முக்தர்கள்) எதனை ஸேவிக்கிறார்களோ, அந்த உம்முடைய பாதமானது எங்களுடைய

விஷய வாஸனைகளை நாசம் செய்யட்டும். நீர் பக்தர்களால் ஸமர்பிக்கப்பட்ட வனமாலையை தரிக்கிறீர். உம்முடைய மார்பில் வஸிக்கும் லக்ஷ்மிதேவி ஸபத்னிபோல் அந்த வனமாலையினிடத்தில் விரோதபுத்தி வைக்கிறாள். ஆனாலும் நீர் அந்த லக்ஷ்மியை லக்ஷ்யஞ்செய்யாமல் பக்தர்களால் ஸமர்பிக்கபட்டதென்ற காரணத்தால் அந்த மாலையை தரித்து அதனால் பூஜிக்கப்பட்டவராக ஆகிறீர். அப்படிப்பட்ட உம்முடைய பாதம் எங்களுடைய விஷய வாஸனைகளை நாசஞ்செய்யட்டும். ஓ பகவன்! உம்முடைய பாதமானது சரணமடைகிற எங்களுடைய பாபத்தை நிவர்த்திக்கட்டும். அது பலிச்சக்கிரவர்த்தியை நிக்ரஹித்தபொழுது லோகங்களை மூன்றடிகளாக அளந்தது; இரண்டாவது அடியில் ஸத்ய லோகஞ் சென்றதால் விஜயத்வஜம்போல உயரமாக விருந்தது; மூன்று வகையாக ப்ரவஹித்த கங்காநதியுள்ளது; அஸுரஸைன்யத்திற்கு பயத்தையும் தேவஸைன்யத்திற்கு ஸந்தோஷத்தையுமுண்டுபண்ணியது; தேவர்களுக்கு ஸ்வர்க்கத்தைக் கொடுத்தது; அஸுரர்களை நிக்கிரஹித்தது; ஓ பகவன்! நீர் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களுக்கும் மேலானவர்; புருஷோத்தமர்; காலஸ்வரூபி; அப்படிப்பட்ட உமக்கு ப்ரஹ்மா முதலிய ஸகல ப்ராணிகளும் மூக்குக்கயிற்றால் அடக்கப்படும் எருதுகள்போல் வசமானவர்களேயாம். அந்த ப்ரஹ்மதேவர் முதலியவர்கள் ஒருவருக்கொருவர் (ராகத்வேஷத்தால்) யுத்தஞ்செய்தாலும், அவர்கள் ஜயிப்பதும் அபஜயத்தை அடைவதும் உம்முடைய அதீனமேயாம். அப்படிப்பட்ட உம்முடைய பாதம் எங்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கட்டும். மேலும் ஜகத்தைப் படைப்பது, ரக்ஷிப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய இவைகளுக்கு நீர் காரணராகவிருக்கிறீர். ப்ரகிருதி, ஜீவன், மஹத்தத்வம் ஆகிய இவைகளுக்கு நியந்தாவாகிய காலமென்று உம்மைப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அந்த காலமோ ஸம்வத்ஸர ஸ்வரூபமானது; மூன்று நாபியுள்ளது; (மூன்று சாதுர்மாஸ்யங்கள்) எல்லாவற்றையும் ஸம்ஹரிப்பதில் ப்ரவிருத்தித்தது; மிக்க வேகமுள்ளது; அந்த ஸ்வரூபியுமாகவிருப்பதால் நீர் புருஷோத்தமர். புருஷன் உம்மிடமிருந்து சக்தியை அடைந்து மாயாஸம்பத்தால் ஜகத்தின் கர்ப்பம்போன்ற மஹத்தத்வத்தைத் தரித்தான். அந்த மஹத் அந்தமாயாஸம்பந்தத்தால் ஆவரணங்களுள்ளதும், ஸ்வர்ணம்போல ப்ரகாசிப்பது

மான அண்டகோசத்தை யுண்டுபண்ணிற்று. ஆனதால் ஸ்தாவரம் ஜங்கமம் ஆகிய எல்லாவற்றிற்கும் நீர் அதிபதி; ஓ இந்திரியங்களுக்கு அதிபதியே! மாயயின் குணத்தால் விருத்தியடைந்த (இந்திரியங்களால் கொண்டுவரப்பட்ட) சப்தம் முதலிய விஷயங்களை அநுபவித்தாலும் அவைகளில் நீர் ஸம்பந்தப்படுகிறதில்லை. உம்மைத் தவிர மற்றவர்கள் (யோகிகள்) உண்மையில் இல்லாதவைகளானாலும் சப்தம் முதலிய விஷயங்களைக்கண்டு பயப்படுகிறார்கள். மன்மதனுடைய பாணங்கள்போன்ற பதினாறு ஆயிரம் ஸ்திரீகள் புன்சிரிப்புள்ள பார்வையால் தங்களுடைய அபிப்பிராயத்தைக் காண்பிவித்து அதனால் அழகிய புருவங்களால் மன்மத தாபத்தை உண்டுபண்ணக்கூடியவர்களாக விருந்தும் உம்மை மோஹிக்கச்செய்ய சக்தியற்றவர்களாக ஆனார்கள். ஆனதால் நீர் விஷயங்களால் ஜயிக்கப்படாதவர். அவரவர்களுக்குரிய ஆச்ரமதர்மங்களை அனுஷ்டித்துக்கொண்டிருக்கும் ஜனங்கள் வேதங்களால் வர்ணிக்கப்படும் உம்முடைய கீர்த்தியை காதுகளாலும் உம்முடைய பாதத்திலுண்டாகிய கங்காதீர்த்தத்தை சரீரத்தாலும் ஸேவிக்கிறார்கள். ஆனதால் உம்முடைய கதாமிருதமாகிய ஜலமுள்ள நதிகளும் (கீர்த்தி) உம்முடைய பாதத்திலிருந்து உண்டான கங்கையும் மூவுலகத்தின் பாபத்தைப் போக்கடிக்கக்கின்றன" என்று ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

20—27. இம்மாதிரி ப்ரஹ்மதேவர் தேவர்களுடன் பகவானை ஸ்தோத்திரஞ்செய்து ஆகாயத்திலிருந்துகொண்டு கோவிந்தரை நோக்கி "ஓ ஸகல ஜகத்ஸ்வரூபியாக விருக்கும் ப்ரபுவே! பூமியின் சுமையை நிவர்த்திக்கவேண்டுமென்று முந்தி நான் உம்மிடத்தில் தெரிவித்துக்கொண்டேன். அதனை நீர் அங்கீகரித்து அப்படியே செய்தீர். ஸத்திய ப்ரதிஜ்ஞர்களான ஸாதுக்களிடத்தில் தர்மத்தை ஸ்தாபித்தீர். ஸகல ஜகத்தின் பாபத்தை நிவர்த்திக்கும் சுத்தமான கீர்த்தியை எல்லா திக்குகளிலும் பரவச்செய்தீர். மேலும் நீர் அத்புதமான ரூபத்துடன் யதுவம்சத்தில் அவதரித்து அத்புதமான செய்கைகளை ஜகத்தின் க்ஷேமத்திற்காகச் செய்தீர். ஓ ஈச! அந்த சரிதங்களைக் கலியுகத்தில் ஸாதுக்கள் வாக்கினால் உச்சரித்தும் பிறர் சொல்லக்கேட்டும் சுத்தர்களாவார்கள். ஓ புருஷோத்தம! நீர் யதுவம்சத்தில் அவதரித்து 125 வருஷங்களாயின. எல்லாவற்றிற்

கும் ஆதாரமாக விருக்கும் ப்ரபுவே! தேவர்களுடைய கார்யத்தில் இப்பொழுது ஒன்றும் பாக்கியில்லை. ப்ராஹ்மண சாபத்தால் இந்த யதுவம்சமானது பெரும்பாலும் நாசமடைந்தது. ஓ வைகுண்ட! உமக்கு இஷ்டமிருக்குமானால் உம்முடைய ஸ்தானத்தையடைந்து ஸேவகர்களான எங்களைக் காப்பாற்றும்' என்று ப்ரார்த்தித்தார்.

28—33. மாயபால் மனிதவடிவங் கொண்டவராகிய பகவான் ப்ரஹ்மா முதலிய தேவர்களால் இம்மாதிரி ஸ்துதிக்கப்பெற்று ப்ரஹ்மதேவரைநோக்கி "ஓ ப்ரஹ்மதேவரே! நீர் சொல்வது யாவும் ஏற்கனவே என்னால் ஆலோசிக்கப்பட்டவைதான். தேவர்களாகிய உங்களுடைய எல்லாகார்யங்களும் செய்யப்பட்டன. பூமியின் சுமை நிவர்த்திக்கப்பட்டது. ஆனாலு, இந்த யதுவம்சமானது பராக்கிரமத்தாலும், ஐச்வர்யத்தாலும், கர்வங்கொண்டு மர்யாதை தவறி கரைபுரண்ட ஸமுத்திரம்போல் லோகத்தை உபத்திரவிக்கும்போலிருக்கிறது; மிக்க கர்வங்கொண்டவர்களான யாதவர்களுடைய குலத்தை நான் நாசம்செய்யாமல் வைகுண்டம் சென்றால் யாதவர்களால் இந்த லோகம் நாசம் பண்ணப்படும். ப்ராஹ்மண சாபத்தால் இந்த குலத்திற்கு நாசமும் ஆரம்பித்திருக்கிறது. இதனை நாசம் செய்தபின் வைகுண்டம் வருகிறேன்" என்றார். லோகநாதனாகிய இந்த பகவானுடைய வார்த்தையைக்கேட்டு ப்ரஹ்மதேவர் அவரை நமஸ்கரித்து தேவர்களுடன் தமது லோகஞ்சென்றார்.

34—40. பின்பு த்வாரகா நகரத்தில் மிக்க உத்பாதங்கள் (அபசகுனங்கள்) காணப்பட்டன. அவைகளைப்பார்த்து யாதவர்களுக்குட் வயது முதிர்ந்தவர்கள் ஸ்ரீகிருஷ்ணனிடஞ்சென்றார்கள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் அவர்களை நோக்கி "ஓ பெரியோர்களே! நம்முடைய நகரத்தில் எங்கும் மிக்க உத்பாதங்கள் காணப்படுகின்றன. மேலும் நம்முடைய குலத்திற்கு ப்ராஹ்மணசாபம் நேரிட்டிருக்கிறது, அது நிவர்த்திக்கமுடியாதது; நமக்கு பிழைத்திருக்கவேண்டுமென்ற விருப்பமிருக்குமானால் இவ்விடத்தில் வஸிக்கக்கூடாது, மிக்க புண்ணியகரமான ப்ரபாஸ தீர்த்தத்திற்கு இன்றைக்கே போவோம். தாமதிக்கவேண்டாம் முன்னொருகால் சந்திரன் தக்ஷருடைய சாபத்தால் ராஜயக்ஷ்மா என்ற ரோகத்தையடைந்து அதனை நிவர்த்தித்துகொள்வதற்காக ப்ரபாஸ தீர்த்தஞ்

சென்று அதில் ஸ்நானஞ் செய்தார். அதனால் அவருக்கு அந்த வியாதி நிவர்த்தியானது மன்றி கலைகளும் விருத்தியாயின. நாமும் அந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பிதிருக்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பணஞ்செய்து ப்ராஹ்மணர்களுக்குப்பலவகையான ருசியான அன்னங்களைக்கொடுத்து உத்தம பாத்திரங்களில் ச்ரத்தையுடன் தானங்களைச்செய்வோம். கப்பலால் ஸமுத்திரத்தைத் தாண்டுவதுபோல வருகிற ஆபத்தை மேற்காட்டிய தர்மத்தால் நிவர்த்தித்துக்கொள்வோம்'' என்று சொன்னார். அதனைக்கேட்ட யாதவர்கள் ப்ரபாஸதீர்த்தம் செல்லுகிறதென்ற நிச்சயத்துடன் வண்டிகளைப்பூட்டினார்கள்.

41—51. அதனைக்கண்ட உத்தவர் பகவானுடைய வார்த்தையைக்கேட்டும் கோரமான உத்பாதங்களைப்பார்த்தும் ரஹஸ்யத்தில் கிருஷ்ணனுடைய ஸமீபஞ்சென்று ஜகத்திற்கு அதிபதிகளாகிய ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் அதிபதியாகிய பகவானுடைய பாதங்களில் நமஸ்கரித்து "ஓ தேவ! தேவர்களுக்கும் அதிபதியே! யோகிகளுக்கு அதிபதியே! நாமங்களைக் கேட்பதாலும், உச்சரிப்பதாலும் புண்ணியத்தைக் கொடுப்பவரே! நீர் ப்ராஹ்மண சாபத்தை நிவர்த்திக்கும் ஸாமர்த்தியமுள்ளவரானாலும் அப்படிச் செய்யாமலிருப்பதால் இந்த யதுகுலத்தை நாசஞ்செய்து வைகுண்டம் செல்வீரென்பதில் ஸந்தேஹம் இல்லை. ஓ கேசவ! உம்முடைய பாதாரவிந்தத்தை அரைக்ஷண மேனும் விட்டுப்பிரிந்திருக்க எனக்கிஷ்டமில்லை. ஆனதால் வைகுண்டத்திற்கு என்னையும் அழைத்துப்போகவேண்டும். உம்முடைய சரிதமானது ஜனங்களுக்கு மிக்க க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. காதிற்கு அமிருதமாகிய உம்முடைய கதையைப்பானம் பண்ணின ஜனங்கள் மற்ற விஷயங்களில் ஆசைப்படமாட்டார்கள். அப்படியிருக்க படுப்பது, உட்காருவது, ஸஞ்சரிப்பது, ஸ்நானஞ்செய்வது, விளையாடுவது, போஜனஞ்செய்வது இவைகளில் உம்முடன் கூடவிருந்து உம்மை ஸேவித்த பக்தர்களான நாங்கள் உம்மை எப்படி விட்டுப் பிரிவோம்? உம்மால் அனுபவிக்கப்பட்டு நிர்மால்யமான மாலை, சந்தனம், ஆபரணம் இவைகளைத் தரித்தும் நீர் புஜித்து எஞ்சிய அன்னத்தை புஜித்தும் உம்மை ஸேவிக்கும் நாங்கள் மாயயை ஜயிப்போம். காற்றை ஆஹாரமாய்க்கொண்ட மஹர்ஷிகளும், ஊர்

த்வரேதஸ்ஸுள்ளவர்களும், சாந்தர்களும் சுத்தர்களுமான ஸந்நியாஸிகள் உம்முடைய ப்ரஹ்மஸ்வரூபத்தை யடைகிறார்கள். ஓ முக்கிய யோகியே! கர்மமார்க்கத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் நாங்கள் உம்முடைய பக்தர்களுடன் உம்முடைய சரிதங்களைச் சொல்லிக்கொண்டு ஸம்ஸாரத்தை எளிதில் தாண்டுகிறோம். மேலும் உம்முடைய நடை, சிறிப்புள்ளபார்வை, விளையாட்டு, இவைகளை நினைத்துக்கொண்டும் உம்மால் சொல்லப்பட்ட வார்த்தைகளை உச்சரித்துக்கொண்டும் ஸம்ஸாரத்தை நிவர்த்தித்துக்கொள்ளுவோம்.' என்று கேட்டுக்கொண்டார்.

52. அதனைக்கேட்ட தேவகியின் புத்திரராகிய பகவான் தமக்கு முக்கிய பக்தரும், பிரியரும், வேலைக்காரருமாகிய உத்தவரை நோக்கி பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்.

---

## அத்யாயம்—7.

### பகவான் உத்தவருக்கு உபதேசித்தது.

ஸ்ரீகிருஷ்ணன் உத்தவரைநோக்கி "ஓ மிகுந்த அதிருஷ்டமுள்ளவரே! நீர் எதனைச் சொன்னீரோ அது உண்மையே. ப்ரஹ்மதேவர், பரமசிவன், லோகபாலர்கள் ஆகிய எல்லோரும் என்னுடைய வரவை எதிர்பார்த்திருக்கிறார்கள். ப்ரஹ்மதேவரால் ப்ரார்த்திக்கப்பட்டு எதற்காக நான் பூமியில் அவதரித்தேனே அந்த தேவர்களுடைய கார்யம் யாவும் முடிந்துவிட்டது. இந்த யாதவகுலமானது ப்ராஹ்மண சாபத்தால் எரிக்கப்பட்டிருப்பதால் யாதவர்கள் ஒருவருக்கொருவர் யுத்தம்செய்து நாசமடைவார்கள். இதுமுதல் ஏழாவது நாளில் ஸமுத்திரம் இந்தப்பட்டணத்தை மூழ்கச்செய்யும். இந்தலோகத்தை என்றையதினம் நான்விட்டு மேல்லோகம் செல்லுகிறேனே, அன்றையதினமுதல் இவ்வுலகம் மங்களமற்றதாகிவிடும். ஓ ஸாதுவே! சீக்கிரத்தில் கலிபுருஷன் உலகத்தில் வியாபித்துவிடுவான். ஆனதால் நீர் இவ்விடத்தில் வஸிக்கவேண்டாம். நான் பூமியைவிட்டுச் சென்றபின் கலியுகத்தில் ஜனங்கள் அதர்மத்தைச் செய்வதிலேயே நோக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். நீர் சரீரத்திலும், பந்துக்களிடத்திலும் ஸ்நேஹத்தை யொழித்து

என்னிடத்தில் மனதைச்செலுத்தி ஸமபுத்தியுள்ளவராகி பூமியில் ஸஞ்சரியும். மனத்தாலும், வாக்கினாலும், கண்களாலும், காதுகளாலும் எது க்ரஹிக்கப்படுகிறதோ அது மாயாமயமென்றும், நிலையற்றதென்றும் தெரிந்துகொள்ளும். விஷயங்களில் ஆசையுள்ள புருஷனுக்கு உண்டாகும் பேதபுத்தியே ப்ரமமானது. அதுவே குணத்தையும் தோஷத்தையும் அடைகிறது. இது குணம், இதுதோஷம் என்ற பேதபுத்தியுள்ள புருஷனை யுத்தேசித்து கர்மம், அகர்மம், விகர்மம் இவைகள் வேதங்களால் விதிக்கப்பட்டனவேயாம். ஆனதால் இந்திரியங்களையும் மனதையும் அடக்கிக்கொண்டு இந்த விஸ்தாரமான ஜகத்தை ஆத்மஸ்வரூபமான நானாகவும் பார்க்கவேண்டும். வேதங்களின் தாத்பர்யத்தைத் தெரிந்துகொள்வது, அவைகளின் அர்த்தத்தை அனுபவிப்பது ஆகிய இவைகளுடன் கூடியவனும், ஸகலப்பிராணிகளுக்கும் ஆத்மாவாகவிருப்பவனும் இந்த ஆத்மானுபவத்தாலேயே ஸந்தோஷமடைந்தவனுமான உமக்கு விக்னங்கள் ஏற்படாது. ஜ்ஞானியாக விருப்பவன் விதி நிஷேதங்களைக் கடந்தவனானாலும் முந்திய அப்பியாஸத்தால் கெட்ட கார்யங்களைச் செய்யமாட்டான். ஆனால் அதனைச்செய்தால் தோஷம் வரும் என்கிற எண்ணத்தால் செய்கிறதில்லை என்பதில்லை. அதுபோலவே வேதத்திற்சொல்லிய நல்ல கர்மங்களை அனுஷ்டிப்பான். ஆனால் இதைச்செய்தால் குணமுண்டு என்கிற எண்ணத்தால் செய்கிறதில்லை. அவனுடைய நடை சிறுவனுடைய நடைபோன்றதேயாம். (ஸங்கல்ப விகல்பமற்றது என்று தாத்பர்யம்.) இப்படி ஜ்ஞானம், விஜ்ஞானம் இவைகளுடைய நிச்சயமுள்ளவனாகி ஸகல ப்ராணிகளிடத்திலும் ஸ்நேஹத்துடன் சாந்தியுள்ளவனாக ஜகத்தை என்னுடைய ஸ்வரூபமென்று நினைப்பவன் திரும்பவும் ஸம்ஸாரத்தை அடையமாட்டான்" என்று சொன்னார்.

13—18. அதனைக்கேட்ட மஹா பாகவதராகிய உத்தவர் ஆத்மதத்வத்தை யறிய விரும்பி பகவானை நமஸ்கரித்து, ஓ யோகேச! யோகத்தை யறிந்தவர்களுக்கு நிதிபாகவிருப்பவரே! யோகத்தால் ப்ரகாசிக்கும் ஸ்வரூபமுள்ளவரே! லோகத்தை யுண்டுபண்ணினவரே! எல்லாவற்றையும் விட்டுவிடவேண்டுமென்று என்னுடைய க்ஷேமத்திற்காக உபதேசித்தீரே; விஷயங்களிலேயே நோக்கமுள்ளவர்களால் எப்படி எல்லாம் விடப்படும்? அதிலும் உம்மிடத்

தில் பக்திசெய்யாதவர்களால் விஷயங்களைவிட முடியாது என்று நான் யோசிக்கிறேன். உம்முடைய மாயயால் ஏற்பட்ட தேஹத்தில் நான் என்ற அபிமானமும் புத்திரன் முதலியவர்களிடத்தில் என்னுடையது என்ற அபிமானமும் வெகுநாளாக உண்டாகி வேரூன்றி இருக்கிறது. அதனை விட்டு விடவேண்டுமென்று நீர் உபதேசித்தீரே; எப்படி சீக்கிரத்தில் அந்த அபிமானத்தை யொழிக்கமுடியும்? ஆனதால் அதன் உபாயத்தை ஸேவகனாகிய எனக்கு உபதேசிக்க வேண்டும். ப்ரஹ்மா முதலிய ஸகலப் பிராணிகளும் உம்முடைய மாயயால் மோஹித்து விஷயங்களையே புருஷார்த்தமென்று நினைத்திருக்கிறார்கள். தாமாகப் பிரகாசிப்பதும் ஸத்தியமுமான உம்முடைய ஸ்வரூபத்தைப்பற்றிச் சொல்வதற்கு உம்மைவிட்டவேறொருவராலும் முடியாது. நீர் தோஷமற்றவர்; தேசத்தாலும் காலத்தாலும் அளவிடக்கூடாதவர்; எல்லாவற்றையும் அறிந்தவர்; ஈச்வரன்; அழிவற்ற வைகுண்டத்தில் வஸிப்பவர்; நர நாராயணராக அவதரித்தவர்; அப்படிப்பட்ட உம்மை இந்த சரீரத்தில் துக்கங்களால் தபிக்கப்பட்டு நிர்வேதத்தை யடைந்த நான் சரணமடைகிறேன் என்று ப்ரார்த்தித்தார். (லோகத்தில் சிலர் கெட்ட நடையுள்ளவர்களாக விருப்பார்கள்; சிலர் மற்றவர்களால் ஸேவிக்கப்பட்டும் பயனைக்கொடுக்கும் காலத்தில் அழிந்துபோவார்கள்; சிலர் மூடர்கள்; சிலர் பிறரைக் காப்பாற்றுவதில் சக்தியில்லாதவர்கள்; சிலர் தன்னுடைய ஸ்தானத்தைவிட்டு நழுகியவர்கள்; ஆனதால் அவர்களால் என்ன பிரயோஜனம்? இம்மாதிரியான குறைகள் உம்மிடத்தில் ஒன்றுமில்லை என்று இந்த ச்லோகத்தில் காட்டிய ஐந்து விசேஷணங்களால் காட்டப்பட்டது.)

19—31. அதனைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணன் உத்தவரை நோக்கி "லோகத்தின் உண்மையை பரீக்ஷிப்பவர்களான சில மஹர்ஷிகள் பெரும்பாலும் ஆத்மாவைத் தானாகவே விஷய வாஸனைகளிலிருந்து நிவர்த்தியடையும்படி செய்கிறார்கள். (பசு முதலிய சரீரங்களிலும்) ஆத்மாவிற்கு ஆத்மாவே குருவாகிறார். மனிதன்விஷயத்தில் ஸம்சயமேயில்லை. ப்ரத்தியக்ஷம் அனுமானம் இவைகளைக்கொண்டு புருஷன் க்ஷேமத்தை யடைகிறான். மனுஷ்ய ஜன்மத்தில் ஸாங்க்யம், யோகம் இவைகளை அறிந்த விவேகிகள் என்னை ஸகலசக்தியுள்ளவனென்று நன்றாய்த் தெரிந்துகொள்வார்கள். ஒன்று இரண்டு

காலுள்ளது, மூன்றுகால்களுள்ளது, நான்குகால்களுள்ளது அநேக கால்கள் உள்ளது, கால்களில்லாதது என்ற பலவகையான சரீரங்கள் ஸிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் புருஷ சரீரமே எனக்குப் பிரியமானது. இந்தப் புருஷ சரீரத்தில் அஹங்காரம் முதலியவைகளைக்காட்டிலும் வேறாகவிருக்கும் என்னை விவேகிகள் காரணங்களைக்கொண்டு அனுமான ப்ரமாணத்தால் தேடுகிறார்கள். ஜடமாகிய புத்திமுதலியவைகளுக்கு ப்ரகாசமானது ஸ்வப்ரகாசனாகிய ஈச்வரனால்தான் உண்டாகவேண்டும். ஆனதால் அவைகளுக்கு ஸாமர்த்தியத்தைக் கொடுக்கும் ஈச்வரன் ஒருவர் இருக்கிறார் என்ற அனுமானப்ரமாணத்தால் தெரிந்து கொள்ளுகிறார்கள். மிக்க தேஜஸ்ஸுள்ள யதுவிற்கும் அவதூதருக்கும் ஏற்பட்ட ஸம்வாதமாகிய ஒரு இதிஹாஸத்தை இந்த விஷயத்தில் உதாஹரணமாகச் சொல்லுகிறேன். முன்னொருகால் தர்மங்களை யறிந்தவரான யதுவென்பவர் ஒருவிடத்திலும் பயமில்லாமல் ஸஞ்சரிப்பவரும், விவேகியும் யௌவன வயதுள்ளவரும், அவதூதருமான ஒருப்ராஹ்மணனைக்கண்டு "ஒப்ராஹ்மண! தர்மங்களைச் செய்யாதவராகிய உமக்கு இம்மாதிரியான ஸூக்ஷ்ம புத்தி எப்படி யுண்டாயிற்று? இந்த புத்தியையடைந்த வித்வானாகிய நீர் சிறுவன் போல் ஸஞ்சரிக்கிறீரே; பெரும்பாலும் ஜனங்கள் தீர்க்கமான ஆயுஸ், கீர்த்தி, ஐச்வர்யம் இவைகளை அடைவதற்காக அர்த்தம், காமம் இவைகளை விசாரிப்பது மன்றி ஆத்மவிசாரமும் செய்கிறார்கள். நீர் மிகவும் ஸமர்த்தர்; வித்வான்; அழகிய சரீரமுள்ளவர்; ஸ்வல்பமாகப் பேசுகிறீர்; ஒன்றையும் செய்கிறதில்லை; ஒன்றையும் விரும்புகிறதில்லை; எல்லாவற்றையும் அறிந்திருந்தாலும் மூடன்போலவும், ஸாமர்த்தியமுள்ளவரானாலும் பயித்தியங்கொண்டவர்போலவும், அழகுள்ளவரானாலும் பிசாசம் போலவும் ஸஞ்சரிக்கிறீர். மேலும் ஸகல ஜனங்களும் காமம் லோபம் இவைகளாலுண்டாகிய அக்னியால் எறிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள். நீர்மாத்திரம் கங்காஜலத்தில் மூழ்கிய யானைபோல தாபத்தை யடையாமல் ஆனந்தத்தை யடைந்திருக்கிறீர். புத்திரன், மித்திரன், களத்திரம் முதலிய பந்துக்களில்லாதவரும், விஷயபோகங்களில்லாதவருமான உமக்கு இவ்வளவு ஆனந்தம் உண்டாவதற்கு என்ன காரணம்? அதைச்சொல்லவேண்டும்" என்று கேட்டு அவரைப் பூஜித்து வணக்கத்துடன் அவர் பக்கத்தில் நின்றார்.

32—38. அதனைக்கேட்ட அந்த ப்ராஹ்மணன் யதுவை நோக்கி "ஓ அரசனே! என்னுடைய புத்தியால் அநேகர்களை ஆசார்யர்களாக ஆச்ரயித்தேன். அவர்களிடமிருந்து சிலவிஷயங்களைத் தெரிந்துகொண்டு முக்தனாக ஸஞ்சரிக்கிறேன். அவர்களைச் சொல்லுகிறேன் கேளும். பூமி, வாயு, ஆகாயம், ஜலம், அக்னி, சந்திரன் ஸூர்யன், மாடப்புறா, மலைப்பாம்பு, ஸமுத்திரம், விளக்கு விட்டிற் பூச்சி, தேனீ, யானை, வேடன், மான், மத்ஸயம், பிங்களாயென்பவள், குறரம் என்ற பறவை, சிறுவன், சிறுபெண், பாணத்தைச் செய்யும் கொல்லன் ஸர்ப்பம், பட்டுப்பூச்சி, குளவி ஆகிய 24குருக்களை நான் ஆச்ரயித்தேன். இவைகளுடைய ஸ்வபாவத்திலிருந்து எவைகளை க்ரஹித்துக்கொள்ளலாமோ அவைகளை அப்யஸித்துக்கொண்டேன். ஓ யயாதியின் புத்திரராகிய யதுவே! எதனிடமிருந்து எதை எப்படிக் கற்றுக்கொண்டேனே அதனைச்சொல்லுகிறேன். தெரிந்துகொள்ளும். பூமியானது ஸகலப் பிராணிகளால் மிதிப்பது முதலியவைகளைச்செய்து உபத்திரவிக்கப் பட்டாலும் அந்த ஹிம்ஸையை எப்படி ஸஹிக்கிறதோ, அப்படி பிராணிகளால் புருஷன் உபத்திரவிக்கப்பட்டாலும் "அவர்கள் தைவத்தால் தூண்டப்பட்டு நம்மை உபத்திரவிக்கிறார்களேயொழிய தாமாக உபத்திரவிக்கவில்லை" என்று நினைத்து தம்முடையதர்மத்திலிருந்து ஒருபொழுதும் தவறக்கூடாதென்று தெரிந்துகொண்டேன். மேலும் மலையானது எப்படி பிறருடைய உப்யோகத்திற்காகவே உண்டாகிறதோ, கொடி, மலையருவி முதலியவைகளை பிறருக்கே எப்படி உபயோகப்படுத்துகிறதோ, மரங்கள் பழம் இலை, நிழல், கிளை, கட்டை முதலியவைகளால் பிறருக்கே எப்படி உபயோகப்படுகிறதோ, அதுபோல பலவகையாலும் பிறருக்கு உபகரிக்கவேண்டுமென்ற குணத்தை பூமியின் அம்சமாகிய மரம், மலை இவைகளிடமிருந்து ஸாதுவாக விருப்பவன் தெரிந்துகொள்ள வேண்டும்.

39—41. ப்ராணன் சரீரத்தைவிட்டு வெளியிற் செல்லாமலிருப்பதற்கு ஆஹாரமாத்திரம் அபேக்ஷிக்கிறதே யொழிய இந்திரிய விஷயங்களான ரூபம் முதலியவைகளை அபேக்ஷிக்கிறதில்லை. அதுபோல முனியாக விருப்பவன் தேஹதாரணத்துக்கு வேண்டிய ஆஹாரத்தைப் புஜித்து அதனால் ஸந்தோஷப்படவேண்டுமே

யல்லாமல் ரூபம், ரஸம் முதலியவைகளை விரும்பக்கூடாது. (அழகான ஸ்திரீகளைப் பார்ப்பது, இனிமையான கானத்தைக்கேட்பது முதலியவை கூடாதென்றும், ப்ராணதாரணத்தைச் செய்யாவிடில் மனம் போய்விடுமானதால் ஜ்ஞானம் நசிக்குமென்றும் கருத்து) அப்படி விஷயங்களில் ஆசைப்படுவானாகில் வாக்கு, மனம் இவைகள் விக்ஷேபத்தை அடையும். மேலும் வாயுவானது காட்டிலும், காட்டுத்தீயிலும் ஸம்பந்தப்படாமலிருப்பதுபோல் பல வகையான குணங்களுள்ள விஷயங்களில் ப்ரவேசித்தாலு யோகியானவன் அதன் தர்மங்களில் ஸம்பந்திக்கக்கூடாது. பின்னும் வாயு வாஸனை முதலியவைகளுடன் ஸம்பந்திப்பதுபோல் தோன்றினாலும் உண்மையில் எப்படி அந்தக் குணங்களுடன் ஸம்பந்தப்படுகிறதில்லையோ, அப்படி ஆத்மாவின் உண்மையை அறிந்த யோகியானவன் இந்த சரீரத்தில் ஆத்மா ப்ரவேசித்து பால்யம், யௌவனம் முதலிய அவஸ்தைகளை அடைந்தவன்போல் தோன்றினாலும் உண்மையில் ஆத்மாவிற்கு அதன் ஸம்பந்தமில்லையென்று தெரிந்து கொள்ளவேண்டியது.

42—43 ஆகாயமானது எங்கும் வ்யாபித்திருந்தாலும், ஒன்றிலும் ஸம்பந்தப்படாமலும் அளவிடக்கூடாமலும் எப்படி இருக்கிறதோ, அதுபோல ஆத்மா ப்ரஹ்மஸ்வரூபமாக எங்கும் வ்யாபித்திருப்பதால் ஸ்தாவர ஜங்கம ப்ராணிகளில் மறைந்திருந்தாலும் ஒன்றிலும் சேராதவரென்றும், அளவிடக்கூடாதவரென்றும் தெரிந்துகொள்ளவேண்டும். மேலும் வாயுவினால் தூண்டப்பட்ட மேகம் முதலியவைகளுடன் ஆகாயம் எப்படி ஸம்பந்தப்படுகிறதில்லையோ, அப்படி பூமி ஜலம், தேஜஸ் இவைகளைக்கொண்டு காலத்தால் ஸிருஷ்டிக்கப்பட்ட சரீரத்துடன் ஆத்மா ஸம்பந்திக்கிறதில்லை.

44. இயற்கையில் மலமற்றவனும் ஜனங்களிடத்தில் ப்ரியமுள்ளவனும், இனிமையாகப் பேசுகிறவனும், மனிதர்களை சுத்தப்படுத்துகிறவனுமாகிய யோகி ஜலம்போல் பார்ப்பது, தொடுவது சொல்வது ஆகிய இவைகளால் தோஷங்களை சுத்தப்படுத்துகிறான்.

45—47. மேலும் தேஜஸ்ஸுள்ளவனாகவும் (அதிக ஜ்ஞானத்தால்) மிக்க தபஸ்ஸால் ஜ்வலிப்பவனாகவும், பிறரால் அவமதிக்கமுடியாதவனாகவும், வயிற்றைப் பாத்திரமாகக்கொண்டவனாகவும் இருக்கும் யோகி (சேர்த்துவைத்துக்கொள்ளாதவன்) எல்லாவற்றையும் (ருசியுள்ளது, ருசியற்றது) புஜிப்பவனானாலும் பாப

த்தை அடையமாட்டான். அக்னி எல்லாவற்றையும் எரித்தாலும் அதனால் அக்னிக்கு தோஷமேற்படவில்லை அல்லவா? மேலும் முனியானவன் அக்னிபோல் சில ஸமயம் மறைந்தும், சில ஸமயம் வெளியில் தெரிந்தும் ஸஞ்சரிப்பான். க்ஷேமத்தை அடையவிரும்பியவர்கள் அவனை உபாஸிப்பார்கள். அப்பொழுது அவர்களால் கொடுக்கப்படும் அன்னத்தைப் புஜிக்கிறான். அதனால் அவர்களுடைய முன்செய்த பாபங்களும் (ஸஞ்சிதம்) வரும் பாபங்களும் (ஆகாமி) நிவர்த்தியடைகின்றன. பின்னும் அக்னி கட்டையில் பிடித்து ஜ்வலிக்கும்பொழுது கட்டை நீண்டதானால் அக்னியும் நீண்டதாகக்காணப்படுகிறது. கட்டை கோணலாகவிருந்தால் அக்னியும் அந்த வடிவமுள்ளதாகக்காணப்படுகிறது. ஆனால் உண்மையில் அக்னி ஒருவகையானதே. அப்படிப்போல ப்ரபுவாகிய ஈச்வரன் ப்ராஹ்மணன் சூத்திரன் முதலிய இந்த ஜகத்தைத் தம்முடைய மாயயால் படைத்து அதில் ப்ரவேசித்து சேஷ்டிக்கிறார். (மேலானவன் தாழ்ந்தவனென்ற பேதம் ஆத்மாவிற்கு இயற்கையிலில்லை, ஆத்மா ஒருவகையுள்ளவனே. தேவ சரீரஸம்பந்தம் நேர்ந்தபொழுது மேலானவனென்றும் பசு சரீரஸம்பந்தம் வந்தஸமயத்தில் தாழ்ந்தவனென்றும் சொல்லப்படுகிறான். ஆனதால் மேன்மை தாழ்வு என்பது சரீரமாகிய உபாதியாலேற்பட்டதேயொழிய இயற்கையானதல்ல.)

48—49. சந்திரனுடைய கலைகள் சிலகாலம் விருத்தியடைகின்றன. சிலகாலம் குறைகின்றன. ஆனாலும் மண்டலத்திற்குவிருத்தியாவது குறைவாவது உண்மையில் எப்படி இல்லையோ, அப்படி ஜனனம் முதல் மரணம் வரையிலுள்ள விகாரங்கள் சரீரத்திற்கேயொழிய ஆத்மாவினுடையதல்ல. ஆத்மா ஜனிக்கிறதில்லை; விருத்தியடைகிறதில்லை; வேறுநிலைமையை அடைகிறதில்லை; குறைகிறதில்லை; நாசமடைகிறதுமில்லை; மேலும் அக்னியின் ஜ்வாலைகள் எப்படி உண்டாகிறதும் அணைகிறதுமாக விருக்கிறதோ, அப்படி ஆத்மாவின் ஸம்பந்தமான சரீரங்களுக்கும் காலவேகத்தால் ஜனன மரணமேற்படுகிறது. ஆனாலும் அதனை ஜனங்கள் லக்ஷ்யஞ் செய்யவில்லை. (தேஹம் முதலியவைகள் ஸ்திரமில்லாதவையானதால் அவைகளில் ஆசைகொள்ளாமல் வைராக்யத்தை அடையவேண்டுமென்று கருத்து).

**50—51.** ஸூர்யன் தம்முடைய கிரணங்களால் ஜலத்தை கிரஹித்து அவைகளை ஸமயத்தில் (மழைகாலத்தில்) வர்ஷிப்பது போல் யோகியானவன் இந்திரியங்களால் விஷயங்களைக் கிரஹித்து யாசகர்களுக்குக் கொடுக்கிறான். ஆனாலும் 'இது என்னால் ஸம்பாதிக்கப்பட்டது என்றாவது இதைப் பிறருக்குக் கொடுத்தேன்' என்றாவது அபிநிவேசத்தை அடைகிறதில்லை. மேலும் ஜலத்தில் ப்ரதிபிம்பித்த ஸூர்யமண்டலம் போல் ஆத்மா உபாதிகளில் பிரதிபலித்திருக்கிறார். அதனால் மந்தபுத்தியுள்ளவர்கள் ஆத்மா வெவ்வேறு என்று நினைக்கிறார்கள். (உண்மையில் பேதமற்றது).

**52—72.** ஒருவரிடத்திலும் ஒருபோதும் அதிகப்ரியமாவது, வார்த்தையாவது வைத்துக்கொள்ளக்கூடாது. அப்படியல்லாமல் அதிகப்பிரியம் வைத்தால் மாடப்புறாப்போல் தைன்யமடைந்து தாபத்தை அடைவான். ஒருமாடப்புறா தன் மனைவியுடன் ஒரு காட்டில், மரத்தில் கூடுகட்டிக்கொண்டு வஸித்தது. அவ்விரு புறாக்களும் ஒன்றின்மீது ஒன்று மிக்க ப்ரியம் வைத்திருந்தன. மேலுமவைகள் கண்ணை கண்ணிலும், சரீரத்தை சரீரத்திலும், புத்தியை புத்தியுடனும் சேர்த்து விசேஷ ஸ்நேஹமுள்ளவைகளாக விருந்தன. பின்னுமவைகள், படுப்பது, ஸஞ்சரிப்பது, உட்காருவது, வஸிப்பது, விளையாடுவது, ஆஹாரம்புஜிப்பது, ஆகிய இவைகளை இரண்டுமாகச் சேர்ந்து செய்கிறதேயொழிய, விட்டுப்பிரிவதில்லை. இப்படி அவ்விரண்டு புறாக்களும் காடுகளில் பயமற்று சேர்ந்து ஸஞ்சரித்து வந்தன. ஓ அரசனே! அவைகளில் பெண்பறவை எதனை விரும்பியதோ, அதனுடைய கடைக்கண்பார்வை முதலியவையால் திருப்தியடைந்து ஆண்பறவை அந்த அந்த இஷ்டத்தை ச்ரமப்பட்டாவது ஸம்பாதித்துக்கொடுத்து அதனைநிறைவேற்றியது. சிலநாளில் பெண்பறவை கர்ப்பத்தை அடைந்து ப்ரஸவகாலத்தில் ஆண்பறவையின் முன்னிலையில் முட்டைகளை ப்ரஸவித்தது. சில காலஞ்சென்றபின் அவைகளிலிருந்து குஞ்சுகள் வெளிப்பட்டன அவைகள் ஊகிக்கமுடியாத பகவானுடைய சக்திகளான காலம், கர்மம், ஸ்வபாவம் ஆகிய இவைகளால் கை, கால் முதலிய அவயவங்களை அடைந்து அழகிய சரீரம், இறக்கை முதலியவைகளுள்ளவையாக விருந்தன. மேலுமவைகள் காதிற்கு இனிமையாக சப்தித்தன. அவைகள் மனோஹரமாக விளையாடின. அவை

களுடைய இறக்கைகள் மிருதுவாக விருந்தன. இப்படிப்பட்ட அந்தப்பறவைக் குஞ்சுகளைப்பார்த்து தாய்தந்தைகளான பறவைகள் மிக்கப்ரியத்துடன் அவைகளை போஷித்தன. அவைகளுடைய இனிமையான சப்தத்தைக்கேட்டும் விளையாட்டைப்பார்த்தும் ஸந்தோஷத்தை அடைந்தன. இப்படி அந்தப் பறவைகள் விஷ்ணுவின் மாயயால் மோஹமடைந்து ஒருவருக்கொருவர் விசேஷ ஸ்நேஹத்துடன் இளம்வயதிலுள்ள தங்கள் குழந்தைகளை போஷித்து வந்தன. ஒருநாள் தாய்தந்தைகளான பறவைகள் உணவு தேடிவருவதற்குக் காட்டிற்குச்சென்று தாமதித்தன. அந்த ஸமயத்தில் மரத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் பறவைக் குஞ்சுகளை ஒரு வேடன் பார்த்து வலையை விசிறிப்பிடித்தான். அப்பொழுது குஞ்சுகளைப் போஷிப்பதிலேயே எப்பொழுதும் நோக்கமுள்ள அவ்விரண்டு பறவைகளும் உணவு ஸம்பாதித்துக்கொண்டுவந்து தம் குஞ்சுகள் வலையில் சிக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தன. அவைகளைக் கண்டவுடன் குஞ்சுகள் கதறின. அதனைக் கண்ணுற்ற பெண்பறவை தானும் கதறிக்கொண்டு அவைகள் ஸமீபஞ்சென்றது. மேலும் விஷ்ணுவின் மாயயால் அந்தக் குஞ்சுகளிடத்தில் விசேஷ ப்ரியம் வைத்து வலை வீசியிருப்பதை மறந்து தானும் வலையில் சிக்கிக்கொண்டது. பின்பு ஆண்பக்ஷி ப்ராணனைக்காட்டிலும் அதிகமென்று நினைத்திருந்த குழந்தைகளும், தனக்கு ஸமமாகிய மனைவியும் வலையில் கட்டுப்பட்டிருப்பதைப் பார்த்து மிகவும் துக்கித்தது. "ஓ! ஜனங்களே! நான் ஸ்வல்ப புண்யஞ்செய்தவன்; புத்தியில்லாதவன்; எனக்கு நேர்ந்த கெடுதியைப் பார்த்தீர்களா? நான் இவ்வுலகத்திய ஸுகத்தை அநுபவித்துப் போதுமென்ற திருப்தியை அடையவில்லை. பரலோக ஸுகத்தையும் ஸம்பாதித்துக்கொள்ளவில்லை. அப்படியிருக்க தர்மம், அர்த்தம், காமம் இவைகளைக்கொடுக்கும் க்ருஹம் நாசமடைந்தது; என் மனைவி பர்த்தாவாகிய என்னையே தைவமாகக்கொண்டவள்; எனக்கு ஸமமான குணமுள்ளவள், அநுகூலமாக விருப்பவள்; அப்படிப்பட்ட மனைவி சூன்யமாகிய வீட்டில் என்னைவைத்து ஸாதுக்களான குழந்தைகளுடன் ஸ்வர்க்கத்திற்குப் போகிறாள். குழந்தைகளும், மனைவியும் மரணமடைந்தபின் நான் எதற்காக ஜீவிக்கவேண்டும்." என்று ப்ரலபித்து வலையில் கட்டுப்பட்டு ப்ரஜ்ஞையற்றிருக்கும் பறவைகளைப்

பார்த்துத் தானும் அந்த வலையில் விழுந்தது. அதனைக் கண்ணுற்ற வேடன் பெண்புறு, ஆண்புறு குழந்தைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு மிக்க ஸந்தோஷத்துடன் தன்னுடைய வீட்டிற்குச் சென்றான்.

73—74 அதுபோல் கிருஹஸ்தனாகிய புருஷன் ஸுகதுக்கங்களில் ஆசைகொண்டு மனத்தின் சாந்தியை அடையாமல குடும்பத்தைப் போஷித்து குடும்பத்துடன் கஷ்டப்படுவான். இந்த மனித சரீரம் மோக்ஷத்திற்கு மார்க்கமாக விருக்கிறது. அதை அடைந்தும் எவன் மேற்காட்டிய பறவைபோல் குடும்பத்தில் ஆசைவைக்கிறானோ அவனை ஆரூடச்யுதன்(மேலான பதத்தை அடைந்தும் அதிலிருந்து விழுந்தவன்) என்று சொல்லுகிறார்கள். (புத்திரன் முதலியவர்களிடத்தில் ஆசைப்படுவது பறவைகளுக்கும் கெடுதியை விளைவிக்கிறது. ஆனதால் மனிதர்கள் அவைகளில் பற்றுதலில்லாமலிருக்கவேண்டுமென்று கருத்து)

---

## அத்யாயம்—8.

### மலைப்பாம்பு முதலியவைகளிடம் கற்றுக்கொண்டது.

ஓ அரசனே! பிராணிகளுக்கு இந்திரியங்களாலுண்டாகும் ஸுகம், துக்கம் இவைகள் ஸ்வர்க்கத்திலும் நரகத்திலும் நேரிடுகின்றன. ஆனதால் வித்வானாக விருப்பவன் இந்திரிய ஸுகத்தை விரும்பக்கூடாது. (ப்ராரப்தமாகிய கர்மத்தின் பயனை அனுபவிக்கவேண்டியதவசியமாகையால் அதற்காக வீணில் முயன்று அதனால் ஆயுஸ்ஸை செலவிடக்கூடாது என்று தாத்பர்யம்.) மேலும் மலைப்பாம்புபோல ரஸமுள்ளதானாலும், ரஸமற்றதானாலும், ஸ்வல்பமானாலும், அதிகமாகவிருந்தாலும் தைவச்செயலால் கிடைத்த அன்னத்தைப் புஜித்து அதற்காக முயற்சிக்காமல் உதாஸீனனாக விருக்கவேண்டும்.(எவ்வளவு ஆஹாரம் புஜித்தால் சரீரமிருக்குமோ அவ்வளவு ஆஹாரத்தைமாத்திரம் புஜிக்கவேண்டும். அதற்காகவும் தான் முயற்சிசெய்யவேண்டாம் என்று கருத்து). தைவச்செயலாக ஆஹாரம் கிடைக்காவிடினும், தைவமே நமக்கு ஆஹாரத்தைக் கொடுக்கும் என்ற நிச்சயத்துடன் ஆஹாரமில்லாமல் வெகுநாளானாலும் அதற்காக யாதொரு முயற்சியும் செய்யாமல் படுத்திருக்க

வேண்டும். மேலும் இந்திரியபலம், மனோபலம், சரீரபலம் இவைகளுள்ளவனானாலும் யாதொரு முயற்சியும் செய்யாமல் படுத்திருக்க வேண்டும். ஆனால் தூங்கக்கூடாது. (ஆத்மாவிடத்தில் மனமுள்ளவனாக விருக்கவேண்டுமென்றுகருத்து) கண் காது முதலிய இந்திரியங்களுள்ளவனானாலும் ஒன்றையும் பார்க்கக்கூடாது; கேட்கவுங்கூடாது (இம்மாதிரி மலைப்பாம்பினிட மிருந்து கற்றுக்கொண்டேன் என்று கருத்து.)

5—6 தெளிந்ததும், ஆழமுள்ளதும், ப்ரவேசிக்கமுடியாததும், தாண்டமுடியாததும், க்ஷயமற்றதும், கலக்கமுடியாததும், அலைகளில்லாமல் அசைவற்று இருப்பதுமான ஸமுத்திரம்போல யோகியானவன் வெளியில் தெளிந்தும் காம்பீர்யமுள்ளவனாகவும், இம்மாதிரியான அபிப்பிராய முள்ளவனென்று அறியமுடியாதவனாகவும், பிறரால் தாண்டமுடியாதவனும் (தேஜஸ்ஸுள்ளவனாகவிருப்பதால்) காலத்தாலும் தேசத்தாலும் அளவிடக்கூடாதவனாகவும், (ஸ்வரூபத்தையறிந்ததனால்) விகாரத்தையடையாதவனாகவும் (ஆசை முதலியவைகள் இல்லாததனால்) இருக்கவேண்டும். மேலும் மழைகாலத்தில் அநேக ஆறுகள் ஸமுத்திரத்தில் விழுந்தாலும் ஸமுத்திரம் எப்படி விருத்தியடைகிறதில்லையோ, கோடைகாலத்தில் அந்தநதிகளின் ஜலம் ஸமுத்திரத்தில் சேராமவிருந்தாலும் ஸமுத்திரம் எப்படி குறைகிறதில்லையோ, அப்படி யோகியானவன் ஸ்ரீமந் நாராயணனிடத்திலேயே மனத்தைச்செலுத்தி விஷயபோகங்கள் அதிகமாகக் கிடைத்தாலும் அதனால் ஸந்தோஷிக்கக்கூடாது, விஷயபோகங்கள் கிடைக்காவிடினும் அதனால் துக்கப்படக்கூடாது என்பதை ஸமுத்திரத்தினிடம் கற்றுக்கொண்டேன்.

7—8 விளக்குவிட்டிற் பூச்சியானது தீபஜ்வாலையைப் பழமென்று நினைத்து அதில் விழுந்து மரணமடைவதுபோல் முனியானாலும் தேவமாயயாகிய ஸ்திரீயைப்பார்த்து அவளுடைய அழகான பார்வை முதலியவைகளால் ஏமாற்றப்பட்டு இந்திரியங்களை அடக்கமுடியாமல் விஷயங்களில் மூழ்கி ஸம்ஸாரியாக ஆகிறான். மேலும், ஸ்திரீ, தங்கம், ஆபரணம், வஸ்திரம், முதலிய த்ரவ்யங்கள் மாயயால் செய்யப்பட்டவைகளேயொழிய உண்மையானவையல்ல. அப்படிப்பட்ட த்ரவ்யங்களைத் தான் அநுபவிக்கலாமென்று நினை

த்து மூடனாகிய மனிதன் விவேகமற்று விளக்குவிட்டிற்பூச்சி போல நாசத்தை அடைகிறான். (ரூபம், ரஸம், நாதம், ஸ்பர்சம், சப்தமென்று விஷயங்கள் ஐந்து. அவைகளில் ஆசைப்படக்கூடாது. ரூபத்தில் ஆசைப்பட்டு விளக்கு விட்டிற் பூச்சி மரணமடைகிறது, வண்டுகள் வாஸனையில் ஆசைப்பட்டும், யானைகள் ஸ்பர்சத்தில் ஆசைகொண்டும், மான்கள் சப்தத்தில் ஆசைகொண்டும், மீனங்கள் ரஸத்தில் ஆசைப்பட்டும் நசிக்கின்றன.)

9—12. பின்னும் வண்டானது எப்படி ஒவ்வொரு புஷ்பத்திலுமிருந்து அவைகளை உபத்ரவியாமல் ஸ்வல்பம் ஸ்வல்பமாகத் தேனை எடுத்துக்கொள்ளுகிறதோ, அப்படி முனியாக இருப்பவன் கிருஹஸ்தர்களை உபத்ரவியாமல் சரீரஸ்திதிக்குவேண்டிய ஆஹாரத்தை (எவ்வளவு ஆஹாரம் புஜித்தால் சரீரம் ஜீவிக்குமோ அவ்வளவு) பெற்றுக்கொள்ளலாம். அதனையும் கொஞ்சம் கொஞ்சமாக கிரஹிக்கவேண்டும். இப்படிச் செய்யாமல் ஒரே கிருஹஸ்தனுடைய வீட்டிலேயே இருப்பானாகில் அந்த கிருஹஸ்தனுடைய ஸுகதுக்கங்களில் இவனுடைய மனம் கலங்கும், அதனால் ஸம்ஸாரத்தை அடைவான். வண்டானது ஒரே தாமரை மலரில் அதன் வாஸனையில் ஆசைகொண்டு வஸிக்குமானால் அஸ்தமய காலத்தில் அந்த மலர் மூடிக்கொள்ளும்பொழுது அது கட்டுப்படுகிறதல்லவா? பின்னும் தேன் ஈயானது பருத்த புஷ்பங்களிலிருந்தும், சின்ன புஷ்பங்களிலிருந்தும் ஸாரமாகிய தேனை எப்படி எடுத்துக்கொள்ளுகிறதோ, அப்படி விவேகியான புருஷன், அணுவானாலும், பருத்ததானாலும் சாஸ்திரங்களில் எது ஸாரமோ அதனைக் கிரஹித்துக்கொள்ளவேண்டும். முனியானவன் பிக்ஷையெடுத்த அன்னத்தை 'இது ஸாயங்காலம் புஜிப்பதற்கு இருக்கட்டும், இது நாளைக்காக இருக்கட்டும்' என்று சேர்த்து வைத்துக்கொள்ளக்கூடாது. கையையும் வயிற்றையும் பாத்திரமாக வைத்துக்கொள்ளவேண்டும். (கையில் வாங்கி வாயில் போட்டுக்கொள்ள வேண்டுமேயல்லாமல் சேர்த்து வைக்கக்கூடாதென்று கருத்து) இப்படிச் செய்யாமல் 'ஸாயங்காலம் புஜிப்போம், நாளைக்குப் புஜிப்போம்' என்று சேர்த்துவைப்பவன் கெட்டுப்போவான். தேனீக்கள் தேனைச் சேர்த்துவைத்து அதனைத்தாங்கள் புஜிக்காமலேயே பிறரால் கொல்லப்படுகின்றனவல்லவா? (தேனீக்களிடம் மேற்காட்டியதைத் தெரிந்துகொண்டேன்.)

13—14. முனியாகவிருப்பவன் மரத்தால் செய்யப்பட்ட ஸ்திரீ ப்ரதிமையையும் காலால்கூட தொடக்கூடாது. (எவ்வகையிலும் ஸ்திரீ ஸம்பந்தம் கூடாது என்று கருத்து.) அப்படித் தொடுவானாகில் பெண் யானையின் சரீரத்தைத் தொடுவதால் ஆண்யானை கட்டுப்படுவதுபோல் கெடுதியடைவான். (யானையைப் பிடிப்பவர்கள் காட்டில் பள்ளம்வெட்டி அதனை திருணங்களால் மறைத்து பெண்யானையைக்காட்டிக் காட்டிலுள்ள ஆண்யானையை அதன் வழியாக நடத்தி பள்ளத்தில் தள்ளுகிறார்கள். பின்பு அவர்களுக்கு அது வசப்படுகிறது) விவேகியாக விருப்பவன் ஸ்திரீயைத் தனக்கு மிருத்யுவென்று நினைத்து ஒருபொழுதும் அவள் வழி செல்லாமலும் அவளிடத்தில் ஆசைப்படாமலுமிருப்பான். அப்படியிராமல் ஆசைப்படுவானாகில் இவனைக்காட்டிலும் பலசாலிகளான மனிதர்கள் இவனைக் கொன்றுவிடுவார்கள். ஒரு பெண் யானையின்மீது ஆசைகொண்ட ஆண் யானையை அதனைவிட பலசாலிகளான மற்றயானைகள் கொல்லவில்லையா ?

15—16. தேனீக்கள் தான் புஜியாமலும் பிறருக்குக் கொடாமலும் தேனை ரஹஸ்யமான விடத்தில் சேர்த்துவைக்கின்றன. அதனை மனிதன் தெரிந்துகொண்டு எப்படி எடுத்துக்கொண்டு போகிறானோ, அப்படி மனிதர்கள் தாங்கள் அனுபவிக்காமலும் பிறருக்குக்கொடாமலும் ச்ரமப்பட்டு பணத்தைச்சேர்த்து வைக்கிறார்கள். அதனை மற்றவன் அபஹரித்துக்கொள்ளுகிறான் அவனைக் காட்டிலும் பலசாலியாகவிருப்பவன் அவனிடமிருந்து அந்தப் பணத்தை அபஹரித்துக் கொள்ளுகிறான். (ஆனதால் பிறருக்குக் கொடாமலும் தான் அனுபவியாமலும் தனத்தைச் சேர்த்து வைத்தால் அதனைப் பிறர் கொண்டுபோவார்கள் என்பதைத் தேன்பூச்சியினிடமிருந்து தெரிந்துகொண்டேன்) மேலும் தேனீக்கள் ச்ரமப்பட்டு ஸம்பாதித்துவைத்த தேனை மற்றவன் எப்படி எளிதில் அடைகிறானோ, அதுபோல ச்ரமப்பட்டு ஸம்பாதித்த த்ரவ்யங்களைக்கொண்டு க்ரஹகிருத்தியங்களை நடத்தும் கிருஹஸ்தர்களுடைய அன்னத்தை முந்தி புஜிப்பதற்கு ஸந்நியாஸி பாத்தியமுள்ளவனாக விருக்கிறான். (ஸந்நியாஸியும் ப்ரஹ்மசாரியும் சமைத்த அன்னத்தில் பாகமுள்ளவர்கள். அவர்களுக்குக் கொடாமல் தான் மாத்திரம் புஜிக்கும் கிருஹஸ்தன் சாந்திராயணம் என்றவிருதத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்று ஸ்மிருதியில் சொல்லப்பட்

டிருக்கிறது. ஆனதால் தன்னுடைய முயற்சியில்லாமலேயே போகங்கள் கிடைக்கின்றன. அதற்காக ச்ரமப்படவேண்டாம்.)

17—18. வனத்தில் வேடனுடைய பாட்டைக்கேட்டு மோஹித்து அசைவற்று நின்றமானனது வேடனால் அடிக்கப்படுகிறதல்லவா? அதுபோல காட்டில் ஸஞ்சரிக்கும் யதியானவன் க்ராம்யமான கானத்தைக்கேட்கலாகாது (பகவத் விஷயமான கானத்தைத்தவிர மற்றவை) கேட்டால் விஷயங்களில் ப்ரவிருத்தியுண்டாகும். மேலும் மான் வயிற்றில் பிறந்தவரான ரிச்யச்ருங்கரென்பவர் ஸ்திரீகளால் செய்யப்பட்ட நர்த்தனம், கானம், வாத்தியம் இவைகளைப் பார்த்தும், கேட்டும் அவர்களுக்கு விளையாட்டு மிருகம்போல வசப்பட்டிருந்தார்.

19—21. ஜனங்களுக்கு நாக்கு (ஜிஹ்வேந்திரியம்) மிக்க கெடுதியை விளைவிக்கின்றது. அதனை ஜயிப்பது மிகவும் கஷ்டம். மத்ஸ்யமானது தூண்டிமுள்ளிலிருக்கும் மாம்ஸத்தில் ஆசைப்பட்டு மரணமடைவதுபோல நாக்கை ஜயிக்காதவன் ரஸத்தில் ஆசை கொண்டு மிக்க கெடுதியை அடைவான். விவேகிகள் இந்திரியங்களை ஜயிப்பதற்காக ஆஹாரத்தைத் தள்ளிவிடுகிறார்கள். அதனால் எல்லா இந்திரியங்களையும் ஜயிக்கிறார்கள். ஆனால் நாக்கு மாத்திரம் ஜயிக்கமுடியவில்லை. ஆஹாரம் புஜிக்காதவனுக்கு நாக்கின் வியாபாரமானது விருத்தியாகிறதேயொழிய குறைகிறதில்லை. நாக்கை ஜயிக்காமல் மற்றவைகளை ஜயித்தவன் இந்திரியங்களை ஜயித்தவனென்று சொல்லப்படமாட்டான். ஆனதால் நாக்கை ஜயித்தால் மற்றவை யாவும் ஜயிக்கப்பட்டதாகும்.

22—23. ஓ ராஜகுமாரராகிய யதுவே! விதேஹமென்ற பட்டணத்தில் பிங்களா என்ற தேவரடியாள் (தாஸி) ஒருவள் இருந்தாள். அவளிடமாக நான் ஸ்வல்பம் தெரிந்துகொண்டேன். அதனைச்சொல்லுகிறேன் கேளும். அந்த வ்யபசாரிணியான பிங்களா யென்பவள் தன்னுடைய சரீரத்தை நன்றாயலங்கரித்துக் கொண்டு ஒருநாள் இரவில் தன்னுடைய வீட்டின் வாசற்படியில் நின்று புருஷர்களை உள்ளே அழைத்துப்போவதில் நோக்கமுள்ளவளாக காத்துக்கொண்டிருந்தாள். பணத்தில் ஆசையுள்ள அந்த தாஸி தெருவில் போகிற ஜனங்களில் பணக்காரர்களும் தனக்கு

பணங் கொடுப்பவர்களுமான மனிதர்களை தனக்குப் புருஷனென்று நினைத்து அவர்களுடன் ரமித்தாள். அவர்கள் தன்வீட்டை விட்டுச் சென்றபின் "இவனைப்போல் மிக்க பணம் கொடுக்கும் பணக்காரன் வேறுயாராவது வருவானோ" என்று துராசைகொண்டு வாயற்படியில நிற்பதும் உள்ளேபோகிறதும் வெளியில் வருவது மாகவிருந்தாள். இப்படி இரவில் முன்பாதியைக் கழித்தாள். இப்படிப் பணத்தில் ஆசைகொண்ட அவளுடைய முகமும், மனமும் வாடின. பணம் ஸம்பாதிக்கவேண்டுமென்ற ஆலோசனையாலேயே அவளுக்கு மிக்கவைராக்கியம் உண்டாயிற்று. அது ஸுகத்தை யுண்டுபண்ணியது. இம்மாதிரியவள் நிர்வேதத்தை யடைந்து எதனைச் சொன்னாளோ, அதனைச் சொல்லுகிறேன் கேளும். புருஷனுக்கு நிர்வேதம் உண்டானால் அது ஆசையாகிற கயிற்றைக் கத்திபோல் அறுத்துவிடும். நிர்வேதமில்லாதவர்கள் தேஹாபிமானத்தை விடமாட்டார்கள். பிங்கலை சொல்லியதாவது "இந்திரியங்களை ஜயிக்காமல் விவேகமற்று நான் மிக்க அற்பனாகிய மனிதனிடமிருந்து இஷ்டத்தையடைய விரும்பினேன். என்னுடைய மிகுந்த மோஹத்தைப் பாருங்கள். ஆச்சர்யம்! பகவான் எப்பொழுதும் நம்முடைய ஸமீபத்திலிருந்து பணம் முதலிய இஷ்டங்களைக்கொடுத்து நம்மை ஸந்தோஷப்படுத்த ஸித்தராகவிருக்கிறார். அப்படிப்பட்ட பகவானை ஸேவியாமல் இஷ்டமான வஸ்துவைக்கொடுக்க சக்தியற்றவனும், துக்கம், பயம், உபத்திரவம், மோஹம் இவைகளைக் கொடுப்பவனும் அற்பனுமாகிய மனிதனை மூடையாகிய நான் ஸேவித்தேன். மேலும் நான் பணத்தில் ஆசைகொண்டு சரீரத்தைவிற்று ஸ்திரீகளிடத்திலேயே ஆசைப்பட்டவனும், பொருளாசை கொண்டவனும் பிறரால் துக்கிக்கக்கூடியவனுமான மனிதனுடன் ரமித்து ஸங்கேதஸ்தலத்தில் (படுக்கையிடம்) செய்யவேண்டிய வியாபாரங்களைச் செய்து மிக்க நிந்திக்கக்கூடிய ஜீவனத்தால் எனது ஆத்மாவை ச்ரமப்படுத்தினேன். ஆச்சர்யம்! இந்த சரீரமாகிய வீடானது எலும்புகளாகிய தூண்கள், மோசனம் முதலியவைகளாலும் தோல், மயிர், நகம் இவைகளாலும் கட்டப்பட்டிருக்கிறது. அது அமேத்தியம், மூத்திரம் இவைகளால் நிறைந்திருக்கிறது. எப்பொழுதும் ஜலப்பெருக்குள்ள ஒன்பது த்வாரங்களுள்ளது. அப்படிப்பட்ட சரீரத்தை என்னைக்காட்டிலும் எவள் புருஷனென்று

அடைவாள்? இந்தபட்டணத்தில் நான் ஒருவள்தான் அறியாதவள் (மூடபுத்தியுள்ளவள்). ஆத்மாவைக்கொடுப்பவராகிய பகவானுகிய பர்த்தாவைவிட்டு மற்றவனை புருஷனுக அடைய விரும்பினேனல்லவா? அந்தப் பகவான் ஸகலப்பிராணிகளுக்கும் ஸுஹிருத்தாவும் மிக்க அன்புள்ள நாயகனுகவுமிருக்கிறுர். ஆனதால் என்னுடைய ஆத்மாவை அவரிடம் ஸமர்ப்பித்து (விலையாகக்கொடுத்து) லக்ஷ்மீ தேவிபோல் அவருடன் ரமிப்பேன். மற்ற மனிதர்களும், தேவர்களும் இறப்புப் பிறப்புள்ளவர்கள்; காலத்திற்குப் பயந்தவர்கள்; அவர்கள் தங்கள் ஸ்திரீகளுக்கு என்ன இஷ்டத்தைக் கொடுத்திருக்கிறுர்கள். (ஆனதால் இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் பகவானைக்காட்டிலும் ஸேவிக்கக்கூடியவன் வேருெருவனுமில்லை என்று தாத்பர்யம்) என்னுல் செய்யப்பட்ட ஏதோ ஒரு புண்யத்தால் பகவானுகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கு என்னிடம் ஸந்தோஷம் உண்டாயிருக்கிறது. அதனுல் தான் துராசையுள்ளவளான எனக்கும் இம்மாதிரியான நிர்வேதம் உண்டாயிற்று. அதனுல் மிகவும் ஸுகத்தை யடைகிறேன். நான் மிக்க பாக்கியமுள்ளவள்; அப்படி இல்லாவிடில் நிர்வேதமுண்டாவதற்குக் காரணங்களான கஷ்டங்கள் எனக்கு நேரிடாது. அப்படிப்பட்ட ச்ரமம் உண்டானதால் நிர்வேதம் (போதுமென்ற எண்ணம்—வைராக்யம்) உண்டாயிற்று அந்த நிர்வேதத்தால் வீடு முதலியவைகளில் ஆசையை ஒழித்து மனிதன் சாந்தியை அடைவான். கிராம்யர்களான மனிதர்களிடம் ஆசைப்பட்டிருந்த நான் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் உபகாரத்தைத் (நிர்வேதத்தை) தலையில் வஹித்து, துராசையை யொழித்து அதிபதியாகிய அந்தப் பகவானைச் சரணமடைகிறேன். ஆனதால் தைவச்செயலாகக் கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷமாக ஜீவித்து ஸந்தோஷத்தைக் கொடுப்பவரும், ஆத்மாவுமான இந்தப் பகவானுடன் விளையாடுகிறேன். ஸம்ஸாரமாகிய பாழுங்கிணற்றில் விழுந்தவனும், விஷயங்களில் மூழ்கி விவேகமற்றவனும், காலமாகிய ஸர்ப்பத்தால் பீடிக்கப்பட்டவனுமான ஆத்மாவைக் காப்பாற்றுவதற்கு அந்தப் பகவானைவிட யாருல் முடியும்? இந்த ஜகத்முழுவதும் காலமாகிய ஸர்ப்பத்தால் விழுங்கப்படுகிறது என்று நினைத்து, ஸாவதானனுகி விஷய போகங்களில் ஆசைப்படாமல் மனிதன் எப்பொழுது வைராக்யத்தை அடைகிறுனே, அப்பொழுது தானே ஆத்மாவைக்

ாப்பாற்றுகிறவனுகிருன். (ப்ரேமையாலேயே ஸேவிக்கிறேன் ன்று கருத்து) இம்மாதிரியான நிச்சயத்துடன் அந்தப் பிங்களா யன்பவள் புருஷர்களிடத்திலுள்ள ஆசையாலுண்டாகிய துரா சையை யொழித்து படுக்கையில் படுத்தாள். இந்த பிங்களை புரு ஷர்களிடத்தில் ஆசைக்கொண்டு உள்ளேபோவதும், வெளியே வரு கிறதும், வாயற்படியில் நிற்பதுமாக விருந்தாள். ஆசையை ஒழித்த வுடன் அவள் கவலையற்று ஸுகமாகத் தூங்கினுளல்லவா? ஆன தால் விஷயங்களில் ஆசைப்படுவது மிக்க துக்கத்தை விளைவிக்கும் ஆசைப்படாமலிருப்பது மிகுந்த ஸுகத்தைக்கொடுக்கும் (இதை பிங்களாயென்பவளிடமிருந்து தெரிந்துகொண்டேன் என்று கருத்து.)

---

## அத்யாயம்--9.

### குரரம் முதலியவைகளிடத்தில் அப்யஸித்த குணங்கள்.

மனிதர்களுக்கு எந்த வஸ்துக்களில் மிக்க ஆசையிருக்கிறதோ அதனைச்சேர்த்து வைத்துக்கொள்வதால் துக்கமுண்டாகுமேயல் ாமல் ஸுகமுண்டாகிறதில்லை. இதனைத்தெரிந்து எவன் சேர் த்து வைத்துக்கொள்ளாமலிருக்கிருனே, அவன் அளவற்ற ஸு கத்தை அடைகிருன். ஒரு குரரமென்ற பக்ஷி மாம்ஸத்தை வைத் துக்கொண்டிருந்தது. அதனைக்காட்டிலும் பலசாலிகளாள மற்ற பக்ஷிகள் ஆஹாரங்கிடைக்காததால் அதனை ஹிம்ஸித்தன. அப் பொழுது அந்தப் பறவை தன்னிடமிருந்த மாம்ஸத்தை கீழே போட்டது. பின்பு மற்ற பறவைகள் அதனருகில் செல்லவில்லை. அதனுல் அது மிக்க ஸுகத்தை அடைந்தது.

3—4. சிறுவனுக்கு எப்படி மானம், அவமானம் இவைக ளில்லையோ, கவலையில்லையோ அதுபோல் எனக்கும் மானம் அவ மானம் இவ்விரண்டுமில்லை. வீடு, புத்திரன் இவைகளுள்ளவர் களுக்கு எவ்விதகவலையிருக்குமோ, அதுவும் எனக்கில்லை. ஆத்மா விடத்தில் பிரியமுள்ளவனுகி, ஆத்மாவுடன் விளையாடிக்கொண்டு சிறுவன்போல் ஸஞ்சரிக்கிறேன். மேலும் எவன் ஒன்றையும் தெரிந்துகொள்ளாமல் முயற்சியற்று இருக்கிருனே, எவன் எல்லா

வற்றையும் தெரிந்துகொண்டவனே, அவ்விருவர்களும் கவலையற்றவர்கள். பரமானந்தத்தில் மூழ்கியவர்கள். (சிறுவனிடமிருந்து கவலையற்றிருப்பதை கற்றுக்கொண்டேனென்று கருத்து)

5—10. ஒரு சிறு பெண் (சிறுமி) தாய் முதலிய பந்துக்கள் வீட்டிலில்லாத சாலத்தில் தன்னை கல்யாணஞ்செய்து கொள்வதற்காக பார்க்கவந்தவர்களுக்கு அன்னமளிப்பதற்காக ரஹஸ்யமாக நெல்லைக் குத்தினாள். அப்பொழுது அவள் கையிலணிந்திருந்த வளைகள் மிகவும் சப்தித்தன. அதனைக்கேட்டு அந்தப் பெண் மிக்க வெட்கமடைந்து சப்தமுண்டாகாமலிருப்பதற்காக ஒவ்வொன்றாக உடைத்தாள். ஒவ்வொரு கையிலும் இரண்டுவளைகள் மிஞ்சின. பின்பு முன்போல நெல்லைக்குத்தும்பொழுது அவ்விரண்டுவளைகளும் ஒன்றோடொன்று சேர்ந்து சப்தித்தன. அப்பொழுது ஒருவளையை உடைத்தாள். ஒன்று எஞ்சியது. அதனால் சப்தமுண்டாகவில்லை. ஆனதால் லோகத்தின் உண்மையைத் தெரிந்துகொள்வதற்காக ஸஞ்சரித்த நான் இதை அந்தச் சிறு பெண்ணிடமாகத் தெரிந்துகொண்டேன். அநேகர்கள் சேர்ந்து ஒருவிடத்தில் வஸித்தால் சண்டைக்கு ஹேதுவாகும். இருவர்களாக வஸித்தால் வார்த்தைக்கு இடமாகும் ஆனதால் அந்தச் சிறுமியின்வளைபோல் ஒருவனாகவே ஸஞ்சரிக்க வேண்டும்.

11—13. ஸுகமான ஆஸனத்தில் உட்கார்ந்து ச்வாஸத்தை அடக்கி பல விஷயங்களில் செல்லுகிற மனத்தை வைராக்கியத்தால் தடுத்து அப்யாஸ விசேஷத்தால் லக்ஷ்யத்தில் ஸ்திரமாக செலுத்தவேண்டும். லயம், விக்ஷேபம் இவைகளை ஸ்வபாவமாகக் கொண்ட மனமானது பகவானிடத்தில் செலுத்தப்பட்டு ஸ்திரப்படுமானால் கிரமமாக கர்மவாஸனைகளை யொழிக்கும். ஸத்வகுணம் விருத்தியாகும். அப்பொழுது ரஜோகுணமும், தமோகுணமும் நசிக்கும். அப்பொழுது எறிப்பதற்குக் கட்டையில்லாமல் அக்னி சாந்தமாவதுபோல் மனத்திற்கு விருத்திகளற்றுப்போவதால் ப்ரஹ்மாகாரமாகவிருந்து சாந்தியடையும். அம்பைக் கோணலின்றி ருஜுவாகச் செய்வதில் நோக்கமுள்ளவனுடைய அருகில் அரசன், பேரி முதலிய வாத்ய கோஷங்களுடன் சென்றாலும் அரசன் போகிறு

னென்பது எப்படி அவனுக்குத் தெரியாதோ அப்படி விருத்திக ளற்று ஆத்மாகாரமாகவிருக்கும் மனமுள்ளவன் வெளியில் நடப் பதையாவது முன்னடந்ததையாவது ஒன்றையுமறியாதவனுக விருப்பான்.

**14—15.** ஸர்ப்பம் எப்படி ஜனங்களிடம் பயந்து தனியாக ஸஞ்சரிக்கிறதோ, (யோகிகளானாலும் அநேகர்களுடன் வஸிக்கக் கூடாதென்பது சிறுமியினிடமாக அப்யஸிக்கப்பட்டது. ஸாமான்ய ஜனங்களுடன் சேரக்கூடாதென்பது ஸர்ப்பத்தினிடம் கற்றுக் கொண்டேனென்று தாத்பர்யம்) எப்படி ஸ்திரமாக வீட்டை வைத் துக்கொள்ளவில்லையோ, எப்பொழுதும் ஜாக்கிரதையாக விருக்கிற தோ, ரஹஸ்யமாக கண்டுபிடிக்கமுடியாத தாயிருக்கிறதோ, (விஷமுள்ளதோ அல்லது விஷமில்லாததோவென்று) அப் படி முனியாக விருப்பவனுமிருக்கவேண்டும். அதிகமாகப் பேசக் கூடாது. சரீரம் ஸ்திரமில்லாததால் அதன் வாஸத்திற்காக வீடு கட்டுவது துக்கத்தையே விளைவிக்கிரது. அதனுல் ப்ரயோஜன மில்லை. ஸர்ப்பமானது பிறருல் செய்யப்பட்ட கிருஹத்தில் ப்ரவே சித்து ஸுகமாக விருத்தியடைகிறதல்லவா?

**16—21.** ப்ரளயகாலத்தில் நாராயணர் ஒருவரே முந்தித் தம் முடைய மாயையைக்கொண்டு ஸிருஷ்டிக்கப்பெற்ற இந்த ஜகத்தை கால சக்தியைக்கொண்டு ஸம்ஹரித்து தாமொருவராகவிருந்தார், அவர் ஸஜாதீயபேதமற்றவர்; விஜாதீயபேதமற்றவர்; ஸத்வம் முதலிய சக்திகள் ஸாம்யாவஸ்தையை அடைந்தபொழுது ப்ரதா னம், புருஷன் இவைகளுக்கு அதிபதியாக தம்மைக்காட்டிலும் வேறு ஆதாரமற்றவராக விருந்தார். அவரே உபாதியற்றவர்; பர மானந்த ஸ்வரூபி; கைவல்யமென்ற சப்தத்தின் பொருள்; ப்ரஹ்ம தேவர், முக்தர்கள் ஆகிய இவர்களால் அடையக்கூடியவர்; பின்பு அவர் தம்முடைய மஹிமையான காலத்தால் முக்குண ஸ்வரூப மாகிய மாயையைத்தூண்டி அதைக்கொண்டு மஹத்தத்வத தைப் படைக்கிறுர். ஒ ஆசை முதலிய சத்ருக்களை ஜயித்த வரே! (ஸம்ஸாரத்திற்குக் காரணமான மஹத்தத்வத்தை ஸிருஷ் டிக்கிறுரென்பதைக்கேட்டு பயப்படவேண்டாமென்று கருத்து) அந்த மாயாகார்யமான மஹத்தத்வம் பலவகையான ஜகத்தை அஹங்காரத்தின்வழியாக படைக்கிறதென்று பெரியோர்கள்

சொல்லுகிறார்கள். அதனிடத்தில் இந்த ஜகத்தானது கோர்க்கப்பட்டிருக்கிறது. அதனால் ஜீவன் ஸம்ஸாரத்தை அடைகிறான். அந்தக் காரணத்தால் அதனை ஸூத்ராத்மா வென்கிறார்கள். பட்டுப்பூச்சியானது ஹிருதயத்திலிருந்து உண்டான பட்டு நூல்களை முகத்தால் விஸ்தரித்து அதனால் விளையாடி திரும்பவும் எப்படி விழுங்குகிறதோ அதுபோல மஹேச்வரன் ஜகத்தைப் படைத்து ஸம்ஹரிக்கிறார்.

22—23. குளவியானது புழுவைக் கூட்டிலடைத்து அதைச் சுற்றி சப்தித்துக்கொண்டிருக்கிறது. அதனைக்கேட்டு உள்ளிருக்கும் புழு மனத்தை அதிலேயே செலுத்தி முந்திய ஸ்வரூபத்தை விடாமலேயே குளவியாக ஆகிறதுபோல்ஸ்நேஹத்தாலாவது,த்வேஷத்தாலாவது, பயத்தாலாவது ஜனங்கள் மனத்தை எவ்விடத்தில் ஸ்திரமாகச் செலுத்துகிறார்களோ, அவர்கள் அதன் ஸாரூப்யத்தை அடைவார்கள்.

24—33. மேற்காட்டியவைகளிடமிருந்து மேற்காட்டிய குணங்களை யெடுத்துக்கொண்டேன். இனி என்னுடைய தேஹத்தினிடமாகத் தெரிந்துகொண்டதைச் சொல்லுகிறேன் கேளும். இந்த தேஹமானது மிக்க துக்கத்தைக் கொடுக்கக்கூடிய ஜனன மரணங்களுள்ளது ; அதனால் வைராக்யம், விவேகம் இவைகளுக்குக் காரணமாயுள்ளது; அதனால் எனக்குக் குருவாயிற்று. இதனால் உண்மையை ஆலோசித்து பிந்தி இந்த சரீரத்தை நாய் முதலியவை பக்ஷிக்கப்போகின்றனவானதால் இது பிறருடையதென்று நிச்சயித்து அதில் அபிமானத்தை ஒழித்து ஸஞ்சரிக்கிறேன். மேலும் இந்த சரீரத்தின் உபயோகத்திற்காகவே மனைவி, மக்கள், பணம், பசுக்கள், வேலைக்காரர்கள், வீடு, பந்துக்கள் இவர்களை போஷிக்கிறார்கள். அதற்காகவே மிக்க ச்ரமப்பட்டு பணத்தையும் ஸம்பாதிக்கிறார்கள். அப்படிப்பட்ட சரீரம் நசித்துவிடுகிறது. பின்னும் அந்த தேஹம் தான் நசிக்கும்பொழுது வேறு சரீரத்தைக் கொடுக்கக்கூடிய கர்மமாகிய விதையை யுண்டுபண்ணிவைக்கிறது. (சரீரம்போன பிறகும் ஜீவனுக்குக் கஷ்டம் நிவர்த்தியடையவில்லை) மரமானது விதையை உற்பத்திசெய்துவிட்டு நசிக்கவில்லையா ? மேலும் அனேகம் ஸ்திரீகளை மணஞ்செய்துகொண்ட ஒரு புருஷனை ஒவ்வொரு ஸ்திரீயும் தனியாக பிடித்திழுப்பதுபோல், மனி

தனை நாக்கு ஒருபக்கத்திலிழுக்கிறது. ஒரு ஸமயம் தாஹம் உபத்ரவிக்கிரது; மற்றெரு ஸமயம் சிச்னமும் (ஆண்குறி) மற்றொருவேளை தோலும், பின்னுமொரு ஸமயம் வயிறும், மற்றொரு ஸமயம் காதும், இன்னுமொரு ஸமயம் மூக்கும், சஞ்சலமான கண் அதன் விஷயமான ரூபத்திலும், மற்ற கர்மேந்திரியங்கள் அதன் விஷயங்களிலும் ஜீவனை, அல்லது தேஹத்தை இழுத்துகொண்டு செல்லுகின்றன. (அதனால் தேஹத்தைப் பார்த்து வைராக்யம் விவேகம் இவைகளை அடையவேண்டுமென்று கருத்து) மேலும் பரமேச்வரன் தம்முடைய சக்தியாகிய மாயயைக்கொண்டு மரங்கள், ஸர்ப்பங்கள், பசுக்கள், பறவைகள், கொசுக்கள், மீன்கள் முதலிய சரீரங்களைப்படைத்து அதனால் திருப்தியடையாமல் புருஷ சரீரத்தைப்படைத்து ஸந்தோஷித்தார். புருஷ சரீரத்தில் ப்ரஹ்மத்தைத் தெரிந்துகொள்ளக்கூடிய புத்தியிருக்கிறது, இந்த மனித ஜன்மம் கிடைப்பது மிக்க அரிது. அனேக ஜன்மங்களெடுத்தபின் மனித ஜன்மம் கிடைக்கும். அப்படி துர்லபமான தேஹத்தைஅடைந்தும் அது அஸ்திரமானதால் அந்த சரீரம்நாசமடைவதற்கு முன்னமேயே க்ஷேமத்தை அடையு முபாயத்தைச் செய்யவேண்டும். விஷய ஸுகத்தில் ஆசைப்படக்கூடாது. விஷய ஸுகம் தாழ்ந்த ஜன்மத்திலும் கிடைக்கிறது. இப்படி அநேக ஆசார்யர்களிடமாக ஜ்ஞானதீபத்தை அடைந்து ஆசையை யொழித்து, அஹங்காரமற்று ஆத்ம ஸ்வரூபத்தில் ரமித்துக்கொண்டு இப்பூமியில் ஸஞ்சரிக்கிறேன். மஹர்ஷிகள் இந்த ப்ரஹ்மத்தை ப்ரபஞ்சமுள்ளதென்றும், ப்ரபஞ்சமற்றதென்றும், பலவகையாகச் சொல்லுகிறுர்கள். ஆனதால் ஒரே குருவினிடமிருந்து பூர்ணமான ஜ்ஞானமுண்டாகிறதில்லை" என்று அந்த ப்ராஹ்மணன் (தத்தாத்ரேயர்) யதுவை நோக்கிச் சொல்லி அவரிடம் விடைபெற்று அரசனுல் நமஸ்கரிக்கப்பெற்று பூஜிக்கப்பெற்று வந்தவழியே திரும்பிச் சென்றுர். இம்மாதிரியான அவதூதருடைய் வார்த்தையைக்கேட்டு நம்முடைய பெரியோர்களுக்குள் பெரியவரான யதுவானவர் ஸகல ஆசைகளையும் ஒழித்து ஸமபுத்தியுள்ளவராக ஆனுர் என்று ஸ்ரீகிருஷ்ணன் உத்தவருக்குச் சொன்னுர்.

---

## அத்யாயம்—10.

### தத்வஜ்ஞான ஸாதனங்கள்.

1—11 ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவரை நோக்கி "என்னால் சொல்லப்பட்ட பாஞ்சராத்ரம் முதலிய தர்மங்களுக்கு விரோதமின்றி என்னையே ஆச்ரயித்து தனது ஜாதிக்கும், ஆச்ரமத்திற்கும், குலத்திற்கும் தகுதியான ஆசாரத்தை யநுஷ்டிக்கவேண்டும். தனக்குரிய தர்மத்தை அநுஷ்டிப்பதால் சித்தம் சுத்தமாகும். "அப்பொழுது ஜனங்கள் விஷயங்களை ஸத்யங்களென்று நினைத்து ஸகல கார்யங்களையும் ஆரம்பிக்கிறார்கள். அவைகளின் பயனோ விபரீதமாக ஆகிறது" என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். மேலும் இந்திரியங்களால் பல வகையான காமனைகள் ஏற்படுகின்றதல்லவா? அவைகள் பல வகையானதாலும் இந்திரியங்களாலுண்டானவையானதாலும் பயனற்றவை. மனத்தாலுண்டாகும் ஸ்வப்னம், மனோரதம் ஆகிய இவைகளே அவைகளுக்கு உதாஹரணங்களாகின்றன. மோக்ஷத்தை விரும்பியவன் காம்ய கர்மங்களை யநுஷ்டிக்கவேண்டாம். நித்ய நைமித்திகமான கர்மத்தை அநுஷ்டிக்கவேண்டும். மேலும் நன்றாக ஆத்மவிசாரஞ் செய்பவன் கர்மங்களைச்செய்யவேண்டுமென்ற விதியையும்ஆதரிக்கவேண்டாம். பிறருக்கு ஹிம்ஸைசெய்யாமலிருப்பது முதலியயமங்களை மிக்க ஆதரவுடன் எப்பொழுதும் அநுஷ்டிக்க வேண்டும். சௌசம்முதலியநியமங்களை ஆத்மஜ்ஞானத்திற்கு விரோதமின்றி தன்னுடையசக்திக்குத்தக்கவாறு சில ஸமயம் அநுஷ்டிக்க வேண்டும். (யமம், நியமம் இவைகளின் ஸ்வரூபமும் 19-வது அத்யாயத்தில் காட்டப்பட்டிருக்கிறது) பின்னும் என்னைத் தெரிந்துகொண்டவனும் என்னுடைய ஸ்வரூபியும், சாந்தனுமாகிய குருவை மிக்க ஆதரவுடன் உபாஸிக்கவேண்டும். ஆசார்யனை உபாஸிப்பவன் எப்படியிருக்கவேண்டுமென்றால்—அஹங்காரமற்றவனாகவும், மாத்ஸர்யமில்லாதவனாகவும், சோம்பலில்லாதவனாகவும், புத்திரன் முதலியவர்களிடத்தில் தன்னுடையதென்ற மமதையில்லாதவனாகவும், ஆசார்யனிடத்தில் ஸ்திரமான ப்ரீதியுள்ளவனாகவும், பரபரப்பில்லாதவனாகவும், விஷயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்றவிருப்பமுள்ளவனாகவும், அஸூயையற்றவனாகவும், (குணங்களை தோஷமாகச் சொல்வது அஸூயை) வீண்வார்த்தைப் பேசாதவனாகவுமிருக்க வேண்டும், மேலும் ஸகலதேஹத்திலுமிருக்கும் ஆத்மா ஒரு

வரானதால் ஸகல சரீரங்களிலும் ஆத்மாவிற்கு ஸாம்யம் ஸம மானது. ஆனதால் புத்திரன், களத்திரம், வீடு, வயல், பந்துக் கள், பணம் இவைகளைமாத்திரம் என்னுடையவையென்று ஏன் நினைக்கவேண்டும்? என்று எண்ணி அவைகளில் உதாஸீனனாக விருக்கவேண்டும். எறிக்கும் அக்கினியானது தன்னால் எறிக்கத் தக்கக் கட்டையைக்காட்டிலும் எப்படிவேறானதோ, ப்ரகாசத்தை யுண்டுபண்ணும் அக்னி எப்படி ப்ரகாசிக்கும் வஸ்துக்களைக்காட் டிலும் வேறானதோ, அப்படி ஆத்மா எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருப்பதனால் பார்க்கப்படும் வஸ்துக்களைகாட்டிலும் வேறா னவர். பின்னும் ஆத்மா தாமாக ப்ரகாசிப்பவரானதால் ஜடங்களைக் காட்டிலும் விலக்ஷணர். ஆனதால் ஸ்தூல, ஸூக்ஷ்மங்களைக்காட் டிலும் ஆத்மா விலக்ஷணர். ஆனதால் தேஹவிலக்ஷணராகிய ஆத்மா எல்லா தேஹங்களிலும் ஒருவரானதால் புத்திரன் முத லியவர்களிடத்தில் மமதை செய்யவேண்டாம். ஆத்மாவிற்கு நாசம், ஜனனம் இவைகளில்லை. ஆத்மா அணுவுமல்ல, பெரிதுமல்ல, அநே கமுமல்ல. அவைகள் சரீரதர்மங்களேயாம். ஆனாலும் ஆத்மா சரீரஸம்பந்தத்தை அடைந்து அந்த தர்மங்களுள்ளவர் போலத் தோன்றுகிறார். (நாசம், ஜனனம், அணுவாவிருப்பது, பெரி தாகவிருப்பது, அநேகமாகவிருப்பது இவையெல்லாம் சரீரத் தின் தர்மமானதால் அந்தந்த உபாதிஸம்பந்தத்தால் ஆத்மாவிற் கும் அவைகளிருப்பதாகத் தோன்றுகிறதேயொழிய உண்மையில் இல்லை) ஈச்வரனுக்கு ஸ்வாதீனமான மாயையின் குணங்களால் இந்த சரீரம் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. அதனை ஆத்மாவென்று நினைத்ததால் ஸம்ஸாரமேற்பட்டது. அது ஆத்மஜ்ஞானத்தால் நிவர்த்தியாகவேண்டும். ஆனதால் ஆத்மவிசாரஞ்செய்து இந்த சரீ ரத்திலேயே பரமாத்மாவிருப்பதாகத் தெரிந்துகொண்டு ஸ்தூல ஸூக்ஷ்மங்களை ஆத்மாவென்று நினைத்திருந்ததைக் க்ரமமாக மாற் றிக்கொள்ளவேண்டும்.

12—13. மேல் அரணி, கீழ் அரணி இவைகளைச் சேர்த்துக் கடைவதாலுண்டான அக்னியானது ஸமித்துகளை பெரித்து ஸமித்து இல்லாதபொழுது சாந்தமாவதுபோல் ஆசார்யனால் சிஷ் யனுக் குபதேசிக்கப்பெற்ற வித்யை(ஜ்ஞான) குணங்களாலுண் டான மாயையை நிவர்த்திக்கிறது. அப்பொழுது பரமானந்த ஸ்வரூ பமாகிறான். ஆசார்யனை அதராரணி. சிஷ்யன் மேலரணி; அவர்சிஷ்

யனுக்குபதேசிப்பதே அரணிகளுடைய சேர்க்கை, அதனுலுண்டாகும் வித்யையே அக்னி. (சுத்தமானதால் அக்னியென்று சொல்லப்பட்டது.)

14—30. (ஆத்மா தாமாக ப்ரகாசிப்பவர்; ஜ்ஞான ஸ்வரூபி; நித்யர்; ஒருவர்; அதைக்காட்டிலும் மற்றவையெல்லாம் அனித்யங்கள். மாயாகார்யங்கள். ஆனதால் அவைகளில் ஆசைப்படாமல் ஆத்மஜ்ஞானத்தை அடைந்தால் மோக்ஷத்தை அடைவானென்ற வேதத்தின் தாத்பர்யம் மேற்காட்டிய ச்லோகங்களால் காட்டப்பட்டது, இனி இதற்கு விரோதமாகச் சொல்பவர்களுடைய அபிப்பிராயத்தைக்காட்டி நிராகரிக்கப்படுகிறது) கர்மங்களை அநுஷ்டிக்கும் ஜீவர்கள் அவைகளின் பயனுகிய ஸுகதுக்கங்களை அநுபவிக்கிருர்கள். அவர்கள் அனேகர்கள்; ஸ்வர்க்கம் முதலிய போகஸ்தானமாகிய லோகமும், அநுபவிக்கும் காலமும், அநுபவிப்பவர்களும் நித்யர்களென்றும், புஷ்பமாலை சந்தனம் முதலிய போக்யவஸ்துக்களும் ப்ரவாஹநித்யங்களென்றும், அவைகள் உண்மையானவைகளே யொழிய மாயாமயங்களல்ல. இதுகுடம், இது வஸ்திரம் என்று பலவகையாக ஜ்ஞானமுண்டாகிறதனுல் ஆத்மஜ்ஞானம்நித்யமல்ல, ஒன்றல்லவென்றும் நினைக்கிருயா? (நான் என்ற ஜ்ஞானத்தால் அறியப்படுகிறதே ஆத்மா. ஒவ்வொரு சரீரத்திலும் ஒவ்வொரு ஆத்மா கர்மங்களை யநுஷ்டிப்பவனும் (கர்த்தா) ஸுகதுக்கங்களை யநுவிப்பவனுமாக (போக்தா) இருக்கிருன். விகாரமற்று ஆத்மா ஒருவனுகவிருக்கிருனென்பதில்லை. ஸுகங்களை அநுபவிக்கும் ஸ்தலங்களாகிய ஸ்வர்க்கம் முதலியவைகளும், அநுபவ காலமும் போக்தாவாகிய புருஷனும் நித்யங்கள் போக்கிய வஸ்துக்களும் நித்யங்களே. ஜ்ஞானம் பலவகையாக உண்டாவதால் ஆத்மஜ்ஞானம் ஒன்றல்ல. இந்த ஜகத்தைப் படைப்பவரான ஈச்வரன் ஒருவர் இருக்கிருரென்பதில்லை. இது ஸ்வதந்திரமானது என்று ஜைமினியின் அபிப்பிராயம்) ஓ உத்தவ! மேற்காட்டிய மதத்தையொப்புக்கொண்டாலும் பிராணிகளுக்கு தேஹஸம்பந்தத்தாலும், ஸம்வத்ஸரம் முதலிய காலத்தின் அவயவத்தாலும் ஜன்மம் முதலிய விகாரங்களேற்படுகின்றன. ஜீவர்களை ஸ்வதந்திரர்களென்று ஒப்புக்கொண்டால் துக்கத்தைக் கொடுக்கும் கர்மங்களை அநுஷ்டித்து துக்கத்தை ஏன் அநுபவிக்கிருர்கள்? ஆனதால் கர்மங்களைச் செய்

வதில் ஜீவர்களுக்கு ஸ்வாதந்திரியமில்லையென்று காணப்படுகிறது. ஸ்வாதந்திரிய மில்லாதவனுக்கு என்ன புருஷார்த்தங் கிடைக்கும்? நல்ல கர்மங்களை அநுஷ்டித்து ஸுகத்தை அநுபவிக்கலாமென்ற ஜ்ஞானமில்லாத மூடர்கள் துக்கத்தை அடைகிறார்கள் என்று சொல்வதும் பொருந்தாது. ஏனென்றால் எவன் வித்வானோ அவன் ஸுகத்தை அடைகிறானென்பதில்லை. மூடன் துக்கத்தை அடைகிறானென்பதுமில்லை. ஆனதால் நாம் நல்லகார்யத்தைச்செய்து ஸுகமாக விருக்கிறோமென்று நினைப்பது வீணான அஹங்காரமேயாம். (ஈசுவரனுக்கு வசப்பட்டுக் கர்மங்களைச் செய்கிறார்களென்று கருத்து) ஸுகத்தை ஸம்பாதித்துக்கொள்ளும் உபாயமும், துக்கத்தை வரவொட்டாமல் தடுப்பதற்கு உபாயமும் ஜீவர்களுக்குத் தெரியுமானால் மிருத்யுவை வரவொட்டாமல் தடுப்பதற்கும் உபாயமும் தெரிந்திருக்கலாம். (அப்படி யில்லையென்று கருத்து) கொலைக் களத்திற்கு சென்றவனுக்கு மற்ற விஷயங்கள் ஸந்தோஷத்தை எப்படி உண்டுபண்ணுகிறதில்லையோ, அப்படி ஸமீபத்தில் மிருத்யு விருக்கும்பொழுது எதுதான் மனிதனுக்கு ஸந்தோஷத்தைக்கொடுக்கும் (ஆனதால் இவ்வுலகததில் ஸுகமே யில்லை) ஸ்வர்க்கத்தில் ஸுகமிருப்பதாகக் கேட்டிருந்தாலும் அது இவ்வுலகத்திய ஸுகம்போன்றதேயாம். ஏனென்றால் அவ்விடத்தில் பிறர் ஸுகப்படுவதைப்பார்த்து ஸஹியாமலிருப்பது, குணங்களை தோஷமாகச் சொல்வது, குறைவு, நாசம் இவைகளிருக்கின்றன. மேலு மவைகளை அடைவதற்கு யாகத்தைச்செய்யவேண்டும். அதற்குப் பலவகையான இடையூர்களிருக்கின்றன. ஆனதால் கிருஷிபோல்அதுவும்ஸுகமானதல்ல.இடையூரின்றி யாகம் முதலிய தர்மங்களை அநுஷ்டித்து ஸ்வர்க்கம் முதலிய லோகத்தை ஸம்பாதித்தாலும் அதன் ஸுகத்தைப்பற்றிச் சொல்லுகிறேன் கேளும். தீக்ஷிதர்கள் இவ்வுலகத்தில் யாகங்களைச்செய்து தேவதைகளைப் பூஜித்து ஸ்வர்க்கலோகத்திற்குச் செல்லுகிறார்கள். அவ்விடத்தில் தேவர்களைப்போல் தங்களுடைய கர்பத்தால் ஸம்பாதிக்கப்பெற்ற போகங்களை அநுபவிக்கிறார்கள். மேலும் ஸகல போக்யவஸ்துக்களுள்ள சுத்தமான விமானத்தில் கந்தர்வர்களால் கானஞ்செய்யப்பட்டு தேவஸ்திரீகளின் நடுவில் அழகிய சரீரத்துடன் வஸிக்கிறார்கள். மேலும் சலங்கை கட்டியதும் இஷ்டப்படிச் செல்லக்கூடியதுமான விமானத்தில் ஸ்திரீகளுடன் ஏறிக்கொண்டு நந்தனம் முதலிய தோட்டங்களில் விளையாடுகிறார்கள். அப்பொழுது தாங்கள்

பூமியில் விழப்போகிறதை நினைக்கிறதில்லை. புண்யமிருக்கும்வரையில் ஸந்தோஷமாகவிருப்பார்கள். புண்யம்குறைந்தவுடன் காலத்தால் தூண்டப்பட்டுப் பூமியில் விழுகிறார்கள். வேதவிதியை மீறி எவன் அதர்மத்தில் விருப்பமுள்ளவனாகி அஸத்துக்களுடன் சேர்ந்து இந்திரியங்களுக்கு வசப்பட்டு போகங்களில் ஆசைகொண்டு ஸ்திரீஸங்கத்தை விரும்பி பிராணிகளை ஹிம்ஸிக்கிறானோ, பசுக்களைக்கொன்று ப்ரேதம், பூதகணம் ஆகிய இவைகளைப் பூஜிக்கிறானோ, அவன் வெகுகாலம் நரகத்தை அடைந்து ஸ்தாவர ஜன்மத்தை அடைவான். இப்படி தேஹத்தால் துக்கத்தைக்கொடுக்கக்கூடிய கர்மங்களைச்செய்து அதனால் திரும்பவும் தேஹத்தை அடைகிறான். ஆனதால் மரண தர்மமுள்ளவனுக்கு ஸுகமேது? ஸ்வர்க்கம் முதலிய லோகங்களுக்கு அதிபதிகளான இந்திரன் முதலியவர்களுக்கும் என்னிடமிருந்து பயமுண்டாகிறது. இரண்டு பரார்த்தம் வரையில் ஜீவிப்பவரான ப்ரஹ்மதேவருக்கும் என்னிடமிருந்து பயமிருக்கிறது. (ப்ரவிருத்தியார்க்கம் அனர்த்தத்தைக் கொடுக்கிறதானதால் அதில் வைராக்கியத்தை அடைவதே மேலானதென்று கருத்து)

31—34. இந்திரியங்கள் கர்மங்களைச் செய்கின்றன. ஸத்வம் முதலியகுணங்கள் இந்திரியங்களைத் தூண்டுகின்றன. இந்திரியங்களுடன் ஸம்பந்தித்த ஜீவன் கர்மங்களின் பயனை அநுபவிக்கிறான், (ஆத்மா ஒன்றையுஞ் செய்ய வில்லை. பயனை அநுபவிப்பதும் ஆத்மாவிற்கு உபாதியாலேற்பட்டதேயொழிய உண்மையிலில்லையென்று தாத்பர்யம்) குணங்களாலேற்படும் போகம், கர்மம் இவை எதுவரையிலிருக்கிறதோ, அது வரையில் ஆத்மா அநேகனென்று தோன்றும். எதுவரையில் ஆத்மா பலவென்று தோன்றுகிறதோ, அதுவரையில் பரதந்திரனாகத்தன்னை நினைத்துக்கொள்வான். எதுவரையில் பரதந்திரன் என்று நினைக்கிறானோ, அதுவரையில் ஈச்வரனிடமிருந்து பயமுண்டாகும். இப்படி இருப்பவர்கள் துக்கத்தை அடைந்து மோஹிப்பார்கள். குணக்ஷோபமுண்டாகும்பொழுது என்னை காலம், ஆத்மா, ஆகமம், லோகம், ஸ்வபாவம், தர்மம் என்று பலவகையாகச்சொல்லுகிறார்கள்" என்று சொன்னார்.

35—37. அதனைக்கேட்டு உத்தவர் பகவானைநோக்கி "குணங்களாலுண்டான சரீர ஸம்பந்தமுள்ள புருஷனுக்கு கர்மம், ஸுகம்

துக்கம் முதலியவைகளில்லாமலெப்படி யிருக்கும்? அவைகளில் அஹங்காரத்தை அடையாமலிருந்தால் அவைகள் பந்தங்களாகிற தில்லையென்றால் அப்படிப்பட்டவன் எப்படி இருப்பான்? எப்படி விளையாடுவான்? எந்த அடையாளங்களுள்ளவனாகவிருப்பான்? எதனைப் புஜிப்பான்? எதனை விடுவான்? எப்படி படுத்திருப்பான்? அல்லது உட்கார்ந்திருப்பானா? நடந்துபோவானா? ஓ அச்யுத! ஒருவனை நித்யபந்தனாகவும், நித்யமுக்தனாகவும் எப்படி இருக்கக்கூடுமென்று எனக்கு ப்ரமம் உண்டாகிறது. கேள்விகளை அறிந்தவர்களுக்குட் சிறந்தவரான நீர் இதனைச் சொல்லவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்.

## நோட்டு.

**வீரறுகவீயத்தில்**—15வது ச்லோகத்தில் தேவாதி சரீரங்கள் அநேகங்களானதாலும், கார்யமானதாலும், அநித்யங்களானதாலும், ப்ரவிருத்திகர்மங்களை விட்டு விடலாமென்றும் போக்ய வஸ்துக்கள் புருஷார்த்தமாகாததனால் அவைகளில் பிரியம் வைக்கக் கூடாதென்றும் பூர்வபக்ஷமேற்படுகிறது. ஆனாலும் அது ஸரியல்ல. தேவாதி சரீரங்கள் அநித்யங்களானாலும், அந்த சரீரத்தை அடைந்த ஜீவர்கள் நித்யர்கள். விஷயங்களின் பரம்பரையும் நித்யம். ஆனதால் ப்ரவிருத்திதர்மம், பயனை அநுபவிக்கும் ஸ்வபாவமுள்ள ஜீவர்களுக்கு புருஷார்த்த ஸாதனமாகிறது. அதனை விட்டுவிடக் கூடாது.

---

# அத்தியாயம்.—11

## பத்தமுக்த லக்ஷணங்கள்

பத்தன் (ஸம்ஸாரி) முக்தனென்ற வியவஹாரம் எனக்கு ஸ்வாதீனங்களான ஸத்வம் முதலிய குணங்களாலேற்படுகிறதேயொழிய உண்மையிலில்லை. (உபாதிகளாலேற்பட்டதென்று கருத்து) அந்த குணங்களுக்கு மாயை காரணமாக விருக்கிறது. ஆனதால் பந்தம் (கட்டு) என்பதுமில்லை. மோக்ஷமென்பதுமில்லை. மேலும் சோகம், மோஹம், ஸுகம், துக்கம், தேஹம் ஆகிய இவைகள் மாயையாலேற்படுகின்றன. ஆனதால் ஸம்ஸாரமென்பது உண்மையிலில்லை. புத்தியின் வேறு அவஸ்தையே ஸ்வப்னமாகிறதல்லவா? ஓ உத்தவ! வித்யா என்றும் அவித்யா யென்றும் இர

ண்டு சக்திகள் மாயையைக்கொண்டு என்னால் உண்டுபண்ணப்பட்டிருக்கின்றன. அவை பிராணிகளுக்கு முறையே மோக்ஷம், ஸம்ஸாரம் ஆகிய இவைகளைக் கொடுக்கின்றன. அவைகள் அனாதிகள் (எப்பொழுது அவித்யையைப் பரவச்செய்கிறேனோ, அப்பொழுது ஸம்ஸாரமும், வித்யையைப் பரவச்செய்யும்பொழுது மோக்ஷமும் தோன்றுகிறதென்று தாத்பர்யம்) மிக்க புத்திசாலியாகிய ஓ உத்தவ! ஜீவனுக்கும் எனக்கும் பேதமில்லை. ஜீவன் என்னுடைய அம்சமே யொழிய வேறில்லை அப்படிப்பட்ட ஒருவனுக்கே அனாதியான அவித்யா ஸம்பந்தத்தால் பந்தமும் (ஸம்ஸாரம்) வித்யா ஸம்பந்தத்தால் மோக்ஷமுமேற்படுகிறது (சந்திரன் ஒருவனானாலும் ஜலத்தில் பிரதிபலித்தால் பிம்பம் ப்ரதிபிம்பம் என்ற பேதம் எப்படி உபாதிஸம்பந்தத்தாலேற்படுகிறதோ, ஜலம் அசைந்தால் ப்ரதிபிம்பமும் அசைவதாக எப்படித் தோற்றுகிறதோ, அப்படி அவித்யையில் பிரதிபலித்த என்னுடைய அம்சமே, ஜீவன். அவனுக்கு அவித்யயால் பந்தமேற்படுகிறது. மேலும் ஜலம் நிறைந்த குடத்திலும், குளத்திலும் சந்திரன் பிரதிபலித்தால் அந்த ப்ரதிபிம்பம் உபாதி பேதத்தால் குடத்தில் தோன்றுவதைவிட குளத்தில் தோன்றுவது வேறென்று நினைக்கபடுகிறதல்லவா? அப்படி ஜீவன் உபாதி ஸம்பத்தால் அனேகனாகத் தோன்றுகிறானே யொழிய உண்மையில் என்னுடைய அம்சமே. குடம் உடைக்கப்பட்டால் அதில் தோன்றிய சந்திரபிம்பம் உபாதி நாசத்தால் பிம்பத்துடன் ஒன்றாகிவிடுகிறது. ஆனாலும் குளத்திலுள்ள ப்ரதிபிம்பம் அப்படியே இருக்கிறது. அது போல் ஒரு ஜீவன் உபாதி நாசத்தால் என்னை அடைந்தாலும் உபாதியுள்ளவன் ஸம்ஸாரியாக விருக்கிறான் என்று கருத்து) ஓ உத்தவ! ஈச்வரன் முக்தன். ‘ஜீவன் ஸம்ஸாரி. அவ்விருவர்களும் ஒரே சரீரத்திலிருக்கிறார்கள். ஆனால் ஜீவன் ஈச்வரனுக்கு வசப்பட்டவனாகவும், ஈச்வரன் நியந்தாவாகவும் இருக்கிறார். ஜீவன் சோகமுள்ளவன்; ஈச்வரன் ஆநந்தமுள்ளவர்; ஆனதால் அவ்விருவர்களும் விருத்ததர்பமுள்ளவர்கள்; அவ்விருவர்களுக்குமுள்ள வித்யாஸத்தைச் சொல்லுகிறேன்.

6. இரண்டுபறவைகள் ஒரு மரத்தில் வஸித்தாற்போல் தேஹத்தில் அதைக்காட்டிலும் வேறாக ஜீவன்,ஈச்வரன் ஆகிய இருவர்களிருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் ஸமானர்கள்; (சித்

ரூபிகளானதால்) தோழர்கள் (பிரிந்திருக்கிறதில்லை, ஒரேமன முள்ளவர்கள்) இம்மாதிரியென்று குறிப்பிடமுடியாததான மாயயால் அனித்யமான சரீரத்தில் பறவைகள் மரத்தில் கூடுகட்டி கொண்டு வஸிப்பதுபோலிருக்கிறார்கள்; அவ்விருவர்களுக்குள் ஜீவன் சரீரமாகிய மரத்தில்பழுக்கும் பழமாகியகர்மபலனை அநுபவிக்கிறான். மற்றொருவனாகிய ஈச்வரன் அதனை அநுபவிக்கிறதில்லை. ஆனாலும்மிக்க ஆனந்தம், ஜ்ஞானபலம் ஆகிய இவைகளுள்ளவனாக விருக்கிறான். ("மேல்நோக்கிய வேர்களுள்ளதும், கீழ் நோக்கிய கிளைகளுள்ளதுமான அச்வத்தமரம்" என்று ச்ருதியிலும், பகவத்கீதையிலும் ஸம்ஸாரத்தை விருக்ஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் மேற்காட்டிய ச்லோகத்தின் அர்த்தம் "த்வாஸுபர்ணா" என்ற ச்ருதியின் பொருளேயாம்.)

7. எவன் சரீரமாகியமரத்தின் பழமானஸுகதுக்கங்களை அநுபவிக்கிறதில்லையோ, அந்தஈச்வரன், தம்மையும்; ஜீவனையும், நன்றாகத்தெரிந்துகொண்டிருக்கிறார். ஆனதால்அவர் வித்வானெனப்படுகிறார். கர்மத்தின்பயனை அநுபவிப்பவனாகிய ஜீவன் தன்னுடைய ஸ்வரூபத்தையும், ஈச்வரனுடைய ஸ்வரூபத்தையும்அறியான். எவன் அவித்யையுடன் சேர்ந்திருக்கிறானோ, அந்த ஜீவனே வெகுநாளாக பத்தனாகிறான். (ஸம்ஸாரியென்று கருத்து) எவன் அவித்யையின் ஸம்பந்தமற்று வித்யயை அடைகிறானோ, அவனே நித்ய முக்தனாகிறான்.

8. தூங்கிவிழித்தபின் ஸ்வப்னத்தில் கண்டவைகளைமனத்தால் நினைக்கிறான். அப்பொழுதும் அவைகள் தோன்றுகின்றன. ஆனாலும்இதுஸ்வப்னம், உண்மையல்லவென்று தெறிந்துவிட்டதனால்அந்தஸுகதுக்கங்களை எப்படிதூங்கிவிழித்தவன் அநுபவிக்கிறதில்லையோ, அப்படிஆத்மாவிற்கும்சரீரம்முதலியவைகளுக்கும் ஸம்பந்தமில்லை. ஆத்மா எல்லாவற்றைக்காட்டிலும்விலக்ஷணன்" என்ற ஜ்ஞானமுள்ளவித்வான்முந்தியஸம்ஸ்காரத்தால்தேஹத்திலிருந்தாலும் அவன்தேஹத்தில் இருப்பவனாகமாட்டான்(அஜ்ஞனாகவிருக்கும்பொழுதுசரீரம் முதலியவைகளில் அபிமானத்தை வைத்து அதன் ஸுதுக்கங்களை தன்னுடையதென்று அநுபவிக்கிறான். ஜ்ஞானமுண்டான பின் அவித்யையில்லாததால் சரீரஸம்பந்தமிருப்பதாகத்தோன்றினாலும் அதில் அவனுக்குஅபிநிவேச

மில்லை, அதனால் ஸுகத்தையாவது துக்கத்தையாவது அடைகிற தில்லை. முக்தனுக்கு சரீரமிருந்தாலும் அது பந்தகமாகிறதில்லை யென்று கருத்து.) ஸ்வப்னம் பொய்யானதால் அதிலுண்டாகும் ஸுகதுக்கங்களால் ஆத்மாவிற்கு உண்மையில் யாதொருபயனு மில்லை. ஆனாலும் அதனை உண்மையென்று நினைத்து அதிலுண் டான ஸுகதுக்கங்களை அநுபவிப்பதுபோல்மூடன் தான் சரீரத் திலிருப்பதாகவும் அதன் ஸுகதுக்கங்கள் தன்னைச்சார்ந்தவை யென்றும்நினைக்கிறான். (பத்தஜீவனுக்கும்முக்தஜீவனுக்குமுள்ள பேதம் இதுமுதல் பத்துச்லோகங்களால் காட்டப்படுகிறது.)

9—10. எவன் ஜ்ஞானமுள்ளவனோ, அவன் இந்திரியங் களின் விஷயங்களாகிய ரூபம் முதலியவைகளை க்ரஹித்தாலும், குணங்களால் குணங்கள் க்ரஹிக்கப்படும்பொழுதும் நான் பார்க் கிறேன் என்று அஹங்காரத்தை அடையாமல் ஆசை, த்வேஷம் இவைகளற்றிருப்பான். (ஓ அர்ஜுன! குணங்கள், கர்மங்கள் இவைகளின் பிரிவினுடைய உண்மையை அரிந்தவன்,இந்திரியங் கள் விஷயங்களை கிரஹிக்கின்றன என்று நினைத்து அவைகளில் ஆசைப்படமாட்டான். பகவத்கீதா.)மூடன் கர்மாதீனமான இந்த சரீரத்தில் வஸித்து இந்திரியங்களால் செய்யப்படும்கர்மங்களைத் தான்செய்வதாகநினைத்து ஸம்ஸாரத்தை அடைகிறான் ("ப்ரகிரு தியின் குணங்களால் எல்லாகர்மங்களும் செய்யப்படுகின்றன. ஆனாலும்ஜீவன் அஹங்காரத்தால் புத்தி மயக்கமடைந்துஅந்தக் கர்மங்களைத்தான் செய்ததாக நினைக்கிறான்"—பகவத்கீதை.8,9, 10-ச்லோகங்களால் முக்தன் சரீரமுள்ளவனானாலும் அபிமான மற்று ஸுகதுக்கத்தில் ஸம்பந்தப்படாமலிருப்பானென்றுசொல் லப்பட்டது.)

11—12. மேற்காட்டியபடி படுப்பது உட்காருவது, ஸஞ் சரிப்பது,ஸ்நானஞ்செய்வது, பார்ப்பது, தொடுவது, முகருவது, புஜிப்பது,கேட்பது முதலியவைகளில் மூடன் எப்படி அபிநிவே சத்தை அடைகிறானோ,அப்படி வித்வான்ஆசைப்படாமல்இந்திரி யங்கள் விஷயத்தை புஜிக்கும்பொழுது அதற்கு ஸாக்ஷியாக விருப்பான். (தான் கிரஹிப்பதில்லை) ஆகாயம் எங்கும் வ்யாபித் திருந்தாலும் எப்படி ஒன்றிலும்ஸம்பந்திக்கிறதில்லையோ,ஸூர் யன், ஜலம்முதலியவைகளில் ப்ரதிபலித்தாலும் எப்படி அதன்

குணங்களை அடைகிறதில்லையோ' வாயுஎங்கும் ஸஞ்சரித்தாலும் எப்படி ஒன்றிலும் ஸம்பந்தத்தை அடைகிறதில்லையோ' அப்படி ஜ்ஞானி,ப்ரகிருதியின்கார்யமான தேஹத்திலிருந்தாலும் ஒன்றிலும் பற்றுதலை அடையமாட்டான். அந்த வைராக்யமாகிய கூர்மையான கத்தியால் எல்லா ஸம்சயங்களையு மொழித்துபேத புத்தியைவிட்டுவிடுவான், தூங்கிவிழித்தவன் ஸ்வப்னத்தில் கண்டவைகளை உண்மையல்லவென்றுதெரிந்துகொள்ளவில்லையா?

13. எவனுடைய ப்ராணன், இந்திரியங்கள், மனம், புத்தி இவைகளுடையவிருத்திகள் ஸங்கல்பமற்றிருக்கின்றனவோ,அவன் தேஹத்திருலிப்பவனானாலும் அதன்குணங்களால்விடப்பட்டவனேயாம். (இதுவரையில்பத்தனுக்கும் முக்தனுக்கும்சொல்லப்பட்ட லக்ஷணங்கள் அவர்அவர்களால்அறியக்கூடியவை.பிறரால் அறியக்கூடிய லக்ஷணங்கள்பிந்திய ச்லோகங்களால் காட்டப்படுகின்றன).

14—24. துஷ்டர்களாலாவது, புலி முதலிய மிருகங்களாலாவது சரீரத்திற்கு உபத்திரவம்நேர்ந்தால் எவன்துக்கப்படாமலிருக்கிறானோ,தைவச்செயலாகபிறரால் பூஜிக்கப்படும்பொழுதும்எவன் ஸந்தோஷப்படவில்லையோ, அவன் ஜ்ஞானியாவான். ("எவன் குத்திஉபத்திரவிக்கிறானோ,எவன் சந்தனம்பூசுகிறானோ,அவ்விருவர்களிடத்திலும் முறையேஎவன்கோபியாமலும், ஸந்தோஷியாமலுமிருக்கிறானோ,அவனேஸமபுத்தியுள்ளவன்"-யாஜ்ஞவல்கியர்) எவன் தன்னை ஸ்தோத்திரஞ்செய்பவர்களையாவது, தனக்கு உபகாரஞ்செய்பவர்களையாவது ஸ்துதிக்கிறதில்லையோ, தனக்கு அபகாரஞ்செய்பவர்களை எவன் நிந்திக்கிறதில்லையோ, எவன் பிறருடைய குணதோஷங்களைக் சொல்லுகிறதில்லையோ, எவன்எல்லாவற்றையும்,ஸமமாகபார்க்கிறானோ,அவன் ஜ்ஞானியாவான், ஜ்ஞானி நல்லது, கெட்டது முதலிய ஒன்றையும் செய்யமாட்டான், ஒன்றையுஞ்சொல்லவும்மாட்டான்.ஒன்றையும்நினைக்கமாட்டான். இப்படிலௌகிகவ்யவஹாரத்தை மறந்து ஆத்மாவினிடத்தில் ரமித்து மூடன்போல ஸஞ்சரிப்பான். மேலும்எவன் சாஸ்திரங்களை முழுவதையும் படித்து அவைகளின் அர்த்தங்களை நன்றாய் தெரிந்துகொண்டும் பரமாத்மாவை த்யானஞ்செய்யவில்லையோ, அவனுடைய படிப்பு பயனற்றது. அவன் மலடான பசுவைக் காப்பா

ற்றியவனுக்குச் சமானன். மேலும் கறவையில்லாத பசுவையும், காமத்துக்குபயோகப்படாதமனைவியையும், பிறருக்கு அதீனமான தேஹத்தையும், அஸத்தான புத்திரனையும், (எவனால் இவ்வுலகத்தியலோகமும், பரலோகலோகமும்கிடைக்கவில்லையோ அந்தப்புத்திரன் அஸத்தனெனப்படுகிறான்) அதிதிகளுக்கு பயோகப்படுத்தாதபணத்தையும், என்னுடைய குணங்களை யுச்சரிக்காதவாக்கையும் மிக்க ச்ரமப்பட்டு ஜனங்கள் ரக்ஷிக்கிறார்கள். (அதனால் துக்கத்தை அடைவார்களென்று கருத்து) இந்தஜகத்தைப்பரிபாலிப்பது, படைப்பது, ஸம்ஹரிப்பது ஆகியஎனதுசரிதம், லோகத்தைப் பரிசுத்தப்படுத்தக்கூடியது. அந்த சரிதத்தை எவனுடையவாக் உச்சரிக்கவில்லையோ, ஸ்ரீ ராமனாகவும், ஸ்ரீ கிருஷ்ணனாகவும் அவதரித்த என்னுடைய அவதாரகதைகளைஎவன் கானஞ்செய்யவில்லையோ, அவனுடையவாக்கு பயனற்றதேயாம். புத்திசாலியாகவிருப்பவன் அப்படிப்பட்ட வாக்கைவைத்துக்கொள்ளக் கூடாது. இப்படி உண்மையை விசாரித்து தேஹம்முதலியவைகளை ஆத்மாவென்று நினைத்திருந்ததை (ப்ரமஜ்ஞானத்தை) விட்டு அதனால் சுத்தமான மனத்தை எங்கும்வ்யாபித்திருக்கும் என்னிடத்தில் ஸமர்பித்துசாந்தியடையவேண்டும். பரப்ரஹ்மத்தினிடத்தில்மனத்தைச்செலுத்தி ஸ்திரமாக வைத்துக்கொள்ள முடியாவிடில் பயனை விரும்பாமல் கர்மங்களை அநுஷ்டித்து அவைகளை என்னிடம் ஸமர்ப்பணஞ்செய்யவேண்டும். ஓ உத்தவ! என்னுடையஸந்தோஷத்திற்காகதர்மம், காமம், அர்த்தம் இவைகளை அடைந்து என்னையே ஆச்ரயித்து மிக்க ச்ரத்தையுடன் என்னுடைய கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்கவேண்டும். அவைகள் மிக்க மங்களத்தைக்கொடுப்பவைகள்; லோகத்தைப்பரிசுத்தப்படுத்துபவைகள்; மேலும் என்னுடைய அவதாரகதைகளைக்கானஞ்செய்யவேண்டும். இப்படி அநுஷ்டித்துவந்தால் ஸநாதனனாகிய என்னிடத்தில்ஸ்திரமான பக்தியுண்டாகும். இப்படிஸாதுக்களுடைய சேர்க்கையால் பக்தியை அடைந்து என்னை த்யானிப்பான். அப்படி த்யானஞ்செய்பவன் ஸாதுக்களால் காண்பிக்கப்பெற்ற என்னுடைய பதத்தை விரைவில் அடைவான்" என்றார்.

25—27. அதனைக்கேட்ட உத்தவர் பகவானை நோக்கி "ஓ உத்தமச்லோக! ஸாதுக்களுடைய ஸங்கத்தால் பக்தியுண்டாகு

மென்று சொன்னீரே. எப்படிப்பட்டவன் ஸாதுவென்று உம்முடைய அபிப்பிராயம்? அந்த ஸாதுக்கள் எத்தனை பக்தியென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்? எப்படிப்பட்ட பக்தி உம்மிடத்தில் உபயோகப்படும். நீர் ப்ரக்ருதி, புருஷன் ஆகிய இவர்களுக்கும் அதிபதியாகவிருப்பவர்; ஆகாயம்போல் ஒன்றிலும் சேராதவர், பரப்ரஹ்மம்; தமது இச்சையால் பலவகையான சரீரங்களை அங்கீகரித்துப் பூமியில் அவதரிக்கிறீர். ரஹஸ்யமான இந்தவிஷயத்தை நீர்தான் சொல்லவேண்டும். உம்மை நான் சரணமடைகிறேன், என்று கேட்டுக்கொண்டார்.

28—32. அதனைக்கேட்ட பகவான் உத்தவரை நோக்கி "பிறர் துக்கிப்பதைப்பார்த்து ஸஹியாமலிருப்பது, ஒருவருக்கும் த்ரோஹஞ்செய்யாமலிருப்பது, பொறுமையுள்ளவனாகவிருப்பது, ஸத்வ குணத்தையே ஆச்ரயித்திருப்பது, அஸூயை முதலியவையில்லாமலிருப்பது, ஸுகதுக்கங்களில் ஸமபுத்தியுள்ளவனாக விருப்பது, எல்லோருக்கும் உபகாரஞ்செய்வது, காமங்களால் மனங் கலங்காமலிருப்பது, இந்திரியங்களை ஜயிப்பது, கல்நெஞ்சமுள்ளவனாக வில்லாமலிருப்பது; நல்லொழுக்கமுள்ளவனாகவிருப்பது, ஒன்றிலும் பற்றுதலில்லாமலிருப்பது, திருஷ்டமான பயன் அதிருஷ்டமான பயன் இவைகளில் ஆசையில்லாமலிருப்பது, ஸ்வல்பமான ஆஹாரமுள்ளவனாகவிருப்பது, மனத்தை அடக்குவது, தனக்குறிய தர்மத்தை அநுஷ்டிப்பதில் ஸ்திரபுத்தி, என்னையே ஆச்ரயித்திருப்பது, முனியாகவிருப்பது, ஸாவதானனாகவிருப்பது, விகாரமற்றிருப்பது, ஆபத்துக்காலத்திலும் தைர்யத்தை விடாமலிருப்பது, பசி, தாஹம், சோகம், மோஹம், கிழத்தனம் மரணம் ஆகிய தோஷங்களை ஜயிப்பது, மானத்தை அபேக்ஷியாமலிருப்பது, பிறருக்கு மானத்தைக்கொடுப்பது, பிறருக்கு ஜ்ஞானத்தை யுபதேசிக்க வல்லமையுள்ளவனாகவிருப்பது, கபடமில்லாமலிருப்பது, கருணையுள்ளவனாகவிருப்பது ஆகிய குணங்களுள்ளவன் ஸாதுவெனப்படுகிறான். மேலும் வேதமுகமாக என்னால் சொல்லப்பட்ட நல்ல கர்மங்களை அநுஷ்டிப்பதால் சித்த சுத்தி முதலியவை யுண்டாகிறதென்றும், அதனைச் செய்யாவிடில் பாபமுண்டாகுமென்பதையும் தெரிந்துகொண்டும் ஈச்வரனிடத்தில் பக்திசெய்வதாலேயே சித்த சுத்தி முதலியவை யுண்டா

இன்றனை என்றும், நினைத்து ஸகல தர்மங்களையும்விட்டு என்னிடத்தில் எவன் பக்தி செய்கிறானோ, அவனும் ஸாதுக்களில் சிறந்தவனாகிறான். எவர்கள் என்னை காலதேசங்களால் அளவிடக்கூடாதவனென்றும், ஸகல ஸ்வரூபியென்றும், ஸத், சித், ஆனந்தம் இந்த ஸ்வரூபியென்றும் தெரிந்துகொண்டு வேறொரு தேவதைகளையும் நினைக்காமல் என்னையே ஸேவிக்கிறார்களோ, அவர்கள் பக்தர்களுக்குட் சிறந்தவர்கள்.

33—48. என்னுடைய பிரதிமை, பக்தர்கள் இவர்களைத் தர்சிப்பது, தொடுவது, பூஜிப்பது, சுச்ரூஷைசெய்வது, ஸ்தோத்திரஞ்செய்வது, வணங்குவது, அவைகளுடைய குணங்களையும் சரிதங்களையும் சொல்வது, என்னுடைய கதையைக் கேட்பதில் ச்ரத்தையுள்ளவனாகவிருப்பது, என்னை த்யானஞ்செய்வது, கிடைத்த வஸ்துவை எனக்கு அர்ப்பணம் செய்வது, தன்னை ஈச்வரனுக்குத் தாஸனென்று நினைத்து ஆத்மாவை என்னிடம் ஸமர்ப்பிப்பது, ஜன்மாஷ்டமி முதலிய தினங்களில் என்னுடைய அவதாரம் சரித்திரம் இவைகளைச்சொல்லி ஸந்தோஷிப்பது, தேவாலயத்தில் வாத்யம், நர்த்தனம், கானம் இவைகளைச் செய்து உத்ஸவம் கொண்டாடுவது, சாதுர்மாஸ்யம், ஏகாதசி முதலிய தினங்களில் என்னுடைய பிரதிமைகளை புஷ்பங்களால் அலங்கரித்து வெளியில் தூக்கிக்கொண்டு செல்வது, வைதிகமாகவாவது தாந்திரிகமாகவாவது, தீக்ஷைசெய்துகொண்டு என்னுடைய விருதத்தைத் தரிப்பது, என்னைப்பூஜிப்பதிலும் என்னுடைய பிரதிபிம்பத்தின் ப்ரதிஷ்டையிலும் ச்ரத்தைவைப்பது, புஷ்பத்தோட்டம், உபவனம் (பழங்களை முக்கியமாய்உடையது) விளையாடும் ஸ்தலம், பட்டிணம் முதலியவைகளை பிறருடன் சேர்ந்து ஏற்படுத்துவது தேவாலயத்தில் குப்பையில்லாமல் பெருக்குவது, சாணத்தால் மெழுகுவது ஜலம்தெளிப்பது, கோலம்போட்டு அலங்கரிப்பது, முதலிய சுச்ரூஷையைக் கபடமில்லாமல்செய்வது, அஹங்காரம், டம்பம் இவைகளில்லாமலிருப்பது, செய்ததைச் சொல்லாமலிருப்பது ஆகிய இவைகள்பக்தியெனப்படுகின்றன. மேலும்மற்றதேவதைகளுக்கு உபயோகப்படுத்திய தீபம், அன்னம் முதலியவைகளை எனக்கு உபயோகிக்கக்கூடாது, எந்தெந்த வஸ்துக்களில்தனக்கு ப்ரியமிருக்கிறதோ, அவைகளை எனக்கு நிவேதனம் செய்யவேண்டும். ஓ உத்தவ! ஸூர்யன் அக்னி, ப்ராஹ்மணன், பசு, விஷ்

ணுபக்தன், ஆகாயம், வாயு, ஜலம், பூமி, ஆத்மா, ஸகலப்பிராணிகள் ஆகிய இவைகளில் என்னைப் பூஜிக்கலாம். ஸூர்யனிடத்தில் வேதத்தால் ஸ்தோத்திரஞ்செய்து என்னைப் பூஜிக்கவேண்டும். அக்னியில் ஆஜ்யம் முதலிய ஹவிஸ்ஸை ஹோமஞ்செய்து என்னைப் பூஜிக்கவேண்டும். அன்னம் முதலியவைகளால் அதிதிகளைத் திருப்தி செய்து ப்ராஹ்மணர்களிடத்தில் என்னைப் பூஜிக்கவேண்டும். புல் முதலிய ஆஹாரங்களை பசுக்களுக்குக் கொடுத்து அவைகளில் என்னைப் பூஜிக்கவேண்டும். விஷ்ணுபக்தனை பந்துக்களைப்போல் ஆதரித்துப்பூஜிக்கவேண்டும். ஹிருதயாகாசத்தில்முக்கியப்ராணனாகப் பாவித்து உபாஸிக்கவேண்டும். ஜலத்தில் தர்ப்பணம் முதலியவைகளால் என்னையுபாஸிக்கவேண்டும். பூமியில் ரஹஸ்ய மந்திரங்களுடையயந்திரங்களைஎழுதிஎன்னைத்யானிக்கவேண்டும். ஆத்மாவிலோவென்றால் போகங்களால் என்னை யுபாஸிக்கவேண்டும். மேற்சொல்லிய ஸ்தானங்களில்என்னுடைய ஸ்வரூபத்தை சங்கம், சக்கிரம், கதாயுதம், தாமரைமலர், இவைகளைநான்குகைகளில் தரித்தும் சாந்தமுமாக இருப்பதாக த்யானம்செய்யவேண்டும். ஜ்யோதிஷ்டோமம் முதலிய இஷ்டதர்மத்தாலும், குளம், கிணறு முதலியவைகளை வெட்டுவிப்பது முதலிய பூர்த்ததர்மங்களாலும் எவன் என்னை யுபாஸிக்கிறானோ, அவனுக்கு என்னிடத்தில் ஸ்திரமான பக்திபுண்டாகும். அந்த பக்தி ஸாதுக்களுடைய சேர்க்கையாலுண்டாகிறது. ஓ உத்தவ! ஸாதுக்கள் என்னை ஆச்ரயித்திருப்பதால் ஸாதுக்களுடைய சேர்க்கையால் உண்டாகும் பக்தியே, பெரும்பாலும்ஸம்ஸாரத்தை நிவர்த்திக்கும். அதைக்காட்டிலும் வேறு உபாயமில்லை. இனி என்னால் சொல்லப்படும் விஷயம் மிகவும் ரஹஸ்யமானாலும் நீர் எனக்கு வேலைக்காரரும், பிரியமுள்ளவரும் அனுகூலத்தைவிரும்பியவருமாகவிருப்பதால் அதனைச் சொல்லுகிறேன், கேளும்.

---

## அத்யாயம்—12.

### ஸாது ஸங்கத்தின் மஹிமை.

1–15. ஓ உத்தவ! ஸாதுக்களுடையஸங்கம் (சேர்க்கை) எல்லா ஆசைகளையும் நிவர்த்திக்கக் கூடியது. அப்படிப்பட்ட ஸாதுக்க

ளின் ஸங்கத்தால் நான் எவ்வளவு ஸந்தோஷமடைவேனோ, அவ்வளவு ஸந்தோஷத்தை யோகமார்க்கத்தாலடையமாட்டேன். (வசப்படமாட்டேன்) மேலும், விவேகம், ஸாமான்யதர்மம், வேதாத்தியனம், தபஸ், ஸந்யாஸம், அக்னிஹோத்திரம் முதலிய இஷ்டதர்மங்கள் கிணறு குளம் வெட்டுவிப்பது முதலிய பூர்த்ததர்மம், கொடுப்பது, ஏகாதசிமுதலிய வ்ரதங்களை யனுஷ்டிப்பது, தேவபூஜை, ரஹஸ்ய மந்திரங்களை ஜபஞ்செய்வது. புண்யதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்வது முதலியவை,, நியமங்கள், யமங்கள் ஆகிய இவைகளால் எனக்கு அவ்வளவு ஸந்தோஷமுண்டாகிறதில்லை. பின்னும் திதியின் புத்திரர்களான அஸுரர்கள், ராக்ஷஸர்கள், பறவைகள், மிருகங்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுகள், நாகர்கள், ஸித்தர்கள், சாரணர்கள், குஹ்யர்கள், வித்யாதரர்கள், மனுஷ்யர்களில் வைச்யர்கள், சூத்திரர்கள், ஸ்திரீகள், சண்டாளன் முதலிய தாழ்ந்த ஜாதியார்கள், இன்னும் ரஜஸ் தமஸ் இந்த ஸ்வபாவமுள்ளவர்கள் ஆகிய இவர்கள் ஸாதுக்களுடையசேர்க்கையால் ஒவ்வொரு யுகத்திலும் என்னுடைய பதத்தை அடைந்திருக்கிறார்கள். மேலும் விருத்ரன், ப்ரஹ்லாதன் முதலியவர்கள், விருஷபர்வா, பலி, பாணன், மயன், விபீஷணன், ஸுக்ரீவன், ஹநுமான், ஜாம்பவான், யானை, ஜடாயு, வியாபாரி (தராசு பிடிப்பவன்) தர்மவ்யாதன், குப்ஜா (கூனி) கோகுலத்திலுள்ள கோபிகைகள், தீக்ஷிதபத்னிகள் ஆகிய இவர்கள் வேதங்களை அத்யயனஞ்செய்யவில்லை. பெரியோர்களை யுபாஸிக்கவில்லை; வ்ரதங்களை அநுஷ்டிக்கவில்லை; தவஞ்செய்யவில்லை; ஆனாலும் ஸாதுஸங்கஞ்செய்ததால் என்னை அடைந்தார்கள். பின்னும் கோபிகைகளும், பசுக்களும், மரங்களும் (யமளார்ஜுனம்) காளியன்முதலியவிவேகமில்லாத ஜந்துக்களும் ஸாதுக்களுடைய ஸங்கத்தால் என்னிடம் மனதைச்செலுத்திய காரணத்தால் மாத்திரம் கிருதார்த்தங்களாகி என்னை அடைந்தன. எந்த பதம் ஸாங்க்யத்தாலும், யோகத்தாலும், தபஸ்ஸினாலும் தானத்தாலும், விருதங்களாலும், யாகங்களாலும், வேதாத்யயனங்களாலும், ஸன்னியாஸத்தாலும் அடையமுடியாததோ, அந்தப்பதத்தை மேற்காட்டிய கோபிகைமுதலியவர்கள் அடைந்தார்கள். மேலும் நான் அக்ரூரரால் அழைக்கப்பட்டு பலராமனுடன் மதுராநகரஞ் சென்றிருந்தபொழுது அந்த கோபிகைகள் என்னிடத்தில் மிக்க பிரியத்துடன் சித்தத்தைச்செலுத்தி என்னைவிட்டுப்

பிரிந்ததால் துக்கத்தை யடைந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு வேறு ஒரு வஸ்துவாலும் ஸுகம் உண்டாகவில்லை. மேலும் அவர்கள் பிருந்தாவனத்தில் ஒவ்வொரு ராத்திரியையும் மிக்க பிரியனாகிய என்னுடன் சேர்ந்து அரைக்ஷணம்போலக் கழித்தவர்களானதால் என்னைவிட்டுப் பிரிந்தகாலத்தில் அவர்களுக்கு இரவுகள் கல்பங்கள்போல விருந்தன. பின்னுமவர்கள் ஸமுத்திரத்தில் சேர்ந்த நதியின் ஜலங்கள் நாமரூபங்களைவிட்டு ஒரே ஜலமாக ஆகிறதுபோலும், மஹர்ஷிகள்ஸமாதியிலிருக்கும்பொழுது ஜகத்து முழுவதும் ப்ரஹ்மத்தினிடம் சேர்ந்து நாமரூபங்களை விட்டு ஒன்றாக விருக்கிறது என்று தெரிந்துகொண்டு தங்களையாவது ஜகத்தையாவது ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேறாக எப்படி நினைக்கிறதில்லையோ, அதுபோல அந்த கோபிகைகள் தங்களுடைய ஆத்மாவையும் ஜகத்தையும் மறந்து என்னையே த்யானஞ் செய்து கொண்டிருந்தார்கள். என்னுடைய ஸ்வரூபத்தின் உண்மையை யறியாத பெண்களாகிய அநேக கோபிகைள், தங்களுடைய பர்த்தாவென்றும், ஜாரனென்றும் என்னையேத்யானித்து பரப்ரஹ்மமாகிய என்னை அடைந்தார்கள். ஆனதால் ஓ உத்தவ! நீரும் வேதத்திற் சொல்லிய விதி நிஷேதங்களைக் கவனியாமல் ப்ரவிருத்தி தர்மம், நிவிருத்தி தர்மம், கேட்கப்பட்டது, கேட்கவேண்டியது இவைகளைவிட்டு எல்லா ப்ராணிகளுக்கு ஆத்மாவாகவிருக்கும் என்னை ஒருவனையே சரணமடையும். அதனால் எங்கும் பயமற்றவராக ஆய்விடுவீர் என்று சொன்னார்.

16. அதனைக்கேட்ட உத்தவர் ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி "ஓ யோகேசர்களுக்குமதிபதியே! முந்திஸ்வதர்மத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்று சொன்னீர். பின்பு எல்லா தர்மங்களையும் விட்டு என்னைச் சரணமடையென்று சொல்கிறீர். அதனால் மனத்திலுள்ளஸம்சயம் நிவர்த்தியடையவில்லை. கர்மங்களைஅநுஷ்டிக்கவேண்டுமா? வேண்டாமா? இம்மாதிரியான உம்முடைய வார்த்தையைக்கேட்டு மனம் மோஹிக்கிறது. அதன் நிச்சயத்தைச் சொல்லும்" என்று கேட்டார். (இந்தக் கேள்விக்கு 8-ச்லோகங்களால் பதில் சொல்லப்பட்டிருக்கிறது, எப்படியெனில்)

17—24. அதனைக்கேட்ட பகவான் உத்தவரை நோக்கி "மாயயை ஸ்வாதீனப்படுத்திக்கொண்ட பரமாத்மா ஜகத்ஸ்வரூபியாக ப்ரகாசிக்கிறார். ஜீவர்களுக்கு அநாதியாக அவித்யையுண்டாகியிருப்பதால் கர்த்தாபோக்தா என்ற ஸம்ஸாரம் ஏற்படு

கிறது. அதனால் விதி நிஷேதங்களுக்கு ஜீவன் கட்டுப்படுகிறான். அந்த நிலைமையுள்ளவனுக்கு சித்தசுத்தியுண்டாகவேண்டியதற்காக கர்மங்களை அநுஷ்டிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. சித்தசுத்தி யுண்டாகுமானால் கர்மங்களிலுள்ள ப்ரீதியைவிட்டு (பகவானை யுபாஸிப்பதற்கு தடையாகவிருப்பதால்) ஸ்திரமாக பக்திசெய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. ஜ்ஞானமுண்டானால் ஒன்றுஞ் செய்யவேண்டியதில்லை. (ஆனதால் அவஸ்தா பேதத்தை யுத்தேசித்து சொல்லப்பட்டதென்று தாத்பர்யம்) இந்த பரமாத்மா ஆதாரம்முதலிய ஆறு சக்கரங்களில் ப்ரகாசிப்பவர், பரமென்றநாதமுள்ள ப்ராணனுடன் ஆதாரசக்கரத்தில்ப்ரவேசித்தார். அவர்மனோமயமான ஸூக்ஷ்மரூபத்தைஅடைந்து பின்பு மத்யமமென்ற ஸ்வரூபத்துடன் மணிபூரகம்விசுத்தமென்ற சக்கரங்களில்ப்ரவேசித்துஉதாத்தம்முதலிய ஸ்வரங்களுள்ளதும் ஹ்ரஸ்வம் முதலிய பேதங்களுள்ளதுமான அக்ஷரஸ்வரூபியாகி ஸ்தூலரூபத்தைஅடைகிறார். (ஆதாரம், மணிபந்தம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆஜ்ஞாஎன்றுஆறு சக்கரங்கள். ஸ்தூலரூபமென்றால் வேதஸ்வரூபியாகஆகிறார்என்றுகருத்து. "வாக்குக்கு நான்கு ஸ்தலங்கள். அவைகளை வித்வான்கள் அறிகிறார்கள். அவைகளில் மூன்று ஆதாரம் முதலியவை. மனிதர்கள் பேசுவதே நான்காவது"—ச்ருதி. "எது ஆதார சக்கரத்திலுண்டாகி ப்ராணனுடைய சேர்க்கையால் அறுபத்து மூன்று அக்ஷரங்களை யுண்டுபண்ணுகிறதோ, முதலில் பச்யந்தீ யென்றும் பின்பு மத்தியம் என்றும், பின்பு வாக்கு என்றும் பெயரை அடைந்த அதனைச் சரணமடைகிறேன்) கட்டையிலிருக்கும் இடுக்குகளில் அக்னியானது உஷ்ண ஸ்வரூபமாக இருக்கிறது. பின்பு அது கடையப்பட்டு வாயுவின் ஒத்தாசையால் நெருப்புப் பொறியாகப் பிரகாசித்து ஸமித்து ஆஜ்ஜியம் முதலியவைகளால் விருத்தியடைகிறது. அதுபோலவே இந்த சப்தமானது மேற்காட்டியபடி ஸூக்ஷ்ம ஸ்வரூபமாகவிருந்து பின்பு விருத்தியாகிறது. இம்மாதிரி பேசுவது என்ற வாக்கின் வியாபாரம்என்னுடையதேயாம். மேலும் கை, கால், பாயு, உபஸ்தம் என்ற கர்மேந்திரியங்களுடைய வியாபாரமாகிய கர்மம், நடை, மூத்திரத்தை விடுவது, அமேத்தியத்தை விடுவது முதலியவையும் என்னுடையதேயாம். பின்னும் க்ராணேந்திரியத்தின் வ்யாபாரமான முகருவதும், ரஸனத்தின்

வியாபாரமான ருசியும், கண்ணின் வியாபாரமான பார்ப்பதும், காதின் வியாபாரமான கேட்பதும், ஸ்பர்சத்தின் வியாபாரமான தொடுவதும், மனத்தின் ஸங்கல்பமும், புத்தி சித்தம் இவைகளுடைய விஜ்ஞானமும், அஹங்காரத்தின் கார்யமான அபிமானமும், பிரதானத்தின் கார்யமான ஸூத்திரமும், ஸத்வம் முதலிய குணங்களுடைய விகாரமும் என்னுடையதேயாம் இந்த ஜீவன். முதலில் அவ்யக்தனாகவும் ஒருவனாகவுமிருந்தான். சிலகாலஞ் சென்றபின் மாயா சக்தியால் வாக்கு முதலிய இந்திரியசக்திகள் வெளிப்பட்டு பலவகையாகவிருப்பதுபோல் தோன்றுகிறான். அந்தஜீவனே முக்குணங்களுக்கு இருப்பிடமான ப்ரஹ்மதேவன். ஆனாலும் வயலில் விதைக்கப்பட்ட விதைபலவகையாக ஆகிறதுபோல பலவகையாகத் தோற்றுகிறான், (இந்த ஜகத் பரமாத்வாவின் கார்யமானதால் அவனைவிட வேறில்லை) வஸ்திரமானது குறுக்கான நூல்களிலும் நீண்ட நூல்களிலும் சேர்ந்து எப்படி நூல்களில் இருக்கிறதோ, அதுபோல இந்த ஜகத்தானது ஆத்மாவிடத்தில் இருக்கிறது. இந்த ஸம்ஸாரமாகிய மரம் அநாதியானது, ப்ரவர்த்தி ஸ்வபாவமுள்ளது. இந்த விருக்ஷம் கர்மங்களையும் கர்மபலன்களையும் உண்டுபண்ணுகிறது. இந்த மரத்திற்கு புண்ணியம் பாபம் இரண்டும் விதைகள் அநேக வாஸனைகளே வேர்கள். மூன்றுகுணங்களே நாளங்கள். ஐந்துபூதங்களே கிளைகள். சப்தம் முதலிய ஐந்து விஷயங்களே ரஸங்கள். பதினொறு இந்திரியங்களே சிறுகிளைகள், ஜீவாத்மா, பரமாத்மா என்ற இரண்டுபக்ஷிகள் இதில் கூடு கட்டிக்கொண்டிருக்கின்றன. வாதம் பித்தம், ச்லேஷ்மம் ஆகிய இம்மூன்றும் இந்தமரத்திற்குப் பட்டைகளாகவிருக்கின்றன. இந்தமரம் ஸூர்யமண்டலம்வரையில் உயர்ந்திருக்கிறது. இந்தமரத்தின் ஒருபழத்தை (துக்கத்தை) கிராமத்தில் ஸஞ்சரிக்கிற கழுகுகள் புஜிக்கின்றன. (கிருஹஸ்தர்களான காமிகள் துக்கத்தை அநுபவிக்கிறார்கள்) வனத்தில் வஸிக்கும் ஹம்ஸங்கள் (பரமஹம்ஸர்களான யோகிகள்) மற்றொருபழத்தை (ஸுகத்தை) புஜிக்கின்றன. எவர்கள் உத்தமர்களான ஆசார்யமுகமாக மாயாமயனாகிய பரமாத்மாவைத் தெரிந்துகொள்ளுகிறார்களோ, அவர்களே வேதத்தின் உண்மையான அர்த்தத்தைத் தெரிந்துகொண்டவர்களாகிறார்கள். ஆனதால் இம்மாதிரி ஆசார்யனுடைய உபதேசத்தால் உண்டான பக்தியாலும், ஜ்ஞானமாகிய கோடரியாலும், லிங்கசரீரத்தை நிவிருத்தித்துக்கொண்டு பரமாத்மாவை அடைந்து அந்த ஸாதனங்களைவிட்டுவிடும்'' என்றார்.

## அத்யாயம்—13.

### ஹம்ஸோ பாக்கியானம்.

1–3 (ஜீவனிடத்தில் தமஸ் முதலிய மூன்று குணங்களிருக்கின்றனவல்லவா? அவை வித்யையுண்டாவதற்கு ப்ரதிபந்தகங்களல்லவா? எப்படி வித்யை யுண்டாகுமென்றால் அதன் விபரம் ஏழு ச்லோகங்களால் சொல்லப்பட்டிருக்கிறது) ஆனந்தம்முதலியவை எப்படி ஆத்மாவின் தர்மங்களோ அப்படி ஸத்வம் முதலியகுணங்கள் ஆத்மாவின் தர்மங்களாக விருக்குமானால் அவைகளை நிவிருத்தித்துக் கொள்ளமுடியாது. ஸத்வம் ரஜஸ், தமஸ், புத்தியின் குணங்களேயொழிய ஆத்மாவினுடையவையல்ல. ஆனதால் ஸத்வகுணத்தால் ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களை நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும். அந்த ஸத்வகுணத்தை (ஸத்யம்முதலியவை) உபசமஸ்வரூபமான ஸத்வத்தாலேயே அடக்கவேண்டும். என்னிடத்தில் பக்திசெய்வதாகிய தர்மம் ஸத்வகுணத்தாலுண்டாகும். ஸத்வகுணத்தைக் கொடுக்கும் வஸ்துக்களையுபயோகிப்பதால் விருத்தியடையும் (அதனால்தான் மேற்காட்டிய தர்மமுண்டாகிறது) மேற்காட்டிய தர்மம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களை நாசஞ்செய்யும், ஸத்வம் விருத்தியானால் அது மிக்க மேலானது, ரஜோகுணம், தமோகுணம் ஆகிய இவ்விரண்டும் நசித்தால் அவைகளாலுண்டாகும் அதர்மம் நாசத்தை அடையும் (ராகம், த்வேஷம் ரஜஸ்ஸின் கார்யங்கள். தவறுதல் சோம்பல் இவைகள் தமஸ்ஸின் கார்யங்கள்)

4—7. சாஸ்திரம், ஜலம், ப்ரஜைகள், தேசம், காலம், கர்மம், ஜன்மம், த்யானம், மந்திரம், ஸம்ஸ்காரம் ஆகிய பத்து வஸ்துக்களால் குணங்கள் விருத்தியடைகின்றன. மேற்காட்டியவைகளில் எதைப் பெரியோர்கள் புகழ்கிறார்களோ, அவைகள் ஸத்வகுணத்தைவிருத்திசெய்கின்றன. எவைகளை கெட்டவையென்று பெரியோர்கள் நிந்திக்கிறார்களோ, அவை தமோகுணத்தை விருத்திசெய்கின்றன. எவைகளை பெரியோர்கள் நிந்திக்கவில்லையோ, ஸ்துதிக்கவுமில்லையோ, அவைகள் ரஜோகுணத்தைவிருத்திசெய்யும். ஆனதால்ஸத்வகுணத்தைவிருத்திசெய்து கொள்வதற்காகஸாத்விகமானவைகளையேஉபாஸிக்கவேண்டும் (உபனிஷத் முதலியவைஸாத்

திக சாஸ்திரம், கர்மகாண்டம் ராஜஸம், பாஷண்டம், தாமஸம், கங்காஜலம்முதலியவை ஸாத்விகஜலம். வாஸனையுள்ள ஜலம் ராஜஸம். மத்யம் முதலியவை தாமஸம். ஸன்யாஸிகள் முதலியவர்கள் ஸாத்விகர்கள். கர்மங்களில் ச்ரத்தையுள்ளவர்கள் ராஜஸர்கள். அதர்மத்தைச் செய்பவர்கள் தாமஸர்கள். ஜனங்களில்லாதிருக்குமிடம் ஸாத்விகதேசம். வீதி ராஜஸம். சொக்கட்டான் விளையாடுமிடம்தாமஸம். ப்ராஹ்ம மூஹூர்த்தம்த்யானத்திற்கு ஸாத்விககாலம். ஸாயங்காலம் ராஜஸம். அர்த்தராத்ரி தாமஸம். நித்யகர்மம் ஸாத்விகம். பயனையுத்தேசித்துச்செய்யும் காம்யகர்மம் ராஜஸம். சத்ருவைக்கொல்வதுமுதலியவைகளுக்காகச் செய்யப்படும் அபிசாரம் முதலியவைதாமஸம். வைஷ்ணவதீக்ஷை, சைவதீக்ஷைமுதலியவைஸாத்விகஜன்மம். சக்திதீக்ஷை ராஜஸஜன்மம். அல்பதேவதாதீக்ஷை தாமஸஜன்மம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை த்யானஞ்செய்வது ஸாத்விகம். ஸ்திரியை நினைப்பது ராஜஸம், சத்துருவை த்யானிப்பது தாமஸம். ப்ரணவம் முதலிய மந்திரங்கள்ஸாத்விகமந்திரங்கள். காம்யமந்திரங்கள்ராஜஸங்கள். அல்பமந்திரங்கள் தாமஸங்கள், மனத்தை சுத்தப்படுத்தும் ஸம்ஸ்காரமும் ஸாத்விகம். தேஹத்திற்கும்கிருஹத்திற்கும் செய்துகொள்ளும் ஸம்ஸ்காரம் ராஜஸதாமஸம், அதனால்தர்மமும், அதனால்ஜ்ஞானமும்உண்டாகிறது. எதுவரையில் அபரோக்ஷஜ்ஞானமும் குணங்களுடைய நாசமும் உண்டாகிறதோ, அப்பொழுது அந்த ஜ்ஞானமுண்டாகிறது. மூங்கில்கள் ஒன்றோடொன்று உரைந்துகொள்வதால்அக்னியுண்டாகிறது; அதுவனம்முழுவதையும் எரித்துத் தானாக அணைவதுபோல குணங்களுடைய ஸம்பந்தத்தாலுண்டாகிய தேஹம்தன்னிடத்திலுண்டான ஜ்ஞானத்தால் தனக்கு ஆச்ரயமான குணங்களை நாசஞ்செய்து தானும் நாசமடைகிறது" என்றார்.

8. அதனைக்கேட்டு உத்தவர் ஸ்ரீ கிருஷ்ணனைநோக்கி "ஓ கிருஷ்ண! சப்தம் முதலியவிஷயங்கள் பெரும்பாலும் ஆபத்தை விளைவிக்கின்றனவென்றுமனிதர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனாலும்நாய்கள்போலும், கழுதைகள்போலும், ஆடுகள்போலும்விஷயங்களையே, அநுபவிக்கிறார்களே, அதன்காரணமென்ன?" என்று கேட்டார் (நாய்கள் அடிபட்டாலும் பெண்நாயை

பின்தொடருகிறது, கழுதை பின்னங்கால்களால் உதைக்கப்பட்டாலும் பெண்கழுதையைவிடுகிறதில்லை. ஆடுகள்கொல்வதற்காக கொண்டுவரப்பட்டிருக்கும் பொழுதும் காமவெறியை அடைகிறது.)

9—14. அதனைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணன் உத்தவரை நோக்கி "விவேகமில்லாதவன் சரீரத்தை 'நான்' என்று நினைக்கிறான். அந்த அபிநிவேசம் அவனுடைய ஹிருதயத்தில் ஸ்திரமானால் துக்கத்தைக்கொடுக்கும். ரஜோகுணம் அவனுடைய மனத்தில் வ்யாபரிக்கிறது (உண்மையில் மனம் ஸத்வகுணமுள்ளதானாலும்) மனத்தில் ரஜோகுணம் அதிகரித்தால் 'இதை இம்மாதிரி அநுபவிக்கவேண்டும்' என்றஸங்கல்பமுண்டாகும். அதன்பின் ரூபம்முதலியவைகளின் பெருமையைத்யானிப்பான். அதனால் காமம் பருத்து மனத்தால் தாங்கமுடியாததாகும். அப்படிப்பட்ட மனமுள்ளவன் அல்பபுத்தியுள்ளவனெனப்படுவான். பின்பு அவன் ரஜோகுணத்தின் வேகத்தால்புத்திமயக்கமடைந்து, இந்திரியங்களுக்கு வசப்பட்டு விஷயங்களை அநுபவிப்பதற்காக முயல்கிறான் (கர்மங்களைச் செய்கிறான்) அதனால் துக்கத்தையே அடைகிறான். (சரீரத்தில்நான் என்று பொய்யாக அபிமானத்தை வைப்பதால் விஷயபோகங்களில் ஆசையுண்டாகிறதென்று கருத்து) மனிதனுடைய மனமானது ரஜோகுணம், தமோகுணம் ஆகிய இவைகளால் கலங்கியதானாலும் விவேகியாக விருப்பவன் அதனை தோஷமென்றுநினைத்து மனத்தை அடக்கி அவைகளில் ஸம்பந்தப்படமாட்டான். (விஷயங்களை தோஷமுள்ளவைகளென்று நினைத்து மனத்தை அடக்க சக்தியில்லாதவனுக்கு லகுவான உபாயம் சொல்லப்படுகிறது) சோம்பலின்றிதவறுதலை யடையாமல், காலத்திற்குத் தக்கபடி ஸுகமான ஆஸனத்தில் உட்கார்ந்து ச்வாஸத்தை ஜயித்து, மனத்தை என்னிடத்தில்செலுத்தவேண்டும். பல விஷயங்களில் சென்றுகொண்டிருக்கும் மனத்தை அவைகளில் செல்லவொட்டாது தடுத்து பகவானாகிய என்னிடத்தில் செலுத்துவதே யோகமென்று என்னுடைய சிஷ்யர்களான ஸனகர் முதலியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்" என்று சொன்னார்.

15. அதனைக்கேட்ட உத்தவர் பகவானை நோக்கி உம்முடைய சிஷ்யர்களான ஸனகர் முதலியவர்களுக்கு அந்த காலத்

தில் எந்த ஸ்வரூபத்துடன் யோகத்தை யுபதேசித்தீர்? அதனைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

16—21, அதனைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணன் உத்தவரை நோக்கி "ப்ரஹ்மதேவருடைய மனத்திலிருந்து உண்டான ஸனகர் முதலியவர்கள் தந்தையாகிய ப்ரஹ்மதேவரை நோக்கி" ஓ ப்ரபுவே! ஜனங்களுடைய மனம் இயற்கையில் ஆசை முதலியவைகளுள்ளதானதால் விஷயங்களை அனுபவிக்க வேண்டுமென்று விரும்பி அவைகளில் பிரவேசிக்கிறது. அந்த விஷயங்கள் (சப்தம் முதலியவை) மனத்தில் பிரவேசிக்கின்றன. (வாஸனை ரூபமாக) ஆனதால் விஷயங்களைவிட்டு மோக்ஷத்தை யடைய விரும்புகிறவனால் அவைகள் எப்படி விடமுடியும்" என்று யோகத்தின் ஸூக்ஷ்ம ஸ்வரூபத்தைப்பற்றிகேட்டார்கள். அதனைக்கேட்டப்ரஹ்மதேவர் தான் தேவர்களுக்கும் தேவனானாலும் தானாக உண்டானவரானாலும், பிராணிகளை ஸிருஷ்டிப்பவரானாலும் அந்தக்கேள்வியின் உண்மையான அர்த்தத்தை (எதை அறியாததால் இக்கேள்வியோ) தெரிந்துகொள்ளவில்லை. ஏனென்றால் அவருடைய மனம் கர்மத்தில் சென்று கலங்கியிருந்தது. அப்பொழுது ப்ரஹ்மதேவர் அந்தக் கேழ்விக்கு மறுமொழி சொல்வதற்தாக என்னை த்யானம் செய்தார். நான் ஹம்ஸவேடங்கொண்டு அவருடைய ஸமீபஞ் சென்றேன், அப்பொழுது ஸனகர் முதலிவர்கள் என்னுடைய ஸமீபம்வந்து ப்ரஹ்மதேவரை முன்னிட்டு என்னை நமஸ்கரித்து நீர் யார் என்று கேட்டார்கள். இம்மாதிரி உண்மையை த்தெரிந்து கொள்ள விரும்பிய மஹர்ஷிகளால் கேட்கப்பட்டு நான் எதனை அவர்களுக்குச்சொன்னேனோ அதை உமக்குச் சொல்லுகிறேன் கேளும். எப்படியெனில்:—

22—42, ஓ மஹர்ஷிகளே! நீர் யார் என்று கேட்டீர்களல்லவா? என்னுடைய ஆத்மாவைப்பற்றியார் என்று கேட்பீர்களாகில் ஆத்மா அநேகமாக இருக்குமானால் இம்மாதிரியாக நீங்கள் கேட்கக்கூடும். (ஆத்மா ஒருவனானதால் யார் என்றுகேட்பது பொருந்தாதுஎன்றுகருத்து) உபாதியற்ற பரமாத்மாவிடத்தில் ஜாதிமுதலியவைகள் ஒன்றுமில்லாததால் எதைக்கொண்டு உமக்கு நான் பதில் சோல்லுவேன். அல்லதுசரீரத்தைப்பற்றிக்கேட்பீர்களாகில் இந்த சரீரங்கள்யாவும் ப்ரதிவீ முதலியஐந்துபூதங்களால்செய்யப்பட்டவைகளானதால் அவைகள் ஒன்றுக்கொன்று ஸமமானவை

களேயாம். மேலுமவைகள் பரமாத்மாவைவிட பேதமில்லாதவை கள்; ஆனதால்உங்களுடையகேழ்வியானது வ்யவஹாரத்திற்கு ஏற்பட்டதேயொழிய உண்மையில் பிரயோஜனமற்றது. மேலும் மனத்தாலும், வாக்கினாலும், கண்ணாலும், மற்ற இந்திரியங்களா லும்எதுக்ரஹிக்கப்படுகிறதோஅதெல்லாம்"நானே.என்னைக்காட் டிலும்வேறல்ல"என்றுதத்வவிசாரத்தால்தெரிந்துகொள்ளுங்கள். (ஸகல ஸ்வரூபியாக இருக்கிறேனென்று கருத்து) ஓ குழந்தை களே! ஜனங்களுடைய மனமானது சப்தம் முதலிய விஷயங்க ளில் ப்ரவர்த்திக்கிறது. அந்த விஷயங்கள் மனத்தில் வாசனா ரூபமாக இருக்கின்றன. ஆனாலும் அந்த மனது, விஷயங்கள் ஆகிய இரண்டும் ஜீவனுக்கு உபாதியேயொழிய ஸ்வரூபமல்ல. (நான் கர்மங்களைச் செய்கிறேன். அதன் பயன்களை அனுபவிக் கிறேன், என்றுநினைப்பது ஜீவனுடைய ஸ்வரூபமல்ல. அவ னுடைய இயற்கையான ஸ்வரூபம்பர மாத்வாக விருப்பதேயாம். ஆனாலும் விஷயங்களில் ஸம்பந்தித்த சித்தத்தைத் தானென்று நினையாமல் தன்னை ப்ரஹ்ம மென்றும் சப்தம் முதலிய விஷயங்களைப் பொய்யானவை யென்றும் த்யானிப்பவன் தம்முடைய உண்மையான ஸவரூபமாக ஆகிவிடுகிறான். என்று கருத்து.) ஆனதால் உண்மையில் ஜீவன் பரமாத்ம ஸ்வரூபியாகஇருப்பதால் சப்தம்முதலிய விஷயங்களில் செல்லு கின்ற மனத்தையும், அடிக்கடிஅனுபவிப்பதால்மனத்திலிருக்கும் விஷய வாஸனைகளையும் விட்டுவிடவேண்டும். பின்னும் ஜாக்ரத் ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற அவஸ்தைகள் முறையே ஸத்வம் முதலிய குணங்களால் ஏற்படும் புத்தியின்விருத்திகளாம். அவை கள் ஜீவனுடையஸ்வபாவங்கள் அல்ல. மேற்கண்டமூன்று அவஸ் தைகளிலும்தொடர்ந்து இருக்கும்ஜீவன்அவைகளுக்கு ஸாக்ஷியே யாம். அவைகளைக்காட்டிலும் வேறானவன் (ஜாகரத்முதலிய அவ ஸ்தைகள்ஜீவனுக்கு இயற்கையானவையல்ல என்று கருத்து.) ஆனதால்ஸம்ஸாரத்தையுண்டுபண்ணுகிறபுத்தியால்ஆத்மாவிற்கு சப்தம்முதலிய விஷங்களில் ஸம்பந்தம் ஏற்படுகிறது ஆனதால் மேற்கண்ட மூன்று அவஸ்தைகளைக்கடந்த என்னுடையஸ்வரூப மாகத்தன்னை நினைத்துக்கொண்டு அந்த புத்தியின்ஸம்பந்தத்தை விட்டுவிடவேண்டும். அப்படிபட்டவனை விஷயங்களும் விஷய வாஸனைகளுள்ள மனமும்விட்டுவிடும், ஜீவன் உண்மையில்ஆநந்த ஸ்வரூபி; அவனுக்குஅஹங்கார ஸம்பந்தமேற்பட்டதனால் அந்த

அஹங்காரம், ஆநந்தம்முதலிய ஸ்வரூபத்தைமறைத்துவிட்டது. இதன் உண்மையை யுக்தியால் தெரிந்துகொண்டவன் 'துக்கத்தைக் கொடுக்கக்கூடியது' என்று நினைத்துவிஷயங்களில் ஆசைப்படாமல் தான் பரமாத்ம ஸ்வரூபியென்றும், ஜாக்ரத் முதலிய அவஸ்தைகளைக் கடந்தவனென்றும் நினைப்பான். அபிமானத்தை யொழிக்க வேண்டும். விஷயங்களில் அபிமானமும், பேத புத்தியும் எதுவரையில் நிவர்த்தியடையவில்லையோ, அதுவரையில் இந்தப்புருஷன் உண்மையைத் தெரிந்துகொள்ளாதவனானதால் விழித்துக்கொண்டிருந்தாலும் தூங்கினவனுக்குச் சமமேயாம். ஸ்வப்னத்தில் காணப்படும்விழிப்பு எப்படியோ, அதுபோன்றது இவனுடைய விழிப்பு. ஸ்வப்னத்தில் காணப்படும் வஸ்துக்கள் யாவும் எப்படிப் பொய்யானவையோ, அப்படி தேஹம் முதலிய வஸ்துக்களும், வர்ணம், ஆச்ரமம் முதலிய பேதங்களும், ஸ்வர்க்கம் முதலிய லோகங்களும், அவைகளைக்கொடுக்கும்கர்மங்களும் ஆத்மாவைக்காட்டிலும், வேறல்ல. ஆனதால் அவைகள் பொய்யானவைகளே. (யாகம் முதலிய கர்மங்களும் அவைகளின் பயனாகிய ஸ்வர்க்கம் முதலியவைகளும் வேதங்களால் சொல்லப்பட்டிருந்தாலும் வேதம் மூடனுக்காக ஏற்பட்டதானதால் ஜ்ஞானியின்விஷயத்தில் அவைகள் பொய்யென்றுகருத்து) இந்தஸ்தூல தேஹம் முதலியவைகள் பால்யம், கௌமாரம், யௌவனம் முதலிய ஸ்வல்பகாலமுள்ள அவஸ்தைகளுள்ளது. அவைகளை எல்லா இந்திரியங்களைக்கொண்டு எவன் அநுபவிக்கிறானோ, அவனேஸ்வப்னத்தில், முந்திய அவஸ்தையில் பார்க்கப்பட்டு வாஸனாரூபமாக மனத்திலிருக்கும் விஷயங்களை அநுபவிக்கிறான். எவன்ஸுஷுப்தியில் அவைகளை உபஸம்ஹரிக்கிறானோ, இம்மூன்றுஅவஸ்தைகளிலும்தொடர்ந்து அவைகளுக்குஸாக்ஷியாகவிருப்பவன்எவனோ அந்தஆத்மாஒருவனேயாம். அவனே இந்திரியங்களுக்கு அதிபதி (ஜாக்ரதவஸ்தையைஸகலஇந்திரியங்களும்பார்க்கின்றன. ஸ்வப்னத்தைமனம் பார்க்கிறது. ஸுஷுப்தியில்ஸம்ஸ்கார விசேஷமான புத்தியிருக்கிறது. அந்த மூன்று அவஸ்தைகளுக்கும் விச்வன், தைஜஸன், ப்ராஜ்ஞன் என்றமூவர்களும் முறையே அதிபதிகள்; ஆனாலும் உபாதி ஸம்பந்தத்தால் விச்வன் முதலிய நாமதேயங்களை யொழிய உண்மையிலில்லை என்று கருத்து) ஆனதால் மேற்காட்டிய ஜாக்கிரத் முதலிய அவஸ்தைகள் குண

ங்களாலேற்பட்டவைகள். அவைகள் மனத்திற்கே யொழிய ஆத்மாவினுடையதல்ல. என்னுடையமாயயால் பரமாத்மாவாகிய என்னிடத்தில்கல்பிக்கப்பட்டிருக்கின்றன. என்றுநிச்சயமாக ஆத்மாவைத்தெரிந்துகொண்டு ஆத்மாவின்உண்மையை அறிந்து அநுமானம் ஸாதுக்களுடைய உபதேசம், கூர்மையான ஜ்ஞானமாகிய கத்தி ஆகிய இவைகளைக்கொண்டு மனதிலிருக்கும் ஸம்சயமாகிய ஆதியை (அஹங்காரம்) நிவர்த்தித்துக்கொள்ளவேண்டும். மேலும் இந்தஜகத்துப்பொய்யானது. பார்க்கப்படுவதாலும், நசிக்கும்ஸ்வபாவமுள்ளதானதாலும்; மனோவிலாஸமாகவிருப்பதாலும், ஸ்வப்னம்போல் என்றும் மிகவும்சஞ்சலமாகவிருப்பதால் சுற்றும் குறைக்கொள்ளிபோன்றது என்ற அநுமானத்தாலும் ஜகத்தைபொய்யென்று நிச்சயிக்க வேண்டும். ஆனதால் குணங்களுடையபரிணாமத்தால் மூன்றுவகையாகஏற்படும் பேதம், ஸ்வப்னம்போல பொய்யானதேயாம். அதுவேமாயை. ஜ்ஞானஸ்வரூபியாகியபரமாத்மா உபாதிஸம்பந்தத்தால் அநேகராகத்தோன்றுகிறார். ஆனதால்பார்க்கப்படும் ப்ரபஞ்சத்தில்ஆசைவைக்காமல்அதிலிருந்துபார்வையை திருப்பிஇயற்கையானஆனந்தாநுபவமுள்ளவனாகவிருக்கவேண்டும். அந்தஅநுபவம் ஸ்திரமாகவிருப்பதற்காக ஒன்றிலும் பற்றுதலில்லாமலும், மனம், வாக்கு, சரீரம் ஆகிய இவைகளுடைய வ்யாபாரமற்றவனாகவு மிருக்கவேண்டும். சரீரமுள்ளவரையில் ஆகாரம் முதலிய அ[illegible]ச்யமான கார்யங்களில் ப்ரவிருத்திப்பானாலும் ஜகத்தை வஸ்துவல்லவென்றுதெரிந்துவிட்டவனானதால் அதில் மோஹிக்கமாட்டான். ஆனாலும் சரீரமிருக்கும் வரையில் அந்த வாஸனை தொடர்ந்திருக்கும். மத்யபானஞ்செய்து மதங்கொண்டு விவேகமற்றவன்வஸ்திரமுடுத்திக்கொண்டிருப்பதையாவது வஸ்திரமில்லாமலிருப்பதையாவதுஎப்படித்தெரிந்துகொள்ளமாட்டானோ, அப்படிஸ்வரூபத்தையறிந்த ஸித்தன் தைவச்செயலாக சரீரமிருந்தாலும், இல்லாவிட்டாலும் ஆஸனத்திலிருந்து எழுந்திருந்தாலும், அந்த அஸ்திரமான சரீரத்தில் அபிமானம் வைக்கமாட்டான். சரீரம் கர்மாதீனமாக ஏற்பட்டது. தன்னை யுண்டுபண்ணிய கர்மவேகம் எதுவரையிலிருக்குமோ அந்தக் காலத்தை ப்ராணனுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அது ஸ்வப்னத்தில் காணப்படும் வஸ்துபோன்றது. ஆனதால் ஸமாதி வரையிலுள்ள யோகத்தை அடைந்து

ஆத்மஸ்வரூபத்தை அடைந்தவன் சரீரத்தில் அபிமானத்தை அடையமாட்டான். ஓப்ராஹ்மணர்களே! ஸாங்கியம், யோகம் ஆகிய இவைகளுடைய உண்மையை உங்களுக்குச் சொன்னேன். உங்களுக்கு இந்தத் தர்மத்தைச் சொல்லவேண்டுமென்ற விருப்பத்தால்வந்தமஹாவிஷ்ணுவென்று என்னைத்தெரிந்துகொள்ளுங்கள். மேலும் ஆத்மாநாத்மவிவேகமாகிய ஸாங்கியத்திற்கும், அஷ்டாங்கயோகத்திற்கும், மனத்தால் நினைக்கப்படும் தர்மத்திற்கும் (ரிதம்) அநுஷ்டிக்கப்படும் தர்மத்திற்கும் (ஸத்யம்) ப்ரபாவத்திற்கும், ஸ்ரீ, கீர்த்தி, தமம் ஆகிய இவைகளுக்கும் நான் முக்கிய ஸ்தானமாக விருக்கிறேன். பின்னும் குணஸம்பந்த மற்றவனும், ஒன்றையும் அபேக்ஷியாதவனும், எல்லாவற்றிற்கும் ஸுஹ்ருத்தும், ப்ரியனும், ஆத்மாவுமாகிய என்னிடத்தில் ஸமமாக விருப்பது, ஒன்றிலும் பற்றுதலில்லாமலிருப்பது ஆகிய குணங்கள் இருக்கின்றன. அவைகள் முக்குணங்களின் பரிணாமத்தாலேற்பட்டவையல்ல. நித்யமானவைகள்" என்று சொன்னேன். அதனைக்கேட்ட ஸனகர் முதலியவர்கள் ஸம்சயமற்றவர்களாகி மிக்க பக்தியுடன் என்னைப்பூஜித்து ஸ்துதித்தார்கள். இம்மாதிரி அந்த மஹர்ஷிகளால்பூஜிக்கப்பெற்று நான், ப்ரஹ்மதேவர் பார்த்திருக்க என்னுடைய லோகஞ்சென்றேன்.

---

## அத்யாயம்—14.

### பக்தியும் த்யானயோகமும்.

ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய வார்த்தையைக்கேட்டு உத்தவர் அவரை நோக்கி "ஓ கிருஷ்ண! வேதத்தைத் தெரிந்துகொண்டவர்கள் க்ஷேமத்தை அடைவதற்குப் பலஉபாயங்களுண்டென்று சொல்லுகிறார்கள். அவைகள் எல்லாம்நேரில் மோக்ஷத்தைக் கொடுக்கின்றன? அல்லது அவைகளில் சில முக்கியமா? ஒவ்வொரு பயனை யுத்தேசியாமல் பகவானிடத்தில் பக்திசெய்யவேண்டும். மற்றவைகளில் ஆசையை யொழிக்க வேண்டும். அதனால் பகவானிடத்தில் ஸ்திரமாகபக்தியுண்டாகும்" என்றுசொன்னீரல்லவா? அதனால் பக்தியே முக்கியமான உபாயமென்று தோன்றுகிறதே அதனை நிச்சயித்துச் சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

3—11. அதனைக்கேட்ட பகவான் உத்தவரை நோக்கி, "வேத மென்ற பெயருள்ள வாக்கானது காலமஹிமையால் ப்ரளயத்தில் ஒளிந்துபோயிற்று. ஸ்ருஷ்டிகாலத்தில் அதனை ப்ரஹ்மதேவரு க்கு நான் உபதேசித்தேன். அந்த வேதத்தில் பகவானாகிய என் னுடைய தர்மங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ப்ரஹ்மதேவர் தம்முடைய புத்திரர்களில் மூத்த குமாரராகிய மநுவிற்கு அந்த வேதத்தை யுபதேசித்தார். அந்த மநுவினிடமிருந்து ப்ருகு முத லிய ஏழு மஹர்ஷிகள் (ப்ருகு, மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், க்ருது) பெற்றுக்கொண்டார்கள். அந்த மஹர்ஷிகளு டைய புத்திரர்களாகிய தேவர்கள், தானவர்கள், குஹ்யகர்கள் மனிதர்கள், ஸித்தர்கள், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், சாரணர் கள், கிந்தேவர்கள் (ச்ரமம் வியர்வையில்லாததால் இவர்கள் தேவ ர்களோவென்று ஸந்தேஹிக்கக்கூடிய த்வீபாந்தரத்திலுள்ள மனி தர்கள்) கின்னரர்கள், நாகர்கள், யக்ஷர்கள், கிம்புருஷர்கள் ஆகிய முக்குணங்களாலுண்டானவர்கள், மேற்காட்டிய ஏழு ப்ரஹ்மரிஷி களிடமிருந்து மேற்காட்டிய வேதத்தைப்பெற்றுக்கொண்டார்கள். ஆனதால் தேவர்கள் அஸுரர்கள், மனிதர்கள் முதலிய ப்ராணிகள் அவர் அவர்களுடைய ப்ரகிருதிவாஸனைக்குத்தக்கபடி அந்த வேத த்திற்கு பலவகையாக அர்த்தங்கொள்ளுகிறார்கள். இப்படி அவர் அவர்களுடையப்ரகிருதியின் பேதத்தால்புத்தியும்பேதிக்கிறது. சிலர் வேதத்தைஅத்தியயனஞ் செய்யாவிடினும் பிறர்சொல்வதைக்கே ட்டு அதனையே உண்மையாகக் கொள்ளுகிறார்கள். மற்றுஞ் சிலர் வேதத்திற்குமுற்றிலும் விரோதமான பாஷண்ட தர்மத்தில் புத் தியுள்ளவர்களாக விருக்கிறார்கள். ஓ புருஷர்களுக்குட் சிறந்த உத்தவ! புருஷர்கள்அவரவர்களுடைய கர்மத்திற்கும் அவரவர்க ளுடையஅபிப்பிராயத்திற்கும் தக்கவாறுஎன்னுடைய மாயயால் புத்திமயக்கமடைந்து க்ஷேமத்தை அடைவதற்கு பலவிதஉபாயங் களென்று சொல்லுகிறார்கள். சிலர் (மீமாம்ஸகர்கள்) நித்யகர்மங் களும் நைமித்திக கர்மங்களுமே மோக்ஷத்தைக்கொடுக்கக்கூடிய வைகள் என்று சொல்லுகிறார்கள். மற்றுஞ்சிலர் (காவ்யம்அலங்கா ரஞ்செய்தவர்கள்) கீர்த்தியே க்ஷேமத்தைக் கொடுக்கிறது என்கி றார்கள் (எதுவரையில் மனிதனுடைய கீர்த்தி ஜனங்களால் கான ஞ்செய்யப்படுகிறதோ, அதுவரையில் புண்ணியலோகத்தில் பூஜி க்கப்படுகிறான்) பின்னுஞ்சிலர் (வாத்ஸ்யாயனர் முதலியவர்கள்)

காமமே புருஷார்த்தமென்கிறார்கள். இன்னுஞ்சிலர் (யோகசாஸ்திரக்காரர்கள்) ஸத்யம், இந்திரியங்களை அடக்குவதாகிய சமம், தமம் இவைகள் க்ஷேமத்தைக்கொடுக்கின்றன வென்கிறார்கள். சிலர்(நீதிசாஸ்திரக்காரர்கள்)ஐச்வர்யத்தையே புருஷார்த்தமென்கிறார்கள். சிலர் (பௌத்தர்கள்) பிறருக்குக் கொடுப்பதும் தாம் அநுபவிப்பதுமே புருஷார்த்தமென்கிறார்கள். மற்றுஞ்சிலர்(கர்மயோகிகள்) யஜ்ஞம், தபஸ், தானம்,வ்ரதங்கள், நியமங்கள், யமங்கள் ஆகிய இவைகளை க்ஷேமஸாதனங்கள் என்கிறார்கள். இம்மாதிரி அவர் அவர்களுடையஸ்வபாவத்திற்குத் தக்கபடி சொல்லுகிறார்கள்.மேற்காட்டியமார்க்கங்களால் கிடைக்கக்கூடிய பயன்கள் அற்பமானவைகள். உத்பத்தி நாசமுள்ளவைகள்; (நித்யங்களல்ல) அந்த லோகங்களில் கிடைக்கும் ஆனந்தம் மிக்கஅற்பமானது; போககாலத்தில் அஸூயை முதலியதுக்ககாரணங்களேற்படுகின்றன. முடிவில் மோஹத்தை யுண்டுபண்ணுகின்றன. துக்கத்தைக்கொடுக்கின்றன.

12—30. "ஓ ஸபைக்குரியவரே! என்னிடத்தில் சித்தத்தைச்செலுத்தி மற்றவைகளை அபேக்ஷியாமல் என்னுடைய ஸ்வரூபமாகப்ரகாசிப்பவனுக்குளந்தஸுகமோ ,அந்தஸுகம்விஷயங்களில்ஆசையுள்ளவர்களுக்குக்கிடைக்குமா?(பக்தியே மேலானதென்று கருத்து) மேலும்ஒன்றையும் விரும்பாதவனும் வெளியிலிருக்கும் இந்திரியங்களை அடக்கினவனும்,மனத்தை அடக்கிஸமபுத்தியுள்ளவனும்,என்னுடையஸ்வரூபத்தை அடைந்ததாலேயே திருப்தியடைந்தமனமுள்ளவனாக விருப்பவனுமான புருஷனுக்கு ஸகலதிக்குகளும்ஸுககரங்களாகவிருக்கும்.என்னிடத்தில்மனத்தைச்செலுத்தியவன் (பக்தியுள்ளவன்) என்னைக்காட்டிலும் வேறொன்றையும்விரும்பமாட்டான். அவன்ப்ரஹ்மபதத்தைவிரும்பமாட்டான். இந்திரபதத்தில் ஆசைகொள்ளமாட்டான். ஸகலபூமிகளுக்கு அரசனாகவிருக்க (சக்ரவர்த்தி) இச்சிக்கமாட்டான். பாதாலம் முதலிய லோகங்களுக்கு அதிபதியாக விருக்கவேண்டுமென்று விரும்பான். யோகத்தால் கிடைக்கும் அணிமா முதலிய ஸித்திகளில் அவனுக்கு விருப்பமிராது. மோக்ஷத்தையும் அவன் விரும்பமாட்டான் (பக்தனுக்கு என்னிடத்திலேயே ப்ரியமிருக்குமென்று கருத்து) நானும் பக்தனாகிய உம்மிடத்தில் எவ்

ளவு ப்ரியம்வைத்திருக்கிறேனே அப்படி ப்ரஹ்மதேவரிடத்தி லும், பரமசிவனிடத்திலும், ஸங்கர்ஷணரிடத்திலும், லக்ஷ்மி தேவியினிடத்திலும், என்னுடைய ஆத்மாவினிடத்திலும் ப்ரியப் படுகிறதில்லை. எவன் விஷயங்களில் அபேக்ஷையற்றவனோ, சாந் தனோ, விரோதபுத்தியையொழித்தவனோ, எல்லாம்வாஸுதேவ ஸ்வரூபமென்று ஸமமாகப் பார்பவனோ, அந்த முனியை நான் எப்பொழுதும் அநுஸரிக்கிறேன் (அவன்பின் செல்லுகிறேன்) அவனுடைய பாததூளிகளால் என்னிடமிருக்கும் அநேக அண் டங்களைப் பரிசுத்தப்படுத்துவோமென்று அவனை அநுஸரிக்கி றேன். மேலும் வேறு விஷயங்களை அபேக்ஷிக்காமலும், என்னி டத்தில் மிக்க பக்தியுள்ளவர்களும், எல்லாப்ராணிகளிடத்திலும் வாத்ஸல்யமுள்ளவர்களும், சாந்தர்களும், மற்ற காமங்களால் கலங்காத புத்தியுள்ளவர்களுமான மஹான்கள் என்னை அடை வார்கள். அவர்களுக்குத்தான் என்னுடைய நிரபேக்ஷஸுகமிப் படிப்பட்டதென்று தெரியும். (மேற்காட்டியபடி உத்தம பக்தன் ப்ரஹ்மாநந்தத்தை அடைகிறான் என்று சொல்லப்பட்டது) மேல் ச்லோகத்தில் ஸாதாரண பக்தனுடைய விஷயஞ் சொல் லப்பட்டது. இந்திரியங்களை ஜயிக்காதவனும், பகவானாகிய என் னிடத்தில் பக்தியுள்ளவனுமாகியமனிதன், விஷயங்களில் ஆசை கொண்டவனானாலும் தொடர்ந்து பக்திசெய்வானாகில் விஷயங்க ளால் அவமதிக்கப்படமாட்டான். ஓ உத்தவ! சமையல் முத லியவைகளுக்காக நன்றாகஜ்வலிக்கச்செய்யப்பட்டஅக்னியானது எப்படி கட்டைகளை சாம்பலாகச்செய்கிறதோ, அதுபோல்எதற் காகவாவது என்னிடத்தில் பக்திசெய்தால் அந்த பக்தி பாபங்க ளெல்லாவற்றையும் தஹிக்கிறது. என்னிடத்தில் ஸ்திரமாக பக்திசெய்தால் அதனால்எந்த க்ஷேமமுண்டாகுமோ, அந்தக்ஷே மம் தர்மத்தாலும், ஸாங்கியத்தாலும், யோகத்தாலும், வேதாத் யயனத்தாலும், தபஸ்ஸாலும், த்யாகத்தாலும்உண்டாகிறதில்லை ச்ரத்தையாலுண்டான பக்தியால் மாத்திரம்என்னை அடையமுடி யும். நான் ஸாதுக்களுக்கு ஆத்மாவாக விருப்பவன்; சண்டாள னானாலும்என்னிடம்பக்தியுள்ளவனானால்ஜாதிதோஷத்திலிருந்து நிவர்த்தியடைகிறான். ஸத்யம், தயை, இவைகளுடன் தர்மபுத்தி யும் சேர்ந்திருந்தாலும் என்னிடத்தில் பக்தியில்லாதவனை அந்த தர்மம்நன்றாகபரிசுத்தப்படுத்துகிறதில்லை. பகவானிடத்தில்பக்தி

யில்லாவிடில்தபஸ், ஜ்ஞானம் இவைகளிருந்தாலும், அதனால்நன்ருக பரிசுத்தியுண்டாகிறதில்லை. ஒருவனுக்குபக்தியிருக்கிறதென்ருவது இல்லையென்ருவது எப்படி தெரிந்துகொள்ள முடியுமென்ருல் பக்தியுள்ளவனுடைய மனம் உருகும். ஆனந்தக்கண்ணீர் பெருகும். அப்படிப்பட்ட பக்தியில்லாவிட்டால் சித்தம்சுத்தமாகிறதில்லை. என்னிடத்தில் பக்தியுள்ளவன் அடிக்கடி சிரிப்பான். சில ஸமயம் அழுவான்; அவன் மனம்உருகும்;வாக்கு தழுதழுத்திருக்கும்; வெட்கத்தைவிட்டு உரக்க என்னுடைய சரிதங்களைக்கானஞ்செய்வான்; நர்த்தனஞ்செய்வான்; அப்படிப்பட்ட பக்தன் லோகத்தைப் பரிசுத்தப்படுத்துவான். ஸுவர்ணம் அக்னியில் வைத்துஉருக்கப்பட்டால் அழுக்கில்லாமல் தன்னுடையஉண்மையான ஸ்வரூபத்தை எப்படி அடைகிறதோ, அப்படி ஜீவன் என்னிடத்தில் பக்தி செய்வதாகிய பக்தி யோகத்தால் கர்மவாஸனையை யொழித்து உண்மையான ஸ்வரூபத்தை அடைகிருன். கண்ணுக்கு மையிட்டால்அதிலுள்ள மலங்கள் நீங்கி ஸூக்ஷ்மமான வஸ்துக்களைஎப்படி பார்க்கும்சக்திஉண்டாகிறதோ,அப்படி புண்யகரங்களான என்னுடைய கதைகளைக்கேட்பதாலும்,உச்சரிப்பதாலும் சித்தம்சுத்தமாகிறது. அதனால்ஸூக்ஷ்மமாகிய ஆத்மஸ்வரூபத்தைப்பார்க்கும் சக்தியை அடைகிருன் (பக்தியின் அவாந்தர வ்யாபாரமே ஜ்ஞானமெனப்படுகிறதென்று கருத்து) மேலும் சித்தம் பகவத்ஸ்வரூபமாகமாறுவதே ஜ்ஞானமெனப்படும். (அப்படிப்பட்ட ஜ்ஞானம் என்னையே த்யானஞ்செய்பவனுக்குண்டாகுமென்று காட்டப்படுகிறது) சப்தம்முதலிய விஷயங்களையே எப்பொழுதும் த்யானஞ்செய்பவனுடைய சித்தம்அவைகளிலேயே லயிக்கும். என்னையே த்யானஞ்செய்பவனுடைய சித்தம் என்னிடத்திலேயே லயிக்கும்(நாஞகஆகிவிடும்) என்னைத்யானிப்பதால் மனம் சுத்தமாகுமானதால்,ஸ்வப்னம்போலும்,மனோரதங்கள்போலும் பொய்யானவையான விஷயங்களை நினைக்காமல்மனத்தை என்னிடத்தில் செலுத்தும். மேலும் ஸ்திரீகளுடையசேர்க்கையாலும், அவர்களிடம் ஆசைகொண்ட காமிகளுடைய சேர்க்கையாலும், எவ்வளவு கெடுதிநேரிடுமோ, அவ்வளவு கெடுதி மற்றவிஷயங்களில் ஆசைகொள்வதால் நேரிடுகிறதில்லை. ஆனதால் ஸ்திரீகளுடையவும், காமிகளுடையவும் சேர்க்கையை யொழித்து ஜனங்களில்லாததும்,பயமற்றதுமான ஸ்தலத்திலிருந்து தைர்யமுள்ளவ

ஞ்கி சேர்ம்பலின்றி என்னை த்யானிக்கவேண்டும்'' என்றுசொன்ஞர்.

31. அதனைக்கேட்ட உத்தவர் பகவானை நோக்கி ''தாமரை மலர்போன்ற கண்களுள்ளவரே! மோக்ஷத்தை அடைய விரும்பியவன் உம்மை எப்படிப்பட்டவராக த்யானஞ்செய்யவேண்டும். அந்த த்யான ஸ்வரூபத்தைச் சொல்லவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

32-46. அதனைக்கேட்டு ஸ்ரீகிருஷ்ணன் உத்தவரைநோக்கி ''அதிக உயரமில்லாமலும், அதிக தாழ்ந்ததுமில்லாமல் ஸமமாகவிருக்கும் ஆஸனத்திலுட்கார்ந்து, கோணலில்லாமல் ஸமமான சரீரமுள்ளவனுகி இரண்டு கைகளையும் மடியில்வைத்துக்கொண்டு தன்னுடைய மூக்கின் நுனியைப்(புருவங்களின் மத்தியம்)பார்த்துக்கொண்டு பூரகம்,கும்பகம், ரேசகம் இவைகளால் ப்ராணனுடைய மார்க்கத்தைச் சுத்திசெய்யவேண்டும். அல்லது ரேசகம் பூரகம், கும்பகம் ஆகிய இவைகளைச் செய்தாவது சுத்திசெய்துகொள்ளலாம். மூலாதாரம் முதல் மூர்த்தா (தலை) வரையில் தாமரைத்தண்டின் நூல்போல் ஸூக்ஷ்மமும், தொடர்ந்ததுமான ஓங்காரத்தை ப்ராணனைக்கொண்டு ஹிருதயத்தில் வ்யாபரிக்கச் செய்து அதில் பருத்த மணி சப்தம்போல் மிகுந்த நாதத்தை ஸ்திரமாக விருக்கும்படி செய்யவும். இப்படி ஒவ்வொரு நாளும் காலையிலும், மத்யான்ஹத்திலும், ஸாயங்காலத்திலும் ப்ரணவத்துடன் ப்ராணுயாமத்தை பத்துத்தடவை அப்யஸித்தால் ஒரு மாதத்திற்குள்ளாகவே அவன் ச்வாஸத்தை ஜயிப்பான், சரீரத்திற்குள் ஹிருதயபுண்டரீகம் (தாமரைமலர்போன்ற ஹிருதயபாகம்) தலைகீழாக விருக்கிறது அதன் தண்டு மேலே இருக்கிறது, மேலுமது மலராமல் மொட்டாகவுமிருக்கிறது. அது எட்டு இதழ்களுள்ளது, நடுவில் காயுள்ளது, அதனை உயர்முகமாகவும் மலர்ந்திருப்பதாகவும் த்யானித்து அதன்காயில் ஸூர்யனையும், அதன்மீது சந்திரனையும், அதின்மீது அக்னியையும் த்யானிக்கவேண்டும். த்யானத்திற்குபயோகமான என்னுடைய மங்களமானஸ்வரூபத்தைஅந்தஅக்னியின்நடுவில்த்யானிக்கவேண்டும். அந்தஸ்வரூபம் எப்படிப்பட்டதென்றால்—நீண்டும் அழகு பொருந்தியவைகளுமான நான்கு கைகளுள்ளது; த்யானத்திற்குத்

தகுதியான அவயவங்களுள்ளது; சாந்தமானது; அழகிய முகமுள்ளது; மிக்க அழகான கழுத்துள்ளது; மனோஹரமான கன்னங்களுள்ளது; சுத்தமான சிறிப்புள்ளது; உயர்வுதாழ்வில்லாமல் ஸமமாக விருக்கும் காதுகளில் அணிந்த மகரகுண்டலங்களுள்ளது; பீதாம்பரத்தைத் தரித்தது; மேகம்போன்ற கருத்த திருமேனியுள்ளது; ஸ்ரீவத்ஸத்தா லலங்கரிக்கப்பெற்றது; சங்கம், சக்கிரம் கதை, தாமரைமலர், வனமாலை ஆகிய இவைகளால் அலங்கரிக்கப்பட்டது; காலில் அணிந்த பாதஸரங்களுள்ளது; கௌஸ்துபமுள்ளது; மிக்க காந்தியுள்ள கிரீடம், வளை, அரைஞாண் தோள்வளை இவைகளுள்ளது; அழகிய எல்லா அவயவங்களுள்ளது; அநுக்கிரஹ பார்வையுள்ள முகமுள்ளது; இப்படி ஒவ்வொரு அவயங்களிலும் மனத்தைச்செலுத்தி ஸுகுமாரமாக த்யானஞ்செய்யவேண்டும். பின்னும் சப்தம் முதலிய விஷயங்களில் செல்லவொட்டாமல் மனத்தைக்கொண்டு இந்திரியங்களைத்தடுத்தும், அந்தமனத்தை புத்தியாகிய ஸாரதியால் என்னிடத்தில் செலுத்தவேண்டும். எல்லா அங்கத்தையும் த்யானித்துக்கொண்டிருந்த மனத்தை அந்த அந்த அவயவத்திலிருந்து திருப்பி புன்சிரிப்புள்ள முகத்தையே த்யானிக்கவும். மற்ற அவயவங்களையே அப்பொழுது நினைக்கவேண்டாம். அந்த முகத்தை த்யானித்து மனம் அதில் ஸ்திரமானபின் எல்லாவற்றிற்கும் காரணத்தை த்யானித்தும் அதிலும் ஸ்திரமானபின் என்னிடத்தில் மனத்தைச் செலுத்தி (காரணம் சத்தைவிட்டு) வேறொன்றை சிந்திக்கவேண்டாம். (த்யானஞ்செய்யக்கூடியது, த்யானஞ்செய்பவன் என்ற பேதத்தைவிட்டு) அந்த காலதில் ஸகல பிராணிகளிடத்தில் பகவானாகிய நானிருப்பதாகவும், என்னிடத்தில் எல்லா ப்ராணிகளிருப்பதாகவும், தேஜஸ் தேஜஸ்ஸுடன் சேர்ந்திருப்பதுபோல் பார்ப்பான். இப்படி மிக்க தீவ்ரமாக த்யானஞ்செய்வதால் த்ரவ்யம், ஜ்ஞானம், கிரியை என்ற ப்ரமம் அற்றுப்போகும்.

---

## அத்யாயம்—15.

### மோக்ஷத்திற்கு இடையூர்களான ஸித்திகள்.

இந்திரியங்களை ஜயித்தவனும், ஸ்திரமான சித்தமுள்ளவனும், ப்ராணயாமஞ்செய்தவனும், என்னிடத்திலேயே சித்தத்

தைச்செலுத்தியவனுமான யோகிக்கு அணிமாமுதலிய ஸித்திகள் ஸித்திக்கின்றன" என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொன்னார். அதனைக் கேட்ட உத்தவர் பகவானை நோக்கி "எந்த தாரணையால் ஸித்திகளுண்டாகின்றன? ஸித்தியென்றால் என்ன? அவைகள் எப்படியுண்டாகின்றன? ஸித்திகள் எவ்வளவு? யோகிகளுக்கு நீர் ஸித்திகளைக் கொடுப்பவரானதால் சொல்லவேண்டும்" என்று கேட்டார்.

3—36. அதனைக்கேட்ட பகவான் உத்தவரை நோக்கி "யோகசாஸ்திரத்தை அறிந்தவர்களால் தாரணையும் ஸித்திகளும் பதினெட்டு வகையுள்ளதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளில் எட்டுதாரணையே என்னை முக்கியமாகக் கொண்டவை. மற்ற பத்துதாரணைகள் ஸத்வகுணத்தை விருத்தி செய்யக்கூடியவை. அணிமா, மஹிமா, என்ற மூன்று ஸித்திகளும் சரீரத்தின் ஸித்திகள். (எல்லா அணுக்களைக்காட்டிலும் சரீரம் ஸூக்ஷ்மமாகி அணுக்களிலும் பிரவேசிக்கக் கூடியதாகவிருப்பது அணிமா யெனப்படுகிறது, பருத்தவைகளைக் காட்டிலும் பருத்திருப்பது மஹிமா யெனப்படுகிறது, எல்லாவற்றிலும் லேசாகவிருப்பது லகிமா யெனப்படுகிறது) இந்திரியங்களுடன் அந்த அந்த தேவதாஸ்வரூபியாக ஸம்பந்திப்பது ப்ராப்தி யெனப்படுகிறது; நேரில் பார்க்கப்பட்டவைகளும், கேட்கப்பட்டவைகளுமான விஷயங்களை அநுபவிக்கக் கூடியஸாமர்த்தியம் ப்ராகாம்ய மெனப்படுகிறது. மாயயின் அம்சமாகியவைகளை தாண்டுதல் ஈசிதா யெனப்படுகிறது, (தனக்கும் பிறருக்கும் எல்லா விஷயங்களிலும் ஸாமர்த்தியத்தை யுண்டு பண்ணுவது ஈசிதா யென்று சிலர்) விஷயபோகங்களில் ஆசைப்படாமலிருப்பதே வசித்வ மெனப்படுகிறது, ஸமுத்திரத்தில் ஜலத்துளி லயிப்பதுபோல எந்த ஸுகத்தில் ஆசைப்பட்டு லயத்தை அடைகிறானோ, அந்த ஸுகம் ஏட்டாவது ஸித்தி யெனப்படுகிறது. இந்த எட்டு ஸித்திகளும் எனக்கு இயற்கையானவை. மேலும் பசி, தாஹம் இவைகளில் லாமலிருப்பது, வெகுதூரத்திலுண்டான சப்தத்தைக்கேட்டுத் தெறிந்துகொள்வது, வெகுதூரத்தில் நடப்பவைகளை நேரில் பார்த்ததுபோல் தெரிந்து கொள்வது, மனம்போல் வேகமாகச்செல்வது, இஷ்டமான ரூபத்தை யெடுத்துக்கொள்வது, பிறருடைய சரீரத்தில் ப்ரவேசிப்பது, தனதிஷ்டப்படி மரணமடைவது, அப்ஸரஸ்ஸுக்களுடன்

தேவர்கள் விளையாடுவதைப்பார்ப்பது, (அடைவதென்று சிலர்) ஸங்கல்பித்த வஸ்துக்களை அடைவது, தன்னுடைய உத்திரவும், நடையும் ஒரு விடத்திலும் தடைபடாமலிருப்பது என்று பத்து ஸித்திகள். மூன்று காலத்திய விஷயங்களைத் தெரிந்துகொள்வது, குளிர், உஷ்ணம் இவைகளால் உபத்திரவிக்கப் படாமலிருப்பது, பிறருடைய அபிப்பிராயம் முதலியவைகளைத் தெரிந்துகொள்வது, அக்னி, ஸூர்யன், ஜலம், விஷம் முதலியவைகளை ஸ்தம்பனஞ் செய்வது, ஒருவராலும் ஜயிக்கப்படாமலிருப்பது ஆகிய ஐந்தும் அல்ப ஸித்திகள். இவைகள் யோகதாரணையால் உண்டாகும் ஸித்திகள். எந்த தாரணையால் எந்த ஸித்திகளுண்டாகுமோ அதனைச் சொல்லுகிறேன், தெரிந்து கொள்ளும். பூதஸூக்ஷ்மங்களையு பாதியாகக் கொண்ட என்னிடத்தில் பூதஸூக்ஷ்மஸ்வரூபமாக மனத்தைத் யானித்து தாரணைசெய்பவன் அணிமாயென்ற ஸித்தியை அடைவான். மஹத்தத்வத்தையு பாதியாகக்கொண்ட என்னிடத்தில் மஹத்தத் வஸ்வரூபமாக மனத்தைச் செலுத்தி உபாஸிப்பவன் மஹிமா யென்ற ஸித்தியை அடைவான். பரமாணு ஸ்வரூபியாகிய என்னிடத்தில் சித்தத்தைச் செலுத்தி உபாஸிப்பவன் காலபரமாணுவாகிய லகிமா வென்ற ஸித்தியை அடைவான். வைகாரிகாஹங்காரத்தை யுபாதியாகக்கொண்ட என்னிடத்தில் மனத்தைச் செலுத்தும் யோகி எல்லா இந்திரியங்களுடைய ஸ்வரூபமாகிய ப்ராப்தி யென்ற ஸித்தியை அடைவான். கிரியா சக்தியை ப்ரதானமாகக்கொண்ட மஹத்தத்வமே ஸூத்ராத்மா வெனப்படுகிறது. அந்த ஸூத்திர ஸ்வரூபியாகிய என்னிடத்தில் சித்தத்தைச் செலுத்தியவன் எல்லாவற்றிலும் மேலான தாள என்னுடைய ப்ராகாம்யமென்பதை அடைவான். முக்குண ஸ்வரூபமாகிய மாயைக்கு அதிபதியும், அந்தர்யாமியும், ஜீவன், சரீரம் இவைகளுக்கு அதிபதியுமாகிய என்னிடத்தில் மனத்தைச் செலுத்தியவன் ஈசிதா வென்ற ஸித்தியை அடைவான். பகவான் என்ற சப்ததிற்குப் பொருளாயும், விராட், ஹிரண்ய கர்ப்பர், காரணம் என்ற மூன்று உபாதிகளைத் தாண்டின நாராயணனுமான என்னிடத்தில் மனத்தைச் செலுத்தினவன் வசித்வ மென்பதை அடைவான். நிர்க்குண ப்ரஹ்மமாகிய என்னிடத்தில் மனத்தைச் செலுத்திய யோகி பரமானந்தத்தை அடைவான். எல்லா காமங்களும் அதில் லயிக்கின்றன. ச்வேத த்வீபத்திற்கு

அதிபதியும், தர்மஸ்வரூபியும், சுத்தனுமான என்னிடத்தில் சித்தத்தைச் செலுத்தியவன் பசி, தாஹம், சோகம், மோஹம், கிழத்தன்மை, மரணம் இவைகளற்று சுத்தனுவான். ஆகாச ஸ்வரூபியான ப்ராணனுடைய ஸ்வரூபியான என்னிடத்தில் (ஸமஷ்டிரூபியினிடத்தில்) மனத்தைச் செலுத்தி நாதத்தை த்யானஞ்செய்தால் ஆகாசத்தில் ப்ரகாசிக்கும் ஜனங்களுடைய பலவகைதான சப்தங்களைத் தெரிந்துகொள்வான். ஆதித்யனிடத்தில் சக்ஷுரிந்திரியத்தையும், சக்ஷுஸ்ஸைடனும் சேர்த்து அதில் என்னை த்யானித்தால் வெகுதூரத்தி லிருப்பவைகளை நேரில் தெரிந்து கொள்வான். மனம், தேஹம், அதையநுசரித்திருக்கும் வாயு ஆகிய இவைகளை என்னிடத்தில் சேர்த்து தாரணைசெய்தால் அதன் மஹிமையால் மனஞ்செல்லுமிடத்தில் சரீரமும் செல்லும். மேலும் மனத்தை உபாதானகாரணமாக வைத்துக்கொண்டு எந்த எந்த ஸ்வரூபத்தை அடைய விரும்புகிருனே, மனத்திற்கிஷ்டமான அந்த அந்த சரீரத்தை அடைவான். அது என்னிடத்தில் சித்தத்தைச் செலுத்தி செய்த தாரணையின் மஹிமையேயாம். மேலுமவன் எந்த சரீரத்தில் ப்ரவேசிக்கவேண்டுமென்று விரும்புகிருனே, அந்த சரீரத்தில் தானிருப்பதாக சிந்திக்கவேண்டும். அப்படிசிந்திப்பதால் சரீரத்தை விட்டு ஸூக்ஷ்ம சரீரத்துடன் வெளியிலிருக்கும் வாயுவின்மார்க்கமாக இஷ்டமான சரீரத்தில் ப்ரவேசிக்கிருன். புஷ்பத்தின் தேனைக்குடிக்கும் வண்டு எப்படி ஒரு புஷ்பத்திலிருந்து மற்றொரு புஷ்பத்தை அடைகிறதோ, அப்படி ச்ரமமின்றி வேறு சரீரத்தில் ப்ரவேசிக்கிருன். தனதிஷ்டப்படி மரணமடைய விரும்பியவன் குதிகாலால் குதத்தை அடைத்து ப்ராணனை யுபாதியாகக்கொண்ட ஆத்மாவை ஹிருதயம், மார்பு, கண்டம், தலை முதலிய ஸ்தானங்களில் செல்லும்படிசெய்து ப்ரஹ்மரந்த்ரத்தின் வழியாக வெளிப்படுத்தி தனக்கிஷ்டமான கதியை அடையவேண்டும். அவனுக்கு ஸ்வர்க்கம் முதலிய விடங்களுக்கு சென்று விளையாட வேண்டுமென்ற அபிப்ராயமிருந்தால் அந்த ஸமயத்தில் ஸத்வ குணமுள்ள என்னுடைய திவ்ய மூர்த்தியை த்யானஞ்செய்ய வேண்டும். அதனுல் ஸத்வகுணமுள்ள தேவஸ்திரீகள் விமானத்துடன் வந்து அவனை அழைத்துப் போவார்கள். என்னையே நினைத்து எந்தகாலத்தில் எப்படி ஸங்கல்பிக்கிருனே, அதனை

அடைவான். அது ஸத்யவஸ்துவாகிய என்னிடத்தில் மனத்தைச் செலுத்தியதின் மஹிமையேயாம். எல்லாவற்றிற்கும் அதிபதியும், ஸ்வதந்திரனுமான என்னிடத்தில் மனத்தைச் செலுத்தி என்னுடைய ஸ்வரூபத்தை அடைந்தவன் ஒருவிடத்திலும் கெடுதியை அடையமாட்டான். என்னுடைய ஆஜ்ஞைபோல் அவனுடைய உத்திரவு தடைபடாது. மேலும் என்னிடத்தில் பக்திசெய்து அதனால் சித்த சுத்தியடைந்தவனுக்கு மூன்று காலத்திய ஜனனமரணம் முதலியவைகள் நன்றாய் தெரியும். ஜலஜந்துக்களுடைய சரீரத்தை ஜலம் எப்படி கெடுக்கிறதில்லையோ, அப்படியே என்னைத்யானஞ்செய்து அதனால் ஸ்ரமத்தை அடைந்த மனமுள்ளவனுடைய சரீரம் யோகமயமாக விருப்பதால் அது அக்னி முதலியவைகளால் கெடுக்கப்படாது. த்வஜரேகை, குடைரேகை, விசிரிரேகை, ஆகிய இவைகளாலும், ஸ்ரீவத்ஸம் முதலியவைகளாலும் அலங்கரிக்கப் பெற்ற என்னுடைய விபூதிகளை (அவதாரங்களை) எவன் த்யானஞ்செய்கிறானோ, அவனை ஒருவராலும் ஜயிக்கமுடியாது. இம்மாதிரி மேற்காட்டிய யோக தாரணையால் என்னை யுபாஸிப்பவனுக்கு மேற்காட்டிய ஸித்திகளெல்லாம் கிடைக்கின்றன, ஆனதால் இந்திரியங்களை ஜயித்து ப்ராணயாமஞ்செய்து சாந்தனாக விருப்பவனுக்கு எந்த ஸித்திதான் கிடைக்காது? என்னுடைய ஸ்வரூபத்தை அடைய விரும்பி மேலான யோகத்தைச் செய்பவனுக்கு மேற்காட்டிய ஸித்திகள் இடையூரானவை, காலத்தை வீணாகக் கழிப்பதற்குக் காரணமாக உள்ளவை. (ஆனதால் அவைகளில் ஆசைப்படக்கூடாதென்று கருத்து) பிரப்பினாலும், ஓஷதிகளாலும், தபஸ்ஸாலும், மந்திரத்தாலும் எவ்வளவு ஸித்திகளுண்டாகின்றனவோ, அந்த ஸித்திகள் யாவும் யோகத்தால் கிடைக்கின்றன. மற்றவையால் கிடைக்கிறதில்லை, ஆனதால் யோகத்தை (ப்ரஹ்ம ஸம்பத்தியைக் கொடுக்கும்) விடக்கூடாது. ஸகல ஸித்திகளும் என்னிடமிருந்தே உண்டாகின்றன. (காரணம்) அவைகளுக்கு நானே அதிபதி, பின்னும் மோக்ஷம், அதன் ஸாதனமான ஜ்ஞானம் அதற்குபயோகமான தர்மம் அதனையுபதேசிப்பவர்களான ஆசார்யர்கள் ஆகிய இவர்களுக்கும் நான் அதிபதி, நான் ஸகல ப்ராணிகளுக்கும் அந்தர்யாமியாக விருப்பவன், ஆனாலும் ஒன்றில் அடங்கியவனல்ல, ஒன்றாலும் மறைக்கப்படாதவன் ; ஆகா

யம் முதலிய பூதங்கள் ஸகல பிராணிகளுக்கு உள்ளேயும் வெளியிலுமிருப்பதுபோல் நான் வ்யாபகனாக விருக்கிறேன்.

---

## அத்யாயம்—16.

### பகவானுடைய விபூதிகள்.

இம்மாதிரியான பகவானுடைய வார்த்தையைக்கேட்டு உத்தவர் ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி "நீர் பரப்ரஹ்மம்; உமக்கு ஆதியுமில்லை, அந்தமுமில்லை, ஆவரணமற்றவர்; எல்லாபதார்த்தங்களையும் படைத்துக்காப்பாற்றி ஸம்ஹரிப்பவர்; பலவகையான பிராணிகளிடத்தில் நீர்வஸித்தாலும் மூடர்களால் அறியப்படுகிறதில்லை. ஆனதால் மஹர்ஷிகள் எந்த எந்த வஸ்துக்களில் எப்படி உம்மை உபாஸித்து மோக்ஷத்தை அடைகிறார்கள்? அதனைச்சொல்ல வேண்டும். ஸகலபிராணிகளையும் ஸிருஷ்டிப்பவரான நீர் அந்தர்யாமியாக எல்லாபிராணிகளிடத்திலும் மறைந்து ஸஞ்சரிக்கிறீர்; மேலும் நீர் எல்லா பிராணிகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்; ஆனாலும் ஜனங்கள் உம்மைப்பார்க்கிறதில்லை. ஏனென்றால் உம்முடைய மாயயால் மோஹித்திருக்கிறார்கள். ஓ மிக்க விபூதியுள்ளவரே! பூமி, ஆகாயம், பாதாலம், திக்குகள் ஆகிய ஸ்தலங்களிலிருக்கும் உம்முடைய விபூதிகளை எனக்குச் சொல்லும். ஸகல புண்ய தீர்த்தங்களுக்கும் இருப்பிடமான உம்முடைய தாமரை மலர்போன்ற பாதங்களை நமஸ்கரிக்கிறேன்" என்றார்.

6—42. அதனைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவரை நோக்கி "கேள்வியை அறிந்தவர்களுக்குட் சிறந்த உத்தவ! முன்னொருகால் குருக்ஷேத்திரத்தில் சத்ருக்களுடன் யுத்தஞ்செய்ய விரும்பிய அர்ஜுனர் இந்த விஷயமாக என்னைக் கேட்டார். அப்பொழுது அர்ஜுனர் 'ராஜ்யத்திற்காக பந்துக்களைக் கொல்வது தர்மத்திற்கொற்றதல்ல, நிந்திக்கக்கூடியது;' என்று யோசித்து நான் பந்துக்களை அடிக்கிறேன். பந்துக்களால் அடிக்கப்பட்டேன் என்ற ப்ராகிருத புத்தியை அடைந்து யுத்தஞ்செய்கிறதில்லையென்று திரும்பினார். அந்த ஸமயத்தில் புருஷர்களுக்குட் சிறந்தவரான அர்ஜுனருக்கு ஆத்மதத்வத்தை யுபதேசித்தேன். அதனால் அவருடைய ஸம்சயம் நிவர்த்தியாயிற்று. அதனை உமக்கு உப

தேசிக்கிறேன். ஓ உத்தவ! இந்த ஸகல பிராணிகளுக்கும் நான் ஆத்மாவாகவும், ஸுஹ்ருத்தாகவும், ஈச்வரனாகவுமிருக்கிறேன் மேலும் அந்த பிராணிகளைப் படைத்து பரிபாலித்து ஸம்ஹரிக்கிறேன். ஸ்வர்க்கம் முதலிய புண்யலோகங்களுள்ளவர்களுடைய புண்யலோகங்கள் நானே. பிறரை ஸ்வாதீனப்படுத்திக்கொள்பவர்களுக்குள் நான் காலமாக விருக்கிறேன். அனேக குணங்களுக்குட் எல்லாவற்றையும் ஸமமாகப் பார்ப்பதென்ற குணமாக விருக்கிறேன். குணமுள்ளவர்களுடைய இயற்கையான குணம் நான். புத்தி முதலிய குணங்களுக்குள் நான் ஸூத்ராத்மாவாக விருக்கிறேன். மஹத்தானவைகளுக்குள் மஹத்தாக விருக்கிறேன். ஸூக்ஷ்மமானவைகளுக்குள் நான் ஜீவனாக விருக்கிறேன். ஜயிக்கமுடியாதவைகளுக்குள் நான் மனதாகவிருக்கிறேன். வேதத்தை யறிந்தவர்களுக்குள் நான் ஹிரண்ய கர்ப்பனாக விருக்கிறேன். மந்திரங்களுக்குள் மூன்று அக்ஷரங்களடங்கிய ப்ரணவமாக விருக்கிறேன். அக்ஷரங்களுக்குள் (எழுத்துக்கள்) அகாரமாக விருக்கிறேன் சந்தஸ்ஸுக்களுக்குள் மூன்று பாதங்களுள்ள காயத்ரீ சந்சஸ்ஸாக விருக்கிறேன். ப்ரஹ்மர்ஷிகளுக்குள் ப்ருகுவாகவும், தேவர்ஷிகளுக்குள் நாரதராகவும், ராஜர்ஷிகளுக்குள் மனுவாகவும், பசுக்களுக்குள் காமதேனுவாகவுமிருக்கிறேன். ஸகல தேவர்களுக்குள் இந்திரனாகவும், வஸுக்களுக்குள் ஹவ்யவாட்டாகவும், ஆதித்யர்களுக்குள் விஷ்ணுவென்ற ஆதித்யனாகவும், ருத்திரர்களுக்குள் நீல்லோஹிதராகவு மிருக்கிறேன், ஸித்தேசர்களுக்குள் கபிலராகவும், பக்ஷிகளுக்குள் கருடனாகவும், ப்ரஜாபதிகளுக்குள் தக்ஷராகவும், பிதிருக்களுக்குள் அர்யமாவாகவு மிருக்கிறேன். ஓ உத்தவ! அஸுரர்களுக்குள் ப்ரஹ்லாதனாகவும், நக்ஷத்திரங்கள், ஓஷதிகள் ஆகிய இவைகளுக்கு அதிபதியான ஸோமனாகவும், யக்ஷர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் அதிபதியான குபேரனாகவு மிருப்பதாகத் தெரிந்துகொள்ளும். மேலும் நான் சிறந்த யானைகளுக்குள் ஐராவதமாகவும், ஜலஜந்துக்களுக்கு அதிபதியாகிய வருணனாகவும், தேஜஸ்விகளுக்குள் ஸூர்யனாகவும், மனிதர்களில் அரசனாகவுமிருக்கிறேன் குதிரைகளுக்குள் உச்சைச்ரவஸ் என்ற குதிரையாகவும், லோஹங்களில் ஸுவர்ணமாகவும், சிக்ஷிப்பவர்களுக்குள் யமனாகவும், ஸர்ப்பங்களுக்குள் வாஸுகியாகவு மிருக்கிறேன். சிறந்தநாகங்களுக்குள் ஆதிசேஷனாகவும், கொம்பு, சிங்கப்பல் ஆகிய இவைகளுள்ளவை

களுக்குள் சிங்கமாகவும், ஆச்ரமங்களுக்குள் ஸன்யாஸாச்ரமமாக வும், ஜாதிகளுக்குள் ப்ராஹ்மண ஜாதியாகவும், புண்ய தீர்த்தங் களுக்குள் கங்கையாகவும், ஸரஸ்ஸுக்களுக்குள் ஸமுத்திரமாக வும், ஆயுதங்களுக்குள் வில்லாகவும், வில்லை தரித்தவர்களுக்குள் திரிபுரத்தைக்கொன்ற பரமசிவனாகவுமிருக்கிறேன். மேலானவர் கள் வஸிக்கும் ஸ்தானங்களுக்குள் மேருவாகவும், துர்க்கமான ஸ்தலங்களுக்குள் ஹிமவானாகவும், விருக்ஷங்களுக்குள் அச்வஸ்த மரமாகவும், ஓஷதிகளுக்குள் யவதான்யமாகவும், புரோஹிதர்களுக் குள் வஸிஷ்டராகவும், வேதாந்தத்தை அறிந்தவர்களுக்குள் ப்ர ஹஸ்பதியாகவும், ஸேனாபதிகளுள் ஸுப்ரஹ்மண்யராகவும், நல் மார்க்கத்தைப் பரவஞ்செய்பவர்களுக்குள் ப்ரஹ்மதேவராகவும், யஜ்ஞங்களுக்குள் ப்ரஹ்மயஜ்ஞமாகவும், வ்ரதங்களுக்குள் பிறரை ஹிம்ஸிக்காமலிருக்கும் வ்ரதமாகவும், பெருக்குவது, செதுக்கு வது, உராய்வது முதலிய சுத்திகளைச் செய்பவைக்குள் வாயு, அக்னி, ஸூர்யன், ஜலம், வாக்கு ஆகிய இவைகளாகவுமிருக்கிறேன். அஷ்டாங்க யோகங்களில் ஸமாதியாக விருக்கிறேன். ஜயிக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவர்களுக்கு நான் நீதியாக விருக் கிறேன். விவேகமுள்ளவர்களுக்குள் ஆத்மவித்யையாக விருக் கிறேன். ஐந்துவிதமானக் யாதிகளைச்சொல்பவர்களுக்குள் விகல்ப மாக விருக்கிறேன். (ஆக்யாதி, அன்யதாக்யாதி, சூன்யக்யாதி அஸத்க்யாதி அனிர்வசனீயக்யாதி என்று ஐந்து க்யாதிகள். இது இப்படியோ அல்லது இப்படியோ என்ற முடிவற்ற ஸந்தேஹம் விகல்பமெனப்படுகிறது) ஸ்திரீகளுக்குள் சதரூபையாகவும், புரு ஷர்களுக்குள் ஸ்வாயம்புவ மநுவாகவும், மஹர்ஷிகளுக்குள் நாரா யண மஹர்ஷியாகவும், ப்ரஹ்மசாரிகளுக்குள் ஸனத் குமாரரா கவும், தர்மங்களில்ஸன்யாஸ தர்மமாகவும், க்ஷேமத்தைக் கொடு க்கும் கார்யங்களுக்குள் அந்தர்முகமாக விருப்பதாகவும், ரஹஸ்ய மானவைகளில் ப்ரியவார்த்தை சொல்வது, மௌனமாகவிருப்பது ஆகிய இவைகளாகவுமிருக்கிறேன் (மௌனமாக விருந்தாலும் பிரியமான வார்த்தை சொன்னாலும் அபிப்ராயம் வெளிப்படா தென்றுகருத்து) ஸ்திரீ புருஷன் இவர்களடங்கிய மிதுனங்களில் ப்ரஜாபதியாக விருக்கிறேன். தவறுதலில்லாதவர்களில் ஸம்வத் ஸரமாகவும், ருதுக்களில் வஸந்தமாகவும், மாதங்களில் மார்க்க சீர்ஷமாதமாகவும் (மார்கழி) நக்ஷத்திரங்களில் உத்திராஷாடாநக்ஷ

த்திரத்தின் நான்காவது பாதமாகிய அபிஜித் என்ற நக்ஷத்திரமாகவும், யுகங்களில் கிருதயுகமாகவும், தைர்யமுள்ளவர்களுக்குள் தேவலராகவும், அஸிதராகவும், வேதத்தைப் பிரித்தவர்களில் ஸத்யவதியின் புத்திரராகவும், வித்வான்களில் சுக்கிரனாகவுமிருக்கிறேன். பின்னும் எல்லா பிராணிகளுடைய உத்பத்தி, நாசம், போக்கு, வரவு, வித்யை, அவித்யை இவைகளைத் தெரிந்துகொண்டிருக்கும் பகவான்களுக்குள் வாஸுதேவராகவும் (வஸுதேவருடையபுத்திரர்) பாகவதர்களுக்குள் (பக்தர்களுக்குள்) உத்தவராகவும் (நீர்) கிம்புருஷர்களுக்குள் ஹநூமானாகவும், வித்யாதரர்களுக்குள் ஸுதர்சனனாகவுமிருக்கிறேன். ரத்தினங்களுக்குள் பத்மராகமாகவும், அழகானவைகளில் தாமரைமலராகவும், தர்ப்ப ஜாதிகளில் குசமாகவும், ஹவிஸ்ஸுக்களில் பசுவின் நெய்யாகவும், முயற்சியுள்ளவர்களுக்குக் கிடைக்கும் ஸம்பத்தாகவும், சூதாடுபவர்களுடைய கபடமாகவும், பொறுமையுள்ளவர்களுடைய பொறுமையாகவும், ஸத்வகுண முள்ளவர்களுடைய ஸத்வகுணமாகவும், பலமுள்ளவர்களுடைய மனோபலமாகவும், சரீரபலமாகவும், பக்தர்களுடைய பக்தியாகவுமிருக்கிறேன். ஒன்பது மூர்த்திகளுக்குள் வாஸுதேவனாக விருக்கிறேன், (வாஸுதேவர், ஸங்கர்ஷணர், ப்ரத்யும்னர், அனிருத்தர், நாராயணன், ஹயக்ரீவர், வராஹர், நரஸிஹ்மர், வாமனரென்று ஒன்பது மூர்த்திகள்) கந்தர்வர்களுக்குள் விச்வாவஸுவாகவும், அப்ஸரஸ்ஸுக்களில் பூர்வசித்தியாகவும், மலைகளின் ஸ்திரமாக விருப்பதாகிய குணமாகவும், பூமியின் கந்தமென்ற குணமாகவும், ஜலத்தின் ரஸமாகவும், மிக்க தேஜஸ்ஸுள்ளவர்களுக்குள் அக்னியாகவும், ஸூர்யன், சந்திரன், நக்ஷத்திரங்கள் இவைகளுடைய காந்தியாகவும், ஆகாயத்தின் குணமாகிய சப்தமாகவும், ப்ராஹ்மணபக்தியுளுள்ளவர்களுக்குள் பலி சக்கிரவர்த்தியாகவும், வீரர்களுக்குள் அர்ஜுனராகவு மிருக்கிறேன். ஸகல பிராணிகளைப் படைப்பதும், காப்பாற்றுவதும், ஸம்ஹரிப்பதும் நானே. நடை, மலமூத்திரத்தை வெளிப்படுத்துவது, பேசுவது, எடுத்துக்கொள்வது, ஆனந்தம் முதலிய கர்மேந்திரிய வ்யாபாரங்களாகவும், ஸ்பர்சம், பார்ப்பது, ருசியைத்தெரிந்து கொள்ளுவது, சப்தத்தைக்கேட்பது, வாஸனையைத் தெரிந்துகொள்வது, ஆகிய ஜ்ஞானேந்திரியங்களுடைய வ்யாபாரங்களாகவு மிருக்கிறேன். ஒவ்வொரு இந்திரியங்களுக்கும் அதன்

விஷயத்தை க்ரஹிக்கும் சக்தியாகவுமிருக்கிறேன். ஐந்து பூதங்களின் தன்மாத்திரைகள். அஹங்காரம், மஹத்தத்வம், பதினறு கலைகள், (ஐந்து பூதங்கள், பதினேரு இந்திரியங்கள்) அவைகளுள்ள புருஷன், ப்ரக்ருதி ஆகிய இருபத்தைந்து தத்வங்களின் ஸ்வரூபத்தையும் அவைகளின் நிச்சயத்தையும் தெரிந்து கொள்வதும் நானே. ஜீவன், ஈச்வரனென்ற பேதமும், குணமுள்ளவன், குணமென்ற பேதமும், க்ஷேத்திரம் க்ஷேத்திரஜ்ஞனென்ற எல்லாபேதமும் என்னைக்காட்டிலும் வேருக விருக்கவில்லை. (எல்லாம் என்னுடைய ஸ்வரூபமென்றுகருத்து) பரமாணுக்களைப் பிரித்தெண்ணினுலும் என்னுடைய விபூதிகளை கணக்கிடமுடியாது. கோடிக்கணக்கான அண்டங்கள் என்னுல் ஸிருஷ்டிக்கப் பட்டிருப்பதால் அவைகளை கணக்கிடமுடியாதவை. அவைகளிலிருக்கும் என்னுடைய விபூதிகளை எப்படி கணக்கிடமுடியும்? ப்ரபாவம், ஸம்பத், கீர்த்தி ஐச்வர்யம் (அதிபதியாகவிருப்பது) ஹ்ரீ, கொடுப்பது, மனத்திற்கும் கண்ணுக்கும் ஸந்தோஷத்தைக் கொடுப்பது, பாக்கியம், பலம், பொறுமை, விஜ்ஞானம், ஆகிய இவைகள் எவ்விடத்திலிருக்கின்றனவோ, அவை என்னுடைய அம்சமேயாம். இம்மாதிரி என்னுடைய விபூதிகளைச் சுருக்கமாகச் சொன்னேன். என்னிடத்தில் மனத்தைச் செலுத்துவதற்காக இவைகளைச் சொன்னேன். இவைகள் மனத்தின் விகாரங்களாலேற்பட்டவை. வாக்கினுல் சொல்லப்படும் ஆகாயத்தாமரைமலருக்கு ஒப்பானவையே.

43—45, வாக்கை மனத்திலும், மனத்தை ப்ராணனிடத்திலும் ப்ராணனை இந்திரியங்களிலும், அவைகளை புத்தியிலும், புத்தியை ஸத்வகுணமுள்ள புத்தியிலும் அடக்கவேண்டும். இப்படி அடக்கியவன் திரும்பவும் ஸம்ஸாரத்தை அடையமாட்டான். வாக்கையும் மனத்தையும் புத்தியால் அடக்காமல் எவ்வளவு வ்ரதஞ் செய்தாலும் அந்த வ்ரதம், தபம், ஜ்ஞானம் ஆகிய இவைகள் சூளையில் வைக்காத (பச்சை) குடத்திலிருக்கும் ஜலம்போல் நழுவிவிடும். ஆனதால் வாக்கு, மனம், ப்ராணன் ஆகிய இவைகளை என்னிடத்தில் செலுத்திய புத்தியால் அடக்கினுல் க்ருதார்த்தனுகிவிடுவான்.

## அத்யாயம்—17.

### ப்ரஹ்மசாரி, கிருஹஸ்தர்கள் ஆகிய இவர்களின் தர்மங்கள்.

உத்தவர் ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி "வர்ணம், ஆச்ரமம், ஆசாரம் இவைகளுள்ள மனிதர்களும் அவைகளற்றவர்களும் கர்மங்களைச் செய்யவேண்டும். அதனால் பகவானிடத்தில் பக்தியுண்டாகும் என்றும், பக்தியுடன் செய்யப்படும் கர்மம் மோக்ஷத்திற்கு ஸாதனமாகுமென்றும் உம்மால் சொல்லப்பட்டதல்லவா? கர்மங்களை அநுஷ்டிப்பவர்களெல்லாருக்கும் பக்தியுண்டாகிறதென்ற நியமமில்லையே. ஆனதால் எப்படி தனக்குரிய கர்மங்களை அநுஷ்டித்தால் பகவானாகிய உம்மிடத்தில் பக்தியுண்டாகும்? ஓ தாமரைக்கண்ண! அதனைச் சொல்லவேண்டும். ஓ மிக்க பராக்கிரமமுள்ளவரே! முன்னொருகால் மிக்க ஸுகஸ்வரூபமான எந்த தர்மத்தை ஹம்ஸஸ்வரூபியாக விருந்து ப்ரஹ்மதேவருக்கு உபதேசித்தீரோ, அந்த தர்மம் உபதேசித்து வெகுநாளாகிவிட்டதால் உம்மாலுபதேசிக்கப்பட்ட தர்மம் பூலோகத்தில் பெரும்பாலும் மறைந்துபோகும். வேதங்கள் சரீரத்துடன் வாஸஞ்செய்கின்ற ப்ரஹ்மதேவருடைய ஸபையிலும் அப்படிப்பட்ட தர்மத்தைச் சொல்பவரும் நீரே, அநுஷ்டிப்பவரும் நீரே, காப்பாற்றுபவரும் நீரே. அப்படிப்பட்ட நீர் இந்த லோகத்தைவிட்டுச் சென்றால் அப்படிப்பட்ட தர்மத்தை யார் பிறருக்கு உபதேசிப்பார்? ஆனதால் ஸகல தர்மங்களையும் அறிந்தவராகிய நீர் உம்முடைய பக்திக்கு ஸாதனமாகிய தர்மம் எவனுக்கு எப்படி விதிக்கப்படுகிறது. அதனைச் சொல்லும்" என்று கேட்டார்.

8—20. அதனைக்கேட்ட பகவான் உத்தவரைநோக்கி "உம்மால் கேட்கப்பட்ட கேள்வி தர்மத்திற்கொற்றது; வர்ணம் ஆச்ரமம் ஆசாரம் இவைகளுள்ள மனிதர்களுக்கு பகவத்பக்தியைக் கொடுக்கக்கூடியது; ஆனதால் அதனைச் சொல்லுகிறேன் தெரிந்துகொள்ளும். கிருதயுகத்தில் மனிதர்களுடைய வர்ணத்திற்கு ஹம்ஸமென்று பெயரிருந்தது. அந்தகாலத்திய ஜனங்கள் ஜனனத்தாலேயே கிருதகிருத்யர்களாக விருந்தார்கள். (பகவானையுபாஸித்துக்கொண்டு மாத்திர மிருந்தார்கள். ஆசாரமாகிய தர்மம் பிறகுண்டாயிற்றென்று தாத்பர்யம்) ஜனங்கள் அப்படியிருந்ததால் அந்தயுகத்திற்கு கிருதயுகமென்ற பெயர்கிடைத்தது. மே

ஆம் அந்த யுகத்தில் ப்ரணவமே (ஓங்காரம்) வேதமாகவிருந்தது (ஆசாரத்தை விதிக்கும் சாஸ்திரமேயில்லையென்று கருத்து). தர்ம மாகிய நான் விருஷப ஸ்வரூபத்தைத் தரித்திருந்தேன். அந்தகா லத்திய ஜனங்கள் தபோநிஷ்டர்களாக விருந்து சுத்தனாகிய என்னை யுபாஸித்து பாபமற்றவர்களாக விருந்தார்கள். (த்யானஞ்செய்து கொண்டிருந்தார்கள்) த்ரேதாயுகத்தின் ஆரம்பத்தில் என்னுடைய ஹ்ருதயத்திலிருந்து ப்ராணனிடமாக வேதவித்யை ப்ரகாசித்தது. ஔத்காத்ரம் ஆகிய மூவ்வகையான யஜ்ஞமுண்டாயிற்று. நான் அதன் ஸ்வரூபமானேன். மேலும் ப்ராஹ்மண, க்ஷத்திரிய வைச்ய சூத்திர என்ற பெயருள்ளவைகளும், தங்களுக்குரிய ஆசாரங்களை யே லக்ஷணங்களாகக் கொண்டவர்களுமான வர்ணங்கள் விராட் புருஷனுடைய முகம், கை, துடை, கால் ஆகிய இவைகளிலிருந்து உண்டாயின. பின்னும் அந்தவிராட்புருஷனுடைய ஜகனத்திலிருந்து (இடுப்பிற்கு கீழ் முன்பக்கம்) க்ருஹஸ்தாச்ரமமும், என்னுடைய ஹ்ருதயத்திலிருந்து ப்ரஹ்மசர்யமும்; மார்பிலிருந்து வான ப்ரஸ்த மும், தலையிலிருந்து ஸன்யாஸமும் உண்டாயின. பின்னும் வர்ணங்களுக்கும் ஆச்ரமங்களுக்கும் ஸ்வபாவம், உண்டான ஸ்தலத் திற்கு தக்கப்படி தாழ்வு, மத்திய நிலைமை, மேன்மை ஆகிய இவைகளுண்டாயின. சமம், தமம், தபஸ், சௌசம், ஸந்தோஷம், பொறுமை, கபட மில்லாமலிருப்பது, என்னிடத்தில் பக்திசெய் வது, தயை, ஸத்யம் ஆகிய இவைகள் ப்ராஹ்மணனுக்கு இயற்கை யான குணங்கள். தேஜஸ், பலம், தைர்யம், சௌர்யம், பொறுமை, கொடுப்பது, முயற்சி, ஸ்திரபுத்தி, ப்ராஹ்மணபக்தி, ப்ரபுவாக விருப்பது ஆகிய இவைகள் க்ஷத்திரியனுடைய இயற்கையான குணங்கள். பரலோக மிருக்கிற தென்ற புத்தி, கொடுப்பதில் நோக்கம், டம்பமில்லாமலிருப்பது, ப்ராஹ்மணனை ஸேவிப்பது, கிடைத்த பொருளில் ஸந்தோஷப்படாயலிருப்பது ஆகிய இவை கள் வைச்யப்ரக்ருதிகள். ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், தேவர்களுக்கும் கபட மற்றுச் சுச்ரூஷைசெய்வது, அதில் கிடைத் ததைக்கொண்டு ஸந்தோஷிப்பது ஆகிய இவை சூத்திர ப்ரக்ருதிகள். அசுத்தனாக விருப்பது, பொய்சொல்வது, திருடு வது, பரலோகமில்லையென்று சொல்வது, காரணமில்லாமல் சண்டைசெய்வது, காமம், கோபம், ஆசை இவைகளுள்ளதாக விருப்பது ஆகிய இவை சண்டாளன் முதலியவர்களுடைய

ப்ரகிருதி. பிறரை ஹிம்ஸிக்காமலிருப்பது, ஸத்யம் பேசுவது, திருடாமலிருப்பது, காமம், கோபம், லோபம் இவைகளில்லாமலிருப்பது, ஸகல பிராணிகளுக்கும் ஹிதத்தையும், பிரியத்தையுஞ் செய்யவேண்டுமென்ற எண்ணம் ஆகிய இவைகள் எல்லா ஜாதிகளுக்கும் பொதுவான தர்மங்களாகும்.

21—34. ப்ராஹ்மணன், க்ஷத்திரியன், வைச்யன் ஆகிய மூன்று வர்ணத்தார்களும் கர்ப்பாதானம் முதலிய ஸம்ஸ்காரங்களை முறையே அடைந்து உபநயனமென்ற இரண்டாவது ஜனனத்தை யடைந்து ஆசார்யருடைய கிருஹத்தில் வஸித்து சாந்தனாகி வீணுனவார்த்தை பேசாமல் வேதத்தை அத்தியயனம் செய்யவேண்டும். அவைகளின் அர்த்தத்தையும் விசாரிக்கவேண்டும், (உபகுர்வாணனென்றும் நைஷ்டிகனென்றும் ப்ரஹ்மசாரிகள் இரண்டு வகை ; அதில் உபகுர்வாண ப்ரஹ்மசாரியினுடைய தர்மம் சொல்லப்படுகிறது) மேற்சொல்லிய ப்ரஹ்மசாரியாக விருப்பவன் மேகலை மாந்தோல், தண்டம், ஜபமாலை, யஜ்ஞோபவீதம், கமண்டலு, தர்ப்பம் ஆகிய இவைகளைத் தரிக்கவேண்டும். பற்கள், வஸ்திரம், இவைகளை சுத்திசெய்வதிலேயே நோக்கமுள்ளவனாக இருக்கக் கூடாது. எண்ணெய்தேய்த்துக்கொள்ளாததால் ஜடைதரிக்கவேண்டும். நல்ல ஆஸனங்களில் ஆசைவைக்கக்கூடாது. ஸ்நானம் போஜனம், ஹோமம், ஜபம், மூத்திரம்செய்வது இந்தகாலங்களில் மௌனமாக விருக்கவேண்டும். கக்ஷம், உபஸ்தம் இவைகளிலிருக்கும் மயிர்களையும், நகங்களையும் கிள்ளக்கூடாது. ப்ரஹ்மசாரியாக விருப்பவன் ஒருபொழுதும் ரேதஸ்ஸை விடக்கூடாது. ஒருகால் தனக்குத் தெரியாமல் ரேதஸ் வெளிப்படுமானாலும் ஜலத்தில் ஸ்நானஞ்செய்து ப்ராணாயாமஞ்செய்து காயத்ரிமந்திரத்தை ஜபிக்கவேண்டும். மேலும் அக்னி, ஸூர்யன், ஆசார்யன், பசு, ப்ராஹ்மணர்கள், தகப்பன், பெரியோர்கள், தேவர்கள் ஆகிய இவர்களை இரண்டு ஸந்தியாகாலத்திலும் மௌனமாக மந்திரங்களை ஜபித்து உபாஸிக்கவேண்டும். ஆசார்யனை மனிதனாக நினைத்து அலக்ஷ்யஞ் செய்யக்கூடாது. ஆசார்யன் ஸகல தேவஸ்வரூபியானதால் அவரை பகவானென்றே நினைக்கவேண்டும். காலையிலும் மாலையிலும் பிக்ஷையெடுத்து வந்த அன்னம் முதலியவைகளை ஆசார்ய

னிடம் தெரிவித்து அவருடைய உத்திரவின்மீது புஜிக்கவேண்டும். ஆசார்யன் நடக்கும்பொழுதும் படுத்திருக்கும்பொழுதும் உட்கார்ந்திருக்கும்பொழுதும் எப்பொழுதும் ஸமீபத்தில் அஞ்ஜலி செய்துகொண்டு சிஷ்யன் அவரை உபாஸிக்கவேண்டும். இம்மாதிரியான விரதத்துடன் வித்தியாப்பியாஸம் முடிகிறவரையில் ஆசார்யனுடைய க்ருஹத்தில் விஷயபோகங்களில் ஆசையில்லாமல் வஸிக்கவேண்டும். மேற்காட்டிய ப்ரஹ்மசாரி க்ருஹஸ்தாச்ரமத்தில் ஆசையில்லாமல் ப்ரஹ்மலோகத்தையடைய விரும்புவானுகில் கற்றுக்கொண்ட வித்தைக்காக தன்னுடைய தேஹத்தை ஆசார்யனுக்கு ஸமர்ப்பிக்கவேண்டும். வேதத்தை அத்தியயனம் செய்ததால் ப்ரஹ்மதேஜஸ்ஸுள்ள அந்த ப்ரஹ்மசாரி அக்னி, ஆசார்யன், தான், மற்றப் பிராணிகள் எல்லாவிடத்திலும் பரமாத்மாவாகிய என்னை அபின்னனுக நினைத்து உபாஸிக்கவேண்டும். பின்னுமவன், ஸ்திரீகளைப் பார்ப்பது, தொடுவது, அவர்களுடன் பேசுவது, பரிஹாஸவார்த்தை இவைகளைச் செய்யலாகாது. மேலும் ஸ்திரீ புருஷர்கள் சேர்ந்திருப்பதைப் பார்க்கலாகாது. பின்னும் சௌசம், ஆசமனம், ஸ்நானம் ஸந்தியோபாஸனம், என்னைப் பூஜிப்பது தீர்த்தங்களை ஸேவிப்பது, ஜபஞ்செய்வது, தொடக்கூடாததைத் தொடாமலிருப்பது, பக்ஷிக்கக்கூடாததைப் பக்ஷியாமலிருப்பது, பேசக்கூடாதவர்களுடன் பேசாமலிருப்பது, ஸகலப் பிராணிகளையும் நானுகப்பார்ப்பது, மனது வாக்கு, சரீரம் இவைகளை ஸ்வாதீனப்படுத்திக்கொள்வது ஆகிய இவைகள் எல்லா ஆச்ரமங்களுக்கும் பொதுவாகிய தர்மங்கள்.

35--38. மேற்காட்டியபடி ப்ரஹ்மசாரியின் தர்மத்தை அநுஷ்டிக்கும் ப்ராஹ்மணன் ப்ரஹ்மதேஜஸ்ஸால் அக்னிபோல ஜ்வலிப்பான். என்னிடத்தில் பக்திசெய்ததாலும் கடுந்தபஸ் செய்ததாலும் கர்மவாஸனைகளை யொழித்து சுத்தனுவான், இப்படி வேதத்தை அத்யயனஞ்செய்து அதன் அர்த்தத்தை விசாரித்தபின் இரண்டாவது ஆச்ரமத்தை அடைய விருப்பமிருக்குமானுல் ஆசார்யனுக்கு தக்ஷிணை கொடுத்து அவரிடம் விடைபெற்று அப்யங்க ஸ்நானஞ்செய்து ஸமாவர்த்தனஞ்செய்துகொள்ளவேண்டும். ப்ராஹ்மணனுனல் க்ருஹஸ்தாச்ரமத்தையாவது அடையலாம். அல்லது வானப்ரஸ்தனுக வாவதிருக்கலாம். அல்லது ஸன்

யாஸஞ்செய்து கொள்ளலாம். (க்ஷத்திரிய வைச்யர்களுக்கு ஸன்யாஸத்தில் அதிகாரமில்லை) ஒரு ஆச்ரமத்திலிருந்து மற்றொரு ஆச்ரமத்தை அடையாமலிருக்கக்கூடாது, என்னிடத்தில் பக்தியுள்ளவனானால் ஆச்ரமமில்லாமலுமிருக்கலாம். கிருஹஸ்தாச்ரமத்தை அடைய விரும்புவானாகில் தனக்குச் சமமான ஜாதியில் பிறந்தவளும், குலத்திலும் லக்ஷணத்திலும் நிந்திக்கப்படாதவளும், வயதில் தனக்குக் குறைந்தவளுமான கன்னிகையை விவாஹஞ் செய்து கொள்ளவேண்டும்.

39—48. யாகம், அத்யயனம், தானம் ஆகிய இவைகள் ப்ராஹ்மணன் க்ஷத்திரியன் வைச்யன் ஆகிய மூன்று வர்ணங்களுக்கும் உரியவைகள். ப்ரதிக்ரஹம் (வாங்குவது) அத்யயனஞ் செய்விப்பது, யாகஞ்செய்விப்பது ஆகிய இவைகள் ப்ராஹ்மணனுக்கு மாத்திர முரியவைகள். (விருத்திக்காக ஏற்பட்டவையென்று கருத்து) அவைகளில் ப்ரதிக்கிரஹம் தபஸ்ஸையும் தேஜஸ்ஸையும், கீர்த்தியையும் கெடுத்து விடுமென்ற எண்ணமிருக்குமானால் யாஜனம் அத்யாபனம் இவைகளால் ஜீவிக்கவேண்டும். அவைகளிலும் தோஷமிருப்பதாக நினைத்தால் ஶிலவிருத்தியால் ஜீவிக்கவேண்டும். (வயலில் இறைந்திருக்கும் தான்யங்களை பொருக்கி அதனால் ஜீவிப்பதே ஶிலமெனப்படுகிறது) ப்ராஹ்மணனுடைய தேஹத்தை அல்பமான காமவிஷயத்தில் உபயோகிக்கக்கூடாது. இவ்வுலகத்தில் கடுந்தபஸில் உபயோகிக்கவேண்டும். மரணமடைந்தபின் அளவற்ற ஸுகங்கிடைக்கும். இப்படி ப்ராஹ்மணன் ஶிலவிருத்தியாலும் உஞ்சவிருத்தியாலும் (கடைவீதிமுதலியவைகளில் சிந்தியதையெடுத்துக்கொள்வது உஞ்சவிருத்தியெனப்படுகிறது) திருப்தியடைந்து அதிதிபூஜை முதலிய தர்மத்தை நிஷ்காமமாக அநுஷ்டித்து மனத்தை யென்னிடத்தில் செலுத்தி விஷயங்களில் அதிக ஆசை வைக்காமல் கிருஹத்திலிருப்பவன் சாந்தியை அடைவான். லோகத்தில் எவர்கள் என் பக்தனுக்கு தாரித்ரயம் உண்டாகாமல் தனத்தைக் கொடுத்துக் காப்பாற்றுகிறார்களோ, அவர்களை ஸமுத்திரத்தில் விழுந்து கஷ்டப்படும் ஜனங்களை ஓடம் ஸம்ரக்ஷிப்பதுபோல் ஸகல ஆபத்துகளிலிருந்து நான் காப்பாற்றுகிறேன். மேலும் தகப்பனார் குழந்

தைகளைக் காப்பாற்றுவதுபோல அரசன் தன்னுடைய ப்ரஜைகளுக்கு ஆபத்து வராமலிருக்கும்படி காப்பாற்றவேண்டும். பின்னும் யானையானது யானைகளைக் காப்பாற்றுவதுபோல தன்னைத் தானே ஸம்ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். (அரசருக்கு முக்கியமென்று காட்டப்பட்டது) இம்மாதிரி ப்ரஜைகளை தர்மமாகக் காப்பாற்றிய அரசன் பாபமற்றவனாகி பரலோகத்தில் மஹேந்திரனுடன் ஸந்தோஷப்படுகிறான். ப்ராஹ்மணன் தனக்குரியவிருத்தியால் ஜீவிக்கமுடியாமல் ஆபத்தை அடைந்த காலத்தில் வைச்யவிருத்தியான வ்யாபாரத்தால் ஜீவிக்கலாம் (அதிலும் உப்பு, மத்யம், எண்ணெய் முதலியவைகளை விற்கக்கூடாது) அந்த விருத்தியும் செய்யமுடியாவிட்டால் கத்தியை யெடுத்துக்கொண்டு க்ஷத்திரியனைப்போல் ஜீவிக்கலாம். ச்வவிருத்தியை எப்பொழுதுஞ்செய்யக் கூடாது. (பிறரிடம் வேலைக்காரனாக விருப்பது ச்வவிருத்தி யெனப்படுகிறது) க்ஷத்திரியன் ஆபத்காலத்தில் வேட்டையாலும், வைசியவிருத்தியாலும், ப்ராஹ்மண விருத்தியாலும் ஜீவிக்கலாம். ஸேவா விருத்தியை ஒருபோதும் அநுஸரிக்கக்கூடாது. வைச்யன் ஆபத்காலத்தில் சூத்திரனுடைய விருத்தியை அநுஸரிக்கலாம். சூத்திரன் ஆபத்காலத்தில் பாய் பின்னும் விருத்தியைச் செய்து ஜீவிக்கலாம். ஆபத்து நிவர்த்தியான பின் தங்கள் தங்கள் விருத்தியைச் செய்யவேண்டுமேயல்லாமல் தாழ்ந்த விருத்தியை அநுஷ்டிக்கக்கூடாது.

49—57. (க்ருஹஸ்தனுக்கு அவச்யமான பஞ்சயஜ்ஞங்கள் சொல்லப்படுகின்றன) க்ருஹஸ்தன் ப்ரஹ்மயஜ்ஞத்தால் மஹர்ஷிகளையும், ஸ்வதாகாரத்தால் பிதிருக்களையும், ஸ்வாஹாகாரத்தால் தேவர்களையும், பலிஹரணத்தால் பூதங்களையும், அன்னம் முதலியவைகளால் மனிதர்களையும் தன்னுடைய ஐச்வர்யத்திற்குத் தக்கபடி பூஜித்து அவர்களை பகவானாக பாவிக்கவேண்டும். மேலும் முயற்சியில்லாமல் நல்ல மார்க்கமாக ஸம்பாதிக்கப்பெற்ற சுத்தமான தனத்தால் யாகம் முதலியவைகளைச்செய்து பகவானாகிய என்னைப் பூஜிக்கவேண்டும். ஆனால் தன்னுடைய களத்திர புத்திராதிகளை போஷிப்பதற்கே தனம் போதாதாகவிருந்தால் அதனை யாகத்திற் குபயோகப்படுத்தவேண்டாம். பின்னும் க்ருஹஸ்தனானவன் "பார்க்கப்படும் வஸ்துக்கள் எப்படி அனித்யங்களாக விருக்கின்றனவோ, அப்படியே கண்ணுக்குப் புலப்படாத

ஸ்வர்க்கம் முதலியவைகளும் அனித்யங்கள்" என்று நினைத்து குடும்பத்தில் ஆசைவைக்காமல் பகவானிடத்தில் பக்தி செய்ய வேண்டும். புத்திரன், களத்திரம், ஆப்தர்கள், பந்துக்கள் ஆகிய இவர்கள் ஒரேவிடத்தில் சேர்ந்து வஸிப்பது வழிப்போக்கர்கள் மடம் முதலிய விடங்களில் சேர்ந்திருப்பது போன்றதேயாம். தூக்கத்தில் ஸ்வப்னமுண்டாகிறது. தூக்கமில்லாவிடில் ஸ்வப்னம் உண்டாகிறதில்லை. அதுபோல் சரீரத்தை யநுஸரித்து அவர்கள் நசிக்கிறார்கள். இம்மாதிரியாக லோகத்தின் உண்மையையுணர்ந்து கிருஹஸ்தன் அதிதிபோல் கிருஹத்தில் வஸித்து மமதை (என்னுடையதென்ற புத்தி) அஹங்காரம் இவைகளில்லாமலிருக்கவேண்டும். இப்படி கிருஹஸ்தன் செய்யக்கூடிய கர்மங்களைச்செய்து என்னைப் பூஜித்துக்கொண்டு கிருஹஸ்தனாகவே இருக்கலாம். அல்லது வனத்திற்குப் போகலாம். புத்திரனிருந்தால் ஸன்யாசஞ் செய்துகொள்ளலாம். (புத்திரனிடத்தில் கிருஹகிருத்யத்தை ஒப்புவித்து) எவன் குடும்பத்தில் ஆசைவைத்து புத்திரன், பணம் இவைகளில் மிக்க ஆசைகொண்டு ஸ்திரீகளுக்கு வசப்பட்டு இவர்கள் என்னுடையவர்கள், நான், என்ற தீன புத்தியை அடைகிறானோ, அவன் கஷ்டப்படுவான். பின்னுமவன் மரணகாலத்தில் "ஐயோ என்னுடைய தாய் தந்தைகள் வயது சென்றவர்கள்; என்னுடைய மனைவியோ சிறு குழந்தைகளுள்ளவள்; ஆனதால் நாதனில்லாத இவர்கள் என்னைவிட்டு எப்படி ஜீவிப்பார்கள்?" என்று சிந்தித்து அவர்களையே நினைத்துக்கொண்டு மரணத்தை அடைந்து நரகத்தை அடைவான்.

---

## அத்யாயம்—18

### வானப்ரஸ்தர்களுடைய தர்மம்.

கிருஹஸ்தாச்ரமத்திலிருந்து வானப்ரஸ்தனாகப் போகவேண்டுமென்ற விருப்ப மிருக்குமானால் தன்னுடைய மனைவியை புத்திரனிடத்தில் ஒப்புவித்தாவது மனைவியுடனாவது காட்டிற்குச் சென்று சாந்தனாகி தன்னுடைய ஆயுஸ்ஸின் மூன்றாவது பாகத்தை அவ்விடத்தில் கழிக்கவேண்டும் (எழுபத்தைந்து வயதுக்குப்

பிறகு ஸ்வல்பவைராக்கியம் உண்டானாலும் ஸந்நியாஸம் பண்ணிக்கொள்வதே உசிதம் என்று தாத்பர்யம்.) வனத்திலுண்டான சுத்தமான கிழங்கு, வேர், பழங்கள் இவைகளைப் புஜித்துக்கொண்டும் மரப்பட்டை, இலை, மான்தோல் இவைகளை உடுத்திக்கொண்டும்காலத்தைக் கழிக்கவேண்டும். மயிர், நகம், மீசை முதலியவைகளை க்ஷௌவரம் செய்துகொள்ளாமல் வைத்துக்கொள்ளவேண்டும். பற்களைச் சுத்திசெய்து கொள்ளக்கூடாது. மூன்று காலங்களிலும் ஜலத்தில் ஸ்நானஞ் செய்யவேண்டும். தரையில் படுத்துக்கொள்ளவேண்டும். கோடைகாலத்தில் நான்கு பக்கங்களிலும் அக்னிகளை வைத்துக்கொண்டும் ஸூர்யனைப் பார்த்துக்கொண்டும் மழைகாலத்தில் மழைதாரையை ஸஹித்துக்கொண்டும் பனிகாலத்தில் ஜலத்தில் கழுத்துவரையில் மூழ்கிக்கொண்டும் தபஸ் செய்யவேண்டும். அக்னியில் பக்குவமான கிழங்கு முதலியவைகளையாவது, காலத்தால் பக்குவமான பழம் முதலியவைகளையாவது புஜிக்கவேண்டும். நீவாரம் முதலிய தான்யங்களை உரல் கல் இவைகளால் பொடித்தாவது பற்களால் உடைத்தாவது புஜிக்கவேண்டும். தேசம் காலம் இவைகளுடைய பலத்தைத் தெரிந்துகொண்டு தன்னுடைய ஜீவனத்திற்கு வேண்டியதைத்தானே புதிதுபுதிதாக ஸம்பாதிக்க வேண்டுமேயல்லாமல் ஏற்கனவே ஸம்பாதித்துவைக்கப்பட்டதை எடுத்துக்கொள்ளக்கூடாது. நீவாரம் முதலிய காட்டுதான்யங்களால் சரு, புரோடாசம் இவைகளைச்செய்து ஆக்ரயணம் முதலிய இஷ்டிகளை அனுஷ்டித்து என்னைப் பூஜிக்கலாம், வானப்ரஸ்தன் ச்ரௌத விதிப்படி யாகஞ் செய்யலாகாது. அக்னிஹோத்ரம், தர்சபூர்ண மாஸங்கள், சாதுர்மாஸ்யம் ஆகிய இவைகள் வானப்ர ஸ்தனால் அனுஷ்டிக்கக் கூடியது என்று வேதத்தையறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இம்மாதிரி முனியானவன் தபஸ் செய்து சரீரத்தை இளைக்கச் செய்து தபஸ்வரூபியாகிய என்னை ஆராதித்து மஹர்லோகஞ் சென்று க்ரமமாக என்னை யடைவான். (பயனை யுத்தேசியாமல், செய்த தபஸ்ஸின் மஹிமையால் அந்தக் கரணம் சுத்தமாகி இவ்வுலகத்திலேயே முக்தியையடைவான், (ப்ரதிபந்தகம் அதிகமாகவிருந்தால் க்ரமமாக முக்தியடைவான் என்று கருத்து.) எவன் மேற்காட்டிய கடுந்தபஸ்ஸை ஸ்வர்க்கம் முதலிய அற்பபலத்திற்காக உபயோகிக்கிறானோ, அவனைவிட மூடன் உலகத்தில் வேறுயார்

இருக்கிறான்? இம்மாதிரியாக தபஸ்ஸை யனுஷ்டித்து வரும் பொழுது கிழத்தனத்தால் சரீரத்தில் நடுக்கமுண்டாகி வ்ரதத்தை யனுஷ்டிக்க சக்தியில்லாமலிருந்தால் (வைராக்யமும் உண்டாகா விடில்) அக்னிகளை ஆத்ம ஸமாரோபணம் செய்துகொண்டு மனத்தை என்னிடத்தில் செலுத்தி அக்னியில் ப்ரவேசிக்க வேண்டும்.

13—37. கர்மங்களின் பயனாகிய துக்கத்தைக் கொடுக்கக் கூடிய ஸ்வர்க்கம் முதலியவைகளில் எப்பொழுது வைராக்யம் நன்றாக உண்டாகிறதோ அப்பொழுது எல்லாவற்றையும்விட்டு ஸன்னியாஸம் செய்துகொள்ளவேண்டும். சாஸ்திரத்திற் சொல் லிய முறைப்படி ப்ராஜாபத்தியம் என்ற இஷ்டியைச்செய்து அத ஞல் என்னைப் பூஜித்து தன்னுடைய எல்லா தனத்தையும் ரித் விக்குகளுக்குக் கொடுத்து அக்னிகளை தன்னிடத்தில் ஆரோபித்து ஒன்றையும் விரும்பாமல் ஸன்யாஸம்செய்துகொள்ளவேண்டும். ஸ ன்னியாஸம் செய்துகொள்ளும் ப்ராஹ்மணனுக்கு தேவர்கள் களத் திரம் புத்திரன் ஆகிய இவர்களின் ஸ்வரூபமாக விருந்து விக்னம் செய்வார்கள். ஏனென்றால் "இவன் நம்முடைய லோகத்தை யுந்தாண்டி ப்ரஹ்மபதத்தை அடைவான்" என்றவிரோதம் தேவர் களுக்கு எப்பொழுதும் உண்டு. ஸந்நியாஸி வஸ்திரம் உடுத் திக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால் கௌபீனத்தை மறைப்பதற்குப் போதுமான வஸ்திரத்தைத் தரிக்கலாம். தண் டம், கமண்டலு இதைத் தவிர வேறொன்றையும் எடுத்துக் கொள்ளக்கூடாது. சுத்தமான ஸ்தலத்தைக் கண்ணால்பார்த்து காலைவைக்கவேண்டும். வஸ்திரத்தால் வடிகட்டிய ஜலத்தைக் குடிக்கவேண்டும். ஸத்தியத்தால் சுத்தமான வார்த்தையைப் பேசவேண்டும். மனத்தால் விசாரித்து சுத்தமான கார்யத்தைச் செய்யவேண்டும். மௌனமாக விருப்பது வாக்கின் தண்டம். காம்ய கர்மங்களை விடுவது தேஹத்தின் தண்டம், ப்ராணாயாமஞ் செய்வது மனத்தின் தண்டம். இந்த மூன்றும் எவனுக்கு இல் லையோ அவன் மூங்கில் தடியால் மாத்திரம் ஸன்னியாஸியாக ஆகமாட்டான். ப்ராஹ்மணஜாதியில் பிக்ஷையகப்படாவிடில் க்ஷத் திரியனிடத்திலும் அவ்விடத்திலும் பிக்ஷை கிடைக்காவிடில் வைச்யனிடத்திலும் அதிலும் கிடைக்காவிடில் சூத்திரனிடத்தி

லும் பிக்ஷை எடுத்துக்கொள்ளலாம். அவர்களிலும் பதிதர்களு டைய வீட்டில் பிக்ஷை எடுக்கக்கூடாது. முந்தியே உத்தேசிக்கா மல் ஏழு வீடுகளில் பிக்ஷை எடுக்கலாம். எவ்வளவு ஆஹாரம்வேண்டு மோ அவ்வளவை எடுத்துக்கொள்ளலாம். அந்த அன்னத்தை கிராமத்திற்கு வெளியில் குளம் ஆறு முதலியவைகளில் ஸ்தலத் தைச் சுத்திசெய்து அவ்விடத்தில் அதை வைத்து விஷ்ணு, ப்ரஹ்மா, ஸூர்யன், பூதங்கள் இவைகளுக்காக அந்த அன்னத் தைப் பங்கிட்டு எஞ்சியதைப் புஜிக்கவேண்டும். மேலும் ஆத்மா விலேயே ஸந்தோஷத்தை யடைந்து ஆத்மாவுடன் விளையாடிக் கொண்டும் தைர்யமுள்ளவனுகி எல்லாவற்றையும் ஸமமாகப் பார்த் துக்கொண்டு ஒண்டியாய் ஸஞ்சரிக்கவேண்டும். ஜனங்களில்லாத ஸ்தலத்தில் பயமில்லாமல் வஸித்து என்னுடைய பக்தியால் சித்த சுத்தியை யடைந்து தன்னுடைய ஆத்மாவை பகவானுகிய நானுக த்யானிக்கவேண்டும். இந்திரியங்களை அடக்குவதே மோக்ஷமென் றும் இந்திரிய விக்ஷேபமே பந்தமென்றும் ஜ்ஞானத்தால் தெரிந்து கொள்ளவேண்டும். ஆனதால் காமம் முதலிய ஆறுவகை சத் துருக்களை ஜயித்து என்னிடத்தில் மனத்தைச்செலுத்தி ஸகல காமங்களிலும் வைராக்யத்தை யடைந்து மிக்க ஸுகத்துடன் ஸஞ்சரிக்கவேண்டும். பிக்ஷைக்காக பட்டினம், கிராமம், யாத் திரை போகும் ஜனங்கள் இவைகளில் பிரவேசிக்கலாம். மேலும் புண்ணிய க்ஷேத்திரம், புண்ணியநதி, புண்ணியமான மலை, புண் ணியமான காடு, புண்ணியமான ஆச்ரமம் இவைகளுள்ள பூமியி லும் ஸஞ்சரிக்கலாம். வானப்ரஸ்தர்களுடைய ஆச்ரமத்தில் பிக்ஷை யெடுப்பது மிகவும் மேலானது. அவர்களுடைய சுத்தமான அன் னத்தை (வுஞ்சவிருத்தியால் கிடைத்த) புஜிப்பதால் சீக்கிரத்தில் புத்தியை யடைகிருன். எது கண்ணுக்குப் புலப்படுகிறதோ, அது நாசமுள்ளது ஆனதால் அதை வஸ்துவென்று நினைக்கக்கூடாது. இந்த லோகஸுகத்திலும் பரலோக ஸுகத்திலும் ஆசையற்று வைராக்யத்தையடையவேண்டும், மனம், வாக்கு, ப்ராணன், ஆகிய இவைகளுள்ள இந்த ஜகத்தை ஸ்வப்ன திருஷ்டாந்தத்தால் மாயை யென்று நிச்சயித்து அவைகளை ஸ்மரிக்கக்கூடாது. (இதுவரை யில் பஹூதகாதிகளுடைய தர்மம் சொல்லப்பட்டது. இனி பரம ஹம்ஸர்களுடைய தர்மம் சொல்லப்படுகிறது) பாஹ்ய விஷயங் களில் வைராக்யத்தை அடைந்து மோக்ஷத்தை அடையவிரும்பி

ஜ்ஞான நிஷ்டனாக விருப்பவனானாலும், மோக்ஷத்தையும் விரும்பாமல் என்னிடம் பக்திசெய்பவனானாலும் ஆச்ரமம் அவைகளின் அடையாளங்கள் ஆகிய இவைகளை விட்டு விதி நிஷேதங்களைக் கடந்து ஸஞ்சரிக்கலாம். விவேகமுள்ளவனானாலும் சிறுவன்போலவும், ஸாமர்த்தியமுள்ளவனானாலும் மூடவன்போலவும், (ஒரு பயனையும் உத்தேசியாமலிருப்பதால்) பண்டிதனானாலும் பயித்தியங் கொண்டவன்போலவும், வேதத்தின் பொருளை யுணர்ந்தவனானாலும் பசுபோல நியதமான ஆச்ரமில்லாதவனாக ஸஞ்சரிப்பான். மேலுமவன் கர்மகாண்டத்தின் பொருளில் நோக்கமுள்ளவனாயிருக்கமாட்டான். வேதத்திற்கு விரோதமாக அநுஷ்டிக்கவும் மாட்டான். கேவல யுத்திவாதஞ் சொல்லமாட்டான். ப்ரயோஜனமில்லாமல் வாதஞ்செய்பவர்களுடைய ஸபையில் ஒரு பக்ஷத்தையும் தான் ஆச்ரயிக்கமாட்டான். ஜனங்களைக்கண்டு பயப்படவுமாட்டான், தானுமொருவரையும் பயப்படச்செய்யான். பிறர் நிந்தித்தாலும் அதனை ஸஹித்துக்கொள்வான். ஒருவரையும் அவமதிக்கமாட்டான், மூடன்போல் இந்த சரீரத்திற்காக ஒருவரையும் விரோதித்துக்கொள்ளமாட்டான். சந்திரனொருவனெப்படி ஜலபாத்திரங்களில் ப்ரதிபலிக்கிறானோ, அப்படி ஆத்மா ஒருவரானாலும் ஸகல ப்ராணிகளிடத்திலுமிருக்கிறார் (ஆனதால் விரோதிக்கக் காரணமில்லையென்று தாத்பர்யம்) ஆஹாரங்கிடைப்பதும் கிடைக்காமலிருப்பதும் தைவாதீனமானதால் ஆஹாரங்கிடைத்தாலும் ஸந்தோஷத்தை அடையமாட்டான். கிடைக்காவிடினும் துக்கப்படமாட்டான். எவ்வளவு ஆஹாரம் புஜித்தால் ப்ராணன் சரீரத்தை விடாமலிருக்குமோ, அவ்வளவு அன்னத்தை ஸம்பாதிக்க முயற்சிக்கலாம். ப்ராணனிருந்தால் தான் தத்வத்தை விசாரிக்க முடியும். அதனால் ஜ்ஞானத்தை அடைந்து மோக்ஷத்தை அடைவான். தைவச்செயலால் கிடைத்த அன்னம் உத்தமமானாலும், தாழ்ந்ததானாலும் அதனைப் புஜிக்கவேண்டும். அது போலவே தைவச்செயலாகக் கிடைத்த வஸ்திரம், படுக்கை இவைகள் மேலானவையானாலும் தாழ்ந்தவையானாலும் அதனை அடையவேண்டும், ஈச்வரனாகிய நானெப்படி விளையாட்டாக கர்மங்களைச் செய்கிறேனோ, அப்படி ஜ்ஞானியாக விருப்பவன் சௌசம், ஆசமனம், ஸ்நானம் மற்ற நியமங்கள் ஆகிய இவைகளை விளையாட்டாகச் செய்வான். இது நம்மால் செய்யப்பட

வேண்டிய விதியென்று செய்யமாட்டான் (விதியைக்கடந்தவன்) அவனுக்குப் பேதபுத்தியில்லை. என்னுடைய ஜ்ஞானத்தால் அந்தப் பேதபுத்தி யற்றுப்போயிற்று. ஆனால் தேஹமுள்ள வரையில் சிலஸமயமிருக்கும், அதனால் அவனுக்குப் பாதகமில்லை. தேஹமழிந்தபின் நானாக ஆகிவிடுவான்.

38—39. ஸன்யாஸிகளில் எவன் விஷயங்களை துக்ககரங்கள் என்று தெரிந்துகொண்டு அவைகளில் வைராக்யத்தை யடைந்தும் என்னுடைய தர்மத்தை யறியாமலிருக்கிறானோ, அவன் பகவத் தர்மத்தை அறியவேண்டி குருவை ஆச்ரயிக்கவேண்டும். இப்படி ஆசார்யரிடஞ்சென்று மிக்க ச்ரத்தையுடன் அவருக்குச் சுச்ரூஷை செய்து ஆசார்யனை ப்ரஹ்மமென்றும் பகவானென்றும் தெரிந்துகொள்ளவேண்டும். அதன்பின் ஒண்டியாக ஸஞ்சரிக்கலாமென்று கருத்து.

40—41. எவன் காமம் முதலியவைகளை ஜயிக்கவில்லையோ, எவனுடைய இந்திரியங்கள் விஷயங்களில் மிகவும் செல்லுகின்றனவோ, எவனுடைய புத்தி விஷயங்களில் ப்ரவர்த்திக்கிறதோ, எவனுக்கு ஜ்ஞானம், வைராக்யம் ஆகிய இவைகளில்லையோ, அவன் மூங்கில் தண்டத்தை தரிப்பதால் மாத்திரம் ஸன்யாஸியெனப்படுகிறான். மேலுமவன் தேவர்களையும், தன்னையும், தன்னிடத்திலிருக்கும் என்னையும் வஞ்சிப்பதால் சித்தசுத்தி யில்லாதவனாகிறான். ஆனதால் அவனுக்கு இவ்வுலகத்திய ஸுகமும், பரலோகஸுகமும் கிடைக்கிறதில்லை.

42—48. ஸன்யாஸியாக விருப்பவனுக்கு பொறுமை முக்கிய தர்மமாகும். வானப்ரஸ்தனுக்கு அஹிம்ஸை, தபஸ், த்யானம் இவை முக்கியமானவை. கிருஹஸ்தனுக்குப் பிராணிகளைக் காப்பாற்றுவது யாகம் இவை முக்கிய தர்மங்களாகும். ப்ரஹ்மசாரிக்கு ஆசார்யனை ஸேவிப்பதே முக்கிய தர்மம். மேலும் சௌசம் (ஆசையில்லாமலிருப்பது) தபஸ், கிடைத்ததில் ஸந்தோஷம் பிராணிகளிடத்தில் ப்ரியம், ப்ரஹ்மசர்யம் இவைகள் கிருஹஸ்தனுக்கு முக்கியங்களாகும். ஆனால் ரிதுகாலந்தவிர மற்ற காலங்களில் ஸ்திரீயைப் புணராமலிருப்பதே கிருஹஸ்தனுக்கு ப்ரஹ்மசர்யவ்ரதமென்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா ஆச்ரமி

களுக்கும் என்னை யுபாஸிப்பது முக்கிய தர்மமேயாம். இப்படி தனக்குரிய தர்மத்தை அநுஷ்டித்து வேறு தைவத்தை யுபாஸியாமல் (அனன்யமாக) என்னைப் பூஜித்து ஸகலபிராணிகளிடத்தில் பகவானுகிய நானிருப்பதாக எவன் தெரிந்துகொள்ளுகிறுனே, அவன் சீக்கிரத்தில் என்னிடத்தில் பக்தியை அடைவான். பின்பு அவனுக்கு பக்தி குறைவின்றி விருத்தியடையும். ஓ உத்தவ! அந்த ஸ்திரமான பக்தியால் ஸகல லோகங்களுக்கும் அதிபதியும், எல்லாவற்றையும் படைத்தவரும், ஸம்ஹரிப்பவரும் எல்லாவற்றிற்கும் காரணமும் ப்ரஹ்மமுமான என்னை அடைவான். (என் ஸமீபத்தை அடைவானென்று கருத்து) இம்மாதிரி தன் தர்மத்தை யநுஷ்டித்து அதனல் சுத்த ஸத்வகுணமுள்ளவனுகி என்னுடைய ஐச்வர்யங்களைத் தெரிந்துகொண்டு ஜ்ஞானம் விஜ்ஞானம் (சாஸ்திரஜ்ஞானம்) இவைகளுள்ளவனுகி விஷயங்களில் வைராக்யத்தை அடைந்து என்னை அடைவான். வர்ணம், ஆசாரம் இவைகளுள்ளவர்கள் அநுஷ்டிக்கவேண்டிய தர்மம் மேற்காட்டப்பட்டது. (அதனல் பிதிருலோகம் கிடைக்குமென்று கருத்து) மேற்காட்டிய ஆச்ரமதர்மம் என்னுடைய பக்தியுடன் கலந்திருக்குமானல் (என்னிடத்தில் ஸமர்ப்பிக்கப்பட்டால்) மோக்ஷத்தைக் கொடுக்கும். ஓ ஸாதுவாகிய உத்தவ! தனது வர்ணச்ரம தர்மங்களை யநுஷ்டித்து என்னிடத்திலும் பக்தி செய்தவன் என்னை அடைவான் என்பதை உமக்குச் சொன்னேன்" என்ருர்.

---

## அத்யாயம்—19.

## ஜ்ஞானியின் ஸ்வரூபம்.

எவன் அனுபவம் அதுவரையிலுள்ள ச்ரவணம் இவைகளை யடைந்து ஆத்மாவின் உண்மைகளை யறிந்து, அபரோக்ஷஜ்ஞானத்தை யடைகிறுனே, அவன் இந்த ஜகத்தை மாயாமயமென்று தெரிந்துகொண்டு ஜ்ஞானத்தையும் அதன் ஸாதனங்களையும் விட்டுவிடுவான். (இதுவே வித்வத்ஸன்னியாஸம் எனப்படும்.) ஏனென்ருல் ஜ்ஞானியாயிருப்பவனுக்கு என்னிடத்திலேயே மிகுந்த பிரிய மிருக்கும். நானே அவனுக்கு புருஷார்த்தமாக விருக்கிறேன், அதற்கு ஸாதனமாகவு மிருக்கிறேன். என்னைக்

காட்டிலும் ஸ்வர்க்கமாவது மோக்ஷமாவது ஜ்ஞானிக்குப் பிரிய த்தை யுண்டுபண்ணுகிறதில்லை. சாஸ்திரஜ்ஞானம், அபரோக்ஷஜ் ஞானம் இவைகளை யடைந்தவர்கள் என்னுடைய மேலான பதத் தைத்தெரிந்து கொள்ளுகிறார்கள். ஜ்ஞானியாகவிருப்பவன் ஜ்ஞா னத்தால் என்னைத்தரிப்பதால் அவனிடத்தில் எனக்கு மிக்கப் பிரியம். ஜ்ஞானத்தின் ஸ்வல்ப அம்சத்தால் எவ்வளவு சுத்தி ஏற்படுகிறதோ, அவ்வளவு சுத்தி தபஸ்ஸாலும், புண்ணிய தீர்த் தாலும், ஜபத்தாலும், தானத்தாலும், மற்ற நல்ல கர்மங்களாலும் உண்டாகிறதில்லை. ஆனதால் ஓ உத்தவ! ஜ்ஞானம், விஜ்ஞானம் இவைகளுள்ளவராகி அபரோக்ஷானுபவத்தை யடைந்து என்னை யே பக்தியாக ஸேவிக்கவேண்டும். (மற்றவைகளெல்லாவற்றையும் விட்டுவிடவேண்டுமென்று கருத்து.) ஸகல யஜ்ஞங்களுக்கும் அதி பதியாகிய என்னை மஹர்ஷிகள், ஜ்ஞானம் விஜ்ஞானம் இவைக ளாகிய யஜ்ஞத்தால் பூஜித்து என்னையே அடைந்தார்கள். ஓ உத்தவ! ஆத்தியாத்மிகம் முதலிய விகாரங்கள் உண்மையானவை யல்ல. ஏனென்றால் முன்னும் பின்னுமில்லாமல் மத்தியில் தோற்று கின்றன. ஆனதால் இவைகளுக்கு ஏற்பட்ட ஜனனம் முதலிய விகாரங்களும் அவைகளுக்கே உண்மையிலில்லை, எது முந்தியும் பிந்தியுமில்லையோ அது மத்தியிலுமில்லை. ஆனதால் தேஹம் முதலிய விகாரங்கள் முந்தியும் பிந்தியுமில்லாதவைகளாதலால் மத்தியிலும் இல்லாதவைகளேயாம். எது முந்தியும் பிந்தியு மிருக்கிறதோ அது மத்தியிலும் இருக்கிறதென்று சொல்லப்படும், ஆனதால் அப்படிப்பட்ட உம்முடைய ஆத்மாவிற்கு விகாரங்க ளேது? விகாரங்களற்ற பரப்ரஹ்மமென்று உம்முடைய ஆத்மா வைத் தெரிந்துகொள்ளும்" என்று ஸ்ரீ க்ருஷ்ணன் சொன்னார்.

8—10. அதனைக்கேட்ட உத்தவர் பகவானை நோக்கி "ஓ ஜகத்திற் கதிபதியே! ஜகத்ஸ்வரூபியே! சுத்தமாகிய ஜ்ஞானம் விஜ்ஞானம், பக்தி, யோகம் இவைகளின் ஸ்வரூபத்தை பெரியோர் களும் தெரிந்துகொள்ளாமல் தேடுகிறார்கள். ஆனதால் அதனை நிச்சயமாகச் சொல்லவேண்டும். ஸம்ஸார மார்க்கத்தில் மூன்று வகையான தாபத்தால் பீடிக்கப்பட்டு கஷ்டப்படும் ஜனங்களுக்கு உம்முடைய பாதமே அமிருதத்தை வர்ஷித்து ஸுகப்படுத்து கிறது. ஆனதால் அதனைவிட அவர்களைக் காப்பாற்றுவது வே

றில்லை. மேலும் ஸம்ஸாரமாகிற பாம்புப்புற்றில் விழுந்தவனும் காலமாகிய ஸர்ப்பத்தால் பிடிக்கப்பட்டவனும் அல்பஸுகத்தில் மிக்க ஆசையுள்ளவனுமாகவிருக்கும் இந்த ஜனத்தை உயரத் தூக்கிவிடும். கருணையால் மோக்ஷத்தைக் கொடுக்கும் வார்த்தைகளாகிய அமிருதத்தால்" நனையும் என்று கேட்டுக்கொண்டார்.

11—27. அதனைக்கேட்ட பகவான் உத்தவரை நோக்கி "பாரதயுத்தம் முடிந்தபின் தர்மபுத்திரர் பந்துக்களின் நாசத்தால் துக்கமடைந்து பீஷ்மரிடஞ்சென்று நாங்கள் எல்லோரும் கேட்டுக்கொண்டிருக்குங்காலத்தில் பலவகையான தர்மங்களைக்கேட்டு பிறகு மோக்ஷதர்மங்களையுங் கேட்டார். பீஷ்மரால் சொல்லப்பட்ட அந்த மோக்ஷதர்மங்களை உமக்கு நான் சொல்லுகிறேன். அந்த தர்மத்தில் ஜ்ஞானம், விஜ்ஞானம், வைராக்கியம், ச்ரத்தை, பக்தி இவைகளே யிருக்கின்றன. ப்ரகிருதி, புருஷன், மஹத், அஹங்காரம், ஐந்து தன் மாத்திரைகள், பதினொரு இந்திரியங்கள் ஐந்துமஹாபூதங்கள், ஸத்வம் முதலிய மூன்று குணங்கள் ஆகிய இருபத்தெட்டு தத்துவங்களும் ஸகல ப்ராணிகளிடத்திலுமிருப்பதாலும் அவைகளில் பரமாத்மா ஒருவர் தொடர்ந்திருப்பதாகவும் தெரிந்துகொள்வது ஜ்ஞானமெனப்படுகிறது. ஒருவனாகிய பரமாத்மாவினால் வியாபிக்கப்பட்டதும், அநேகமுமான ஜகத்தை முன்போல் பாராமல் பரமகாரணமான ப்ரஹ்மமென்றே நினைப்பது விஜ்ஞானமெனப்படுகிறது. (பரோக்ஷ ஜ்ஞானத்தை ஜ்ஞானமென்றும் அபரோக்ஷ ஜ்ஞானத்தை விஜ்ஞானமென்றும் சொல்லுகிறோம் என்று தாத்பர்யம்.) அவயங்களுள்ளவையான லோகத்திலுள்ளபதார்த்தங்கள்யாவும் ஸிருஷ்டி, ஸ்திதி, லயம், இவைகளுள்ளவை. ஆனதால் உத்பத்தியிலேயும், லயத்திலும், மத்தியிலும் ஒரு கார்யத்திலிருந்து மற்றொரு கார்யத்தில் எது தொடர்ந்திருக்கிறதோ, கார்யங்கள் நாசமடைந்தாலும் எது நாசமடையாமல் எஞ்சியிருக்கிறதோ, அதுவே உண்மையானது என்று தெரிந்துகொள்ள வேண்டும். மேலும் "இந்த ஜகத்தில் பரமாத்மாவைத் தவிர பலவிதமான வஸ்துக்கள் வேறொன்றுமில்லை" என்ற ச்ருதியாலும் ஆத்மாவைத்தவிற ஜகத்து வேறல்ல என்று தெரியவருகிறது. வஸ்திரம் முதலிய கார்யங்கள் காரணமாகிய நூலைக்காட்டிலும் வேறாகவிருக்கவில்லை என்று ப்ரத்யக்ஷ

மாகப் பார்க்கிறேன் என்னும் பெரியோர்களின் வார்த்தையாகிய ஐதிஹ்யமும் இதுவிஷயத்தில் ப்ரமாணமாகவிருக்கிறது. இன்னும் இந்த ஜகத்தானது உண்மையானதல்ல. கண்ணிற்குப் புலப்படுவதால் என்ற அனுமானமும் இந்த விஷயத்தில் ப்ரமாணமாக இருக்கிறது. ஆகையால் மேற்காட்டிய நான்கு ப்ரமாணங்களாலும் ஜகத் உண்மையானதல்லவென்று ஏற்படுவதால் அதனிடமிருந்து வைராக்யத்தை அடையவேண்டும். ப்ரஹ்மலோகம் வரையிலுள்ள ஸுகங்கள் கர்ம பரிபாகத்தால் ஏற்படுகிறவைகளானதால் இந்திரியங்களுக்குப் புலப்படும் ஸுகம்போல அவைகளையும் அனித்யங்களென்றே நாம் கொள்ளவேண்டும். பக்தியோகத்தின் ஸ்வரூபத்தை முன்னமேயே சொல்லியிருக்கிறேன். அதைக் கேட்க வேண்டுமென்று நீர் விரும்புவதால் திரும்பவும் அதையே சொல்லுகிறேன். என்னுடைய கதையை கேழ்க்கவேண்டும் என்ற ச்ரத்தை, எப்பொழுதும் என்னுடைய திவ்ய நாமங்களை உச்சரிப்பது, பூஜிப்பதில் நோக்கம், ஸ்தோத்திரஞ் செய்வது என்னுடைய கைங்கரியத்தில் ப்ரீதி, எல்லா அவயங்களாலும் நமஸ்கரித்தல், என்னுடைய பக்தனை விசேஷமாகப் பூஜிப்பது, ஸகலப் பிராணிகளையும் ஈச்வரனாக பாவிப்பது, ஸகல சேஷ்டைகளாலும் என்னையே பூஜிப்பது, என்னுடைய குணங்களைச் சொல்லி அவைகளிலேயே ரமிப்பது, ஸகல காமனைகளையும் விட்டு மனத்தை என்னிடத்திலேயே ஸமர்ப்பிப்பது, என்னை ஸேவிப்பதற்காக பணம், விஷயபோகம் ஸுகம் இவைகளை விடுவது, என்னுடைய பக்தியுண்டாவதற்காக யாகஞ்செய்வது தானஞ்செய்வது ஹோமஞ் செய்வது, வ்ரதஞ் செய்வது, தபஞ்செய்வது ஆகிய தர்மங்களை யநுஷ்டித்து மனுஷ்யர்கள் என்னிடத்தில் ஆத்மாவை ஸமர்ப்பித்தால் என்னிடத்தில் அவர்களுக்கு பக்தியுண்டாகும். அப்படிப்பட்ட பக்தர்களால் அடையப்படவேண்டிய விஷயம் வேறொன்றுமில்லை. எப்பொழுது சுத்த ஸத்வகுணம் பொருந்தி சாந்தமாயிருக்கும் சித்தத்தை என்னிடம் ஸமர்ப்பிக்கிறானோ, அப்பொழுது தர்மம், ஜ்ஞானம், வைராக்யம், அணிமாமுதலிய ஐச்வர்யங்கள் ஆகிய இவைகளை அடைகிறான். எப்பொழுது மனிதன் தேஹம் முதலியவைகளில் சித்தத்தைச் செலுத்துகிறானோ, அப்பொழுது அவனுடைய மனம் அழுக்குள்ளதாக ஆகிறது. அதர்மம் முதலிய

வைகளையும் அடைகிறான். என்னிடத்தில் பக்தி எதனால் உண்டாகுமோ, அதுவே தர்மமெனப்படும். எல்லாவற்றையும் பரமாத்மாவென்று நினைப்பதே ஜ்ஞானமெனப்படும். விஷயங்களில் ஸம்பந்தியாமலிருப்பது வைராக்கியமெனப்படும். அணிமா முதலியவைகளே ஐச்வர்யமெனப்படுகிறது" என்று சொன்னார்.

28—31. அதனைக்கேட்ட உத்தவர் பகவானை நோக்கி "ஓ சத்ருக்களைக் கொல்பவரே! யமமென்பது எவ்வளவு வகை? நியமமென்பது என்ன? சமமென்பது என்ன? தமமென்றால் என்ன? திதிக்ஷா யென்பதென்ன? திருதியென்பதென்ன? மேலும் தானம், தபஸ், சௌர்யம், ஸத்யம், ரிதம், சௌசம், த்யாகம், தனம், யஜ்ஞம், தக்ஷிணை ஆகிய இவைகளின் ஸ்வரூபமெப்படிப்பட்டது? புருஷனுக்கு எது பலமாகிறது? பகமென்பது என்ன? எது லாபமாகிறது? மேலான வித்யை எது? எது அலங்காரம்? எது ஹ்ரீ எனப்படுகிறது? ஸுகமென்பது என்ன? துக்கமென்பது என்ன? எவன் பண்டிதனெனப்படுகிறான்? எவன் மூர்க்கனெனப்படுகிறான்? எது நல்லமார்க்கம்? எது கெட்டமார்க்கம்? எது ஸ்வர்க்கம்? எது நரகம்? எவன் பந்து? எது கிருஹமெனப்படுகிறது? எவன் பணக்காரனெனப்படுவான்? எவன் தரித்ரனெனப்படுகிறான்? எவன் கிருபணனெனப்படுகிறான்? எவன் ஈச்வரன்? ஸாதுக்களுக்கு அதிபதியே! இவைகளையும் இதற்கு விபரீதமானவைகளையும் சொல்லும்" என்று கேட்டார்.

32—46. அதனைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணன் உத்தவரைநோக்கி "பிறருக்கு த்ரோஹஞ்செய்யாமலிருப்பது, பிராணிகளுக்கு ஹிதமாகப் பேசுவது பிறருடைய ஸ்வத்தை மனத்தாலும் அபஹரியாமலிருப்பது, ஒன்றிலும் ஆசைப்படாமலிருப்பது, நிஷித்த கர்மங்களில் வெறுப்பு, பணத்தைச்சேர்த்து வைத்துக்கொள்ளாமலிருப்பது, சாஸ்திரத்தில் ச்ரத்தைவைப்பது, ஸ்திரீ ஸங்கமில்லாமலிருப்பது, வீண்வார்த்தைப்பேசாமலிருப்பது, ஸ்திரபுத்தியுள்ளவனாகவிருப்பது, துக்கத்தை ஸஹிப்பது, பயமற்றிருப்பது ஆகிய பன்னிரெண்டும் யமமெனப்படும். சாஸ்திரத்திற் சொல்லிய கர்மங்களை அனுஷ்டிக்கத் தகுதியாகவிருப்பது, ஜபம், சாஸ்திரத்தில் சொல்லியபடி சரீரத்தை இளைக்கச்செய்வது, ஹோமம், ச்ரத்தை, அதிதிகளைப் பூஜிப்பது, என்னைப் பூஜிப்பது, புண்ணிய தீர்த்தங்

களுக்குச் செல்வது, பிறருக்கு உபகாரஞ்செய்வது, தைவச்செயலாகக் கிடைத்ததைக்கொண்டு சந்தோஷிப்பது, ஆசார்யனை ஸேவிப்பது ஆகிய இவைகள் நியமங்களெனப்படுகின்றன. புருஷன் இவைகளை எதற்காக உபாஸிக்கிறானோ, அவைகளைக் கொடுக்கின்றன. என்னிடத்திலேயே புத்தியைச் செலுத்தியிருப்பது சமம். இந்திரியங்களை ஜயிப்பது தமமெனப்படும். துக்கத்தைஸஹிப்பது திதிக்ஷா யெனப்படும். நாக்கையும் உபஸ்தத்தையும் ஜயிப்பதே திருதியாகும். பிராணிகளுக்கு த்ரோஹஞ்செய்யாமலிருப்பதே மேலான தானம். காமங்களை விட்டுவிடுவதே தபஸ்ஸாகும். பசி, தாஹம், சோகம் மோஹம், ஜரா, மிருத்யூமுதலிய ஸ்வபாவங்களை ஜயிப்பதே சௌர்யம். தாரதம்ய மின்றி எல்லாவற்றையும் ப்ரஹ்மஸ்வரூபமாகப்பார்ப்பதே ஸத்யமாகும். மெதுவான வார்த்தையே ரிதமெனப்படும். கர்மங்களில் ஆஸக்தி யில்லாமலிருப்பது சௌசம். கர்மங்களை விட்டுவிடுவது ஸன்யாஸமெனப்படுகிறது. மனிதர்களுக்கு இஷ்டமான தனம் தர்மமேயாம். பரமேச்வரனாகிய நானே யஜ்ஞம். ஜ்ஞானோபதேச மேதக்ஷிணையெனப் படுகிறது. ப்ராணாயாமமே மேலான பலமாகிறது. என்னுடைய ஐச்வர்யமே பகமெனப்படுகிறது. என்னிடத்தில் பக்தியே மேலானலாபம். ஆத்ம விஷயமான பேதமற்றுப் போவது வித்யை யெனப்படுகிறது. நிஷித்தகர்மங்களில் வெறுப்புண்டாவதே ஹ்ரீயெனப்படுகிறது. ஒன்றிலும் ஆசைப்படாமலிருப்பது முதலிய குணங்களே அலங்காரமாகிறது, ஸுகத்தையும் துக்கத்தையும் அதிக்ரமிப்பதே ஸுகமாகிறது. கிராம்யமான ஸுகத்தை அபேக்ஷிப்பதே துக்கமாகும். பந்தம் மோக்ஷம் ஆகிய இவைகளைத் தெரிந்துகொண்டவன் பண்டிதன். தேஹம் முதலியவைகளை நான் என்று நினைத்தவன் மூர்க்கன். என் விஷயமான சாஸ்திரம் (நிவிருத்திமார்க்கம்) நல்லமார்க்கம். ப்ரவிருத்தி மார்க்கமே கெட்டமார்க்கம். ஸத்வகுணத்தின் விருத்தியே ஸ்வர்க்கமாகும். தமோகுணத்தின் விருத்தியே நரகமெனப்படுகிறது. ஆசார்யனே பந்து. அவன் நானே யொழிய வேறல்ல. மனிதசரீரமே கிருஹம். நற்குணங்கள் பொருந்தியவனே பணக்காரன். எவன் கிடைத்ததில் ஸந்தோஷத்தை அடையவில்லையோ, அவன் தரித்ரன். இந்திரியங்களை ஜயிக்காதவன் கிருபணனெனப்படுகிறான். விஷயங்களில் ஆசைப்படாதவனே ஈசன். விஷயங்களில் ஆசைப்பட்டவனே

அநீசன். நீர்கேட்ட கேள்விகளுக்குப்பதில் சொன்னேன். அதிகமாகச்சொல்வதால் என்ன ப்ரயோஜனம்? குணமென்றும் தோஷமென்றும் பார்ப்பதே தோஷம். அப்படிப் பார்க்காமலிருப்பதே குணமாகும்" என்று சொன்னார்.

---

## அத்யாயம்—20.

### பக்தி யோகம் முதலியவை.

ஓ தாமரைக்கண்ண! "குணதோஷங்களை க்ரஹிப்பதே தோஷமென்றும் அவையில்லாமலிருப்பதே குணமென்றும் சொன்னீரல்லவா? அதெப்படி பொருந்தும்? வேதம் ஈச்வரனாகிய உம்முடைய ஆஜ்ஞையாக விருக்கிறது. அது விதி, நிஷேதம் இவைகளாக விருக்கிறது. ஆனதால் குணத்தையும் தோஷத்தையும் வேதம் அபேக்ஷிக்கிறது. அதனை எப்படி கிரஹிக்காமலிருக்கக்கூடும்? (வேதம் இதைச்செய்தால் புண்யங் கிடைக்கும், ஆனதால் இதைச் செய்யவேண்டுமென்று விதிக்கிறது. இதைச் செய்தால் பாபமுண்டாகும். அதனால் இதைச் செய்யக்கூடாது என்று நிஷேதிக்கிறது. குணம், தோஷமென்று கிரஹிக்கக்கூடாதென்றால் விதி நிஷேதமாகிய வேதத்திற்கு என்ன கதியென்று கருத்து) மேலும் வேதத்தில் ஜாதி, ஆச்ரமம், அநுலோமர்கள் (மேலான ஜாதி புருஷர்களுக்கும் தாழ்ந்தஜாதி பெண்ணுக்கு முண்டானவர்கள்) ப்ரதிலோமர்கள் (தாழ்ந்த ஜாதி புருஷர்களுக்கும் மேலான குலத்து பெண்ணுக்கு முண்டானவர்கள்) இவைகளின் பேதம், கர்மங்களுக்குரிய த்ரவ்யம், தேசம், காலம் அவைகளுக்குத் தகாத த்ரவ்யம முதலியவைகளையும், ஸ்வர்க்கம், நரகம் இவைகளையும் வேதம் நிரூபிக்கிறது. விதி, நிஷேதம் இவைகளுள்ள அந்த வேதம் உமமுடைய ஆஜ்ஞையாக விருக்கிறது, குணம், தோஷமென்ற புத்தியில்லாவிடில் மேற்காட்டிய கர்மகாண்டம் மனிதர்களுக்கு எப்படி க்ஷேமத்தைக் கொடுக்கும்? மேலும் உம்முடைய ஆஜ்ஞையாகிய வேதத்தால் பிதிருக்களும், தேவர்களும் மனிதர்களும் ஸ்வர்க்கம் மோக்ஷம் இவைகளையும் அவைகளுக்கு ஸாதனமாயுள்ளவைகளையும் தெரிந்துகொள்ளுகிறார்கள். ஆனதால் வேதம் அவைகளுக்கு மேலான கண்ணாக விருக்கிறது. பின்னும் இதுகுண

மென்றும், இது தோஷமென்றும் உம்முடைய வார்த்தையாகிய வேதத்தால் தான்தெரிந்து கொள்ளுகிறோம். அதனால் நல்லகர்மங்களை அநுஷ்டிக்கிறான். கெட்ட கர்மங்களை விட்டு விடுகிறான். குணம் தோஷமென்ற ப்ரமம் வேதத்தாலேயே ஏற்பட்டிருக்கிறது. அந்த ப்ரமத்தை நிவர்த்தி செய்யும்" என்று கேட்டார்.

6—17. அதனைக்கேட்ட பகவான் உத்தவரை நோக்கி "ஜ்ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம்என்ற மூன்று யோகங்களை மனிதர்களுடைய க்ஷேமத்திற்காகச் சொன்னேன். இதைத் தவிர க்ஷேமத்தை அடைவதற்கு வேறு உபாயமில்லை. கர்மங்கள் துக்கத்தைக் கொடுக்கக்கூடியவையென்று அதன் பயனில் ஆசைப்படாம லிருப்பவர்களுக்கு ஜ்ஞானயோகம் ஸித்தியைக் கொடுக்கும். கர்மங்களில் வைராக்யத்தை அடையாமல் அவைகளின் பயனில் ஆசைகொண்ட காமிகளுக்குக் கர்மயோகம் ஸித்தியைக்கொடுக்கும். எவன் தைவச்செயலான பாக்கியத்தால் என்னுடைய கதையில் ச்ரத்தையை அடைந்து கர்மங்களில் அதிகமாக நிர்வேதத்தை அடையாமலும் அதிகமாக ஆசைகொள்ளாமலு மிருக்கிறானோ, அவனுக்கு பக்தியோகம் ஸித்தியைக்கொடுக்கும். (மூன்று யோகங்களும் வெவ்வேறு அதிகாரிகளை யுத்தேசித்துச் சொல்லப்பட்டதென்றுகருத்து) எதுவரையில் கர்மத்தின் பயனில் நிர்வேத முண்டாகவில்லையோ, எதுவரையில் என்னுடைய கதையைக்கேட்பது முதலியவைகளில் ச்ரத்தை யுண்டாகவில்லையோ, அதுவரையில் கர்மங்களைச் செய்யவேண்டும். (காம்யகர்மங்களில் ப்ரவிருத்தித்தவன் விதி நிஷேதங்களை முற்றிலும் அநுஸரிக்க வேண்டும். பயனை யுத்தேசியாமல் கர்மங்களைச் செய்பவன் ஜ்ஞான முண்டாவதற்குமுன் சக்திக்குத் தக்கபடி விதி நிஷேதங்களை அநுஸரிக்கவேண்டும். ஜ்ஞானயோகம், பக்தியோகம் இவைகளை அப்யஸிப்பவன் ஸ்வல்பம் அநுஸரிக்கவேண்டும். ஜ்ஞானம், பக்தி இவைகளில் ஸித்தியடைந்தவன் விதி நிஷேதங்களை யநுஸரிக்கவேண்டியதில்லை யென்பது அடுத்த அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது) ஓ உத்தவ! தன்னுடைய வர்ணாச்ரமங்களுக்குறிய தர்மங்களை அநுஷ்டித்தும் அவைகளின் பயனில் ஆசைப்படாமல் யாகம் முதலியவைகளை அநுஷ்டித்துக்கொண்டும் நிஷித்தமானவைகளைச் செய்யாமலுமிருப்பவன் ஸ்வர்க்கத்தையும் அடையான், நரகத்

தையுமடையான். (விதியை அதிக்ரமியாமலும், நிஷித்தத்தைச் செய்யாமலுமிருப்பதால் நரகத்தை அடையமாட்டான். பயனை யுத்தேசியாமலிருப்பதால் ஸ்வர்க்கத்தையும் அடையானென்று கருத்து) மேற்காட்டியபடி கர்மங்களைச் செய்துகொண்டிருப்பவன் பாபமற்றவனாகி ஆசை முதலிய மனத்தின் மலமற்றவனாகி, சுத்தனாகி, மிக்க சுத்தமான ஜ்ஞானத்தை அடைவான். அல்லது தைவச்செயலால் பக்தியையாவது அடைவான். (ஜ்ஞானத்தைக் காட்டிலும் பக்தி கிடைப்பதரிதென்று காட்டப்பட்டது) ஸ்வர்க்கத்திலிருக்கும் புண்யசாலிகளும், நரகத்திலிருக்கும் பாபிகளும் இந்த மனிதசரீரம் வேண்டுமென்று விரும்புகிறார்கள். மனிதசரீரம் ஜ்ஞானம், பக்தி ஆகிய இவைகளுக்கு ஸாதனமாக விருக்கிறது, புண்யத்தாலுண்டாகும் தேவசரீரமும், பாபத்தாலுண்டாகும் யாதனாசரீரமும் ஜ்ஞானம், பக்தி ஆகிய இவைகளுக்கு ஸாதகமாகிறதில்லை. ஆனதால் மனிதன் தேவசரீரம் வேண்டுமென்றாவது, ஆசைப்படக்கூடாது. மனிதசரீரம் அவைகளைக் காட்டிலும் சிறந்ததானாலும் அதையும் விரும்பக்கூடாது, சரீரத்தில் அபிமானம் வைத்தால் ப்ரமாதத்தை (தவறுதல்) அடைவான். மேற்சொல்லிய விஷயங்களை நன்றாய் தெரிந்துகொண்டு இந்த மனிதசரீரம் ஸித்தியைக் கொடுக்கக்கூடியதானதாலும் அதிலும் அபிமானம் வைக்காமல் அந்த சரீரமிருக்கும்பொழுதே மோக்ஷத்தை அடைவதற்கு முயற்சிக்கவேண்டும். பறவைதான் கூடுகட்டிக்கொண்டு வஸித்தமரத்தை தயையில்லாதவர்கள் வந்து வெட்டும்பொழுது அதில் அபிமானம் வைக்காமல் அதனைவிட்டு க்ஷேமத்தை அடைவதுபோல மனிதன் தன்னுடைய ஆயுஸ்ஸை இரவுபகல் அபஹரிக்கிறதென்றுநிச்சயித்து அதனால் பயந்து நடுக்கமுற்று விஷயங்களில் ஆசையை யொழித்து பரமாத்மாவையறிந்து சாந்தியை அடையவேண்டும். ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தைத் தாண்டுவதற்கு அந்த மனுஷ்ய சரீரம் முக்கியமான ஓடமாக விருக்கிறது. இது கிடைப்பதரிது. மிக்க கெட்டியானது; ப்ரயத்தினமின்றி கிடைத்திருக்கிறது; இதனை ஸமுத்திரத்தில் நடத்துவதற்கு ஆசார்யர்களிருக்கிறார்கள். கப்பல் செல்வதற்கு அநுகூலமான காற்று அடிப்பதுபோல் ஈச்வரனாகிய என்னால் தூண்டப்பட்டிருக்கிறது. ஆனதால் இப்படிப்பட்ட ஸாதனங்களை அடைந்தும் எவன் ஸம்ஸாரத்தைத் தாண்ட வில்லையோ,

அவன் ஆத்மாவைக் கொன்றவனுகிருன். (வைராக்கியமில்லாதவன் கர்மத்தை அநுஷ்டித்தால் வைராக்கியமுண்டாகும் அதனுல் ஜ்ஞானம் பக்தி இவைகளுண்டாகுமென்று சொல்லப்பட்டது. இனிவைராக்கிய முள்ளவனேயுத் தேசித்து ஜ்ஞானயோகம் சொல்லப்படுகிறது)

18—27. கர்மங்கள் துக்கத்தைக் கொடுக்கக்கூடியவையென்று நினேத்து எவன் அவைகளின் பயனில் ஆசையையொழிக்கிருனே, அவன் இந்திரியங்களே ஜயித்து மனத்தை விஷயங்களில் செல்லாமல் ஆத்மாவினிடத்திலேயே இருக்கும்படி அப்யாஸஞ்செய்து ஸ்திரப்படுத்தவேண்டும். மனம் அடிக்கடி விஷயங்களில் செல்லும் ஸ்வபாவமுள்ளதானதால் அதை பரமாத்மாவையே த்யானிக்கும்படி செய்வது கஷ்டம். ஆனுலும் ஸ்வல்பம் ஸ்வல்பமாக மனத்தின் காமத்தையும் பூர்த்திசெய்துகொண்டு அப்யாஸபலத்தால் வேறுவிஷயங்களில் செல்லாமல் ஆத்மாவிடமே ஸ்திரப்படுத்தவேண்டும். மனத்தை அதன் வழிவிட்டுவிடக்கூடாது. ப்ராணன் இந்திரியங்கள் ஆகிய இவைகளே ஜயித்து புத்தியில் ஸத்வகுணத்தை விருத்திசெய்து அதனுல் மனத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளவேண்டும். துஷ்டகுதிரையின் அபிப்பிருயத்தை அறிந்த ஸாரதி கொஞ்சம் அதன்வழியாக விட்டு அளவில் அதைக் கடிவாளத்தால் அடக்குவதுபோல் மனது சஞ்சல ஸ்வபாவமுள்ளதென்று தெரிந்துகொண்டு ஒரேகாலத்தில் அதனே அடிக்கமுடியாததானதால் அதனே யுபேக்ஷியாமல் அதற்கு வேண்டிய விஷயங்களே ஸ்வல்பம் கொடுத்து ஸத்வகுணம் பொருந்திய புத்தியால் அடக்கி ஸ்வாதீனஞ்செய்து கொள்ளவேண்டும். இப்படி மனத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்வதே மேலான யோகமெனப்படுகிறது. (கொஞ்சம் மனத்தை அடக்கினவனுக்கு முற்றிலும் மனத்தை வசப்படுத்திக் கொள்ளு முபாயம் மூன்றுச்லோகங்களால் காட்டப்படுகிறது) மஹத்தத்வம் முதலியவை ப்ரகிருதி முதலாக உண்டாயிற்றென்றும் அவைகள் பிருதிவிமுதலாக லயிக்கிறதென்றும் தத்வங்களே விசாரித்து த்யானித்தால் மனது வசப்படும். இம்மாதிரி தத்வங்கள் உத்பத்தி நாசமுள்ளவையென்று நிச்சயமுண்டானுல் அதை அறியாததாலுண்டான ஸம்ஸாரத்தில் ஆசையொழியும். ஆசார்யனுல் அல்லது சாஸ்திரத்தாலுபதேசிக்கப்

பெற்ற விஷயத்தை அடிக்கடி த்யானிப்பான். அதனுல் தேஹாபிமானம் முதலியவை நிவிருத்தியாகும். யமம், நியமம் முதலிய யோகமார்க்கத்தை யநுஷ்டித்து என்னை த்யானிக்க வேண்டும், அல்லது ஆத்மா ஆனுத்மா இவைகளை விசாரித்து த்யானிக்கலாம், அல்லது என்னை பூஜிப்பது ஸேவிப்பது முதலியவையால் த்யானிக்க வேண்டும். வேறு மார்க்கத்தையும் யோசிக்க வேண்டாம். இப்படி முனியாகவிருப்பவன் ஒருகால் நிஷித்த கர்மத்தை (பாபம்) ச்செய்தாலும் அதற்காக அவன் பிராயச்சித்தத்தை அநுஷ்டிக்க வேண்டியதில்லை. ஜ்ஞானுப்யாஸத்தாலேயே அந்தப் பாபம் நிவிருத்தியாகும் (பக்தியுள்ளவனுல் நாமஸங்கீர்த்தனம் முதலியவைகள்) எவர்கள் எதற்குரியவர்களோ, அந்த மார்க்கத்தை அவர்கள் அநுஷ்டிப்பதே குணமாகும். அப்படிச் செய்யாமல் மாறுதலாக அநுஷ்டிப்பது தோஷமாகும். இதுவே குணதோஷங்களின் லக்ஷணம். இயற்கையில் (உத்பத்தியால்) அசுத்தர்களான புருஷர்கள் கர்மத்தில் நிவிருத்தியை அடைவதற்காக இது குணம், இது தோஷமென்று கர்மங்களில் நியமம் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. (கர்மங்களில் ப்ரவர்த்திப்பதால் புருஷனுக்கு அசுத்தி யேற்படுகிறது. ஆனுலும் வெகுகாலமாக ப்ரவிருத்தி மார்க்கத்திலிருக்கும் புருஷனை அந்த மார்க்கத்திலிருந்து ஒரேகாலத்தில் முற்றிலும் திருப்பவிடுவது ஸாத்தியமல்ல. ஆனதால் இதைச் செய்யலாம். இதைச் செய்யக்கூடாதென்று விதிநிஷேதங்களைச் செய்து வேதம் மனிதனை ப்ரக்ருதியிலிருந்து நிவிருத்திக்கிறதேயொழிய ப்ரவிருத்தி மார்க்கத்தை விதிக்கவில்லை என்று கருத்து).

28—36. எவன் என்னுடைய கதையைக் கேட்பது முதலியவையில் ச்ரத்தையுள்ளவனுகவும், காமங்கள் துக்கத்தை கொடுக்கக் கூடியவையென்று தெரிந்துகொண்டவனுகவும் இருக்கிருனே, ஆனுலும் பயனில் ஆசையுள்ளவனுகவும், அதனை விடமுடியாதவனுகவுமிருக்கிருனே, அவன் பக்தியால் எல்லாம் கிடைக்குமென்ற நிச்சயத்துடன் என்னை ஸேவிக்க வேண்டும். விஷயங்களை அநுபவித்தாலும் அவைகள் துக்கத்தைக் கொடுக்கக்கூடியவைகளென்று நினைத்து அவைகளில் ப்ரியப்படாமலேயே இருக்கவேண்டும், முன்காட்டியவண்ணம் (19-வது அத்யாயத்தில் 20, 21, 22, 23, 24-ச்லோகங்களில் பக்தியின் ஸ்வரூபம் காட்டப்பட்டிருக்கிறது) பக்தி

யைச்செய்து என்னை யுபாஸிப்பவனுடைய ஹ்ருதயத்தில் நான் எப்பொழுதும் வஸிப்பேன். அதனால் அவனுடைய ஸகல காமங்களும் நசிக்கும். அவனுக்கு அஹங்காரமற்றுப்போகும். ஸகல ஸம்சயங்களும் நிவிருத்தியாகும். ஸகல கர்மங்களும் நசிக்கும். என்னிடத்தில் பக்தியுள்ளவனும், என்னிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தியவனுமான யோகிக்கு பக்தியோகமே க்ஷேமத்தைக்கொடுக்கும். அவனுக்கு ஜ்ஞானம் வைராக்யம் இவைகள் வேண்டியதில்லை. (பக்தி ஜ்ஞானம் முதலியவைகளை அபேக்ஷிக்கிறதில்லை. ஜ்ஞானம் பக்தியை அபேக்ஷிக்கிறது ஆனதால் பக்தி யோகமே மேலானதென்று கருத்து) கர்மங்களாலும், தபஸ்ஸாலும், ஜ்ஞானத்தாலும், வைராக்யத்தாலும், யோகத்தாலும், தானத்தாலும், தீர்த்தயாத்திரை முதலியவைகளாலும் எந்த சித்தசுத்தி முதலியவை யுண்டாகின்றனவோ, அதை என்னுடைய பக்தன் அடைவான். மேலுமவன் ஸ்வர்க்கம், மோக்ஷம், வைகுண்டம் ஆகிய இவைகளை விரும்புவானாகில் ப்ரயாஸமின்றி அதனையும் அடைவான். (அவைகளை விரும்பமாட்டானென்று கருத்து) என்னிடத்திலேயே ப்ரீதியுள்ள தீரர்களான பக்தர்கள் ஒன்றையும் விரும்புகிறதில்லை. இறப்புப்பிறப்பில்லாத கைவல்யத்தை நான் கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளார்கள். ஒன்றையும் விரும்பாமலிருப்பதே மேலான க்ஷேமமென்றும் க்ஷேமத்திற்கு ஸாதனமென்றும் சொல்லுகிறார்கள், ஆனதால் காமனையற்று ஒன்றையும் விரும்பாமலிருப்பவனுக்கு என்னிடத்தில் பக்தியுண்டாகும் (ஒன்றிலும் அபேக்ஷையில்லாதவனாகிய என்னிடத்தில் ஒன்றிலும் ஆசையில்லாதவனுக்குப்பக்தி யுண்டாகும்).

37—38. ஆனதால் என்னிடத்திலேயே மனத்தைச்செலுத்தி ராகத்வேஷங்களற்று ஸமசித்தர்களாகி பரமாத்மாவை அடைந்தவர்களுக்கு விதி நிஷேதங்களாலேற்படும் புண்யபாபங்களில்லை. என்னால் சொல்லப்பட்ட என்னுடைய மார்க்கங்களை அநுஷ்டிப்பவர்கள் க்ஷேமத்தை அடைவார்கள். பரப்ரஹ்மத்தை யறிவார்கள்.

# அத்யாயம்—21.

## குண தோஷங்கள்.

முன் அத்தியாத்தில் என்னால் காட்டப்பட்ட பக்தியோகம் கர்மயோகம் ஆகிய மார்க்கங்களை விட்டு எவர்கள் ஸ்திரமில்லாத ப்ராணங்களால் அல்பபோகங்களை அநுபவிக்கிறார்களோ, அவர்கள் ஸம்ஸாரத்தை அடைவார்கள் (ஜ்ஞானம், பக்தி இவைகளில் ஸித்தியடைந்தவர்களுக்கு குணம் தோஷமென்ற பேதமேயில்லை. ஸாதனத்தை யநுஷ்டிப்பவர்களுக்கு நித்யகர்மமும் நைமித்திக கர்மங்களும் சித்தசுத்தியை யுண்டுபண்ணுகிறவை யானதால் அவைகள் குணங்களாகின்றன. அதனைச் செய்யாமலிருப்பதும் நிஷித்த கர்மங்களைச் செய்வதும் தோஷமாகிறது. கிருச்ரம் முதலிய ப்ராயச்சித்தம் மேற்காட்டிய தோஷங்களை நிவர்த்திப்பதால் குணமாகிறது. ஜ்ஞான நிஷ்டர்களுக்கு ஜ்ஞானாப்பாஸம் குணம், அதற்கு விரோதமாகவிருப்பது தோஷம். பக்திமார்க்கத்திலிருப்பவர்களுக்கு ச்ரவணம் முதலிய பக்தியே குணம். அதற்கு விரோதமாகவிருப்பது தோஷம். எவர்கள் ஸித்தியை அடையாமலும் அதற்குத் தக்க ஸாதனங்களை அநுஷ்டியாமலு மிருக்கிறார்களோ, அவர்களுக்கு குணம் தோஷம் இவைகளென்பது பிந்திய ச்லோகங்களால் காட்டப்படுகிறது) அவர் அவர்கள் எதனைச்செய்யவேண்டுமோ, அதனைச்செய்வதே குணமாகும். தனக்கு அதிகாரமில்லாத மார்க்கத்தில் பிரவேசிப்பதே தோஷமாகும். இப்படி குணதோஷங்கள் அதிகாரிகளை யுத்தேசித்து கற்பிக்கப்பட்டவைகள் (வஸ்துவினிடத்தில் குணமாவது தோஷமாவதில்லை); வஸ்துக்கள் எல்லாம் ஸமமானவையானாலும் இது யோக்கியமோ, அயோக்கியமோ வென்று ஸந்தேஹித்து ஜனங்கள் ப்ரவர்த்தியாமலிருப்பதற்காக சுத்தி அசுத்தி குணம், தோஷம், சுபம், அசுபம் இவைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. (ப்ரவிருத்தி மார்க்கம் கெடுதியை விளைவிக்குமாதலால் அதனைத் தடுப்பதற்காகவே வேதம் வஸ்துகளுக்கு சுத்தி முதலியவைகளை விதிக்கிறது. ஆனதால் நிவிருத்தியடைவதே மேலானதென்று தாத்பர்யம்) நான் மநுமுதலியவர்களாக அவதரித்து தர்மத்திற்காக சுத்தியையும், அதர்மத்திற்காக அசுத்தியையும், வ்யவஹாரத்திற்காக குணதோஷங்களையும், (இது எடுத்துக்கொள்ளக்கூடியது இதை க்ரஹிக்கலாகாது என்றது) சரீரயாத்திரைக்

காக சுபாசுபங்களையும் காண்பித்தேன். பூமி, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசமென்ற ஐந்துபூதங்களே ஸகல ப்ராணிகளுடைய சரீரத்திற்குக் காரணங்களாக விருக்கின்றன. ஆத்மா எல்லா ப்ராணிகளுக்கும் ஒன்றேயாம். (ஆனதால் எல்லா வஸ்துக்களும் ஸமமானவைகளே யென்று கருத்து) மேற்காட்டியபடி எல்லாம் ஸமமானவையானாலும் நாமரூபங்கள் வெவ்வேறாக வேதத்தால் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அவர் அவர்களுக்குப் புருஷார்த்தம் ஸித்திக்கிறது. மேலும் தேசம், காலம், பலம், அதிகாரி முதலியவர்களுக்கும் குணதோஷங்கள் கர்ம ப்ரவிருத்தியைக் குறைப்பதற்காகவே என்னால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. (இனி சுத்தி அசுத்தி இவைகள் காட்டப்படுகிறது) கிருஷ்ணஸாரத்தின் (கருப்புமான்) ஸஞ்சாரமில்லாத தேசம் அசுத்தமானது. அதிலும் ப்ராஹ்மண பக்தியில்லாத தேசம் மிகவும் அசுத்தம், கிருஷ்ணஸாரமுள்ளதானாலும் ஸாதுக்களில்லாவிடில் அது அசுத்தமாகும். அதிலும் கோமயத்தால் முழுகுவது முதலிய ஸம்ஸ்காரமற்றவை (ம்லேச்சர்கள் அதிகமாக வஸிக்குமிடம்) அசுத்தம், அதிலும் ஊஷரபூமி அசுத்தம். அநுஷ்டிக்கவேண்டிய த்ரவ்யஸம்பத்தியுள்ளகாலமும், பூர்வாஹ்ணம் முதலியவையும், சுத்தம். எதனால் கர்மாநுஷ்டானத்திற்கு பாதகமேற்படுகிறதோ (ஆசௌசம் முதலியவை) அது அசுத்தமான காலம். த்ரவ்யங்களுக்கு ஏற்பட்ட சுத்தியையுஞ் சொல்லுகிறேன்: த்ரவ்யத்தால் த்ரவ்யம் சுத்தமாகும் (ஜலத்தால் சுத்தமாகும், மூத்திரத்தால் அசுத்தமாகும்) ப்ராஹ்மணன் இது சுத்தமென்று சொன்னால் அது சுத்தமாகும், இது அசுத்தமென்றால் அசுத்தமாகும். ப்ரோக்ஷணம் முதலிய ஸம்ஸ்காரத்தால் புஷ்பம் முதலியவை சுத்தமாகும், (பர்யுஷிதம் முதலியவை சுத்தமாகிறதில்லை) முகருவதால் புஷ்பம் முதலியவை அசுத்தமாகும். புதிதாய்வந்த ஜலம் முதலியவைகள் பத்துநாளில் சுத்தமாகும். குளத்திலுள்ள ஜலத்தை சண்டாளன் முதலியவர்கள் தொட்டாலும் ஜலம் அதிகமாகவிருந்தால் சுத்தமாகும். ஸ்வல்பமானால் அசுத்தமாகும். ஸூர்யக்கிரஹணம் முதலிய காலங்களில் அன்னம் புஜிப்பது சக்தியுள்ளவர்களுக்கு அசுத்தியாகும். அசக்தர்களுக்கு சுத்தியாகும், புத்தியாலும் சுத்தியடைகிறதுண்டு (ஆசௌசத்தில் பத்துநாட்கள் சென்றபின்) ஸம்பத்துள்ளவனுக்கு அழுக்குள்ள கந்தைத்துணி அசுத்தமாகும். தரித்ர

னுக்கு சுத்தமாகும். மேற்காட்டிய த்ரவ்யம் வாக்கு முதலியவை தேசம், அவஸ்தை இவைகளை அநுசரித்து பாபத்தை யுண்ணு கிறது (நிர்ப்பயமானவிடத்தில் அசுத்தியை யுண்டுபண்ணுகின் றன. திருடன் முதலியவர்களால் உபத்திரவிக்கப் பெற்றவிட த்தில் அவைகள் அசுத்தியை யுண்டுபண்ணுகிறதில்லை, ரோக முள்ளவனுக்கும் அசுத்தியை யுண்டுபண்ணுகிறதில்லை) த்ரவ்ய சுத்தி பலவகையானது, எப்படியெனில்— தான்யம் மரப்பாத்திரம் எலும்பு (யானையின் எலும்பு=தந்தம்) நூல், எண்ணெய், நெய்முத லியரஸங்கள், ஸுவர்ணம்முதலிய தேஜஸ், தோல், ஆகிய இவைகள் காலம், வாயு, அக்னி, மண், ஜலம் இவைகளால் சுத்த மாகும். (தான்யம் சிலநாட்கள்சென்றால் சுத்தமாகிறது, மரப்பாத் திரம் மண், ஜலம் இவைகளால் சுத்தமாகிறது. தந்தம்முதலியவை காற்று முதலியவைகளால் சுத்தமாகிறது. நூல் ஜலத்தால் சுத்த மாகிறது. நெய்முதலியவை காச்சுவதால் சுத்தமாகிறது. ஸு வர்ணம் முதலியவை அக்னியால் சுத்தமாகிறது. தோல் எண்ணெ யால் சுத்தமாகும்) ப்ரதிவீஸம்பந்தமுள்ளபதார்த்தங்கள் ஒன் றொடொன்று சேருவது பிரிவது முதலியவையால் சுத்தங்களா கின்றன. (அன்னம்முதலியவைகளில் மயிர்முதலிய அசுத்தபதார் த்தங்களின் ஸம்பந்தமிருந்தால் அதை விலக்குவதால் சுத்த மாகும். ஆஜ்யத்தின் சேர்க்கையாலும் அன்னத்திற்கு சுத்தி யுண்டாகிறது) தாம்ரம், வஸ்திரம் முதலியவைகளில் அழுக்குப்பிடி த்தால் அந்தமலம் நீங்கி துர்க்கந்தமின்றி அது தன்நிலைமையை அடையும்வரையில் புளி முதலியவைகளால் சுத்திசெய்யவேண்டும். (கர்த்தாவின் சுத்தி காட்டப்படுகிறது) மனிதன் ஸ்நானத்தாலும், தானத்தாலும், கர்மத்தை யநுஷ்டிக்கத்தக்க யதாலும், சக்தியா லும், உபனயனம் முதலிய ஸம்ஸ்காரங்களாலும், ஸந்தியோபா ஸ்தி முதலிய கர்மங்களாலும், என்னை ஸ்மரிப்பதாலும் (பகவானை நினைப்பது) சுத்தனாவான். மேற்கண்ட சுத்தியுள்ளவன் வேதத்தால் விதிக்கப்பெற்ற கர்மங்களை அநுஷ்டிக்கத்தக்கவனாவான். நல்ல ஆசார்யமுகமாக உள்ளபடி மந்திரங்களைத் தெரிந்துகொள்வதே அவைகளுக்கு சுத்தியாகும். செய்த கர்மங்களை ஈச்வரஸமர்ப்பணஞ் செய்வதே கர்மசுத்தியாகும். மேற்காட்டியபடி தேசம், காலம், த்ரவ் யம், கர்த்தா, மந்திரம், கர்மம் ஆகிய ஆறும் சுத்தமானவையானால் அவைகளால் தர்மமுண்டாகிறது, இவைகள் அசுத்தமானால் அதர்ம

முண்டாகிறது, (தர்மம் அதர்மம் இவைகளை நிரூபிப்பதற்காக வே சுத்தி, அசுத்தி இவைகள் சொல்லப்பட்டனவென்று கருத்து) ஆனால் சிலஸமயம் குணம்தோஷமாகவும், தோஷம் குணமாகவும்ஏற் படும். (ப்ரதிக்ரஹம் ஆபத்காலத்தில் குணம். மற்றகாலத்தில் தோ ஷம். குடும்பத்தைவிட்டுப் போவது தோஷமானாலும் வைராக்ய முள்ளவனுக்கு குணமாகிறது ஆனதால் இது குணம், தோஷம் என்று நியமஞ்செய்த வேதத்திற்கு குணம் தோஷமென்ற பேத மில்லையென்பதே உட்கருத்தென்று கொள்ளவேண்டும். ஜாதியா லாவது, கர்மத்தாலாவது பதிதர்களான ஜனங்கள் கள்குடிப்பது முதலிய மஹாபாபத்தைச் செய்தாலும் அவர்களுக்கு அது தோஷ மாகிறதில்லை. அவர்கள்முன்னமேயே பாபத்தைச் செய்து பதிதர்க ளாகவிருப்பதால் பிந்திச்செய்தபாபம் அவர்கள் விஷயத்தில் தோஷ மாக ஆகிறதில்லை. உயர்ந்த ஸ்தலத்தில் படுத்திருப்பவன் கீழே விழுவான். கீழே படுத்திருப்பவன் விழுவானா? ஸ்திரீகளுடைய சே ர்க்கை ஸன்யாஸிக்கு தோஷமானாலும் ரிதுகாலத்தில் ஸ்திரீ ஸங்கமம் க்ருஹஸ்தனுக்கு குணமென்று சொல்லப்பட்டிருக் கிறது. ஆனதால் விஷயங்களில் ப்ரவிருத்தியை ஸங்கோசித்து நிவிருத்தியை அடைய வேண்டும். அப்படிச் செய்யச் செய்ய கர்ம பந்தத்திலிருந்து விடப்படுவான். இப்படி நிவிருத்தி யடைவதே மனிதர்களுக்குத் தர்மமாகும், அதனால் சோகம், மோஹம் பயம் இவைகள் நீங்கும். விஷயங்களை குணமென்று நினை ப்பதால் அவைகளில் ஆஸக்தியுண்டாகி அவைகளையே நினை க்கிறான். பின்பு அவைகளை அடைய வேண்டுமென்ற காம முண்டாகிறது. அதற்கு இடையூறு நேர்ந்தால் கலஹமுண்டா கிறது. அதனால் அடக்கமுடியாத கோபமுண்டாகிறது, அதனால் மோஹமுண்டாகிறது. இது செய்யலாம், இதைச் செய்யக்கூடா தென்ற விவேகமற்றுப்போகிறது. அந்த விவேகமில்லாதவன் சூன்யனாகிறான். (இல்லாதவனுக்கு சமனாகிறான்) பின்பு மூர்ச் சையடைந்தவன் போலும், மரணமடைந்தவன்போலும் புரு ஷார்த்தத்தை இழந்து விடுகிறான். இப்படி விஷயங்களில் அபிநிவேசத்தை அடைந்தவன் தன்னையும் பிறரையுமறியான். விருக்ஷம்போல் ஜீவிப்பதால் மூர்ச்சை யடைந்தவனுக்குச் சம னென்றும், துருத்திபோல் மூச்சுவிடுவதால் மரணமடைந்த னுக்குச் சமனென்றும் சொல்லப்பட்டது. அவனுடைய ஜீவன

மும், மூச்சுவிடுவதும் வ்யர்த்தமானதேயாம். மருந்தில் ருசியை யுண்டுபண்ணுவதற்காக கற்கண்டு முதலியவைகளைக் காண்பிப்பது போல் வேதம் ஸ்வர்க்கம் முதலிய பயன்களைக் காண்பித்திருக்கிறது. இம்மாதிரி பயனைக் காண்பித்தது கர்மத்தில் ச்ரத்தையை யுண்டுபண்ணுவதற்காகவே யொழிய வேறில்லை. க்ஷேமத்தைச் சொல்வதற்காகவே அவாந்தர பயனாகிய ஸ்வர்க்கம் முதலியவைகளை வேதம் சொல்லுகிறது. ஜனங்கள் இயற்கையில் பசு முதலியவைகளிடத்திலும், ஆயுஸ் இந்திரியபலம் முதலியவைகளிலும், புத்திரன் முதலியவர்களிடத்திலும் மிக்க ஆஸக்தியுள்ளவர்கள். அவைகள் புருஷனுக்கு அனர்த்தத்தை விளைவிக்கக்கூடியவை. இப்படி மனிதன் விஷயங்களில் ஆசைகொண்டு தேவயோனி, பசு, பக்ஷி, விருக்ஷம் முதலிய யோனிகளை அடைந்து ஸம்ஸாரத்தில் சுற்றுகிறான், பரமஸுகமாகிய மோக்ஷத்தை அறியவில்லை. ஆனாலும் வேதஞ்சொல்வதே உண்மையென்று நம்பியிருக்கிறான். அப்படிப்பட்ட மனிதனுக்கு தாழ்ந்த ஜன்மத்தை அடையும் மார்க்கத்தை வேதம் உபதேசிக்குமா? (மோக்ஷத்தை நிரூபிப்பதற்காக வேதமேற்பட்டு கர்மகாண்டத்தை முதலில் நிரூபித்தது ஆனாலும் அதனுட்கருத்து நிவிருத்தியிலென்றே கருத்து) மேற்காட்டிய வண்ணம் வேதத்தின் உட்கருத்தை அறியாத சிலர் (தர்க்கமீமாம்ஸகர்கள்) அதில் சொல்லப்பட்டிருக்கும் ஸ்வர்க்கம் முதலிய பயனைக்கேட்டு புஷ்பம்போல் ரமணீயமான பயனில் ஆசைகொண்டு அதனையே புருஷார்த்தமென்று நினைக்கிறார்கள். வேதத்தின் உட்கருத்தை யறிந்த வ்யாஸர் முதலியவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள். ஸ்வர்க்கம் முதலிய பயனில் ஆசைகொண்டு தீனர்களாகி அதனை அடையவிரும்பி, புஷ்பத்தையே பழமென்று நினைத்து அக்னியால் ஸாத்யமான சில கர்மங்களைச் செய்து தூமாதி மார்க்கத்தை அடைபவர்கள் ஆத்மலோகத்தை யறியார்கள். மேலும் கர்மத்திலேயே நோக்கமுள்ளவர்களும், ப்ராணனையே திருப்திசெய்பவர்களுமான ஜனங்கள் ஆத்மலோகத்தை யறியார்கள். இருளால் தடுக்கப்பெற்றகண்களுக்கு ஸமீபத்திலிருக்கும் வஸ்து புலப்படுமா? நான் ஸகலப்ராணிகளுடைய ஹிருதயத்தில் வஸிக்கிறேன். நானே இந்த ஜகத்ஸ்வரூபியாக விருக்கிறேன். என்னைக்காட்டிலும் வேறாக ஜகத்தில்லை. ஜகத்து என்னிடமிருந்து வெளிப்பட்டது. அப்படிப்பட்ட பரமாத்மாவாகிய

என்னுடைய ஸ்வரூபத்தை மேற்காட்டிய கர்மஜடர்கள் தெரிந்து கொள்ளமாட்டார்கள். என்னுடைய உட்கருத்தை அறியாமல் எவர்கள் விஷயங்களிலேயே ஆசைகொண்டு வீணாக பசுக்களை ஹிம்ஸிக்கிறார்களோ, (யாகஞ்செய்கிறார்களோ) அவர்கள் மரண மடைந்த பின் அந்தப்பசுக்கள் அவர்களை ஹிம்ஸிக்கின்றன. மாம் ஸபக்ஷணத்திலும், ஸ்வர்க்க முதலிய பயனிலும் ஆசையிருக்கு மானால் யாகத்தைச் செய்யவேண்டும். யாகத்தில்தான் மாம்ஸ பக்ஷணஞ் செய்யலாம்" என்று வேதஞ்சொன்னதேயொழிய யாகஞ்செய்து பசுவை ஹிம்ஸிக்கவேண்டுமென்று விதிக்க வில்லை. அப்படிப்பட்ட வேதத்தின் உட்கருத்தை யறியாமல் வேதசப்தத்தைக்கேட்ட மாத்திரத்தில் கர்மத்தில் ப்ரவர்த் திக்கிறான். மேற்காட்டியபடியுள்ள வேதத்தின் உண்மையை யறிந்தவன் கர்மங்களைச் செய்யமாட்டான்(ஆசையற்றவனுக்கு ஒரு விதகர்மமுமில்லை. மனிதன் எதைச்செய்கிறானோ அதெல்லாம் காம த்தின் சேஷ்டையென்று ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது) வேதத்தின் உட்கருத்தை யறியாத ஜனங்கள் ஹிம்ஸைசெய்வதை யே விளையாட்டாகக்கொண்டு தாங்கள் ஸுகத்தையடைய விரும்பி பசுக்களைக்கொன்று பிதிருக்கள், பூதபதிமுதலிய தேவதைகளைப் பூஜிக்கிறார்கள். வ்யாபாரி த்வீபாந்தரஞ்சென்று மிக்கபணம் ஸம்பாதிக்க விரும்பி கையிலிருக்கும் பணத்தைச் செலவுசெய்து வஸ்துக்களைவாங்கி அவைகளைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு செல் லுகையில் கப்பல் உடைந்து ஸமுத்திரத்தில் பொருள் நஷ்ட மானால் எப்படி ஒருவித லாபமுமில்லாதவனாகிறானோ, அப்படி மனிதன் பரலோகஞ்சென்று மிக்கஸுகத்தை யநுபவிக்கலாமெ ன்று நினைத்து கர்மங்களைச் செய்கிறான். பரலோகம் ஸ்வ ப்னத்திற்குச் சமமானது. உண்மையிலில்லாதது. அதைப்பற் றிக் கேள்விப்படும் பொழுது காதுக்கு ப்ரியத்தைக் கொடுக் கக்கூடியது. அதனை யுண்மையென்று நினைப்பது ப்ரமமேயாம். ரஜஸ், ஸத்வம், தமஸ்முதலிய குணங்களுள்ள ஜனங்கள் மேற் காட்டிய குணங்களுள்ள இந்திரன்முதலிய தேவர்களைப் பூஜிக்கி றார்கள். அவர்கள் என்னுடைய அம்சமானாலும் அந்த எண்ணத் துடன் அவர்களுபாஸிக்கவில்லை (பேதமாக உபாஸிக்கிறார்கள்) இவ்வுலகத்தில் யாகத்தைச்செய்து தேவர்களைப் பூஜித்து ஸ்வர்க் கத்தில் மிக்க போகங்களை யநுபவிப்போம். பின்பு பூமியில்

மேலான குலத்தில் பிறந்து மேலான க்ருஹஸ்தனுக விருப்போம்" என்று ஸங்கல்பித்து யாகம்முதலிய கர்மங்களை ஜனங்கள் அநுஷ்டிக்கிருர்கள். வேதத்தில் கர்மகாண்டம் முழுவதும் புஷ்பத்திற்குச்சமமானது. (பழமல்லவென்று கருத்து. உபனிஷத்காண்டமேபழமானது) அப்படிப்பட்ட வேதவாக்கியங்களைக் கேட்டு மனங்கலங்கி தன்னைத்தெரிந்தவனுக நினைத்து கர்வங்கொண்டிருப்பவர்கள் என்னுடைய வார்த்தையையும் நம்பமாட்டார்கள். ஆனதால் கர்மகாண்டம், தேவதாகாண்டம், ப்ரஹ்மகாண்டமென்ற மூவ்வகையான வேதம் "ஆத்மா ப்ரஹ்மமேயாம் ஸம்ஸாரியல்ல" என்று சொல்லுகிறது. மந்திரங்களும் அவைகளை வெளிப்படுத்தியவர்களும் இந்திரியங்களுக்குப் புலப்படாத விஷயங்களைச் சொல்லுகிருர்கள். அதனைச்சொல்வதே எனக்கு ப்ரியமானது. (சுத்தமான அந்தக்கரணமுள்ளவர்களுக்கு இது தெரியும், மற்றவர்களுக்குத் தெரியாது. அந்தக்கரணம் சுத்தமாகும் வரையில் கர்மத்தை விடக்கூடாதென்று கருத்து. என்னைத்தவிர வேதத்தையும், வேதத்தின் உட்கருத்தையு மறிந்தவர்களொருவருமில்லையென்று இது முதல் அத்யாயம் முடியும்வரையில் காட்டப்படுகிறது) சப்த ப்ரஹ்மமாகிய வேதத்தின் ஸ்வரூபத்தையும் அர்த்தத்தையும் எளிதில் தெரிந்துகொள்ள முடியாது. ப்ராணன், இந்திரியம், மனஸ் இவைகளின் ஸ்வரூபமாகவிருக்கிறது. அதற்குக் கரையில்லை. ரஹஸ்யமான அர்த்தமுள்ளது, ஸமுத்திரம்போல ப்ரவேசிக்க முடியாதது. (சப்த ப்ரஹ்மம் ஸ்தூலம், ஸூக்ஷ்மமென்று இருவகையுள்ளது ஸூக்ஷ்மத்தின் ஸ்வரூபத்தை அறியமுடியாது. ப்ராணமயமாயுள்ளது ப்ரமமெனப்படுகிறது. மனேமயமாயுள்ளது பச்யந்தியென்ற பெயருள்ளது. இந்திரியமாயுள்ளது மத்தியமாயெனப்படுகிறது. சப்தப்ரஹ்மத்தின் ஸ்வரூபங்கள் நான்கு. அவைகளை அந்தர்முகர்களான ப்ராஹ்மணர்கள் தெரிந்து கொள்வார்கள், மற்றவர்களுக்குத் தெரியாது, சரீரத்தின் மத்யத்தில் மூன்று ஸ்தானங்களிருக்கின்றன. அவைகள் அதனை ப்ரகாசப்படுத்துகிறதில்லை. நான்காவது ஸ்வரூபமாகிய வாக்கை மனிதர்கள் சொல்லுகிருர்கள்—ச்ருதி. அதனைச் சொல்லுகிருர்களே யொழிய அதன் உண்மையை அறியவில்லையென்று கருத்து) தாமரைதண்டில் ஸூக்ஷ்மமான நூல் காணப்படுவதுபோல் பிராணிகளுடைய சரீரத்தில் நாதமொன்றிருக்கிறது. அதுவே சப்தப்ரஹ்மத்தின் ஸூக்ஷ்ம

ஸ்வரூபம். எங்கும் வ்யாபித்திருப்பவனும், பரப்ரஹ்மமும், அளவற்ற சக்தியுள்ளவனுமான நான் அதற்கு அதிஷ்டாதாவாக விருக்கிறேன். அந்த நாதமென்பது ஓங்காரரூபியாய் ஸூக்ஷ்மஸ்வரூபியாக ஹ்ருதயத்திலிருக்கிறது. அந்த ஹ்ருதயாகாசத்திலிருந்து அந்தநாதம் ப்ராணனை யுபாதியாகக்கொண்டு (உபநாதங்களுடன்) ஸ்பர்சம்முதலிய அக்ஷரங்களை ப்ரகாசப்படுத்தும். மனத்தை நிமித்தமாகக்கொண்டு அம்ருதயமாகி கர்யத்திரிமுதலிய ச்சந்த ஸ்வரூபத்தை அடைகிறது. பட்டுப்பூச்சி ஹ்ருதயத்திலிருந்து முகத்தின்வழியாகப் பட்டுக்களை யுண்டுபண்ணுவது மேற்காட்டிய விஷயத்தில் உதாஹரணமாகிறது. ஹ்ருதயத்திலிருந்து ஸூக்ஷ்மமான நாதம் மேலே கிளம்பி கண்டம் முதலிய ஸ்தானங்களில் ஸம்பந்தித்து ஸ்பர்சம் (ககாரம் முதல் மகாரம் வரையிலுள்ள எழுத்துக்கள்) ஸ்வரம். (உயிரெழுத்துகள்) ஊஷ்மங்கள் (ச, ஷ, ஸ, ஹ) அந்தஸ்தங்கள் (ய, ர, ல) இவைகளை யுண்டுபண்ணிக் கொண்டு வைதிக லௌகிகபாஷைகளால் அளவற்ற ஸ்தூலரூபத்தை அடைகிறது. ஸ்தூலத்திலிருந்து ஸூக்ஷ்மரூபத்தையடைவதும் இப்படியே. காயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப், பிருஹதீ, பங்தீ, திருஷ்டுப், ஜகதீ, அத்யஷ்டீ, அதிஜகதீ, அதிவிராட் என்ற சந்தஸ்ஸுகளும் ஸ்தூலரூபத்திலடங்குகின்றன. மேற்காட்டிய சந்தஸ்ஸுகள் ஒன்றைக்காட்டிலும் மற்றொன்று நான்கு அக்ஷரங்களால் அதிகமானவை. (இதுவரையில் ஸ்தூலரூபத்தின் ஸ்வரூபத்தையும் முழுமையும் அறியமுடியாதென்று காட்டப்பட்டது. இனி அதன் அர்த்தத்தைத்தெரிந்து கொள்ளவும் முடியாதென்று காட்டப்படுகிறது) வேதம் கர்மகாண்டத்தில் விதிவாக்யங்களால் எதனை விதிக்கிறது? தேவதாகாண்டத்தில் மந்திரங்களால் எந்த அர்த்தத்தைத் தெரிவிக்கிறது? ஜ்ஞானகாண்டத்தில் எதை அநுவாதஞ்செய்து நிஷேதித்தது" என்பதை என்னைத்தவிர வேறொருவனும் தெரிந்து கொள்ள முடியாது. ஆனதால் வேதத்தின் உட்கருத்து எனக்குத் தான்தெரியும். ஆனால் அதன் கருத்தை நீர் சொல்லும் என்று கேட்பீராகில் வேதம் கர்மகாண்டத்தில் யஜ்ஞஸ்வரூபியாகிய என்னையே விதிக்கிறது. இந்திரன் முதலிய தேவஸ்வரூபியாக என்னையே சொல்லுகிறது. ஜ்ஞானகாண்டத்தில் ஆத்மாவிடத்தில் ஆகாயமுண்டாயிற்றென்று ஆரம்பித்து ப்ரபஞ்சத்தை அநுவதித்து அவைகள் பரமாத்மாவைக்காட்டிலும் வேறல்லவென்

று நிஷேதித்து ப்ரபஞ்சம் என்னுடைய ஸ்வரூபமென்று என்னையே நிரூபிக்கிறது. வேதம் என்னையே முக்கிய அர்த்தமாகவைத்துக் கொண்டு ப்ரபஞ்சபேதங்கள் மாயயாலேற்பட்டவை யென்று சொல்வதற்காக அவைகளை அநுவதித்துப்பின்பு பரப்ரஹ்மத்தைக் காட்டியும் வேறானவஸ்து ஜகத்திலில்லை யென்று நிஷேதித்து சாந்தியை அடைந்தது. இதுவே வேதத்தின் முக்கியகருத்து. (மூளையிலுள்ளரஸமே மூளையின் விஸ்தாரமாகிய கிளைமுதலியவைகளில் பரவுகிறதுபோல் ப்ரணவத்தின் அர்த்தமாகிய பரமாத்மாவே அதன் விஸ்தாரமாகிய வேதத்தின் பொருளென்று கருத்து)

## நோட்டு.

காயத்ரீ—இருபத்திநான்கு அக்ஷரமுள்ளது. உஷ்ணிக்—இருபத்தெட்டு அக்ஷரங்களுள்ளது. இப்படி ஒவ்வொரு சந்தஸ்ஸைக்காட்டிலும் மற்றொன்று நான்கு அக்ஷரங்களால் அதிகமானது. உஷ்ணிக்முதல் உத்கிருதி வரையில் சந்தஸ்ஸுக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. உத்கிருதியென்பது 104 அக்ஷரங்களுள்ளது. காயத்ரிக்குமுன் உக்தா, அத்யுக்தா, மத்யா ப்ரதிஷ்டா, ஸுப்ரதிஷ்டாவென்று ஐந்துச் சந்தஸ்ஸுக்களுண்டு. ஒவ்வொரு சந்தஸ்ஸுக்களுக்கும் நான்கு பாதங்களுண்டு. ஒவ்வொருபாதமும் ஸமான லக்ஷணங்களுள்ளதானால் அது ஸமவிருத்த மெனப்படும். முதல்பாதமும் மூன்றாவதுபாதமும் ஸமமான லக்ஷணமுள்ளதும் இரண்டாவதுபாதமும் நான்காவதுபாதமும் ஸமமானதுமானால் அர்த்தஸமவிருத்த மெனப்படும். நான்கு பாதங்களும் வேறுலக்ஷண முள்ளவையானால் விஷமவிருத்த மெனப்படும். ஒவ்வொருச்சந்தஸ்ஸிலும் அவாந்திரபேதங்களுண்டு. அவைகள் பிங்களாசார்யர்முதலியவர்களால் செய்யப்பட்டுள்ள சந்தச்சாஸ்த்திரத்தில் கண்டு கொள்க.

---

# அத்யாயம்—22.

## தத்வங்களின் ஸங்கியை.

உத்தவர் பகவானை நோக்கி "ஓ ஜகத்பதியாகிய கிருஷ்ண! மஹர்ஷிகள் தத்வங்களை எவ்வளவென்று கணக்கிட்டிருக்கிறார்கள். நீர் இருபத்தெட்டு தத்வங்களென்று சொன்னீர், அதனைக் கேட்டேன். சிலர் இருபத்தாறு தத்வங்களென்கிறார்கள், மற்றுஞ்சிலர் இருபத்தைந்து தத்வங்களென்கிறார்கள். பின்னுஞ்சிலர் ஏழுதத்வங்களென்றும், இன்னுஞ்சிலர் ஒன்பது தத்வங்களென்றும்

மற்றுஞ்சிலர் ஆறுதத்வங்களென்றும், சிலர் நான்கு தத்வங்களென்றும், பின்னுஞ்சிலர் பதினொரு தத்வங்களென்றும், சிலர் பதினேழு தத்வங்களென்றும், இன்னுஞ்சிலர் பதினாறு தத்வங்களென்றும், சிலர் பதிமூன்று தத்வங்களென்றும் சொல்லுகிறார்கள். எந்தப் பயனையுத்தேசித்து மஹர்ஷிகள் பலவகையாகச் சொல்லுகிறார்கள்? அதன் உண்மையைச் சொல்லவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

5—17. அதனைக்கேட்ட பகவான் உத்தவரை நோக்கி "ப்ராஹ்மணர்கள் சொல்வது உண்மையே. எங்கும் எல்லாம் இருக்கின்றன, என்னுடைய மாயயை ஆச்ரயித்து அவர் அவர்கள் தெரிந்துகொண்டதைச் சொல்லுகிறார்கள். அதெல்லாம் உண்மையே. வாஸ்தவத்தில் தத்வங்களென்பதேயில்லை. இல்லாதவைகளை எவ்வளவென்றுதான் சொல்லக்கூடாது. கானலைப்பார்த்து ஜலமென்று சொல்பவன் ஸ்வல்பஜலமென்று நினைத்தாலும், மிக்க ஜலமென்று நினைத்தாலும் அதனால் என்ன வித்தியாஸம்? (ஒன்றுமில்லை) ஆனதால் மாயயால் இல்லாதவைகள் இருப்பதாகத் தோன்றுவதால் அவர் அவர்கள் தங்கள் புத்திக்குத் தக்கபடி சொல்லுகிறார்கள். ஆனதால் நான் சொல்வதே உண்மை. ஒவ்வொருவருடைய அந்தக்கரண விருத்திகளாக பரிணாமத்தையடைந்திருக்கும் என்னுடைய சக்திகளே இம்மாதிரியான விவாதத்திற்குக் காரணங்களாகின்றன. அவைகளைக் கடப்பது மிகவும் கஷ்டம். மேற்காட்டிய அந்தக்கரண விருத்திகளின் ஸம்பந்தத்தால் பேதமுண்டாகிறது. சமம் தமம் இவைகள் சேர்ந்தால் பேதமற்றுப்போகும். அதன்பின் விவாதம் நாசமாகும். தத்வங்கள் ஒன்றோடொன்று சேர்ந்திருப்பதால் (அநுப்ரவேசம்) அதனை ஸ்வல்பமென்றும் அதிகமென்றும் சொல்லுகிறவர்களுடைய புத்திக்குத் தக்கவாறு சொல்லுகிறார்கள். காரணமாகிய தத்வத்தில் கார்ய தத்வங்களும், கார்ய தத்வத்தில் காரண தத்வங்களும் ப்ரவேசித்திருக்கின்றன. (மண்ணில் குடம்போல் காரண தத்வங்களில் கார்யங்கள் ஸூக்ஷ்மரூபமாகவும், குடத்தில் மண்போல் கார்யத்தில் காரணம் அநுகதமாகவு மிருக்கின்றனவென்று கருத்து) ஆனதால் தத்வங்களில் காரண தத்வங்களிவை, கார்ய தத்வங்களிவை யென்பதையும், அவைகள் இவ்வளவென்பதையும்

சொல்லும் வாதிகளுடைய வார்த்தை யாவும் உண்மையென்றே நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். அவை யெல்லாவற்றிற்கும் யுக்தி ஏற்படலாம். புருஷனுக்கு அவித்யை அனாதியாக ஏற்பட்டிருப்பதால் அவனுக்கு ஆத்மஜ்ஞானம் ஸ்வயமாக உண்டாகிறதில்லை. ஆனதால் அவித்யையுள்ள புருஷனுக்கு ஸர்வஜ்ஞனாகிய பரமாத்மா ஜ்ஞானத்தைக் கொடுப்பவராகிறார் (ஆனதால் பரமாத்மாவையும் சேர்த்து இருபத்தாறு தத்வங்களென்று கருத்து) புருஷன் ஈச்வரன் இவர்களுக்கு இயற்கையில் பேதமில்லை. அவர்களுக்குப் பேதத்தைக் கல்பிப்பது வீணானதேயாம். ஜ்ஞானமென்பது ஸத்வகுணத்தின் கார்யமானதால் ப்ரகிருதியின் குணமேயாம் (இருபத்து ஐந்து தத்வங்கள் காட்டப்பட்டது) குணங்களுடைய ஸாம்யாவஸ்தையே ப்ரகிருதி யெனப்படுகிறது. பரிபாலனம் ஸிருஷ்டி ஸம்ஹாரம் இவைகளுக்கு முறையே காரணங்களான ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்கள் ப்ரகிருதியின் விசேஷங்களே யொழிய ஆத்மாவினுடையதல்ல. ஜ்ஞானம் ஸத்வகுணத்தின் கார்யம், கர்மம் ரஜோகுணத்தின் கார்யம், அஜ்ஞானம் தமோகுணத்தின் கார்யம். (ஆனதால் ஜ்ஞானம் முதலியவைகளும் ப்ரகிருதியின் குணங்களேயாம்) குணங்களுடைய க்ஷோபத்திற்குக் காரணமாகவிருப்பது எதுவோ, அதுவே காலமெனப்படுகிறது. ஸூத்ராத்மாவாகிய மஹத்தத்வமே ஸ்வபாவமெனப்படுகிறது (ஆனதால் காலமும், ஸ்வபாவங்களும் முன் காட்டிய இரண்டு பக்ஷங்களிலடங்கியவையென்று கருத்து) மேலும் புருஷன், ப்ரகிருதி, மஹத்தத்வம், அஹங்காரம், ஆகாயம், வாயு, தேஜஸ், ஜலம், பூமி ஆகிய ஒன்பது தத்வங்களென்று என்னால் முந்தி சொல்லப்பட்டது. ச்ரோத்ரம், த்வக், சக்ஷுஸ், மூக்கு, நாக்கு என்ற ஐந்து ஜ்ஞானேந்திரியங்களும், வாக்கு, கை, கால், பாயு, உபஸ்தம் என்ற ஐந்து கர்மேந்திரியங்களும், மனது ஆகிய பதினொரு தத்வங்களென்றும் சொல்லப்பட்டது. சப்தம், ஸ்பர்சம், ரஸம், கந்தம், ரூபம் ஆகிய ஐந்து விஷயங்களும் ஐந்து தத்வங்களென்று சொல்லப்பட்டன. நடை, மலமூத்திரங்களை விடுவது, பேசுவது, வேலைசெய்வது இவைகள் கர்மேந்திரியங்களுடைய கார்யங்களானதால் வேறு தத்வங்களல்ல.

18—29. ஸிருஷ்டியின் ஆரம்பகாலத்தில் ப்ரகிருதியானது, கார்யம், காரணம் இவைகளுடைய ஸ்வரூபமாகவிருந்து ஸத்வம்

முதலிய குணங்களைக்கொண்டு ஸிருஷ்டிக்கப்படும் வஸ்துக்களாக விருக்கும் அவஸ்தைகளைத் தரிக்கிறது. (ஐந்து மஹாபூதங்கள், பதினொரு இந்திரியங்கள் ஆகிய பதினாறும் கார்யங்களெப்படுகின்றன. ஐந்து பூதமாத்திரைகள், அஹங்காரம், மஹத்தத்வம் ஆகிய ஏழும் காரணங்களெனப் படுகின்றன.) புருஷன் பரிணாமத்தை யடையாமல் பார்த்துக்கொண்டு மாத்திரம் இருக்கிறான். (பரிணாமத்தையடையும் ப்ரகிருதியைக்காட்டிலும் அதனை அடையாத புருஷன் வேறு என்று காட்டப்பட்டது) ப்ரகிருதியினிடமிருந்து உண்டான மஹத்தத்வம் முதலியவைகள் விகாரத்தையடைந்து புருஷனுடைய ஸங்கல்பத்தால் சக்தியை அடைந்து ஒன்றோடொன்று சேர்ந்து ப்ரகிருதியின் ஆச்ரயத்தால் அண்டத்தை உண்டு பண்ணுகின்றன. ஆகாயம் முதலிய ஐந்து பூதங்கள் ஜீவன் ஆத்மா ஆகிய ஏழு தத்வங்களென்று சிலருடைய அபிப்பிராயம். அவைகளிலிருந்து சரீரம் இந்திரியங்கள் ப்ராணன் இவைகள் உண்டாகின்றன. இவைகளுக்குள் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து இருக்கிறதில்லை. தத்வங்கள் ஆறு என்று சொல்பவருடைய மதத்தில் ஐந்து பூதங்கள் பரமாத்மா ஆகிய ஆறு தத்வங்கள். தம்மிடமிருந்து உண்டான அவைகளைக் கொண்டு இந்த ஜகத்தை ஸிருஷ்டித்து அதில் ப்ரவேசித்தார். தத்வங்கள் நான்கு என்று சொல்பவர்களுடைய மதத்தில் பூமி தேஜஸ், ஜலம் ஆத்மா ஆகிய நான்கு தத்வங்களென்று கண்டுகொள்க. பூமிமுதலியவைகள் ஆத்மாவிடமிருந்து உண்டானவைகள். கார்யத்திற்கு உற்பத்தியேயொழிய காரணத்திற்கு உத்பத்தியில்லை. தத்வங்கள் பதினொன்று என்கிற மதத்தில் ஆகாயம் முதலிய ஐந்து பூதங்கள், இந்திரியங்கள் ஐந்து, ஆத்மா ஆகிய தத்வங்கள் பதினொன்று. பதினேழுதத்வங்கள் என்ற மதத்தில் ஐந்து பூதங்கள், ஐந்து தன் மாத்திரைகள், ஐந்து இந்திரியங்கள், மனது, ஆத்மா என்று பதினேழு தத்வங்கள். பதினாறு தத்வங்களென்ற மதத்தில் மனத்தை ஆத்மாவாக வைத்துக்கொண்டு கணக்கிடப்பட்டிருக்கிறது. பதின்மூன்று தத்வங்கள் என்ற மதத்தில் ஐந்து பூதங்கள் ஐந்து இந்திரியங்கள் மனது, ஜீவாத்மா, பரமாத்மா ஆகிய பதின்மூன்று தத்வங்கள். இம்மாதிரி ரிஷிகள் தத்வங்களை பலவகையாக கணக்கிட்டிருக்கிறார்கள். (ப்ரகிருதி, புருஷன் இவர்களுக்குள்ள பேதத்தைக் காண்பிக்கிறதற்காகவென்பது கருத்து) மேற்காட்டிய எல்லா மதங்களும் நியாயமானவைகளே,

எல்லா மதத்திற்கும் யுக்திகள் இருக்கின்றன. வித்வான்களுக்கு எவைதான் அழகானவையல்ல" என்று சொன்னார்,

27—29. அதனைக்கேட்ட உத்தவர் பகவானை நோக்கி "ஓ கிருஷ்ண! ப்ரகிருதி ஜடமானதாலும், புருஷன் ஜடத்தன்மையில்லாதவனானதாலும் இவ்விருவர்களும் விலக்ஷணர்களென்பது உண்மையே. ஆனாலும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமலிருப்பதால் அவர்களுக்கு பேதமிருப்பதாகத் தெரியவில்லை. ப்ரகிருதியின் கார்யமாகிய சரீரத்தில் ஆத்மா காணப்படுகிறார். ஆத்மாவிடத்தில் ப்ரகிருதி காணப்படுகிறது. ஆனதால் இவ்விருவர்களுக்கும் பேதமிருக்கிறதென்பதை எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? இந்த என்னுடைய ஸம்சயத்தை யுக்திபொருந்திய வார்த்தைகளால் நிவர்த்திக்கவேண்டும். உம்முடைய அனுக்கிரஹத்தால் ப்ராணிகளுக்கு ஜ்ஞானமுண்டாகிறது. உம்முடைய மாயயால் அஜ்ஞான மேற்படுகிறது. ஆனதால் உம்முடைய மாயயின் சக்தி உமக்குத் தெரியுமேயல்லாமல் பிறருக்குத் தெரியாது" என்று கேட்டுக்கொண்டார்.

30—35. அதனைக்கேட்ட பகவான் உத்தவரை நோக்கி "ஓ புருஷர்களுக்குட் சிறந்தவரே! ப்ரகிருதி, புருஷன் இவ்விருவர்களும் மிகவும் பேதமுள்ளவர்களே. பலவகையான விகாரங்களுள்ள சரீரம் முதலியவை குணங்களின் சேர்க்கையால் உண்டுபண்ணப்பட்டன. என்னுடைய மாயை முக்குண ஸ்வரூபமாகவிருந்து பேதத்தையும் பேதபுத்தியையும் பலவகையாக குணங்களைக்கொண்டு உண்டுபண்ணுகிறது. பேதம் அநேக வகையானாலும் ஸ்தூலமாக அத்யாத்மம் அதிதைவம், அதிபூதம் என்று மூன்று வகையாகவிருக்கிறது. சக்ஷுஸ் என்ற இந்திரியமே அத்யாத்மம். அந்த நேத்ரகோளத்தில் ப்ரவேசித்த ஸூர்யதேஜஸ் அதிதைவமெனப்படுகிறது. அவ்விரண்டும் ஒன்றை ஒன்று ஆச்ரயித்திருக்கிறது. ரூபமென்பது அதிபூதமெனப்படுகிறது, இம்மூன்றும் ஒன்றை ஒன்று ஆச்ரயித்தவைகளே. (சக்ஷுரிந்திரியத்தால் ரூபம் க்ரஹிக்கப்படுகிறது. அதனால் இந்திரியம் ஒன்று இருப்பதாயும் அதற்கு அதிதேவதை ஒன்று இருப்பதாயும் அறியப்படுகிறது. விகாரத்தை யடைவது, பலவகையாக விருப்பது, மற்றொன்றை அபேக்ஷிப்பது ஆகிய இவைகள் ப்ராகிருதியினிடத்தி

லிருக்கின்றன என்று கருத்து) மேற்காட்டிய மூன்றுவிதமான விகாரங்களுக்கும் ஆத்மா காரணமாக விருக்கிறார். அவர் தாமாக ப்ரகாசிப்பவர். விகாரமற்றவர். (ஆனதால் ப்ரகிருதிக்கும் புருஷனுக்கும் மிகுந்த பேதமிருக்கிறதென்று காட்டப்பட்டது.) சக்ஷுரிந்திரியத்தில் அத்யாத்மம் முதலிய மூன்று பேதங்கள் காட்டப்பட்டதுபோல் த்வக், காது, ஜிஹ்வா மூக்கு ஆகிய இந்திரியங்களிலும் சித்தத்திலும் மேற்கண்ட பேதங்களிருக்கின்றன. (த்வக், ஸ்பர்சம், வாயு என்று மூவ்வகை; காதில் ச்ரவணம், சப்தம், திக்கு என்றும்; நாக்கில் ஜிஹ்வா, ரஸம், வருணன் என்றும்; மூக்கில் நாஸிகா, கந்தம், அச்விநீ தேவதைகள் என்றும்; சித்தத்தில் சித்தம், அறியக்கூடியது, வாஸுதேவரென்றும்; மனம், நினைக்கக்கூடியது, சந்திரன் என்றும்; புத்தி, நிச்சயிக்கக்கூடியது, ப்ரஹ்மா என்றும்; அஹங்காரம், அஹங்காரப்படக்கூடியது, ருத்திரன் என்றும் மூன்று பேதங்கள்.) வைகாரிகம், தாமஸம், ஐந்திரியம் என்று மூன்றுவகையான அஹங்காரம் மோஹத்திற்கு ஹேதுவாக விருக்கிறது. அந்த அஹங்காரத்திற்கு மஹத்தத்வம் காரணமாம். அதற்கு ப்ரதானமே காரணம். அப்படிப்பட்டமோஹமானது ஆத்மாவின் உண்மையை யறியாததால் உண்டாகிறது. அதினாலேயே ஆத்மா இருக்கிறார் இல்லை யென்றவாதமும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அஹங்காரம் உண்மையில் இல்லாததானாலும் என்னுடைய ஸ்வரூபத்தை யறியாமல் பஹிர்முகர்களாக இருப்பவர்களுக்கு அந்த அஹங்காரம் கெடுதியை யுண்டுபண்ணுகிறது" என்று சொன்னார்.

36—37. அதனைக்கேட்ட உத்தவர் ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி "ஓ ப்ரபுவே! உம்முடைய உண்மையறியாமல் இருக்கும் மூடர்கள் தங்களுடைய கர்மங்களைக்கொண்டு பலவகையான தேஹத்தை அடைவதும் விட்டுவிடுவதுமாக எப்படி எப்படி ஸம்ஸாரத்தை யடைகிறார்கள்? ஓ கோவிந்த! ஆத்மாவின் உண்மையை யறியாதவர்களால் அறியமுடியாத இந்தவிஷயத்தை எனக்குச் சொல்ல வேண்டும். நித்தியனான ஆத்மாவிற்கு ஜனனமரணங்களும், எங்குமிருப்பவனாகிய ஆத்மா சரீரத்தை விடுவது சரீரத்தில் ப்ரவேசிப்பது இவைகள் எப்படிப் பொருந்து மென்பதையும் அறிந்தவர்கள் பெரும்பாலும் உலகத்திலில்லை. எல்லோரும் உம்முடைய மாயயால் மோஹித்திருக்கிறார்கள்" என்று கேட்டார்.

38—60. அதனைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவனை நோக்கி "கர்மமயமாகிய மனமானது ஐந்து இந்திரியங்களுடன் ஒரு தேஹத்திலிருந்து மற்றொரு தேஹத்திற்குச் செல்லுகிறது. அதைக் காட்டிலும் வேறாக விருக்கும் ஆத்மா (அஹங்காரத்தில்) அந்த மனத்தை அநுஸரிக்கிறான். கர்மத்திற்கு அதீனமான மனம் நேரில் பார்க்கப்பட்டவையும், கேட்கப்பட்டவையுமான விஷயங்களை த்யானஞ்செய்கிறது. அதனால் புதிதான விஷயங்களில் அபிநிவேசத்தை அடைந்து முந்திய விஷயங்களை மறந்துவிடுகிறது. கர்மாதீனமாகக் கிடைத்த சரீரத்தில் விசேஷ அபிநிவேசத்தையடைந்து முந்திய சரீரத்தில் அஹங்காரமற்று அதனை மிகவும் மனது மறந்துவிடுகிறது. இப்படி முந்தியசரீரத்தை மனம் மறந்துவிடுவதே மரணமெனப்படுகிறது (தேஹம்போல் மனம் நசிக்கிறதில்லை யென்று கருத்து) புதிதான சரீரத்தை ஸகல ப்ரகாரத்தாலும் அபிமானித்துத் தானென்று நினைப்பதே ஜனனமெனப்படுகிறது. மேற்காட்டிய மரண ஜனனங்களுக்கு ஸ்வப்ன மனோரதங்களே உதாஹரணங்களாகின்றன. ஸ்வப்னத்திலும் மனோரதத்திலும், முந்திய சரீரம் முதலியவைகளை மறந்து முந்தியே ஸித்தமாக விருக்கும் சரீரத்தை அபூர்வமென்று நினைக்கிறான். ஆனதால் அத்யாத்மம் முதலிய மூவ்வகையான பேதம் எல்லா இந்திரியங்களுக்கும் ஆச்ரயமான மனத்தால் உண்டுபண்ணப்பட்டது. அந்த பேதம் ஆத்மாவிடத்தில் தோன்றுகிறதேயொழிய உண்மையில்லை. இப்படிப்பட்ட ஆத்மா உள்வெளி இந்த பேதங்களுக்குக் காரணமாகவிருக்கிறது. (வெளியிலிருக்கும் விஷயங்களையும் உள்ளிருக்கும் ஸுகங்களையும் அநுபவிக்கிறானென்று கருத்து) ஜீவன் ஸ்வப்னத்தில் இல்லாதவையான சரீரங்களைப் பார்த்துக்கொண்டுப் பலவகையாகத் தோன்றுகிறானல்லவா? ஒவ்வொருக்ஷணத்திலும் சரீரங்கள் உண்டாகின்றன, நசிக்கின்றன அதற்குக் காலம் காரணமாகவிருக்கிறது. அந்தக்காலம் ஸூக்ஷ்மமானதால் மூடர்களுக்கு இப்படி சரீரம் உண்டாவதும் நசிக்கிறதுமாக விருப்பது தெரியவில்லை. தீபஜ்வாலைக்கு பரிணாமத்தாலும், நதீப்ரவாஹத்திற்கு நடையாலும், மரங்களின் பழங்களுக்கு ரூபம் முதலியவைகளாலும் அவஸ்தா விசேஷங்களிருப்பதாக எப்படித் தெரிந்துகொள்ளுகிறோமோ, அப்படி ஸகலப்ராணிகளுக்கும் வயோவஸ்தை முதலியவை ஏற்பட்டிருக்கின்றன. (ஜகத் ஒவ்வொரு க்ஷணத்திலும் உண்டாவதும் நசிப்பதுமாக விருக்

கிறது. அவஸ்தாபேதமுள்ளதாக விருப்பதால், தீபஜ்வாலை முதலிய வைகள்போல என்று அநுமானத்தால் ஸித்திக்கிறது) தீபஜ்வாலை ஒவ்வொருக்ஷணத்திலும் வேருனதாலும் மிக்க ஸாம்யத்தால் அதுவே இதுவென்று தோற்றுகிறது. ஆற்றில் ஜலம் போய்க்கொண்டிருக்கையில் புதிது புதிதாக ஜலம் வந்துக்கொண்டிருந்தாலும் அதே ஜலமென்று தோன்றுகிறது. அதுபோலவே சரீரம் ஒவ்வொருக்ஷணத்திலும் வேருக இருக்கிறது. ஆனாலும் அதுவே இதென்று தோன்றுகிறது. அப்படி நினைப்பதும் சொல்வதும் பொய்யானதேயாம். அவிவேகிகளின் ஆயுஸ்ஸும் வ்யர்த்தமானதேயாம். மஹா தேஜஸ்வின் அம்சமான அக்னி கல்பம் வரையில் நாசமில்லாததானாலும் கட்டையின் ஸம்பந்தத்தால் உண்டாவதுபோலும், கட்டையில்லாவிடில் நசிக்கிறதுபோலும் எப்படித் தோன்றுகிறதோ அப்படி மூடனுக்கும் உண்மையில் ஆத்மா உத்பத்தியற்றவனானதால் கர்மவசத்தால் ஜனித்தவன்போலும் மரித்தவன்போலும் தோன்றுகிறான், அது ப்ரமமேயாம். நிஷேகம் (மாதாவின்கர்ப்பத்தில் ப்ரவேசிப்பது) அதில் விருத்தியடைவதாகிய கர்ப்பம், ஜனனம், பால்யம் (ஐந்துவயதுவரையில்) கௌமாரம் (பதினாறுவயதுவரையில்) யௌவனம் (நாற்பது வயதுவரையில்) மத்தியவயது (அறுபதுவயதுவரையில்) ஜரை (கிழத்தன்மை) மரணம் ஆகிய ஒன்பது அவஸ்தைகள் சரீரத்தைச்சார்ந்தவை. தேஹத்தின் ஸம்பந்தங்களும், மனோரதமயங்களுமான மேற்காட்டிய பலவகையான அவஸ்தைகளை ப்ரகிருதியின் ஸம்பந்தத்தால் ஒருவன் அனுபவிக்கிறான். மற்றொருவன் விட்டுவிடுகிறான். (பகவானுடைய அநுக்கிரஹமுள்ளவன் விட்டுவிடுகிறான். ப்ரகிருதியின் ஸ்வரூபத்தை யறியாதவன் மேற்கண்ட அவஸ்தைகளை அடைகிறான். தேஹதர்மங்களான அவஸ்தைகள் ஸாக்ஷியாக விருப்பவனுக்கில்லை யென்று தாத்பர்யம்) பிதாவின் சரீரம் நசிப்பதையும் புத்திரனுக்கு சரீரமுண்டாவதையும் பார்க்கிறானல்லவா? அதனைக்கொண்டு தன்னுடைய சரீரத்திற்கும் உத்பத்தி நாசமிருக்கின்றனவென்று அநுமிக்க வேண்டும். சரீரத்தின் தர்மங்களான ஜனனமரணங்கள் அவைகளைப் பார்ப்பவனாகிய ஆத்மாவிற்கில்லை யென்று தெரிந்துகொள்ளவேண்டும். மரம் விதையிலிருந்து உண்டாகிறது நாளடைவில் நசிக்கிறது. இவைகளைப் புருஷன் பார்த்திருக்கிறான் அப்படிப்பட்ட புருஷன் அந்த ஜனன மரணங்களை அடைவானா? (அடை

கிறதில்லை) மரத்தைக்காட்டிலும் விலக்ஷணனாகவேயிருக்கிறான். அதுபோல சரீரத்தின் தர்மங்களான ஜனனமரணங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் புருஷன் சரீரத்தைக்காட்டிலும் வேறானவன். ஜனன மரணங்களற்றவன்; மேற்காட்டிய வண்ணம் ஆத்மா ப்ரகிருதி விலக்ஷணனென்று தெரிந்துகொள்ள வேண்டும். அப்படித்தெரிந்து கொள்ளாத மூடன் விஷயங்களை உண்மையானவையென்று நினைத்து அவைகளில் அபிநிவேசத்தை அடைந்து ஸம்ஸாரத்தை அடைகிறான். ஸத்வகுணமதிகமாக விருந்தால் மஹர்ஷிகளாகவும் தேவர்களாகவும், ரஜோகுணமதிகமாக விருந்தால் அஸுரர்களாகவும், மனிதர்கள்ாகவும், தமோகுணமதிகமாகவிருந்தால் பூதங்களாகவும், பசுபக்ஷிகளாகவும், கர்மவசத்தால் ஜனிக்கிறான். நர்த்தனஞ்செய்பவர்களைப் பார்த்துத் தானும் எப்படி நர்த்தனஞ் செய்கிறானோ, கானஞ் செய்பவர்களைப் பார்த்துத்தானும் தாளம்போட்டுக்கொண்டு எப்படி கானஞ்செய்கிறானோ, அப்படி புத்தியின் குணங்களைப்பார்த்திருக்கும் புருஷன் அவசனாக அவைகளை அநுகரிக்கிறான் (ப்ரபஞ்சத்தின் தர்மம் ஸாக்ஷியான ஆத்மாவிடத்தில் தோன்றுகிறதென்று தாத்பர்யம்) மேலும் உபாதிதர்மங்கள் உபாதிஸம் பந்தமுள்ளவனிடத்தில் தோற்றுகின்றன. ஆற்றின்கரையிலிருக்கும் மரங்கள் ஜலத்தில் ப்ரதிபலிக்கும்பொழுது ஜலம் அசைந்தால் மரங்கள் அசைவது போல எப்படித் தோன்றுகிறதோ, தோஷமுள்ள கண்ணுக்கு பூமிசுற்றுவது போல் எப்படிதோன்றுகிறதோ, விஷயங்களைக் கிரஹிக்கும் மனத்தால் எப்படி விஷயானுபவங்களேற்படுகின்றனவோ, அப்படி ஸம்ஸாரம் மித்தியையான தேயாம். ஸம்ஸாரமானது உண்மையிலில்லாததானாலும் ஸம்ஸாரம் நிவர்த்தியாகிறதில்லை. ஸ்வப்னத்தில் கண்ட விஷயங்கள் எப்படி பொய்யானவையோ, அப்படியே விஷயங்களைத்யானஞ்செய்யும் புருஷனுக்கு விஷயங்கள் உண்மை போலத் தோன்றுகின்றன. ஆனதால் ஓ உத்தவ! விஷயங்கள் ஆத்மாவைச் சார்ந்தவையல்ல தோற்றமேயொழியவேறில்லை இதுப்ரமமேயாம். அஸத்தான இந்திரியங்களால் விஷயங்களை நீர் அனுபவிக்க வேண்டாம். (விஷயங்களை அநுபவிப்பதற்காக முயர்ச்சிக்கவேண்டா மென்றுகருத்து) பிறரால் நிந்திக்கப்பட்டாலும் அவமதிக்கப்பட்டாலும் ஏமாற்றப்பட்டாலும், அஸூயிக்கப்பட்டாலும், அடிக்கப்பட்டாலும், தடுக்கப்

பட்டாலும், விருத்திக்குக் கெடுதல்நேர்ந்தாலும், எச்சில் துப்பப் பட்டாலும், மூத்திரத்தால் நனைக்கப்பட்டாலும், ஈச்வரத்யானத் திற்கு விக்னம் நேர்ந்தாலும் எவ்வளவுகஷ்டம் நேர்ந்தாலும் மனம் விகாரத்தையடையாமல் தைர்யத்துடன் ஆத்மாவைக் காப் பாற்றவேண்டும். அவனே க்ஷேமத்தை விரும்பியவனாவான்'' என்றார்.

61—62. அதனைக்கேட்ட உத்தவர் ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி "பேசுந்திறமை யுள்ளவர்களுக்குட் சிறந்தவரே! பிறரால் செய்யப் படும் அவமானம் முதலியவைகளைப் பொருத்திருப்பது மிகவும் ச்ரமமான கார்யம், ப்ரகிருதி மிக்க பலமுள்ளது; ஆனதால் வித் வான்களாலும். அப்படி ஸஹித்திருக்கமுடியாது, உம்முடைய தர்மங்களில் நோக்கமுள்ளவர்களும், உம்முடைய பாதங்களை ஆச்ர யித்தவர்களும், சாந்தர்களுமான பக்தர்களைத்தவிர யாரால் மேற் கண்டபடி இருக்கமுடியும்? ஆனதால் உம்மால் சொல்லப்பட்டதை நன்றாய் நான் தெரிந்துகொள்ளும்படி சொல்லவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

---

## அத்யாயம்—23.

### பிக்ஷுகீதை.

பாகவதர்களுக்குட் சிறந்தவரான உத்தவரால் இம்மாதிரி கே ட்கப்பட்ட பகவான் அவருடைய கேள்வியைப்பற்றி ச்லாகித்து "ப்ருஹஸ்பதியின் சிஷ்யராகிய உத்தவ! துஷ்டர்களுடைய கெட்ட வார்த்தையால் கலங்கிய மனத்தை ஸமாதானஞ் செய்துகொள்ள எவனால்தான் முடியும்? அஸத்துக்களுடைய கடுஞ்சொற்களால் துன்பத்தை அடைவதுபோல் பாணங்களா லடிக்கப்பட்டவன் துன்பத்தையடையமாட்டான். ஒரு பிக்ஷு (ஸன்யாஸி) பிறரால் அவமதிக்கப்பட்டபொழுது தன்னுடைய முந்திய கர்மங்களின் பயனை நினைத்து எதனைச்சொன்னாரோ, அந்த மிக்க புண்யகரமான இதிஹாஸத்தை இந்தவிஷயத்தில் உதாஹரணமாகச் சொல்லு கிறேன் ஸாவதானமாகக்கேளும். அவந்தீ தேசத்தில் ஒரு ப்ராஹ்மணனிருந்தான், அவன் மிக்க பணக்காரன்; கிருஷி

வ்யாபாரம் ஆகிய இவைகளால் ஜீவிப்பவன்; கதர்யன்; (எவன் லோபத்தால் தன்னையும், தர்மகார்யத்தையும், புத்திரர்களையும், களத்திரத்தையும், தேவர்களையும், அதிதிகளையும் பீடிக்கிறானே, அவன் கதர்யனெனப்படுகிறான்,) மிக்ககாமீ; மிகவும் லுப்தன்; மிக்க கோப ஸ்வபாவமுள்ளவன்; ஜ்ஞாதிகள், அதிதிகள் முதலியவர்களை அவன்வாக்கினாலும்கூட பூஜிக்கவில்லை. இப்படி ஒருவகையான புருஷார்த்தத்தையும் அடையாமல் தானும் போகங்களை யநுபவியாமலிருந்தான். இப்படி துஷ்ட ஸ்வபாவமுள்ளவனும், கதர்யனுமான அவனிடத்தில் புத்திரன், பந்துக்கள், களத்திரம், பெண்கள், வேலைக்காரர்கள் ஆகிய இவர்கள் பிரியப்படாமல் அவனுடைய நடையால் துக்கித்து அவனுக்கு ஹிதத்தை செய்யவில்லை. இம்மாதிரி பணத்தைச் சேர்த்துவைத்துக்கொண்டு இரண்டு லோகத்தின் ஸுகத்தையு மிழந்து தர்மம் காமம் இவைகளற்றவனாக விருந்ததால் அவனிடத்தில் பஞ்ச யஜ்ஞதேவதைகள் கோபித்துக்கொண்டன, அவர்களை அவமதித்ததால் புண்யம் குறைந்தது, அதனால் மிக்க ச்ரமப்பட்டு ஸம்பாதித்த பொருளும் நசித்தது. அவனுடைய பணத்தில் சிலபாகத்தை அவனுடைய ஜ்ஞாதிகள் பிடுங்கிக்கொண்டார்கள். சிலபாகத்தைத் திருடர்கள் அபஹரித்தார்கள். மற்றுஞ் சிலபாகம் வீட்டில் நெருப்புப்பிடித்து நஷ்டமாயிற்று, இன்னுஞ் சிலபாகம் பூமியில் புதைத்துவைத்துக் காணாமற்போயிற்று. சிலபாகம் அரசனால் அபஹரிக்கப்பட்டது; இப்படிப் பலவகையாக அவனுடைய பணம் நஷ்டமாயிற்று. அதனால் அவன் தர்மம் காமம் இவைகளற்றவனானான். எல்லாபந்துக்களும் அவனை உபேக்ஷித்தார்கள். பணமில்லாமல் பந்துக்களால் அவமதிக்கப்பெற்று கண்ணீரைப்பெருக்கி துக்கித்தான். அப்பொழுது அவனுக்கு நிர்வேதம் (வைராக்யம்) உண்டாயிற்று. அப்பொழுது அந்த ப்ராஹ்மணன் "என்னுடைய ஆத்மாவைவீணில் கஷ்டப்படுத்தினேன். எவன் பணத்திலேயே நோக்கமுள்ளவனாக விருக்கிறானோ, அவனுக்குத் தர்மமாவது காமமாவது கிடைக்கிறதில்லை. கதர்யனுக்கு (லோபிக்கு) பணமிருந்தால் பெரும்பாலும் அது அவனுக்கு ஸுகத்தைக்கொடுக்கிறதில்லை. இவ்வுலகத்தில் ஆத்மாவுக்கு ச்ரமத்தைக் கொடுக்கிறது. பரலோகத்தில் நரகத்தைக் கொடுக்கிறது. மிக்க சுத்தமான கீர்த்தியுள்ளவனானாலும், மேலான உத்தமகுணங்களுள்ளவனானாலும் அவனிடத்தில் கொஞ்சமாவது லோபகுணமிருக்

தால் நற்குணங்களெல்லாவற்றையுங் கெடுத்துவிடும். நல்ல அழகுள்ள சரீரத்தில் ஸ்வல்பமான குஷ்டமிருந்தால் அவ்வளவு அழகையும் குறைத்து விடுகிறதல்லவா? பணத்தை ஸம்பாதிப்பது கஷ்டமான கார்யம். கிடைத்தபணத்தை விருத்திசெய்வதிலும் அதனைக்காப்பாற்றுவதிலும் மிகவும் ச்ரமமிருக்கிறது. அந்தப் பணம் கெட்டுப்போனாலும் அநுபவித்து செலவானாலும் மனக்க வலையும், பயமும் ப்ரமமுமுண்டாகிறது. மேலும், திருடுவது, ஹிம்ஸை, பொய்சொல்வது, டம்பம், காமம். கோபம், ஆகிய ஆறு அனர்த்தங்கள் பணம் ஸம்பாதிக்க முயற்சிப்ப தாலுண்டா கின்றன. கர்வம், மதம், பேதம், விரோதம், விச்வாஸமில்லாமலி ருப்பது, சண்டைசெய்வது, ஸ்திரீ, சொக்கட்டான் விளையாட்டு, மத்யம், ஆகிய ஒன்பது அனர்த்தங்களும் பணம் கிடைத்த பின்பு உண்டாகின்றன. மேற்காட்டிய பதினைந்து அனர்த்தங்கள் பணத் தாலேயே உண்டாகின்றன. பணமென்பது அனர்த்தங்களை யுண்டுபண்ணக் கூடியவையானதால் க்ஷேமத்தை அடைய விரும் பியவன் பணத்தில் ஆசைவைக்கக்கூடாது. தகப்பனானாலும், ஸஹோதர்களானாலும், களத்திரமானாலும், மித்திரர்களானாலும் பணத்திற் காகஸ்நேஹத்தை விட்டு விடுவார்கள், ஒரு காகணியைக் கொடுத்தால் சத்துருக்களும் மிக்க ஸ்நேஹ முள்ளவர்களாவார் கள். (இருபது சோகிக்கு காகணியென்று பெயர். இது ஒரு நாணயம்) ஆனதால் ஸ்வல்ப தனத்திற்காக மனிதர்கள் ஸ்நேஹ த்தைவிட்டு விசேஷகோபங்கொண்டு ஒருவருக் கொருவர் சண் டைசெய்து கொண்டு உயிரைவிடுகிறார்கள். இந்த மனிதஜன்மம் தேவர்களாலும் விரும்பக்கூடியது. அப்படிப்பட்ட ஜன்மத்தை அடைந்து அதிலும் சிறந்த ப்ராஹ்மண ஜன்மத்தை அடைந் தும் பணத்தில் ஆசைகொண்டு எவன் தனக்கு ஹிதத்தைச் செய்துகொள்ளவில்லையோ, அவன்நரகத்தை அடைகிறான். ஸ்வர்க் கம் மோக்ஷம் ஆகிய இவைகளுக்கு ஸாதனமான இந்த மனித சரீரத்தை அடைந்தும் அனர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய பண த்தில் ஆசைப்படலாமா? (ஆசைவைக்கக்கூடாதென்று கருத்து) மனிதனுடைய பணத்தில் தேவர்கள், மஹர்ஷிகள், பிதிருக் கள், ஜ்ஞாதிகள், பந்துக்கள் ஆகிய இவர்கள்பாகமுள்ளவர்கள். அவர்களுக்கும் பிரித்துக்கொடாமல் பணத்தைச்சேர்த்து வைத் துக்கொள்பவன் தாழ்ந்தகதியை அடைவான். ஆனதால் நான்

பணத்திலாசைகொண்டு ஆத்மாவிற்கு ஹிதமானதைச் செய்து கொள்ளாமல் வீணில் காலத்தைக் கழித்தேன். பணமும் நாசமாயிற்று; முதிர்ந்தவயதை அடைந்தேன், சரீரத்தில் பலம் குறைந்தது; புண்யத்தை ஸம்பாதிப்பதற்கு ஸாதனங்களான மேற்காட்டியவை யில்லாத நான் கிழத்தன்மையுடன் எதனைச்செய்வேன். பணத்தால் அனர்த்தமுண்டாகிறதென்பதை நன்றாகத் தெரிந்துகொண்டவனானாலும் வீணில் பணத்தை ஸம்பாதிக்க முயற்சிக்கிறான். ஆனதால் ஒருவனுடைய மாயயால் இந்த ஜனங்கள் மோஹித்திருக்கவேண்டும். பணத்தால் என்னப்ரயோஜனம்? பணத்தைக்கொடுப்பவைகளா லென்னபயன்? காமங்களா லென்னபயன்? மதத்தா லென்னப்ரயோஜனம்? ம்ருத்யுவினால் பிடிக்கப்பட்டவனுக்கு ஜனனத்தைக் கொடுக்கக்கூடிய கர்மங்களால் தான் என்னப்ரயோஜனம்? ஸகல தேவ ஸ்வரூபியாகிய பகவான் என்னிடத்தில் மிக்கப்ரியமுள்ளவராக விருக்கிறாரென்பது நிச்சயம். அவருடைய அநுக்ரஹத்தால் எனக்கு இம்மாதிரியான அவஸ்தை நேர்ந்தது, ஸம்ஸாரத்திலிருந்து ஆத்மாவைத் தாண்டுவிக்கும் ஓடமான நிர்வேதமுமுண்டாயிற்று. ஆனதால் எனக்கு ஆயுஸ் பாக்கியிருக்குமானால் தபஸ்செய்து சரீரத்தை இளைக்கச்செய்கிறேன். புருஷார்த்தத்தில் ஸாவதானனாகி ஆத்மலாபத்திலேயே ஸந்தோஷமுள்ளவனாக விருக்கிறேன். அப்பொழுது மூவ்வுலகங்களுக்கும் அதிபதிகளான தேவர்கள் அநுக்ரஹிக்கட்டும். எனக்கு ஆயுஸ் ஸ்வல்பமாக விருந்தாலும் அதற்குள் புருஷார்த்தத்தை அடைவேன். கட்வாங்கரென்பவர் ஒரு முஹூர்த்தத்தில் ப்ரஹ்மபதத்தை அடையவில்லையா?" என்று யோசித்து அந்த ப்ராஹ்மணன் அஹங்காரம் முதலியவைகளை விட்டு சாந்தமனமுள்ளவராகி ஸன்யாஸஞ்செய்துகொண்டார். மேலுமவர் ஒன்றிலும் ஆசையில்லாதவராகி பிக்ஷைக்காக கிராமத்திலும் நகரத்திலும் ப்ரவேசித்தார். அவருடைய மஹிமை பிறருக்குத் தெரியாது. அழுக்குள்ள சரீரமுள்ளவரும், வயதுமுதிர்ந்தவருமான அந்த ஸன்யாஸியைக் கண்ட துஷ்டர்கள் கர்வங்கொண்டுப் பலவகையாக அவரை அவமதித்தார்கள். சிலர் அவருடைய திருதண்டத்தைப் பிடுங்கிக் கொண்டார்கள். சிலர் கமண்டலுவையும், சிலர் ஆஸனத்தையும் சிலர் ஜபமாலிகையையும், சிலர் கந்தை, மரவுரி இவைகளையும், பிடுங்கிக்கொண்டார்கள். பின்னுமவர்கள் அவைகளைத் திருப்பிக்கொடு

த்து திரும்பவும் பிடுங்கிக்கொண்டார்கள். மேலுமந்த அவ்தூதர் பிக்ஷையெடுத்த அன்னத்தை ஆற்றங்கரையில் வைத்துப் புஜிக்கும் பொழுது அதில் பாபிகளான ஜனங்கள் மூத்திரம்பெய்தார்கள். எச்சிலைத்துப்பினார்கள். மௌனியாகவிருக்கும் அவரைப் பேசச்செய்யவேண்டி சிலர் அடித்தார்கள். மற்றுஞ்சிலர் அதட்டினார்கள். சிலர் "இவன் திருடன்" என்று கயிற்றால் கட்டினார்கள். இன்னுஞ்சிலர் "இவன் மிக்க பணமுள்ளவனாக விருந்தான், இப்பொழுது தரித்ரனான், பந்துக்கள் இவனை யுபேக்ஷித்தார்கள்; ஆனதால் தர்மசிந்தை யுள்ளவன்போல் வேஷங்கொண்டு இந்த விருத்தியை அடைந்திருக்கிறான், ஆனதால் வஞ்சகன். அட இவன் சிறந்த மலைபோல் மிக்கபலமுள்ளவன்; கோக்குபோல நல்ல நிச்சயத்துடன் மௌனமாக கார்யத்தை ஸாதித்துக் கொள்ளுகிறான்," என்று பரிஹாஸஞ் செய்து நிந்தித்தார்கள். இப்படி அந்தப்ராஹ்மணனை விளையாட்டுக் கருவிகளான மரப்பொம்மைகளைப்போல் கட்டி உபத்திரவித்தார்கள். கிளிகளைக் கூட்டில் அடைப்பதுபோல் காராகிருஹத்தில் அடைத்தார்கள். இப்படி அந்த ப்ராஹ்மணன் துஷ்டர்களால் செய்யப்பட்ட பௌதிகமான தாபத்தையும், ஜ்வரம் முதலியவைகளால் நேர்ந்த தைஹிகமானதாபத்தையும், குளிர்முதலிய தைவிகமான தாபத்தையும் எல்லாவற்றையும் ஸஹித்திருந்தார். ஒவ்வொரு ஆபத்துக்கள்வரும் பொழுது " இது கர்மாதீனமாக வந்திருக்கிறது இது நம்மால் அநுபவிக்கக்கூடியது " என்று நினைத்திருந்தார். அப்பொழுதும் அந்த ப்ராஹ்மணன் தம்முடைய தர்மத்தை விடாமல் ஸத்வகுணத்தாலுண்டாகிய தைர்யத்துடன் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார் (எப்பொழுதும் பகவானைத்யானஞ் செய்து அதனால் மனஸ், ப்ராணன், இந்திரியம், அதன் வியாபாரங்கள், இவைகளை ஜயிப்பது ஸாத்விகமான தைர்யம்—பகவத்கீதை) எப்படியெனில்—இந்த ஜனமானது ஸுகதுக்கங்களுக்குக் காரணமல்ல (இவர்கள் நம்மை உபத்ரவிக்கிறார்களென்றாவது ஸுகத்தை யுண்டுபண்ணுகிறார்களென்றாவது நினைக்கக்கூடாது) தேவதை, ஆத்மா, க்ரஹங்கள், கர்மம், காலம் இவைகளும் காரணங்களல்ல. மனமே காரணமென்று சொல்லுகிறார்கள். அதுவே ஸம்ஸார சக்கிரத்தை யுண்டுபண்ணுகிறது (சக்கிரம்போல் சுழன்றுகொண்டிருப்பதால் ஸம்ஸாரத்தைச் சக்கிரமென்று சொல்லப்

பட்டது) மனமானது குணங்களுடைய விருத்திகளை யுண்டுபண்ணுறது. அதனால் ஸாத்விககர்மங்களும், ராஜஸகர்மங்களும், தாமஸகர்மங்களும் அவைகளால் தேவசரீரம், மனிதசரீரம், ஸ்தாவர சரீரம் முதலியவைகளையும் புருஷன் அடைகிறான். விஷயங்களில் ஆசைப்படுகிற மனத்துடன் அதற்கு நியந்தாவாகவிருந்தாலும் பரமாத்மா அதன் விருத்திகளில் ஸம்பந்தப்படாமல் வித்யாசக்தி யுள்ளவராகி ஜீவனுக்குத் தோழராக ஸாக்ஷியாகவிருக்கிறார். இந்த ஜீவன் ஸம்ஸாரத்தைக்கொடுக்கும் அந்த மனத்தைத்தானென்று நினைத்து அதன் விருத்திகளையடைந்து விஷயங்களையநுபவித்துக் கொண்டு, ஸம்ஸாரத்தை அடைகிறான். தானம், வர்ணாச்ரமங்களுக்குரிய தர்மத்தை யநுஷ்டிப்பது, நியமம், யமம், சாஸ்திரங்களைப்படிப்பது, கர்மங்கள், நல்ல வ்ரதங்கள் (ஏகாதசியில் உபவாஸமிருப்பது முதலியவை) ஆகிய எல்லாம் மனத்தை அடக்குவதற்காகவே ஏற்பட்டிருக்கின்றன. மனத்தை அடக்குவதே மேலான ஸமாதியெனப்படுகிறது. தானம் முதலிய மேற்காட்டிய தர்மங்களால் எவனுடைய மனது அடக்கப்படுகிறதோ, அவன் செய்யக்கூடிய கார்யமொன்றுமில்லை. எவனுக்கு மனம் கட்டுப்படவில்லையோ, விஷயங்களில் செல்லுகிறதோ, அவன் செய்யும் தானம் முதலியவையால் என்னபயன்? ஸகல இந்திரியங்களும் அவைகளின் அதிஷ்டான தேவதைகளும் மனத்திற்கு ஸ்வாதீனர்களாக விருக்கிறார்கள். மனம் ஒருவருக்கும் வசப்படுகிறதில்லை. அந்த மனம் பலசாலிகளைக் காட்டிலும் பலமுள்ளது. அதனை வசப்படுத்திக்கொள்பவன் தேவர்களுக்கும் தேவனாவான். மனம் ஜயிக்கமுடியாத சத்ரு. ஸஹிக்கமுடியாத ஆசை, த்வேஷம், முதலியவை அதற்கு வேகங்களாக விருக்கின்றன. மர்மத்தைப் பிளக்கக்கூடியது. அப்படிப்பட்ட மனத்தை ஜயிக்காமல் சிலர் பிறருடன் வீணான சண்டைசெய்து சிலரை சத்ருக்களாகவும் சிலரை மித்திரர்களாகவும், சிலரை உதாஸீனர்களாகவும் நினைக்கிறார்கள். அவர்கள் மூடர்களேயாம். இந்த சரீரம் மனத்தாலேயே ஏற்பட்டது. அப்படிப்பட்ட சரீரத்தை நானென்றும் புத்திரன் முதலியவர்களுடைய தேஹத்தை என்னுடையதென்றும் நினைத்து அதனால் ஸ்வரூப ஜ்ஞானமற்றவர்களாகி மனிதர்கள் "நான் இவன்" என்ற ப்ரமத்தை அடைந்து ஸம்ஸாரத்தில் சுற்றுகிறார்கள். ஸுகதுக்கங்களுக்கு இந்த ஜனம் காரணமல்ல,

காரணமாக விருக்குமானால் ஆத்மாவிற்கு அதனாலென்ன? ஆத்மா அமூர்த்தமானதால் அடிப்பது முதலியவைகளில் கர்த்தாவாக வாவது, கர்மமாகவாவது ஆகிறதில்லை. சரீரங்கள் ஒன்றுக்கொன்று அடித்துக்கொள்ளுகின்றனவே யொழிய வேறில்லை. தன்னுடைய நாக்கை தன்னுடைய பற்களால் கடித்துக்கொண்டால் யாரிடம் கோபிக்கிறது? அல்லது தேவதைகளே ஸுகதுக்கங்களுக்குக் காரணமென்றாலும் அப்பொழுதும் ஆத்மாவிற்கு என்னகெடுதி? விகாரிகளான தேவதைகளுக்கு அந்த ஸுகதுக்கங்களே யொழிய விகாரமற்றவனும் அஹங்காரமற்றவனுமான ஆத்மாவிற் கொன்றுமில்லை. ஒரு அவயவத்தால் மற்றொரு அவயவம் அடிக்கப் படுமானால் அவைகளின் அதிஷ்டான தேவதைகளுக்கு அந்த துக்கமேயொழிய அவைகளைவிட வேறான புருஷனுடையதாகுமா? அவயவம் மற்றொரு அவயவத்தை அடித்தால் யாரைக்கோபித்துக் கொள்ளக்கூடும்? ஸுகதுக்கங்களுக்கு ஆத்மாவேகாரண மாகிற தென்று சொல்வோமானால், அது ஆத்மாவின் ஸ்வபாவமானதால் மற்றவையால் என்ன? எதனிடம் கோபிக்கிறது? ஆத்மாவைக் காட்டிலும் வேறான வஸ்து ஒன்றுமில்லை. இருக்குமானால் இருப்பதாகத் தோன்றும். அப்படித்தோன்றுவது பொய்யானதே. ஆனதால் ஸுகமென்பதும் துக்கமென்பதுமில்லை. ஜன்மலக்கினத்திற்கு எட்டாவது பன்னிரண்டாவது முதலிய ராசிகளிலிருக்கும் க்ரஹங்களால் துக்கமுண்டாகிறது, சுபஸ்தானங்களிலிருக்கும் க்ரஹங்களால் ஸுகமுண்டாகிறது ஆனதால் பிராணிகளுக்கு நேரும் ஸுகதுக்கங்களுக்கு நவக்ரஹங்கள் காரணங்களென்று சொல்வோமானால் உத்பத்தியற்றவனான ஆத்மாவிற்கு என்னகெடுதி? உத்பத்தியுள்ள சரீரங்களுக்கு அந்த ஸுகதுக்கங்களே யொழிய வேறில்லை. ஆகாயத்திலிருக்கும் க்ரஹங்களுக்கு க்ரஹங்களால் பீடையென்று ஜ்யோதிஸ் சாஸ்திர மறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அந்த க்ரஹங்களைக்காட்டிலும் புருஷன் வேறு. அந்த காலத்தில் ஜனித்த சரீரங்களைக்காட்டிலும் புருஷன் வேறாக விருக்கிறான். ஆனதால் யாரிடத்தில் கோபித்துக்கொள்ளுகிறது? ஸுகதுக்கங்களுக்குக் கர்மம் காரணமென்று சொல்வோமானால் அதனாலும் ஆத்மாவிற்கு ஒன்றுமில்லை. ஒரேவஸ்து ஜடமாகவும் ஜடமில்லாத தாகவுமிருந்தால்தான் அப்படிச்சொல்வது பொருந்தும் அப்படிப்பட்ட வஸ்து ஒன்றுமில்லை. ஆனதால் கர்மமென்பதே

இல்லை. சரீரம் ஜடமானது. இந்தப்புருஷன் சுத்த ஜ்ஞான ஸ்வரூபி யாக விருக்கிறான்; ஸுகதுக்கங்களுக்கு மூலமான கர்மமேயில்லை. அப்படியிருக்க யாரிடத்தில் கோபித்துக்கொள்ள முடியும்? காலமே ஸுகதுக்கங்களுக்குக்காரண மென்று சொல்வதானாலும். ஆத்மா காலஸ்வரூபியானதால் ஆத்மாவிற்கு என்ன கெடுதி? (தன்னால் தனக்குக் கெடுதி நேரிடுகிறதில்லை யென்று கருத்து) அக்னியின் அம்சமாகிய ஜ்வாலைக்கு அக்னியால் தாபமேற்படுகிறதில்லை யல்லவா? பனியின் குளிர்ச்சியால் அதன்தூளிக்கு உபத்திரவ மேற்படுகிறதில்லையல்லவா? உண்மையில் காலத்தைக்காட்டிலும் ஆத்மா விலக்ஷணன்; ஆனதாலும் ஸுகதுக்கங்களில்லை. ப்ராக்ருதியைக்காட்டிலும் விலக்ஷணரான ஆத்மாவிற்கு எந்த காலத்திலும் ஒன்றாலும் ஸுகதுக்கங்களின் ஸம்பந்த மேற்படுகிறதில்லை. உண்மையிலில்லாததானாலும் ஸம்ஸாரத்தைக் காண்பிப்பதான அஹங்காரத்தின் ஸம்பந்தத்தாலேற்படுகிறதென்று தெரிந்து கொண்டவன் பிராணிகளிடத்தில் பயப்படான். ஆனதால் முந்திய மஹர்ஷிகளான பெரியோர்களால் அநுஷ்டிக்கப் பெற்ற ஆத்மநிஷ்டையை நான் அடைந்து கரையற்ற ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறேன். அப்படிப்பட்ட ஆத்மநிஷ்டையும் பகவானுடைய பாதஸேவையால் தான்கிடைக்கவேண்டும்" என்று அந்த அவதூதர் கையிலிருந்த பொருள் போனபின் நிர்வேதத்தை அடைந்து ஸன்யாஸஞ்செய்து கொண்டு பூமியில்ஸஞ்சரித்து துஷ்டர்களால் அவமதிக்கப்பட்டும் மனங்கலங்காமல் "புருஷனுக்கு ஸுகத்தையும் துக்கத்தையும் மற்றொருவன் உண்டுபண்ணுகிறானென்பதில்லை. அப்படி நினைப்பது ப்ரமமேயாம். இவன் சத்ரு, இவன் மித்திரன், இவன் உதாஸீனன் என்று நினைப்பது ஸம்ஸாரம், அது அஜ்ஞானத்தாலேற்பட்டது" என்று சொன்னார்.

61—62. ஓ உத்தவ! ஆனதால் எப்படியாவது புத்தியால் மனத்தை அடக்கிக்கொள்ளும். என்னிடத்தில் மனத்தைச் செலுத்தினால்தான் மனத்தை ஜயிக்கமுடியும். இதுவே யோகத்தின் ஸங்கிரஹம். (மனத்தை அடக்கமுடியாவிடினும் இந்த கீதையைக்கேட்டு மனனஞ்செய்தால் அதனாலேயே அந்தப்பயன் கிடைக்கும்) இந்த அவதூத கீதையை மிக்க ச்ரத்தையுடன் எவன் கேட்கிறானோ, மனத்தில் தரிக்கிறானோ, பிறருக்குச் சொல்லு

கிருன், அவன் ஸுகதுக்கங்களால் அவமதிக்கப்படமாட்டான். (ஸுகதுக்கங்களை ஜயிப்பானென்று கருத்து)

---

## அத்யாயம்—24.

### ஸாங்கிய யோகம்.

ஓ உத்தவ! முன்னோர்களான கபிலர் முதலியவர்களால் நிச்சயிக்கப்பெற்ற ஸாங்கியத்தைச் சொல்லுகிறேன். அதனைத் தெரிந்துகொண்டால் பேதபுத்தியாலேற்படும் ஸுகதுக்கம் முதலியவை நிவர்த்தியடையும். ப்ரளயகாலத்திலும் விவேகிகளான புருஷர்களிருந்த கிருதயுகத்திலும் ப்ரபஞ்சம், ஸாக்ஷியாகவிருப்பவன் ஆகிய எல்லாம் பேதமற்ற ப்ரஹ்மத்தினிடமே லயித்திருந்தது. பேதமற்ற பரப்ரஹ்மமானது மாயயின் விலாஸத்தால் வாக்கு, மனம் இவைகளுக்கு விஷயமாகவும் இருவகையாகவுமாயிற்று. அதில் ஒன்று ப்ரகிருதி. அது கார்யம் காரணம் இவைகளின் ஸ்வரூபமாகவிருக்கிறது. மற்றொன்று ஜீவன். அவனே புருஷனெனப்படுகிறான். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்கள் ஜீவர்களை அநுக்கிரஹிக்க விரும்பிய காலஸ்வரூபியான என்னால் பார்க்கப்பட்ட ப்ரகிருதியினிடமிருந்து வெளிப்பட்டன. அந்தக் குணங்களிலிருந்து எல்லாவற்றிற்கும் ஆதாரமாகவிருப்பதால் ஸூத்ரமென்ற மஹத்தத்வமுண்டாயிற்று. (கிரியாசக்தியுள்ள விகாரம் ஸூத்ரமென்றும், ஜ்ஞானசக்தியுள்ள விகாரம் மஹானென்றும் சொல்லப்படுகிறது) அந்த மஹத்தத்வம் விகாரத்தை யடையும்பொழுது அதனிடமிருந்து அஹங்காரமுண்டாயிற்று. அது தேஹம் முதலியவைகளை ஆத்மாவென்று நினைக்கும் ப்ரமத்தை யுண்டுபண்ணுகிறது. அந்த அஹங்காரம், வைகாரிகம், ராஜஸம், தாமஸம் என்று மூவ்வகையுள்ளது. தன் மாத்திரைகள் (சப்தம் முதலியவை) இந்திரியங்கள், மனம் ஆகிய இவைகளுக்குக் காரணமாயுள்ளது. தான் ஜடமானாலும் சிதாபாஸவ்யாப்தமானதால் இரண்டு ஸ்வரூபமாகவுமிருக்கிறது. சப்தம் முதலிய தன் மாத்திரைகளான தாமஸாஹங்காரத்திலிருந்து ஆகாசம் முதலிய மஹாபூதங்களுண்டாயின. (அவைகள் ஆவரண ஸ்வபாவமுள்ளவை) ராஜஸாஹங்காரத்திலிருந்து இந்திரி

யங்களுண்டாயின (அவைகள் ப்ரவிருத்தி ஸ்வபாவமுள்ளவை யானதால் அவை ராஜஸங்கள்) ஸாத்விகமான அஹங்காரத்தி லிருந்து இந்திரியங்களுடைய அதிஷ்டான தேவதைகள் பதினொன்றும் உண்டாயின. பின்பு மஹத்தத்வம் முதலியவைகளில் நான் ப்ரவேசித்ததால் அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்து கார்யத்தைப் படைக்கும் சக்தியை அடைந்தன. பின்பு எனக்கு முக்கிய ஸ்தானமாகிய அண்டத்தைப் படைத்தன. (அண்டாபிமானியாக விருப்பவனுக்கு வைராஜனென்று பெயர்) அந்த அண்டம் வெகுகாலம் ஜலத்திலிருந்தது. அதில் நான் நாராயணனாக ஆவிர்பவித்தேன். அப்பொழுது என்னுடைய தொப்பிலில் லோகங்களுக்குக் காரணமாயுள்ள ஒரு தாமரைமலர் வெளிப்பட்டது. அதில் நான்கு முகங்களுள்ள ப்ரஹ்மதேவனாக வெளிப்பட்டேன். அந்த ப்ரஹ்மா தவஞ்செய்து என்னுடைய அநுக்ரஹத்தை அடைந்து ரஜோகுணத்தால் எல்லா லோகங்களையும் லோகபாலர்களையும் படைத்தார், பூலோகம், புவர்லோகம் ஸ்வர்லோகமென்ற மூவுலகங்களையும் ஸிருஷ்டித்தார். ஸ்வர்லோகம் தேவர்களுக்கு வாஸஸ்தானமாயிற்று. புவர்லோகமென்ற அந்தரிக்ஷம் பூதங்கள் வஸிக்குமிடமாயிற்று. பூலோகம் மனிதர்களுக்கு வாஸஸ்தலமாயிற்று, ப்ருகு முதலிய ஸித்தர்களுக்கு மூவுலகங்களுக்கு வெளியிலுள்ள மஹாலோகம், ஜனலோகம், ஸத்யலோகம் இவைகள் வாஸஸ்தலங்களாயின. பூமிக்குக் கீழாகவிருக்கும் அதலம் முதலிய லோகங்கள் அஸுரர்களுக்கும் நாகங்களுக்கும் வாஸஸ்தலங்களாயின. முக்குணங்களாலேற்படும் ஸகல கர்மங்களுடைய கதிகள் மூவுலகத்திற்குட்பட்டது. யோகம், தபஸ், ஸன்யாஸம் இவைகளை அநுஷ்டிக்கும் ஸித்தர்கள் மஹர்லோகம், ஜனலோகம், தபோலோகம், ஸத்யலோகம் ஆகிய இவைகளில் ஸஞ்சரிப்பார்கள். என்னிடத்தில் பக்திசெய்பவர்கள் வைகுண்டத்தில் ஸஞ்சரிப்பார்கள். நான் காலஸ்வரூபியாகவிருந்து அவரவர்களுடைய கர்மத்திற்குத் தக்கவாறு பயனைக்கொடுத்து வருகிறேன். கர்மத்தின் பயனை அநுபவிக்கும் இந்த ஜகத் ஸத்யலோகம் வரையில் ஸம்ஸாரத்திலிருந்து மேலே கிளம்புகிறது (உத்தம கதியை அடைகிறது) பின்னும் ஸ்தாவர சரீரம் வரையிலுள்ள தாழ்ந்த ஜன்மத்தையுமடைந்து ஸம்ஸார ஸமுத்திரத்தில் அழுந்தி இருப்பது, மஹத்தாகவிருப்பது, இளைத்திருப்பது, பருத்திருப்

பது, முதலியவைவெல்லாம் ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களுடைய சேர்க்கையாலுண்டாகிறது. (கார்யத்தில் காரணம் வ்யாபித்திருக்கிறதென்று காட்டப்பட்டது) எந்தக்கார்யத்திற்குஎது ஆதியாகவும், அந்தமாகவு மிருக்கிறதோ அதுவே மத்யாவஸ்தையுமென்பது திண்ணம். குடத்திற்கு ஆதியான அவஸ்தையும், கடைசியான அவஸ்தையும் மண்ணுகவே இருக்கிறது. ஆனதால் மத்யமான அவஸ்தையும் மண்ணுனதேயாம். கார்யமாக விருந்த நிலைமை வ்யவஹாரத்திற்காக ஏற்பட்டதே யொழிய நித்தியமில்லை. தங்கத்தால் செய்யப்பட்ட வளை முதலிய ஆபரணங்களுக்கு, ஆதியும், அந்தமும் ஸுவர்ணமேயாம். ஆனதால் மத்யமமான அவஸ்தையும் ஸுவர்ணமேயாம். எதனை ஆச்ரயித்து முந்திய காரணம் மற்றொன்றை உண்டு பண்ணுகிறதோ, எதுமுன்னும், பின்னும் இருக்கிறதோ அதேஸத்யமென்று ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. (பரமகாரணமாகிய ஆத்மாஸத்யனென்று சொல்வதற்காகவென்று கருத்து) இந்த ஜகத்திற்கு உபாதான காரணமான ப்ரகிருதியும், ஜகத்திற்கு அதிஷ்டாதாவாகிய புருஷனும், குணங்களுடையவிகாரத்திற்குக் காரணமாகிய காலமும், ப்ரஹ்ம ஸ்வரூபியான என்னுடைய ஸ்வரூபமே யொழிய வேறுனவையல்ல. (ப்ரகிருதி பரமாத்மாவின் சக்தி, புருஷன், காலம் இவை பரமாத்மாவின் அவஸ்தை, ஆனதால் அவை வேறுனவையல்ல வென்றுகருத்து) பரமேச்வரனுடைய ஸங்கல்பமுண்டாகும்பொழுது ப்ரளய முண்டாகிறது. அதுவரையில் ஸிருஷ்டி முன்பின்னுக (பிதா புத்திரனென்று) தொடர்ந்திருக்கிறது. அது ஜீவனுடைய உபயோகத்திற்காக மேற்பட்டது. என்னுல் வ்யாபிக்கப்பெற்றதும், ஒவ்வொருபகலிலும் பலவகையான ஸிருஷ்டி ப்ரளயங்களுள்ளதுமான அண்டம் தனியே ஐந்து பூதங்களாகிறது, (ஐந்து மஹாபூதங்கள் ஒன்ருேடொன்று சேர்ந்து அண்டத்தை ஸிருஷ்டித்தன. அதில் பலவகையான ஸிருஷ்டிகளும், ப்ரளயங்களும் ஒவ்வொரு நாட்களிலும் ஏற்படுகின்றன, பின்பு அந்த அந்த பூதங்களும் வெவ்வாருக பிரிந்தால் அண்டம் நசிக்கிறதென்று லயம் காட்டப்பட்டது.) அன்னத்தால் விருத்தியான சரீரம் அந்த அன்னத்தில் லயிக்கிறது (நூறு வர்ஷங்களாக மழை பெய்யாமல் அன்னமில்லாம லிருக்கும்பொழுது சரீரமும் அதில் லயத்தை அடைகிறதென்று கருத்து) அந்த அன்னமானது விதையாகமாத்திர மிருக்

கிறது; அந்தவிதை பூமியில் லயிக்கிறது (விதைத்தால் முளைக்கிற தில்லை யென்று கருத்து) பூமி கந்தத்தில் லயிக்கிறது (ப்ரளயகால ஸூர்யனாலும் ஸங்கர்ஷணருடைய முகத்தி லுண்டான அக்னியா லும் தபிக்கப்பெற்று பூமி ஸூக்ஷ்மரூபமான கந்ததன் மாத்திரை யாக ஆகிறதென்று தாத்பர்யம்) அந்தகந்தம் ஜலத்திலும் அந்த ஜலம் தன்னுடைய குணமாகிய ரஸத்திலும் அந்த ரஸம் ஜ்யோதி ஸ்ஸிலும், ஜ்யோதிஸ் தன்னுடைய குணமான ரூபத்திலும் அந்த ரூபம் வாயுவிடத்திலும், அந்த வாயு ஸ்பர்சத்திலும், அந்த ஸ்பர் சம் ஆகாயத்திலும் அந்த ஆகாயம் சப்தத்திலும் லயிக்கிறது. (தாமஸாஹங்காரத்தின் கார்யத்திற்கு சப்தம்வரையில் லயத்தை நிரூபித்து ராஜஸாஹங்கார கார்யங்களின் லயத்தை நிரூபிக்கிறார்) இந்திரியங்கள் தங்கள் தங்கள் அதிஷ்டான தேவதைகளில் லயிக் கின்றன. (ராஜஸாஹங்காரத்தில் இந்திரியங்கள் லயிக்கின்றன வென்றே தாத்பர்யம்) அந்த தேவதைகள் அவைகளுக்கு நியந்தா வாகிய வைகாரிகமனத்தில் லயிக்கின்றன. (மனமும் தேவதை களுடன் வைகாரிகாஹங்காரத்தில் லயிக்கிறதென்று கருத்து) தாமஸாஹங்கார கார்யமான சப்தம் தாமஸாஹங்காரத்தில் லயிக் கிறது. ஸகல ஜகத்தையும் மோஹிக்கச்செய்யும் மூவ்வகையான அஹங்காரமும் மஹத்தத்வத்தில் லயிக்கிறது (ஜடாம்சத்தைவிட்டு ஜ்ஞான சக்தி கிரியாசக்தி இவைகளுள்ளதாக மாத்திரமாகிறது) ஜ்ஞானக்கிரியா சக்தியுள்ளதானதால் மிக்கக் குணமுள்ள அந்த மஹத்தத்வம் தனக்குக் காரணங்களான குணங்களில் லயிக்கிறது. அந்தக்குணங்கள் ப்ரகிருதியில் லயிக்கின்றன. அந்த ப்ரகிருதி வ்யாபாரமற்ற காலத்தில் லயிக்கிறது. அந்தக்காலம் மாயயை ப்ர வர்த்திக்கச் செய்பவரான மஹாபுருஷனிடத்தில் லயிக்கிறது. (ஜக த்தைப்படைப்பவரான மஹாபுருஷனுக்கு காலம் உபகரணமாக விருப்பதால் ஸிருஷ்டிக்கக்கூடியதாகவு மிருக்கிறது. அதனால்தான் அவருடைய ஸ்வரூபமாகவிருக்கிறது. இந்த விஷயம் 7-வது ஸ்கந்தத்திலும், 10-வது ஸ்கந்தத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது) அந்த மஹாபுருஷனாகிய ஜீவன் ஆத்மாவிடத்தில் லயிக்கிறான். (ப்ரகிருதியின் ஸம்பந்தமற்று தம்முடைய ஸ்வரூபமாக விருக் கிறாரென்று கருத்து) அந்த ஆத்மா தம்மிடத்திலேயே இருக் கிறார் (ஒன்றிலும் லயிப்பதில்லை யென்று கருத்து) அந்த ஆத்மா ஜகத்தின் ஸிருஷ்டி, ப்ரளயம் இவைகளுக்கு அதிஷ்டான

மாக விருக்கிறார். இம்மாதிரியான உண்மையைத் தெரிந்துகொண்டவனுக்கு பேதஜ்ஞானத்தா லுண்டாகும் ப்ரமமுண்டாகுமா? அப்படி யுண்டானாலும் ஹ்ருதயத்தில் ஸ்திரமாகவிருக்குமா? ஸூர்யன் உதயமானபின்னும் இருளிருக்குமா? காரணம்; கார்யம் இவைகளை அறிந்தவனாகிய என்னால் உமக்குஸாங்கியயோகஞ்சொல்லப்பட்டது. இது ஹ்ருதயத்திலிருக்கும் அஹங்காரத்தை நிவர்த்திக்கக்கூடியது, இதை ப்ரதிலோமமாகவும், அநுலோமமாகவும் சொன்னேன்'' என்றார்.

---

## அத்யாயம்—25.

### ஸத்வம் முதலிய குணங்களின் விருத்திகள்.

(ப்ரக்ருதி, புருஷன் இவர்களுடைய ஸ்வரூபத்தை நன்றாகத் தெரிந்துகொண்டவனானாலும் முக்குணங்களின் விருத்திகளை ஜயிக்காவிடில் ஸுகதுக்கங்களுடைய ஸம்பந்தமிருக்கும். ஆனதால் அவைகளை ஜயிக்குமுபாயத்தை நிரூபிப்பதற்காக முக்குணங்களின் விருத்திகளை நிரூபிக்கிறார்) ஓ புருஷர்களுக்குட் சிறந்தவராகிய உத்தவ! ஒன்றோடொன்று சேராமல் தனித்திருக்கும் குணங்களில் எந்த குணத்தின் ஸம்பந்தத்தால் புருஷன் எப்படி இருப்பானென்பதைச் சொல்லுகிறேன். தெரிந்துகொள்ளும். வெளியிலிருக்கும் இந்திரியங்கள், மனம் இவைகளை ஜயிப்பது, பொருமை, விவேகம், தனக்குரியதர்மத்தையநுஷ்டிப்பது, உண்மை பேசுவது, தயை, முன்பின் ஆலோசிப்பது, கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷிப்பது, செலவழிப்பதில் நோக்கம், வைராக்யம், ஆஸ்திகபுத்தி, கெட்ட கார்யத்தைச்செய்வதில் வெட்கம், கொடுப்பது, வணக்கம், ஆத்மாவிடத்திலேயே ப்ரீதி இவைகள் ஸத்வகுணத்தின் வ்யாபாரங்கள். ஆசை, அதற்காகச் செய்யப்படும் வ்யாபாரம், மதம், ஆசைப்பட்ட வஸ்து கிடைத்தும் ஸந்தோஷப்படாமலிருப்பது, கர்வம், காமனையால் தேவதைகளை ப்ரார்த்திப்பது, பேதபுத்தி, விஷயபோகத்தில் ஆசை, மதத்தால் சண்டைசெய்வதில் ஆசைப்படுவது, ஸ்தோத்திரத்தில் ப்ரியமுள்ளவனாகவிருப்பது, பரிஹஸிப்பது, தன்னுடைய மஹிமையைச் சொல்லிக்கொள்வது, பலத்தால் கார்யத்தைச்செய்ய முயற்சிப்பது,

ஆகிய இவைகள் ரஜோகுணத்தின் விருத்திகள். கோபம், சிலவு செய்வதில் நோக்கமில்லாமலிருப்பதாகியலோபம், பொய்பேசுவது, (ப்ரமாணம் சாஸ்திரீயமன்று என்று சொல்வது) பிறருக்கு த்ரோஹஞ்செய்வது, பிறரை யாசிப்பது, தர்மிஷ்டன்போல அபினயஞ்செய்வதாகிய டம்பம், சண்டை, ஸ்ரமம், சோகம், மோஹம், துக்கம், தைன்யம், தூக்கம், இது எனக்குக் கிடைக்குமென்ற ஆசை, பயம், ஜடத்தன்மை ஆகிய இவைகள் தமோகுணத்தின் விருத்திகள். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களுடைய விருத்திகளை தனியே மேற்காட்டியவண்ணம் பெரும்பாலும் வர்ணித்தேன். அவைகளின் சேர்க்கையாலுண்டாகின்றவைகளைச் சொல்லுகிறேன் கேளும். மனம், தன் மாத்திரைகள், இந்திரியங்கள், ப்ராணன் இவைகள் சேர்ந்து 'நான் என்னுடையது' என்ற அஹங்காரமுண்டாகிறது. அம்மாதிரியான புத்தி முக்குணங்களுடைய சேர்க்கையாலுண்டாகிறது (மனம் முதலியவை ஸாத்விகராஜஸதாமஸங்களானதால் அவைகளுடைய சேர்க்கையாலுண்டாகிறதென்று கருத்து. நான் சாந்தன், எனக்கு சாந்தியிருக்கிறது. நான் காமமுள்ளவன் எனக்குக் காமமிருக்கிறது, நான் கோபமுள்ளவன். எனக்குக் கோபமிருக்கிறதென்று நினைப்பதால் முக்குணங்களுடைய சேர்க்கையா லுண்டாகிறதென்று தாத்பர்யம்) மேலும் தர்மம், அர்த்தம், காமம் இவைகளில் எப்பொழுது நோக்கமுள்ளவனாக விருக்கிறானோ, அப்பொழுது முக்குணங்களுடைய சேர்க்கையே அதற்குக் காரணமாகிறது. இன்னும் ஸத்வகுணத்தால் ச்ரத்தையும், ரஜோகுணத்தால் ஆசையும், தமஸ்ஸால் தனமும் கிடைக்கிறது. பின்னும் புருஷன் ப்ரவிருத்தி தர்மத்தில் ஆசைப்படுவதும், க்ருஹஸ்தாச்ரமத்தை அடைவதும், அதிலும் ஆச்ரமதர்மங்களை அநுஷ்டிப்பதும், குணங்களுடைய சேர்க்கையாலுண்டாகும் விருத்திகளேயாம். மேற்காட்டிய ஸத்வகுணத்தின் விருத்திகள் எவனிடத்தில் காணப்படுகின்றனவோ, அவனை ஸத்வகுணமுள்ளவனென்றும், காமம் முதலியவைகளுள்ளவனை ரஜோகுணமுள்ளவனென்றும், கோபம் முதலியவையுள்ளவன் தமோகுணமுள்ளவனென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

10—12. புருஷர்களானாலும் ஸ்திரீகளானாலும் பயனையுத்தேசியாமல் தனக்குரிய கர்மங்களைச் செய்து என்னைப்

பூஜிப்பவர்கள் ஸத்வகுண முள்ளவர்களென்று தெரிந்துகொள்ளும். எவர்கள் "இது எனக்கு ஈச்வரனுடைய அநுக்ரஹத்தாலுண்டாகட்டும்" என்று தங்களுங்குரிய கர்மங்களை யநுஷ்டித்து என்னையு பாவிக்கிறார்களோ, அவர்கள் ரஜோகுண முள்ளவர்கள். எவர்கள் சத்ருக்களைக்கொல்வது முதலியவைகளை யுத்தேசித்து என்னைப் பூஜிக்கிறார்களோ, அவர்கள் தமோகுண முள்ளவர்கள். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் ஜீவனுக்கே யொழிய எனக்கு அவைகளுடைய ஸம்பந்தமேயில்லை. ஏனென்றால் அவைகள் ஜீவனுடைய உபாதியான சித்தத்தில் ப்ரகாசிக்கின்றன. அவைகளால் தேஹம் முதலியவைகளில் ஸம்பந்தப்பட்டு ஜீவன் கட்டுப்படுகிறான். (நான் ஒன்றிலும் ஸம்பந்தப்படாமல் அந்தக் குணங்களுக்கு நியந்தாவாக ஸிருஷ்டி முதலியவைகளைச் செய்தாலும் நித்யமுக்தனாகி யிருக்கிறேன், ஆனதால் எனக்கும் ஜீவனுக்கும் மிக்கபேத மிருக்கிறதென்று தாத்பர்யம்) இதரபதார்த்தத்தை ப்ரகாசிக்கச் செய்வதும், நிர்மலமும், சாந்தமுமான ஸத்வகுணம் எப்பொழுது ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் ஜயிக்குமோ அப்பொழுது முறையே ஸுகம் தர்மம், ஜ்ஞானம் முதலியவை புருஷனுக்குண்டாகிறது (சமம் தமம் முதலியவைகளும் கிடைக்குமென்று கருத்து) ஆசையையுண்டுபண்ணுகிறதும், பேதபுத்தியைக் கொடுப்பதும், ப்ரவிருத்தி ஸ்வபாவமுள்ளதுமான ரஜோகுணம் தமோகுணத்தையும், ஸத்வகுணத்தையும் எப்பொழுது ஜயிக்குமோ, அப்பொழுது துக்கம், கர்மம், கீர்த்தி ஸம்பத்து ஆகிய இவைகளை அடைவான் (ரஜோகுணம் ஆசைக்குக் காரணமாயிருப்பதால் அதுமேலாக விருக்கும் பொழுது கீர்த்தி, ஸம்பத்து ஆகிய இவைகளில் ஆசைப்படுகிறான் பேதபுத்திக்குக் காரணமாக விருப்பதால் துக்கத்தை அடைகிறான் "இரண்டு என்ற எண்ணத்தால் பயம் நேரும்"—ச்ருதி. ப்ரவிருத்தி ஸ்வபாவமுள்ளதானதால் கர்மத்தை விரும்புகிறான்). விவேகத்தை மாத்தக்கூடியதும், ஸ்வரூபத்தை மறைக்கக்கூடியதும் சோம்பலையுண்டு பண்ணக்கூடியதுமான தமோகுணமானது ரஜோகுணத்தையும் ஸத்வகுணத்தையும் ஜயித்து எப்பொழுதுதான் மேலாகவிருக்குமோ அப்பொழுது சோகம், மோஹம், தூக்கம், ஹிம்ஸை, ஆசை இவைகளையடைகிறான். மனஸ்ஸானது விஷயங்களால் கலங்காமல் எப்பொழுது தெளிந்திருக்குமோ, இந்திரியங்கள் அதன் கார்

யங்களைச் செய்யாமல் எப்பொழுது சும்மாகவிருக்குமோ, வியாதிமுதலிய பயமில்லாமலிருப்பதும் மனத்தினிடத்தில் ஆசையில்லாமலிருப்பதும் எப்பொழுது ஏற்படுமோ அப்பொழுது ஸத்வகுணம் விருத்தியாயிருக்கிறதென்று தெரிந்துகொள்ளும். அப்படிப்பட்டமனமே என்னைத் தெரிந்துகொள்ளுகிறதற்குக்காரணமாகும். எப்பொழுது மனமானது பலவிஷயங்களில் சென்று கலங்குகிறதோ, புத்தி, இந்திரியங்கள் ஆகிய இவைகளும் விஷயங்களில் செல்லுகின்றனவோ, கர்மேந்திரியங்களுக்கு ஸ்வாதீனப்படவில்லையோ, மனமும் அலைந்து கொண்டிருக்கிறதோ அப்பொழுது ரஜோகுணம் விருத்தியடைந்திருக்கிறதென்று தெரிந்துகொள். எப்பொழுது சித்தமானது ஸ்வரூபமாக ஆகாமல் மறையுமோ மனமும் லயிக்குமோ, அஜ்ஞானம், துக்கம் இவைகள் விருத்தியடையுமோ, அப்பொழுது தமோகுணம் அதிகமாகவிருக்கிறதென்று தெரிந்துகொள். ஸத்வகுணம் விருத்தியானால் தேவர்களுக்கு பலமுண்டாகிறது. ரஜோகுணம் விருத்தியானால் அஸுரர்களுக்கு பலம் விருத்தியாகிறது. தமோகுணம் விருத்தியானால் ராக்ஷஸர்களுக்கு பலம் உண்டாகிறது. (நிவர்த்திஸ்வபாவமுள்ள இந்திரியங்களைத் தேவர்களென்றும் ப்ரவர்த்தி ஸ்வபாவமுள்ள இந்திரியங்களை அஸுரர்களென்றும் மோஹஸ்வபாவமுள்ள இந்திரியங்களை ராக்ஷஸர்களென்றும் இவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.) ஸத்வகுணத்தால் ஜாக்ரதவஸ்தையும் ரஜோகுணத்தால் ஸ்வப்னமும், தமோகுணத்தால் தூக்கமும் உண்டாகிறது. இந்தமூன்று அவஸ்தைகளிலும் தொடர்ந்திருக்கும் ஆத்மாவாகவிருப்பதே துரீயாவஸ்தை யெனப்படுகிறது. ப்ரஹ்மலோகம்வரையிலுள்ள ஜனங்கள் ஸத்வகுணத்தால் உத்தமலோகத்தையடைகிறார்கள். ஸ்தாவரம் முதலியவைகள் தமோகுணத்தால் தாழ்ந்த ஜன்மத்தையடைகின்றன. ரஜோகுணத்தால் மனிதஜன்மம் உண்டாகிறது. ஜீவன் சரீரத்தைவிட்டுவெளியில் செல்லும்பொழுது ஸத்வகுணம் மேலாகவிருந்தால் அவர்கள் ஸ்வர்க்கலோகத்தை யடைவார்கள் மரணகாலத்தில் ரஜோகுணம் அதிகமாகவிருந்தால் பூலோகத்தை (மனுஷ்யஜன்மத்தை) அடைவார்கள், தமோகுணம் அதிகமாகவிருந்தால் நரகத்தை (ஸ்தாவரம முதலிய ஜன்மத்தை) அடைவார்கள். ஒரு குணமும் விருத்தி யடையாமல் நிர்க்குணமாக விருப்பவர்கள் என்னை யடைவார்கள், (உயிரோடிருந்தாலும்) என்னை யடையு

வேண்டுமென்ற எண்ணத்தால் செய்யப்படும் கர்மமும், அல்லது பயனை யுத்தேசியாமல் அனுஷ்டிக்கும் கர்மமும் ஸாத்விகமாகும். பயனை யுத்தேசித்துச்செய்யும் கர்மம் ராஜஸமாகும். பிறருடைய ஹிம்ஸையை யுத்தேசித்து செய்யப்படும் கர்மம் தாமஸமாகும். (டம்பம், மாத்ஸர்யம், கோபம் இவைகளால் செய்யப்படும் கர்மமும் தாமஸமெனப்படும்.) ஆத்மா சரீரம் முதலியவைகளைக் காட்டிலும் விலக்ஷணன் என்று தெரிந்துகொள்வது ஸாத்விக ஜ்ஞானமாகும். சரீரம் முதலியவைகளுடைய உண்மையைத் தெரிந்துகொள்வது ராஜஸமெனப்படும். ப்ரகிருதிக்கு வசப்பட்டு ஜடனாக விருப்பது தாமஸமெனப்படும். என்னையே த்யானித்துக்கொண்டிருப்பது நிற்குண ஜ்ஞானமெனப்படும். (மேற்காட்டியபடி ஜ்ஞானம் நாலுவகை) வனத்தில் வஸிப்பது ஸாத்விகமான வாஸம். கிராமத்தில் வஸிப்பது ராஜஸவாஸம். சொக்கட்டான் விளையாடுமிடத்தில் வஸிப்பது தாமஸவாஸம். என்னிடத்திலேயே வஸிப்பது நிற்குணவாஸம். விஷயங்களில் பற்றுதலில்லாமல் செய்பவன் ஸாத்விகன். அபினிவேசத்துடன் செய்பவன் ராஜஸன், இதனால் இன்னது கிடைக்குமென்பதை யறியாமல் செய்பவன் தாமஸன். என்னையே ஆச்ரயித்து அஹங்காரமற்றிருப்பவன் நிற்குணன். ஆத்மாவைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ச்ரத்தை, ஸாத்விகம், கர்மத்திலுள்ள ச்ரத்தை ராஜஸம்; அதர்மத்தில் ச்ரத்தையிருந்தால் அது தாமஸம், என்னை ஸேவிப்பதில் ஏற்படும் ச்ரத்தை நிற்குணம். ஹிதத்தைக் கொடுக்கக்கூடியதும் எளிதில் கிடைத்ததுமான ஆஹாரம் ஸாத்விகமாகும். இந்திரியங்களுக்கு ப்ரியமான ஆஹாரம் ராஜஸமெனப்படும். உபத்திரவத்தைக் கொடுக்கக்கூடியதும் அசுத்தமும் எனக்கு நிவேதனம் செய்யப்படாததுமான ஆஹாரம் தாமஸமாகும் ஆத்மவிஷயமான ஸுகம் ராஜஸம். மோஹத்தாலும், தைன்யத்தாலும் உண்டாகும் ஸுகம் தாமஸமெனப்படுகிறது. மஹாவாக்யத்தின் அர்த்தத்தை யறிந்து என்னை தெரிந்துகொள்வதாலுண்டான ஸுகம் நிற்குணமெனப்படும். ஆனதால் த்ரவ்யம், தேசம், பலம், (ஸுகம்) காலம், ஜ்ஞானம், கர்மம், அவஸ்தை (ஸ்வப்னம் முதலியவை) செய்பவன், ச்ரத்தை, தேவசரீரம் முதலிய ஆகிருதி, மரணகாலத்திலுள்ளநிலைமை ஆகிய எல்லாம் முக்குணங்களின் ஸ்வரூபமாகவே யிருக்கின்றன. மேலும் பார்க்கப்பட்டது, கேழ்க்கப்பட்

டது, நினைக்கப்பட்டது, ஆகிய எல்லாம் முக்குணங்களேயாம். அவைகள் ப்ரகிருதிபுருஷர்களை ஆச்ரயித்திருக்கின்றன. ஆன தால் குணம், கர்மம் இவைகளால் ஸம்ஸாரம் ஏற்படு கிறது, சித்தத்தில் ப்ரகாசிக்கும் இந்த குணங்களை ஜயித்து எவன் பக்தியோகத்தை அனுஷ்டித்து என்னையே த்யானிக்கிறானோ, அவன் மோக்ஷத்தை யடைவதற்குத் தகுதி ஆகிறான். இந்த மனு ஷ்ய சரீரம் ஜ்ஞானம், விஜ்ஞானம் இவைகளைக் கொடுக்கக்கூடிய தாகவிருப்பதால் அந்த சரீரத்தையடைந்த விவேகி குணங்களி லாசைப்படாமல் என்னை உபாஸிக்கவேண்டும், எப்படியெனில் விஷயங்களில் ஆசைப்படாமல் இந்திரியங்களை ஜயித்து ஸாத்விக மானவைகளையே உபயோகித்துவந்தால் ஸத்வகுணம் விருத்தியா கும், ரஜஸ், தமஸ், இரண்டும் ஜயிக்கப்படும். பின்பு சாந்தமான புத் தியால் ஒன்றையும் அபேக்ஷியாமல் ஸத்வகுணத்தையும் ஜயிக்க வேண்டும். இப்படி குணங்களைவிட்ட ஜீவன் லிங்கசரீரத்தைவிட்டு என்னையடைவான். இப்படி ஜீவன் லிங்கசரீரம், சித்தத்தில் ப்ரகா சிக்கும் குணங்கள் இவைகளைவிட்டு ப்ரஹ்மமாகிய என்னை யடை ந்து வெளியிலிருக்கும் விஷயஸுகத்தையாவது அவைகளை நினை ப்பதாலுண்டாகிய அந்தக்கரணஸுகத்தையாவது நினைக்கமாட் டான் (திரும்பவும் ஸம்ஸாரத்தை யடையமாட்டானென்று கரு த்து)

---

## அத்யாயம்—26.

### யோகநிஷ்டை.

என்னுடைய ஸ்வரூப ஜ்ஞானத்திற்குக் காரணமான இந்த மனுஷ்ய சரீரத்தை அடைந்து பக்தியோகத்தைச்செய்துகொண்டு இருப்பவன் தன்னிடத்திலேயே நியந்தாகவிருப்பவனும்; ஆனந்த ஸ்வரூபியும் பரமாத்மாவுமாகிய என்னையடைவான் மேலுமவன் ஜ்ஞானாப்யாஸஞ்செய்து ஜீவனுக்கு உபாதியான ப்ரகிருதியால் விடப்பட்டு மாயாமயங்களான குணங்களை அவஸ்துவாக நினைத்த வனானதால் அவைகளில் ஸம்பந்தப்படமாட்டான். ஆனாலும் சிச் னம், உதிரம் இவைகளைத் திருப்திசெய்து வைப்பதிலேயே நோக்க முள்ள அஸத்துக்களுடன் ஒருபொழுதும் சேரக்கூடாது. அப்

படி சேர்வானுகில் குருடனுல் வழிகாட்டப்பட்டு அவன் பின்செ ன்ற குருடன்போல் நரகத்தையடைவான். சக்கிரவர்த்தியும் மிகு ந்த கீர்த்தியுள்ளவனுமான புரூரவஸ் அரசன் ஊர்வசியைவிட்டுப் பிரிந்து துக்கித்து பின்ஞெருகால் குருக்ஷேத்திரத்தில் அவளைக் கண்டு கந்தர்வனுல் கொடுக்கப்பட்ட அக்னியால் ஊர்வசி லோகஞ் சென்று அவளையடைந்து ஸந்தோஷத்தை யடைந்தார். அப்பொ ழுது அவருக்கு வைராக்கிய முண்டாயிற்று. அப்பொழுது இம் மாதிரி சொன்னுர், ஊர்வசியைவிட்டுப் பிரிந்தகாலத்தில் அந்த அரசன் எப்படியிருந்தானென்ருல்:— படுக்கையில் தன்னைவிட்டு ஊர்வசி செல்லும்பொழுது அரசன் பயித்தியங்கொண்டவன்போல் வஸ்திரமில்லாமல் "ஊர்வசி! உன்னை நமஸ்கரிக்கிறேன உன்னைவிட் டுப் பிரிவதனுல் மிகுந்த துக்கத்தையடைகிறேன், உன்னிடத்தி லுள்ள ஆசையால் மழைகாலத்திய ராத்திரிகள் போவதையும் வரு வதையும் நான் அறியவில்லை. விஷயபோகங்களை அனுபவித்தும் போதுமென்ற திருப்தியுண்டாகவில்லை" என்று சொல்லிககொண்டு அவளைப் பின்தொடர்ந்தார். அப்படிப்பட்ட வரசன் வைராக்கியம் வந்தபிறகு பின்வருமாறு சொல்லலானுர் எப்படியெனில் காமத் தால் கலங்கிய மனமுள்ள எனக்கு மிகுநத மோஹமுண்டாயிற்று. ஊர்வசியால் ஆலிங்கனம் செய்துகொள்ளப்பட்டு சென்றகாலம் தெ ரியாமலேயே ஆயுஸ்ஸைக்கழித்தேன். ஸூர்யன் உதயமானதும், ஸூர்யன் அஸ்தமயத்தையடைந்ததையும் அறியாமல் அநேகவர் ஷங்கள் கழிக்கப்பட்டன. என்னுடைய மோஹம் ஆச்சர்யப்படக் கூடியது; அந்தமோஹத்தால் என்னுடைய ஆத்மாவை நான் சக்கிர வர்த்தியானுலும் விளையாட்டு மிருகம்போல் ஸ்திரீக்கு ஸ்வாதீனப் படுத்தினேன். மேலும் ராஜ்ஜியம், ஸைன்னியம் இவைகளுடன் சக் கிரவர்த்தியாயிருக்கும் என்னை மறந்து பயித்தியங்கொண்டவன் போல் வஸ்திரமில்லாமல் அழுதுகொண்டு அவள் பின்சென்றேன். என்னுடைய தேஜஸ், மஹிமை முதலியவைகள் வீணுயின. பின்கா லால் உதைக்கப்படும் ஆண்கழுதை பெண்கழுதையைத் தொடர் வதுபோல் என்னைவிட்டுப் போகும் ஊர்வசியின் பின்சென்றேன். எவர்களுடைய மனம் ஸ்திரீகளால் அபஹரிக்கப்படுகிறதோ, அவன் வித்வானுகவிருந்து என்னபயன்? தபஸ்வியாக விருந்தும், என்னப்பயோஜனம்? ஸன்னியாஸியானுலும், ஏகாந்தமான ஸ்தலத்திலிருப்பதாலும் மௌனத்தாலும் என்னபிரயோஜ

னம்? பின்னும் எருதுபோலவும் கழுதைபோலவும் ஸ்திரீகளால் ஜயிக்கப்பட்டு மூடனாகித் தன்னைப் பண்டிதனென்று நினைத்துத் தனக்கு அனுகூலம் இன்னதென்று தெரிந்துகொள்ளாமலிருந்த என்னை நிந்திக்கவேண்டும். அநேக வர்ஷகாலம் ஊர்வசியின் அதரபானஞ்செய்தும் எனக்குப் போதுமென்ற திருப்தி யுண்டாகவில்லை, அக்னியில் நெய்யை ஆஹுதிசெய்தால் அதனால் அக்னி ஜ்வலிக்குமேயொழிய அணையுமா? வ்யபிசாரிணியான ஊர்வசியால் அபஹரிக்கப்பெற்ற என்னுடைய சித்தத்தை திருப்புவதற்கு ஆத்மாராமராகிய பகவானைத்தவிர வேறு யாரால் முடியும், அந்த ஊர்வசி எனக்கு நல்ல புத்தியை யுபதேசித்தாள். அப்படியும் எனக்கு மோஹம் நிவர்த்தியடையவில்லை. ஆனதால் இந்த விஷயத்தில் அவள் எனக்கு அபகாரம் செய்தவளல்ல, இந்திரியங்களை ஜயிக்காதவனாகிய நானே எனக்கு அபகாரம் செய்துகொண்டேன். கயிற்றைக்கண்ட ஒரு புருஷன் அதனுடைய ஸ்வரூபத்தை யறியாமல் அதனை ஸர்ப்பமென்று நினைத்து அதனைக் கண்டு பயந்தால் கயிற்றின்மீது தோஷமுண்டா? இந்த சரீரமானது அசுத்த பதார்த்தங்களால் பூர்ணமானது; நாற்றமுள்ளது; அப்படிப்பட்டதை வாஸனையுள்ளதென்றும், சுத்தமென்றும் நினைத்ததும் அவித்யையாலல்லவா? மேலும் சரீரம் யாருக்குச் சொந்தமென்று விசாரிப்போமாகில் ஒருவருக்கும் சொந்தமென்று சொல்லமுடியாது. இதனை யுண்டுபண்ணின தாய் தந்தைகளுக்கும் சொந்தமா? களத்திரத்திற்குச் சொந்தமா? யஜமானனுக்குச் சொந்தமா? அல்லது அக்னிக்குச் சொந்தமா? நாய், கழுதை இவைகளுக்குச் சொந்தமானதா? அல்லது மித்திரர்களுக்குச் சொந்தமானதா? இப்படி ஒருவருடையது என்று சொல்லமுடியாததும் கடைசியில் மிக்க தாழ்ந்த அவஸ்தையுள்ளதும் அசுத்தமானதுமான இந்த சரீரத்தில் எவன் ஆசைப்படுவான்? இந்தப் பெண்ணினுடைய முகம் மிக்க அழகுள்ளது. நல்ல மூக்குள்ளது. சிரிப்புள்ளது. என்று சொல்லி தோல், மாம்ஸம், ரத்தம், நரம்பு, மேதஸ், எலும்பு இவைகளுடைய கூட்டத்தைக்கண்டு ஸந்தோஷப்படும் மனிதர்களுக்கும் அமேத்யம் மூத்திரம் இவைகளில் ரமிக்கும் புழுக்களுக்கும் என்ன வித்தியாஸம்? ஆனதால் விவேகியாகவிருப்பவன் ஸ்திரீகளிடத்திலும் அவர்களிடத்தில் ஆசைப்பட்டவர்களிடத்திலும் ஸங்கஞ் செய்யக்கூடாது, விஷயம்

இந்திரியம் இவைகளின் சேர்க்கையால் மனங்கலங்குகிறது. இந்திரியங்களுக்கு விஷயங்களின் ஸம்பந்தம் ஏற்படாவிடில் மனங்கலங்குகிறதில்லை. முந்தி பார்க்கப்படாததும், கேட்கப்படாததுமான வஸ்துக்களில் ஆசை உண்டாகிறதில்லை, இந்திரியங்களை அடக்கினால் மனமும் அடங்கிவிடும், வித்வான்களானாலும் காமம் முதலிய ஆறு சத்துருக்களை ஜயிப்பது அறிது. என்னைப்போன்ற அவிவேகிகளால் ஜயிக்கமுடியுமா? ஆனதால் ஸ்திரீகளுடனும் அவர்களிடத்தில் ஆசைப்பட்டவர்களுடனும் ஸஹவாஸம் செய்யக்கூடாது, என்று அந்த புரூரவஸ் சொல்லிக்கொண்டு ஊர்வசியின் லோகத்தைவிட்டு தன்னிடத்தில் நான் இருப்பதாகத் தெரிந்துகொண்டு ஜ்ஞானத்தால் மோஹத்தை நிவர்த்தித்து சாந்தியை யடைந்தார்.

26—35. ஆனதால் புத்தியுள்ளவன் துஷ்டர்களுடன் சேராமல் ஸாதுக்களுடன் சேரவேண்டும். ஸாதுக்கள் நல்ல வார்த்தைகளால் மனக்கவலையை நிவர்த்திப்பார்கள். ஒன்றையும் அபேக்ஷிக்காதவர்களும் என்னிடத்திலேயே சித்தத்தைச் செலுத்தியவர்களும், மிகவும் சாந்தர்களும் எல்லாவற்றையும் ஸமமாகப் பார்ப்பவர்களும், என்னுடையது என்ற அஹங்காரமற்றவர்களும் ஸுகதுக்கமில்லாதவர்களுமான புருஷர்களே ஸாதுக்களெனப்படுவர்கள். அந்த ஸாதுக்கள் என்னுடைய கதையை எப்பொழுதும் கானஞ்செய்வார்களானதால் அவர்களை ஸேவிப்பவர்கள் பாபமற்று பரிசுத்தர்களாவார்கள். என்னுடைய கதைகளை எவர்கள் கேட்கிறார்களோ, எவர்கள் கானஞ் செய்கிறார்களோ, எவர்கள் ஆதரவுடன் அனுமோதிக்கிறார்களோ, அவர்களுக்கு ச்ரத்தையும் என்னிடத்தில் பக்தியும் உண்டாகும். அளவற்ற குணமுள்ளவனும் ஆனந்தஸ்வரூபியும், அநுபவஸ்வரூபியும், பரப்ரஹ்மமுமான என்னிடத்தில் பக்திசெய்யும் ஸாதுவிற்கு எதுதான் கிடைக்காது? அக்னி பகவானை ஆச்ரயித்தவனுக்கு குளிர் எப்படி நிவர்த்தியடையுமோ, அதுபோல ஸாதுக்களை ஸேவிப்பவனுக்கு ஸம்ஸாரபயம் நிவர்த்தியாகிறது. ஜலத்தில் மூழ்குகிறவனுக்குக் கெட்டியான கப்பல்போல ஸம்ஸார ஸமுத்திரத்தில் மூழ்கிக்கிளம்புகிற ஜனங்களுக்கு ப்ரஹ்மத்தையறிந்த ஸாதுக்கள் க்ஷேமத்தைச் செய்கிறார்கள். பிராணிகளுக்கு அன்னம் எப்படி ஜீவனைக் காப்பாற்றுகிறதோ, உபத்

திரவம் அடைந்தவர்களை நான் எப்படிக் காப்பாற்றுகிறேனே, மரணமடைந்தவர்களுக்கு தர்மம் எப்படி ஸுகத்தைக் கொடுக்கிறதோ, அதுபோல ஸம்ஸாரத்தில் பயந்தவர்களுக்கு ஸாதுக்கள் சரணமாயிருக்கிறார்கள். ஸூர்யன் உதயமானால் ஒருகண்ணை மாத்திரம் பிரகாசிக்கச் செய்கிறார்; ஸாதுக்கள் அநேககண்களைக் கொடுக்கிறார்கள். (ஸகுணஜ்ஞானம், நிற்குணஜ்ஞானம்) ஆனதால் ஸாதுக்களே தேவதைகள்; ஸாதுக்களே பந்துக்கள்; ஸாதுக்களே ஆத்மா; ஸாதுக்களே நான்; புரூரவஸ் என்னும் சக்கிரவர்த்தி இம்மாதிரி வைராக்கியத்தை அடைந்து ஊர்வசியின் லோகத்தில் ஆசையற்று ஆத்மாராமராக இந்த பூமியில் ஸஞ்சரித்தார்.

## அத்யாயம்—27.

### கிரியா யோகம்.

உத்தவர் கிருஷ்ணனைநோக்கி "ஓ ப்ரபுவே! எந்த பக்தர்கள் எதிலிருந்து எப்படி உம்மைப் பூஜிக்கிறார்கள்? உம்மை ஆராதிப்பதாகிய கிரியாயோகத்தைச்சொல்லும். நாரதர், பகவானாகிய வ்யாஸர், ஆசார்யரான பிருஹஸ்பதி ஆகிய இவர்கள் இந்த கிரியாயோகமே மனிதர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியதென்று அடிக்கடி சொல்லுகிறார்கள். தாமரைமலர்போன்ற உம்முடைய முகத்திலிருந்து தெரிந்துகொண்ட கிரியாயோகத்தை ப்ரஹ்மதேவர் தம்முடைய புத்திரர்களான ப்ரகு முதலியவர்களுக்கு எப்படிசொன்னாரோ, பகவானாகிய பரமசிவன் பார்வதிக்கு எப்படி சொன்னாரோ, அதனை அப்படி யெனக்குபதேசியும். இந்தக் கிரியாயோகம் எல்லா ஜாதிகளுக்கும், எல்லா ஆச்ரமங்களுக்கும், ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் மேலான க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியது. ஓ தாமரைக்கண்ண! இது கர்மபந்தத்தை நிவர்த்திக்கக்கூடியது. ஓ லோகபாலர்களுக்கு மதிமதியே! பக்தனும், ப்ரீதியுள்ளவனுமாகிய எனக்கு அதனை யுபதேசியும்" என்று கேட்டார்

6—33. அதனைக்கேட்டு ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவரைநோக்கி "ஓ உத்தவ! என்னுடைய பூஜாவிதியை நிரூபிக்கும் கர்மகாண்டத்திற்கு முடிவில்லை. ஆனதால் அதை சுருக்கமாகச் சொல்லுகிறேன்,

என்னுடைய பூஜாவிதி வைதிகம், தாந்திரிகம், மிச்ரம் என்று மூன்றுவகையானது மேற்காட்டியவைகளில் இஷ்டமான மார்க்கத்தால் என்னைப் பூஜிக்கலாம். தன்னுடைய ஜாதிக்கு வேதத்தில் சொல்லியபடி உபநயனஞ்செய்து த்விஜனுகிய புருஷன் ச்ரத்தையுடன் என்னை எப்படிப் பூஜிப்பானே, அதனைச்சொல்லுகிறேன், தெரிந்துகொள்ளும். ப்ரதிமை, பூமி, அக்னி, ஸூர்யன், ஜலம், ஹ்ருதயம், ப்ராஹ்மணன் ஆகிய இவைகளில் எதிலாவது தனக்குக் குருவாகிய என்னைக் கபடமற்று பக்தியுடன் பூஜாத்ரவ்யங்களைக்கொண்டு பூஜிக்கவேண்டும். பற்களை சுத்திசெய்துகொண்டு மந்திரங்களாலும், மண் முதலியவைகளாலும் ஸ்நானஞ்செய்து சுத்தனுகி வேதத்தால் விதிக்கப்பெற்ற ஸந்தியோபாஸ்தி முதலிய கர்மங்களைச் செய்து நல்ல எண்ணத்துடன் என்னுடைய பூஜையைச் செய்யவேண்டும். கல்லால் செய்யப்பட்டது, மரத்தால் செய்யப்பட்டது, லோஹத்தால் செய்யப்பட்டது, சந்தனம் முதலியவையாலெழுதப்பட்டது, சித்திரத்திலெழுதப்பட்டது, மண்ணினுல் செய்யப்பட்டது, மனத்தால் த்யானிக்கப்பட்டது, ரத்தினத்தால் செய்யப்பட்டது, என்று ப்ரதிமை எட்டுவகை. பின்னும் சலம் அசலமென்று இருவகை (சலம் அசைவது, அசலம்—அசையாதது) ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ப்ரதிமை பகவானுடைய ஸான்னித்யமுள்ளது, ஸ்திரமான ப்ரதிமையில் ஆவாஹனம் உத்வாஸனம் இரண்டுஞ் செய்யவேண்டியதில்லை. ஸ்திரமில்லாத ப்ரதிமைகளில் சிலவற்றில் அவைகளைச் செய்யவேண்டும், சிலவற்றில் செய்யவேண்டாம் (மண்ப்ரதிமையில் ஆவாஹனம் உத்வாஸனஞ் செய்யவேண்டும், ஸாளக்கிராமத்தில் அவைகளைச் செய்யவேணடாமென்று கருத்து) பூமியில் அவ்விரண்டையும் செய்யவேண்டும். எழுதின ப்ரதிமை தவிர மற்றவைகளுக்கு ஸ்நானஞ்செய்விக்கலாம். எழுதின ப்ரதிமைகளுக்கு புரோக்ஷணமே ஸ்நானமாகும். ஸாமான்ய ஜனங்கள் பூஜாத்ரவ்யங்களை ஸம்பாதித்து வைத்துக்கொண்டு பூஜிக்கவேண்டும். பக்தன் கிடைத்ததைக்கொண்டு பூஜிக்கலாம். என்னை ஹ்ருதயத்தில் பூஜிப்பவன் மனேமயமான த்ரவ்யங்களால் பூஜிக்கலாம். ப்ரதிமையை பூஜிக்கும்பொழுது அதற்கு ஸ்நானம் அலங்காரம் இவைகளைச் செய்யவேண்டும். பூமியில் யந்திரத்தைப்போட்டு மந்திரங்களால் தேவதைகளை ஸ்தாபிக்கவேண்டும். அக்னியில் பூஜிப்பதானுல் நெய்யால் நனைக்கப்பட்ட ஹவிஸ்ஸை

ஹோமஞ்செய்யவேண்டும். ஸூர்யனிடத்தில் பூஜிப்பதானுல் நமஸ்காரம் அர்க்யம் முதலியவைகளால் பூஜிப்பது மேலானது. ஜலத்தில் பூஜிப்பதானுல் தர்ப்பணம் முதலியவையால் பூஜிக்கலாம். என்னுடைய பக்தனுல் ச்ரத்தையுடன் ஸமர்பிக்கப்படுவது ஜலமானுலும், அது மேலானதே. சந்தனம், தூபம், தீபம், புஷ்பம், அன்னம் முதலியவை ஸமர்பிக்கப்பெற்ருல் அதுமேலென்பதில் என்ன ஆக்ஷேபம்? பூஜைக்குபயோகமான ஸாமக்ரிகளை ஸம்பாதித்து வைத்துக்கொண்டு சுத்தனுகி பகவானை நமஸ்கரித்து கிழக்கு நுனியாக போடப்பட்ட தர்ப்பத்தின்மீது கிழக்கு முகமாக வாவது தெற்கு முகமாகவாவது உட்கார்ந்து பூஜிக்கவேண்டும். ஸ்திரமான ப்ரதிமையானுல் அதற்கு எதிர்முகமாக உட்கார்ந்து பூஜிக்கலாம். பின்பு தான் அங்கந்யாஸம், கரந்யாஸம் இவைகளைச் செய்துகொண்டு மூலமந்திர ந்யாஸஞ்செய்யப்பட்ட என்னுடைய ப்ரதிமையை கையால்தொட்டு நிர்மால்யம் முதலியவைகளை யெடுத்து சோதிக்கவேண்டும். பின்பு பூர்ணகும்பம் புரோக்ஷணபாத்திரம் இவைகளை சந்தனம், புஷ்பம், அக்ஷதம் முதலியவைகளால் அலங்கரித்து விதிப்படி ஸ்தாபிக்கவேண்டும். அந்த தீர்த்தத்தால் பூஜாமண்டபத்தையும், பூஜாத்ரவ்யங்களையும் தன்னையும் புரோக்ஷித்துக்கொள்ளவேண்டும். பாத்யம், அர்க்யம், ஆசமனீயம் இவைகளுக்காக மூன்று பாத்திரங்கள்வைத்து அவைகளில் அந்த தீர்த்தத்தைசேர்த்து அதற்குரிய த்ரவ்யங்களை அவைகளில்போட வேண்டும் (ச்யாமை, அருகு, தாமரைமலர், விஷ்ணுகிராந்தம் இவைகளை பாத்யபாத்திரத்தில் சேர்க்கவேண்டும். சந்தனம், புஷ்பம், அக்ஷதம், யவம், தர்ப்பத்தின் நுனி, எள்ளு, வெள்ளைக்கடுகு அருகு இவைகளை அர்க்கிய பாத்திரத்தில் சேர்க்கவேண்டும். ஜாதி, லவங்கம், தக்கோலம் இவைகளை ஆச்மனீய பாத்திரத்தில் சேர்க்கவேண்டும்) அந்த மூன்று பாத்திரங்களையும், ஹ்ருதயமந்திரம், சிரோமந்திரம், சிகாமந்திரம், காயத்ரி இவைகளால் அபிமந்திரிக்கவேண்டும். பின்பு சரீரத்தை வாயு, அக்னி இவைகளால் சுத்திசெய்து ஹ்ருதய புண்டரீகத்திலுள்ள அணுவான என்னுடைய கலையை த்யானிக்கவேண்டும். அந்தக்கலை நாதத்தின் முடிவில் ஸித்தர்களால் த்யானஞ்செய்யப்பெற்றது (அகாரம், உகாரம், மகாரம், பிந்து, நாதம் என்று ப்ரணவத்திற்கு ஐந்து அம்சங்கள். எந்த ஸ்வரமானது வேதத்தின் ஆதியிலும் அந்தத்திலு

மிருக்கிறதோ, ப்ரகிருதி ஸம்பந்தமுள்ள அதனைக்காட்டிலும் எவர் மேலானவரோ, அவர் பரமேச்வரன்—ச்ருதி.) அதனை த்யானித்து அதனால் சரீரம்முழுதும் வ்யாபித்தபின் (தீபத்தின் காந்தியால் வீடுப்ரகாசிப்பதுபோல் ஜீவகலைசரீரத்தில் ப்ரகாசித்தபின்) அதனை மானஸிகமான உபசாரத்தால் பூஜித்துத்தன்மயனாகி ப்ரதிமையை ஆவாஹன ஸ்தாபன முத்திரைகளால் ஸ்தாபித்து பூஜிக்கவேண்டும். தர்மம் முதலிய எட்டுகால்களால் ஆஸனத்தைச் செய்து பாத்யம்; அர்க்கியம், ஆசமனீயம் இவைகளைக்கொடுத்து ஒன்பது சக்திகளுடன், எட்டுதளங்களுள்ளதும், காய் தாது இவைகளால் ப்ரகாசிப்பதுமான ஆஸனத்தில் என்னைவைத்து வேதம், தந்திரம் இவைகளின் பயன் கிடைப்பதற்காக பூஜிக்கவேண்டும் (ஆஸனத்திற்கு எட்டுபாதங்கள். தர்மம், ஜ்ஞானம், வைராக்யம், ஐச்வர்யம் இவைகளை அக்னிமுதலிய கோணங்களிலும் அதர்மம், அஜ்ஞானம், அவைராக்கியம், அனைச்வர்யம் ஆகிய இவைகளை கிழக்கு முதலிய திக்குகளிலும் பகவானுடைய ஆஸனத்திற்குக் கால்களாக பாவிக்கவேண்டும். இந்த எட்டுமே எட்டு தளம். அதன் மீது சந்திரன், அதன்மீது ஸூர்யன். அதன்மீது பகவானை ஒன்பது சக்திகளுடன் த்யானிக்கவும். விமலா, உத்கர்ஷிணீ, ஜ்ஞானா, க்ரியா, யோகா, ப்ரஜ்ஞா, ஸத்யா, ஈசானா, அநுக்ரஹா என்று எட்டுசக்திகள்) ஸுதர்சனம், பாஞ்சஜன்யம், கதை, நந்தகம் பாணம், சார்ங்கம் ஹலம் (கலப்பை) முஸலம், ஆகிய இந்த எட்டு ஆயுதங்களையும் எட்டு திக்குகளிலும், கௌஸ்துபம், ஸ்ரீவத்ஸம் இவைகளை மார்பிலும், நந்தன், ஸுநந்தன், ப்ரசண்டன், சண்டன், மஹாபலன், பலன், குமுதன், குமுதேக்ஷணன் ஆகிய பார்ஷதர்களை எட்டுதிக்குகளிலும், கருடனை எதிரிலும், துர்க்கை, விநாயகன், வ்யாஸர் விஷ்வக்ஸேனர், இவர்களை நான்கு கோணங்களிலும், குருக்களை வாமபாகத்திலும் இந்திரன் முதலிய லோகபாலர்களை கிழக்குமுதலிய திக்குகளிலும் பகவானுக்கு அபிமுகமாகவைத்து அர்க்கியம் முதலியவையால் பூஜிக்கவேண்டும். தனக்கு விபவமிருந்தால் சந்தனம், விளாமிச்சம்வேர், கற்பூரம் குங்குமப்பூ, அகரு இவைகளால் வாஸித்த தீர்த்தத்தால் ஒவ்வொரு நாளும் ஸ்நான மந்திரங்களை ஜபித்து அபிஷேகஞ் செய்விக்கவும். ஸ்வர்ணகர்ம என்று ஆரம்பிக்கும் மந்திரத்தையும், மஹாபுருஷ வித்யையையும், புருஷஸூக்தத்தையும், ராஜனம் முத

லிய ஸாமங்களையும், ரௌஹிணம் முதலியவைகளையும் உச்சரித்து ஸ்நானஞ்செய்விக்கவும். மேலும் வஸ்திரம், உபவீதம், ஆபரணம், மார்பு, கன்னம் இவைகளில் மகரிகாதி பத்திரங்களெழுதுவது, சந்தனம் பூசுவது, புஷ்பமாலை இவைகளால் என்னுடைய பக்தன் என்னை மிக்க ப்ரேமையுடன் அலங்கரிக்கவேண்டும். பின்னும் பாத்யம், ஆசமனியம், சந்தனம், புஷ்பம், அக்ஷதம், தூபம், தீபம். அன்னம் முதலியவைகளை ச்ரத்தையுடன் ஸமர்ப்பிக்கவேண்டும். ஐச்வர்யமிருக்குமானால் வெல்லம்கலந்த பாயஸம், நெய், முருக்கு, அதிரஸம், மோதகம், ஸம்யாவம் (கோதுமையால் செய்யப்பட்டவை) தயிர், மற்ற வ்யஞ்ஜனங்கள் இவைகளை நிவேதனஞ் செய்ய வேண்டும். பர்வங்களில் அப்யங்கம், புளிக்காப்பு முதலியவை, கண்ணாடி காம்ப்பிப்பது தந்ததாவனம், அபிஷேகம், அன்னம் முதலிய நிவேதனம், கானம், நர்த்தனம் இவைகளை ஒவ்வொரு ஸமயத்திலும் விபவத்திற்குத் தக்கவாறு நடத்தவேண்டும். (இனி அக்னியில் பூஜிக்கும் முறை காட்டப்படுகிறது)

34—53. அவரவர்களுடைய ஸூத்திரத்தில் சொல்லியபடி மேகலை (சுற்றியிருப்பது) ஆழம் இவைகளுள்ளதாகக் குண்டஞ் செய்து அதில் அக்னியை ப்ரதிஷ்டைசெய்து நான்கு புரங்களிலும் இரைந்திருப்பதை கையால் சேர்த்துவைக்கவேண்டும். ஸமித்தை மந்திரபூர்வமாக அக்னியில் வைப்பதாகிய அன்வாதானத்தை அநுஷ்டித்து அக்னியின் வடபுரத்தில் ஹோமத்திற்குபயோகமான த்ரவ்யங்களை வைத்து (ஆஸாதித்து) புரோக்ஷணி பாத்திரத்திலுள்ள தீர்த்தத்தால் அவைகளை புரோக்ஷித்து அக்னியில் என்னை த்யானிக்கவேண்டும். எப்படியெனில்—உருக்கிவிட்ட ஸுவர்ணத்திற்குச் சமமான காந்தியுள்ளவராகவும், சங்கம், சக்கிரம், கதாயுதம். தாமரைமலர் இவைகளுள்ளவராகவும், நான்கு கைகளுள்ளவராகவும், சாந்தராகவும், தாமரைமலரிலிருக்கும் தாதுகளின் நிறம்போன்ற பீதாம்பரத்தைத் தரித்திருப்பதாகவும், கிரீடம், வளை, அரைஞாண், தோள்வளை, இவைகளால் ப்ரகாசிப்பவரும், ஸ்ரீவத்ஸம், வனமாலை, கௌஸ்துபம் இவைகளால் பரகாசிக்கும்மார்புள்ளவராகவும் என்னை அக்னியில் த்யானஞ்செய்து நெய்யில் நனைத்த ஸமித்துக்களை அக்னியில்வைத்து என்னைப் பூஜிக்கவேண்டு. பின்பு ஆகாரம், ஆஜ்யபாகம் இவைகளை ஹோமம்

செய்யவேண்டும் (ப்ரஜாபதயே, இந்திராய என்பது ஆகாரமெனப்படும். அக்னயெ, ஸோமாய என்பது ஆஜ்யபாகம்) மேலும் மூலமந்திரத்தாலாவது (அஷ்டாக்ஷரம்) புருஷஸூக்தத்தின் பதினாறு ரிக்குக்களாலாவது ஹோமஞ்செய்யவேண்டும் பூஜையின்கிரமப்படி தர்மம் முதலியவைகளை யுத்தேசித்தும் ஹோமஞ்செய்யவேண்டும். பின்பு ஸ்விஷ்டகிருத் ஹோமஞ்செய்யவும். அதன்பின் அக்னிமண்டலத்திலிருக்கும் பகவானைப் பூஜித்து நமஸ்கரித்து பார்ஷதர்களுக்குப் பலிஹரணங்கொடுக்கவும். நாராயண ஸ்வரூபமான பரப்ரஹ்மத்தை ஸ்மரித்துக்கொண்டு மூலமந்திரத்தை ஜபிக்கவேண்டும். பின்பு ஆசமனங்கொடுத்து நிர்மால்யத்தை விஷ்வக்ஸேனருக்கு நிவேதனஞ்செய்யவும். பச்சக்கற்பூரம் முதலிய வாஸனை த்ரவ்யங்களுள்ள தாம்பூலத்தை நிவேதனஞ்செய்யவேண்டும். என்னுடைய சரிதங்களை கானஞ்செய்தும், நர்த்தனஞ்செய்தும், என் கதையைப் பிறருக்குச் சொல்லிக்கொண்டும், பகவானிடத்தில் ப்ரீதியுள்ளவனாக விருக்கவேண்டும். புராணத்தில் சொல்லிய ஸ்தோத்திரங்களாலும், ப்ராகிருதமான ஸ்தோத்திரங்களாலும், ஸ்தோத்திரஞ்செய்து “ஓ பகவன்! என்னிடத்தில் தயவுசெய்யும் என்று தண்டம்போல நமஸ்கரிக்கவேண்டும். நமஸ்கரிக்கவேண்டிய விதி யெப்படியெனில் தலையால் என்னுடையபாதங்களையும், வலது கையால் என்னுடைய வலதுபாதத்தையும், இடதுகையால் இடதுபாதத்தையும் தொட்டுக்கொண்டு நமஸ்கரிக்கவேண்டும். மேலும் “ஓ ஈச! மிருத்யுவாகிய முதலையுள்ள ஸம்ஸார ஸமுத்திரத்தில் பயந்து உம்மைச்சரணமடைந்திருக்கும் என்னைக்காப்பாற்றும்” என்று ப்ரார்த்திக்கவேண்டும். பின்பு நிர்மால்யத்தை சிரஸில் வைத்துக்கொண்டு உத்வாஸனஞ் செய்யக்கூடிய ப்ரதிமையானால் தன்னுடைய ஹிருதய கமலத்திலிருக்கும் ஜ்யோதிஸில் உத்வாஸனஞ் செய்யவேண்டும். ப்ரதிமைகளுக்குள் எந்தப்ரதிமையில் எப்பொழுது எதில் ச்ரத்தையிருக்குமோ, அதில் அப்பொழுது என்னை த்யானித்துப் பூஜிக்கலாம். ஏனென்றால் ஸகலப்ராணிகளிடத்திலும் தன்னிடத்திலும் (பூஜிப்பவனிடத்திலும்) நான் வஸிக்கிறேன். (ப்ரதிமைகளுக்குள் இது முக்கியம் இது முக்கிய மல்லவென்ற பேதமில்லை யென்றுகருத்து) இப்படி வைதிகம், தாந்திரிகம் ஆகிய பூஜாவிதிகளைக்கொண்டு என்னைப்பூஜித்தால் அவனுக்கு இவ்வுலகத்திலும், பரலோகத்திலும், க்ஷேமத்தை நான் கொடுக்கிறேன்.

என்னுடைய ப்ரதிமையை ப்ரதிஷ்டைசெய்து கெட்டியாகக் கோயில் கட்டிவைத்து புஷ்பத்தோட்டம் போட்டு,பூஜை, பர்வம்முதலியவைகளில் உத்ஸவம் ஆகிய இவைகள் சாச்வதமாக நடக்கும்படி கிரமங்கள், கடைகள் முதலியவைகளை யேர்ப்படுத்திவைக்க வேண்டும். இப்படிச்செய்பவன் எனக்குச்சமமான ஐச்வர்யத்தை அடைவான். என்னுடைய ப்ரதிமையை ப்ரதிஷ்டை செய்வதால் சக்கிரவர்த்தியாவான். கோயில் கட்டிவைத்தால் மூவ்வுலகத்திய ராஜ்யத்தை அடைவான். பூஜை முதலியவைகளால் ப்ரஹ்மலோகத்தை அடைவான். மூன்றையுஞ் செய்தவன் என்னுடைய ஸாம்யத்தை அடைவான். இப்படி எவன் என்னைப் பூஜிக்கிறானோ, அவன் பக்தியோகத்தை அடைவான். அந்தப்பக்தியோகத்தைப் பயனையுத் தேசியாமல் செய்வதால் என்னையே அடைவான். எவன் ப்ராஹ்மணர்களுக்கும், தேவதைக்கும் கிருமம் முதலியவைகளைக்கொடுத்து பின்பு அதனை அபஹரித்துக் கொள்ளுகிறானோ, எவன் பிறரால் கொடுக்கப்பட்ட தேவப்ராஹ்மணதனத்தை அபஹரிக்கிறானோ, அவன் பதினாயிரக்கணக்கான வர்ஷங்கள் அமேத்யத்தைப் புஜிக்கும் பன்றியாக ஜனிப்பான். மேற்காட்டிய நல்ல கர்மங்களைச் செய்பவர்கள், அதற்கு ஒத்தாசை செய்தவர்கள், செய்வித்தவர்கள், அதனை அநுமோதித்தவர்கள் ஆகிய இவர்களெல்லாரும் பரலோகத்தில் அதன் பயனில் பாகஸ்தர்களாகிறார்கள்.

---

## அத்யாயம்—28.

### ஜ்ஞானயோகத்தின் சுருக்கம்.

பிறருடைய ஸ்வபாவத்தையாவது, நடையையாவது ஜ்ஞானயோகத்தை யநுஷ்டிப்பவன் ச்லாகிக்கவும்கூடாது, நிந்திக்கவுங் கூடாது. ப்ரகிருதி, புருஷன் ஆகிய இவர்களால் ஸகல ஜகத்தும் வ்யாபித்திருப்பதாகவும், ஸகல ஜகத்தும் ஒருவராகிய பகவானுடைய ஸ்வரூபமென்றும் பார்க்கவேண்டும். எவன் பிறருடைய ஸ்வபாவங்களையும், கர்மங்களையும் ஸ்துதிக்கிறானோ, நிந்திக்கிறானோ, அவன் மித்யயானவைகளில் அபிநிவேசமுள்ளவனை

தால் ஜ்ஞானநிஷ்டையிலிருந்து சீக்கிரத்தில் நழுவிவிடுவான். ராஜஸாஹங்கார கார்யங்களான இந்திரியங்கள் தங்கள் தங்கள் வேலையைச் செய்யாமலிருக்கும்பொழுது (தூக்கத்தில்) தேஹத்திலிருக்கும் ஜீவன் மனோமாத்திரனாகவிருந்து மாயயை (ஸ்வப்னத்தை) அடைகிறான். அந்த மனமானது லயித்திருக்கும்பொழுது ப்ரஜ்ஞையற்று ம்ருத்யுவிற்குச் சமமான ஸுஷுப்தியை அடைகிறான். இதுபோலவே பேதபுத்தியுள்ள புருஷன் விக்ஷேபத்தையும், லயத்தையும் அடைகிறான். (ப்ராஜ்ஞனுடைய சேர்க்கையால் ஜகத்திற்குப் போகம், க்ஷயம் ஆகிய ப்ரம்சம் எப்படி ஏற்படுகிறதோ, அப்படி அனாத்மாவின் ஸம்பந்தத்தால் ஆத்மாவிற்கு ஸ்வரூபஜ்ஞானம் மறைக்கப்படுகிறதென்று தாத்பர்யம்) த்வைதம் மித்யையானதால் அவஸ்துவான த்வைதத்திற்குள் எது குணமானது? எது தோஷமுள்ளது? வாக்கினால் சொல்லப்படுகிறவையும், கண்ணால் பார்க்கப்பெற்றவையும், மனத்தால் நினைக்கப்பெற்றவையுமான வஸ்துக்கள் யாவும் மித்யயானவையேயாம். ப்ரதிபிம்பம், எதிரொலி, முத்துச்சிப்பியில் வெள்ளியென்கிற ப்ரமமாகிய ஆபாஸம் ஆகிய இவைகள் உண்மையானவையில்லாததானாலும் எப்படி கார்யத்தைச் செய்கின்றனவோ, அப்படி தேஹம் முதலியவைகள் உண்மையானவையில்லாததானாலும் ஜ்ஞானத்தால் அஜ்ஞானம் நசிக்கிறவரையில் பயத்தைக் கொடுக்கின்றன. (ஸிருஷ்டியை நிரூபிக்கும் ச்ருதிகளே த்வைதத்தைசொல்லுகின்றன. அதை உண்மையல்லவென்று எப்படி சொல்லலாம் என்றால் இரண்டு ச்லோகங்களால் ஸமாதானஞ் சொல்லப்படுகிறது) இந்த ஜகத்து முழுவதும் பரமாத்மாவின் ஸ்வரூபமேயாம். அந்தப்ரபுவே ஜகத்தை ஸிருஷ்டிக்கிறார்; ஸம்ஹரிக்கிறார்; அந்தப்ரபுவின் ஸ்வரூபமாகிய ஜகத் ஸிருஷ்டிக்கப்படுகிறது; காப்பாற்றப்படுகிறது; ஸம்ஹரிக்கப்படுகிறது; (ஸிருஷ்டிக்கப் படுவது, ஸிருஷ்டிப்பவன், காப்பாற்றப்படுவது, காப்பாற்றுகிறவன், ஸம்ஹரிக்கப் படுவது ஸம்ஹரிப்பவன் இவைகள் ஒன்று என்று கருத்து) ஆனதால் ஆத்மாவைக் காட்டிலும் உண்மையில் வேறானவஸ்து லோகத்திலில்லை ஆனாலும் அத்யாத்மம் முதலிய மூன்று பேதங்கள் ஆத்மாவைக் காட்டிலும் வேறாகவிருப்பதாக ஆத்மாவிடத்தில் தோன்றுகின்றன (உண்மையிலில்லை) இந்த மூன்று பேதங்களுக்குக் காரணமில்லை ஆனதால் ஜகத்து மாயயால் தோன்றுகிறது. முக்குணங்களுடைய

பேதத்தால் அத்யாத்மம் முதலிய பேதங்களுள்ளதாகத் தோன்று கிறது. என்னால் சொல்லப்பட்ட ஜ்ஞானம் விஜ்ஞானம் இவைகளுடைய நிஷ்டையை அடைந்தவன் ஒருவரையும் ஸ்தோத்திரஞ் செய்யவும் மாட்டான், ஸூர்யன்போல எங்கும் ஸமமாக ஸஞ்சரிப்பான். எந்தவஸ்து விற்கு உத்பத்தியும் நாசமுமிருக் கின்றவோ, அந்தவஸ்து உண்மையில் இல்லாத தென்றே நிச்சயிக்க வேண்டும். ஜகத் உத்பத்தி நாசமுள்ள தென்பதைப்ரத்யக்ஷம், அநுமானம், வேதம், ஆத்மாநுபவம் ஆகியநான்குப்ரமாணங்களால் தெரிந்து கொள்ளலாம் (குடம் முதலியவை உண்டாகிறதையும், நசிப்பதையும் நேரில் பார்க்கிறோம். அதனால் அந்த விஷயத்தில்ப்ரத்யக்ஷம்ப்ரமாண மாகிறது. கண்ணுக்குப் புலப்படும் பிருதிவீ முதலியவை ஆதி அந்தம் இவைகளுள்ளவை. அவயங்களுள்ளவை எது அவயவங்களுள்ளதோ அது ஆதி அந்தம் இவைகளுள்ளது என்ற அநுமானம் ப்ரமாணமாகிறது. இந்திரியங்களுக்குப் புலப்படாத ஆகாயமுதலியவை விஷயத்தில் வேதம்ப்ரமாணமாகிறது. ஆத்மாநுபவம் உண்டானால் ப்ரபஞ்சம்யாவும் ஆதிஅந்த முள்ளவை யென்று தெரியும் ஆனதால் ஒன்றிலும் ஆசைவைக்காமல் ஸஞ்சரிக்கவேண்டும்" என்றார்.

11—12. அதனைக்கேட்ட உத்தவர் ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி "ஸாக்ஷியாகிய ஆத்மா சேதனனானதால் அவனுக்கும் ஸம்ஸார ஸம்பந்தமில்லை. சரீரம் முதலியவை அசேதனங்களானதால் அவைகளுக்கும் ஸம்ஸார ஸம்பந்தமேற்பட ந்யாயமில்லை. ஸம்ஸாரமோ இருப்பதாகத் தோற்றுகிறது. ஓ ஈச! அது யாரைச் சார்ந்தது? (ஸாக்ஷியான ஆத்மாவினுடையதா? அல்லது பார்க்கப்படும் ஜடமான ஜகத்தினுடையதா? ஒருவருடையது மல்ல, ஸம்ஸாரமே இல்லையென்று சொல்வோமானால் காணப்படுகிறதே, அது யாருடையதென்று கருத்து) ஆத்மா நாசமற்றவர்; குணமற்றவர்; (ராகத்வேஷமில்லை) சுத்தர்; (புண்யபாபமற்றவர்) தாமாக ப்ரகாசிப்பவர் (மற்றொரு ப்ரகாசத்தை அபேக்ஷிக்கிறதில்லை) ஒன்றாலும் மறைக்கப்படாதவர் (அளவிடக்கூடாத ஜ்ஞானமுள்ளவர். (வ்யாபகர்) தேஹமோ ஜடம், அக்னி எப்படி பிரகாசிக்கச்செய்யும் வஸ்துவோ கட்டை அதனால் ப்ரகாசிக்கப்படுகிறதோ, அப்படி ஆத்மாவும் தேஹமும் ப்ரகாசகரும், ப்ரகாச்யமுமாக விருக்கிறது,

அதற்குள் ஸம்ஸாரம் யாரைச்சார்ந்தது? அதனைச்சொல்லுமென்று கேட்டார்.

13—45. அதனைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் உத்தவரைநோக்கி "தேஹம், இந்திரியங்கள் ஆகிய இவைகளை தன்னைச்சார்ந்தவையென்று நினைத்து அவைகளில் அபிமானம்வைத்து எப்பொழுது ஆத்மா அவைகளுடன் ஸம்பந்தப்படுகிறானோ, அப்பொழுது ஸம்ஸாரம் அவனுக்கு உண்டாகிறது அவைகளில் அபிமானமற்றிருக்கும் விவேகிக்கு அந்த ஸம்ஸாரமிருக்கிறதில்லை, (ஆத்மா ஸ்வப்ரகாசனானாலும், இயற்கையில் ஒன்றிலும் ஸம்பந்தப்படாதவனானாலும் தன்னுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ளாததால் ஸம்ஸாரமுண்டாகிறதென்றுகருத்து) ஸ்வப்னம் உண்மையிலில்லாததனாலும் விஷயங்களை மனத்தால் த்யானஞ்செய்யும் புருஷனுக்கு ஸ்வப்னத்தில் அனர்த்தங்களுண்டாகிறதுபோல தேஹம் முதலியவை உண்மையிலில்லாதவையானாலும் ஆத்மாவிற்கு ஸம்ஸாரம் நிவர்த்தியாகிறதில்லை (ஸ்வப்னத்தில் சிங்கம் முதலியவைகளைப் பார்த்து பயப்படுகிறான். உண்மையில் சிங்கமில்லை. ஆனாலும் பயத்தை அடைகிறான், அதுபோலவே மித்யா பூதங்களான சரீரம் முதலியவைகளை ஸத்யங்களென்று நினைத்து துக்கத்தை அடைகிறானென்று கருத்து) மேலும் தூங்கிக்கொண்டிருப்பவனுக்கு ஸ்வப்னம் பலவகையான அனர்த்தங்களைக் கொடுக்கிறது,விழித்துக்கொண்ட பின் அந்தஸ்வப்னம் அந்தப்புருஷனுக்கு மோஹத்தையுண்டு பண்ணுகிறதில்லை. அதுபோலவே விஷயங்களுடைய உண்மையை அரியாதவனுக்கு அவைகள் (உண்மையில்லாதவையானாலும்) மோஹத்தை யுண்டுபண்ணுகின்றன. ஜ்ஞானிக்கு அவைகளில் மோஹ மேற்படுகிறதில்லை. சோகம், ஸந்தோஷம், பயம், கோபம், லோபம், மோஹம், மதம், ஜனனம், ம்ருத்யூ ஆகிய இவைகள் அஹங்காரத்திற்கேயொழிய ஆத்மாவிற்கல்ல. (அஹங்காரமில்லாத ஸுஷுப்தியில் மேற்கண்ட சோகமோஹாதிகள் இல்லை. "நான் ஸுகமுள்ளவன், நான் துக்கமுள்ளவன்" என்ற ஜ்ஞானம் அப்பொழுதில்லை. ஸுகம் முதலியவை தேஹத்தின் தர்மங்களையொழிய ஆத்மாவினுடையவையல்ல) சரீரம் முதலியவைகளில் அபிமானமுள்ளவனே சரீரத்திற்குள்ளிருக்கும் ஜீவனெனப்படுகிறான். குணங்கள், கர்மம் இவைகளுள்ள அவனே ஸூக்ஷ்மங்

களான உபாதிகளின் ஸம்பந்தத்தால் ஸூத்ராத்மாவென்றும், மஹான் என்றும் பலவகையாகச் சொல்லப்படுகிறான். அவன் காலஸ்வரூபியான பரமேச்வரனுக்கு ஸ்வாதீனனாகி ஸம்ஸார சக்கிரத்தில் சுற்றுகிறான், (அஹங்காரத்தின் ஸம்பந்தத்தால் ஜீவனுக்குப் பந்தமேற்பட்டிருக்கிறது. ஜ்ஞானத்தால் அஜ்ஞானம் நிவிருத்தியடையும். அந்தக் காலம் ஜீவன் முக்தனாகிறான்) மனம், வாக்கு, ப்ராணன், சரீரம், கர்மம் ஆகிய இவைகளடங்கிய ஸம்ஸாரத்திற்கு மூலமில்லை. மூடத்தனத்தால் பல ரூபங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது (இந்திர ஜாலவித்யயால் காணப்படும் வஸ்துக்கள் போன்றது) ஆனதால் நல்ல ஆசார்யனை யுபாஸித்து ஜ்ஞானத்தை அடைந்து அந்த ஜ்ஞானமாகிய கூர்மையான கத்தியால் அந்த ஸம்ஸாரத்தைத் துலைத்து ஒன்றிலும் பற்றுதலில்லாமல் ஸஞ்சரிக்கவேண்டும். இந்த ஜகத்திற்கு எது பரமகாரணமோ (ஜகத்திற்கு முந்தியிருந்ததோ) எது ஜகத்து நசித்தாலுமிருக்கிறதோ, எது காலஸ்வரூபமாகவிருக்கிறதோ, அது மத்யகாலத்திலுமிருக்கிறது. (ஜகத்து அந்த ப்ரஹ்மஸ்வரூபமென்று கருத்து) என்று வேதத்தாலும், தபஸினாலும், (தனக்குரிய தர்மத்தை யநுஷ்டிப்பது) அநுபவமாகிய ப்ரத்யக்ஷத்தாலும், ஆசார்யருடைய உபதேசமாகிய ஐதிஹ்யத்தாலும், அநுமானத்தாலும், தெரிந்துகொள்வதே ஜ்ஞானமெனப்படுகிறது. (எது இந்த ஜகத்திற்குக் காரணமாகவிருக்கிறதோ, எதனால் இந்த ஜகத்து ப்ரகாசிக்கிறதோ, அந்த ப்ரஹ்மஸ்வரூபமாகவே ப்ரபஞ்சமிருக்கிறது ப்ரபஞ்சத்தைக்காட்டிலும் வேறானதல்ல, என்ற நிச்சயம் வேதம் முதலியவைகளால் ஏற்படவேண்டும் அந்த விவேகமே ஜ்ஞானமெனப்படுகிறது) தங்கத்தால் வளை முதலிய ஆபரணங்கள் செய்யப்பட்டால் ஆபரணமாக செய்யப்படும் முன்காலத்திலும் ஆபரணத்தை உருக்கினபின்பும் தங்கமாகவிருக்கிறது. அதனால் ஆபரணமாக விருக்குங்காலத்திலும் தங்கமே வளை முதலிய பெயரால் வ்யவஹரிக்கப்படுகிறதேயொழிய வளை முதலியவை தங்கத்தைக்காட்டிலும் வேரானதல்ல. அதுபோல் பலவகையான ஜகத்து என்ற வ்யவஹாரத்திற்கு நானே காரணம். (என்னைக்காட்டிலும் ப்ரபஞ்சம் வேரானதல்லவென்று கருத்து) ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தையுள்ள மனம், அதன் அவஸ்தைகளுக்குக் காரணங்களான மூன்று குணங்களும், கார்ய

மான அதிபூதம், காரணமான அத்யாத்மம், கர்த்தாவாகிய அதிதைவம் ஆகிய இவைகளடங்கிய ப்ரபஞ்சம் மூன்று அவஸ்தைகளில்லாத ஜ்ஞானஸ்வரூபியான எவரை ஆச்ரயித்து ப்ரகாசிக்கிறதோ, எவருடைய ப்ரகாசமில்லாமற் போனால் ப்ரபஞ்சம் ப்ரகாசிக்கிறதில்லையோ அந்தப் பரப்ரஹ்மமேஸத்யவஸ்து (ஜகத்து அனித்யமென்று கருத்து) எதுமுந்தியும், பிந்தியும் இல்லையோ, அது மத்தியகாலத்திலு மில்லை. வ்யவஹாரத்திற்கு மாத்திர முபயோகப்படுகிறது, எல்லாவற்றிற்கும் காரணமாகிய பரமாத்வினால் படைக்கப்பெற்று அவராலேயே ப்ரகாசிக்கப்பெற்றதுமான ஜகத்து அந்தப்பரமாத்ம ஸ்வரூபமேயொழிய வேறில்லை யென்று என்னுடைய அபிப்பிராயம், ("ரூபம் பேயர் இவைகள் வ்யவஹாரத்திற் குபயோகங்கள், ஸத்யங்களல்ல மண்யென்பதே ஸத்யம்" "இதெல்லாம் பரப்ரஹ்மமே" ச்ருதிகள்) இந்தப்ரபஞ்சம் உண்மையில் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறாகவில்லாம லிருந்தாலும் தோன்று கிறதல்லவா? இது பரமாத்மாவின் கார்யமேயாம். ப்ரஹ்மம் எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச் செய்வதும் தாமாகப்ரகாசிப்பது மாகவிருக்கிறது. ஆனதால் இந்திரியங்கள், தன்மாத்திரைகள், மனம், ஐந்து பூதங்கள் முதலிய விசித்திர மானப்ரபஞ்சம் பரப்ரஹ்மமேயாம். மேற்காட்டிய வண்ணம் ப்ரஹ்மஸ்வரூபத்தை காட்டக்கூடிய வேதம் முதலிய ப்ரமாணங்களைக்கொண்டு சரீரம் முதலியவைகளை ஆத்மா வல்ல வென்று நிச்சயித்து ஸகலஸம்சயங்களையும் நிவர்த்தித்துக் கொண்டு ஆத்மானந்தத்தால் ஸந்தோஷத்தை அடைந்து விஷயங்களில் ஆசைவைக்காமல் உபரதியை அடைய வேண்டும். சரீரம் பிருதிவியின் விகாரமானதால் அது ஆத்மாவல்ல. இந்திரியங்களும், அவைகளுடைய அதிஷ்டான தேவர்களும், ப்ராணன், மனம, புத்தி, மஹத்தத்வம் அஹங்காரம் ஆகிய இவை சரீரம்போல அன்னத்தையே ஜீவிப்பவைகளானதால் ஆத்மாவல்ல. வாயு, ஜலம், அக்னி, தேஜஸ், ஆகாயம், பூமி, சப்தம் முதலியவிஷயங்கள், ப்ரகிருதி ஆகிய இவைகள் ஜடங்களானதால் அவைகளும் ஆத்மாவல்ல. ஆனதால் என்னுடைய ஸ்வரூபத்தை அடைந்தவனுக்கு இந்திரியங்களை அடக்குவதால் என்னகுணமேற்படும்? இந்திரியங்கள் விக்ஷேபத்தை அடைந்தால் அதனால என்னதோஷம்? மேகங்களால் மறைக்கப்பட்டிருக்கும்பொழுது ஸூர்யனுக்கு என்னதோஷம்? மேகங்களால் மறைக்

கப்படாததால் ஸூர்யனுக்கு என்னகுணம் ? ப்ரகாச ஸ்வரூபியான பரமாத்மாவிற்கு ப்ரகாசிக்கப்படும் வஸ்துக்களுடைய குணதோஷ ஸம்பந்தமில்லையென்று ஸூர்ய திருஷ்டாந்தத்தால் காட்டப்பட்டது. இனி ஒன்றிலும் பரமாத்மா ஸம்பந்தப்படாமலிருப்பதால் ப்ரபஞ்சத்தின் குணதோஷங்கள் ஆத்மாவிடத்தில் ஸம்பந்திக்கிறதில்லை யென்பதில் ஆகாயம் உதாஹரணமாகச் சொல்லப்படுகிறது வாயு, அக்னி, ஜலம் பூமி ஆகிய இவைகளுடைய குணங்களாகிய உலர்த்துவது, தஹிப்பது, உளரச்செய்வது, புழுதியுள்ளதாக விருப்பது முதலியவைகளும், ரிதுக்களின் குணங்களான உஷ்ணம், குளிர்ச்சி ஆகிய இவைகளும் ஆகாயத்தில் ஸம்பந்திக்கிறதில்லை. அது போல அஹங்காரத்தைக்காட்டிலும் மேலான பரமாத்மாவிடத்தில் ஸம்ஸாரத்திற்குக் காரணமாயிருப்பவைகள் ஸம்பந்திக்கிறதில்லை. ஆனாலும் ஸ்திரமாக என்னிடத்தில் பக்திசெய்து மனத்தின் மலமாகிய ரஜோகுணத்தை நிவர்த்தித்துக் கொள்ளும்வரையில் மாயயால் செய்யப்பட்ட விஷயங்களில் ஸம்பந்திக்கக்கூடாது. மனிதர்களுடைய சரீரத்தில் வியாதி ஏற்பட்டால் அதனை நன்றாகவைத்தியம் செய்து நிவர்த்திக்கவேண்டும், அப்படிச்செய்யாமல் ஸ்வல்பமாக வைத்தியஞ் செய்யப்பட்டால் பின்பு அது விருத்தியாகி எப்படி உபத்திரவிக்கிறதோ அப்படி நன்றாக ஜ்ஞானத்தையடையாத புருஷனுக்கு விஷய வாஸனைகளும் கர்மங்களும் உபத்திரவத்தை யுண்டுபண்ணும், (நல்ல ஜ்ஞானத்தை யடையாதவன் முக்தனைப்போல தனதிஷ்டப்படி யிருக்கக்கூடாதென்று காட்டப்பட்டது) ஜ்ஞானாப்யாஸஞ்செய்யும் மனிதர்களுக்கு தேவர்கள் புத்திரன் முதலிய பந்துக்களாகவிருந்து விக்னஞ்செய்வார்கள் அப்படி அவர்களால் தடுக்கப்பட்டு எவர்கள் ஸித்தியை அடையவில்லையோ அவர்கள் அடுத்த ஜன்மத்தில் முந்திய ஜன்மத்தின் அப்பியாஸபலத்தால் யோகத்தை அப்யஸிப்பார்களேயொழிய கர்மத்தை யநுஷ்டிக்கமாட்டார்கள். மூடனாகிய மனிதன் ஏதோ ஒரு வாஸனையால் தூண்டப்பட்டு மரணம் வரையில் கர்மங்களைச் செய்கிறான். அதனால் ஸுகதுக்கங்களையுமடைகிறான். வித்வானாக விருப்பவன் ப்ரகிருதியின் கார்யமான சரீரத்திலிருந்தாலும் ஆத்ம ஸுகாநுபவத்தால் ஸந்தோஷமடைந்து விஷயங்களில் ஆசையில்லாமல் கர்மங்களைச் செய்வதினால் ஸந்தோஷத்தையாவது துக்கத்தையாவது அடையமாட்டான் (வித்வான், மூடன் ஆகிய

இருவர்களும் கர்மங்களைச் செய்பவர்களானாலும் மூடன் நான், என்னுடையதென்ற அஹங்காரத்துடன் கர்மங்களை யனுஷ்டிக்கிறான். வித்வானாக விருப்பவனுக்கு மேற்காட்டிய அஹங்காரமில்லை. இதுவே இவ்விருவர்களுக்குமுள்ள பேதம்) ஆத்மாவிடத்தில் புத்தியைச் செலுத்திய ஜ்ஞானியாகிய புருஷனுக்கு சரீரம் உட்கார்ந்திருப்பது, படுத்திருப்பது, நடப்பது, எழுந்திருந்து நிற்பது, மூத்திரத்தை விடுவது, இன்னுமற்ற கர்மங்களைச்செய்வது முதலியவைகள் தெரியாது. (சரீரத்தையே யறியாத புருஷன் அதனால் செய்யப்பட்ட கர்மங்களில் விகாரத்தை யடைவானா) ஸ்வப்பனத்தில் கண்ட வஸ்துக்களைத் தூங்கிவிழித்தவன் எப்படி யுண்மையில்லை என்று தெரிந்துகொள்ளுகிறானோ அது போல ஜ்ஞானியாகவிருப்பவன் அஸத்தான இந்திரிய விஷயங்கள் அநேகங்களாக விருப்பதால் அவைகள் பொய்யானவைகளென்று அநுமானத்தால் தெரிந்துகொள்ளுகிறான். தூங்கி விழித்தவனுக்கு ஸ்வப்பனத்தில் கண்ட வஸ்துக்கள் வாஸனாரூபமாக சிலகாலம் தோன்றினாலும் அவைகள் ஸ்வயமாகவே எப்படி மறைந்துவிடுகின்றனவோ, அப்படி அஸத்தான இந்திரிய விஷயங்கள் ஜ்ஞானிக்கு வாஸனாபலத்தால் ஸ்வல்பகாலம் தோன்றினாலும் அவைகள் ஸ்வயமாகவே மறைந்துவிடும். அஜ்ஞானமுள்ள காலத்தில் (பத்தனாக விருக்கும்பொழுது) குணங்களாலும் கர்மங்களாலும் பலவகைகளாகவிருக்கும் சரீரம் இந்திரியம் முதலியவை ஆத்மாவிடத்திலிருப்பதாகத் தெரிந்துகொள்ளப்பட்டிருந்தன. ஜ்ஞானம் உண்டானபின் அந்த அப்பியாஸம் நிவர்த்தியாயிற்று. ஆத்மா எப்பொழுதும் ஒரேவகையாக விருக்கிறாரேயொழிய விகாரத்தை யடையவில்லை. (நெல்லுகள் குத்தப்பட்டால் அந்த ஸ்வரூபத்தை விட்டு அரிசிகளாக ஆவதுபோல பத்தனாயிருந்த அவஸ்தையை விட்டு முக்தனாகிய அவஸ்தையை யடைந்த ஆத்மா ஏன் விகாரத்தை யடையமாட்டான்? என்ற பூர்வபக்ஷம் நிவர்த்திக்கப்பட்டது.) ஸூர்யனுடைய உதயமானது மனிதர்களுடைய கண்களுக்கேற்பட்டிருந்த பிரதிபந்தமான இருளை போக்கடிக்கிறதே யொழிய கடம் முதலிய பதார்த்தங்களைப் புதிதாக உண்டுபண்ணுகிறதில்லை. அதுபோல இது ஆத்மா இது அனாத்மாவென்ற ஜ்ஞானம் உண்டானால் அது அஜ்ஞானத்தை நிவர்த்திக்கிறது. எப்பொழுதுமுள்ள ஆத்மவஸ்து ஒரேமாதிரி

யாகவே விகாரத்தை யடையாமலிருக்கிறது. இந்த ஆத்மா எப்பொழுதும் நம்மால் அடையப்பட்டவர். தாமாகப்பிரகாசிப்பவர். (அஜ்ஞானமாகிய மலம் அவரிடத்தில் கிடையாதென்று காட்டப்பட்டது.) உத்பத்தியற்றவர் ; அளவிடக்கூடாதவர் ; மிக்க விபூதியுள்ளவர் ; எல்லாவற்றையு மனுபவிப்பவர் ; ஒருவர் ; தனக்குஸமமான இரண்டாவது வஸ்து அற்றவர்; வாக்குக்கு எட்டாதவர்; வாக்குப்ராணன் இவைகளுக்குச் சேஷ்டையைக்கொடுப்பவர்; சுத்தனாகிய ஆதமாவிடத்தில் பேதபுத்தி முதலியவை மனத்தின் ப்ரமமேயாம், இம்மாதிரியான பேதபுதிக்கு ஆத்மாதான் ஆச்ரயம் வேறு ஆச்ரயம் இல்லை. சிலர் நாமரூபங்களுள்ளதும், ஐந்து பூதங்களாலேற்பட்டதுமான இந்த ஜகத்தானது நேரில் பார்க்கபடுகிறதனால் இது உண்மையானதேயாம். வேதாந்தத்திற்சொல்லிய அர்த்தங்கள் யாவும் அர்த்தவாதங்களேயாம்" என்று சிலர் சொல்லுகிறார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே வித்வான்களென்று நினைத்தவர்கள் அவர்களுடைய மதத்திற்குக் காரணம் ஒன்றுமில்லை. உண்மையையறிந்தவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள். (ஆத்மா கர்த்தாவல்ல, போக்தாவல்ல பரமானந்த ஸ்வரூபி என்று சொல்லும் உபநிஷத் வாக்கியங்கள் கர்மாங்கங்களாக ஆகமாட்டாது, ஜகத் நாமரூபமுள்ளதானதாலும் ஐந்து பூதங்களால் ஏற்பட்ட தானதாலும் ஸவப்பனம்போல் உணமையானதல்ல என்ற கருத்து.) மேற்காட்டிய ஜ்ஞானயோகத்தை யனுஷ்டிக்கும் புருஷனுக்கு விக்னங்கள் நேருமானால் அவைகளில் சிலவற்றை யோகதாரணையினாலும் சிலவற்றை வாயு தாரணையுள்ள ஆஸனங்களாலும் சிலவற்றை தபஸ்ஸாலும், மந்திரத்தாலும், ஔஷதத்தாலும், சிலவற்றை என்னுடைய த்யானம் நாமஸங்கீர்த்தனம் முதலியவையாலும் யோகேச்வரனை அனுவர்த்திப்பதாலும் நிவர்த்தித்துக்கொள்ளவேண்டும் சிலர் மேற்காட்டிய உபாயங்களால் ரோகம் முதலியவைகளை நிவர்த்தித்துக்கொண்டு சரீரத்தை யௌவனவயதுள்ளதாகச் செய்துகொண்டு அணிமாமுதலிய ஸித்திகளுக்காக முயற்சிக்கிறார்கள். மரத்தில் பழுக்கும் பழம்போல சரீரம் அனித்தியம். ஆத்மாவே நித்தியர். ஆனதால் ஜ்ஞானயோகத்தைச் செய்யாமல் அணிமாமுதலிய ஸித்திகளை விரும்புவது பெரியோர்களால் ஒப்புக்கொள்ளத்தகுந்ததல்ல. அந்தமுயற்சி வீணானதேயாம், யோகாப்பியாஸம் செய்கிற புருஷனுக்குச் சரீரம் ரோகம்

முதலியவைகளில்லாமல் இருக்குமாகுல் என்னிடத்தில் மனத்தைச் செலுத்துவதாகிய ஸமாதியைச் செய்யாமல் இந்த சரீரத்திலேயே நோக்கமுள்ளவனுகயிருக்கக்கூடாது. மேற்காட்டிய யோகத்தைச் செய்துகொண்டு ஒன்றிலும் ஆசையில்லாமல் என்னேயே ஆச்ரயித்திருப்பவனுக்கு விக்னங்கள் உண்டாகிறதில்லே. ஆத்மானந்தமுள்ளவனுக ஆய்விடுவான்.

---

## அத்யாயம்—29.

### பக்தியோகத்தின் சுருக்கம்.

அதனேக்கேட்ட உத்தவர் பகவானே நோக்கி "ஓ அச்யுத! மனத்தை ஜயிக்காதவன் மேற்காட்டிய பக்தியோகத்தை யனுஷ்டிக்கமுடியாதென்று நினேக்கிறேன். ஆனதால் ப்ரயாஸமின்றி இந்தயோகம் ஸித்திக்கும் உபாயத்தை எனக்குத் தெரியும்படி சொல்லவேண்டும், ஒ தாமரைக்கண்ண! மனத்தை அடக்குகின்ற யோகிகள் அதனேயடக்க முடியாமல் பெரும்பாலும் கஷ்டப்படுகிருர்கள். விவேகிகளாக விருப்பவர்கள் ஆனந்தத்தைக கொடுக்கக்கூடிய உம்முடைய பாதாரவிந்தத்தையே ஸுகமாக ஆச்ரயிப்பார்கள். உம்மிடத்தில் பக்திசெய்தவர்கள் யோகத்தாலும், கர்மத்தாலும், கர்வத்தை அடையமாட்டார்கள். உம்முடையமாயயால் மோஹிக்கமாட்டார்கள். எவர்கள் உம்மிடத்தில் பக்திசெய்யவில்லேயோ, அவர்கள் நாம் கர்மானுஷ்டானஞ் செய்பவர்கள், யோகத்தை யறிந்தவர்களென்று கர்வங்கொண்டு உம்முடைய மாயயால் மோஹத்தையடைவார்கள். ப்ரஹ்மாமுதலிய தேவர்களால் கிரீடம்படும்படி நமஸ்கரிக்கப்பெற்ற பாதங்களுள்ளவராகுலும் நீர் ராமாவதாரத்தில் வானரங்களுடன் ஸ்நேஹஞ் செய்துகொண்டீரல்லவா? அப்படிப்பட்ட நீர் அனன்னியமாக பக்திசெய்பவர்களுக்கு ஸ்வாதீனராயிருக்கிறீர் என்பதில் ஆச்சர்யமில்லே. மேலும் ஆச்ரயித்தவர்களுக்கு எல்லாபுருஷார்த்தத்தைக் கொடுப்பவரும் ஸகலப்பிராணிகளுக்கும் ஆத்மாவாகவும் ப்ரியருமான உம்மைவிட்டு பலிமுதலிய பக்தர்களிடத்திலும் உம்மால் செய்யப்பட்ட அனுக்ரஹத்தையறிந்த எந்த புருஷன் வேறு தேவதையை உபாஸிப்

பான்? ஸ்வர்க்கம் முதலிய அற்பமான பயன்கள் இந்திரிய போகத்திற்காக உபயோகப்படுகின்றன. அவைகளை யடைந்தவன் உம்மை உடனே மறந்துவிடுவான். ஆனதால் அவைகளையாராவது விரும்புவானோ? உம்முடைய பாதத்திலொட்டிய தூளிகளை அடைந்த எங்களுக்கு எந்த புருஷார்த்தந்தான் கிடைக்காது? (எல்லாம் கிடைக்கும்) பகவானாகிய நீர் ஸகலப் பிராணிகளுடைய ஹ்ருதயத்தில் அந்தர்யாமியாக விருந்தும், வெளியில் ஆசார்யரூபியாக விருந்தும், விஷயவாஸனைகளை நிவர்த்தித்துத் தம்முடைய ஸ்வரூபத்தைப் பிரகாசிக்கச்செய்கிறீர். இப்படி உம்மால் செய்யப்பட்ட உபகாரத்தை நினைத்து கவிகள் (ப்ரஹ்மத்தை யறிந்தவர்கள்) ப்ரஹ்மதேவருடைய ஆயுஸ்ஸாகிய நூறுவர்ஷங்கள் பதிலுபகாரம் செய்தாலும் அதற்கு அது பதிலாகாது. மிக்க ஆனந்தத்துடன் உம்முடைய ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்வதே அதற்குப் பதிலுபகாரமாகும் என்று கேட்டார்.

7—34. இம்மாதிரி மிக்க ப்ரியத்துடன் கேட்ட உத்தவருடைய வார்த்தையைக்கேட்டு ஜகத்தை விளையாட்டுக் கருவியாகக் கொண்டவரும் ஸத்வம்முதலிய குணங்களால் விஷ்ணு, ப்ரஹ்மா, ருத்திரன் என்ற மூன்று சரீரங்களுள்ளவருமான ஸர்வேச்வரன் அன்பு பொருந்திய சிரிப்புடன் பின்வருமாறு சொல்லலானார், எப்படியெனில் :— ஓ உத்தவ! மிகுந்த க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடிய என்னுடைய தர்மங்களை உமக்குச் சொல்லுகிறேன். அவைகளை ச்ரத்தையுடன் அனுஷ்டித்தால் ஜயிக்கமுடியாத ஸம்ஸாரத்தை ஜயிக்கலாம் எந்த கர்மங்களைச் செய்தாலும் என்னையே நினைத்துக்கொண்டு என்னுடைய தர்மங்களிலேயே நோக்கமுள்ளவனாகி பகவானுடைய ஸந்தோஷத்திற்காக இவைகளைச் செய்கிறோமென்று செய்யவேண்டும். என்னுடைய பக்தர்களான ஸாதுக்கள் வஸிக்கும் புண்ணிய க்ஷேத்திரங்களில் வஸிக்கவேண்டும். தேவர்கள் அஸுரர்கள் மனுஷ்யர்கள் இவர்களில் யார் என்னிடத்தில் பக்தியுள்ளவர்களோ அவர்கள் செய்தகார்யங்களைச் செய்யவேண்டும். தனியாகவாவது மற்றவர்களுடன் சேர்ந்தாவது வருஷோத்ஸவம் முதலியவைகளைச் செய்வித்து கானம், நர்த்தனம் முதலிய ராஜோபசாரத்தால் என்னைப் பூஜிக்கவேண்டும். மேலும் எல்லாப்பிராணிகளிடத்திலும், தன்னிடத்திலும் நானிருப்பதாகவும்

உள்ளிலும் வெளியிலும் பூர்ணனாகவும் மற்றொன்றினால் மறைக்கப்படாமலும் ஆகாயம்போல் ஒன்றிலும் ஸம்பந்திக்காமலும் நானிருப்பதாகப்பார்த்து சுத்தசித்தனாக விருக்கவேண்டும். ஓ மிக்கபுத்தியுள்ளவரே! மேற்காட்டியபடி ஸகலப்பிராணிகளையும் நானென்று பாவித்து ப்ராஹ்மணன், சண்டாளன், திருடன், ப்ரஹ்மம், ஸூர்யன், அக்னி, கடுமையான ஸ்வபாவமுள்ளவன், சாந்தன் இவர்களைத்தன்னுடைய ஜ்ஞானத்தால் ஸமமானவர்களென்று பார்ப்பவனே பண்டிதனென்று என்னுடைய எண்ணம். மனிதர்களிடத்தில் நானிருப்பதாக எப்பொழுதும் சிந்திக்கும் புருஷனுக்குச் சண்டை, அஸூயை, அவமானம், அஹங்காரம் இவைகள் நிவர்த்தியாகும். மேலும் அப்படியிருப்பவனைப்பார்த்து அவனுடைய தோழர்கள் பரிஹாஸஞ்செய்தாலும் 'நான் மேலானவன், அவன் தாழ்ந்தவன்,' என்றதாலுண்டாகிய வெட்கம் நேர்ந்தாலும் அவைகளை விட்டு ஈச்வரன் ஜீவரூபியாக எல்லாவற்றிலும் இருக்கிறானென்று நினைத்து நாய், சண்டாளன் விருஷபம், கழுதை முதலிய எல்லாவற்றையும் நமஸ்கரிக்கவேண்டும். எதுவரையில் ஸகலப்பிராணிகளும் பகவத்ஸ்வரூபமென்ற நிச்சய முண்டாகவில்லையோ, அதுவரையில் வாக்கு, மனம், சரீரம் இவைகளால் மேற்காட்டியபடி அப்பஸிக்க வேண்டும். எல்லாவற்றையும் ஈச்வரனென்று பார்ப்பதாகிய ஜ்ஞானத்தை யப்யஸித்தவனுக்கு எல்லாவஸ்துவும் ப்ரஹ்மஸ்வரூபமாகவே தோன்றும். அப்பொழுது எல்லா பந்தங்களும் அற்றுப்போம், ஒன்றிலும் ஆசைப்படமாட்டான். மனத்தாலும், வாக்கினாலும், சரீரத்தாலும், கர்மத்தாலும் என்னை ஆச்ரயித்திருக்கும் மார்க்கமே மேலானதென்று என்னுடைய அபிப்பிராயம். மேற்காட்டிய என்னுடைய தர்மத்தை ஆரம்பித்தால் கொஞ்சமேனும் கெடுதி ஏற்படாது. காமனையற்ற இந்த தர்மமானது என்னாலேயே நிச்சயிக்கப்பெற்றது. (மனு முதலியவர்களால் சொல்லப்பட்டதன்று, என்று கருத்து) லோகத்தில் வீணான முயற்சியானாலும் பயனையுத்தேசியாமல் என்னிடத்தில் ஸமர்ப்பிக்கப்படுமானால் அது தர்மமாகவே ஆகிறது. ஸத்யஸ்வரூபியும், மரணதர்மமு மில்லாதவருமான என்னை அஸத்தியமும் நாசமுள்ளதுமான சரீரத்தாலடைவதே புத்திமான்களுடைய புத்தி. அதுவே மனீஷா எனப்படுகிறது. ஓ ஸாதுவே! பக்தியோகத்தை விஸ்தாரமாகவும் சுருக்கமாகவும் உமக்குச் சொன்னேன். இது தேவர்களாலும் அடையமுடியா

தது. ஸ்பஷ்டமான யுக்திகளுள்ள ஜ்ஞானத்தைப்பற்றி அடிக்கடி உமக்குச் சொன்னேன். இதைத் தெரிந்துகொண்ட புருஷன் ஸம்சயங்களற்றவனுகி மோக்ஷத்தை யடைவான். உம்முடைய கேள்விக்கு நன்ருக என்னுல் சொல்லப்பட்ட பதிலை எவன் மனத்தில் தரிக்கிருனே அவன் பரப்ரஹ்மத்தை யடைவான். என்னுலுபதேசிக்கப்பட்ட தர்மம் ஸநாதனமானது, ரஹஸ்யமானது; இதனை என்னுடைய பக்தர்களுக்கு எவன் உபதேசிக்கிருனே அந்த ப்ரஹ்மத்தில் பாகமுள்ள புருஷனுக்கு என்னுடைய ஆத்மாவைக் கொடுக்கிறேன். எவன் பரிசுத்தமான இந்த என்னுடைய உபதேசத்தை ஒவ்வொருநாளும் உரக்கப்படிக்கிருனே அவன் ஜ்ஞானமாகிய தீபத்தால் என்னைத் தர்சித்து சுத்தனுவான். எவன் இதை ச்ரத்தையுடன் கேட்கிருனே அவன் என்னிடத்தில் பக்தியை யடைகிருன். கர்மத்தால் கட்டப்படமாட்டான். ஓ உத்தவ! தோழனே! ப்ரஹ்மஸ்வரூபத்தை நன்ருகத் தெரிந்துகொண்டீரா? உம்முடைய மனத்திலிருக்கும் சோகம், மோஹம் இவைகள் நிவர்த்தியாயினவா? இதனை டம்பமுள்ளவனுக்கும், நாஸ்திகனுக்கும், வஞ்சகனுக்கும், கேட்க விருப்பமில்லாதவனுக்கும், பக்தியில்லாதவனுக்கும், கெட்டவனுக்கும் உபதேசிக்கவேண்டாம். மேற்காட்டிய தோஷங்களில்லாதவனும் ப்ராஹ்மண பக்தியுள்ளவனும் இதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ப்ரியமுள்ளவனும், ஸாதுவும், சுத்தனுமாயிருப்பவனுக்கு உபதேசிக்கலாம். சூத்திரர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் பக்தியிருக்குமானுல் அவர்களுக்கு முபதேசிக்கலாம். அமிருதத்தைக் குடித்தவனுக்கு வேறு குடிக்கக்கூடிய வஸ்துவில் எப்படி ப்ரியமிருக்காதோ அது போல இதனைத் தெரிந்துகொண்டவனுக்குத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் வேறே பாக்கியிராது. மேலும் ஜ்ஞானம், கர்மம், யோகம், கிருஷி முதலிய வார்த்தை, தண்டநீதி இவைகளில் எவ்வளவு ப்ரயோஜனம் மனிதர்களுக்கு ஏற்படுகிறதோ? அந்த நான்குவிதமான பயனுகவும் உமக்கு நானிருக்கிறேன். மனிதன் எப்பொழுது எல்லா கர்மங்களையும்விட்டு என்னிடத்தில் ஆத்மாவை ஸமர்ப்பிக்கிருனே அப்பொழுது எனக்கு ப்ரியனுகிருன். மேலுமவன் மோக்ஷத்தை அடைந்து என்னுடைய ஆத்மாவாக ஆவதற்குத் தகுந்தவனுகிருன்" என்ருர்.

35—46. அதனைக்கேட்ட உத்தவர் உத்தம ச்லோகராகிய பகவானுடைய வார்த்தையைக்கேட்டு அதிக ஸந்தோஷமடைந்து ஆனந்தக்கண்ணீரைப் பெருக்கி அதனால் கண்டமடைத்து பேச முடியாதவராகி மௌனமாகவிருந்து ஸ்நேஹத்தால் கலங்கிய மனத்தை தைர்யத்தால் ஸ்திரப்படுத்திக்கொண்டு, தம்மை கிருதார்த்தரென்று நினைத்து பகவானுடைய பாதங்களில் தலைபடும்படி நமஸ்கரித்து கைகூப்பி ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி "என்னை ஆச்ரயித்திருந்த மோஹமாகிய இருள் உம்முடைய ஸன்னிதான மஹிமையால் ஓடிப்போயிற்று. ப்ரஹ்மதேவருக்கும் பிதாவாகிய ஓ பகவன்! அக்னியின் அருகிலிருப்பவனுக்குக் குளிராவது, இருளாவது இருக்குமா? ஜ்ஞானமாகிய தீபம் உம்முடைய மாயயால் அபஹரிக்கப்பெற்றிருந்தாலும் என்னிடத்திலுள்ள கருணையால் அதனைத் திருப்பிக்கொடுத்தீர். ஆனதால் உம்மால் செய்யப்பட்ட உபகாரத்தை நினைத்திருப்பவன் உம்முடைய பாதத்தைவிட்டு மற்றவையை சரணமடைவானோ? மேலும் தாசார்ஹர்கள் விருஷ்ணிகள், அந்தகர்கள், ஸாத்வதர்கள் ஆகிய இவர்களிடத்தில் எனக்கு ஸ்நேஹம் மிகவும் ஸ்திரமாகவிருந்தது. அதுவும் ஸ்ருஷ்டியின் விருத்திக்காக உம்முடைய மாயயாலேற்பட்டதேயாம். அதனை ஆத்மஜ்ஞானமாகிய கத்தியால் வெட்டினீர். ஓ மஹாயோகியே! உம்மைச் சரணமடைந்திருக்கிறேன். உம்மை நமஸ்கரிக்கிறேன். தாமரை மலர்போன்ற உம்முடைய பாதங்களில் எனக்கு ஸ்திரமான பக்தியுண்டாகும்படியான உபாயத்தை எனக்குபதேசியும்" என்று கேட்டுக்கொண்டார்.

41—44. அதனைக்கேட்ட பகவான் உத்தவரை நோக்கி "ஓ உத்தவ! என்னுடைய ஆஜ்ஞையால் பதரிகாச்ரமத்திற்குச் செல்லும். அவ்விடத்திலிருக்கும் அலக நந்தையை (கங்கை) தர்சிப்பதாலும், ஸ்நானஞ்செய்வதாலும், ஆசமனியஞ் செய்வதாலும் ஸகல பாபங்களையும் நிவர்த்தித்துக்கொண்டு சுத்தராவீர். மேலும் நீர் மரையுரியை உடுத்திக்கொண்டும், காட்டிலுண்டான கிழங்கு முதலியவைகளைப் புஜித்து ஸுகத்தில் விருப்பமில்லாதவராகி குளிர், உஷ்ணம் முதலிய விஷயங்களை ஸஹித்து நல்ல ஸ்வபாவமுள்ளவராகி இந்திரியங்களை ஜயித்து ஒரேவிடத்தில் சென்ற புத்தியால் மனத்தை அடக்கி சாந்தராகி ஜ்ஞானம்,

விஜ்ஞானம் இவைகளை அடைந்து என்னால் உபதேசிக்கப்பெற்றதை மனனஞ்செய்யும். அப்படி மனத்தால் விசாரித்து வாக்கு, சித்தம் ஆகிய இவைகளை என்னிடத்தில் செலுத்தி என்னுடைய தர்மத்திலேயே நோக்கமுள்ளவராக விருக்கவேண்டும் அதன்பின் முக்குணங்களால் ஏற்பட்டவைகளைத் தாண்டி என்னை அடைவீர்" என்று அநுக்கிரஹித்தார்.

45—47. எவரை த்யானஞ்செய்தால் ஸம்ஸாரம் நிவர்த்தியடையுமோ, அந்த ஸ்ரீ கிருஷ்ணனால் மேற்காட்டிய வண்ணம் அநுக்கிரஹிக்கப்பெற்ற உத்தவர் ஸ்ரீ கிருஷ்ணனை ப்ரதக்ஷிணஞ் செய்து அவருடைய பாதங்களில் தம் தலைபடும்படி நமஸ்காரஞ் செய்தார். மேலுமவர் ஸுகதுக்கங்களற்றவரானாலும் அந்த ஸமயத்தில் பகவானைவிட்டுப் பிரியமனமில்லாமல் கண்ணீரைப் பெருக்கினார். பின்னுமவர் ஸ்ரீ கிருஷ்ணன்மீதுள்ள ப்ரியத்தால் அவரைவிட்டுப் பிரியமனமில்லாமலிருந்தார். அதனைக் கண்ணுற்ற ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய பாதுகைகளைக் கொடுத்தார். அவைகளை உத்தவர் தலையில் வைத்துக்கொண்டு அடிக்கடி பகவானை நமஸ்கரித்து பதரிகாச்ரமத்தை நோக்கிப் புறப்பட்டார். மஹா பாகவதராகிய உத்தவர் பகவானையே ஹிருதயத்தில் த்யானித்துக் கொண்டு பதரிகாச்ரமஞ்சென்று தபஞ்செய்து பகவான் அநுக்கிரஹித்தபடி பரப்ரஹ்மமாக ஆனார்.

48—49. யோகேசர்களால் ஸேவிக்கப்பெற்ற பாதங்களுள்ள ஸ்ரீ கிருஷ்ணனால் மேற்காட்டிய வண்ணம் பாகவதராகிய உத்தவருக்கு ஜ்ஞானமாகிய அமிருதம் கொடுக்கப்பட்டது (உபதேசிக்கப்பட்டது) அதுவும் பக்திமார்க்கமுமொன்றே (ஆனந்த ஸமுத்திரத்தால் கிடைத்தது). அப்படிப்பட்ட இதனை எவன் ச்ரத்தையுடன் கொஞ்சமாவது ஸேவிக்கிறானோ, அவனுடைய ஸம்பந்தமுள்ளவன் மோக்ஷத்தை அடைவான். வண்டானது புஷ்பத்திற்குக் கெடுதியில்லாமலேயே அதன் ரஸத்தை (தேனை) எப்படி கிரஹிக்கிறதோ, அப்படி பகவான் தம்மால் வெளியிடப்பட்ட வேதத்தை அநுஸரித்து அதன் ஸாரமாகிய ஜ்ஞான, விஜ்ஞானத்தையும், ஸமுத்திரத்திலிருந்து அதன் ஸாரமாகிய அமிருதத்தையும் எடுத்து அதற்கு அதிகாரிகளான தம்முடைய ஸேவகர்களுக்குக் கொடுத்தார் (ப்ரவிருத்தி மார்க்கத்தில் நோக்கமுள்ள

தேவர்களுக்கு அமிருதத்தைக்கொடுத்து கிழத்தன்மை, மரணம் இவைகளால் நேரும் பயத்தை நிவர்த்தித்தார். நிவிருத்தி மார்க்கத்தில் நோக்கமுள்ள உத்தவர் முதலிய அதிகாரிகளுக்கு ஜ்ஞானாமிருதத்தைக்கொடுத்து ஸகல பயங்களையும் நிவர்த்தித்தார்). அப்படிப்பட்ட விஷ்ணுவென்று பெயர்பெற்றவரும் புராணபுருஷருமான புருஷோத்தமரை நமஸ்கரிக்கிறேன்.

---

## அத்யாயம்—30.

### ஸ்ரீ கிருஷ்ணன் யதுவம்சத்தை ஸம்ஹரித்தது.

பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி "பாகவதர்களுக்குட் சிறந்தவராகிய உத்தவர் பதரிகாவனஞ்சென்றபின் ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாக விருக்கும் ஸ்ரீ கிருஷ்ணன் என்ன செய்தார்? யதுகுலத்திற்கு ப்ராஹ்மண சாபம் நேர்ந்ததால் தாமும் அந்த சாபத்தை யநுஸரித்து ஸகல ஜனங்களுக்கும் பிரியமான தம்முடைய சரீரத்தை எப்படி விட்டார்? எந்த சரீரத்தைப் பார்த்த ஸ்திரீகள் தங்கள் நேத்திரங்களை அதிலிருந்து திருப்பிக்கொள்ள முடியாதவர்களாக விருந்தார்களோ, ஸாதுக்கள் எந்த சரீரத்தை காதுகளின் வழியாக மனத்தில் வைத்துக் கொள்ளுகிறார்களோ, அவர்களுடைய மனத்தைவிட்டு எது நகருகிறதில்லையோ, எதனுடைய காந்தியைப்பற்றி கவிகள் வர்ணித்ததால் அந்த காவ்யம் மேன்மையை அடைகிறதோ, பாரதயுத்தத்தில் அர்ஜுனருடைய ரதத்திலுட்கார்ந்திருந்த எந்த சரீரத்தைத் தர்சித்து மரணமடைந்தவர்கள் பகவத் ஸாரூப்யத்தை அடைந்தார்களோ, அந்த சரீரம் பகவானால் எப்படி விடப்பட்டது?' என்று கேட்டார்.

5—25. அதனைக்கேட்ட சுகர் அரசனை நோக்கி "ஸ்ரீ கிருஷ்ணன் த்வாரகா நகரத்தில் நேர்ந்த அபசகுனங்களைப்பார்த்து ஸுதர்மா யென்ற ஸபையிலிருக்கும் யாதவர்களை நோக்கி "மிக்க உத்பாதங்கள் இதோ காணப்படுகின்றன. இதனால் எல்லாருக்கும் நாசம் ஸமீபித்திருக்கிறதென்று தெரியவருகிறது. நம்முடைய குலத்திற்கு ப்ராஹ்மணர்களுடைய சாபமும் ஏற்பட்டிருக்கிறது அதனை நிவர்த்திக்க முடியாது. ஆனதால் இனி இவ்விடத்

தில் ஒரு முஹூர்த்தகாலங்கூட தாமதிக்கக்கூடாது. ஸ்திரீகளும் பாலர்களும், வயது முதிர்ந்தவர்களும் சங்கத்வாரமென்ற விடத்திற்குப் போகட்டும். நாமெல்லோரும் ப்ரபாஸ க்ஷேத்திரத்திற்குப் போவோம், அவ்விடத்தில் ஸரஸ்வதீநதி மேற்றுமுகமாக ப்ரவஹிக்கிறது. அவ்விடத்தில் ஸ்நானஞ்செய்து சுத்தர்களாகி உபவாஸமிருந்து மிக்க ஸாவதானர்களாகி தேவதைகளுக்கு அபிஷேகம் அலங்காரம் முதலியவைகளைச் செய்து பூஜிப்போம். மிகுந்த அதிருஷ்டமுள்ளவர்களான ப்ராஹ்மணர்களையும் பூஜிப்போம். கோதானம், பூமிதானம், ஸுவர்ணதானம், வஸ்திரதானம் கஜதானம், அச்வதானம், கிருஹ (வீடு) தானம், ரததானம் இவைகளைச் செய்வோம். தேவதைகளையும், ப்ராஹ்மணர்களையும், பசுக்களையும் பூஜித்தால் க்ஷேமமுண்டாகும். அரிஷ்டம் நிவர்த்தியாகும்" என்றார். அதனைக்கேட்ட யாதவர்களுக்குள் பெரியோர்கள் அப்படியே செய்வோமென்று சொல்லி கப்பல்களிலேறி ஸமுத்திரத்தைத்தாண்டி ரதங்களின்மீதேறி ப்ரபாஸஞ்சென்றார். அவ்விடத்தில் ஸ்ரீ கிருஷ்ணனால் சொல்லப்பட்டபடியே க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய எல்லாகர்மங்களையும் செய்தார்கள். பின்பு அவர்கள் தைவச்செயலால் புத்தி மயக்கமடைந்து மைரேயமென்ற உத்தமமான மதுவைக்குடித்தார்கள். அதைக்குடித்தவர்களுடைய மனம்ப்ரமிக்கும். அவர்கள் இயற்கையில் மிக்கசூரர்கள்; மதுபானஞ் செய்துமதத்தை அடைந்தார்கள்; ஸ்ரீ கிருஷ்ணனுடைய மாயயால் மூடர்களானார்கள். அதனால் ஒருவருக்கொருவர் சண்டைசெய்து மிக்ககோபத்துடன் கத்தி, வில், பாணம், கதாயுதம், தோமரம் ஆகிய இவைகளால் அடித்துக்கொண்டார்கள். யானை, குதிரை, ரதம், கோ புரகழுதை, ஒட்டகம், விருஷபம், காலாட்கள் முதலியவைளுடன் ஒருவரையொருவர் எதிர்த்தார்கள். இப்படி அவர்கள் அடித்துக் கொண்டது காட்டில் யானைகள் தந்தங்களால் அடித்துக்கொண்டாற்போலிருந்தது. ப்ரத்யும்னனும் ஸாம்பனும், அக்ரூரர், போஜன் இவர்களும், அனிருத்தர் ஸாத்யகி இவர்களும், ஸுபத்ரன், ஸங்கிராமஜித் இவர்களும், ஸுசாரு, கதன், இவர்களும், ஸுமித்திரன் ஸுரதன் இவர்களும் சேர்ந்து யுத்தஞ்செய்தார்கள். பின்னும் உல்முகன், ஸஹஸ்ரஜித், பானுமுதலிய மற்றவர்களும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டார்கள். இப்படி அவர்களுக்கு மோஹமுண்டானதற்கு ஸ்ரீ கிருஷ்ணனுடைய மாயயேகாரணம்,

தாசார்ஹர்கள், போஜர்கள், அந்தகர்கள் விருஷ்ணிகள், ஸாத்வதர்கள், மதுக்கள், அர்புதர்கள், சூரஸேனர்கள் ஆகிய எல்லாரும் ஸ்நேஹத்தைவிட்டு அடித்துக்கொண்டார்கள். புத்திரர்கள் பிதாக்களுடன் சண்டைசெய்தார்கள். மேலும் ஸஹோதரன், ஸஹோதரியின் புத்திரன், பெண்ணின் புத்திரன், பிதாவின் ஸஹோதரன், அம்மான், மித்திரன், பந்து, ஜ்ஞாதியென்ற ஸ்நேஹத்தை மறந்து அடித்துக்கொண்டார்கள். பின்பு பாணங்களும், விற்கழுகளும், ஆயுதங்களும் ஒடிந்தன. அப்பொழுது ஸமுத்திரக் கரையில் முளைத்திருக்கும் கோரைகளைப் பிடுங்கிக்கொண்டார்கள். அவைகள் வஜ்ரம்போலும் தோமரம்போலும் கெட்டியானவைகளாக விருந்ததானதால் அவைகளை யெடுத்துக்கொண்டு அடித்துக் கொண்டார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் சண்டைசெய்ய வேண்டாமென்று ஸமாதானஞ்செய்தார். அப்படியும் அதனைக் கேளாமல் ஸ்ரீ கிருஷ்ணனையும், பலராமனையும் சத்ருவாக நினைத்து அவர்களை அடிப்பதற்கு ஓடிவந்தார்கள். இப்படி ஸ்ரீ கிருஷ்ணனுடைய மாயயால் மோஹித்து ப்ராஹ்மண சாபத்தை வ்யாஜமாகக்கொண்டு யாதவர்கள் கோரைகளால் அடித்துக்கொண்டு மரணமடைந்தார்கள். மூங்கில் ஒன்றோடொன்று உராய்வதால் உண்டாகும் அக்னி அதனை யெறிப்பதுபோல் அவர்களுடைய சண்டையாலுண்டான கோபம் அவர்களுடைய குலத்தை நாசஞ்செய்தது. இப்படி யாதவகுலம் நஷ்டமானபின் ஸ்ரீ பகவான் பூமியின்பாரம் நிவர்த்தியடைந்ததென்று நினைத்தார்.

**26—32.** அப்பொழுது பலராமன் ஸமுத்திரக்கரையில் பரமபுருஷனை த்யானஞ்செய்வதாகிய யோகத்தைச்செய்து பரமாத்மாவிடத்தில் தமது ஆத்மாவைச்சேர்த்து பூலோகத்தைவிட்டு பரலோகஞ்சென்றார். இப்படி பலராமன் சென்றபின் ஸ்ரீ கிருஷ்ணன் அச்வத்த மரத்தின் அடியில்மௌனமாக உட்கார்ந்தார். அப்பொழுது பகவானுடைய ஸ்வரூபம் நான்குகைகளுள்ளதாகவும், தம்முடைய காந்தியால் ப்ரகாசிப்பதும், புகையில்லாமல் தணலாகவிருக்கும் அக்னிபோல் திக்குகளில் இருளைப் போக்கி ப்ரகாசிக்கச் செய்கிறதாவும், ஸ்ரீ வத்ஸமென்ற அடையாளமுள்ளதாகவும், மேகம்போல் கருத்த திருமேனியுள்ளதும் ஸுவர்ணம்போல ப்ரகாசிக்கும் தேஜஸுள்ளதாகவும், இரண்டு

மனோஹரமான பீதாம்பரங்களை தரித்ததாகவும், அழகிய புன் சிறிப்புள்ள தாமரை மலர்போன்ற முகமுள்ளதாகவும், கருத்தும், சுருண்டவையுமான தலைமயிர்களுள்ளதாகவும், தாமரைமலர்கள் போல அழகான நேத்திரங்களுள்ளதாகவும், ப்ரகாசிக்கும் மகர குண்டலங்களுள்ளதாகவும், கடிஸூத்ரம் (அரைஞாண்) யஜ்ஞோ பவீதம், கிரீடம், வளை, தோள்வளை, ஹாரம், பாதஸரம், முத்திரை, கௌஸ்துபம் ஆகிய இவைகளால் அலங்கிருதமாகவும், வனமாலை யுள்ளதாகவுமிருந்தது. மேலும் சக்கிரம்முதலிய ஆயுதங்கள் திவ்ய ரூபத்துடன் பகவானை யுபாஸித்துக்கொண்டிருந்தன. அப்போது பகவான் தாமரைமலர்போல சிவந்திருக்கும் இடது பாதத்தை வலது துடையில் வைத்துக்கொண்டிருந்தார்.

33—38. அந்த ஸமயத்தில் ஜரனென்ற ஒரு வேடன் காட்டில் ஸஞ்சரித்து வரும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாதத்தைப் பார்த்து அந்த மானுடைய முகமென்று நினைத்து ஒரு பாணத்தால் அடித்தான். அந்த பாணத்தின் நுனியில் இரும்பு உலக்கையில் எஞ்சியதுண்டு வைக்கப்பட்டிருந்தது. பின்பு அந்த வேடன் நான்கு கைகளுடன் ப்ரகாசிக்கும் பகவானைப்பார்த்து பயந்து அவருடைய ஸமீபஞ்சென்று அவரை நமஸ்கரித்தான். பின்னுமவன் பகவானை நோக்கி "உத்தமச்லோக! ப்ரபுவே! மதுஸூதன! அறியாத்தன் மையால் உமக்கு அபராதஞ்செய்தேன். பாபியான என்னுடைய குற்றத்தைப் பொருத்துக்கொள்ள வேண்டும். எவரை ஸ்மரித் தால் அஜ்ஞானமாகிய இருள்விலகுமென்று சொல்லுகிறார்களோ, அப்படிப்பட்ட மஹாவிஷ்ணுவாகிய உமக்கு அபராதஞ்செய் தேன். ஆனதால் நான் இனி இம்மாதிரி செய்யாமலிருக்கும்படி பாபியும், வேடனுமான என்னைச் சிக்ஷியும். உம்முடைய மாய யின் கார்யத்தை ப்ரஹ்மதேவரும், அவருடைய புத்திரர்களான ருத்ரர், ப்ரஜாபதிகள், வேதத்தைக் கண்டுபிடித்த மஹர்ஷிகள் ஆகிய எல்லாரும் தெரிந்துகொள்ளவில்லை. மிக்க பாபியான எனக்கு அந்த உம்முடைய மாயாகார்ய மெப்படித்தெரியும்?" என்று கேட் டுக்கொண்டான்.

39—40. அதனைக்கேட்ட பகவான். வேடனை நோக்கி "அட! ஜர! பயப்படவேண்டாம், எழுந்திரு, என்னுடைய, அபிப்

பிருயப்படி நீ செய்தாய். என்னுடைய உத்திரவின்படி புண்ணிய சாலிகள் செல்லுமிடமான ஸ்வர்க்க லோகத்திற்குப்போ என்று அனுக்ரஹித்தார். இப்படி தமதிஷ்டப்படி மனிதவடிவங்கொண்ட பகவான் அநுக்கிரஹித்தவுடன் அந்தவேடன் மூன்றுதடவை பகவானை ப்ரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்து விமானத்தின் மீதேரி ஸ்வர்க்க லோகஞ்சென்றான்.

41—50. அப்பொழுது தாருகன் ஸ்ரீ கிருஷ்ணனைத்தேடி துளஸியின் வாஸனையுள்ள காற்றினால் பகவானிருப் பிடத்தைத் தெரிந்துகொண்டு அவ்விடம் வந்து ரதத்தைவிட்டிறங்கி அச்வத்தமரத்தின் அடியில் சக்கிரம்முதலிய ஆயுதங்களால் உபாஸிக்கப் பெற்று ப்ரகாசிக்கும் ப்ரபுவைதர்சித்து நமஸ்கரித்தான். பின்னுமவன் பகவானைநோக்கி "ஓப்ரபுவே! உம்மைப்பாராமல் என்னுடைய இந்திரியங்கள் சக்தியற்று இருளடைந்தன. இரவில் சந்திரன் அஸ்தமயத்தை அடைந்தபின் எப்படி பதார்த்தங்கள் கண்ணுக்குப் புலப்படவில்லையோ. அப்படிதிக்குகள் தெரியவில்லை மனத்திற்கு ஸந்தோஷமுண்டாகவில்லை'' என்றான். இப்படி தாருகன் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது கருடத்வஜமுள்ளரதமானது ஆகாயஞ்சென்றது. சக்கிரம்முதலிய ஆயுதங்களும் அதன்பின்சென்றன. அதனைக் கண்ணுற்றதாருகன் மிகவும் ஆச்சர்யமடைந்தான். அப்படிப்பட்ட தாருகனைநோக்கி ஸ்ரீ கிருஷ்ணன் "ஓ ஸாரதியே! த்வாரகா நகரத்திற்கு நீ போய் நம்முடைய பந்துக்களுக்கு பலராமனுடைய மரணத்தையும், மற்றவர்களுடைய நாசத்தையும் என்னுடைய தசையையும் சொல்லு; நீங்கள் இனி த்வாரகையில் வஸிக்கவேண்டாம். என்னால் விடப்பட்ட த்வாரகாநகரத்தை ஸமுத்திரம் ஜலத்தால் கவர்ந்துகொள்ளும். ஆனதால் அவர் அவர்களுடைய தனம் முதலியவைகளை யெடுத்துக்கொண்டு பந்துக்களுடன் அர்ஜுனனால் காப்பாற்றப்பட்டு நீங்களெல்லாரும் இந்திர ப்ரஸ்தத்திற்கு போகவேண்டும். நீ என்னுடைய தர்மத்தை அடைந்து இவை என்னுடையமாயயால் செய்யப்பட்டவையென்பதை தெரிந்துகொண்டு ஜ்ஞானனிஷ்டனாகி சாந்தியை அடையவேண்டும்.'' என்று ஆஜ்ஞாபித்தார். அதனைக்கேட்ட தாருகன் பகவானை விட்டுப்பிரிய மனமில்லாதவனானாலும் அவருக்குப்ரதக்ஷிண நமஸ்காரங்களைச்செய்து அடிக்கடி அவருடைய பாதங்களைத் தன்தலையில் வைத்துக்கொண்டு த்வாரகா நகரஞ்சென்றான்.

## அத்யாயம்—31.

### பகவான் வைகுண்டஞ்சென்றது,

பின்பு ப்ரஹ்மதேவரும், பார்வதியுடன் பரமசிவனும், இந்திரன் முதலிய தேவதைகளும், மஹர்ஷிகளும், ப்ராஜாபதிகளும், பிதிருக்களும், ஸித்தர்களும், கந்தர்வர்களும், வித்தியாதரர்களும், உரகர்களும், சாரணர்களும், யக்ஷர்களும், ராக்ஷஸர்களும் கின்னரர்களும் அப்ஸரஸுக்களும், பகவான் வைகுண்டஞ்செல்வதைப் பார்ப்பதற்காக மிகுந்த ஸந்தோஷத்துடன் அவ்விடம்வந்தார்கள். மேலுமவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அவதாரங்களைப்பற்றியும் சரித்ரங்களைப்பற்றியும் கானஞ்செய்தார்கள். புஷ்பங்களை வர்ஷித்தார்கள். ஆகாயம் அவர்களுடைய விமானங்களால் வ்யாப்தமாக விருந்தது. இப்படி மிகுந்த பக்தியுடன் தேவர்கள் வந்துகூடினார்கள். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய விபூதிகளான அந்த தேவர்களைப்பார்த்துவிட்டு தாமரைமலர்போன்ற நேத்திரங்களை மூடிக்கொண்டார். (ஒவ்வொருதேவர்களும் தங்கள் லோகத்திற்குப் பகவானை அழைத்துப்போவதற்காக வந்திருப்பதால் ஸமாதி செய்வதென்ற வ்யாஜமாககண்களை மூடிக்கொண்டாரென்றுகருத்து) ஆனால் யோகிகள் யோகதாரணையின் மஹிமையால் சரீரத்தையெறித்து லோகாந்திரத்தை அடைவது போலல்லாமல் பகவான் ஸகல லோகங்களுக்கு மிருப்பிடமான அழகிய தமது சரீரத்துடனேயே தமது லோகஞ்சென்றார். அப்பொழுது தேவதுந்துபிகள் முழக்கப்பட்டன. ஆகாயத்திலிருந்து புஷ்பமாறி பெய்தது; ஸத்யம், தர்மம், திருதி கீர்த்தி ஸ்ரீ ஆகிய இவைகள் ஸ்ரீ கிருஷ்ணன் பின்சென்றன. ஆகாயத்தில் செல்லுகின்ற மின்னலுடைய கதி எப்படி மனிதர்களுக்குத் தெரியவில்லையோ, அப்படி பகவான் தம்முடைய தேஜஸ்ஸில் ப்ரவேசித்தது ப்ரஹ்மாமுதலிய தேவர்களுக்குந்தெரியவில்லை. ப்ரஹ்மா, ருத்ரன் முதலிய தேவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய யோகமஹிமையைப்பற்றி ஆச்சர்யமடைந்து அவரைப் பற்றி ச்லாகித்துகொண்டு தங்கள் தங்களிருப்பிடஞ்சென்றார்கள். ஓ பரீக்ஷித்து மஹாராஜனே! பரமாத்மாவாகிய பகவானுக்கு உத்பத்தியில்லை. அப்படிப்பட்டபகவான் இந்த ஜகத்தைப்படைத்து அதில்தாம் அநுப்ரவேசித்து அத்துடன் விளையாடி கடைசியில் அதனை ஸம்ஹரித்து தமது மஹிமையிலிருக்கிறார். இப்படிப்பகவான்

அவதரிப்பதும். லோகாந்தரஞ் செல்வதும் நடன் (வேஷதாரி) வேஷம் போட்டுக்கலைப்பது போன்றதென்று தெரிந்துகொள்ளும். மநுஷ்யனுக அவதரித்த பகவான் யமலோகஞ்சென்ற ஆசார்யருடைய குழந்தையை அதே சரீரத்துடன் திருப்பிக்கொண்டுவந்தார். ப்ரஹ்மாஸ்திரத்தால் எறிக்கப்பட்ட உம்மை கர்ப்பத்தில் காப்பாற்றினர். யமனை ஜயித்தவரான ருத்திரனையும் (பாணு ஸமரயுத்தத்தில்) ஜயித்தார். ஜரனென்ற வேடனை இந்தமனித சரீரத்துடன் புண்ய லோகமனுப்பினர். இவ்வளவு மஹிமையுள்ள பகவானுக்குத் தமது சரீரத்தைக் காப்பாற்றிக்கொள்வது பெரியகார்யமல்ல. ஆனாலும் மனுஷ்ய சரீரத்தால் என்னப்ரயோஜன முண்டாகப்போகிறது ஒன்றுமில்லை யென்பதைக் காண்பித்துக்கொண்டுத் தமது சரீரத்தை மநுஷ்யலோகத்தில் வைக்கவில்லை. அவர் எல்லா சக்தியுள்ளவர்; ஸகல ஜகத்தையும் வேறு ஒத்தாசையின்றி படைத்துக் காப்பாற்றி ஸம்ஹரிப்பவர்; எவன்காலையில் எழுந்திருந்து சுத்தனுகி பக்தியுடன் பகவான் வைகுண்டஞ் சென்றதாகிய இந்தக் கதையை படிக்கிருனே, அவன் அந்தப்பகவானை அடைவான்.

15—21. தாருகன் த்வாரகைக்குச்சென்று வஸுதேவர், உக்கிரஸேனர் இவர்களுக்கு நமஸ்காரஞ்செய்து ஸ்ரீ கிருஷ்ணனை விட்டுப் பிரிந்ததால் அழுதான் விருஷ்ணிகள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு மாணமடைந்ததையும், பகவான் வைகுண்டஞ் சென்றதையும் தெரிவித்தான். அதனைக்கேட்டு அவர்கள் மிக்க துக்கத்தை அடைந்து மனம் நடுங்கி பந்துக்கள் மாணமடைந்திருக்குமிடத்திற்கு சீக்கிரமாக சென்றுர்கள். மாணமடைந்திருக்கும் பந்துக்களைப் பார்த்தார்கள். வஸுதேவரும் தேவகியும் ராமகிருஷ்ணர்களைக் காணுமல் ப்ராணனை விட்டார்கள், ஸ்திரீகள் எல்லாரும், தங்கள் தங்கள் புருஷர்களுடைய சரீரத்தை கட்டிக்கொண்டு உடன்கட்டையேறி சரீரத்தை விட்டார்கள். பலராமனுடைய பத்னிகளும் அக்னியில் ப்ரவேசித்தார்கள். வஸுதேவருடைய பத்னிகள் அவருடைய சரீரத்தையும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய நாட்டுப்பெண்கள் ப்ரத்யும்னன் முதலியவர்களுடைய சரீரங்களையும் ஆலிங்கனஞ்செய்துகொண்டு அக்னி ப்ரவேசஞ் செய்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணனுடைய பத்னிகளாகிய ருக்மிணி முதலிய

வர்கள் பகவானையே த்யானஞ்செய்து தன்மயர்களாகி அக்னி ப்ரவேசஞ்செய்தார்கள்.

21—26. அர்ஜுனர் தம்மிடத்தில் மிக்க ப்ரியமுள்ள தோழராகிய பகவானைவிட்டுப் பிரிந்து மிக்க துக்கத்தை அடைந்து அவரால் உபதேசிக்கப்பெற்ற கீதாவாக்கியங்களை நினைத்து மனத்தை ஸமாதானஞ் செய்துகொண்டார். பின்பு மரணமடைந்த பந்துக்களுக்கு புத்திரன் முதலியவர்களில்லாததால் தாம் அவர்களுக்கு உத்திரகிரியைகளை விதிப்படி செய்து முடித்தார். பகவான் வைகுண்டஞ் சென்றபின் க்ஷணத்திற்குள் த்வாரகாநகரம் ஸமுத்திரத்தில் மூழ்கிவிட்டது. பகவானுடைய அரண்மனையில் பகவானுடைய ஸான்னித்யம் எப்போழுது மிருப்பதால் அதுமாத்திரம் ஸமுத்திரத்தில் முழுகவில்லை. அந்தப்பகவானுடைய அரண்மனையை ஸ்மரித்தமாத்திரத்தில் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகின்றன; ஸகல க்ஷேமங்களும் கிடைக்கின்றன. பின்பு அர்ஜுனர் எஞ்சிய ஸ்திரீகள், சிறுவர்கள், வயதுமுதிர்ந்தவர்கள் ஆகிய இவர்களை இந்திரப் ரஸ்தத்திற்கு அழைத்து வந்து வஜ்ரனுக்கு (வஜ்ரனென்ற ஒருவர் எஞ்சியிருந்தார்) பட்டாபிஷேகஞ் செய்தார். பின்பு உம்முடைய பிதாமஹர்களான தர்மபுத்திரர் முதலியவர்கள் அர்ஜுன முகமாக பந்துக்களுடைய மரணத்தைக்கேட்டு உமக்கு ராஜ்யாபிஷேகஞ்செய்து லோகாந்திரஞ் சென்றார்கள்.

27—28. தேவர்களுக்கும் தேவராகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுலோகத்தில் அவதரித்து நடத்திய சரிதங்களை ச்ரத்தையுடன் எவன் படிக்கிறானோ, அவன் ஸகல பாபங்களற்று சுத்தனாவான். இப்படி பகவான் கிருஷ்ணனாக அவதரித்து செய்தபால்ய சரித்திரமுதலிய சரிதங்கள் க்ஷேமத்தைக்கொடுக்கக்கூடியவை; மிக்க அழகானவை; இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் ஸுகத்தைக் கொடுக்கக்கூடியவை; அவைகளை ச்ரத்தையுடன் படித்து வாக்கினால் உச்சரிக்கும் மனிதன் பரமஹம்ஸர்களுடைய கதியை அடைவான்.

---

ஓ

ஸ்ரீகிருஷ்ணாய பரமாத்மனே நம:

ஸ்ரீமத்

# பாகவத தமிழ் வசனம்

## பன்னிரண்டாவது ஸ்கந்தம்.

இது

இஞ்சிக்கோலை

பண்டிட் - ஆர். சிவராமசாஸ்த்ரி அவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டது.

சென்னை

புரோகிரஸிவ் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1912.

# விஷயஸூசிகை.

## ஸ்கந்தம்—12.

### அத்—1

பரீக்ஷித்து மஹாராஜன் சுகரைநோக்கி "க்ருஷ்ணன்வைகுண்டஞ்சென்றபின் பூமியிலிருந்த ராஜவம்சத்தைச் சொல்லும்படி கேட்டது—சுகர் 138-வர்ஷங்கள் ப்ரத்யோதனர்கள் அரசர்களாவார்களென்று வர்ணித்தது—சிசுநாபர் முதலிய பத்து அரசர்களுடையவம்சம்—நவநந்தர்களின் ராஜ்யகாலம்—சுங்கர்களுடைய ராஜ்யகாலம்—கண்வர்களுடைய காலம்—வஸுதேவன் முதலியமுப்பது அரசர்களுடையகாலம்—ஆபீரர்கள், கர்த்தபிகள், கங்கர்கள், யவனர்கள், பர்ப்பரர்கள், முருண்டர்கள் ஆகிய இவர்களுடையகாலம்—பின்னும்மற்ற அரசர்கள். 1702-1707

### அத்—2.

கலியுகத்தில் அதர்மம்விருத்தியடைவதால் நேரும் தோஷங்கள்—ப்ரஜைகளுக்கு அரசர்களால் நேரும் உபத்திரவம்—ஸப்தர்ஷிமண்டலத்தின் ஸ்திதி—நந்தனுடைய ராஜ்யகாலம் முதல் கலியின் விருத்திகாலம்—அரசர்களுடைய சரிதத்தைக் கேட்டு வைராக்யத்தை அடையவேண்டுமென்பது—மரு, தேவாபி இவர்கள் கலியின் முடிவில் ராஜவம்சங்களை ஸ்தாபிப்பார்களென்பது— .... 1707-1712

### அத்—3.

பூமிதேவி அரசர்களை பரிஹாஸஞ்செய்யும் வகை—ராஜ்யத்திலுள்ள தோஷங்கள்—ஒவ்வொருயுகங்களிலும் தர்மத்தின் பாதங்களின் ஸ்திதி—ஒவ்வொருயுகங்களிலும் மனிதர்களுடைய புத்தி முதலியவைகளின் ஸ்திதி—கலி காலத்திய ஜனங்களின் நடை—பகவானை ஸ்மரிப்பதாலேயே ஜனங்கள் கலியில் உத்தமகதியை அடைவார்களென்பது— ... 1712-1718

### அத்—4.

நைமித்திகம், ப்ராகிருதம், ஆத்யந்திகம், நித்யம் என்ற நான்கு வகையான லயங்களை வர்ணித்தது. .... 1718-1724

அத்—5.

பரீக்ஷித்திற்கு சுருக்கமாக சுகர் ஆத்மதத்வத்தை யுபதே சித்தது .... 1724-1725

அத்—6.

அதனைக்கேட்டு பரீக்ஷித்து கிருதார்த்தனுனேன் என்று சொன்னது—சுகர் பரீக்ஷித்தினிடம் விடைபெற்றுசென்றது—பரீக்ஷித்து மோக்ஷத்தை அடைந்தது—தக்ஷகன் அரசனைக் கடித்தது—விஷாக்னியால் அவருடைய சரீரம் சாம்பலாக ஆனது—அதைக் கண்ணுற்ற ஜனங்கள் ஆச்சர்யத்தை அடைந்தது—பரீக்ஷித்தின் புத்திரராகிய ஜனமேஜயர் ஸர்ப்பயாகஞ்செய்தது—தக்ஷகன் பயந்து மஹேந்திரனைச் சரணபடைந்தது—இந்திரனுடன் அக்னியில் விழக்கடவாய் என்று ரித்விக்குகள் சொன்னது—ப்ரஹஸ்பதி பகவான் ஜனமேஜயருக்கு வேதாந்தத்தை யுபதேசித்து யாகத்தை நிருத்தியது—சௌனகர் வேதவிபாகத்தைச் சொல்லும்படி ஸூதரைக்கேட்டது—ஓங்காரம் முதல் வேதம் வரையிலுள்ள வாக்கின் விபரத்தை ஸூதர்வர்ணித்து—வைவஸ்வத மன் வந்தரத்தில் வ்யாஸராகபகவான் அவதரித்து வேதங்களைப் பிரித்தது—பைலர் முதலியவர்களுக்கு நான்கு ஸம்ஹிதைகளையு முபதேசித்து—பைலருடைய சிஷ்யர்கள் அவர் அவர்களுடைய ஸம்ஹிதையைப்பிரித்தது—வைசம்பாயனருக்கும் யாஜ்ஞவல்கியருக்கும் நேர்ந்த விரோதம்—அவர் யஜுர்வேதத்தைக் கக்கிவிட்டு ஸூர்யனையுபாஸித்து சுக்கிலயஜுர்வேதத்தை அடைந்தது—கண்வர் முதலியவர்கள் யாஜ்ஞவல்கியருக்கு சிஷ்யர்களானது—ஸாமகராகிய ஜைமினியின் சிஷ்யர்களின் விபரம்.— .... 1726-1733

அத்—7.

அதர்வவேதத்தின் ஆசார்யரான ஸுமந்துவின் சிஷ்யர்கள்—பௌராணிகர்கள்—பத்து புராண லக்ஷணங்களின் ஸ்வரூபம்—பதினெட்டு புராணங்களின் பெயர்— ... 1734-1738

அத்—8.

சௌனகர் மார்க்கண்டேயருடைய சரிதத்தைச் சொல்லும்படி கேட்டது—ஸூதர் பதில்சொல்ல வாரம்பித்து மார்க்கண்டேயருடைய தபஸ்ஸை வர்ணித்தது—இந்திரனுல் தூண்டப்பட்ட மன்மதன் முதலியவர்கள் அவருடைய தபஸ்ஸிற்கு விக்னஞ்செய்தது

அதனால் அவன் மனங்கலங்காமலிருந்தது—நரநாராயணர்கள் அவரை அநுக்ரஹிப்பதற்காக மார்க்கண்டேயருடைய ஆச்ரமஞ் சென்றது-மார்க்கண்டேயர் அவர்களைப் பூஜித்து ஸ்துதித்தது 1738-1742

அத்—9.

நரநாராயணர்கள் ஸந்தோஷமடைந்து வரங்கொடுப்பதாகச் சொன்னது—மாயயைப்பார்க்க வேண்டுமென்று மார்க்கண்டேயர் விரும்பியது-அதனை யொப்புக்கொண்டு அவர்கள் பதரிகாவனஞ்சென்றது -மார்க்கண்டேயர் புஷ்பபத்திரநதியில் ஸந்தியோபாஸ்திசெய்து கொண்டிருக்கும்பொழுது அதிகமழைகாற்று இவைகளுண்டாகி உலகம்முழுவதும் ஓரேஜலமாக ஆனது—அதில் ஒரு ஆலமரத்தையும், அதன் இலையில் ஒருகுழந்தையையும் மார்க்கண்டேயர்பார்த்தது—அந்தக்குழந்தையின் திவ்ய தேஹத்தின் வர்ணனை—பின்பு அதன் ஸமீபஞ்சென்ற மார்க்கண்டேயர் அதன் மூச்சுக்காற்றினால் அதன் வயற்றிற்குட் ப்ரவேசித்தது—அவ்விடத்தில் மார்க்கண்டேயர் ஸகல ஜகத்துகளையும், தம்மையும், தம்முடைய ஆச்ரமத்தையுங்கண்டது—பின்பு அதன் மூச்சினால் வெளியில் தள்ளப்பெற்று வெளியில் வந்தது—அந்த குழந்தையும் ப்ரளய ஜலமும் மறைந்தது— 1743—1746

அத்—10.

பகவானுடைய மாயாமஹிமையை கண்ணுற்ற மார்க்கண்டேயர் பகவானைஸ்துதித்து ஆச்ரமத்தில் வஸித்தது—அப்பொழுது பார்வதியுடன் பரமசிவன் அவ்விடம்வந்தது—மார்க்கண்டேயர் பரமசிவனை ஸ்துதித்தது—பரமசிவன் ஸாதுக்களுடைய மஹிமையைவர்ணித்தது—வரங்கொடுப்பதாகச்சொன்னது—மார்க்கண்டேயர் ஸ்ரீமந்நாராயணனிடத்தில் பக்தி ஸ்திரமாகவிருக்கும்படி வரங்கேட்டது—பரமசிவன் மார்க்கண்டேயரை அநுக்ரஹித்து தமதுலகஞ்சென்றது. 1746-1750

அத்—11.

மஹாபுருஷனைப் பூஜிக்கும் விதத்தை விஸ்தாரமாக வர்ணித்து—ஒவ்வொரு மாதத்தையும் நடத்தும் ஸூர்யனுடைய பெயர்களையும் அவருக்கு ஸாதகர்களாக மஹர்ஷி முதலியவர்களையும், அவர் அவர்கள் செய்யும் கார்யங்களையும் நிரூபித்தது- 1750-1755

அத்—**12.**

முதலாவது ஸ்கந்தம் முதல் 12 ஸகந்தம் வரையிலுள்ள பாகவதத்தைச் சுருக்கமாக வர்ணித்தது—பாகவதத்தை படிப்பவர்களால் அடையப்படும் பயன். ... 1757-1763

அத்—**13.**

ஒவ்வொரு புராணங்களுடைய கிரந்தஸங்கியை—பாகவதத்தின் பெருமை—பாகவததானத்தின் விதியும்பயனும்—மங்களம்— .... 1763-1765

முற்றிற்று.

# ஸ்ரீமத்பாகவதம்.

## ஸ்கந்தம்.—12.

### அத்யாயம்—1.

கலியில் உண்டாகும் அரசர்கள்.

பரீக்ஷித்து மஹாராஜன் சுகரை நோக்கி "ஓ மஹார்ஷியே! யதுவம்சத்திற்கு அலங்காரமாகவிருந்த ஸ்ரீ கிருஷ்ணன் தம்முடைய லோகஞ்சென்றபின் பூமியில் யாருடைய வம்சமிருந்தது? அதனைச் சொல்லும்" என்று கேட்டார்.

2—19. (ஜராஸந்தனுடைய புத்திரன் ஸஹதேவன் அவனுடைய புத்திரன் மார்ஜாரி யென்பவன். அவருடைய புத்திரன் ச்ருத ச்ரவஸ்யென்று ஆரம்பித்து ரிபுஞ்ஜயன் வரையில் இருபது அரசர்கள் இனி உண்டாகப்போகிறார்கள் என்று ஒன்பதாவது ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டது, அதற்கும் மேலுண்டாகும் ஸந்ததிகள் இந்த அத்தியாயத்தில் நிரூபிக்கப்படுகின்றன) ப்ருஹத்ரதருடைய வம்சத்திலுண்டாகும் அரசர்களுக்குள் கடைசியான ரிபுஞ்ஜயருடைய மந்திரியாகிய சுனகரென்பவர் ரிபுஞ்ஜயரைக் கொன்று தம்முடைய புத்திரனை ப்ரத்யோதனனென்பவனை அரசனாகச் செய்யப்போகிறார். (ரிபுஞ்ஜயனுக்கே புரஞ்ஜயனென்றும் பெயருண்டு) அவருடைய புத்திரன் அலகன். அவனுடைய புத்திரன் விசாகயூபனென்பவன் அரசனாவான். அவருடைய புத்திரன் ஜனகனென்பவன் (ராஜகனென்று சில புஸ்தகங்களிலிருக்

கிறது) அவருடைய புத்திரன் நந்திவர்த்தர். அவருக்கு ஐந்து புத்திரர்கள். அவர்களுக்கு ப்ரத்யோதனர்களென்று பெயர். மேற்காட்டிய அரசர்கள் 138-வர்ஷங்கள் ராஜ்யபாலனஞ் செய்வார்கள். (128-வர்ஷங்களென்று சில புஸ்தகங்களிலிருக்கிறது) மேற்காட்டிய ப்ரத்யோதனர்களுக்கு சிசுநாபரும், அவருக்கு பக்ஷரும், அவருக்கு க்ஷேமதன்வாவும், அவருக்கு க்ஷேத்திரஜ்ஞரும், அவருக்கு அஜாதசத்துருவும், அவருக்கு விதிஸாரரும், அவருக்குத் தர்ப்பகரும், அவருக்கு ஆஜேயரும், அவருக்கு நந்திவர்த்தனரும், அவருக்கு மஹாநந்தியும் புத்திரர்களாக ஜனிப்பார்கள். மேற்காட்டிய பத்து அரசர்களுடைய ராஜ்யபாலனகாலம் முன்னூற்று அறுபது (360) வர்ஷங்களென்று தெரிந்துகொள்ளும். மஹா நந்தியின் புத்திரர் நந்தரென்பவர். அவர் மிக்க பலமுள்ளவர்; அளவற்ற ஐச்வர்யமுள்ளவர்; மஹாபத்ம கணக்கான ஸைன்யத்திற்கு அதிபதி; சூத்திர ஸ்திரியினிடத்தில் ஜனிப்பவர்; க்ஷத்திரிய குலத்தை நாசஞ்செய்பவர்; அதன்பின் வரும் அரசர்கள் அநேகமாக சூத்திரர்களாகவும், அதர்ம புத்தியுள்ளவர்களாகவு மிருப்பார்கள். அந்த நந்தரென்பவர் மஹாபத்ம கணக்கான ஸைன்யங்களுடன் தம்முடைய ஒரு குடையின் கீழ் ஸகல பூமிகளை பரிபாலிப்பார். இரண்டாவதுபரசுராமன் போலிருப்பார். அவருடைய உத்திரவை ஒருவரும் மீறமுடியாது. அந்தநந்தருக்கு ஸுமாலி முதலிய எட்டு புத்திரர்கள் ஜனிப்பார்கள். அவர்கள் நூறு வர்ஷங்கள் ராஜ்யபாலனஞ் செய்வார்கள். அப்போது ஒரு ப்ராஹ்மணன் (கௌடில்யன்=சாணக்யன்) மிக்கப்ரஸித்தியுள்ள ஒன்பது நந்தர்களை (நந்தனும் அவருடைய எட்டுகுமாரர்களும்) நாசஞ்செய்வார். அதன்பின்பு மௌர்வ்யவம்சத்திய அரசர்கள் பூமியைப் பரிபாலிப்பார்கள். அந்தப்ராஹ்மணர் மௌர்வ்யர்களில் முதல்வனாகிய சந்திரகுப்தனுக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்விப்பார். அந்தசந்திரகுப்தருக்கு வாரிஸாரரென்றும், அவருக்கு ஸுயசஸ்யென்றும், அவருக்கு ஸம்யதரென்றும், அவருக்கு சாலிசூகரென்றும், அவருக்கு ஸோமசர்மாவென்றும், அவருக்கு சததன்வாவென்றும், அவருக்கு ப்ராஹத்ரதரென்றும்; புத்திரர்கள் ஜனிப்பார்கள். மேற்காட்டிய மௌர்வ்யர்களென்ற பத்து அரசர்களின் காலம் நூற்றுமுப்பத்தேழுவர்ஷங்கள். (மௌர்வ்யர்கள் ஒன்பது அரசர்கள் தான் மேலேகாட்டப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் சந்திரகுப்தனுடைய

பிதாவைச்சேர்த்து பத்து அரசர்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அல்லது தசரதர் என்று ஒருவர் அந்தவம்சத்தைச் சார்ந்தவரென்று பாராசர்முதலியவர்கள் சொல்லிருப்பதால் அதை யநுஸரித்து பத்து அரசர்களென்று சொல்லப்பட்டிருக்கிறதென்று கருத்து) பிருஹத்ரதருடைய ஸேநாபதியும், சுங்கனுக்கு முந்தியவருமான புஷ்யமித்திரரென்பவர் தமக்கு யஜமானராகிய பிருஹத்ரதரைக்கொன்று தாம் அரசனுவார். அவருக்கு அக்னிமித்திரரும், அவருக்கு ஸுஜ்யேஷ்டரும், அவருக்கு வஸுமித்திரரும், அவருக்கு, பத்ரகரும், அவருக்கு புளிந்தரும், அவருக்கு யோகரும், அவருக்கு த்வஜமித்திரரும், அவருக்குப் பாகவதரும், அவருக்கு தேவஹூதியும் புத்திரர்களாக ஜனிப்பார்கள். மேற்காட்டிய சுங்கர்களென்று பத்து அரசர்கள் 112 வர்ஷங்கள் பூமியை அநுபவிப்பார்கள். அதன்பின்பு இப்பூமி அல்பகுணமுள்ள கண்வர்களுடைய வசமிருக்கும்.

20—21. தேவஹூதியின் மந்திரியான வஸுதேவரென்பவர் தேவஹூதியைக்கொன்று (தேவஹூதி டாஸ்திரீயிடத்தில் ஆசைப்பட்டதால்) தாம் அரசனுவான். அவர் மிக்க புத்திசாலியாக விருப்பார். அவருக்கு பூமித்திரரென்றும் அவருக்கு நாராயணரென்றும் அவருக்கு ஸுசர்மாவென்றும், புத்திரர்கள் ஜனிப்பார்கள். இவர்களே கண்வாயனர்களெனப் படுவார்கள். மேற்காட்டிய காண்வர்கள் முன்னூற்று நாற்பத்து ஐந்து (345) வர்ஷங்கள் இந்த பூமியை அநுபவிப்பார்கள்.

22—28. ஸுசர்மாவின் வேலைக்காரனுகிய பலியென்ற ஆந்திர ஜாதியில் பிறந்தவன் (தெலுங்கு ஜாதி) ஸுசர்மாவைக்கொன்று ஸ்வல்பகாலம் அரசனுவான். அவன் மிக்க அஸத்து. அவனுடைய ஸஹோதரராகிய கிருஷ்ணரென்பவர் பலிக்குப்பின்பு அரசனுவார். அவருக்கு சாதகர்ணரென்றும், அவருக்கு பௌர்ணமாஸரென்றும், அவருக்கு லம்போதரரென்றும், அவருக்கு மேகஸ்வாதியென்றும், அவருக்கு தண்டமானரென்றும், அவருக்கு அரிஷ்டகர்மாவென்றும், அவருக்கு ஹாலேயரென்றும், அவருக்கு புரீஷஸேதுவென்றும், அவருக்கு ஸுதர்சனரென்றும், அவருக்கு சகோரரென்றும் அவருக்கு சோமதியென்றும், அவருக்கு புரீமானென்

றும், அவருக்கு வேதரென்றும், அவருக்கு சிவரென்றும், அவருக்கு ஸ்கந்தரென்றும், அவருக்கு யஜ்ஞசிலரென்றும், அவருக்கு ஸிதரென்றும், அவருக்கு அஸிதரென்றும், அவருக்கு ச்ருதஸ்கந்தரென்றும், அவருக்கு யஜ்ஞசத்ருவென்றும், அவருக்கு விஜயரென்றும், அவருக்கு சத்திர பீஜரென்றும், அவருக்கு ஸுலோமதீயென்றும் புத்திரர்கள் ஜனிப்பார்கள். மேற்காட்டிய முப்பது அரசர்கள் 483-வர்ஷகாலம் பூமியைக் காப்பாற்றுவார்கள்.

29—31. அதன்பின்பு ஏழு ஆபீரர்களும், அவர்களுக்குப் பின்பு பத்து கர்த்தபிகளும், மிக்க ஆசையுள்ள பதினாறு கங்கர்களும், அதன்பின் எட்டு யௌவனர்களும், பதினான்கு பர்பரர்களும், பதிமூன்று முருண்டர்களும், பதினொன்று மௌனர்களும் அரசர்களாவார்கள். மேற்காட்டிய அறுபத்து எட்டு அரசர்களுடைய ராஜ்யகாலம் 1099-வர்ஷங்கள். மௌனர்கள் முன்னூறு வர்ஷங்கள் பூமியை பரிபாலிப்பார்கள்.

32—42. அவர்களுக்குப்பின் பூதநந்தன், யவ, ஹரன், சிசுநந்தி, அவருடைய ஸஹோதரராகிய யசோநந்தி ஆகிய இவர்கள் கிலிங்கிலாவென்ற நகரத்திலிருந்து 106-வர்ஷங்கள் பூமியை அநுபவிப்பார்கள். அவர்களுக்கு பதிமூன்று புத்திரர்கள் ஜனிப்பார்கள். அவர்களுக்குப் பாஹ்லிகர்களென்று பெயர், அதில் புஷ்யமித்ரரென்று ஒருவன் தர்மமித்திரனென்ற புத்திரனுடனிருப்பான். மேற்காட்டிய பாஹ்லிகர்கள் முதலியவர்கள் ஒரே காலத்தில் அரசர்களாக விருப்பார்கள் அவர்களிடமாக ஏழு ஆந்திரர்களும், ஏழு கோஸலர்களும், நிஷததேசத்து அரசர்களும், வைதூர்யத்து அரசர்களும், மகததேசத்து அரசர்களும் ஜனிப்பார்கள். விச்வஸ்பூர்ஜியென்ற ஒருவன் மகததேசத்திற்கு அரசனாவான் அவன் புரஞ்ஜயனைவிட மிக்க ப்ரஸித்தியுள்ளவனாவான். மேலுமவன்ம்லேச்சர்கள் போன்றபுளிந்த, யது, மத்திரயென்று பெயருள்ள ஜாதிகளை ஸ்தாபிப்பான் அவனுடைய காலத்தில் ப்ரஜைகள் பெரும்பாலும் ப்ராஹ்மண பக்தியில்லாதவர்களாக விருப்பார்கள். அந்த அரசன் மிக்க பலமுள்ளவனானதால் பத்மவதியென்ற நகரத்திலிருந்து கங்வாத்வாரம் முதல் ப்ரயாகம் வரையிலுள்ள பூமியைப் பரிபாலிப்பான். ஸௌராஷ்டிரம், அவந்தீ, ஆபீர, அர்பு

தம், மாளவமுதலிய தேசத்திலுள்ள ப்ராஹ்மணர்கள் உபனயனம் முதலிய ஸம்ஸ்காரமில்லாமல் வ்ராத்யர்கள் போலிருப்பார்கள். மேலும் அந்த காலத்தில் ஸமுத்திரக்கரைகளிலுள்ள தேசங்களேயும், சந்திரபாகாநதியின் கரையிலுள்ள தேசங்களேயும், காஞ்சிபட்டினத்தையும், காச்மீரதேசத்தையும், வேதாசார சூன்யர்களான சூத்திரர்களும், அவர்களுக்கும் தாழ்ந்த ஜாதியார்களும் அநுபவிப்பார்கள். மேற்காட்டிய இவ்வரசர்கள் ஒரேகாலத்திலிருப்பவர்கள். பெரும்பாலும் ம்லேச்சர்கள் போன்றவர்கள். அதர்மம், பொய் இவைகளில் நோக்கமுள்ளவர்கள்; ஸ்வல்பமாகக் கொடுப்பவர்கள்; மிக்ககோபமுள்ளவர்கள்; ஸ்திரீகள், சிறுவர்கள், பசுக்கள், ப்ராஹ்மணர்கள் ஆகிய இவர்களே ஹிம்ஸிப்பார்கள். பரஸ்திரீகளிடத்திலும், பிறருடைய பணத்திலும் ஆசைப்படுவார்கள். ஸ்வல்பகார்யத்தில் ஸந்தோஷத்தை அடைவார்கள்; ஸ்வல்பகார்யத்தில் கோபத்தையுமடைவார்கள்; அல்ப பலமுள்ளவர்கள்; அல்பாயுஸ் ஸுள்ளவர்கள்; கர்ப்பாதானம்முதலிய ஸம்ஸ்காரங்களற்றவர்கள் அநுஷ்டானமற்றவர்கள்; ரஜோகுணம், தமோகுணம் இவைகளால் வ்யாபிக்கப் பெற்றவர்கள்; இப்படி துஷ்டர்கள் அரசர்களாகவிருந்து ஜனங்களுடைய பணம் முதலியவைகளேப் பிடுங்கிக்கொண்டு ப்ரஜைகளே உபத்திரவிப்பார்கள். அவர் அவர்களுடைய ராஜ்யத்திலுள்ள ஜனங்கள் அவர்களுடைய ஸ்வபாவத்தையும், ஆசாரத்தையும் அநுஸரித்து அவர்களுடைய வார்த்தையையே சொல்லிக்கொள்வார்கள் மேலுமவர்கள் அரசர்களால் உபத்திரவத்தை அடைவதுடன் ஒருவருக்கொருவர்களும் உபத்திர வித்துக்கொண்டு கெடுதியை அடைவார்கள்.

---

## அத்யாயம்—2.

## கலியில் நடப்பவை.

பின்பு கலியுகத்தில் தர்மம், ஸத்யம், பொறுமை, தயை, ஆயுஸ், தேஹபலம், ஞாபகம் ஆகிய இவைகள் நாளுக்கு நாள் குறையும். கலியில் பணமுள்ளவனே மேலான குலத்தில் பிறந்தவனுவான்; பணமுள்ளவனே ஆசாரமுள்ளவனுவான்; பணமுள்ளவனே குணமுள்ளவனுவான். பணமுள்ளவன் சொல்வதே தர்ம

மாகும். அதுவே ந்யாயமென்று ஜனங்கள் ஒப்புக்கொள்வார்கள். மணஞ்செய்து கொள்வதில் அவர் அவர்களுடைய இஷ்டமே காரணமாகும் (குலகோத்திரங்களை கவனிக்கமாட்டார்களென்று கருத்து) கொடுத்தல் வாங்கல் முதலியவைகளில் கபடமுள்ளவனே ஸமர்த்தனாவான் (கபடமில்லாமல் பேசுவதில்லை யென்று கருத்து) ஆண் ஆனாலும், பெண் ஆனாலும் நல்ல குலத்தில் பிறந்திருப்பது, நல்ல ஆசாரமுள்ளவர்களாக விருப்பது ஆகிய குணங்களைக்கொண்டு சிறந்தவர்களாகிறதில்லை. போகத்தில் ஸாமர்த்திய முள்ளவர்களானால் அவர்களே சிறந்தவர்களாவார்கள். ப்ராஹ்மணனுக்கு யஜ்ஞோபவீதமே அடையாளமாக விருக்கும் (உபநயனம் முதலியவையில்லையென்று தாத்பர்யம்) இவன் இன்ன ஆச்ரமமுள்ளவனென்று தெரிந்துகொள்ள வேண்டுமானால் தண்டம் முதலிய அடயாளங்களால் தெரிந்துகொள்ள வேண்டும். (அந்த அந்த ஆச்ரமத்தின் ஆசாரங்கள் காணப்படாதென்று கருத்து) ஒரு ஆச்ரமத்தை அடைவதானாலும் அவைகளுக்கு அடையாளங்களான தண்டம் முதலியவைகளை யெடுத்துக்கொள்வது மாத்திரமே யொழிய அவைகளுக்குரிய அநுஷ்டானங்கள் காணப்படாது. தரித்ரனாக விருப்பவன் அபஜயத்தை அடைவான் (பணக்காரன் ஜயத்தை அடைவான்) அதிகமாகப் பேசுகிறவனே பண்டிதனென்ற ப்ரஸித்தியை அடைவான். ஏழையாக விருப்பவனே அஸாதுவெனப்படுவான். (திருடன் என்றது முதலிய கெட்ட பெயரை அடைவான்) பணமுள்ளவனே ஸாதுவெனப்படுவான். ஆண் பெண் ஸம்மதித்துப் புணருவதே விவாஹமாகும் (சாஸ்திரத்தில் சொல்லிய விதிப்படி மணஞ்செய்து கொள்வதில்லை) சரீரத்திலுள்ள அழுக்கை நிவர்த்தித்துக்கொள்வதே ஸ்நானமாகும் (புண்ய தீர்த்த ஸ்நானமில்லையென்று கருத்து) வெகு தூரத்திலிருக்கும் குளம் முதலியவைகளைப் புண்யதீர்த்தமென்று நினைப்பார்களே யொழிய ஸமீபத்தில் கங்கையிருந்தாலும் அதை லக்ஷ்யஞ் செய்யார்கள். அழகுக்காக மயிர்வைத்துக் கொள்வார்களே யொழிய சாஸ்திரமுறைப்படி க்ஷௌரஞ்செய்து கொள்ளுகிறதில்லை தன்வயிற்றை நிறைப்புவதே புருஷார்த்தமாகும். தைர்யமாகப் பேசுகிறவனே ஸபைக்குரியவனாவான். ஸாமர்த்தியத்தைக் குடும்ப போஷணைக்கே உபயோகப்படுத்துவார்கள். கீர்த்திக்காகவே தர்மத்தை அநுஷ்டிப்பார்கள். இப்படி பூமியில் ப்ரஜைகள் துஷ்டர்களாக விருப்

பார்கள். ப்ராஹ்மணன் முதலியவர்களுக்குள் எவன் பலமுள்ள வனோ, அவனே அரசனுவான். மேலும் அரசர்கள் லுப்தர்களும், தயவில்லாதவர்களும், திருடன் போன்றவர்களுமாக விருப்பார்கள். பின்னுமவர்கள் ப்ரஜைகளுடைய பணத்தையும், களத்திரத்தை யும், பிடிங்கிக்கொள்வார்கள். அவர்களால் உபத்திரவிக்கப் பெற்று ஜனங்கள் காடுகளிலும் மலைகளிலும் வஸிப்பார்கள். மேலும் ஸரியானகாலத்தில் மழைபெய்யாமல் பஞ்சமுண்டாகும். அதனுல் ஜனங்கள் கிழங்கு, வேர், தேன், பழம், புஷ்பம், விதை, தண்டு ஆகிய இவைகளைப் புஜித்துக் கஷ்டப்படுவார்கள். பின்னும் குளிர், காற்று, வெயில், மழை, பசி, தாஹம், வ்யாதி, கவலை ஆகிய இவைகளால் உபத்திரவிக்கப்படுவார்கள். கலியுகத்தில் இருபது முப்பதுவர்ஷங்களே ஜனங்களுக்குப் பரமாயுஸ்ஸாகும். கலியின் தோஷத்தால் ஜனங்களுடைய சரீரம் குறையும். வர்ணம், ஆச்ரமம் இவைகளுடைய தர்மமும் வேதமார்க்கமும் ஒளிந்துபோகும். பாஷ ண்டதர்மமே வெகுவாகபரவும். அரசர்கள் பெரும்பாலும் திருடர் களாவார்கள். பெரும்பாலும் ஜனங்கள் திருடுவது, பொய்பேசுவது வீணில் ஹிம்ஸிப்பது, முதலிய பலவிருத்திகளைச் செய்வார்கள். ஜாதிகளெல்லாம் பெரும்பாலும் சூத்திர ஜாதியாகிவிடும். பசுக்கள் பாலிலும் உருவத்திலும் ஆடுகள்போல் ஆய்விடும் ஸன்யாஸிகள் முதலியவர்கள் கிருஹஸ்தர்கள்போல குடும்பிகளாக விருப்பார்கள். மைத்துனன் முதலியவர்களே முக்கிய பந்துக்களாவார்கள். ஔஷதி கள் மிக்க ஸூக்ஷ்மங்களாகவிருக்கும். மரங்கள் வன்னிமரம்போல விருக்கும். மேகங்களில் மின்னல்கள் அதிகமாகவிருக்கும். வீடு கள் சூன்யங்களாகவிருக்கும் (அதிதிகளுக்குப்போஜனஞ் செய்விப் பது முதலியவையில்லாததால்) ஜனங்கள் கடுஞ்செய்கைகளைச் செ ய்வார்கள். இப்படிப்பட்ட கலிகாலம் பெரும்பாலும் சென்றிருக்கும் ஸமயத்தில் ஸ்ரீ பகவான் தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக ஸத்வ மூர்த்தியாக அவதரிப்பார். ஸ்தாவர ஜங்கமங்களுக்குப்பிதாவும், ஸகல பிராணிகளுடைய ஸ்வரூபியும் ஈச்வரருமாகிய ஸ்ரீ மஹா விஷ்ணு ஸாதுக்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பதற்கும் தர்மத் தைக்காப்பாற்றுவதற்காகவுமே அவதாரங்களைச்செய்கிறார். அப்படி ப்பட்டப் பகவான் சம்பளக்கிராமத்தில் ப்ரதானராகவிருக்கும் விஷ் ணுயசஸ்ஸென்ற ப்ராஹ்மணனுடைய வீட்டில் கல்கியென்ற திவ்ய நாமதேயத்துடன் அவதரிப்பார். அந்தகல்கி அஸத்துக்களைக் கொல்

வதற்கு ஸாதனமாக தேவர்களால் கொடுக்கப்பெற்ற வேகசாலியான குதிரையின்மீதேரி ஒப்பற்ற தேஜஸ்ஸுள்ளவராக பூமியில் ஸஞ்சரித்து அரசர்களென்ற வேடந்தரித்தவர்களும் உண்மையில் திருடர்களுமான துஷ்டர்களை கோடிக்கணக்காக வதஞ்செய்வார். அப்பொழுது பகவான் பூசிக்கொண்டிருக்கும் சந்தனத்தின் வாஸனையுள்ள காற்றை முகர்ந்தவுடன் அந்த துஷ்டர்களுடைய மனம் சுத்தமாகிவிடும். அந்தக்காலத்திய ஸகல ஜனங்களுடைய மனமும் ஆசை, த்வேஷம் இவைகளில்லாமல் சுத்தமாகும் அவர்களுடைய புத்திர பௌத்திர ஸந்ததிபெருகும். ஜனங்கள் சுத்த ஸத்வமூர்த்தியான வாஸுதேவரை எல்லாரும் மனத்தில் ஸ்திரமாகவைத்துக் கொண்டிருப்பார்கள். எப்பொழுது பகவான் கல்கியாக அவதரிப்பாரோ, அப்பொழுது கிருதயுகம் ஆரம்பிக்கும், அப்போது ஜனிக்கும் ப்ரஜைகளும் ஸாத்விகர்களாக விருப்பார்கள். சந்திரன், ஸூர்யன், ப்ரஹஸ்பதி ஆகிய மூன்று கிரஹங்களும் புஷ்ய நக்ஷத்திரத்தில் சேர்ந்து எப்பொழுது ப்ரவேசிப்பார்களோ, அப்பொழுது கிருதயுகம் ஆரம்பிக்கும். சந்திரவம்சத்திலும், ஸூர்யவம்சத்திலும் சென்ற அரசர்களையும், வரும் அரசர்களையும் சுருக்கமாகச் சொன்னேன். ஓ பரீக்ஷித்து மஹாராஜ! நீர் ஜனித்தது முதல் நந்தனுடைய பட்டாபிஷேகம் வரையிலுள்ள காலம் ஆயிறத்து நூற்றுப் பதினைந்து வர்ஷங்கள் (நந்தனுடன் சந்திரவம்சம் முடிந்ததென்றுகருத்து. மேற்சொல்லிய 1115-வர்ஷங்களென்பது ஏதோ ஒருகணக்காக சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் 1498-வர்ஷங்களாகின்றன.) ஸப்தர்ஷிகளுக்குள் உதயகாலத்தில் எவர்கள் உதயமானவர்களாக முந்திக்காணப்படுகிறார்களோ, அவர்களுக்குமத்தியில் ஸமமாக எந்த நக்ஷத்திரம் இரவில்காணப்படுகிறதோ, அந்த நக்ஷத்திரத்துடன் ஸப்தர்ஷிமண்டலம் நூறுவர்ஷங்களிருக்கின்றன. அந்த ஸப்தர்ஷிகள் உம்முடைய காலமாகிய இப்போது மகாநக்ஷத்திரத்திலிருக்கிறார்கள். ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சுத்தஸத்வமான சரீரம் பூமியைவிட்டு எப்பொழுது வைகுண்டஞ்சென்றதோ, அப்பொழுது கலி லோகத்தில் பரவியது; ஜனங்கள் பாபத்தில் நோக்கமுள்ளவர்களானார்கள். லக்ஷ்மியின் பர்த்தாவாகிய பகவான் தம்முடைய பாதார விந்தங்களால் பூமியைத் தொட்டுக்கொண்டிருந்த வரையில் கலி பூமியில் பரவாமலிருந்தது. மகா நக்ஷத்திரத்தில் ஸப்தர்ஷிகள் ஸஞ்சரிக்கும்பொழுது கலியுகம் ஆரம்பித்தது. அந்தக் கலியின் காலம் தேவமானத்தால்

ஆயிரத்து இருநூறு வர்ஷங்கள் (மனுஷ்யமானத்தால் 432000-வர்ஷங்களென்று கருத்து) அந்த ஸப்தர்ஷி மண்டலம் பூராட நக்ஷத்திரத்திற்குச் செல்லும் ஸமயம் நந்தருடையராஜ்யகால மாகும், அதுமுதல் கலிக்கு விருத்திகாலம் (வண்டிபோன்ற ஏழு நக்ஷத்திரங்களடங்கியது ஸப்தர்ஷி மண்டலமெனப்படும். எல்லாவற்றிற்கும் முதலில் மரீசி, அவருக்குப்பின் வஸிஷ்டர், அவருக்குப்பின் அங்கிரஸ், அவருக்குப்பின் நாற்கோணமாகி யதில் ஈசானதிக்கில் அத்ரி, தெற்கில் புலஸ்தியர், மேற்கில் புலஹர். வடக்கில் கிருது, பரீக்ஷித்தின் காலத்தில் ஸப்தர்ஷி மண்டலம் மகா நக்ஷத்திரத்தினம் வந்து 50?-வர்ஷங்களாயினவென்று தெரியவருகிறது) என்றையதினம் ஸ்ரீ கிருஷ்ணன் வைகுண்டஞ் சென்றாரோ, அந்த தினத்தில் கலியுகமாரம்பித்ததென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். தேவமானத்தில் ஆயிரம் வர்ஷங்கள் சென்றபின் திரும்பவும் கிருதயுகம் வரும். அப்பொழுது மனிதர்களுடைய மனம் ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குத் தகுந்ததாக ஆகும். இப்படி மநுவின் வம்சம் சொல்லப்பட்டது. இப்படியே ப்ராஹ்மண, வைச்ய, சூத்திரர்களுடைய வம்சங்களும் ஒவ்வொரு யுகங்களிலும் அறியப்படவேண்டும். மேற்காட்டிய மஹான்களான அரசர்களுடைய பெயர் மாத்திரம் இப்பொழுது வழங்கி வருகிறது. அவர்களுடைய சரித்திரமும் கீர்த்தியும் பூமியிலிருக்கிறது. சந்தனுவின் ஸஹோதரராகிய தேவாபியும், இக்ஷ்வாகுவின் வம்சத்தில் ஜனித்த மருவென்பவரும் மிக்க யோகபலமுள்ளவர்களாக கலாப கிராமத்தில் வஸிப்பார்கள். அவ்விருவர்களும் இக்கலியுகத்தின் முடிவில் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் உத்தரவினால் வர்ணதர்மங்களையும், ஆச்ரம தர்மங்களையும் முன்போல் நடக்கும்படி செய்வார்கள். மேற்காட்டிய வண்ணம் கிருதம், த்ரேதா, த்வாபரம், கலி யென்ற நான்கு யுகங்களை ஸ்ரீ பகவான் பூமியில் ப்ரவர்த்திக்கச் செய்கிறார். ஓ மஹாராஜ! என்னால் சொல்லப்பட்ட இந்த அரசர்கள் இந்தப் பூமியைத் தங்களுடையதென்று நினைத்து அபிநிவேசத்தை அடைந்திருந்து முடிவில் இப்பூமியைவிட்டு மரணமடைந்தார்கள். இந்த சரீரத்திற்கு 'ராஜா' என்ற பெயரிருந்தாலும் கடைசியில் கிரிமி (புழு) விட் (அமேத்யம்) பஸ்மம் (சாம்பல்) என்ற பெயர் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட சரீரத்திற்காக பிராணி ஹிம்ஸை செய்யலாமா? பிறரை ஹிம்ஸிப்பதால் கஷ்

டம் நேருமேயல்லாமல் ஸுகங்கிடைக்கிறதில்லை. ஆனதால் பிராணிகளை ஹிம்ஸிப்பவன் தனக்கு ஹிதமானதைத் தெரிந்துகொண்டவனல்ல மேலும் அரசர்கள் "அகண்டமான இந்த பூமி தம்முடைய பெரியோர்களால் பரிபாலிக்கப்பெற்று நம்முடைய வசத்திலிருக்கிறது, இது நம்முடைய புத்திரன், அவனுடைய புத்திரன் முதலியவர்களுக்கு வசப்படவேண்டுமே அதற்கு என்ன செய்யலாம்" என்று யோசிக்கிறார்கள். பின்னும் ப்ரதிவி, ஜலம், தேஜஸ் இவைகளாலேற்பட்ட சரீரத்தைத் தாமென்று அபிமானித்து பூமியைத் தம்மைச் சார்ந்ததென்று நினைத்து மூடர்களாகி பூமி, சரீரம் ஆகிய இரண்டையும்விட்டு மரணமடைந்தார்கள். எந்தெந்த அரசர்கள் தங்களுடைய பலத்தால் பூமியை அநுபவித்தார்களோ, அவர்கள் சிலகாலஞ் சென்றபின் மரணமடைந்தார்கள். அவர்களுடைய கதைதான் எஞ்சியது (ஆனதால் அனித்யமான சரீரம், பூமி இவைகளில் அபிமானம்வைத்து அதற்காக பாபத்தைச் செய்வது உசிதமல்லவென்று கருத்து)

---

## அத்யாயம்—3.

### கலிகாலத்திய ப்ரஜைகளின் ஸ்வபாவம்

பூமியை ஜயித்து ஸ்வாதீனஞ்செய்து கொள்வதற்காக முயன்றுகொண்டிருக்கும் அரசர்களைபார்த்து "ம்ருத்யுவிற்கு விளையாட்டுக் கருவிகளாகவிருக்கும் இந்த அரசர்கள் சத்ருக்களை ஜயித்து என்னை ஸ்வாதீனஞ் செய்துகொள்வதற்காக நினைக்கிறார்கள். என்ன ஆச்சர்யம்" என்று பூமிதேவி மிகவும் பரிஹாஸஞ்செய்கிறுள். இந்த அரசர்கள் நுரைபோல் அனித்யமாகவிருக்கும் சரீரத்தில் மிக்க அபிமானம்வைத்து "முதலில் இந்திரியங்களை ஜயித்து பின்பு மந்திரிகளையும், பட்டினத்து ஜனங்களையும், ஆப்தர்களையும் வசப்படுத்திக்கொள்வோம். பின்பு யானைப்படைகளையும், இவனுடைய சத்ருக்களையும் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு கிரமமாக நான்கு ஸமுத்திரங்களுக்குட்பட்ட பூமியை ஜயிப்போம்" என்ற ஆசைகொண்டு ஸமீபத்திலிருக்கும் யமனை கவனிக்கிறதில்லை. அப்படிப்பட்ட அரசர்கள் மிக்க வித்வான்களானாலும் அவர்களுடைய

எண்ணம் பூர்த்தியாகிறதில்லை. நான்கு ஸமுத்திரங்களுக்குட்பட்ட பூமியை ஜயித்து ஸ்வாதீனஞ் செய்துகொண்டபின்பும் அதிக ஆசையால் ஸமுத்திரத்திலும் பிரவேசிக்கிறார்கள். இந்திரியங்களை ஜயித்ததற்கு மேற்காட்டிய பூமிலாபம் பயனாகுமோ? மோக்ஷமல்லவா அதற்குப்பயன். மேலும் மநுமுதலியவர்கள் பூமியை பரிபாலித்தும் அதனை விட்டுத் தாங்கள் வந்தவழியே சென்றார்கள். அப்படிப்பட்ட பூமியை வசப்படுத்திக்கொள்வதாக அரசர்கள் நினைக்கிறார்கள். அதனால் இவர்கள் புத்தியற்றவர்கள். "இந்த ராஜ்யம் என்னுடைய தென்றமமதையை அடைந்து, புத்திரனும் பிதாவும் சண்டை செய்கிறார்கள். ஸஹோதரர்கள் அடித்துக்கொள்ளுகிறார்கள். அட! மூட! இந்தபூமி, என்னுடையது உனக்கு இதில் ஸம்பந்தமில்லையென்றுசொல்லி ஒருவருக்கொருவராக அடித்துக் கொண்டு என்விஷயமாக (பூமியின் விஷயமாக) மரணமடைகிறார்கள். பின்னும், ப்ரது, புரூரவஸ், காதி, பரதர், நஹுஷர், அர்ஜுனர், மாந்தாதா, ஸகரர், ஸ்ரீராமன், கட்வாங்கர், துந்துஹர், ரகு, திருணபிந்து, யயாதி, சர்யாதி, சந்தனு, கயர், பகீரதர், குவலயாச்வர், ககுஸ்தர், நளன், நிருகர், ஹிரண்யகசிபு, விருத்திரன், லோகங்களை உபத்திரவித்த ராவணன், நமுசி, சம்பரன், நரகாஸுரன், ஹிரண்யாக்ஷன், தாரகன், மற்றுமுள்ள அஸுரர்கள் அரசர்கள் ஆகிய எல்லாரும் எல்லாவற்றையும் அறிந்தவர்கள்; மிக்க சூரர்கள்; எல்லாரையும் ஜயித்தவர்கள்; சத்ருக்களால் ஜயிக்கப்படாதவர்கள்; அப்படிப்பட்ட மரணதர்மமுள்ள மேற்காட்டியவர்கள் மரண தர்மமற்ற என்னை (பூமியை) தங்களுடையவளென்று நினைத்து தங்களுடைய எண்ணம் பூர்த்தியடையாதவர்களாகி மரணமடைந்தார்கள். அவர்களுடைய கதைமாத்திரம் எஞ்சியிருக்கிறதே யொழிய அவர்களில்லை. இப்படி காலத்தால் செய்யப்பட்டிருக்கிறது (இப்படி பூமி அரசர்களைப் பரிஹஸிக்கிறதென்று தாத்பர்யம்). ஓ மஹாராஜ! மிக்க மஹிமையுள்ளவர்களாகி பூமியைப் பரிபாலித்து கீர்த்தியை ஸ்தாபித்து பரலோகஞ்சென்ற பெரியோர்களுடைய கதையைச் சொன்னேன். ஆனால் அந்த அரசர்களைப்போலிருக்க வேண்டுமென்று நினைக்கக்கூடாது. மேற்காட்டிய கதைகளைக் கேட்டு விஷயங்களில் வைராக்யத்தை அடைந்து ஜ்ஞானத்தை ஸம்பாதிக்கவேண்டும். விஷயங்களில் வைராக்ய முண்டாவதற்காகவே முந்திய அரசர்களுடைய கதை நிரூபிக்கப்பட்டது ஆனதால்

ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஸ்திரமான பக்தியைவிரும்பி எப்பொழுதும் பகவானுடைய சரிதங்களைக்கேட்கவேண்டும், அதுவே அமங்களத்தை நிவர்த்திக்கும்'' என்று சுகர் சொன்னார்.

16—17. அதனைக்கேட்ட அரசன் சுகரைநோக்கி “ஓ பகவன்! கலியுகத்தில் தோஷங்கள் விருத்தியடையுமே அவைகளை அக்காலத்திய ஜனங்கள் நிவர்தித்துக்கொள்ளு முபாயமென்ன? மேலும் யுகங்களையும், அந்தயுகத்தின் தர்மங்களையும், ப்ரளயம், கல்பம் இவைகளுடைய ப்ரமாணங்களையும் உண்மையாகச்சொல்லும் மேற்காட்டியவை எல்லாவற்றிற்கும் ஈசனாகிய மஹாவிஷ்ணுவின் ஸ்வரூபமாகிய காலத்தின் கதியல்லவா'' என்றார் (கால ஸ்வரூபியான பகவானுடைய கதியைக் கேட்பதால் பாஹ்யவிஷயத்தைப்பற்றிக் கேட்பதல்லவென்று கருத்து)

18—52 அதனைக்கேட்ட சுகர் அரசனைநோக்கி “கிருதயுகத்தில் ஸத்யம், தயை, தபஸ், தானம் என்று நான்கு பாதங்களுடன் தர்மமிருக்கும், அக்காலத்திய ஜனங்கள் அதை ஆதரித்தார்கள் (தர்மத்தின் நான்குபாதங்களில் தானமென்பதற்கு அபயத்தைக் கொடுப்பதென்று அர்த்தம். அதே* சௌசமென்று முதல் ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது) அக்காலத்திய ஜனங்கள் பெரும்பாலும் கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷத்தையடைந்தும், தீனர்களிடத்தில் தயவுள்ளவர்களாகவும், பிராணிகளிடத்தில் அன்புள்ளவர்களாகவும், இரண்டுவகையான இந்திரியங்களை ஜயித்தவர்களாகவும், பொறுமையுள்ளவர்களாகவும், எல்லாவற்றையும் ஸமமாக பார்ப்பவர்களாகவும், ஆத்மாவிடத்திலேயே ரமிப்பவர்களும், ஆத்ம ஜ்ஞானத்தை யப்யஸிப்பவர்களாயு மிருப்பார்கள். த்ரேதாயுகத்தில் அதர்மம் லோகத்தில் ப்ரவேசிக்கிறது. அதனுடைய பாதங்களாகிய பொய், ஹிம்ஸை, பேராசை, சண்டை ஆகிய இவைகளால் முறையே தர்மத்தின் பாதங்களாகிய ஸத்யம், தயை, தபஸ், தானம் ஆகிய இவைகளுடைய நாலிலொருபாகம் குறையும். அக்காலத்திய ஜனங்கள் யாகம், தபஸ் இவைகளில் நோக்கமுள்ளவர்களாகவும், அதிகஹிம்ஸையில் நோக்க மில்லாதவர்களாகவும் அதிக ஆசையில்லாதவர்களாகவும், ப்ராஹ்மணரையே மேலானவர்களாகக் கொண்டவர்களாகவும், வைதிகமானகர்மங்களில் பெரியோர்களா

கவு மிருப்பார்கள். த்வாபரயுகத்தில் அனிருத, ஹிம்ஸை, அதுஷ்டி, த்வேஷம்முதலிய அதர்மத்தின் பாதங்களால் தர்மத்தின் பாதங்களாகிய ஸத்யம், தயை, தபஸ், தானம் இவைகளில் பாதிகுறைகின்றது. அக்காலத்திய ஜனங்கள் கீர்த்தியை ஸம்பாதிப்பதில் ப்ரியமுள்ளவர்களாகவும், வேதாத்யயனத்தில் மிக்கப்ரியமுள்ளவர்களாகவும், பணக்காரர்களாகவும், கர்வமுள்ளவர்களாகவும், க்ஷத்திரியன், ப்ராஹ்மணன் இவர்களை ப்ரதானர்களாக நினைத்தவர்களாகவு மிருப்பார்கள். கலியில் அதர்மத்தின் பாதங்கள் விருத்தியடையும். அதனுல் தர்மத்தின் பாதங்களில் நான்கிலொரு பாகந்தான் எஞ்சியிருக்கும். அந்த நான்கிலொரு அம்சமும் கலியுகத்தின்முடிவில் நாசமடையும் (அதர்மமே பரவுமென்றுகருத்து) அக்காலத்திய ஜனங்கள் விஷயங்களில் மிக்க ஆசையுள்ளவர்களாகவும் தயையற்றவர்களாகவும், காரணமின்றி விரோதிப்பவர்களாகவும், அதிருஷ்டமற்றவர்களாவும் அதிக ஆசையுள்ளவர்களாகவு மிருப்பார்கள். மேலும் சூத்திரர்கள், மீன்பிடிப்பவர்கள், வேடர்கள் ஆகிய இவர்களே ப்ரதானர்களாக விருப்பார்கள். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்கள் புருஷனிடத்திலிருக்கின்றன. அவைகள் காலத்தால் தூண்டப்பட்டு மேற்காட்டிய வண்ணம் மாறுகின்றன. மனம், புத்தி, இந்திரியங்கள் ஆகிய இவைகள் எப்பொழுது மிக்க ஸத்வகுணமுள்ளவையாக விருக்கின்றனவோ, அப்பொழுது த்யானம், ஜ்ஞானம் இவைக்ளில் பிரியமுண்டாகிறது. அந்தக்காலமே கிருதயுகமெனப்படுகிறது. எந்த காலத்தில் தர்மத்திலும், கீர்த்தியிலும் ஜனங்களுக்கு ப்ரியமுண்டாகிறதோ, அந்தக் காலம் த்ரேதாயுகமெனப்படுகிறது, அப்பொழுது ரஜோகுணம் அதிகமென்று தெரிந்துகொள்ளும். த்வாபரயுகத்தில் ரஜஸ்ஸும், தமஸ்ஸும் ப்ரதானங்களானதால் கிடைத்ததில் ஸந்தோஷப்படாமல் அதிக ஆசைகொள்வது, அஹங்காரம், தம்பம், மாத்ஸர்யம், காம்ய கர்மங்களை அநுஷ்டிப்பது ஆகிய இவைகள் நடக்கும். எந்த காலத்தில் கபடம், பொய், சோம்பல், தூக்கம், ஹிம்ஸை, துக்கம், பயம், தைன்யம், இவைகள் ஏற்படுகின்றனவோ, அது தமோகுணத்தை ப்ரதானமாகக்கொண்ட கலியுகமெனப்படுகிறது. அந்தக் கலியுகத்தில் ஜனங்கள் மந்தபுத்தியுள்ளவர்களாகவும், அல்பபாக்கிய முள்ளவர்களாகவும், அதிகமாக சாப்பிடுகிறவர்களாவும், காமவெறி கொண்டவர்களாகவும், தரித்ரர்களாகவும் இருப்பார்கள். ஸ்திரீகள் பதிவ

ரதா தர்மமற்றவர்களாகவும், வ்யபிசாரிணிகளாகவு மிருப்பார்கள். தேசங்களில் பெரும்பாலும் திருடர்கள் மிகுதியாகவிருப்பார்கள். பாஷண்டர்களால் வேதமார்க்கம் கெடுக்கப்படும். அரசர்கள் ப்ரஜைகளை பக்ஷிப்பார்கள் (ஜனங்களிடத்தில் அதிகமாக வரி வாங்குவது முதலியவையால் உபத்திரவிப்பார்களென்று கருத்து) ப்ராஹ்மணர்கள் சிச்னம், வயிறு ஆகிய இவைகளை திருப்தி செய்வதில் நோக்கமுள்ளவர்களாக விருப்பார்கள். ப்ரஹ்மசாரிகள் வேதத்தில் சொல்லிய ஆசாரமற்றவர்களாகவும், அசுத்தர்களாகவு மிருப்பார்கள் கிருஹஸ்தர்கள் பிக்ஷை வாங்குவதில் நோக்கமுள்ளவர்களாகவே யிருப்பார்கள். (பிறருக்கு பிக்ஷையளிக்க மாட்டார்களென்று கருத்து) வானப்ரஸ்தர்கள் கிராமத்திலேயே வஸிப்பார்கள். ஸன்யாஸிகள் பணத்திலேயே மிக்க ஆசைகொண்டவர்களாக விருப்பார்கள். ஸ்ரீகள் குட்டையான சரீரமுள்ளவர்களாகவும் அதிக ஆஹாரமுள்ளவர்களாகவும், அதிக ப்ரஜைகளுள்ளவர்களாகவும், வெட்கமில்லாதவர்களாகவும், கடுஞ்சொற்களைச் சொல்பவர்களாகவும், திருட்டுத்தனம், மாயை, பிடிவாதம் இவைகளுள்ளவர்களாகவு மிருப்பார்கள். ஜனங்கள் ஆபத்தில்லாதகாலத்திலும் அவர் அவர்களுடைய விருத்தியைவிட்டு வ்யாபாரஞ்செய்ய வாரம்பிப்பார்கள், அதிலும் வெறுக்கக்கூடியவைகளை விற்பார்கள். (உப்பு, எண்ணெய் நெய், மாம்ஸம் முதலியவைகளை) அதிலும் கபடத்தையே கைக்கொள்வார்கள். வேலைக்காரர்கள் தங்களுடைய யஜமானன் எவ்வளவு சிறந்தவனானாலும் பணமில்லாவிடில் அவனைவிட்டுவிடுவார்கள். வேலைசெய்ய சக்தியற்ற வேலைக்காரர்களை வம்சபரம்பரையாக விருந்தவர்களானாலும் யஜமானர்கள் விட்டுவிடுவார்கள். கரவையில்லாத பசுக்களை ஜனங்கள் ஸம்ரக்ஷிக்கமாட்டார்கள். மேலும் ஜனங்கள் மனைவியினிடத்தில் ஆசைகொண்டு அவளுடைய பந்துக்களான மைத்துனன், மனைவியின் ஸஹோதரி முதலியவர்களுடன் பேசிக்கொண்டு அவர்களிடத்தில் பிரியம்வைப்பார்கள். தங்களுடைய தந்தை, ஸஹோதரர்கள், ஸஹோதரிகள், ஜ்ஞாதிகள் இவர்களிடத்தில் ப்ரியப்படமாட்டார்கள். சூத்திரர்கள் தபஸ்விகளின் வேடந்தரித்து ஜீவிப்பதுமன்றி மேலானஆஸனத்திலிருந்து தர்மத்தையுபதேசிப்பார்கள். காலத்தில் மழைபெய்யாமல் அடிக்கடி தேசத்தில் க்ஷாமமுண்டாகும். அதனால் அன்னங்கிடைக்காமல் ஜனங்கள் கஷ்டப்பட்டு நடுங்குவார்கள். நல்லவஸ்திரம், அன்னம், பானம், படுக்கை,

ஸ்திரீபோகம், ஸ்நானம், ஆபரணம், ஆகிய இவைகளில்லாமல் பிசாசங்கள்போல் ஜனங்கள் காணப்படுவார்கள். மேலும் கலியுகத்தில் ஒரு காகணிக்காக (20-சோகிகொண்டநாணயம்) ஸ்நேஹத்தை விட்டு சண்டைசெய்வதுடன் ப்ராணனையும் விடுவார்கள். வயது முதிர்ந்த தாய் தந்தைகளைக் காப்பாற்றமாட்டார்கள். குழந்தைகளை தந்தை ரக்ஷிக்கமாட்டான். தன்வயிற்றை நிரப்பிக்கொள்வதிலும் ஸ்திரீ ஸுகத்திலுமே நோக்கமுள்ளவர்களாக விருப்பார்கள். மேலும் எல்லா ஜனங்களும் பாஷண்டர்களுடைய மதத்தால் மனம் கலங்கினவர்களாகி எல்லா லோகங்களுக்கும் குருவும், ப்ரஹ்மா முதலியவர்களால் நமஸ்கரிக்கப்பெற்ற தாமரைமலர்போன்ற பாதங்களுள்ளவரும், நித்யருமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவைப் பெரும்பாலும் பூஜிக்கமாட்டார்கள் வியாதியால் பீடிக்கப்பட்டவனுனாலும், சாகுந் தருணத்திலிருப்பவனுனாலும், தடுக்கிப் பூமியில் விழுந்தவனுனாலும் அவசனுக பகவானுடைய திவ்யநாமங்களை யுச்சரிப்பானுகில் ஸகல கர்ம பந்தங்களற்றவனுகி உத்தமகதியை அடைவான். புருஷோத்தமராகிய ஸ்ரீ பகவானை யெப்பொழுதும் மனத்தில் வைத்துக்கொண்டிருந்தால் (த்யானஞ்செய்தால்) த்ரவ்யம், தேசம், இந்திரியங்கள், கலிகாலம் இவைகளாலுண்டாகும் தோஷங்கள்யாவும் நிவிருத்தியாகும். பகவானுடைய கதையைக்கேட்டாலும், திவ்ய நாமங்களையுச்சரித்தாலும் அவருடைய மூர்த்தியை த்யானஞ்செய்தாலும், ப்ரதிமைகளைப் பூஜித்தாலும், அவரிடம் பக்திசெய்தாலும், ஹிருதயத்தில் எப்பொழுதும் வைத்துக்கொண்டிருந்தாலும் அநேக ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபங்கள் நிவர்த்தியாகும். மற்ற லோஹத்தின் ஸம்பந்தத்தாலேற்பட்ட ஸுவர்ணத்தின் மல்மானது அதிலிருக்கும் அக்னியால் நீக்கப்படுவதுபோல் ஹிருதயத்திலிருக்கும் பகவான் அசுத்தமான சித்தத்தை சுத்தமாகச்செய்கிறார். (யோகம் முதலியவையாலில்லை யென்றுகருத்து) அனந்தராகிய பகவான் ஹிருதயத்திலிருப்பதால் எவ்வளவு பரிசுத்த மேற்படுகிறதோ, அவ்வளவு சுத்தி, வித்யை (தேவதோபாஸ்தி) தபஸ், ப்ராணுயாமம், ஸகல ப்ரஜைகளிடம் அன்புபாராட்டுவது, புண்யதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வது, தானம், மந்திரஜபம், இவைகளால் உண்டாகிறதில்லை. ஆனதால் ஓ மஹாராஜ! நீர் சாகுந்தருணத்திலுள்ளவரானுலும் எல்லா முயற்சியாலும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ஹிருதயத்தில் வைத்துக்கொள்ளும். பாபங்களைப் போக்கடிக்கக்கூடிய பகவானை ஹிருதயத்தில்

மரணமடைபவர்கள் த்யானிப்பார்களாகில், எல்லாவற்றையும் படைப்பவரும், எல்லா ஜகத்ஸ்வரூபியுமான பகவான் அவர்களைத் தம்முடைய ஸ்வரூபமாகச்செய்கிறார். ஓ மஹாராஜ! கலி தோஷங்களுக்கு நிதியானாலும் அதனிடத்தில் பெரிதாகிய குணமொன்றிருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணனுடைய திவ்விய நாமங்களை யுச்சரிப்பதாலேயே ஸகல பந்தங்களற்றவனாகி உத்தமகதியை அடைகிறான். கிருதயுகத்தில் ஸ்ரீபகவானை த்யானஞ்செய்தும், த்ரேதாயுகத்தில் யாகங்களைச் செய்து பூஜித்தும், த்வாபரயுகத்தில் பகவானுக்குச் சுச்ரூஷைசெய்தும் ஜனங்கள் எந்தப்பயனை அடைந்தார்களோ, அதனைக் கலியுகத்தில் பகவானுடைய திவ்யநாமங்களையுச் சரிப்பதாலேயே அடைவார்கள்.

---

## அத்யாயம்—4.

### நைமித்திகம் முதலிய லயங்கள்.

ஓ மஹாராஜ! பரமாணு முதலாக இரண்டு பரார்த்தம் வரையிலுள்ள காலத்தின் அளவைச் சொன்னேன். யுகங்களின் அளவும் சொல்லப்பட்டது. இனி கல்பம் ப்ரளயம் இவைகளைப்பற்றிச் சொல்லுகிறேன் கேளும். சதுர்யுகங்களில் ஆயிரங்கொண்டது ப்ரஹ்மதேவருக்கு ஒரு பகலாகும். அதனைக் கல்பமென்று சொல்லுகிறோம் அதில் பதினான்கு மநுக்களுண்டு. அதன்பின் அவ்வளவு காலம் ப்ரஹ்மதேவருடைய ராத்ரி. அந்தக் காலமே ப்ரளயமெனப்படுகிறது. அந்த ஸமயத்தில் இந்த மூன்று லோகங்களும் லயத்தை அடைகின்றன (காரணஸ்வரூபங்களாக விருக்கின்றன) ஜகத்தைப் படைத்தவரான ஸ்ரீமந் நாராயணன் ஆதிசேஷனாகிய படுக்கையில் படுத்து ப்ரஹ்மதேவருடன் ஸகல ஜகத்தை காரணஸ்வரூபமாகச்செய்து தம்மிடத்தில் உபஸம்ஹரித்து வைத்துக்கொண்டு அந்தக் காலத்தில் தூங்குகிறார். ஆனதுபற்றி இது நைமித்திக ப்ரளயமெனப்படுகிறது. ப்ரஹ்மதேவருடைய ஆயுஸ்ஸாகிய இரண்டு பரார்த்தஞ் சென்றபின் ஏழு ப்ரகிருதிகளும் (மஹத், அஹங்காரம் ஐந்து தன் மாத்திரைகள்) லயத்தை அடைகின்றன. ப்ரகிருதியின் கார்யமான அண்டகோசத்திற்கு நாசம் காலத்தால் நேர்ந்தபோது ஏற்படும் லயம் ப்ராகிருதிக மெனப்படுகிறது. (ப்ரகிருதியின் லயத்தாலேற்பட்டதென்று கருத்து) அப்

பொழுது நூறு வர்ஷகாலம் மழை பெய்யாமலிருக்கும். அப்பொழுது ஜனங்கள் அன்னமில்லாமல் பசியால் உபத்திரவிக்கப்பெற்று ஒருவரை யொருவர் புஜித்துக்கொண்டு முறையே நாசமடைவார்கள். அப்பொழுது ஸமுத்திரம், தேஹம், பூமி இவைகளிலிருக்கும் ரஸமானது அக்காலத்திய ஸூர்யனுடைய கடுமையான வெயிலால் கிரஹிக்கப்படும் (வரண்டுபோகும்) இப்படி ஸூர்யன் ரஸத்தை கிரஹிப்பாரேயொழிய மழை பெய்யச் செய்வதில்லை. பின்பு ஸங்கர்ஷணருடைய முகத்திலிருந்து அக்னி வெளிப்படும். அது அக்காலத்திய காற்றினால் தூண்டப்பட்டு பாதாலம் முதலிய பிலங்களையும் எறிக்கும். மேல் ஸூர்ய கிரணங்களாலும் கீழ் அக்னி ஜ்வாலைகளாலும் தஹிக்கப்பெற்று அண்டமானது எறிக்கப்பட்ட சாணத்தின் உண்டைபோல காணப்படும். அதன்பின் நூறு வர்ஷங்களுக்குமேல் ப்ரளயகாலத்திய காற்று மிகவும் கடுமையாக வீசும். அப்பொழுது ஆகாயம் தூளியால் மறைக்கப்பெற்று அழுக்குள்ளதாக விருக்கும். அதன்பிறகு பல வர்ணமுள்ள மேகங்கள் கூட்டமாக கடுமையாக சப்தித்துக்கொண்டு நூறு வர்ஷகாலம் மழை பெய்யும். ப்ரஹ்மாண்டத்திற்குள்பட்ட ஜகத்முழுவதும் ஒரே ஜலமாக விருக்கும். அப்பொழுது பூமியின் கந்தமாகிய குணத்தை ஜலம் வாங்கிக்கொள்ளுகிறது (பூமி ஜலத்தில் லயிக்கிறது) கந்தமற்ற ப்ருதிவி நாசத்தை அடைகிறது. ஜலத்தின் ரஸத்தை தேஜஸ் வாங்கிக்கொள்ளுகிறது. தேஜஸ்ஸில் ரஸமற்ற ஜலம் லயிக்கிறது. தேஜஸ்ஸின் குணமாகிய ரூபத்தை வாயு அபஹரிக்கிறது. ரூபமற்ற தேஜஸ் வாயுவில் லயிக்கிறது. வாயுவின் குணமாகிய ஸ்பர்சத்தை ஆகாசம் கிரஹித்துக்கொள்ளுகிறது. ஸ்பர்சமற்ற வாயு ஆகாசத்தில் லயிக்கிறது. ஆகாயத்தின் குணமான சப்தத்தை அஹங்காரம் அபஹரிக்கிறது. சப்தமற்ற ஆகாயம் அஹங்காரத்தில் லயிக்கிறது. தைஜஸங்களான இந்திரியங்களையும், ஸாத்விகா ஹங்காரத்தாலுண்டான தேவர்களையும், அவைகளுடைய விருத்திகளையும், தாமஸா ஹங்காரத்தையும் மஹத்தத்வம் அபஹரிக்கிறது. அந்த மஹத்தத்வம் ஸத்வம் முதலிய குணங்களில் லயிக்கிறது. எல்லாவற்றிற்கும் காரணமாகிய ப்ரதானம் காலத்தால் தூண்டப்பட்டு குணங்களைத் தன்னிடம் உபஸம்ஹரித்துக்கொள்ளுகிறது. அதற்குக் காலத்தின் அவயவங்களான இரவு, பகல் முதலியவையால் பரிணாமம் முதலிய விகாரங்களில்லை; அதற்கு ஆதியில்லை; அந்தமில்லை; மேலுமது

இருக்கிறது என்றது முதலிய விகாரமற்றது; எப்பொழுதும் ஒரேவகையாகவிருப்பது; நித்யமானது; குறைவற்றது; எல்லாவற்றிற்கும் காரணமாகவிருப்பது; பின்னும் மனத்திற்கு எட்டாதது; வாக்குக்கு விஷயமானதல்ல; ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களுக்கு விஷயமல்ல; மஹத்தத்வம் முதலியவைகளுக்கும் விஷயமல்ல; ப்ராணன், புத்தி இந்திரியங்கள், அவைகளுக்கு அதிஷ்டான தேவதைகள் ஆகிய இவைகளுக்கும் விஷயமல்ல; ஒன்றுக்கும் விஷயமாகாத (புலப்படாத) வஸ்துவிற்கு லௌகிகமான விகாரங்களேற்படுமா? (இல்லையென்று கருத்து) மேலும் அந்த வஸ்துவிற்கு ஜாக்கிரதாவஸ்தையாவது, ஸ்வப்னுவஸ்தையாவது, ஸுஷுப்தியாவது இல்லை. ஆகாயம், ஜலம், பூமி, அக்னி, வாயு, ஸூர்யன் ஆகிய இவைகளுடைய ஸம்பந்தமற்றது; ஆனால் (இந்திரியம் முதலியவைகளில்லாததால்) ஸுஷுப்திபோலும், சூன்யம்போல் இன்னதென்று ஊஹிக்கமுடியாததும், எல்லாவற்றிற்கும் காரணமுமான பதமென்று சொல்லுகிறார்கள். புருஷன், அவ்யக்தம் இவைகளுடைய சக்திகளான ஸத்வம் முதலியவைகள் காலத்தின் மஹிமையால் அவசங்களாகி எப்பொழுது லயிக்கின்றனவோ, அப்பொழுது ப்ராகிருதிக லய மெனப்படுகிறது.

23—34. ஜ்ஞானமொன்றே ஆனாலும் அது புத்தி, இந்திரியம், அதன் விஷயம் ஆகிய இம்மூன்று வகையாக ப்ரகாசிக்கிறது. புலப்படும் ஜகத்தானது காரணத்தைக்காட்டிலும் வேறல்ல, எதற்கு ஆதியும், அந்தமுமிருக்கிறதோ, அது வஸ்துவல்ல. (ஜகத் இல்லை காணப்படுவதால் காரணத்தைக்காட்டிலும் வேறாகவில்லாம விருப்பதால் ஆதி அந்தம் இவைகளுள்ளதாக விருப்பதால் என்ற அநுமானத்தால் ப்ரபஞ்சம் அவஸ்துவென்று ஏற்படுகிறது) தீபம், சக்ஷுஸ், ரூபம் ஆகிய இவைகள் தேஜஸ்ஸின் அம்சங்களேயாம். ஆனதால் தேஜஸ்ஸைக்காட்டிலும் வேறல்ல. அதுபோலவே புத்தி, இந்திரியங்கள், விஷயங்கள், ஆகிய இவைகள் தங்களிலொன்றாகிய பரப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறல்ல. ஜாகரணம், ஸ்வப்னம், ஸுஷுப்தியென்ற அவஸ்தைகள் புத்தியினுடையதென்று சொல்லுகிறோமல்லவா? அதுவும் எப்படி பொய்யானதோ, அதுபோல பரமாத்மாவிடத்தில் பலவகையாகத் தோற்றுவதும் மாயையேயாம். ஆகாயத்தில் மேகங்கள் எப்படி சிலகால மிருக்கின்றன. சிலகாலமில்

லேயோ, அப்படி ப்ரஹ்மத்தினிடம் இந்த ப்ரபஞ்சமிருக்கிறது, (எது அவயங்களுள்ளதோ, அது ஆதியந்தமுள்ளது. ப்ரபஞ்சம் ஆதியந்த முள்ளதானதால் இல்லையென்றுகருத்து. உண்டாவதும் நசிப்பது மாகவிருப்பதால் ப்ரபஞ்சம் மித்யை. ப்ரபஞ்சமில்லாத காலத்திலும் எது இருக்கிறதோ அதுவே ஸத்யமானது. கயிற்றைப்பார்த்து ஸர்ப்பமென்று நினைப்பதுபோல் என்றுகருத்து) அவயங்களுள்ள எல்லாவஸ்துக்களுக்கும் (அவயவிகளுக்கும்) அவயமே ஸத்யமானது. அவயவியைவிட்டு அவயவம்தனியாக ப்ரகாசிக்கும். அவயவத்தை விட்டு அவயவி தனியாக ப்ரகாசிக்கிறதில்லை. வஸ்திரத்தின் அவய வமான நூலைத்தனியாகப் பிரித்தெடுக்கலாம். நூலைவிட்டுத்தனி யாக வஸ்திரமிருக்க முடியாதல்லவா? (ப்ரபஞ்சம் கார்யம் ப்ரஹ்மம் காரணம் என்று சொல்லுகிறீர்கள். கார்யமாகிய ப்ரபஞ்சம் மித் யை யென்றால் ப்ரஹ்மத்தைக் காரணமென்று தான் எப்படி சொல்லக்கூடும். என்றால் ப்ரஹ்மத்தினிடத்தில் காரணத்வமும் ஸத்யமல்லவென்று அடுத்தச்லோகத்தால் காட்டப்படுகிறது) லோகத்தில் சில காரணங்களாகவும், காணப்படுகின்றன. அது ப்ராந் தியேயாம். கார்யகாரணங்கள் ஒன்றையொன்று அபேக்ஷிக்கிறதால் எல்லாம் ஆதி அந்தம் இவைகளுள்ள வைகளாகவிருக்கின்றன. ஆன தால் அவை வஸ்துக்களல்ல. கார்யமென்று ஒன்றிருந்தால் காரண மென்பது ஏற்படும். ஆனதால் கார்யமென்பதும் ஒன்றை ஒன்று அபேக்ஷித்ததே. ஒருவஸ்து ஒன்றை உத்தேசித்துக்காரணமாக வும், மற்றொன்றையுத்தேசித்து கார்யமாகவும் ஆகிறது. ஆனதால் கார்யமென்பதும், காரணமென்பதும் நியதமல்ல. உத்பத்தி நாச முள்ளது. மேற்காட்டியவண்ணம் கார்யத்வம் (கார்யமாகவிருக்கும் தன்மை) முதலியவை ஸத்யங்களல்லவானதால் ப்ரஹ்மத்தினிடத் தில் காரணத்வமுமில்லையென்று காட்டப்பட்டது) மேற்காட்டிய யுக்திகளால் ப்ரபஞ்சம் மித்யையென்று தெரியவருகிறது. ஆனா லும் ப்ரபஞ்சம் தோன்றுகிறதே, அதனை மித்யையென்று எப்படி சொல்லலாமென்றால் ப்ரபஞ்சம் இருப்பதாகத் தோன்றி னாலும் பரமாத்மாவின் ப்ரகாசத்தைக்காட்டிலும் கொஞ்ச மாவது வேறாக ப்ரகாசிப்பதாகச் சொல்ல முடியவில்லை. அப்படி வேறாகப்ரகாசிக்குமானால் ஆத்மாவைப்போல் ப்ரபஞ் சமும் வஸ்துவென்று சொல்லக்கூடும். (அப்படியில்லையென்று கருத்து) ஆத்மா ஸத்யனானாலும் ஜீவாத்மா, பரமாத்மா

வென்ற பேதமிருக்கிறதே யென்றால்—ஸத்யனாகிய ஆத்மாவிடத்தில் பேதமேயில்லை. பேதமிருப்பதாக நினைப்பது மூடத்தனம், ஆகாசம் உபாதி ஸம்பந்தத்தால் கடாகாசம் முதலியவியவஹாரத்தை யடைந்தாலும் உண்மையிலெப்படி பேதமற்றதோ, அப்படிசரீரம் முதலிய உபாதி ஸம்பந்தத்தால்ஜீவனென்று வ்யவஹாரமேற்படுகிறதே யொழிய உண்மையில் ஆத்மா ஒன்றேயாம் (ஒன்றிலும் அடங்கிய தல்லவென்பது ஆகாச திருஷ்டாந்தத்தால் காட்டப்பட்டது) ஆகாயத்திலுள்ள ஸூர்யன் ஜலத்தில் தோன்றும்பொழுது அந்த பிம்பப்பிரதிபிம்பங்கள் உபாதி ஸம்பந்தத்தால் வேறு போல் தோன்றினாலும் உண்மையில் எப்படி ஒன்றோ, உபாதியாலேற்படும் அசைவு முதலிய விகாரத்தை அடைகிறதில்லையோ, அப்படி ஆத்மா உபாதி ஸம்பந்தத்தால் பேதத்தையாவது விகாரத்தையாவது அடைகிறதில்லை. சரீரத்திற்குள்ளிருக்கும் வாயு ப்ராணனென்றும், வெளியிலிருப்பது வாயுவென்றும் வியவஹரிக்கப்பட்டாலும் உண்மையிலெப்படி அவ்விரண்டிற்கும் பேதமில்லையோ, அப்படி ஜீவனுக்கும், பரமாத்மாவிற்கும் உண்மையில் பேதமில்லை (கிரியா பேதத்திற்காக வாயு உதாஹரணமாகச் சொல்லப்பட்டது) ஸுவர்ணத்தை ஜனங்கள் பலவகையான ஆபரணங்களாகச்செய்து அவைகளுக்குப் பலவகையான பெயர்களைக்கல்பித்து எப்படிப் பலவகையாக வ்யவஹரிக்கிறார்களோ அப்படி பரமாத்மாவை ஜனங்கள் லௌகிகவார்த்தைகளாலும், வைதிகவார்த்தைகளாலும் பலவகையாகச் சொல்லுகிறார்கள் (கடுக்கன், வளைமுதலிய பெயர்களால் வியவஹரிக்கப்பெற்றாலும் உண்மையில் எப்படி ஸுவர்ணமாகவே யிருக்கிறதோ, அப்படி எல்லா வ்யவஹாரத்திற்கும் பகவானே ஆச்ரயமென்றுகருத்து) அஹங்காரம் ப்ரஹ்மத்தின் கார்யமல்லவா? தனக்குக்காரணமாகிய ப்ரஹ்மத்தை மறைக்கும்சக்தி அஹங்காரத்துக்கு ஏற்படக்கூடுமா? அப்படி ஏற்படுமானால் அஹங்காரமும் மறைக்கப்படவேண்டுமே யென்றால்—ஸூர்யனாலுண்டு பண்ணப்பட்ட மேகங்கள் ஸூர்யனாலேயே ப்ரகாசிக்கப்பெற்று ஸூர்யனையே மறைக்கின்றனவல்லவா ? அதுபோல ப்ரஹ்மத்தாலுண்டுபண்ணப்பட்ட அஹங்காரம் அவராலேயே ப்ரகாசிக்கப்பெற்று ஆத்மப்ரகாசத்தை மறைக்கின்றது. (அக்னியில் போடப்பெற்ற ஆஹுதியானது. ஸூர்யனை அடைகிறது. ஸூர்யனிடமாக மழையுண்டாகிறது. மழையால் அன்னமுண்டாகிறது, அதனால் ப்ராஜை

கள் விருத்தியடைகிறார்கள் ச்ருதி) ஸூர்யனாலுண்டான மேகத்தின் மறைவு எப்பொழுது விலகுகிறதோ, அப்போது சக்ஷுஸ்ஸானது தன்னுடைய ஸ்வரூபமாகிய ஸூர்யனைகாண்கிறது. அதுபோலவே ஆத்மவிசாரத்தால் அஹங்காரம் நிவர்த்தியானபின் நானே ப்ரஹ்ம மென்று நினைக்கிறான். எப்பொழுது மேற்காட்டியபடி விவேகமாகிய ஆயுதத்தால் மாயாமயமாகிய அஹங்காரமாகிய கட்டைவெட்டி பரிபூர்ணமான ஆத்மாவாக விருக்கிறானோ, அதை ஆத்யந்திகப்ரயள மென்கிறார்கள்.

35—43. ப்ரஹ்மாமுதலிய எல்லாப்ராணிகளுக்கும் எப்பொழுதும் உத்பத்தி, ப்ரளயம் இவைகளுண்டென்று ஸூக்ஷ்மதிருஷ்டியுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். காலமாகிய நதிவேகத்தால் இழுக்கப்படும் சரீரம்முதலிய அவஸ்தைகள் உத்பத்திக்கும் ப்ரளயத்திற்கும் காரணங்களாக விருக்கின்றன (ஆற்றில் ஜலம் ப்ரவஹிக்கும்போது ப்ரவாஹம் ஒவ்வொருக்ஷணத்திலும் எப்படி புதிதோ, தீபஜ்வாலை யெப்படி ஒவ்வொரு க்ஷணத்திலும் புதிதோ, அப்படி சரீரங்களும் ஒவ்வொரு க்ஷணத்திலும் புதிது. ஆனதால் ப்ரஹ்மாமுதலிய ஸகல ப்ராணிகளும் நித்யம ஜனிக்கிறார்கள், நசிக்கிறார்களென்று கருத்து) ஆனால் ஆகாசத்தில் ஸூர்யன் சந்திரன் முதலியவை யெப்பொழுதும் சென்று கொண்டிருந்தாலும் அவைகளின் கதி (நடை) எப்படி ஜனங்களுக்குத் தெரியவில்லையோ அப்படி ஆதி, அந்தம் இவைகளற்றதும், ஈச்வர ஸ்வரூபமுமான காலத்தாலுண்டாகும் அவஸ்தைகள் ஸாமான்ய ஜனங்களுக்குத்தெரியவில்லை (பால்யம் முதலிய அவஸ்தைகள் காணப்படுவதால் அதன் மத்தியிலும் அவஸ்தைகளுண்டென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்றுகருத்து) மேற்காட்டியவண்ணம் நித்யம், நைமித்திகம், ப்ராக்ருதிகம், ஆத்யந்திகம் என்று ப்ரளயம் நான்குவகையாகவிருக்கிறது. காலத்தின் கதி இம்மாதிரியாகவிருக்கிறது. குருக்களில் சிறந்த ஓ பரீக்ஷித்தே! ஸகல ஜகத்தைப் படைத்து அதைத் தம்முடைய தேஜஸ்ஸால் காப்பாற்றுகிறவரான ஸ்ரீமந் நாராயணனுடைய லீலா விஷயமான கதைகளைச் சுருக்கமாகச் சொன்னேன். முழுமையையும் சொல்வதற்கு ப்ரஹ்மதேவராலும் முடியாது. பலவகையான துக்கமாகிய காட்டுத்தீயினால் உபத்திரவிக்கப்பெற்று தாண்டமுடியாத ஸம்ஸார ஸமுத்திரத்தைக் கடக்க விரும்பும்

புருஷனுக்குப் புருஷோத்தமராகிய பகவானுடைய கதையைக் கேட்பது சொல்வது முதலியவைவையைத் தவிர வேறு கப்பலில்லை. இந்த புராணஸம்ஹிதையை முந்தி நாராயணமஹர்ஷி நாரத ருக் குபதேசித்தார். அவர் வ்யாஸருக்குபதேசித்தார். ஓ மிக்க அதிருஷ்டமுள்ளவரே! அந்த வ்யாஸ பகவான் வேதத்திற்குச் சமமான இந்த ஸம்ஹிதையை எனக்குபதேசித்தார். இனி நைமி சாரண்யத்தில் மஹர்ஷிகள் தீர்க்க ஸத்திரஞ் செய்யும்பொழுது சௌனகர் முதலியவர்களால் கேட்கப்பெற்று ஸூதர் இந்த ஸம் ஹிதையை மஹர்ஷிகளுக்குச் சொல்வார்" என்றார்.

---

## அத்யாயம்—5.

### பரீக்ஷித்திற்கு சுகர் ப்ரஹ்ம ஸ்வரூபத்தைச் சுருக்கமாகச் சொன்னது.

இந்த புராணத்தில் ஸகல ஜகத்ஸ்வரூபியான ஸ்ரீமந் நாரா யணன் அடிக்கடி வர்ணிக்கப்படுகிறார். அவருடைய ஸந்தோஷத் திலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார். கோபத்திலிருந்து ருத்தி ரன் உண்டானார். ஓ பரீக்ஷித்தே! "நான் மரணமடையப்போகி றேன்" என்ற அல்பபுத்தியை விட்டுவிடும். நீர் முந்தியில்லாமல் புதிதாக உண்டானவர் அல்ல. இந்த சரீரம்போல நாசத்தை யடை யப்போகிறதுமில்லை. பிதாவே புத்திரனாக ஜனிக்கிறான் என்று வேதத்தில் பீஜாங்குர ந்யாயமாகச் சொல்லப்பட்டிருந்தாலும், சரீ ரம் உண்டாகிறது என்று அதற்குத் தாத்பர்யமேயொழிய ஆத்மா ஜனிக்கிறதில்லை. கட்டையைக் காட்டிலும் அக்னி வேறாக விருக் கிறதுபோல தேஹம் முதலியவைகளைக்காட்டிலும் ஆத்மா விலக்ஷ ணன் என்று தெரிந்துகொள்ளவேண்டும். ஸ்வப்னத்தில் தன்னு டைய தலை வெட்டுப்படுவதாகவும் தான் மரணத்தையடைவதாக வும் தானே பார்க்கிறானல்லவா? அதனால் மரணம் முதலியவைகள் சரீரத்திற்கேயொழிய ஆத்மா ஜனிக்கவுமில்லை. மரணமடையவு மில்லை. குடம் உடைந்துபோனால் அதை உபாதியாய்க்கொண்ட ஆகாசம் முன்போல் எப்படி ஆகாசமாக விருக்கிறதோ, அதுபோல சரீரம் நாசத்தை யடைந்தால் ஜீவன் ப்ரஹ்மமாகவாகிறான். மனஸ்

ஸானது தேஹம் குணம், கர்மம் இவைகளை உண்டுபண்ணுகிறது அந்த மனத்தை மாயை யுண்டுபண்ணுகிறது. அதனுல் ஜீவனுக்கு ஸம்ஸாரமேற்படுகிறது. எண்ணெய், திரி, அக்னியின் சேர்க்கை இவைகள் எதுவரையிலிருக்குமோ அதுவரையில் தீபமாக விருக்கும். அதுபோல் கர்மா, மனஸ், தேஹம், சைதன்னியம் இவைகள் சேருவதாலேயே ஸம்ஸாரம் உண்டாகிறது. (கர்மம் எண்ணெய் போலும் அதற்கு அதிஷ்டானமாகிய தீபம்போல் மனதும், திரிபோல் தேஹமும், அக்னியின் சேர்க்கைபோல் சைதன்னியத்தின் அத்தியாஸமும், த்வீபஜ்வாலைபோல ஸம்ஸாரமென்றும் காட்டப்பட்டது) மேற்காட்டிய ஸம்ஸாரம், ரஜஸ், ஸத்வம், தமஸ் இவைகளின் விருத்தியால் உண்டாகிறது ; வளர்கிறது ; முறையே நசிக்கிறது. ஆனதால் ஸம்ஸாரம் நசிக்கிறதேயொழிய ஆத்மாவிற்கு ஒரு பொழுதும் நாசமில்லை. ஸ்தூல ஸூக்ஷ்ம தேஹங்களைக்காட்டிலும் ஆத்மா விலக்ஷணர் ; ஸ்வயமாக ப்ரகாசிப்பவர் ; எல்லாவற்றிற்கும் ஆகாசம்போல ஆதாரமாகவிருப்பவர் ; விகாரமற்றவர் ; நாசமறற்வர் ; ஒப்பற்றவர் ; எங்குமிருப்பவர் ; இப்படிப்பட்ட பரமாத்மா உம்முடைய தேஹத்திலிருப்பதாக அனுமான ப்ரமாணத்தைக் கவர்ந்த புத்தியைக்கொண்டும் பகவானை த்யானஞ் செய்வதாலும் தெரிந்துகொள்ளும். மிருத்யுக்களுக்கு மிருத்யுவான ஈச்வரனை மரணத்திற்குக் காரணங்களான ஸர்ப்பம் முதலியவைகள் உபத்திரவிக்காதல்லவா ? ஆனதால் ப்ராஹ்மணசாபத்தால் தூண்டப்பட்ட தக்ஷகன் உம்மை எறிக்கமாட்டான். ஆனதால் நீர், நான் என்பவன் ப்ரஹ்மமேயாம். ப்ரஹ்மமென்பது எதுவோ அதுவும் நானேயாம் என்று தம்மை உபாதியற்ற பரப்ரஹ்மமாக த்யானம் செய்யும். அந்த காலத்தில் உம்மைத்தவிர ஜகத்வேறாக உமக்குத் தோன்றாதாகையால் உம்முடைய காலில் நாக்கினுல் நக்கிகடிக்கும் தக்ஷகனையாவது, உம்முடைய சரீரத்தையாவது நீர் பார்க்கமாட்டீர். ஓ மஹாராஜ! ஜகத்ஸ்வரூபியான பகவானுடைய லீலையைப் பற்றிக் கேட்டீரல்லவா ? அதனைச் சொன்னேன். இன்னும் எதனைக் கேட்க விரும்புகிறீர் ? என்று சுகர் கேட்டார்.

---

## அத்யாயம்—3.

### பரீக்ஷித்து மோக்ஷத்தையடைந்தது.

ஜகத்ஸ்வரூபியான ஸ்ரீ மஹாவிஷ்ணுவை எப்பொழுதும் தன்னுடைய ஹிருதயத்தில் பார்த்துக்கொண்டிருப்பவரும், ஸமபுத்தியுள்ளவரும்,வ்யாஸருடைய புத்திரருமான சுகப்ராஹ்மத்தால் சொல்லப்பட்ட இந்த புராணத்தைக் கேட்டு பரீக்ஷித்து மஹாராஜன் அவருடைய பாதங்களைத் தன்னுடைய தலையில் வைத்துக்கொண்டு சுகரை நோக்கி, "நான் ஸித்தனுனேன். கருணையையே ஸ்வபாவமாகக்கொண்ட நீர் ஆதியந்தமில்லாதவரான நாராயணனுடைய கதையைச்சொல்லி என்னை அனுக்ரஹித்தீர். ஆனுல் பகவத் பக்தர்கள் ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் மூடர்களை அனுக்ரஹிப்பது அதிக ஆச்சர்யமல்ல, உத்தமச்லோகராகிய பகவானுடைய சரிதங்களை வர்ணிக்கும் இந்த புராணஸம்ஹிதையை நீர் சொல்ல நான்கேட்டேன். ஓ பகவன்! தக்ஷகன் முதலிய மிருத்யுக்களிலிருந்து நான் பயப்படேன். பயமில்லாத பதமானது உம்மால் காண்பிக்கப்பட்டது. நான் ப்ராஹ்மமாக ஆனேன். நான் வாக்குமுதலிய எல்லா இந்திரியங்களையும் அடக்கி சுத்தமான மனஸ்ஸை பகவானிடத்தில் ப்ரவேசிக்கச்செய்து ப்ராணனை விடப்போகிறேன். அனுமதி கொடுக்க வேண்டும். உம்மால் உபதேசிக்கப்பட்ட ஜ்ஞானத்தாலும், விஜ்ஞானத்தாலும், அஜ்ஞானமும், அதன் வாஸனைகளும் நாசமாயின. க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய பகவானுடைய பரமபதமானது உம்மால் எனக்குக் காண்பிக்கப்பட்டது" என்று சொன்னுர். அதனைக்கேட்ட சுகர் பரீக்ஷித்திற்கு அனுமதி கொடுத்து அவரால் பூஜிக்கப்பெற்று ஸன்னியாஸிகளுடன் தனதிஷ்டப்படி சென்றுர்.

9—15. அரசர்களுக்குட் சிறந்தவரான பரீக்ஷித்தும் தம்முடைய மனஸ்ஸை புத்தியுடன் ஆத்மாவில் செலுத்தி பரமாத்மாவை த்யானஞ்செய்து மரம்போல் அசையாமல் நின்றுர். மேலுமவர் கங்கையின் கரையில் கிழக்குநுனியாகத் தர்ப்பங்களைப் பரப்பி அதில் வடக்குமுகமாக உட்கார்ந்து ஒன்றிலும் ஆசையில்லாதவராக ஸம்சயங்களற்றவராகி ப்ராஹ்மஸ்வரூபியாக விருந்தார். அப்பொழுது ப்ராஹ்மணர்களுடைய சாபத்தால் தூண்டப்பட்டு தக்ஷகன் பரீக்ஷித்தைக் கடித்துக்கொல்லுவதற்காக வரும்பொழுது வழியில் ஒரு

ப்ராஹ்மணனைக் கண்டான். அந்த ப்ராஹ்மணன் விஷவைத்தியத்தில் தேர்ச்சியடைந்தவன். பரீக்ஷித்து மஹாராஜனுக்கு வைத்தியம் செய்து அவரிடமாகப் பொருள் ஸம்பாதிக்கவிரும்பிவந்தான். அந்த ப்ராஹ்மணன் விஷவைத்தியத்தில் தேர்ச்சியடைந்தவன் என்பதைத் தக்ஷகன் தெரிந்துகொண்டு அவருக்கு இஷ்டமான பணத்தைக் கொடுத்து திருப்பி அனுப்பிவிட்டுத் தான் ப்ராஹ்மண வேடங் கொண்டு பரீக்ஷித்தின் ஸமீபஞ்சென்று அவரைக்கடித்தான். அந்த தக்ஷகனுடைய விஷாக்னியினால் அரசனுடைய சரீரம் சாம்பலாயிற்று. அரசன் ப்ரஹ்மஸ்வரூபியானார். அதனைக் கண்ணுற்ற ஜனங்கள் ஹா! ஹா! என்று உரக்கக் கத்தினார்கள். ஆகாயத்திலுள்ள தேவர்களும் பூமியிலுள்ள மனிதர்களும் ஆச்சர்யத்தையடைந்தார்கள். தேவதுந்துபிகள் முழக்கப்பட்டன. அப்ஸரஸ்ஸுக்களும் பாடினார்கள். தேவர்கள் புஷ்பங்களை வர்ஷித்தார்கள்; நல்லது நல்லது, என்று சொன்னார்கள்.

16—35. பின்பு பரீக்ஷித்தின் புத்திரனாகிய ஜனமேஜயரென்பவர் தம்முடைய பிதாவாகிய பரீக்ஷித்தைத் தக்ஷகன் கொன்றானென்ற விரோதத்தால் ப்ராஹ்மணர்களுடன் ஸர்ப்பயாகஞ்செய்து அதில் அநேக ஸர்ப்பங்களை அக்னியில் ஹோமஞ்செய்தார். அப்பொழுது தக்ஷகன் பயந்து இந்திரனைச் சரணமடைந்தான். யஜமானனாகிய ஜனமேஜயர் ப்ராஹ்மணர்களை நோக்கி "ஏன் தக்ஷகன் மாத்திரம் அக்னியில் விழவில்லை" என்றுகேட்க ப்ராஹ்மணர்கள் இந்திரனால் காப்பாற்றப்பட்டு இந்திரனிடத்தில் தக்ஷகனிருக்கிறான், என்று பதில் சொன்னார்கள். அதனைக்கேட்டு அரசன் இந்திரனுடன் தக்ஷகனை அக்னியில் ஏன் தள்ளக்கூடாது? என்றார். அதனைக்கேட்ட ப்ராஹ்மணர்கள், ஓ தக்ஷக! தேவேந்திரனுடன் அக்னியில் விழக்கடவாய், என்று அக்னியில் ஹோமம் பண்ணினார்கள். அந்த ப்ராஹ்மணர்களுடைய வார்த்தையால் இந்திரன் விமானத்துடன் தக்ஷகனுடனும் தமது இருப்பிடமிருந்து ஜனமேஜயருடைய யாகசாலையில் அக்னியின் ஸமீபம் வந்தார். இப்படி ஆகாயத்திலிருந்து விமானத்துடனும், தக்ஷகனுடனும் அக்னியில் விழுகின்றன தேவேந்திரனைக் கண்ணுற்ற ப்ருஹஸ்பதி பகவான் ஜனமேஜய மஹாராஜனை நோக்கி, "ஓ மஹாராஜ! இந்த தக்ஷகன் அமிருதத்தைப் பானஞ்செய்தவன் அதனால் இவனுக்கு மரணமும் கிழத்தனமு

மில்லை ஆனதால் இவனைக் கொல்வதாக யத்தனிப்பது உசிதமில்லை. பிராணிகள் ஜீவித்திருப்பதும் நாசத்தை யடைவதும் அவரவர்களுடைய கர்மத்தாலேயே யொழிய ஒருவனாலொருவன் ஜீவிப்பதென்பதும் ஒருவனையொருவன் கொல்வதென்பதுமில்லை. அப்படியே ஸுகதுக்கங்களும் அவரவர்களுடைய கர்மத்தாலேயே ஏற்படுகின்றன. ப்ராணிகள் ஸர்ப்பத்தாலும், திருடர்களாலும், அக்னியாலும், ஜலத்தாலும், பசி, தாஹம், வியாதி இவைகளாலும் மரணத்தை யடைகிறார்களென்பதற்கு அவரவர்களுடைய ப்ராரப்த கர்மத்தின் பயனை அனுபவிக்கிறார்களென்றே அர்த்தம் கொள்ள வேண்டும். ஆனதால் இந்த ஸர்ப்பயாகத்தை நிறுத்திவிடும். இதனால் குற்றஞ்செய்யாத அநேக ஸர்ப்பங்கள் எறிக்கப்பட்டன. அதுவும் அவைகளுடைய கர்மத்தாலேற்பட்டது. (உம்மிடத்தில் தோஷமில்லையென்று தாத்பர்யம்) என்று சொன்னார். அதனைக்கேட்ட ஜனமேஜயர் ப்ரஹஸ்பதியின் வார்த்தையில் கௌரவம்வைத்து ஸர்ப்ப யாகத்தை நிறுத்தி ப்ரஹஸ்பதியைப் பூஜித்தார். ஒன்றாலும் பாதிக்கப்படாததும் இப்படிப்பட்டதென்று ஊஹிக்க முடியாததுமாக விருப்பதே விஷ்ணுவின் மஹாமாயை விஷ்ணுவின் அம்சபூதர்களான ப்ராணிகளே கோபம் முதலியவைகளை யடைந்து அந்த மாயயால் மோஹிக்கிறார்கள். ப்ரஹ்மத்தை யறிந்த பெரியோர்களால் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் சொல்லப்படும்பொழுது இந்த மாயையானது ப்ரகாசியாமல் பயந்ததுபோல மோஹம் முதலியவைகளைச் செய்யாமலிருக்கிறது. மாயயால் ஏற்படும் பலவிதமான விவாதங்கள் பரப்ரஹ்மத்தினிடத்தில் ஸம்பவிக்கிறதில்லை. ப்ரஹ்மம் கார்யங்களை அதிக்கிரமித்தது. ஸங்கல்பம் விகல்பமென்ற விருத்தியுள்ள மனமும் ப்ரஹ்மத்தினிடத்திலில்லை. மேலும் கர்மமும், செய்கிறவனும் அவ்விரண்டினாலும் கிடைக்கும் பயனும் அம்மூன்றோடுகூடிய அஹங்கார ஸ்வரூபியாகிய ஜீவனும் ப்ரஹ்மத்தினிடமில்லை. அந்த ப்ரஹ்மஸ்வரூபமானது ஒன்றினாலும் பாதிக்கப்படுகிறதுமில்லை, ஒன்றையும் பாதிக்கிறதுமில்லை. ஆனதால் அஹங்காரம் முதலியவைகளை யொழித்து சாந்தியையடையவேண்டும். பெரியோர்கள் அனாத்மாக்களை விடவிரும்பியவர்களாகி சரீரம் முதலியவைகளில் அபிமானத்தையொழித்து இது ஆத்மாவல்ல, இது ஆத்மாவல்ல என்று ஒவ்வொன்றையும் விசாரித்துத் தள்ளி எதனை நிச்சயித்து மனத்தில் ஸ்திரமாக வைத்துக் கொள்ளுகிறார்களோ

அதுவே விஷ்ணுவின் பரமபதம். மேலும் தேஹத்தில் நான் என்ற அபிமானமும் வீடு முதலியவைகளில் என்னுடையதென்ற அபிமானமும் எவர்களுக்கு இல்லையோ, அவர்கள் விஷ்ணுவின் உத்தமமான பதத்தை யடைவார்கள். பிறர் வைதாலும் அதனைப் பொருத்துக்கொள்ளவேண்டும். ஒருவனையும் அவமானஞ்செய்யக்கூடாது. இந்தசரீரத்திற்காக ஒருவரையும் விரோதித்துக்கொள்ளக்கூடாது. எந்த பகவானுடைய பாதாரவிந்தத்தைத் தியானஞ்செய்த மஹிமையால் இந்தப் புராண ஸம்ஹிதையை நான் தெரிந்துகொண்டேனோ, அந்த பூர்ண ஜ்ஞான ஸ்வரூபியான ஸ்ரீ கிருஷ்ணபகவானை நமஸ்கரிக்கிறேன்' என்றார்.

36. அதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "வ்யாஸருடைய சிஷ்யர்களும் வேதாசார்யர்களுமான பைலர் முதலியவர்களால் வேதங்கள் எவ்வளவு விதமாகப் பிரிக்கப்பட்டன? அதனைச் சொல்லும்," என்று கேட்டார்.

37—39. அதனைக்கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி, "ப்ரஹ்மா தபஸ்செய்யும்பொழுது அவருடைய ஹிருதயாகாசத்திலிருந்து ஒரு நாதமுண்டாயிற்று. இப்பொழுதுகூட நம்முடைய காதுகளை மூடிக்கொண்டால் ஒரு நாதம்கேட்கிறதல்லவா அதுதான் அது. அந்த நாதத்தை உபாஸித்து யோகிகள் அதிபூதம், அத்தியாத்மம், அதிதைவம், இவைகளாலுண்டாகிய தாபத்தை நிவர்த்தித்துக்கொண்டு மோக்ஷத்தையடைகிறார்கள். அந்த நாதத்திலிருந்து மூன்று மாத்திரையுள்ள ஓங்காரமுண்டாயிற்று. அது தானாகவே ஹிருதயத்தில் ப்ரகாசிப்பது. அது காரணமற்றது; பரமாத்மாவிற்கு அதேயடையாளமென்று சொல்லுகிறார்கள். இந்த சப்தத்தை ச்ரோத்திரம் முதலிய இந்திரியங்களில்லாத காலத்தில் எவர் கேட்கிறாரோ, அவரே பரமாத்மா. அந்த ஓங்காரத்தாலேயே பலவாக்குகள் ப்ரகாசிக்கின்றன. ஹிருதயாகாசத்தில் ஆத்மாவிடத்திலிருந்து அது பிரகாசிக்கிறது. அந்த ஓங்காரம் தனக்குக் காரணமாகிய பரப்ரஹ்மத்தை நேராகச்சொல்லுகின்ற சப்தமாகவிருக்கிறது. மேலுமது ஸகல மந்திரங்கள், உபநிஷத், வேதம் இவைகளுக்குக் காரணமானது. எப்பொழுதும் ஒரேமாதிரியாகவுள்ளது. இந்த ஓங்காரத்தில் அகாரம், உகாரம், மகாரம் என்ற மூன்று அக்ஷரங்களிருக்கின்றன. அவைகளாலேயே ஸத்வம் முதலிய மூன்று குணங்

களும் ரிக், யஜுஸ், ஸாமம் இவைகளும், பூலோகம், புவர்லோகம், ஸ்வர்லோகம் இவைகளும், ஜாக்கிரத், ஸ்வப்னம் ஸுஷுப்தி ஆகிய அவஸ்தைகளும் தரிக்கப்படுகின்றன. அந்த ஓங்காரத்தைகொண்டு பகவான் அந்தஸ்தம் (ய, ர, ல, வ) ஊஷ்மம் (ச, ஷ, ஸ, ஹ) ஸ்வரம் (உயிரெழுத்துக்கள்). ஸ்பர்சம் (ககாரம் முதல் மகாரம்வரையிலுள்ள மெய்யெழுத்துக்கள்.) ஹ்ரஸ்வம், தீர்க்கம்முதலியவை (குறில், நெடில்) ஆகிய அக்ஷரஸமூஹங்களைப் படைத்தார். அதன்பின் நான்கு முகங்களால் நான்கு வேதங்களையும் வ்யாஹிருதிகளையும், ஹௌத்திரம் முதலியவைகளையும் படைத்தார். பின்பு ப்ரஹ்மதேவர் மரீசிமுதலிய தம்முடைய புத்திரர்களுக்கு மேற்காட்டியவேதம் முதலியவைகளை உபதேசித்தார். தர்மத்தையுபதேசிப்பவர்களான அவர்கள் தங்கள் தங்கள் புத்திரர்களுக்கு உபதேசித்தார்கள். அந்தவேதங்கள் இப்படி சிஷ்ய பரம்பரையாக ஒவ்வொருயுகத்திலும் வழங்கிவந்தன. த்வாபரயுகத்தின் முடிவில் மஹர்ஷிகள் வேதத்தைப்பிரித்தார்கள். அந்த காலத்திய ஜனங்கள் ஆயுஸ், புத்தி இவைகளில் குறைந்தவர்களாயிருந்தபடியினால் பகவான் மஹர்ஷிகளுடைய ஹிருதயத்திலிருந்து அவர்களைத் தூண்டி வேதங்களைப் பிரிக்கும்படி செய்தார். இந்தவைவஸ்வதமன் வந்திரத்திலும் ப்ரஹ்மாமுதலியதேவர்கள் தர்மத்தைக் காப்பாற்றும்பொருட்டு பகவானைக்கேட்டுக் கொண்டதால் ஸத்யவதியினிடத்தில் பராசருக்குப்புத்திராக அவதரித்து வேதங்களை நாலுவகையாகபிரித்தார். ரிக்கு, அதர்வா. யஜுஸ், ஸாமம், இவைகளுடைய மந்திரங்களை அந்தந்தப்ரகாரணத்திற்கு த்தக்கவாறு நூலில் ரத்தினத்தைக் கோர்ப்பதுபோல நான்கு ஸம்ஹிதைகளை ஏற்படுத்தினர். மிக்க புத்திமானாகிய அந்த வ்யாஸபகவான் நான்கு சிஷ்யர்களையழைத்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஸம்ஹிதையையுபதேசித்தார். பைலரென்ற சிஷ்யருக்கு ரிக்ஸம்ஹிதையைக்கொடுத்தார். அதற்குப்ஹ்வ்ருசமென்றுபெயர் (அநேக ரிக்குக்களுள்ளது) வைசம்பாயனரென்பவருக்கு யஜுஸ்ஸைக்கொடுத்தார். அதற்கு நிகதம் என்றுபெயர். (எல்லாவற்றையுஞ் சேர்த்துச்சொல்லியிருப்பதால்) சந்தோகமென்று பெயருள்ள ஸாமஸம்ஹிதையை ஜைமினிக்குபதேசித்தார். ஸுமந்துவென்பவருக்கு ஆங்கிரஸ்யென்ற அதவர்வஸம்ஹிதையை உபதேசித்தார். பைலரென்பவர் தனனுடைய ரிக்வேதத்தை இரண்டாகப்பிரித்து இந்

திரப்பிரமிதி என்பவருக்கும் பாஷ்கலரென்பவருக்கும் உபதேசித்தார் பாஷ்கலரென்பவர் தம்முடைய ஸம்ஹிதையை நான் காகப் பிரித்து போத்யர், யாஜ்ஞவல்கியர், பாராசரர், அக்னிமித்திர இவர்களுக்குப்பதேசித்தார். இந்திரப்ரமிதியென்பவர் தன்னுடைய ஸம்ஹிதையை தம்முடைய புத்திரராகிய மாண்டூகேயருக் குபதேசித்தார். அவருடைய சிஷ்யர் தேவமித்திரரென்பவர் ஸௌபரி முதலியவர்களுக்குச் சொன்னர். மாண்டூகேயருடைய புத்திரராகிய சாகல்லியரென்பவர் தம்முடைய ஸம்ஹிதையை ஐந்தாகப்பிரித்து வாச்யர், மௌத்கல்யர், சாலீயர், கோபில்லியர், சிசிரர் இவர்களுக்கு உபதேசித்தார். சாகல்யருடைய சிஷ்யராகிய ஜாதுகர்ணரென்பவர் தன்னுடைய ஸம்ஹிதையை மூன்றாகப்பிரித்து பலாகர், பைங்கர், வைதாளர் இவர்களுக்கும், நிருக்தத்தை விரஜருக்குங்கொடுத்தார். மேற்சொல்லிய பாஷ்கலருடைய புத்திரராகிய பாஷ்கலியென்பவர் ஒவ்வொருசாகைகளிலிருந்து மெடுத்து வாலகில்யமென்ற ஸம்ஹிதையைச்செய்தார். பாலாயனி, காசி, காஸாரர் என்பவர்கள் அதனை கிரஹித்துக்கொண்டார்கள். இம்மாதிரி பஹ்வ்ரசஸம்ஹிதை மேற்காட்டிய ப்ரஹ்மர்ஷிகளால் பிரித்து அத்யயனஞ் செய்யப்பட்டன. இந்த மஹர்ஷிகளால் செய்யப்பட்ட வேத விபாகத்தை ச்ரவணஞ் செய்வதால ஸகல பாபங்களும் நிவர்த்தியாகும்.

61—72. வைசம்பாயனருடைய சிஷ்யர்கள் சரகர்களாகவும், அத்வர்யுக்களாகவும் ஆனர்கள். குருவிற்கு நேர்ந்த ப்ரஹ்மஹத்யா தோஷத்தின் நிவிருத்திக்காக வ்ரதத்தை அநுஷ்டித்ததால் சரகர்களானர்கள். வைசம்பாயனருக்கு ப்ரஹ்மஹத்யா தோஷம் நேர்ந்தபொழுது அவருடைய சிஷ்யரான யாஜ்ஞவல்கியர் என்பவர் ஆசார்யரை நோக்கி "அல்பபலமுள்ள இவர்கள் செய்யும் வ்ரதத்தால் என்னபயன் ? மற்றவர்களால் செய்யமுடியாத வ்ரதத்தை நான் செய்கிறேன் " என்றார். அதனைக்கேட்ட வைசம்பாயனர் கோபங்கொண்டு ப்ராஹ்மணர்களை அவமதிப்பவனாகிய உன்னால் எனக்கு என்ன பயன்? என்னிடத்தில் அத்யயனஞ் செய்ததை சீக்கிரம் விட்டுவிடு (கொடு) என்றார். அதனைக்கேட்டு தேவராதருடைய புத்திரரான யாஜ்ஞவல்க்யர் யஜுர்வேத மந்திரங்களின் கூட்டத்தைக் கக்கிவிட்டுச் சென்றார். மற்றவர்கள் அதனைப்பார்த்து அந்த மந்திரங்களில் ஆசைகொண்டு தித்திரி பக்ஷிவேடங்கொண்டு

அவைகளை யெடுத்துக்கொண்டார்கள். அதனால் அந்த அழகான யஜுஸ்ஸாகைகள் தைத்தரீயமென்று பெயரடைந்தன. பின்பு யாஜ்ஞவல்க்யர் தம்முடைய ஆசார்யரிடமில்லாத யஜுஸ்ஸாகையைத் தேடிக்கொண்டு ஈச்வரனாகிய ஸூர்யனை யுபாஸித்தார். எப்படியெனில்—பகவானாகிய ஆதித்யனுக்கு நமஸ்காரம். நீர் ப்ரஹ்மா முதல் ஸ்தம்பம் வரையிலுள்ள நான்குவித ப்ராணிகளடங்கிய ஜகத்தின் ஹ்ருதயத்தில் அந்தர்யாமியாகவும், வெளியில் காலஸ்வரூபியாகவுமிருந்து ஆகாசம்போல உபாதியால் மறைக்கப் படாமலேயே க்ஷணம், லவம், நிமிஷ முதலிய அவயவங்களுள்ள ஸம்வத்ஸரக் கூட்டத்தைக்கொண்டு பூமியிலுள்ள ஜலத்தைக் கிரஹித்து காலத்தில்விட்டு (மழைபெய்து) இந்த லோகத்தின் யோகக்ஷேமத்தை நிர்வஹிக்கிறீர். இப்படிப்பட்ட லோக நிர்வாஹத்தில் நீர் மற்றொருவரையும் அபேக்ஷிக்கிறதில்லை. ஓ தேவர்களுக்குட் சிறந்தவரே! பிராணிகளைப் படைப்பவரே! ஒவ்வொருநாளும் மூன்று காலங்களிலும் வேதத்தில் சொல்லிய முறைப்படி வேதமந்திரங்களைக்கொண்டு ஸ்தோத்திரஞ் செய்பவர்களுக்கு ஸகல பாபங்கள், அவைகளின் பயனாகிய துக்கங்கள் ஆகிய இவைகளுக்குக் காரணமான அஜ்ஞானத்தை நிவர்த்திப்பவரே! அப்படிப்பட்ட உம்முடைய இந்த மண்டலத்தை த்யானஞ்சய்கிறோம். ஸ்தாவர ஜங்கம ப்ராணிகளெல்லாம் உம்மையே ஆச்ரயித்திருக்கின்றன. அவைகளுக்கு நீர் அந்தர்யாமியாக விருந்து ஜடங்களான மனம், இந்திரியம், ப்ராணன் இவைகளை கார்யத்தில் ப்ரவர்த்திக்கும்படி தூண்டுகிறீர். மேலும் மிக்க பயங்கரமான முகமுள்ள அந்தகாரமென்று பெயர்பெற்ற மலைப்பாம்பினால் விழுங்கப்பட்டு இந்த ஜகத்து ப்ரஜ்ஞையற்றிருக்கிறது. அதனிடத்தில் மிக்க கருணை வைத்து நீர் ஒருவரே கருணைபொருந்திய பார்வையால் பிழைக்கச்செய்து ஒவ்வொருநாளும் ஒவ்வொரு காலத்திலும் தனக்குரிய தர்மத்தை யநுஷ்டிப்பதான க்ஷேமமார்க்கத்தில் நடத்துகிறீர். பின்னும் நீர் அரசன்போல் துஷ்டர்களுக்கு பயத்தைச் செய்துகொண்டு ஸஞ்சரிக்கிறீர். இந்திரன் முதலிய லோகபாலர்கள் தாமரை மொட்டுப்போன்ற அஞ்சலிகளைச்செய்து உம்மைப் பூஜிக்கிறார்கள். ஓ பகவன்! மூவுலகங்களுக்கும் குருக்களாகவிருக்கும் ப்ரஹ்மதேவர் முதலியவர்களாலும், நமஸ்கரிக்கப்பெற்ற உம்முடைய இரு பாதாரவிந்தங்களையும் ஸேவிக்கிறேன். மற்றவர்

களுக்குத் தெரியாத யஜுஸ்ஸை யுபதேசிக்கவேண்டும்" என்று ஸ்துதித்தார்.

73. மேற்காட்டிய வண்ணம் யாஜ்ஞவல்கியரால் ஸ்துதிக்கப் பெற்ற ஸூர்ய பகவான் குதிரை ரூபியாகவிருந்து அயாதயாம மென்ற யஜுஸ்ஸை யாஜ்ஞவல்கியருக்குபதேசித்தார் அந்த யஜுஸ்ஸை பதினைந்து சாகைகளாக யாஜ்ஞவல்கியர் பிரித்தார். அவை களை காண்வர், மாத்யந்தினர் முதலியவர்கள் பெற்றுக்கொண்டார்கள். அந்த சாகைகளுக்கு வாஜஸநேய சாகைகளென்று பெயர்.

74—79. ஸாமகராகிய ஜைமினியின் புத்திரர் ஸுமந்து வென்பவர். அவருடைய புத்திரர் ஸுகர்மா வென்பவர் அவ்விருவர்களுக்கும் (புத்திரனுக்கும் பௌத்திரனுக்கும்) ஜைமினி ஒவ்வொரு ஸம்ஹிதையை யுபதேசித்தார். ஸுகர்மா வென்பவர் ஸாம சாகையை ஆயிரம் வகையாகப் பிரித்தார், அதன்பிறகு கௌஸல்யராகிய ஹிரண்யநாபர், பௌஷ்பிஞ்சி, யென்ற ஸுகர்ம சிஷ்யர்களும், ப்ரஹ்மவித்துக்களுட் சிறந்தவராகிய ஆவந்தியரும் அந்த ஸம்ஹிதையை அத்யயனஞ் செய்தார்கள். பௌஷ்பிஞ்ஜி, ஆவந்தியன், இவர்களுக்கு ஐந்நூறு சிஷயர்கள். அவர்களை உதீச்யர்கள். (வடக்கே யிருப்பவர்கள்) ப்ராச்யர்களென்றும் (காலபேதத்தால் கிழக்கிலிருப்பவர்கள்) சொல்லுகிறார்கள். லோகாக்ஷி, லாங்கலா, குல்யர், குஸீதர், குக்ஷி என்ற ஐந்து பௌஷ்பிஞ்ஜியின் சிஷ்யர்கள் நூறு நூறு ஸம்ஹிதையைப் பெற்றுக்கொண்டார்கள். ஹிரண்ய நாபருடைய சிஷ்யரான கிருதரென்பவர் இருபத்தி நான்கு ஸம்ஹிதைகளைப் பெற்றுக்கொண்டு தம்முடைய சிஷ்யர்களுக்குச் சொன்னார். மற்ற சாகைகளை ஆத்மவித்தாகிய ஆவந்தியரென்பவர் தம்முடைய சிஷ்யர்களுக்குபதேசித்தார்.

## அத்யாயம்—7.

### புராண லக்ஷணங்கள்.

அதர்வ வேதத்தை யறிந்த ஸுமந்து வென்பவரும் தம்முடைய ஸம்ஹிதையை சிஷ்யருக்கு (கபந்தரென்பவர்) சொல்லிக் கொடுத்தார். அவர் அதனை இரண்டாகப்பிறித்து பத்யர், வேததர்சர், ஆகிய இருவர்களுக்கு முபதேசித்தார். வேததர்சனர் தம்முடைய ஸம்ஹிதையை நான்குவகையாகப் பிரித்து சௌல்காயனி, ப்ரஹ்மபலி, நிர்தோஷர், பிப்பலாயனர் என்ற நான்கு சிஷ்யர்களுக் குபதேசித்தார். பத்யரென்பவர் தம்முடைய ஸம்ஹிதையை மூன்று வகையாகப் பிரித்து குமுதர், சுனகர், ஜாபாலியென்பவர்களுக் குபதேசித்தார். சுனகரென்பவர் தம்முடைய ஸம்ஹிதையை இரண்டாகப் பிரித்து பப்ரு, ஸைந்தவாயனர் என்ற இருவர்களுக்கு முபதேசித்தார். ஸைந்தவாயனர் முதலியவர்களுக்கு ஸாவர்ணி முதலியவர்கள் சிஷ்யர்களானார்கள். நக்ஷத்திர கல்பர், சாந்திகல்பர், காச்யபர், ஆங்கிரஸர் முதலியவர்கள் அதர்வணவேதத்திற்கு ஆசார்யர்கள். புராணங்களின் ஆசார்யர்களைச் சொல்லுகிறேன் கேளும். த்ரய்யாருணி, காச்யபர், ஸாவர்ணி, அகிருதவ்ரணர், சிம்சுபாயனர், ஹாரிதர், ஆகிய ஆறுமஹர்ஷிகள் பௌராணிகர்கள். மேற்காட்டியவர்கள் வ்யாஸருடைய சிஷ்யரான என்பிதாவாகிய ஸுதரிடம் புராணங்களை அத்யயனஞ்செய்தார்கள். (வ்யாஸர் ஆறு ஸம்ஹிதைகளைச் செய்து ரோமஹர்ஷணருக் குபதேசித்தார். அவரிடமிருந்து மேற்காட்டிய மஹர்ஷிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஸம்ஹிதையைத் தெரிந்துகொண்டார்கள் என்று தாத்பர்யம்) நான் மேற்காட்டிய ஆறு மஹர்ஷிகளுக்கும் சிஷ்யனாகவிருந்து ஒவ்வொரு ஸம்ஹிதையையும் அத்யயனஞ்செய்தேன். காச்யபர், நான், ஸாவர்ணி, பரசுராமருடைய சிஷ்யரான அகிருத வ்ரணர் ஆகிய நாங்கள் வ்யாஸருடைய புத்திரராகிய சுகரிடமாக மூலஸம்ஹிதைகள் நான்கையும் அத்யயனஞ்செய்தோம்.

8—10. ஓ ப்ராஹ்மண! புராணத்தில் லக்ஷணத்தை ப்ரஹ்மரிஷிகள் சொல்லியிருக்கிர்கள் அதனைச் சொல்லுகிறேன். வேதங்களிலும், சாஸ்திரங்களிலும் சொல்லியபடி என் புத்திக்குத்தக்கவாறு சொலுகிறேன். எப்படியென்றால்— இந்த ஜகத்

தின் ஸர்க்கம், விஸர்க்கம், விருத்தி, ரக்ஷை, மன்வந்தரங்கள், வம்சம், வம்சாநுசரிதம், ஸம்ஸ்தா, ஹேது, அபாச்ரயம் ஆகிய பத்து லக்ஷணங்களுள்ளதை புராணமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். பத்து லக்ஷணங்களுள்ளவை மஹா புராணங்களெனப்படும். ஐந்துலக்ஷணங்களுள்ளவை அல்ப புராணங்களெனப்படும்.

11—25. ப்ரதானத்தின் குணங்களுடைய க்ஷோபத்தால் மஹத்தத்வம், அதிலிருந்து மூன்றுவகையான அஹங்காரம், பூதஸூக்ஷ்மங்கள், இந்திரியங்கள், அதிஷ்டான தேவதைகள் ஆகிய இவைகளுடைய உத்பத்தியே ஸர்க்கமெனப்படுகிறது. புருஷனுடைய அநுக்ரஹத்தால் மேற்காட்டியவை முந்திய கர்மவாஸனையுள்ளவையாகி ஒன்றோடொன்று சேர்ந்து விதையிலிருந்து விதையுண்டாவதுபோல சராசரங்களாக ஆவது விஸர்க்கமெனப்படுகிறது. ஜங்கமங்களான ப்ராணிகளுக்கு ஸ்தாவரமான ப்ராணிகள் ஜீவனோபாயங்களானதால் அது ஜனங்களுக்கு ராகத்தால் கிடைத்தது. ஈச்வரனால் அநுமதிக்கப் பெற்றதென்பது விருத்தியெனப்படுகிறது. ஒவ்வொருயுகங்களிலும் திரயக்ஜாதிகள் (மீன், ஆமை வராஹம் முதலியவை) மனிதர்கள் மஹர்ஷி, தேவர்கள், இவர்களிடத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணு அவதாரஞ்செய்து துஷ்டர்களை ஸம்ஹரித்து நடத்திய லீலையே ரக்ஷையெனப்படுகிறது. மநு, மநுவின் புத்திரர்கள், அந்தகாலத்திய தேவர்கள், ஸப்தர்ஷிகள், இந்திரன், பகவானுடைய அம்சாவதாரம், ஆகிய இவைகள் தங்கள் தங்கள் அதிகாரத்தையடைந்திருக்குங்காலம் மன்வந்தரமெனப்படுகிறது. ப்ரஹ்மதேவரிடமிருந்து உண்டான அரசர்களுடைய வம்சம், அவர்களுடைய சரிதம், அவர்களுடையவம்சத்தார்களுடைய சரிதம் ஆகிய இவைகள் வம்சாநுசரிதமெனப்படுகிறது. மாயயால் இந்த ஜகத்திற்கு ஏற்படுகின்ற நைமித்திகம், ப்ராகிருதம், நித்யம், ஆத்யந்திகம் என்ற நான்குவகையான லயங்களையே ஸம்ஸ்தா என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அவித்யையால் கர்மங்களைச் செய்பவனும், ஜகத்தைப்படைப்பதற்கு ஹேதுவுமான ஜீவனே ஹேதுவெனப்படுகிறது. (ஜகத்தைப் படைப்பது முதலியவையெல்லாம் ஜீவனுடைய அதிருஷ்டத்தால் என்று கருத்து. ஜீவனுடைய போக்த்திற்காகவே ஸகல இந்திரியங்களுடன் சரீரம் உண்டாக்கப்படுகிறது) சிலர் ப்ரதானம் நிமித்தமென்றும்

சொல்லுகிருர்கள். ஆனுலும் சைதன்யத்தை ப்ரதானமாக வைத்துக்கொண்டு ஜீவனையே அநுசயியென்றும், உபாதியை ப்ரதானமாக வைத்துக்கொண்டு ஜீவனையே ப்ரதானமென்றும் அவர்களுடைய வார்த்தைக்கு அர்த்தங்கொள்ளவேண்டும். மாயயாலேற்படும் ஜீவனுடைய விருத்திகளான ஜாக்ரத் ஸ்வப்னம், ஸுஷுப்தி இவைகளில் எது ஸாக்ஷியாக தொடர்ந்திருக்கிறதோ, ஸமாதி முதலிய காலங்களில் ஸ்வரூபமாக விருக்கிறதோ அந்த ப்ரஹ்மமே அபாச்ரயமெனப்படுகிறது (எல்லாவற்றிற்கு மாதாரமாயிருப்பதால்) குடம் முதலிய பதார்த்தங்களில் மண் முதலிய த்ரவ்யங்கள் சேர்ந்தும் சேராததுமாக விருப்பதுபோல ரூபம் பெயர் இவைகளில் ஸத்தைமாத்திரம் எப்படி யிருக்கிறதோ அதுபோலும் நிஷேகம் முதல் மரணம் வரையிலுள்ள அவஸ்தைகளில் அதிஷ்டானமாக விருப்பதால் சேர்ந்ததும், ஸாக்ஷியாக விருப்பதால் அவைகளுடன் ஸம்பந்திக்காததாகவும் பரப்ரஹ்ம மிருக்கிறது. (நிஷேகம், கர்ப்பம், ஜனனம் பால்யம், கௌமாரம், யௌவனம், மத்தியவயஸ், ஜரை, மரணம் என்று ஒன்பது அவஸ்தைகள்) ஸர்க்கம் முதலிய ஒன்பதுவகையும் மாயாமயமென்று தெரிந்துகொண்டு தானுகவே சித்தமானது வைராக்கியத்தையடையவேண்டும் (வாமதேவாதிகள்போல) அல்லது யோகத்தையனுஷ்டித்து (தேவஹூதி முதலியவர்கள்போல) ஆத்மஸ்வரூபத்தை அறியவேண்டும். அப்பொழுதுதான் ஸம்ஸாரம் நிவர்த்தியடையும். (புராண லக்ஷணங்களில் பத்தாவதான ப்ரஹ்மஸ்வரூபத்தை யறியவேண்டியதற்காக முந்திய ஒன்பது லக்ஷணங்கள் காட்டப்பட்டனவென்றுகருத்து.) மேற்காட்டியபடி பத்து லக்ஷணங்களுள்ளவை மஹாபுராணங்களென்றும், ஐந்துலக்ஷணங்களுள்ளவை அல்பபுராணங்களென்றும் புராணங்கள் பதினெட்டென்றும் பெரியோர்களான மஹர்ஷிகள் சொல்லுகிருர்கள். அவைகள் எவையென்றுல்—ப்ராஹ்மபுராணம், பத்மபுராணம், விஷ்ணுபுராணம், சிவபுராணம், லிங்கபுராணம், கருடபுராணம், நாரதபுராணம், பாகவதபுராணம், அக்னிபுராணம், ஸ்காந்தபுராணம், பவிஷ்யபுராணம் ப்ரஹ்மவைவர்த்தபுராணம், வாமனபுராணம், வராஹபுராணம், மத்ஸ்யபுராணம், கூர்மபுராணம், ப்ரஹ்மாண்டபுராணம் என்று புராணங்கள் பதினெட்டு. ஓ சௌனக! வ்யாஸருடைய சிஷ்யாாலும் அவருடைய சிஷ்யர்களாலும் வேதம் புராணம் இவைகள் கிளைகளா

கப் பிரிக்கப்பட்டன. அதனை உமக்குச்சொன்னேன். இதைக் கேட்பவர்களுக்கு ப்ரஹ்மதேஜஸ் விருத்தியாகும்'' என்று ஸூதர்சொன்னார்.

---

## அத்யாயம்—8.

### மார்க்கண்டேயர் தபஸ் செய்தது.

சௌனகர் ஸூதரை நோக்கி "ஓ ஸாதுவாகிய ஸூத! கதை சொல்பவர்களுக்குட் சிறந்தவரே! கரையற்ற ஸம்ஸாரமாகிய இருளில் சுற்றிக்கொண்டிருக்கும் ஜனங்களுக்கு நீர் கரையைக் காண்பிப்பவர். ப்ரளயகாலத்தில் இந்த ஜகத்முழுவதும் நாசத்தை யடைகிறதல்லவா? அந்த காலத்தில்கூட மார்க்கண்டேய மஹர்ஷி நாசத்தை யடையாமல் சிரஞ்ஜீவியாக விருப்பதாகச் சொல்லுகிறார்களே அது எப்படி பொருந்தும்? அதனைச் சொல்லவேண்டும். மேலும் அந்த மார்க்கண்டேயர் இந்த கல்பத்தில் பிறந்தவர் என்று சொல்வோமானால் இந்த கல்பத்தில் இன்னும் ஒருவகையான ப்ரளயமும் உண்டாகவில்லையே. அப்படியிருக்க அவர் ப்ரளயத்தைப் பார்த்தார் என்பது எப்படிப் பொருந்தும்? ப்ரளயகாலத்தில் அவர் ஒருவர் மாத்திரம் ஸஞ்சரித்துக்கொண்டும் ஆலிலையில் சயனம் பண்ணிக்கொண்டிருந்த இளம்பருவமுள்ள ஸ்ரீமந் நாராயணனைத் தர்சித்தாரல்லவா? அது எப்படிப் பொருந்தும்? ஓ ஸூத! மஹாயோகியே! நீர் எல்லாப் புராணங்களையு மறிந்தவராதலால் இந்த ஸம்சயத்தைப் போக்கடிக்கவேண்டும். இதனைத் தெரிந்துகொள்ள மிக்க ஆவலுள்ளவனாக விருக்கிறேன்'' என்று கேட்டார்.

6—49. அதனைக்கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி, "உம்முடைய கேள்வியானது நாராயணனுடைய கதையின் ஸம்பந்தமுள்ளதானதால் ஸகல லோகத்தின் பாபத்தை நிவர்த்திக்கக் கூடியதாக விருக்கிறது. மார்க்கண்டேயர் மிரகண்டு மஹர்ஷியினிடம் உபநயனஸம்ஸ்காரத்தை யடைந்து வேதங்களை அத்தியயனம்செய்து தன்னுடைய ஜாதிக்கும் ஆச்ரமத்திற்கும் தகுதியான கர்மங்களை அனுஷ்டித்து நைஷ்டிக ப்ரஹ்மசாரியின் வ்ரதத்தைத் தரித்தவராகிய சாந்தமான மனமுள்ளவராகி ஜடை,

மரையுரி, கமண்டலு தண்டம், யஜ்ஞோபவீதம், மேகலே, மாந்தோல், ஜபமாலே, தர்ப்பம் இவைகளைத் தரித்து காலையிலும் மாலையிலும் அக்னி, ஸூர்யன், ஆசார்யன், ப்ராஹ்மணன், ஹிருதயம் இவைகளில் பகவானைப்பூஜித்து, ப்ரஹ்மசாரியாக ஸஞ்சரித்தார். மேலுமவர் காலையிலும், மாலையிலும் பிக்ஷைவாங்கி அதை ஆசார்யரிடத்தில் தெரிவித்து அவர் உத்திரவுகொடுத்தால் புஜிப்பதுவழக்கம். இல்லாவிடில் உபவாஸமிருப்பார். அப்படி பதினுயிரக் கணக்கானவர்ஷங்கள் ஸ்ரீமந் நாராயணனையுபாஸித்து மிருத்யுவை ஜயித்தார். அவர் மிருத்யுவை ஜயித்ததைக் கண்ணுற்ற, ப்ரஹ்மதேவர், பரமசிவன், ப்ருகு, தக்ஷர், ப்ரஹ்மாவின் மற்றகுமாரர்கள்; மனிதர்கள், தேவர்கள், பிதிருக்கள், மற்றபிராணிகள் ஆகிய எல்லாரும் மிகவும் ஆச்சர்யத்தை அடைந்தார்கள். இப்படி மார்க்கண்டேயர் ப்ரஹ்மசாரிவ்ரதத்துடன் யோகத்தை அநுஷ்டித்து அதனுல் ராகத்வேஷங்களற்று சுத்தமாகவிருக்கும் ஹிருதயத்தில் ஸ்ரீமந் நாராயணனைப் பூஜித்தார். மேலும் தபஸ், வேதாத்யயனம், இந்திரியங்களை அடக்குவது இவைகளைச்செய்து அவைகளைப் பகவானிடத்தில் ஸமர்ப்பித்தார். அந்த மஹாயோகியான மார்க்கண்டேயர் மனத்தை பகவானிடத்தில் செலுத்தி தபஸ் செய்யும்பொழுது 6-மநுக்கள் சென்றுர்கள். (ஆறுமனுக்களுடைய காலஞ்சென்றதென்று கருத்து) இந்த ஏழாவது மன்வந்தரத்தில் மஹேந்திரன் அவருடைய தபஸ்ஸினுல் ஸந்தேஹத்தையடைந்து அதற்கு விக்னஞ் செய்யவாரம்பித்தார். அப்பொழுது கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுகள், மன்மதன், வஸந்தன், தென்னல்காற்று, ரஜோகுணத்தின் குழந்தையானலோபம். மதம் ஆகிய இவைகள் மஹேந்திரனுடைய உத்திரவினுல் ஹிமயமலேயின் வடபுரத்திலிருக்கும் மார்கண்டேயருடைய ஆச்ரமஞ் சென்றுர்கள். அவ்விடத்தில் புஷ்பபத்ராவென்ற நதீ ஓடுகிறது. சித்ரா என்ற சிலேயொன்றுமிருக்கிறது. அந்த ஆச்ரமமானது புண்யத்தைக்கொடுக்கக்கூடியது; புண்யவிருக்ஷங்களும், புண்யமானகொடிகளும், புண்யமான பறவைகளும் அவ்விடத்திலிருக்கின்றன. அவ்விடத்திலுள்ள குளம்முதலிய ஜலாதாரங்கள் புண்யகரங்களும், சுத்தங்களுமாக விருக்கின்றன. மதித்த வண்டுகள் பாடுகின்றன; மதங்கொண்ட குயில்கள் கூவுகின்றன; மயில்கள் மிக்க மதங்கொண்டு நர்த்தனஞ் செய்கின்றன; மதித்த பரவைகள் கூட்டமாக வஸிக்கின்றன, அந்த ஆச்ரமத்தில் வாயு ப்ரவே

சித்து பனியால் குளிர்ந்த மலையாறுகளின் ஜலத்துளிகளுடனும், புஷ்பவாஸனைகளுடனும் மன்மதனை விருத்திசெய்ய வாரம்பித்தான் (மன்மததாப முண்டாகும்படி வாஸனையுடன் குளிர்ந்த காற்று வீசியதென்று கருத்து) வஸந்தன் அவ்விடத்தில் ப்ரவேசித்தான். மரங்களும், கொடிகளும் தளித்தன; புஷ்பித்தன; ராத்திரியில் சந்திரன் ப்ரகாசித்தான்; மன்மதன், வில், பாணம் இவைகளை தரித்து அப்ஸரஸ்திரீகளுடன் அவ்விடத்தில் காணப்பட்டான். கந்தர்வர்கள் பாடிக்கொண்டும், வாத்தியங்களை கோஷித்துக்கொண்டும் மன்மதனைப் பின்தொடர்ந்தார்கள். மேற்காட்டிய மன்மதன் முதலிய தேவேந்திரனைச் சார்ந்தவர்கள் மார்க்கண்டேயரைக் கண்டார்கள். அவர் அக்னி கார்யத்தை முடித்து கண்களை மூடிக்கொண்டு த்யானஞ் செய்துகொண்டிருந்தார். மஹர்ஷி வேடங்கொண்ட அக்னிபோல் ஜ்வலித்து பிறரால் அவமதிக்கக் கூடாதவராகவிருந்தார். அவருடைய முன்னிலையில் அப்ஸரஸ்ஸுக்கள் நர்த்தனஞ்செய்தார்கள்; கந்தர்வர்கள் பாடினார்கள்; வாத்யக்காரர்கள் மிருதங்கம். வீணை, பணவம் இவைகளை மதுரமாக முழக்கினார்கள். மன்மதன் ஐந்து முனைகளுள்ள அஸ்திரத்தை வில்லில் தொடுத்தான் (உலர்த்துவது, மோஹிக்கச்செய்வது, எறிப்பது, காச்சுவது, பயித்தியத்தை உண்டுபண்ணுவதென்று ஐந்து முனைகள்) இப்படி வஸந்தன் லோபம் முதலிய இந்திரனுடைய வேலைக்காரர்கள் மார்க்கண்டேயருடைய மனத்தை கலக்கினார்கள். அப்பொழுது புஞ்ஜிகஸ்தலாயென்ற அப்ஸரஸ் பந்து விளையாடினாள். அவளுடைய ஸ்தனங்கள் பருத்திருப்பதால் இடை வணங்குகிறது. தலையிலிருந்து புஷ்பமாலை பூமியில் விழுகிறது. இப்படி அவள் பந்து விளையாடும்பொழுது ஓட்டியாணம் நழுவி காற்றுவேகத்தால் வஸ்திரம் பூமியில் விழுந்தது. அந்த ஸமயம்பார்த்து இந்த ஸமயத்தில் மஹர்ஷியை ஜயித்துவிடலாமென்று மன்மதன் பாணத்தை ப்ரயோகித்தான். தைவப்பிரயத்தினமில்லாத காலத்தில் முயற்சிப்பவனுடைய முயற்சிபோல் அவை யாவும் வீணாயின (மஹர்ஷியின் மனங் கலங்கவில்லையென்று கருத்து) மேற்காட்டிய வண்ணம் மன்மதன் முதலியவர்கள் மஹர்ஷிக்கு அபராதஞ்செய்தும் அவரையொன்றுஞ்செய்ய முடியாமல் அவருடைய தேஜஸ்ஸால் எறிக்கப்பட்டு திரும்பி ஸ்வர்க்கஞ்சென்றார்கள். அது சிறுவர்கள் மஹாஸர்ப்பத்தைத் தட்டியெழுப்பியது போலிருந்தது. ஓ சௌனக!

இந்திரனுடைய வேலைக்காரர்கள் மஹர்ஷியின் தபஸ்ஸிற்கு விக்னஞ்செய்து அவர் மனங்கலங்காமலிருந்தது ஆச்சர்யமல்ல. பெரியோர்களுடைய மனமொருபொழுதும் கலங்காது. மன்மதன் முதலியவர்கள் தேஜஸ்ஸில்லாம லிருப்பதைப்பார்த்தும், மஹர்ஷியின் மஹிமையை அவர்கள் முகமாகக் கேள்விப்பட்டும் மஹேந்திரன் மிக்க ஆச்சர்யத்தை அடைந்தார். இப்படிப் பகவானிடத்திலேயே மனத்தைச்செலுத்தி தபஸ் முதலியவையால் பகவானை ஆராதித்துக்கொண்டிருக்கும் மார்க்கண்டேயரை அநுக்ரஹிப்பதற்காக நரநாராயண ஸ்வரூபியான மஹாவிஷ்ணு அந்த ஆச்ரமத்திற்கு வந்தார். அவ்விருவர்களும் புதிதாக மலர்ந்த தாமரை மலர்போன்ற கண்களுள்ளவர்கள் ; நான்கு கைகளுள்ளவர்கள் ; கிருஷ்ணாஜினத்தையும், மரையுரியையும் உடுத்திக்கொண்டவர்கள் ; பவித்திரந்தரித்த கைகளுள்ளவர்கள் ; மூன்றாக மடித்த யஞ்ஞோபவீதம், கமண்டலு, மூங்கில் தண்டம் இவைகளை தரித்தவர்கள் ; அவர்களில் நரர் வெண்மை நிறமுள்ளவர் ; நாராயணன் பச்சை நிறமுள்ளவர் ; தாமரை மணிகளால் செய்யப்பட்ட ஜபமாலையையும், கொசு முதலிய ஜந்துக்களை யோட்டுவதற்காக வஸ்திரம், தர்ப்ப முஷ்டி இவைகளைத்தரித்தவர்கள் ; தபஸ்ஸே மஹர்ஷிவேடங்கொண்டிருப்பதுபோல் ப்ரகாசிப்பவர்கள் ; மின்னல்போன்ற தேஜஸ்ஸுள்ளவர்கள் ; உயர்ந்த சரீரமுள்ளவர்கள் ; சிறந்த தேவர்களாலும் பூஜிக்கப்பெற்றவர்கள் ; நாராயணருடைய ஸ்வரூப பூதர்களான அந்த நரநாராயண மஹர்ஷிகளைக் கண்டவுடன் மார்க்கண்டேயர் சீக்கிரமாக வெழுந்து தண்டம்போல நமஸ்கரித்தார். அவர்களை தர்சித்தவுடன் மார்க்கண்டேயருடைய தேஹம், இந்திரியங்கள், மனம் ஆகிய இவைகள் சாந்தங்களாயின ; அவருக்கு மயிர் கூச்சி லுண்டாயிற்று ; ஆனந்தக்கண்ணீர் பெருகியது ; அதனால் அவர்களைப் பார்க்கமுடியாதவராக விருந்தார். மேலுமவர் எழுந்திருந்து மிகுந்த வணக்கத்துடன் அஞ்ஜலிசெய்து அன்புடன் பார்த்து, நமஸ்காரம், நமஸ்காரம் என்று தழுதழுத்த ஸ்வரமாகச் சொன்னார். பின்னுமவர் அவர்களுக்கு ஆஸனங்கொடுத்து அவர்களுடைய பாதங்களை அலம்பி சந்தனம், தூபம், தீபம், புஷ்பம் இவைகளால் பூஜித்தார். பின்பு ஸுகமாக ஆஸனத்திலுட்கார்ந்து அநுக்கிரஹிப்பதில் நோக்கமுள்ளவர்களான சிறந்த அந்த மஹர்ஷிகளை திரும்பவும் நமஸ்கரித்து மார்க்கண்டேயர் ஸ்துதிக்கலானார். எப்

படியெனில்—ஓ ப்ரபுவே! ப்ரஹ்மா, பரமசிவன் முதலியவர்களு டைய ப்ராணன் உம்முடைய கடாக்ஷத்தால் தூண்டப்பட்டு அசை கிறது, அதனால் வாக்கு, மனம், இந்திரியங்கள் ஆகிய இவை அதன் கார்யத்தைச் செய்கின்றன. அதுபோல என்னுடைய ப்ராணன் முதலியவையும் உமக்கு அதீனங்களாக விருக்கின்றன (நான் ஸ்வா தந்திரியமில்லாதவன் உம்மை எப்படி ஸ்துதிப்பேனென்று கருத்து) ஆனாலும் உம்மையு பாஸிப்பவர்களுக்கு நீர் ஆத்மபந்துவாக விருக் கிறீர் (தகப்பன் முதலியவர்கள் சரீரபந்துக்கள் நீர் அப்படியில்லை யென்று தாத்பர்யம்) நீர் இந்த ஜகத்தைக் காப்பாற்றுவதற்காக மத்ஸயம்முதலிய அவதாரங்களைச் செய்வதுபோல மூவ்வுலகங் களைக்காப்பாற்றுவதற்காகவும், துக்கத்தை போக்கடிப்பதற்காக வும் மோக்ஷத்திற்காகவும் இந்த இரண்டு சரீரங்களை தரிக்கிரீர்; ஓ பகவன்! பட்டுப்பூச்சி பட்டையுண்டுபண்ணி பின்பு தன்னிடத்தில் அடக்கிக்கொள்வதுபோல இந்த ஜகத்தைப்படைத்து ஸம் ஹரிக் கிரீர் (ஸிருஷ்டிப்ரளயத்தில் பிறரை அபேக்ஷிக்கிறதில்லை யென்று தாத்பர்யம்) ஸ்தாவரஜங்கமங்களுக்கு அதிபதியும், அவைகளை ஸம்ரக்ஷிப்பவருமான உம்முடைய பாதத்தையு பாஸிக்கிறேன். உம்முடையபாதஸேவை செய்பவனுக்கு கர்மமாவது, குணங்களா வது, காலமாவது கெடுதியை செய்கிறதில்லை; வேதத்தின் தாத் பர்யத்தைத் தெரிந்துகொண்ட மஹர்ஷிகள் உம்முடைய பாதத்தை ஸ்துதிக்கிறார்கள்; நமஸ்கரிக்கிறார்கள்; அடிக்கடி பூஜிக்கிறார்கள்; த்யானிக்கிறார்கள்; ஓ ஈச! இரண்டுபரார்த்தம் ஆயுஸ்ஸுள்ள ப்ரஹ்மதேவர் காலரூபியான உம்மிடத்திலிருந்து பயப்படுகிறார். அவரால் படைக்கப்பெற்ற ஜனங்கள் பயப்படுகிறார்களென்பது நிச்சயம். இப்படி பலவகையிலும் பயமுள்ளவர்களான ஜனங்கள் க்ஷேமத்தையடைய வேண்டுமானால் மோக்ஷஸ்வரூபியான உம் முடைய பாதத்தை ஸேவிக்கவேண்டும். அதனைக்காட்டிலும் வேறு உபாயமில்லை. ஆத்மஸ்வரூபத்தை மறைக்கக்கூடியதும், பயனற்றதும், அல்பமும், ஸ்திரமில்லாததும், தோற்றமாத்திரமுள்ள துமான இந்த சரீரம் முதலியவைகளில் அபிமானத்தை யொழித்து ஜீவனுக்கு நியந்தாவும், ஸத்யஜ்ஞான ஸ்வரூபியுமான உம்முடைய பாதத்தை ஸேவிக்கிறேன். அது ஸகல இஷ்டங்களையும் கொடுக் கக்கூடியது, ஓ ஈச! ஆத்மபந்துவாகிய நீர் இந்த ஜகத்தை ரக்ஷிப் பது, படைப்பது, ஸம்ஹரிப்பது ஆகிய இவைகளுக்கு ஸத்வம்,

ரஜஸ், தமஸ் என்ற குணங்களை முறையே காரணங்களாக மாயயா லேற்படுத்தியிருக்கிறீர். (விஷ்ணு, ப்ரஹ்மா, ருத்திரரென்று.) அவையெல்லாம் உம்முடைய லீலைகளே. ஆனாலும் ஸத்வமூர்த்தியையுபாஸிப்பதால் சாந்தியுண்டாகிறது, மற்றவையுபாஸிப்பதால் வ்யஸனம், மோஹம், பயம் இவைகளுண்டாகின்றன. ஓ பகவான்! ஆனதால் ஸத்வமூர்த்தியே உம்முடைய பக்தர்களுக்கு ப்ரியமானது. அவர்கள் அதனையே உபாஸிக்கிறார்கள். ஸத்வமே உம்முடைய ரூபமென்று சொல்லுகிறார்கள். அதனால் வைகுண்டமும், அபயமும் ஆத்மஸுகமும் கிடைக்கிறது. இதுபோல் மற்ற மூர்த்திகளையுபாஸிப்பதால் இவைகள் கிடைக்கிறதில்லை. அப்படிப்பட்ட பகவானும், மிக்க மஹிமையுள்ளவரும், ஸகல ஜகத்ஸ்வரூபியும். ஜகத்திற்குகுருவும், பரதேவதையும், புருஷோத்தமரும், நாராயண மஹர்ஷியும், நரோத்தமரும், சுத்தரும், மௌனமாகவிருப்பவரும், வேதமார்க்கத்தை பரவச்செய்பவருமான உம்மை நமஸ்கரிக்கிறேன். அஸத்தாகிய இந்திரியங்களால் ப்ரமித்த புத்தியுள்ளபுருஷன் தன்னுடைய இந்திரியம் முதலியவைகளுக்கு நியந்தாவாக விருக்கும் உம்மைத்தெரிந்து கொள்வதில்லை. நீர் ஒவ்வொருவருடைய ஹிருதயத்திலுமிருக்கிறீர். ஒவ்வொரு பதார்த்தத்திலும் இருக்கிறீர். ஆனாலும் உம்முடையமாயயால் புத்திமயக்கமடைந்து ஜனங்கள் தெரிந்துகொள்ளுகிறதில்லை. ஆனாலும், எல்லாவற்றிற்கும் குருவாகிய உம்மால் வெளியிடப்பட்ட வேதத்தை அத்தியயனம்செய்து அதனுடைய அர்த்தத்தைத்தெரிந்துகொண்டு உம்மைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். ப்ரஹ்மாதிகளான ஜ்ஞானிகள் ஸாங்கியம், யோகம் முதலியவைகளால் உம்மை தெரிந்துகொள்ள முயற்சித்தும் முடியவில்லை. நீர் ஸாங்கியம்முதலிய வாதங்களுக்கு அனுகூலமான ஸ்வபாவங்களால் மறைக்கப்பட்ட ஜ்ஞானமுள்ளவர். உம்மை வேதத்தாலேயே தெரிந்துகொள்ளவேண்டும். ஸத்வகுணத்தை ப்ரகாசிக்கச் செய்பவரும் மஹாபுருஷனுமாகிய உம்மை நமஸ்கரிக்கிறேன்.'' என்று ஸ்தோத்திரஞ் செய்தார்.

---

## அத்யாயம்—9.

### மார்க்கண்டேயர் பகவானுடைய மாயயைப் பார்த்தது.

புத்திசாலியாகிய மார்க்கண்டேயரால் இம்மாதிரி ஸ்துதிக்கப்பெற்ற நரருடன்கூடிய நாராயணன் மிகவும் ஸந்தோஷித்து அவரைநோக்கி "ஓ ப்ரஹ்மர்ஷிகளுக்குட் சிறந்தவரே! நீர் சித்தத்தையொருவகைபடுத்தி, தபம். வேதாத்தியயனம், இந்திரியங்களை அடக்குவது, முதலியவைவையைச்செய்து அனன்யமாக என்னிடம் பக்தி செய்ததால் கிருதார்த்தருனீர். உம்முடைய வ்ரதத்தால் நாம் ஸந்தோஷிக்கிறோம், வரத்தை யளிப்பவர்களுக்குட் சிறந்தவர்களான நம்மிடமிருந்து இஷ்டமான வரத்தைப்பெற்றுக்கொள்ளும்" என்று சொன்னர்.

4—6. அதனைக்கேட்ட மார்க்கண்டேயர் பகவானைநோக்கி "ஓ தேவர்களுக்குட் சிறந்தவரே! அண்டினவர்களுடைய உபத்திரவத்தை நிவர்த்திப்பவரே! நாசமற்றவரே! உம்முடைய மேன்மையை காண்பித்தீர். ப்ரஹ்மாமுதலிய தேவர்கள் உம்முடைய பாதாரவிந்த தர்சனத்தை விரும்பியோகத்தை அநுஷ்டித்து மனத்தைசுத்திசெய்து கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட உம்மை நான் நேரில்தர்சிக்கிறேன் இதைவிடவேறு எனக்கு என்னவேண்டும். தாமரை இதழ்போன்ற கண்களுள்ளவரே! புண்யச்லோகர்களுக்குட் சிறந்தவரே! உம்முடையமாயயால் லோகபாலர்கள்முதலிய ஜனங்கள் மோஹித்து ஆத்மவஸ்து வினிடத்தில் பேதத்தைச் சொல்லுகிறார்களல்லவா? அந்தமாயயை எனக்குக் காண்பிக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

7—34. இப்படி மார்க்கண்டேய மஹார்ஷியினுல் ஸ்துதிக்கப்பெற்றுப் பூஜிக்கப்பெற்றும் நாராயணமஹார்ஷி அப்படியே செய்வோம் என்றுசிறித்து சொல்லிக்கொண்டு பதரிகாவனஞ்சென்றார் மார்ககண்டேயமஹார்ஷி அந்தவிஷயத்தைமே நினைத்துத்தம்முடைய ஆச்ரமத்திலேயேவஸித்து, அக்னி, ஸூர்யன், சந்திரன், ஜலம், பூமி, வாயு, ஆகாயம், தாம், ஆகிய இவைகளில் பகவானைத் யானித்து ஸங்கல்ப த்ரவ்யங்களால் பூஜித்துவந்தார். சிலஸமயம்

மிக்கபக்தியால் பாவசமுகி பூஜையைமறந்திருப்பதுமுண்டு ஓ சௌனக ! இப்படி மார்க்கண்டேயர் செய்துவரும்பொழுது ஒரு நாள் புஷ்பத்திரு என்னும் நதிக்கரையில் ஸந்தியோபாஸ்திசெய்து கொண்டிருந்தார். அப்பொழுது பயங்கரமானசப்தத்துடன் பெருங்காற்றுண்டாயிற்று. அதன்பின் பயங்கரங்களான மேகங்கள் உரக்ககர்ஜித்துக்கொண்டு மழைபெய்தன ; மின்னல்கள் ப்ரகாசித்தன ; ரதத்தின் அச்சுபோல பருத்தமழைத்துளிகள் விழுந்தன; அதனால் நான்கு ஸமுத்திரங்களும் மிக்க அலைகளுடன் சப்தித்துக்கொண்டு பொங்கிஜகத்தை முழுகச்செய்தன. அதிலுள்ள முதலை முதலிய ஜந்துக்களாலும் சுழல்களாலும் பயங்கரங்களாகவிருந்தன. மின்னல்களாலும் கடுமையான வெயிலாலும் ஜலத்தாலும், நான்கு வகையான பிராணிகளடங்கிய ஜகத்தும்தாமும் தபிப்பிதைக் கண்ணுற்றமார்க்கண்டேயர் வருத்தமடைந்து நடுங்கினர். காற்று அதிகமாக விருந்ததால் அலைகள்விசேஷமாயின ; மழையும்பெய்து கொண்டேயிருந்தது. அதனால் ஸமுத்திரம் த்வீபம், வர்ஷமென்ற பிறிவுள்ள பூமிமுழுவதையும் கவர்ந்துகொண்டது. அப்பொழுது பூமி, அந்தரிக்ஷம், நக்ஷத்திரங்கள், ஆகிய இவைகளடங்கிய மூவுலகமும் ஜலத்தில் முழுகியது. அப்படிப்பட்ட ப்ரளயஜலத்தில் அந்த மார்க்கண்டேயமஹர்ஷி ஒருவராக ஜடைகளை விரித்துக்கொண்டு மூடன்போலும் குருடன்போலும் சுற்றிக்கொண்டிருந்தார். மேலுமவர் பசி, தாஹம்இவைகளுள்ளவராக விருந்தார். மகரம் முதலிய ஜலஜந்துக்கள் அவரை உபத்திரவித்தன. அலைகளாலும், காற்றினாலும் அவர் அடிக்கப்பட்டார். மேலும் அதிக இருளாகவிருந்தமையால் ஆகாயம், பூமி திக்குகள் இவைகள் தெரியாமல் அலைந்துகொண்டிருந்தார். இந்த மஹர்ஷியை பக்ஷிப்பதற்காக ஜலஜந்துக்கள் ஒன்றோடொன்று சண்டையிட்டன சிலஸமயம் ஜந்துக்களால் உபத்திரவிக்கப்பெற்றும், சிலஸமயம், சுழலில் அகப்பட்டு அலைகளால் அடிக்கப்பெற்றும், சோகம், மோஹம், துக்கம், ஸுகம் இவைகளை அடைந்து விஷ்ணுவின் மாயயால் மோஹித்து வெகுவர்ஷகாலம் அலைந்தார். பின்பு ஒருகால் அந்த மஹர்ஷி மேடான ஒரு இடத்தில் ஒரு ஆலங்கன்றிருக்கக்கண்டார். அது பழங்களாலும், புஷ்பங்களாலும், தளிர்களாலும் அழகாகவிருந்தது. ஈசானதிக்கில்நீண்டிருக்கும் அதன் கிளையில் ஒரு இலையில் ஒரு குழந்தை படுத்திருக்

கக்கண்டார். இருளைப் போக்கக்கூடிய காந்தியுள்ளதாக அந்தக் குழந்தை ப்ரகாசித்தது. மேலுமந்த சிசு உயர்ந்த மரதகம்போல பச்சை நிறமுள்ளது; அழகிய தாமரை மலர்போன்ற முகமுள்ளது; சங்கம்போன்ற கழுத்துள்ளது; விசாலமான மார்புள்ளது; அழகான முகமுள்ளது; மனோஹரமான புருவங்களுள்ளது; மூச்சுக்காற்றினால் அசையும் தலைமயிர்களுள்ளது; சங்கத்தின் மத்தியம்போன்ற காதுகளில் மாதுளைப் புஷ்பத்தைத் தரித்தது; பவழம்போல சிவந்த உதடுகளின் காந்தியால் கொஞ்சம் சிவப்பான அமிருதச் சிரிப்புள்ளது; தாமரைமலரின் மத்தியம்போல சிவந்த கண்களுள்ளது; அழகான சிறிப்பு பொருந்திய பார்வையுள்ளது; அதன் மூச்சுக்காற்றினால் வயற்றிலுள்ள மூன்று மடிப்புகள் அசைந்தன; தொப்பில் பள்ளமாக விருந்தது; அப்படிப்பட்ட அந்த சிசு அழகான விரல்களுள்ள கைகளால் காலையெடுத்து வாயில் வைத்து நக்கிக்கொண்டிருந்தது—அதனைத் தர்சித்து மார்க்கண்டேயர் மிகவும் ஆச்சர்யத்தை அடைந்தார்- அந்தக் குழந்தையைக் கண்டவுடன் மார்க்கண்டேயருடைய ஹிருதயமும், கண்களும் மலர்ந்தன; சரீரத்தில் மயிர் கூச்சிலுண்டாயிற்று; பின்பு மிக்க ஆச்சர்யத்துடன் அந்தக் குழந்தையை நீர் யார் என்று கேட்பதற்காக அதன் ஸமீபஞ்சென்றார். அந்த ஸமயத்தில் குழந்தையின் மூச்சுக்காற்றினால் கொசுபோல மார்க்கண்டேயர் அதன் வயற்றுக்குள் ப்ரவேசித்தார். அந்தக் குழந்தையின் வயற்றில் ஜகத்து முழுவது மிருப்பதைக்கண்டு ஆச்சர்யத்தை யடைந்து மயங்கினார். ஆகாயம், பூமி, அந்தரிக்ஷம், நக்ஷத்திரங்கள், மலைகள், ஸமுத்திரங்கள், த்வீபங்கள், தேசங்கள், திக்குகள், தேவர்கள், அஸுரர்கள், காடுகள், நதிகள், பட்டினங்கள், கோகுலங்கள், பயிரிடுவோர்களிருக்குமிடம், ஆச்ரம தர்மங்கள், வர்ணதர்மங்கள், மஹாபூதங்கள், அவைகளாலேற்பட்ட சரீரங்கள்; காலம், பலவகையான யுகங்கள், கல்பங்கள் மற்றும் வ்யவஹாரத்திற்குபயோகமான வஸ்துக்கள் ஆகிய இவைகளுடன் உண்மைபோல் ப்ரகாசிக்கும் ப்ரபஞ்சத்தைப் பார்த்தார். மேலும் அவ்விடத்தில் ஹிமயமலையையும், தம்முடைய ஆச்ரமத்தையும், புஷ்பபத்திராநதியையும் கண்டார். உடனே அந்தக்குழந்தையின் மூச்சுக்காற்றினால் வெளியில்தள்ளப்பட்டு ப்ரளயஜலத்தில் விழுந்தார். அவ்விடத்தில் மேடானபூமியின் பாகத்தில் ஆலமரத்தையும், அதன் இலையில் படுத்திருக்கும் அந்தக் குழந்

தையையும், அந்தக் குழந்தை தம்மை அன்புபொருந்திய அமிருத கடாக்ஷத்தால் அநுக்கிரஹிப்பதையும் பார்த்தார். மேலும் அந்தக் குழந்தை தம்முடைய ஹிருதயத்திலு மிருக்கக்கண்டார். அதனல் மார்க்கண்டேயர் மிகவும் ஸந்தோஷித்து அதனை ஆலிங்கனஞ் செய்துகொள்ள ஸமீபத்தில் சென்றார். எல்லா பிராணிகளுடைய ஹிருதய குஹையில் வஸிப்பவரும் யோகேசருமாகிய பகவான் அதனைக் கண்ணுற்று அந்தர்ந்தானத்தை அடைந்தார். (மறைந்தார்) அது தைவபலமில்லாத காலத்தில் புருஷனுடைய முயற்சி பயன்படாததுபோலிருந்தது. அவர் மறைந்தவுடன் அந்த ஆலமரமும், ப்ரளயகால ஜலமும் மறைந்தன. மார்க்கண்டேய மஹர்ஷி தம்முடைய ஆச்ரமத்தில் முன்போல் வீற்றிருந்தார்.

---

## அத்யாயம்—10.

### சிவன் மார்க்கண்டேயருக்கு வரங்கொடுத்தது.

இப்படி மார்க்கண்டேய மஹர்ஷி நாராயணரால் காட்டப்பட்ட யோகமாயயின் மஹிமையைப் பார்த்து "ஓ ஹரியே! நாராயண! உம்முடைய மாயயால் வித்வான்கள் கூட மோஹிக்கிறார்கள் அவர்களுடைய ஜ்ஞானம், ஜ்ஞானம்போல் தோன்றுகிறதேயொழிய ஞானமல்ல நீர் அண்டினவர்களுடைய பயத்தை நிவர்த்திப்பவர். அப்படிப்பட்ட உம்முடைய பாதத்தைச் சரணமடைகிறேன்" என்று சொல்லி நாராயணரையே சரணமடைந்தார்.

3—18. இப்படி அந்த மஹர்ஷி தேஹம், இந்திரியம், மனம் ஆகிய இவைகள் சலிக்காமல் நாராயணனையே த்யானஞ்செய்து கொண்டிருந்தார். அப்பொழுது பரமசிவன் பார்வதியுடன் விருஷபத்தின்மீதேறி தம்முடைய கணங்களுடன் ஆகாயமார்க்கமாக அவ்விடம்வந்து அந்த மஹர்ஷியைக் கண்டார். அப்பொழுது பார்வதி பரமசிவனை நோக்கி "ஓ பகவன்! இந்த ப்ராஹ்மணன் சரீரம், இந்திரியம், மனம் இவைகள் அசையாதவனாகி காற்றில்லாததால் அலையற்று அசையாமலிருக்கும் ஸமுத்திரம்போல சாந்தராக விருக்கிறார். இவரைப்பாரும். நீர் ஸித்தியைக் கொடுப்பவரானதால் இவரை அநுக்ரஹியும்" என்றாள். அதனைக்கேட்ட

பரமசிவன் பார்வதியை நோக்கி "இந்த ப்ரஹ்மர்ஷி நாசமற்ற மஹா புருஷனிடத்தில் மிகவும் பக்தி செய்துகொண்டிருக்கிறார். ஆனதால் மோக்ஷத்தையாவது, அதற்குத் தாழ்ந்த பயன்களையாவது இவர் ஆசைப்படவில்லை. ஆனாலும் ஸாதுவாகிய இந்த மஹர்ஷியுடன் பேசுவோம். மனிதர்களுக்கு ஸாதுஸங்கம் கிடைத்தால் இது முக்கிய லாபம்" என்று சொல்லிக்கொண்டு ஸாதுக்களுக்குக் கதியாகிய பரமசிவன் மார்க்கண்டேயரிடம் வந்தார். அவர் ஸகல வித்யைகளுக்கும் அதிபதி; ஸகல ப்ராணிகளுக்கும் ஈச்வரன்; அப்பொழுது மார்க்கண்டேயர் அந்தக்கரண விருத்திகளை அடக்கிக்கொண்டிருந்தமையால் ஜகத் ஸ்வரூபிகளான பார்வதி, பரமசிவன் ஆகிய இவர்கள் வந்தது மஹர்ஷிக்குத் தெரியவில்லை; அவர் தம்மையும் ஜகத்தையும் மறந்திருந்தார். கைலாஸாதிபதியாகிய பரமசிவன் அதனைத் தெரிந்துகொண்டு யோகமாயையால் மஹர்ஷியின் ஹ்ருதயத்தில் ப்ரவேசித்தார். அது வாயு இடுக்கில் ப்ரவேசித்ததுபோலிருந்தது. அப்பொழுது மார்க்கண்டேயர் தம்முடைய ஹ்ருதயத்தில் பரமசிவனைக் கண்டார்; அந்தப் பரமசிவன் மின்னல்போல பொன்னிறமான ஜடைகளை தரித்தவர்; மூன்று கண்களுள்ளவர்; எட்டுக் கைகளுள்ளவர்; உயரமான சரீரமுள்ளவர்; உதித்த ஸூர்யன்போல ப்ரகாசிப்பவர்; புலித்தோலையுடுத்திக்கொண்டும், சூலம், தனுஸ், பாணம், கத்தி கேடகம், ஜபமாலை, டமரு, கபாலம், பரசு இவைகளை தரித்தவர்; இப்படிப்பட்ட பகவானைத் தர்சித்து 'இதென்ன எங்கிருந்து வந்தது' என்று ஆச்சர்யமடைந்து கண்களைத்திறந்து பார்த்தார். பரமசிவனையும் பார்வதியையும் ப்ரமத கணங்களையும் கண்டார். மூன்று லோகங்களுக்கும் முக்ய குருவான பரமசிவனுக்கு நமஸ்காரஞ்செய்து நல்வரவா' என்றுகேட்டு ஆஸனம், பாத்யம், அர்க்கியம், புஷ்பமாலை சந்தனம், தூபம், தீபம் முதலியவைகளைக்கொடுத்து பகவானையும் பார்வதியையும், ப்ரமதகணங்களையும் பூஜித்தார். மேலுமவர் "ஓ ஈசான! விபுவே! தம்முடைய மஹிமையால் பூர்ணகாமராகிய உமக்கு நான் எதனைச் செய்யவேண்டும்? உம்மால் இந்த ஜகத் ஸுகத்தை அடைந்திருக்கிறது. சாந்தரும், ஸத்வகுணத்திற்கு அதிஷ்டாதாவும், விசேஷ ஸுகத்தைக் கொடுப்பவரும், ரஜோகுணத்தை அடைபவரும், தமோகுணத்தை அடைந்து கோரரூபியுமான சிவனாகிய உமக்கு நமஸ்காரம்" என்றார்.

19—25 அதனைக்கேட்ட பகவான் மஹர்ஷியை நோக்கி "ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்று மூன்று தேவர்களாகிய நாங்கள் வரத்தை யளிப்பவர்களுக்கு அதிபதிகள் எங்களைத் தர்சித்தால் வீண்போகாது. எங்களிடமாக ஜனங்கள் க்ஷேமத்தை அடைகிறார்கள். ஆனதால் இஷ்டமான வரத்தைக் கேளும். எந்த ப்ராஹ்மணர்கள் ஸாதுக்களாகவும், சாந்தர்களாகவும், ஒன்றிலும் ஆசையில்லாதவர்களாகவும், பிராணிகளிடத்தில் ப்ரீதியுள்ளவர்களாகவும், நம்மிடத்தில் விசேஷ பக்தர்களாகவும், விரோதபுத்தியற்றவர்களாகவும், எல்லாவற்றையும் ஸமமாகப் பார்ப்பவர்களாகவுமிருக்கிறார்களோ, அவர்களை ஸகல லோகங்களும், லோகபாலர்களும் ஸ்தோத்திரஞ்செய்கிறார்கள்; பூஜிக்கிறார்கள்; உபாஸிக்கிறார்கள்; நான் பகவானாகிய ப்ரஹ்மதேவர், ஸ்ரீ மஹாவிஷ்ணு ஆகிய மூன்று தேவர்களும் ஈச்வரர்கள் (ஒன்றுயென்று கருத்து) மேற்காட்டிய சாந்தர்களான ஸாதுக்கள் என்னிடத்திலும், ப்ரஹ்மாவிடத்திலும் நாராயணனிடத்திலும் கொஞ்சமாவது பேதபுத்தியைச் செய்யமாட்டார்கள். மேலும் தம்மையும் பிறரையும் ஒன்றாகவே நினைப்பார்கள். அதனால் உம்மை நாம் அடைகிறோம். ஜலரூபமாயிருப்பவை மாத்திரம் தீர்த்தங்களல்ல; மண்ணினாலும், கல்லாலும் செய்யப்பட்டவை மாத்திரம் தேவர்களல்ல; தீர்த்தம் முதலியவை வெகு காலத்திற்குப்பின் பரிசுத்தப்படுத்துகின்றன; ஸாதுக்கள் தம்மைத் தர்சித்தமாத்திரத்தில் சுத்தப்படுத்துகிறார்கள் ப்ராஹ்மணர்கள் சித்தத்தை யொருவகைப் படுத்துவதாலும், தபஸ், வேதாத்யயனம், இந்திரியங்களை அடக்குவது ஆகிய இவைகளால் நம்முடைய ஸ்வரூபமான வேதத்தை ஸம்ரக்ஷிக்கிறார்கள். அதனால் அவர்களை நமஸ்கரிக்கிறோம். அப்படிப்பட்ட ஸாதுக்களுடைய சரிதத்தைக் கேட்பதாலும், அவர்களை தர்சிப்பதாலும், மஹா பாபிகளும், தாழ்ந்தகுலத்தில் ஜனித்தவர்களும் சுத்தர்களாவார்கள். நேரில் பேசுவது முதலியவைவயை அடைந்தவர்கள் சுத்தியடைவதில் என்ன ஸந்தேஹம்? (ஸந்தேஹமில்லையென்று கருத்து) என்றுசொன்னார்.

26—34. இம்மாதிரியான பரமசிவனுடைய வார்த்தை காதுகளுக்கு ரஸாயனம்போலிருந்தது அதனைக்கேட்டு மார்க்கண்டேயர் போதுமென்ற திருப்தியை அடையவில்லை. மேலுமவர் மஹா

விஷ்ணுவின் மாயயைதர்சித்து ப்ரமித்து கஷ்டப்பட்டிருந்தமையால் பரமசிவனுடைய வாக்காகிய அமிருதத்தால் ஸுகத்தை அடைந்து பரமசிவனை நோக்கி "ஈச்வரர்களுடைய நடை பிராணிகளால் அறிய முடியாதவை, ஏனென்றால்—தமக்குத் தாழ்ந்த ஜனங்களை ஜகதீசர்கள் ஸ்துதிக்கிறார்கள். மேலும் அவர்கள் தர்மத்தைச்சொல்லுகிறார்கள்; தாம் அநுஷ்டிக்கிறார்கள்; அநுமோதிக்கிறார்கள்; பிறர் செய்வதை ஸ்துதிக்கிறார்கள்; இப்படிச்செய்வது பிறரை அநுஷ்டிக்கும்படிச் செய்வதற்காகவே. ஆனதால் தாழ்ந்தவர்களை நமஸ்கரிப்பது, ஸ்துதிப்பது ஆகிய இவைகளால் உம்முடைய மஹிமைக்குக்குறையில்லை. ஸாதுக்களை எல்லாரும் பூஜிக்கவேண்டுமென்பதைக் காண்பிப்பதற்காகவே இப்படிச் செய்கிறார்கள். மேலும் பகவான் குணங்களைக்கொண்டு இந்த ப்ரபஞ்சத்தை ஸிருஷ்டித்து, தாம் அதில் அநுப்ரவேசித்து கர்த்தாபோல் தோன்றுகிறார். ஸ்வப்னத்தைப்பார்த்தவன் எப்படி உண்மையென்று நினைக்கிறானோ, அதுபோல் பகவான் கர்த்தாபோல்தோன்றுகிறார். முக்குணங்களுள்ளவரும், அவைகளை வசப்படுத்திக்கொண்டவரும் அத்விதீயரும், ஆசார்யரும் ப்ரஹ்மமுமாகிய பகவானுக்கு நமஸ்காரம். மேலானவராகிய உம்மை நேரில்தர்சித்தேன். உம்மைத் தர்சித்ததால் மனிதன் பூர்ணகாமனாகவும், ஸத்தியகாமனாகவுமாகிறான். அப்படியிருக்க வேறு எந்தவரத்தைக்கேட்பேன். ஆனாலும் பூர்ணகாமராகிய உம்மிடமாக ஒரு வரத்தை அபேக்ஷிக்கிறேன். உம்மிடத்தில் எனக்கு பக்தியிருப்பதுபோல் ஸ்ரீமந் நாராயணனிடத்திலும், அவருடைய பக்தர்களிடத்திலும் எனக்கு பக்தியிருக்கும்படி அநுக்கிரஹிக்கவேண்டும்" என்றுகேட்டுக்கொண்டார்.

35—38. இப்படி நல்ல வார்த்தையாக மஹர்ஷியால் ப்ரார்த்திக்கப்பெற்ற பரமசிவன் பார்வதியால் அநுமோதிக்கப்பெற்று மஹர்ஷியை நோக்கி "ஓ மஹர்ஷே! நீர் ஸ்ரீமந் நாராயணரிடத்தில் பக்தியுள்ளவர்; ஆனதால் உம்முடைய கீர்த்தியானது புண்யகரமாக கல்பம் வரையிலிருக்கும். உமக்கு கிழத்தனமில்லை; மரணமில்லை; முக்காலத்திய ஞானமும், ஆத்மஜ்ஞானமும், வைராக்யமும், உண்டாகட்டும் மேலும் புராணாசார்யராக விருக்கக்கடவீர்;" என்று அநுக்கிரஹித்து முக்கண்ணராகிய பகவான் பார்வதிக்கு மஹர்ஷி ப்ரளயத்தைப்பார்த்தது முதலியவைவையைச் சொல்லிக்கொண்டு தமதுலகஞ் சென்றார்.

39—42. அந்த மார்க்கண்டேயர் மஹா யோகமஹிமையை அடைந்து பகவானிடத்தில் முக்யபக்தராகி இப்பொழுதும் ஸஞ்சரிக்கிறார். பகவானுடைய ஆச்சர்யமான மாயாமஹிமையை மார்க்கண்டேயர் பார்த்ததை உமக்குச் சொன்னேன். மேற்காட்டிய பகவானுடைய மாயாமஹிமை அனாதியாக ஜீவனுக்கு ஸம்ஸாரத்தை யுண்டு பண்ணுகிறது (எல்லாருக்கும் பொதுவானது) அதன்மஹிமையை அறியாமல் ஈச்வரனுடைய ஸங்கல்பத்தால் மார்க்கண்டேயருக்காக மாத்திரம் ப்ரளயம் காண்பிக்கப்பட்டதென்று சொல்லுகிறார்கள். ஸ்ரீமந்நாராயணனுடைய மஹிமை பொருந்திய இந்த மார்க்கண்டேய சரிதத்தைக்கேட்பவர்களுக்கும், சொல்பவர்களுக்கும் கர்மத்தாலுண்டாகும் ஸம்ஸார துக்கம் நேரிடுகிறதில்லை, என்று ஸூதர் சொன்னார்.

---

## அத்யாயம்—11.

### ஸூர்யனுடைய பேதங்கள்.

சௌனகர் ஸூதரைநோக்கி "ஓ பாகவத! நீர் ஸகல சாஸ்திரங்களுடைய உண்மையை அறிந்தவர்; ப்ரஹ்மவித்துக்களுக்குச் சிறந்தவர்; ஆனதால் உம்மைக்கேட்கிறோம். தாந்திரிகர்கள். பகவானை யுபாஸிப்பதில் சைதன்யகனராகிய பகவானுக்கு கைகால்முதலிய அவயங்களையும் கருடன் முதலியவர்களையும், சக்கிரம்முதலிய ஆயுதங்களையும், கௌஸ்துபம்முதலிய ஆபரணங்களையும், எப்படி கல்பிக்கிறார்கள்? அவைகளை எந்ததத்வங்களைக்கொண்டு கல்பிக்கிறார்கள்? அந்தக்கிரியாயோகத்தைக் தெரிந்துகொள்ளவிரும்பும் எங்களுக்கு இதனைச்சொல்லும். அந்தக்ரியாயோகத்தால் மனிதன் மரணதர்மமற்றவனாகிறான்." என்றுகேட்டார்.

4—29. அதனைக்கேட்ட ஸூதர் சௌனகரைநோக்கி "ப்ரஹ்மாமுதலியவர்களால் எவை சொல்லப்பட்டிருக்கின்றனவோ, அந்தவைதிக, தாந்திரிகவைஷ்ணவ் விபூதிகளைச் சொல்லுகிறேன். ப்ரகிருதி, ஸூத்திரம், மஹத், அஹங்காரம், ஐந்துதன்மாத்திரைகள் ஆகிய ஒன்பதுதத்வங்களாலும், விகாரமயனாகிய விராட் உண்டு

பண்ணப்பட்டிருக்கிறார் (பதினொன்று இந்திரியங்கள் ஐந்துபூதங்கள் ஆகிய 16-விகாரங்கள்) சைதன்யமுள்ள அந்த விராட்டினிடத்தில் மூவ்வுலகங்களும் காணப்படுகின்றன. இதுவே புருஷனுடைய ஸ்வரூபம். அந்த ஸ்வரூபத்திற்கு பூமியேபாதங்கள் ; த்யுலோகம் தலை ; வாயுவேமூக்குகள் ; காதுகளேதிக்குகள் ; ப்ரஜாபதியே ஆண்குறி ; மிருத்யுவே அபானம்; லோகபாலர்களேகைகள் ; சந்திரனேமனம் ; யமனேபுருவங்கள் ; லஜ்ஜையேமேலுதடு ; லோபமே கீழுதடு ; சந்திரிகையே தந்தங்கள் ; ப்ரமமேகர்வம் ; மலைகளே ரோமங்கள் ; மேகங்களே தலைமயிர்கள் ; இந்த வ்யஷ்டிபுருஷன் எப்படிப்பட்டவனோ, எவ்வளவு அளவுள்ளவனோ, ஸமஷ்டிபுருஷனும் அப்படிப்பட்டவன் ; அவ்வளவு அளவுள்ளவன். (தம்முடை அளவினால் 84-அங்குலமுள்ளவர்) அந்தப்புருஷன் கௌஸ்துபமென்ற வ்யாஜத்தால் தம்முடைய தேஜஸ்ஸை தரிக்கிறார். (சுத்த ஜீவ சைதன்யமே கௌஸ்துபமாகவிருக்கிறதென்று கருத்து) அதனுடைய காந்தியே பகவானுடைய மார்பில் ஸ்ரீ வத்ஸமெனப்படுகிறது ; அநேக குணங்களுள்ள பகவானுடைய மாயயே வனமாலையாகவிருக்கிறது ; சந்தஸ்ஸே பீதாம்பரமாகவிருக்கிறது ; மூன்றுமாத்திரையுள்ள ப்ரணவமேயஜ்ஞோபவீதமாக விருக்கிறது ; ஸாங்கியம். யோகம் ஆகிய இரண்டும் பகவானுக்கு மகர குண்டலங்களாக விருக்கின்றன ; எல்லாராலும் நமஸ்கரிக்கப்பெற்ற ப்ரஹ்மலோகமே கிரீடமாக விருக்கிறது ; ப்ரதானமே ஆதிசேஷனாகி பகவானுக்கு ஆஸனமாக விருக்கிறது ; தர்மம், ஜ்ஞானம் முதலியவைகளுடன் கூடிய ஸத்வ குணமே பகவானால் தரிக்கப்படும் தாமரை மலராகவிருக்கிறது ; மனோபலம். இந்திரியபலம் சரீரபலம், இவைகளுடன்கூடிய முக்கிய தத்துவமாகிய ப்ராணனே கதாயுதமாக விருக்கிறது. ; (ப்ராணனே முக்கியன்—ச்ருதி) ஜலத்தின் தத்வமேசங்கமாகவிருக்கிறது ; தேஜஸ்ஸே ஸுதர்சனமென்ற சக்கிராயுதமாகவிருக்கிறது ; ஆகாயத்தின் தத்வமே ஆகாயம்போல் நீலமான கத்தியாகவிருக்கிறது ; தமஸ்ஸே கேடகமாகவிருக்கிறது; காலமே சார்ங்கமென்ற வில்லாகவிருக்கிறது ; கர்மமே பாணக்கூடாகவிருக்கிறது ; இந்திரியங்களே பாணங்களாகவிருக்கின்றன ; கிரியாசக்தியுள்ள மனம், அல்லது தேஹாபிமானம். பகவானுக்கு ரதம் ; அதன் அபிவ்யக்தியே (பூஜாதிகளில் ப்ரவிருத்தி) தன்மாத்திரைகள் ; (இந்திரிய விஷயங்

கள்) பகவான் தரித்திருக்கும் அபயமுத்திரை, வரதமுத்திரை ஆகிய இவைகளால் வரங்கொடுப்பதுமுதலிய பகவானுடைய குணங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவருடைய ஆஸனத்திலிருக்கும் பத்மாகாரமான மண்டலத்தை யாகபூமியென்றே நினைக்கவேண்டும்; (மூலத்திலிருக்கும் மண்டல என்னும் பதத்திற்கு ஸூர்ய மண்டலம் அல்லது அக்னிமண்டலமென்றும் அர்த்தஞ் சொல்லலாம்) ஆசார்யரிடம் பெற்றுக்கொண்ட மந்திரதீக்ஷையே ஸம்ஸ்காரமாகும் பகவானுடைய சுச்ரூஷையை ஸகல பாபங்களையும் நிவர்த்தித்துக்கொள்வதற்காக மேற்காட்டிய வண்ணம் நினைக்கவேண்டும். பகமென்ற சப்தத்திற்கு அர்த்தமாகிய ஐச்வர்யத்தை விளையாட்டிற்காக தாமரை மலராக பகவான்வைத்துக் கொண்டிருக்கிறார்? தர்மத்தையும் கீர்த்தியையும் சாமரங்களாக வைத்துக் கொண்டிருக்கிறார்; நிர்ப்பயஸ்தானமாகிய வைகுண்டமே பகவானுக்குக் குடையாகவிருக்கிறது; ரிக், யஜுஸ், ஸாமம் என்ற வேதமே கருடனாக விருக்கிறது; யஜ்ஞமே புருஷரூபமாகவிருக்கிறது; சித் ஸ்வரூபமான பகவானுடைய அழிவற்ற சக்தியே ஸ்ரீ தேவியாகவிருக்கிறது; பாஞ்சராத்ரம் முதலிய ஆகமங்களே பார்ஷதர்களுக்கு அதிபதியாகிய விஷ்வக்ஸேனர்; அணிமாமுதலிய எட்டு குணங்களே நந்தன் முதலிய த்வாரபாலகர்கள்; ஸ்ரீமந் நாராயணனே வாஸுதேவர், ஸங்கர்ஷணர், ப்ரத்யும்னர், அனிருத்தர் என்ற நான்கு மூர்த்திகளாக உபாஸிக்கப்படுகிறார்; விஷயங்கள், இந்திரியம், ஜ்ஞானம் ஆகிய இவைகளால் அந்தப் பகவானே விச்வன், தைஜஸன், ப்ராஜ்ஞன், துரீயனென்று சொல்லப்படுகிறார். இப்படி கைகால் முதலிய அவயவங்கள், கருடன் முதலிய உபாங்கங்கள், ஆயுதங்கள், ஆபரணங்கள் இவைகளுடன் அந்தப் பகவானாகிய ஈச்வரனே விச்வன் முதலிய பெயரை அடைகிறார். ஓ ப்ராஹ்மணர்களுக்குட் சிறந்தவரான சௌனக! வேதங்களுக்குக் காரணரும், எல்லாவற்றிற்கும்ஸாக்ஷியும், தம்முடைய மஹிமையால் பூர்ணருமான பகவான் தம்முடைய மாயயால் ஜகத்தைப் படைக்கிறார்; ரக்ஷிக்கிறார்; ஸம்ஹரிக்கிறார்; அதனால் ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற மூன்று பெயரை அடைகிறார்; அவருடைய ஜ்ஞானத்திற்கு ஒருபொழுதும் குறையில்லை. ஆனாலும் பேதமுள்ளவர் போல தோன்றுகிறார். உண்மையில் பேதமில்லை. அவரிடத்தில் பக்திசெய்தவர்கள் அவரை ஆத்மாவாகவே தெரிந்துகொண்

டிருக்கிறூர்கள் ஓ அர்ஜுனருடைய தோழனே! விருஷ்ணிகளுக்குட் சிறந்தவரே! கெட்ட அரசர்களுடைய வம்சத்திற்கு அக்னியே! குறையற்ற பராக்கிரமமுள்ளவரே! கோபிகைகளாலும், நாரதர் முதலியவர்களாலும் கானஞ்செய்யப்பெற்ற சுத்தமான கீர்த்தியுள்ளவரே! தம்முடைய சரிதத்தைக் கேட்பவர்களுக்கு மங்களத்தைக் கொடுப்பவரே! கோவிந்த! ஸ்ரீ கிருஷ்ண! உம்முடைய வேலைக்காரர்களான எங்களைக் காப்பாற்றும். எவன் காலையிலெழுந்திருந்து மஹா புருஷனுடைய லக்ஷணமாகிய இதனை அவரிடத்தில் மனத்தைச்செலுத்தி ஜபிக்கிறூனே, அவன் ஹிருதய குஹையிலிருக்கும் பரமாத்மாவைத் தெரிந்துகொள்வான்.

28—29. அதனைக்கேட்ட சௌனகர் ஸூதரை நோக்கி "பரீக்ஷித்திற்கு சுகமஹர்ஷி ஸூர்யன் ஒவ்வொரு மாஸத்திலும் ஏழு கணங்களுடன் ஸஞ்சரிக்கிறூர்" என்று சொன்னூரென்று சொன்னீரல்லவா; (ஐந்தாவது ஸ்கந்தத்தில்) ஈச்வரனால் நியமிக்கப்பெற்ற அவர்களுடைய பெயர்களையும், கர்மங்களையும் சொல்லும், ஸூர்ய ஸ்வரூபியான ஹரியின் வ்யூஹத்தைக்கேட்க விரும்புகிறோம்" என்று கேட்டார்.

30—51. அதனைக்கேட்ட ஸூதர் சௌனகரை நோக்கி "ஸகல பிராணிகளுக்கும் ஆத்மாவாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அனுதியான மாயயால் இந்த ஸூர்யன் லோகயாத்திரைக்காக படைக்கப்பெற்று லோகங்களில் ஸஞ்சரிக்கிறூர். இந்த ஸூர்யன் ஒருவரே லோகங்களுக்கு ஆத்மா; படைப்பவர்? இவரே மஹாவிஷ்ணு இவர் ஒருவரே ஸகல வேதங்களால் நிரூபிக்கப்படும் கிரியைகளுக்கு மூலம். ஆனூலும் உபாதி ஸம்பந்தத்தால் பலவகையாகமஹர்ஷிகளால் சொல்லப்பட்டிருக்கிறூர். மேலும், காலம், தேசம், கிரியை, கர்த்தா, கரணம்=ஸாதனம், கார்யம், ஆகமம், த்ரவ்யம், பலம் என்று பகவான் தம்முடைய மாயயால் ஒன்பது பெயரை அடைந்திருக்கிறூர். (காலம்=காலை முதலியவை. தேசம்=மேடு பள்ளமில்லாமல் ஸமமாக இருப்பது. கிரியை=அநுஷ்டிப்பது. கர்த்தா=ப்ராஹ்மணன் முதலிய செய்பவன். கரணம்=ஸ்ருக் முதலியவை. கார்யம்=யாகம் முதலியவை. ஆகமம்=மந்திரங்கள். த்ரவ்யம்=புரோடாசம் முதலியவை. பலம்=ஸ்வர்க்க முதலியவை) சித்திரை முதலிய பன்னிரண்டு மாதங்களிலும் பகவான் காலஸ்வ

ரூபியர்க பன்னிரண்டு பெயர்களுடனும் கணங்களுடனும் லோகயாத்திரையைச் செய்துகொண்டு ஸஞ்சரிக்கிறார். தாதாவென்ற ஸூர்யனும், கிருதஸ்தலீயென்ற அப்ஸரஸ்ஸூம், ஹேதியென்ற ராக்ஷஸனும், வாஸூகியென்ற நாகமும், ரதகிருத்யென்ற யக்ஷனும், புலஸ்தியரென்ற மஹர்ஷியும், தும்புருயென்ற கந்தர்வனும் சித்திரை மாதத்தை நடத்துகிறார்கள். அர்யமா, புஞ்ஜிகஸ்தலீ, ப்ரஹேதி, கஞ்ஜநீரன், அதௌஜஸ், புலஹர், நாரதர் என்ற மேற்காட்டிய முறைப்படி ஏழு தேவர்கள் வைசாகத்தை நடத்துகிறார்கள். ஜ்யேஷ்டமென்ற ஆனிமாசத்தை மித்திரன், மேனகை, பௌருஷேயன், தக்ஷகன், ரதஸ்வனன், அத்ரி, ஹஹா இவர்கள் நடத்துகிறார்கள். வருணன், ரம்பை, சித்திரஸ்வனன், சுக்கிறனென்ற நாகம், ஸஹஜன்யன், வஸிஷ்டர், ஹூஹூ என்பவர்கள் ஆஷாடமாகிய ஆடிமாஸத்தை நடத்துகிறார்கள். இந்திரன், ப்ரம்லோசா, சர்யன், ஏலாபுத்திரன், ச்ரோதா, அங்கிரஸ், விச்வா வஸூ ஆகியஇவர்கள் ச்ராவணமாஸமாகிய ஆவணி மாஸத்தை நடத்துகிறார்கள். விவஸ்வான், அநும்லோசா, வ்யாக்கிரன், சங்கபாலன், ஆஸார்ணன், ப்ரகு, உக்கிரஸேனர் ஆகிய இவர்கள் பாத்திரபதமாஸமாகிய புரட்டாசிமாஸத்தை நடத்துகிறார்கள். பூஷா, கிருதாசீ, வாதன், தனஞ்ஜயன், ஸூருசி, கௌதமர், ஸூஷேணன் ஆகிய இவர்கள் மாகமென்ற மாசிமாஸத்தை நடத்துகிறார்கள் (கூர்மபுராணத்தையநுஸரித்து வரிசைதவரி சொல்லப்பட்டிருக்கிறது) பர்ஜன்யர். ஸேனஜித், வர்சஸ், ஐராவதன், கிருது, பரத்வாஜர், விச்வன், ஆகிய இவர்கள் பால்குனமென்ற பங்குனிமாஸத்தை நடத்துகிறார்கள். அம்சு, ஊர்வசி, வித்யுத்சத்ரு, மஹாசங்கன், தார்க்ஷ்யன், கச்யபர், ரிதஸேனர் ஆகிய இவர்கள் மார்கழிமாசத்தை நடத்துகிறார்கள். பகர், பூர்வசித்தி, ஸ்பூர்ஜன், கர்கோடகன், ஊர்ணன், ஆயுஸ், அரிஷ்டநேமி ஆகிய இவர்கள் புஷ்யமாஸமான தை மாஸத்தை நடத்துகிறார்கள். த்வஷ்டா, திலோத்தமா ப்ரஹ்மபேதன், கம்பளாச்வன், சதஜித், ஜமதக்னி, திருதராஷ்டிரர், ஆகிய இவர்கள் ஐப்பசிமாஸத்தை நடத்துகிறார்கள். விஷ்ணு, ரம்பை, மகாபேதன், அச்வதரன், ஸத்யஜித், விச்வாமித்திரர், ஸூர்யவர்ச்சஸ் ஆகிய இவர்கள் கார்த்திகைமாஸத்தை நடத்துகிறார்கள். பகவானுகிய விஷ்ணுவின் ஸ்வரூபமாகிய ஆதித்யருடைய விபூதிகள் இவை இரண்டு ஸந்தியாகாலங்களிலும் இந்த ஸூர்யனுடைய விபூதிகளை

ஸ்மரிப்பவர்களுக்கு ஸகல பாபங்களும் நிவர்த்தியாகின்றன. இப்படி ஸூர்யன் ஒவ்வொருமாஸத்திலும் மேற்காட்டிய அப்ஸரஸ் முதலியவர்களுடன் ஸஞ்சரித்து ஜனங்களுக்கு இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் ஸுகத்தையடையும்படி நல்லபுத்தியைக்கொடுக்கிறார். அந்த அந்த மாஸத்தில் மஹர்ஷிகள் ஸாமம், ரிக், யஜுஸ் இவைகளிலுள்ள ஸௌரமந்திரங்களால் ஸூர்யனை ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். அந்த மாஸத்திய கந்தர்வன் கானஞ்செய்கிறான் அப்ஸரஸ் நர்த்தனஞ்செய்கிறாள்; நாகங்கள் ரதத்தைச்சுத்தி கொள்ளுகின்றன. யக்ஷர்கள் ரதத்தை நடத்துகிறார்கள். பலிஷ்டர்களானராக்ஷஸர்கள் ரதத்திற்குபின் புரத்திலிருந்து தள்ளுகிறார்கள். வாலகில்யர்களென்ற 60,000. மஹர்ஷிகள் ஸூர்யனுடைய ரதத்திற்கு முன் ஸூர்யனைப் பார்த்துக்கொண்டே ஸ்தோத்திரஞ் செய்து செல்லுகிறார்கள். இப்படி ஆதி அந்தமில்லாதவராகிய பகவானாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணு ஒவ்வொருமாதத்திலும் தம்முடைய ஸ்வரூபத்தை பிறித்துக்கொண்டு காலத்தை நடத்துகிறார்.

**11-வது அத்தியாயத்தின் நோட்டு. ஒவ்வொரு மாதத்திய ஸூர்யன் முதலியவர்களுடைய விவரம்.**

| மாஸங்கள். | ஸூர்யன் | மஹர்ஷி. | யக்ஷன். | ராக்ஷஸன். | அப்ஸரஸ். | ஸர்ப்பம். | கந்தர்வன் |
|---|---|---|---|---|---|---|---|
| சித்திரை | தாதா | புலஸ்தியர் | ரதகிருத் | ஹேதி | கிருதஸ்தலீ | வாஸுகி | தும்புரு |
| வைசாகம் | அர்யமா | புலஹர் | அதௌஜஸ் | ப்ரஹேதி | புஞ்ஜிகஸ்தலீ | கஞ்ஜநீரன் | நாரதன் |
| ஆனி | மித்திரன் | அத்ரி | ரதஸ்வனன் | பௌருஷேயன் | மேனகா | தக்ஷகன் | ஹஹா |
| ஆடி | வருணன் | வஸிஷ்டர் | ஸஹஜன்யன் | சித்ரஸ்வனன் | ரம்பை | சுக்கிரன் | ஹூஹூ |
| ஆவணி | இந்திரன் | அங்கிரஸ் | ச்ரோதா | சர்யன் | ப்ரம்லோசா | ஏலாபுத்திரன் | விச்வாவஸு |
| புரட்டாசி | விவஸ்வான் | ப்ருகு | ஆஸாரணன் | வியாக்கிரன் | அநும்லோசா | சங்கபாலன் | உக்கிரஸேனன் |
| ஐப்பசி | த்வஷ்டா | ஜமதக்னி | சதஜித் | ப்ரஹ்ம பேதன் | திலோத்தமா | கம்பளாச்வன் | திருதராஷ்டிரர் |
| கார்த்திகை | விஷ்ணு | விச்வாமித்திரர் | ஸத்யஜித் | மகாபேதன் | ரம்பை | அச்வதரன் | ஸூர்யவர்சன் |
| மார்கழி | அம்சு | கச்யபர் | தார்க்ஷ்யன் | வித்யுத் சத்ரு | ஊர்வசி | மஹாசங்கன் | ரிதஸேனன் |
| தை | பகன் | ஆயுஸ் | ஊர்ணன் | ஸ்பூர்ஜன் | பூர்வசித்தி | கார்கோடகன் | அரிஷ்டநேமி |
| மாசி | பூஷா | கௌதமர் | ஸுருசி | வாதன் | கிருதாசீ | தனஞ்ஜயன் | ஸுஷேணன் |
| பங்குனி | பர்ஜன்யன் | பரத்வாஜர் | கிருது | வர்சஸ் | ஸேனஜித் | ஐராவதன் | விச்வன் |

## அத்யாயம்—12.

### பாகவதத்தின் சுருக்கம்.

பகவத் பக்தியாகிய மஹா தர்மத்திற்கும், ஸகல ஜகத்தையும் படைப்பவரான ஸ்ரீ கிருஷ்ணனுக்கும், ப்ராஹ்மணர்க்களுக்கும் நமஸ்காரஞ்செய்து அநாதிகளான தர்மங்களை (புராணார்த்தத்தை) சொல்லுகிறேன். "மனிதர்கள் எதனைச் செய்யவேண்டும், எதனைக் கேட்கவேண்டும்" என்று நீங்கள் கேட்டதற்கு பதிலாக அத்புதமான விஷ்ணுவின் சரிதத்தைச் சொன்னேன். ஆதி அந்தம் இல்லாதவரும், இந்திரியங்களுக்கு அதிபதியும், நாராயணருமான ஹரி இந்தப் பாகவதத்தில் வர்ணிக்கப்பெற்றிருக்கிறார். (தேவதா காண்டத்தில் சொல்லிய அர்த்தமிந்த பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று காட்டப்பட்டது) மேலும் நிற்குணமும், ஜகத்தைப் படைப்பது, காப்பாற்றுவது, ஸம்ஹரிப்பது இவைகளுக்குக் காரணமும், ஜ்ஞானம், விஜ்ஞானம், அதன் ஸாதனம் ஆகிய இவைகளும் காட்டப்பட்டது. (ப்ரஹ்மகாண்டத்தின் பொருள் சொல்லப்பட்டதென்று காட்டப்பட்டது) பக்தியோகமும், அதனாலுண்டாகும் வைராக்கியமும் நிரூபிக்கப்பட்டது (கர்மகாண்டத்தின் அர்த்தம் காட்டப்பட்டது) மேலும் பரீக்ஷித்தின் உபாக்கியானம், நாரதருடைய முன்ஜன்மம் முதலிய விருத்தாந்தம், ப்ராஹ்மண சாபத்தால் பரீக்ஷித்துப்ராயோபவேசஞ்செய்தது, ப்ரஹ்மர்ஷியான சுகருக்கும் பரீக்ஷித்திற்கும் ஸம்வாதம், ஆகிய இவைகள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன (முதல் ஸ்கந்தத்தில் என்று தாத்பர்யம்) யோகதாரணையால் ப்ராணனை வெளிப்படுத்தி, அர்ச்சிராதிகதிகளை யடையும் வகை, நாரதருக்கும், ப்ரஹ்மதேவருக்கும் நேர்ந்த ஸம்வாதம், மஹத்தத்வம் முதலாக விராட்ரூபம் ஆகிய இவைகள் (இரண்டாவது ஸ்கந்தத்தில்) வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. விதுரர், உத்தவர் இவர்களுடைய ஸம்வாதம், விதுரர் மைத்ரேயரைச் சந்தித்து அவருடன் பேசியது, புராண ஸம்ஹிதையைப் பற்றிக்கேட்டது; மஹா புருஷன் ப்ரளயத்தில் மௌனமாகவிருந்தது, ப்ரகிருதி ஸர்க்கம், விகிருதி ஸர்க்கம் ஏழு, ப்ரஹ்மாண்டத்தின் உத்பத்தி, அதிலிருந்து விராட் புருஷனுண்டானது, ஸ்தூலமான காலம், ஸூக்ஷ்மமான காலம், இவைகளுடைய கதி, பகவானுடைய நாபியில் லோக

பத்மத்தின் உத்பத்தி, ஸமுத்திரத்தில் மூழ்கிய பூமியை பகவான். வெளியில் கொண்டுவந்தது, ஹிரண்யாக்ஷனைக் கொன்றது, ஊர்த்வ ஸ்ரோதர், அவாக்ஸ்ரோதஸ், திர்யக்ஸ்ரோதஸ் ஆகிய இவர்களைப் படைத்தது, ருத்திரர் ஸிருஷ்டித்த கணங்கள், ப்ரஹ்மதேவருடைய சரீரத்தின் ஒருபாதி பெண்ணாகவும், மற்றொருபாதி புருஷனாகவும் பிரிந்தது, அதிலிருந்து மநுவும், சதரூபையும் உண்டானது, தர்மபத்னிகளின் புத்திர பௌத்திராதி வம்சம், கர்த்தமரென்ற ப்ரஜாபதியின் வம்சம் கபிலருடைய அவதாரம், புத்திமானாகிய கபிலருக்கும் தேவஹூதிக்கும் நேர்ந்த ஸம்வாதம் ஆகிய இவைகள் (மூன்றாவது ஸ்கந்தத்தில்) வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்பது ப்ரஜாபதிகளின் வம்சம், தக்ஷருடைய யாகத்திற்கு விக்கினம் நேர்ந்தது, த்ருவருடைய சரித்திரம், ப்ருதுவின் சரிதம், ப்ராசீன பர்ஹிஸ்ஸின் சரித்திரம் ஆகிய இவைகள் (நான்காவது ஸ்கந்தத்தில்) வர்ணிக்கப்பட்டன. நாரதருடையஸம் வாதம், ப்ரியவ்ரதருடைய சரிதம், நாபியின் சரித்திரம், பரதருடைய சரித்திரம், ரிஷபருடைய சரித்திரம், த்வீபம், வர்ஷம், ஸமுத்திரம், மலை, நதி ஆகிய இவைகளின் வர்ணனை, ஜ்யோதிச் சக்கிரத்தின் ஸ்திதி, பாதாலம் நரகம் ஆகிய இவைகளின் ஸ்திதி இவைகள் (ஐந்தாவது ஸ்கந்தத்தில்) நிரூபிக்கப்பட்டன. தக்ஷருடைய உத்பத்தி, அவருடைய புத்திரிகளின் ஸந்ததி, அவர்களிடமிருந்து தேவர்கள், அஸுரர்கள், மனிதர்கள், திர்யக்ஜாதிகள், நாகங்கள், பரவைகள் இவைகளின் உத்திபத்தி முதலியவை (ஆறாவது ஸ்கந்தத்தில்) நிரூபிக்கப்பட்டன. விருத்திராஸுரன் ஜனித்தது, அவனுடைய நாசம், திதியின் புத்திரர்களுடைய நாசம், ப்ரஹ்லாதருடைய சரிதம் இவைகள் (ஏழாவது ஸ்கந்தத்தில்) சொல்லப்பட்டது. மன்வந்தரங்கள், கஜேந்திரமோக்ஷம், ஒவ்வொரு மன்வந்தரங்களிலும் பகவானுடைய அவதாரம், ஹயக்ரீவாவதாரம், கூர்மாவதாரம், மத்ஸயாவதாரம், நரஸிம்மாவதாரம், வாமனாவதாரம், அமிருத்திற்காக தேவர்கள் பாற்கடலைக் கடைந்தது, தேவாஸுரயுத்தம் இவைகள் (எட்டாவது ஸ்கந்தத்தில்) வர்ணிக்கப்பட்டன. ராஜவம்சம், இக்ஷ்வாகுவின் உத்பத்தி, அந்த வம்சத்தில் ஸுத்யும்னன் ஜனித்தது, இளோபாக்யானம், தாரோபாக்யானம், ஸுர்யவம்சத்தின் சரிதம் சசாதன் முதலிய அரசர்களுடைய சரித்திரம், ஸுகன்யோபாக்யானம், சய்யாதி, ககுஸ்தர், கட்வாங்கர், மாந்தாதா, ஸௌபரி,

ஸகரர் இவர்களுடைய சரித்ரங்கள் பாபங்களை நிவர்த்திக்கக்கூடிய ஸ்ரீராமனுடைய சரிதம் நிமி சரீரத்தைவிட்டது, ஜனகர்களுடைய உத்பத்தி, பரசுராமன் க்ஷத்திரியர்களைக்கொன்றது, சந்திரவம்சத்தில் பிறந்த ஐளர், யயாதி, நஹுஷர் துஷ்யந்தருடைய புத்திரரான பரதர், சந்தனு, பீஷ்மர் யயாதியின் ஜ்யேஷ்ட குமாரனாகிய யது ஆகிய இவர்களுடைய சரித்திரங்கள், இவைகள் (ஒன்பதாவது ஸ்கந்தத்தில்)நிரூபிக்கப்பட்டன. யதுவின் குலத்தில் ஜகதீசராகிய பகவான் கிருஷ்ணனென்ற திவ்ய நாமதேயத்துடன் வஸுதேவருடைய கிருஹத்தில் அவதரித்து கோகுலத்தில் வளர்ந்தது, பின்பு அவர் செய்த அத்புதமானசெய்கைகள் பூதனையின் ப்ராணனையும் பாலையும் குடித்தது, சகடத்தை உடைத்தது, திருணாவர்த்தன், பகன், வத்ஸன், அகன், இவர்களை வதஞ்செய்தது, ப்ரஹ்மதேவருக்கு மாயாவிலாஸத்தைக் காண்பித்தது தேனுகன், அவனுடைய ஸஹோதரன், ப்ரலம்பன், இவர்களுடைய வதம், காட்டுத்தீயிலிருந்து கோபர்களைக் காப்பாற்றியது, காளியனை அடக்கியது, நந்தனை ஸர்ப்பபயத்திலிருந்து ரக்ஷித்தது, கோபகுமாரிகள் வ்ரதஞ்செய்தது, அதனால் ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களிடம் ஸந்தோஷத்தை அடைந்தது, தீக்ஷிதபத்னிகளை பகவான் அநுக்ரஹித்தது, தீக்ஷிதர்கள் பச்சாத்தாபத்தை அடைந்தது, கோவர்த்தனமலையை பகவான் குடையாகப்பிடித்தது, இந்திரனும் காமதேனுவும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பூஜித்து, அபிஷேகஞ்செய்தது, ராத்ரியில் பகவான் ஸ்திரிகளுடன் க்ரீடித்தது, துர்புத்தியான சங்கசூடன், அரிஷ்டன், கேசி, இவர்களுடைய வதம், அக்ரூரர் கோகுலத்திற்குவந்தது, ராமகிருஷ்ணர்கள் மதுராநகரஞ்சென்றது, கோகுலத்திலுள்ள ஸ்திரிகள் ப்ரலபித்தது, பகவான் மதுரையில் யானை, முஷ்டிகன், சாணூரன், கம்ஸன் ஆகிய இவர்களைக்கொன்றது, ஸாந்திபினியென்ற ஆசார்யருடைய புத்திரனையமலோகத்திலிருந்து ஸ்ரீ கிருஷ்ணன் கொண்டுவந்துகொடுத்தது, உத்தவர், பலராமன் இவர்களுடன் மதுரையில் பகவான் வஸித்து யாதவர்களுக்குப் பிரியமானவைகளைச்செய்துகொண்டிருந்தது, பலமுறை ஜராஸந்தனுடைய ஸைன்யத்தைக்கொன்றது, யவனனைக்கொன்றது, த்வரகாநகரத்தில் பந்துக்களைக்கொண்டுவைத்தது, தேவலோகத்திலிருந்து பாரிஜாதம், ஸுதர்மா இவைகளைத் வாரகைக்குக்கொண்டுவந்தது, சத்ருக்களை ஜயித்துருக்மிணியைக்கொண்டுவந்தது, பரமசிவனை ஜயித்து பாணாஸுரனு

டையகைகளை வெட்டியது, நரகாஸுரனைக்கொன்று ராஜகன்னிகை களைக்கொண்டுவந்தது, சிசுபாலன், பௌண்டிரகன் ஸால்வன் தந்த வக்திரன், சம்பரன் த்விதன், பீடன், முரன், பஞ்சஜனன், இவர்களுடைய மஹிமை, வதம், காசியைக்கொளுத்தியது, பாண்டவர்களை நிமித்தமாகவைத்துக்கொண்டு பூமிக்குச்சுமையாக விருந்தவர்களை பகவான்கொன்றது, ஆகிய இவைகள் (பத்தாவது ஸ்கந்தத்தில்) வர்ணிக்கப்பட்டன.

42—43. பின்னும் ப்ராஹ்மணசாபமென்ற வியாஜத்தால் பகவான்தம்முடைய வம்சத்தையும் ஸம்ஹரித்தது, நாரதருக்கும் வஸுதேவருக்கும் நேர்த்தஸம்வாதம் உத்தவருக்கும் பகவானுக்கும் நடந்த ஆத்மவித்யை தர்மம் இவைகளைப்பற்றிய அத்புதமான ஸம்வாதம், பகவான்தம்முடைய யோகமஹிமையால் மனுஷ்யலோகத்தைவிட்டு வைகுண்டஞ்சென்றது ஆகிய இவைகள் (11-வது ஸ்கந்தத்தில்) வர்ணிக்கப்பட்டன.

44—46. யுகங்களின் லக்ஷணம், அவைகளின்விருத்தி கலியுகத்தில் மனிதர்களுக்குநேரும் உபத்திரவம், நான்குவிதமானலயங்கள், மூன்றுவகையான உத்பத்தி, அரசர்களுக்குட்சிறந்தவரான பரீக்ஷித்து சரீரத்தைவிட்டது வ்யாஸமஹர்ஷி வேதசாகைகளைப் பிறித்தது, மார்க்கண்டேயருடைய புண்ணியமானகதை ஜகத்ஸ்வரூபியான ஸூர்யனுடைய ஸ்வரூபம் ஆகிய இவைகள் (12-வது ஸ்கந்தத்தில்) சொல்லப்பட்டன.

47—39. ஓ சிறந்த ப்ராஹ்மணர்களே! நீங்கள் எதைச் சொல்லும்படி கேட்டுக்கொண்டீர்களோ அந்தப்பகவானுடைய லீலாவதாரங்கள், சரித்திரங்கள் இவைகளெல்லாவற்றையும் சொன்னேன். கிணறுமுதலியவைகளில் விழும்பொழுதும் படிமுதலியவைகளால் தடுக்கப்பெற்று பூமியில்விழும்பொழுதும், வ்யாதியால் பீடிக்கப்பட்டபொழுதும், தும்பும்பொழுதும் தைவச்செயலாக ஸ்ரீமந்நாராயணனுக்கு நமஸ்காரம் என்று சொல்பவனுக்கு ஸகலபாபங்களும் நிவர்த்தியாகின்றன. அனந்தனாகிய பகவானுடைய நாமங்களையுச்சரிப்பதாலும், பகவானுடைய திவ்ய சரித்திரங்களைக்கேட்பதாலும், பகவான் அவர்களுடைய ஹிருதயத்தில் ப்ரவேசித்து ஸகல பாபங்களையும் நிவர்த்திக்கிறார். ஸூர்யனால் இருள்

நீக்கப்படுவதுபோலும் பெருங்காற்றினல் மேகங்கள் விலக்கப்படுவதுபோலும் பாபங்கள் பகவானுல் விலக்கப்படுகின்றன. எந்த கதையில் பகவானுடைய கதையில்லையோ, அது கெட்ட கதையேயாம். எது பகவானுடைய சரித்திரமுள்ளதோ, அதுவே ஸத்யமானது; அதுவே மங்களம்; அதுவே புண்ணியம்; எந்தக் கிரந்தத்தில் உத்தமச்லோகராகிய பகவானுடைய சரித்திரம் வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ, அதுவே அழகுள்ளது; புதிது புதிதாக ஆசையையுண்டுபண்ணக்கூடியது ; அடிக்கடி மனத்திற்கு மிக்க ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது; அதுவே துக்கமாகிய ஸமுத்திரத்தை வற்றும்படி செய்யக்கூடியது; எதில் ஸ்ரீ பகவானுடைய சரிதமில்லையோ, அந்தச்லோகம் அத்புதமான பதமுள்ளதானுலும், அதில் ஹம்ஸம்போன்ற பெரியோர்கள் பிரியப்படார்கள். காக்கை போன்ற தாழ்ந்த ஜனங்கள்தான் அதை ஆதரிப்பார்கள். ஒவ்வொரு ச்லோகங்களிலும் அபத்தமிருந்தாலும், பகவானுடைய சரித்திரங்களுள்ளதானுல் அதைஸாதுக்கள் கேட்கிருர்கள் ; கானஞ்செய்கிருர்கள் ; படிக்கிருர்கள். மோக்ஷத்திற்கு ஸாதனமான ஜ்ஞானமானுலும் பகவத் பக்தியில்லாவிட்டால் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தைக் கொடுக்கிறதில்லை. அப்படியிருக்க அநுஷ்டிக்கும்பொழுதும், பலகாலத்திலும் அமங்களமாக விருக்கும் யாகம் முதலிய கர்மங்களும் பகவதர்ப்பணஞ்செய்யப்படாவிடில் எப்படி சோபிக்கும் (விளங்காதென்று கருத்து) அவர் அவர்களுடைய ஜாதிகளுக்கும் ஆச்ரமங்களுக்குமுரிய தானதர்மத்தை யனுஷ்டிப்பதால் கீர்த்தி, ஐச்வர்யம் இவைகள் கிடைக்கும். பகவானுடைய கதையைக் கேட்டால் அவருடைய பாதங்களில் பக்திபுண்டாகும். அதனுல் அமங்களங்கள் விலகும். சாந்தியுண்டாகும். சித்தம் சுத்தமாகும், பகவானிடத்தில் பக்தி ஸ்திரமாகும். ஜ்ஞானம், விஜ்ஞானம், வைராக்கியம் ஆகிய இவைகளுண்டாகும். ஓ சிறந்த ப்ராஹ்மணர்களே ! நீங்கள் மிக்க அதிர்ஷ்டமுள்ளவர்கள்; ஸகல ஜகத்திற்கும் ஆத்மாவாகவும், எல்லாருக்கும் தேவனும், ஸர்வேச்வரனுமான ஸ்ரீமந் நாராயணனை ஹிருதயத்தில் வைத்துக்கொண்டு வேறுவிடத்தில் மனத்தைச் செலுத்தாமல் அடிக்கடி த்யானஞ்செய்கிறீர்கள். மேலும் வெகுகாலத்திற்குமுன் பரீக்ஷித்து மஹாராஜன் ப்ராயோபவேசஞ்செய்த ஸமயத்தில் மஹர்ஷிகள் கேட்டிருக்க சுகரிடமாக ஆத்மதத்வத்தைக் கேட்டிருந்தேன். அதனை இப்பொழுது நீங்கள் எனக்கு ஞாபகப்

படுத்தினீர்கள். ஆனதால் அந்தப் பகவானுகிய வாஸுதேவருடைய மாஹாத்மியத்தைச் சொன்னேன். அது ஸகல பாபங்களையும் நிவர்த்திக்கக்கூடியது. பகவானுடைய சரிதங்களே கானஞ்செய்யக்கூடியவை. ஒருயாமமாவது, க்ஷணமாவது வேறு ஞாபகமற்று எவன் இந்த புராணத்தையாவது இதில்ஒரு ச்லோகத்தையாவது, அதில் பாதியையாவது, அதில் பாதியையாவது, அதில் பாதியையாவது, ச்ரத்தையுடன் பிறருக்குச் சொல்லுகிருனே கேட்கிருனே அவனுடைய ஆத்மா சுத்தமாகிறது. ஏகாதசி, த்வாதசி இந்ததினங்களில் படிப்பவனுக்கும் கேட்பவனுக்கும் ஆயுள் விருத்தியாகும். ஆஹாரமில்லாமல் படிப்பவனுக்கு ஸகல பாபங்களும் நிவர்த்தியாகும். புஷ்கரம் மதுரை, த்வாரகை ஆகிய இந்த க்ஷேத்திரங்களில் உபவாஸமிருந்து எவன் இந்த பாகவத ஸம்ஹிதையைப் படிக்கிருனே, அவனுக்கு ஸகல பயங்களும் நிவர்த்தியடையும் (மோக்ஷத்தை அடைவானென்றுகருத்து) மேலும் தேவர்கள், மஹர்ஷிகள், ஸித்தர்கள், பிதிருக்கள், மநுக்கள், அரசர்கள் ஆகிய இவர்களுடைய சரித்திரம் இந்தப்புராணத்தில் வர்ணிக்கப்பட்டிருப்பதால் இதைக் கேட்பவர்களுக்கும், படிப்பவர்களுக்கும் மேற்காட்டிய தேவர் முதலியவர்கள் இஷ்டத்தைக்கொடுக்கிருர்கள். ரிக், யஜுஸ், ஸாமம் ஆகிய வேதங்களை அத்யயனஞ்செய்தால் என்னபயன் கிடைக்குமோ, அந்தப்பயன் இந்த பாகவதத்தைக்கேட்பதால், கிடைக்கும். மேலும் தேன், பால், நெய் இவைகளைவிசேஷமாக உபயோகித்து அன்னதானம்செய்தால் என்னபயனே, அந்தப்பயன் இந்தப்பாகவதத்தைப்படித்தால் கிடைக்கும் இந்தப்பாகவதபுராணத்தை சுத்தனுகப்படிக்கும் ப்ராஹ்மணன் பரமபதத்தை அடைவான். இந்தப்பாகவதத்தைப்படித்தால் ப்ராஹ்மணன் விவேகத்தையும், ஜ்ஞானத்தையுமடைவான். க்ஷத்திரியன் நான்கு ஸமுத்திரத்திற்குட்பட்ட பூமியை அடைவான், வைச்யன் ஐச்வர்யத்தை அடைவான். சூத்திரன் பாபத்திலிருந்து சுத்தனுவான். கலிகாலத்திய தோஷத்தை நிவர்த்திப்பவரும், எல்லாவற்றிற்கும் அதிபதியும், ஸகல ஸ்வரூபியுமானபகவான் இந்தபாகவதத்தில் அடிக்கடி வர்ணிக்கப்பட்டிருக்கிருர். மற்ற கிரந்தங்களில் அப்படிவர்ணிக்கப்படவில்லை. பகவான் உத்பத்தியற்றவர்; நாசமற்றவர்; ஜகத்தைப் படைப்பவர்; காப்பாற்றுபவர்; ஸம்ஹரிப்பவர்; மேற்காட்டிய மூன்று சக்தியுள்ளவர்; லோகபாலர்களான ப்ரஹ்மா, இந்திரன்

பரமசிவன், ஆகிய இவர்களால் ஸ்துதிக்கமுடியாத மஹிமையுள்ளவர்; அப்படிப்பட்ட ஆத்மதத்வமாகிய அச்யுதராகியபகவானை நமஸ்கரிக்கிறேன். ப்ரகிருதி, புருஷன், மஹத், அஹங்காரம், ஐந்துதன்மாத்திரைகள் ஆகிய ஒன்பது சக்திகளைக்கொண்டு ஸ்தாவரஜங்கமங்களை தம்முடைய ஆத்மாவிடத்தில் வைத்துக்கொண்டவரும், ஜ்ஞானஸ்வரூபியும், சாச்வத புருஷருமாகிய பகவானுக்கு நமஸ்காரம். ஆத்மஸுகத்தால் பூர்ணமானமனமுள்ளவரும் அதனால்வேறு எண்ணமில்லாதவரும், ஸ்ரீமஹாவிஷ்ணுவின் சரித்திரத்தில் ஆசைகொண்ட புத்தியுள்ளவருமான எந்தசுகர் ஆத்மதத்வத்தை ப்ரகாசிக்கச்செய்வதான இப்பாகவத புராணத்தைலோகத்தில் பரவச்செய்தாரோ, ஸகலபாபங்களையும் நிவர்த்திக்கக்கூடிய வ்யாஸருடைய புத்திரராகிய அந்தசுகரை நமஸ்கரிக்கிறேன்' என்று ஸூதர் சொன்னார்.

---

## அத்யாயம்—13.

### புராணங்களின் கிரந்த ஸங்கியை.

ஸூதர் சொல்லுகிறார்—ப்ரஹ்மா, வருணன், இந்திரன், ருத்திரன், மருத்துக்கள் ஆகிய இவர்கள் திவ்யமான ஸ்தோத்திரங்களால் எவரை ஸ்துதிக்கிறார்களோ, ஸாமகர்கள் பதம், கிரமம் உபநிஷத் அங்கங்கள் இவைகளைக்கொண்டு எவரைக் கானஞ்செய்கிறார்களோ, வித்வான்கள் த்யானத்தால் மனத்தை ஸ்திரப்படுத்தி எவரைப் பார்க்கிறார்களோ, எவருடைய மஹிமை முழுவதையும் தேவர்களும், அவர்களுக்கு முந்தியவர்களான அஸுரர்களும் அறியவில்லையோ, அந்த தேவருக்கு நமஸ்காரம். பகவான் கூர்மாவதாரஞ்செய்து மிக்க பாரமுள்ள மந்தரமலையை முதுகில் தாங்கின ஸமயத்தில் அதன் கற்கள் உராய்ந்து தினவுக்கு சொரிந்துகொடுப்பது போலிருந்தன. அதனால் பகவானுக்குத் தூக்கம் நேர்ந்தது. அப்படிப்பட்டப் பகவானுடைய மூச்சுக்காற்றுகள் நம்மைக் காப்பாற்றட்டும். அந்த மூச்சுக்காற்று உள்ளே போவதும் வெளியில் வருவதுமாக விருந்ததைப் பார்த்து ஸமுத்திர ஜலமும் போவதும் வருவதுமாகியதைக் கற்றுக்கொண்டு இப்பொழுதுகூட அப்படியே அசைந்துகொண்டிருக்கிறது (அப்படி

அசைவதற்கு ஸமுத்திரத்தைக் கடைந்தது காரணமல்ல, பகவானுடைய ச்வாஸமே காரணம்) புராணங்களின் கிரந்த கணக்கையும், அதன் மொத்தத்தையும் இந்த ஸ்ரீபாகவதத்தின் பொருளையும், ப்ரயோஜனத்தையும், பாகவத தானத்தையும், அதன் மஹிமையையும் பாகவத படனத்தின் மஹிமையையும் சொல்லுகிறேன் தெரிந்துகொள்ளும். ப்ரஹ்மபுராணம் 10,000-கிரந்தங்களுள்ளது. பத்மபுராணம் 55,000-கிரந்தங்களுள்ளது. விஷ்ணுபுராணம் 23,000-கிரந்தங்களுள்ளது. சைவபுராணம் 24,000-கிரந்தங்களுள்ளது. ஸ்ரீ பாகவதம் 18,000-கிரந்தங்களுள்ளது. நாரதபுராணம் 15,000-கிரந்தங்களுள்ளது. மார்க்கண்டேய புராணம் 9000-கிரந்தங்களுள்ளது. அக்னிபுராணம் 15,400-கிரந்தங்களுள்ளது. பவிஷ்ய புராணம் 14,500-கிரந்தங்களுள்ளது. ப்ரஹ்மகைவர்த்த புராணம் 18,000-கிரந்தங்களுள்ளது. லிங்கபுராணம் 11,000-கிரந்தங்களுள்ளது. வராஹபுராணம் 24,000-கிரந்தங்களுள்ளது. ஸ்காந்த புராணம் 81,100-கிரந்தங்களுள்ளது. வாமனபுராணம் 10,000-கிரந்தங்களுள்ளது. கூர்மபுராணம் 17,000-கிரந்தங்களுள்ளது. மத்ஸ்யபுராணம் 14,000-கிரந்தங்களுள்ளது. கருடபுராணம் 19000-கிரந்தங்களுள்ளது. ப்ரஹ்மாண்டபுராணம் 12,000-கிரந்தங்களுள்ளது. இம்மாதிரி புராணங்களின் கூட்டம் 4,00,000-கிரந்தங்களாகின்றன. அவைகளில் ஸ்ரீ பாகவதம் 18,000-கிரந்தங்களுள்ளதென்று சொல்லப்படுகிறது. ஸ்ரீமந் நாராயணன் தம்முடைய தொப்பிளிலிருக்கும் தாமரைமலரில் வஸிப்பவரும் ஸம்ஸாரத்திலிருந்து பயந்தவருமான ப்ரஹ்மதேவருக்கு இந்த ஸ்ரீ பாகவதத்தை கிருபையுடன் உபதேசித்தார். இந்த பாகவதத்தின் முன்பாகத்திலும், கடைசியிலும் வைராக்யத்தைக்காட்டும் உபாக்கியானங்களிருக்கின்றன. பகவானுடைய லீலாகதைகளை கூட்டமாக இதில் வர்ணித்திருப்பதால் அதனால் ஸாதுக்களையும், தேவர்களையும் பாகவதம் ஆனந்திக்கச் செய்கிறது ஸகல வேதாந்தங்களிலும் எது ஸாரமோ, அந்த ஜீவப்ரஹ்மங்களுடைய ஐக்யமும் மோக்ஷத்தையே ப்ரயோஜனமாகக்கொண்டதும் அத்வீதியமுமான வஸ்துவே இந்த பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. புரேஷ்டபதி மாஸத்தில் பௌர்ணமி திதியில் ஸுவர்ணமயமான ஸிம்ஹாஸனத்தில் ஸ்ரீ பாகவதத்தைவைத்து எவன் தானஞ்செய்கிறானோ, அவன் உத்தமகதியை அடைவான். இந்த ஸ்ரீ பாகவதம் இல்லாத காலத்

தில் மற்ற புராணங்கள் ப்ரகாசிக்கும் (இதுவே எல்லாவற்றிலும் மேலானதென்று கருத்து) ஸகல வேதாந்தங்களின் ஸாரமே ஸ்ரீ பாகவதமெனப்படுகிறது. அதனுடைய ரஸத்தைப் பானஞ்செய்தவனுக்கு வேறு புராணங்களில் ஆசையுண்டாகாது. நதிகளுக்குட் கங்காநதி எப்படி சிறந்ததோ, தேவர்களுக்குள் ஸ்ரீமந் நாராயணன் எப்படி மேலானவரோ, விஷ்ணுபக்தர்களுக்குள் பரமசிவன் எப்படி மேலானவரோ, அதுபோல் புராணங்களில் ஸ்ரீ பாகவதம் சிறந்தது. இந்த ஸ்ரீ பாகவதபுராணம் சுத்தமானது; விஷ்ணு பக்தர்களுக்குப் பிரியமானது; இதில் பரம ஹம்ஸர்களால் அடைக்கூடிய உத்தமான ஜ்ஞானம் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. மேலும் ஜ்ஞானம், வைராக்யம், பக்தி, ஸகல கர்மங்களின் சாந்தி இவைகளும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனதால் பாகவதத்தைக்கேட்டு நன்றுப்படித்து பக்தியுடன் விசாரிப்பவன் ஸம்ஸாரபந்த மற்றவனுவான். ஜ்ஞான தீபமாகிய இந்த பாகவதத்தை பகவான்ப்ரஹ்மதேவஸ்வரூபியாகவிருந்து நாரத மஹர்ஷிக்குபதேசித்தார். பின்பு அவரே நாரதஸ்வரூபியாகவிருந்து வ்யாஸருக் குபதேசித்தார். அவரே வ்யாஸரூபியாகவிருந்து சுகருக்கும், சுகஸ்வரூபியாகவிருந்து பரீக்ஷித்து மஹாராஜனுக்கும் கிருபையுடன் உபதேசித்தார். சுத்தமும் ராகத்வேஷங்களற்றதும், சோகமற்றதும், மரணதர்மமற்றதும், ஸத்யமும், எல்லாவற்றிற்கும் மேலானதுமான வஸ்துவை த்யானிக்கிறோம். எவர் ப்ரஹ்மதேவரிடத்தில் கருணை வைத்து மோக்ஷத்தை அடைய விரும்பிய அவருக்கு இந்தப் பாகவதத்தை யுபதேசித்தாரோ, அந்த வாஸுதேவரும் ஸாக்ஷியுமான பகவானுக்கு நமஸ்காரம். எந்த சுகமஹர்ஷி ஸம்ஸாரமாகிய ஸர்ப்பத்தால் கடிக்கப்பெற்ற பரீக்ஷித்தை ஸம்ஸாரபந்தத்திலிருந்து நிவர்த்தித்து மோக்ஷத்தை அடையும்படிச் செய்தாரோ, அப்படிப்பட்ட ப்ரஹ்ம ஸ்வரூபியான சுகமஹா யோகீந்திரருக்கு நமஸ்காரம் செய்கிறோம்.

முற்றிற்று.